இலங்கை

அய்க்கிய நாடுகள் அவையின் வல்லுநர் குழு அறிக்கை



இச்சகோதரிகள், இலங்கைப் போரின் போது தொடர்ந்து இடம்பெயர்ந்து, ஏறத்தாழ மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக பதுங்கு குழிக்குள்ளேயே வாழ்ந்தனர். இவர்கள் குடும்பம் 2009இல் தடுப்பு முகாமில் பல மாதங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. முகாமிலிருந்து விடுவிக்கப்பட்ட பிறகும், முழுவதும் இராணுவமயமாக்கப்பட்ட இலங்கையின் வட பகுதியில், வாழ்வாதாரங்களுக்கான வழிகள் ஏதும் அவர்களுக்கு வழங்கப்படவில்லை.

இலங்கை

அய்க்கிய நாடுகள் அவையின் வல்லுநர் குழு அறிக்கை

31 மார்ச் 2011

இலங்கை

அய்க்கிய நாடுகள் அவையின் வல்லுநர் குழு அறிக்கை

31 மார்ச் 2011



தமிழாக்கம்

பூங்குழலி

புதுமலர்

தலித் முரசு

இலங்கை
அய்க்கிய நாடுகள் அவையின்
வல்லுநர் குழு அறிக்கை

தமிழில் : பூங்குழலி

புதுமலர் பதிப்பகம் – தலித் முரசு
முதற் பதிப்பு நவம்பர் 6, 2011 திருவள்ளுவர் ஆண்டு 2042

புதுமலர் பதிப்பகம்
176, வைகை வீதி, வீரப்பன் சத்திரம் (அ)
ஈரோடு – 638 004
பேசி : 91 94433 07681 gana.kurinji@gmail.com

தலித் முரசு
எஸ் 5, மகாலட்சுமி அடுக்ககம், குளக்கரை சாலை
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034
பேசி : 91 94444 52877 dalitmurasu@gmail.com

© பதிப்பாளர்

அட்டை வடிவமைப்பு : மில்லர், சென்னை
இதழ் வடிவமைப்பு : சுந்தர், தலித் முரசு, சென்னை
முன் அட்டை ஒளிப்படம் : லீ யு க்யூங்

அச்சாக்கம் : சிறீ விக்னேஷ் பிரிண்ட்ஸ்
சென்னை – 600 083 பேசி : 91 94449 36628

விலை : ரூ.300/-

Our heartfelt thanks to the United Nations Organisation for releasing the
'Report of the Secretary–General's Panel of Experts on Accountability in Sri Lanka'

---

ilangai
aiykkiya naadugal avaiyin
vallunar kuzhu arikkai

Translated by
Poonkuzhali

Puthumalar Pathippagam – Dalit Murasu
First Edition November 6, 2011 Thiruvalluvar Era 2042

Puthumalar Pathippagam
176, Vaigai Street, Veerappan Sathiram (PO)
Erode – 638 004
Phone : 91 94433 07861 *gana.kurinji@gmail.com*

Dalit Murasu
S5, Mahalakshmi Flats, Tank Bund Road
Nungambakkam, Chennai – 600 034
Phone : 91 94444 52877 *dalitmurasu@gmail.com*

© Publisher

Cover Design : Millar, Chennai
Content Design : Sunder, Dalit Murasu, Chennai
Front Cover Photo : Lee Yu Kyung

Printed at Sri Vignesh Prints, Chennai – 600 083 Phone : 91 94449 36628

Price : Rs. 300/-

Original English Version Published by
United Nations Organisation

பதிப்புரை

அண்மைக்கால ஈழப்போராட்டத்தை கருத்தியல் ரீதியாகப் பார்த்தால், முள்ளிவாய்க்காலுக்கு முன் – முள்ளிவாய்க்காலுக்குப் பின் என்பதாக அதை வேறுபடுத்த முடியும். முள்ளிவாய்க்காலுக்கு முன்னான சர்வதேச அணுகுமுறை, முள்ளிவாய்க்காலுக்குப் பின் மாறியிருப்பதை எளிதில் அவதானிக்கலாம். 2009 ஆம் ஆண்டு மே மாதத்தில் அய்க்கிய நாடுகள் அவையின் மனித உரிமைக் குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என 2011 மார்ச் மாதம் வெளியாகியுள்ள தருஸ்மன் தலைமையிலான அய்.நா. வல்லுநர் குழு அறிக்கை பரிந்துரைத்திருப்பதை அதன் வெளிப்பாடாக நாம் காணலாம். தவிரவும், 2010 சனவரியில் வெளியிடப்பட்ட டப்ளின் தீர்ப்பாயத் தீர்ப்பினையும் இதே வரிசையில் வைத்துக் காண முடியும்.

பயங்கரவாதப் பூச்சாண்டியைக் காட்டி மனித உரிமைகளை நசுக்குவதை சர்வதேசம் அங்கீகரிக்காது என்பதையே இவ்வணுகுமுறை மாற்றம் காண்பிக்கிறது. அந்த வகையில், அய்க்கிய நாடுகள் வல்லுநர் குழு அறிக்கைக்குக் கேந்திரமானதோர் பாத்திரம் வரலாற்றில் உண்டு.

ஆனால், இவ்வறிக்கையின் மிகப்பெரிய பலவீனம், இதன் பரிந்துரைகளைச் செயற்படுத்தக்கூடிய அதிகாரம் இதற்கு இல்லை என்பதுதான்.

''கொடிய நச்சுப்பாம்புகள் நிறைந்த பள்ளத்தாக்கின் மீது கட்டப்பட்டுள்ள கயிற்றின் மீது நடப்பதைப் போன்றதுதான் இலங்கையில் தமிழராய் வாழ்வது'' என ரிச்சர்டு டிக்சன் குறிப்பிட்டதைக் கருதிப் பார்க்கையில், ஈழப்போராட்டம் கடக்க வேண்டிய தூரம் மிகத் தொலைவில் இருக்கிறது என்பதை எளிதில் புரிந்து கொள்ளமுடியும்.

''மாறிவரும் உலகமயச் சூழலில், மூலதனத்தை மட்டுமல்ல போராட்டத்தையும் உலகமயமாக்க வேண்டிய தேவை இருக்கிறது'' என்ற மெக்சிகோ நாட்டைச் சேர்ந்த விடுதலைப் போராளி துணைத் தளபதி மார்க்கோசின் வழிகாட்டுதல், இப்பயணத்தின் அயர்ச்சியையும் வலியையும் போக்கும் என்பதில் அய்யமில்லை. எனவே, இந்தப் பயணத்தின் அடுத்தகட்ட நகர்வாகக் கருதப்படும் அய்க்கிய நாடுகள் அவையின் வல்லுநர் குழு அறிக்கை தமிழில் வெளிவருவது பரவலான விழிப்புணர்வை உருவாக்கும் என்று 'புதுமலர்' பதிப்பகமும், 'தலித் முரசு'ம் கருதின. மேலும் அண்மையில் தமிழீழப் பகுதிக்கு நேரடியாகச் சென்று நான் பெற்றுவந்த பல்வேறு அனுபவங்களும், படிப்பினையும் இவ்வறிக்கையைத் தமிழில் கொண்டு வர வேண்டியதன் தேவையை வலியுறுத்தின.

'தலித் முரசு' ஆசிரியர் தோழர் புனிதபாண்டியன் அவர்களின் தொய்வறியா உழைப்பும், முனை மழுங்கா முயற்சியும் இப்பணியை விரைவுபடுத்தின. அறிக்கையை உயர்தரத்தில் நேர்த்தியாகக் கொண்டு வர அவர் எடுத்துக்கொண்ட சிரமங்களுக்கு எனது மனமார்ந்த நன்றி.

இவ்வறிக்கையின் மூலத்திற்கு எவ்வித ஊறும் நேர்ந்து விடாமல் மிகவும் விழிப்போடு இந்நீண்ட அறிக்கையைத் தமிழில் மொழியாக்கம் செய்த தோழர் பூங்குழலி அவர்களுக்கும் எனது இதயங்கனிந்த நன்றியைப் பதிவு செய்கிறேன்.

இவ்வறிக்கைக்கு ஆங்கிலத்தில் அணிந்துரை வழங்கிய தியோடர் எஸ். ஆர்லின், ரான் ரைட்னர், இராஜிவ் சிறீதரன், பால் நியூமன் ஆகியோருக்கு எமது நன்றி. தமிழாக்கத்தின் மெய்ப்பினைத் திருத்தி உதவிய நண்பர் பொதியவெற்பன் அவர்களுக்கும், சீரிய முறையில் அச்சிட்டுக் கொடுத்த சிறீ விக்னேஷ் பிரிண்ட்ஸ் ரவிக்குமார் அவர்களுக்கும் நன்றி. ●

– கண. குறிஞ்சி
புதுமலர்

அக்டோபர் 2011

முன்னுரை

தன்னுரிமைப் பெற்ற ஒரு தேசிய இனமாகத் தன்னை நிலைநிறுத்திக் கொள்ள ஈழத் தமிழ் மக்கள் 60 ஆண்டு காலத்திற்கும் மேலாக நடத்தி வரும் போராட்டம் பலக் கட்டங்களை கடந்து வந்துள்ளது. இத்தனை ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு இன்று உலக அளவில் பேசப்படும் ஒரு சிக்கலாக அது உருவாகியுள்ளது. இந்த நிலை மிகப் பெரும் மனிதப் பேரழிவிற்குப் பின்னரே சாத்தியமாகியுள்ளது என்பது வேதனைக்குரிய உண்மை. எனினும், இன்றைய நிலையில், மாறியுள்ள உலகச் சூழலைத் தக்கவாறு பயன் படுத்தித் தங்களின் வாழ்நாள் கனவை அடைவதற் கான முயற்சிகளை எடுப்பதில் ஈழத் தமிழினம் முனைப்புடன் ஈடுபட்டுள்ளது. அந்த முயற்சிகளுக்குப் பெருந்துணையாகத் தமிழ் மக்கள் கையில் கிடைத் துள்ள ஆயுதமே அய். நா. வின் வல்லுநர் குழு இலங்கையில் நடந்த போர்க்குற்றங்கள் குறித்து அளித்த அறிக்கை ஆகும்.

இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் மீது சிங்கள இனம், அரசு ஆதரவுடனோ தன்னிச்சையாகவோ நடத்திய வன்முறைத் தாக்குதல்களின் பதிவுகள் சென்ற நூற்றாண்டின் தொடக்க ஆண்டுகள் வரை நீள்கின்றன. ஆங்காங்கே நடந்த சிறு சிறு நிகழ்வுகளாகத் தொடர்ந்த அத்தாக்குதல்கள், திட்டமிட்ட கலவரங்களாக வடிவம் பெற்றன. 1983–இல் கொழும்பில் வாழ்ந்த தமிழர்கள் மீது நடத்தப்பட்ட கொடூரத் தாக்குதல்கள், முதன் முதலாக உலகின் கவனத்தை ஈர்த்தன. அக்கலவரத்தில் நூற்றுக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டனர். பல கோடி ரூபாய் பெறுமானமுள்ள தமிழர் சொத்துக்கள் சூறையாடப்பட்டன. பல்லாயிரக்கணக்கான மக்கள் அகதிகளாக வெளியேறினர். பன்னாட்டு ஊடகவியலாளர் களின் கண் முன் நடந்த இத்தாக்குதல்களுக்குப் பின்னே இலங்கை அரசின் நேரடி ஆதரவும் அதிபர் ஜெயவர்த் தனாவின் அலட்சியப் போக்கும் இருந்ததை ஊடகங்கள் வெளிக் கொணர்ந்தன. இந்திய அரசு வெளிப்படையாக இத்தாக்குதல்களைக் கண்டித்தது. 'இலங்கையில் நடப்பது இனப்படுகொலை' என்று அன்றைய இந்திய பிரதமர் இந்திரா காந்தி வெளிப்படையாகவே அறிவித்தார். இது இலங்கை அரசு மீது அழுத்தத்தை ஏற்படுத்தியது.

இந்த ஒட்டுமொத்த நிகழ்வுகளும் இலங்கை அரசுக்குப் பல பாடங்களை கற்றுக் கொடுத்தன. முதலாவதாக, இந்தியாவிற்கும் ஈழத் தமிழர்களுக்கும் பகைமையை ஏற்படுத்தி, இந்தியாவை தனக்குத் துணையாக மாற்றுவது. இரண்டாவது மிக முக்கிய மான பாடம், சாட்சிகளற்ற தாக்குதல்கள்.

1987–இல் போடப்பட்ட இராஜீவ்–ஜெயவர்த்தனா ஒப்பந்தம் மற்றும் அதனைத் தொடர்ந்த நிகழ்வுகள் மூலம் முதலாவதைச் சாதித்த இலங்கை அரசு, இரண்டாவதை நோக்கி மிக அழுத்தமாக நகர்ந்தது.

அதன் விளைவாக, ஏறத்தாழ 25 ஆண்டுகள் கழித்து, இன்னும் பரந்துபட்ட அளவில், நேரடியாகவே இராணு வத்தைக் கொண்டு, சாட்சிகளற்று, தமிழ் மக்கள் மீது மிகப் பெரும் தாக்குதலை நடத்தி, இலட்சக் கணக்கான மக்களைக் கொன்று குவித்துள்ளது இலங்கை அரசு.

படிப்படியாகத் திட்டமிட்டுப் பன்னாட்டுச் சாட்சிகளை அப்புறப்படுத்தியது இலங்கை அரசு. முதலில், சமாதான முயற்சிகளை மேற்கொண்ட

நார்வே அரசின் பிரதிநிதிகளை நாட்டை விட்டே வெளியேற்றியது. பின்னர் அய். நா. வின் பிரதிநிதிகளை போர் நடைபெற்ற பகுதியிலிருந்து வெளியேற்றியது. செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளைக் கூட அனுமதிக்க மறுத்தது. இவற்றுக்கெல்லாம் முன்பாகவே, அரசை விமர்சித்த ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப்பட்டோ, கட்டாயமாகவோ வெளியேற்றப்பட்டனர். பன்னாட்டு ஊடகவியலாளர்களுக்கு முற்றிலுமாக அனுமதி மறுக்கப் பட்டது. பல உள்நாட்டு ஊடகவியலாளர்கள் கொல்லப் பட்டனர். அல்லது காணாமல் போயினர். சிலர் பொய்க் குற்றச்சாட்டுகளில் கைது செய்யப்பட்டனர்.

இதற்கிடையே, பிரான்சு நாட்டின் மனித உரிமைப் பணியாளர்கள் 17 பேர் கொலையுண்டது, திருகோண மலை பல்கலைக்கழக மாணவர்கள் அய்வர் சுட்டுக் கொல்லப்பட்டது உட்பட ஆகஸ்ட் 2005 முதல் அக்டோபர் 2006 முடிய இலங்கையில் நடந்தேறிய கொடூரமான மனித உரிமை மீறல் கொண்ட 15 வழக்குகளை, சர்வதேச விசாரணைக் குழு விசாரிக்க சர்வதேச மனித உரிமை அமைப்புகளின் அழுத்தத்தால் முதலில் ஒப்புக் கொண்ட இராஜபக்சே, இரண்டே நாட்களில் உள்நாட்டு அதிகாரிகளைக் கொண்ட விசாரணைக் குழுவின் விசாரணையை வேண்டுமானால் சர்வதேச அமைப்பு கண்காணிக்கட்டும் என்று நிலையை மாற்றிப் பேசினார்.

அவ்வாறு 11 உறுப்பினர்களைக் கொண்ட சர்வ தேச முக்கியமான மனிதர்களின் சுதந்திரமான குழு *(International Independant Group of Eminent persons)* இந்திய உச்ச நீதிமன்ற ஓய்வு பெற்ற தலைமை நீதிபதி பி. என். பகவதி அவர்கள் தலைமையில் அமைக்கப் பட்டது. இலங்கை அரசு நிறுவனங்களின் போதிய ஒத்துழைப்புக் கிடைக்காத நிலையில், தாங்கள் தொடர்ந்து இலங்கையில் இருப்பதில் பயனேதும் இல்லை என்பதை அறிந்த அக்குழு, வெளிப்படை யாகவும் உரிய காலத்திலும் செயல்படாமை, அரசு நிறுவனங்களின் ஒத்துழைப்பின்மை, நிதி ஒதுக்கீட்டின் போதாமை, பாதிக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்கும் உரிய பாதுகாப்பு வழங்காமை, பல்வேறு உள் முரண்பாடுகள் ஆகிய காரணங்களை ஓர் அறிக்கையின் வழியாக உலகுக்கு அறிவித்துவிட்டு தனது பணிகளை மார்ச் 2008–உடன் முடித்துக் கொண்டு, ஏப்ரல் 2008 இறுதியில் இலங்கையை விட்டு வெளியேறியது.

இவ்வளவு நடந்தும் பன்னாட்டுச் சமூகம் வேடிக்கை பார்த்தது. 'உங்களின் பாதுகாப்பிற்கு எங்களால் உத்தரவாதம் அளிக்க முடியாது' என்று கூறி 2008 செப்டம்பரில், அய். நா. பிரதிநிதிகளை வெளியேறச் சொன்ன போது, அய். நா. அதற்கு கண்டனமோ மறுப்போ தெரிவிக்கவில்லை. அமைதியாக வெளியேறியது. உணவுப் பொருட்களையும் மருந்துப் பொருட்களையும் அளிக்கக் கூட செஞ்சிலுவைச் சங்கத்திற்கு அனுமதி மறுக்கப்பட்ட போது, செஞ்சிலுவைச் சங்கம் அதனை ஏற்றது. இலங்கை அரசின் இந்த நடவடிக்கைகள், தமிழ் மக்களின் பேரழிவிற்கான அடித்தளம் என்பதை உணர்ந் திருந்தும் பன்னாட்டுச் சமூகம் அமைதியே காத்தது.

ஒரு சில தமிழ் ஊடகவியலாளர்கள் தங்கள் உயிரைப் பணயம் வைத்துச் செய்திகளை வெளிக் கொணர்ந்த போதும், அவற்றை சார்புடைய செய்திகள் என பன்னாட்டுச் சமூகம் புறந்தள்ளியது. களத்தில் நின்று பணிபுரிந்த அரசு மருத்துவர்கள் அளித்த தகவல்களும், படங்களும் கூட அலட்சியப்படுத்தப்பட்டன. உலகெங் கிலும் வாழ்ந்த தமிழர்கள் வீதிகளில் இறங்கிக் கதறிய போதும், போர் நிறுத்தத்தை மட்டுமே ஒரே வேண்டு கோளாக வைத்துப் போராடிய போதும், அவர்களின் குரல் பன்னாட்டுச் சமூகத்தின் காதுகளை எட்டவே யில்லை. தமிழ்நாட்டில் முத்துக்குமார் உள்ளிட்ட 16 பேர் தங்களைத் தாங்களே எரிச்சலூட்டிக் கொண்டது எவ்வாறு இந்திய – தமிழக அரசுகளை பாதிக்க வில்லையோ, அவ்வாறே, ஜெனிவாவில் அய். நா. அவை முன் முருகதாஸ் எனும் இளைஞர் தன் மக்களைக் காக்கக் கோரி எரிச்சலூட்டிக் கொண்டு இறந்தது உலகின் எந்த ஓர் அதிகார மய்யத்தையும் பாதிக்கவில்லை.

இந்திய ஊடகங்களுக்கும், உலக ஊடகங்களுக்கும் இவை எதுவும் செய்தியாகப் படவில்லை. போரின் இறுதி நாட்களில், பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்ட போது கூட அதை பற்றி எதுவும் பேசாத ஊடகங்கள், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் கொல்லப்பட்டதாக இலங்கை அரசு வெளியிட்ட செய்தியைப் பெரிது பெரிதாக வெளியிட்டன.

இந்த நிலையில், 2009 மே 18 அன்று போர் முடிந்ததாக இலங்கை அரசு அறிவித்த ஒரு வாரத்திற் குள் 2009 மே 23 அன்று, அய். நா. பொதுச் செயலாளர் பான் கி மூன் இலங்கைக்குச் சென்றார். இலங்கை அரசு விமானத்தில் போர்ப் பகுதிகளைச் சுற்றிப் பார்த்தார். பின்னர் இலங்கை அரசு அழைத்துச் சென்ற ஒரு 'மாதிரி முகாமை' எட்டிப் பார்த்தார். கொழும்பு திரும்பி, இலங்கை அதிபர் இராஜபக்சேவுடன் இணைந்து ஒரு கூட்டறிக்கை வெளியிட்டார்.

அவ்வறிக்கையில், இலங்கையில் நடந்த நிகழ்வுகள் குறித்து பொறுப்பேற்பதற்கான நடவடிக்கைகளை பான் கி மூன் வலியுறுத்தினார். இலங்கை அரசு அதற்கான முயற்சிகளை மேற்கொள்வதாக உறுதி அளித்தது.

இந்த அறிக்கை வெளியிட்டு ஏறத்தாழ ஓராண்டிற்குப் பிறகு, 2010 ஜூன் 22 அன்று, இந்த அறிக்கையின் உறுதிப்பாட்டைச் செயல்படுத்துவதற்குத் தனக்கு ஆலோசனை வழங்க அய். நா. பொதுச்செயலாளர் பான் கி மூன் ஒரு வல்லுநர் குழுவை அமைத்தார்.

இக்குழுவின் தலைவராக, மர்சூகி தருஸ்மன் (இந்தோனேசியா), உறுப்பினர்களாக ஸ்டீவன் ரட்னர் (அமெரிக்கா), யாஸ்மின் சூகா (தென்னாப்பிரிக்கா) ஆகியோரை பொதுச் செயலாளர் நியமித்தார். 16 செப்டம்பர் 2010 அன்று குழு அதிகாரபூர்வமாகச் செயற்படத் தொடங்கியது.

இதற்கிடையே, அயர்லாந்து தலைநகர் டப்ளினில் கூடிய 'நிரந்தர மக்கள் தீர்ப்பாயம்' என்ற அரசு சாரா அமைப்பு, இலங்கையில் நடந்த போர்க் குற்றங்கள் குறித்த வெளிப்படையான மக்கள் விசாரணையை கடந்த 2010 ஜனவரி 14, 15, 16 தேதிகளில் நடத்தி, 2010, ஜனவரி 16 அன்று தனது அறிக்கையை வெளியிட்டது.

இதுவே இலங்கை அரசு போர்க் குற்றங்கள் செய்திருப்பதை ஏற்றுக் கொண்ட முதலாவது பன்னாட்டு அமைப்பாகும்.

அதோடு, பிரிட்டனைச் சேர்ந்த தொலைக் காட்சி நிறுவனமான சானல் 4, போர் முடிந்ததாக அறிவிக்கப்பட்டதிலிருந்து, தொடர்ந்து இலங்கை அரசின் வன்செயல்களை, போர்க் குற்றங்களை மெய்ப்பிப்பதற்கான சாட்சியங்களைச் சேகரித்து வெளியிட்டது. இது இலங்கையில் நடைபெற்றக் கொடூரங்கள் குறித்து உலகெங்கும் முதன் முதலாக அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியது.

இவற்றிற்கு பிறகே அய். நா. பொதுச் செயலாளரின் வல்லுநர் குழு அமைக்கப்பட்டு, அது தன் பணிகளைத் தொடங்கியது.

ஏறத்தாழ 5 மாதங்கள் தனது ஆய்வினை மேற் கொண்ட வல்லுநர் குழு, 2011, மார்ச் 31 அன்று தனது அறிக்கையை வெளியிட்டது.

உலகளாவிய மனித உரிமைச் சட்டங்கள் மற்றும் மனித நேயச் சட்டங்கள் மீறப்பட்டதையும், போர்க் குற்றங்கள் நடைபெற்றதையும் அறிக்கை தக்க சான்றுகளோடு நிறுவுகிறது.

அத்துடன், அறிக்கை இலங்கை அரசுக்கும், அய். நா. விற்கும், பன்னாட்டுச் சமூகத்திற்கும் சில பரிந்துரைகளை முன் வைத்துள்ளது.

தனது பரிந்துரைகளில் முதன்மையாக, இலங்கை அரசு –

''ஆயுதப் போரில் ஈடுபட்டிருந்த இரு தரப்பினரும் உலகளாவிய மனித நேய மற்றும் மனித உரிமைச் சட்டங்களின் அடிப்படையில் புரிந்துள்ள அத்து மீறல்கள் குறித்து உடனடியாக நேர்மையான விசாரணைகளைத் தொடங்க வேண்டும்.''

– எனக் கோரியுள்ளது. குற்றவாளிகளிடமே விசாரித்துத் தண்டிக்கும் பொறுப்பை வழங்குவது போல, இலங்கை அரசே தனது உள்நாட்டுக் கட்டமைப் பின் மூலம் நடந்த போர்க் குற்றங்களை விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோருவது, ஒட்டுமொத்த முயற்சிகளையும் வீணடிப்பதாகவே அமையும்.

அய்.நா. வை நோக்கி வைக்கப்பட்டுள்ள பரிந்துரை களில் ஒன்றான –

''இலங்கையில் போர் நடைபெற்றப் போதும் அதற்குப் பிறகான காலக்கட்டங்களிலும் அய். நா.வின் மனித நேய மற்றும் பாதுகாப்புத் தீர்மானங் களை நடைமுறைப்படுத்துவதற்கு மேற்கொள்ளப் பட்ட செயல்கள் குறித்து செயலாளர் நாயகம் மறு ஆய்வு நடத்த வேண்டும்.''

என்பது கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கியப் பரிந்துரையாகும்.

அய்.நா.வின் வல்லுநர் குழு நேரடியான கள ஆய்வுகளை மேற்கொள்ள இலங்கைக்குப் பயணம் செய்ய விரும்பிய போதும், அதனை இலங்கை அரசு அனுமதிக்கவில்லை. இந்நிலையில், இவ்வறிக்கை நேரடியான சாட்சியங்களையும், அய். நா. வின் ஆவணங்களையுமே சார்ந்து இருந்ததாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆக, இன்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மீறல்கள் குறித்து அய். நா. முன்பே அறிந்திருந்தது என்பது புலனாகிறது. இவ்வளவு பெரிய மனிதப் பேரழிவு நடைபெறுவதை அறிந்திருந்த போதும், அதனைத் தடுக்க அய். நா. முயற்சிகளை மேற் கொள்ளாதது ஏன் என்ற கேள்வி எழுகிறது.

இந்தச் சூழலில்தான், இலங்கையில் போர் தீவிரமாக நடைபெற்ற காலக்கட்டத்தில், இலங்கை யிலும் அதற்கு வெளியிலும் அய். நா. உறுப்பு அமைப்புகளின் செயல்பாடுகளை ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும் என வல்லுநர் குழு நியாயமான பரிந் துரையை முன் வைத்துள்ளது.

இலங்கை அரசுக்கு எதிராகத் தங்களின் ஒற்றைக் குரலை மட்டுமே உயர்த்தி நின்ற தமிழ் மக்களுக்கு அய். நா. வல்லுநர் குழுவின் அறிக்கை மிகப் பெரும்

பலமே. என்ற போதும், நடந்து முடிந்த போரின் பின்னணி மற்றும் தாக்கம் ஆகியவை குறித்து அறிக்கை முக்கியமான இரண்டு கருதுகோள்களை திட்டமிட்டோ திட்டமிடாமலோ ஒதுக்கியுள்ளது.

1) அய். நா. பொது அவை ஏற்றுக் கொண்டுள்ள 'அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தின்' 15-ஆம் பிரிவும், 'அனைத்துலக பொருளாதார, சமூக, பண்பாட்டுரிமை ஒப்பந்தம்' மற்றும் 'அனைத்துலக குடியுரிமை, அரசியலுரிமை ஒப்பந்தம்' ஆகியவற்றின் முதலாம் பிரிவும் –

''அனைவருக்கும் சுய நிர்ணய உரிமை உண்டு. அதனடிப்படையில் தங்களுக்கான அரசை நிறுவிக் கொண்டு தங்களின் பொருளாதார, சமுதாய, பண்பாட்டு மேம்பாட்டை முன்னெடுக்கலாம்''

– என்றே கூறுகின்றன. அதன் அடிப்படையில் கடந்த 60 ஆண்டு காலமாகத் தங்களின் தேசிய சுய நிர்ணய உரிமைக்காகப் போராடி வரும் ஈழத் தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக இவ்வறிக்கை அங்கீகரிக்கவில்லை. மாறாக இனக்குழு தேசியம் என்ற குறை மதிப்பீட்டுச் சொல்லையே பயன் படுத்தியுள்ளது.

2) டப்ளினில் கூடிய 'நிரந்தர மக்கள் தீர்ப்பாயம்', 2010 ஜனவரியில் அளித்த தனது அறிக்கையில், இனப் படுகொலையின் சுவடுகள் தென்படுவதாகவும், அவை ஆழ்ந்து விசாரிக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்த போதிலும், இலங்கை அரசு தமிழ் மக்கள் மீது மனித உரிமை மீறல்களையும், போர்க் குற்றங்களையும் நடத்தியுள்ளது எனக் கூறும் அறிக்கை, நடந்தது இனப் படுகொலை என்பதை முற்றிலுமாக ஒதுக்கியுள்ளது.

அய். நா. வல்லுநர் குழு தனது அறிக்கையில் இலங்கை அரசு புரிந்த போர்க் குற்றங்களைப் பட்டியலிடும் போது *Persecution* என்ற சொல்லை பயன்படுத்துகிறது. மதம், அல்லது இனம் அல்லது அவர்களின் நம்பிக்கைகளின் அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட மக்கள் குழுவைக் கொல்வது அல்லது விரட்டியடிப்பது அல்லது ஒடுக்குவதே *Persecution* ஆகும்.

அக்குற்றத்தை விவரிக்கையில் அறிக்கை இவ்வாறு குறிப்பிடுகிறது :

''தகுதிவாய்ந்த குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் கண்டறியப்பட்ட இந்த வகையான மனிதத்திற்கு எதிரான குற்றங்கள், வன்னியில் இருந்த தமிழ் மக்களுக்கு எதிராக இனம் மற்றும் அரசியல் அடிப்படையில் நடத்தப்பட்டதாகவே தெரிகிறது''

இது இனப்படுகொலை குற்றச்சாட்டிற்கு வலு சேர்ப்பதாகும். ஆனால் அய். நா. அறிக்கை திட்டமிட்டே இனப் படுகொலை எனும் சொல்லைத் தவிர்த்துள்ளது. இதற்கான காரணத்தை அமெரிக்கப் பேராசிரியர் பிரான்சிஸ் பாய்ல் இவ்வாறு விளக்குகிறார் :

''வெளிப்படையான அரசியல் காரணங்களுக்காக எவரும் இனப் படுகொலை என்ற சொல்லைப் பயன்படுத்த விரும்புவதில்லை. ஏனெனில், அச்சொல்லைப் பயன்படுத்தினால், பின்னர், இனப் படுகொலை தீர்மானத்தின் பிரிவு 1-இன் அடிப்படையில் ஏன் எவரும் இனப் படுகொலையைத் தடுத்து நிறுத்த வில்லை என்ற கேள்வி எழும். இதேதான் பாஸ்னியா வில் நடந்தது. மக்கள் எல்லாம் இறக்கும் வரை, அவர்களுக்கு எந்த நன்மையும் இனிச் செய்ய முடியாது என்ற நிலை வரும் வரை, இனப் படுகொலை என்ற சொல்லை எவரும் பயன்படுத்தவில்லை.''

1995-இல் ஸ்ரெப்ரெனிக்காவில் நடந்த பாஸ்னிய இனப் படுகொலையில் ஏறத்தாழ 7000 மக்கள் கொல்லப்பட்டனர். ஆனால் 2009-இல் வன்னியில் இதைவிட பல மடங்கு அதிகமான மக்கள் கொல்லப் பட்டுள்ளனர். மன்னார் மாவட்ட பிஷப் வணக்கத்திற் குரிய. ராயப்பா ஜோசப், இலங்கை அரசு அமைத்த 'கற்றப்பாடங்கள் மற்றும் இணக்கத்திற்கான ஆணைய'த் திடம் அளித்த வாக்குமூலத்தில், போர் நடந்த ஓராண்டிற்குள் 1,46,679 பேர் காணாமல் போயிருப்ப தாக தெரிவித்துள்ளார். இதற்கு அவர் முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்ட அரசு ஆவணங்களை சான்றாக அளித்துள்ளார். குறைந்தபட்சமாக 40,000 மக்கள் இலங்கை அரசால் கொல்லப்பட்டதாக அதிகாரபூர்வ செய்திகளே உறுதிப்படுத்துகின்றன. ஆனால் இன்று வரையில் அய்.நா.வும் உலக நாடுகளும் இதனை இனப்படுகொலை என்று ஏற்றுக் கொள்ள மறுக்கின்றன.

இன்றளவிலும் இலங்கையில் வாழும் தமிழ் மக்கள், சமூக, அரசியல், பண்பாடு, புவியியல், கட்டமைப்பு, வாழ்வியல் என பல வகையிலும் மீள முடியாத ஒடுக்குமுறைக்கு ஆளாகி நிற்கின்றனர். இனப் படுகொலை என்பது உயிர்களைக் கொல்வது மட்டுமல்ல. இன்றளவிலும் இலங்கையில் தமிழ் மக்கள் மீதான இனப் படுகொலை வெவ்வேறு வடிவங்களில் தொடர்ந்து கொண்டு இருக்கிறது.

தனது அறிக்கையில் இதனை ஏற்கவோ சுட்டிக் காட்டவோ மறுத்ததன் மூலம் அய். நா. வல்லுநர் குழு மிகப் பெரும் வரலாற்றுப் பிழையைச் செய்துள்ளது.

போரில் உயிர்களைப் பலி கொடுத்து நடந்த இன அழிப்பிற்கு பின், தற்போது, சமூக, பொருளாதார பாதுகாப்பு இன்றியும், நிலங்களையும் வாழ்வாதாரங்களையும் பறி கொடுத்தும், தங்கள் பண்பாட்டைப் பேணவோ வெளிப்படுத்தவோ இயலாத அச்சுறுத்தல் நிலவும் சூழலில், ஈழத் தமிழினம் தனது அடையாளங்களைச் சிறிது சிறிதாக இழந்து 'உயிர்ப்பலியற்ற' ஓர் இன அழிப்பிற்கு உள்ளாகியிருக்கிறது.

இந்நிலையில் பன்னாட்டுச் சமூகம் மீண்டும் ஒருங்கிணைந்த இலங்கைக்குள் தீர்வு என்ற முழக்கத்தை முன் வைப்பது என்பது ஒட்டுமொத்த ஈழத் தமிழினத்தின் அழிவிற்கே வழி வகுக்கும்.

அண்மைக் காலங்களில் இனப்படுகொலை நடந்தேறிய கிழக்கு தைமூர், மாண்டிநீக்ரோ, தெற்கு சூடான் போன்ற நாடுகளில் அய். நா. வே முன்னின்று பொது வாக்கெடுப்பு நடத்தி நாடமைத்துக் கொடுத்துள்ளது.

அதே போன்ற ஒரு சூழல் நிலவும் ஈழத்திலும், இப்படியான வாக்கெடுப்பு மூலம் தமிழ் மக்களின் தாயகத்தை மீட்டுத் தர வேண்டிய பொறுப்பும் கடமையும் பன்னாட்டுச் சமூகத்திற்கு உள்ளது.

இரண்டாவதாகவும், மிக முக்கியமானதாகவும் தமிழ்ச் சமூகம் எதிர்பார்ப்பது என்னவெனில், உலகில் இனப் படுகொலை வரலாறு என்பது இத்தோடு முற்றுப் பெற வேண்டுமென்பதே.

உலக நாடுகள் பலவற்றையும் தனக்குத் துணையாக வைத்துக் கொண்டு, சாட்சிகளற்ற போரின் மூலம் ஓர் இனப் படுகொலையை எவ்வாறு வெற்றிகரமாக நிகழ்த்துவது என்பதை இராஜபக்சே அரசு உலகிற்கு எடுத்துக் காட்டியுள்ளது.

மனித உரிமைகள் குறித்தும், தேசிய இனங்களின் உரிமைகள் குறித்தும், அரச பயங்கரவாதம் குறித்தும் அதிகம் விவாதிக்கப்படும் இன்றைய சூழலில், இராஜபக்சே காட்டியுள்ள இந்தத் தவறான வழி முறையானது, உலகெங்கிலும் சிறுபான்மையினராக வாழும் தேசிய இனங்கள் அனைத்திற்கும் அச்சுறுத்தல் அளிப்பதாகவே கருதப்படவேண்டும்.

இனப் படுகொலைகள், போர்க் குற்றங்கள், இன அழிப்புகள் மற்றும் மனிதத்திற்கு எதிரான குற்றங்கள் ஆகியவற்றைத் தவிர்க்கவும் தடுக்கவும், எழுந்துள்ள முழக்கமான 'பாதுகாப்பதற்கான பொறுப்பு' (*Responsibility to Protect – R to P*) என்பது இன்றைய முக்கிய தேவையாக உருவாகியுள்ளது. 2005-இல் நடந்த அய்.நா.வின் உலக மாநாட்டில் உலக நாடுகள் 'பாதுகாப்பதற்கான பொறுப்பு' என்ற அடிப்படையில் கீழ்க்காணும் கடப்பாடுகளை அளித்தன :

> 1. மக்களை இனப் படுகொலைகள், போர்க் குற்றங்கள், இன அழிப்புகள் மற்றும் மனிதத்திற்கு எதிரான குற்றங்கள் ஆகியவற்றிலிருந்து பாதுகாக்கும் முதன்மைப் பொறுப்பு அரசுக்கு உள்ளது.
>
> 2. அரசுகள் இப்பொறுப்பைச் சரியானபடி நிறைவேற்றுவதற்கு உதவி செய்யும் கடமை, பன்னாட்டுச் சமூகத்திற்கு உள்ளது.
>
> 3. தேவையான அரசு ரீதியான முயற்சிகள், மனித நேய மற்றும் பிற அமைதியான வழிகளைப் பயன்படுத்தி இக்குற்றங்களிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பினைப் பன்னாட்டுச் சமூகம் செயல்படுத்த வேண்டும். ஓர் அரசு தனது மக்களை இக்குற்றங்களிலிருந்து காக்கத் தவறினாலோ, அல்லது இக்குற்றங்களை அரசே செய்தாலோ, அய். நா. வின் பாதுகாப்பு அவையின் கூட்டுப் படைகளின் மூலம் நடவடிக்கை எடுப்பது உள்ளிட்ட கடுமையான நடவடிக்கைகளை எடுக்கப் பன்னாட்டுச் சமூகம் தயாராக இருக்க வேண்டும்.

(http://www.responsibilitytoprotect.org/index.php/about-rtop/learn-about-rtop)

'பாதுகாப்பதற்கான பொறுப்பு' குறித்து விளக்கும் போது பேராசிரியர் கரெத் இவான்ஸ் சொல்வது போல,

''இறையாண்மை என்பது கொல்வதற்கான அனுமதிச் சீட்டாக உள்ளது.''

இதனை உடைத்து, இறையாண்மை என்ற பெயரால் அரசே தலைமையேற்று நடத்தும் படுகொலைகள் நீதிக்கு முன் நிறுத்தப்பட வேண்டும் என்பதே 'பாதுகாப்பதற்கான பொறுப்பு' என்ற இந்தக் கோட்பாட்டின் அடிப்படையாகும்.

இதன் அடிப்படையில் ஈழத் தமிழர்கள் மீது இனப் படுகொலை புரிந்த இலங்கை அரசு மீதும் அதற்கு உதவியாக இருந்த அனைத்து நாடுகள் மீதும் கடுமையான நடவடிக்கைகளை எடுக்கப் பன்னாட்டுச் சமூகம் முன் வர வேண்டும்.

பன்னாட்டுச் சமூகத்தின் மீதான எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவது என்பது அத்தனை எளிதல்ல. அதனைச் சாத்தியமாக்குவது, மனித உரிமைகளை

மீட்டெடுப்பதில் உறுதி கொண்டுள்ள குடிமைச் சமூகத்தின் கரங்களிலேயே உள்ளது.

ஈழத் தமிழர்கள் மற்றும் உலகெங்கும் பரவியுள்ள தமிழ் பேசும் மக்கள் மட்டுமல்லாது, யாரெல்லாம் மனித உரிமைகள் மீது நம்பிக்கைக் கொண்டுள்ளனரோ அவர்கள் அனைவரையும் அணி திரட்டி, பன்னாட்டுச் சமூகத்திற்கு அழுத்தம் கொடுக்க வைப்பதே இன்று நம் முன் இருக்கும் பெரும் கடமை. அதற்கு இந்த அறிக்கை பயன்பட வேண்டும் என்பதே நமது எதிர்பார்ப்பு. •

– பூங்குழலி
மொழிபெயர்ப்பாளர்

தட்டச்சு செய்து தந்த தோழர்கள் பிரகாஷ், சென்னை; வழக்குரைஞர் கிருஷ்ணகுமார், தாராபுரம்;
செல்வகணேஷ், சென்னை; தி. தாமரைக் கண்ணன், திண்டுக்கல்; இராவணன், கருந்திணை;
பிரேமா, மதுரை மற்றும் இப்பணி முடிக்க ஊக்கமளித்துப் பெருந்துணை புரிந்த
தோழர் பழ. நெடுமாறன், தோழர் கொளத்தூர் மணி ஆகியோருக்கு உளமார்ந்த நன்றி!

அணிந்துரை



தியோடர் எஸ். ஆர்லின்
மனித உரிமைகள் அறிவுத்தளம் மற்றும்
பரிந்துரைகளுக்கான பேராசிரியர்
Clark Professor of Human Rights Scholarship and Advocacy
உடிகா கல்லூரி, உடிகா, நியூயார்க், அமெரிக்கா

போர் ஏறத்தாழ கால் நூற்றாண்டுக்குத் தொடர்ந்தது. குறிப்பாக சொல்ல வேண்டுமெனில், 27 ஆண்டுகள். போர் தொடங்கிய போது பிறந்த குழந்தைகள் தற்போது இளைஞர்களாக முழு பக்குவ நிலையை நோக்கி முன்னேறிக் கொண்டிருப்பவர் களாக இருக்கிறார்கள். 2009 வரை, வன்முறை மற்றும் வெறுப்பினால் சிதைந்த ஒரு நாட்டில் அவர்கள் வாழ வில்லை. வன்முறை மற்றும் குற்றங்களுக்காக அல்லாது கடற்கரைகள், குன்றுகள், பசுமை வெளிகள், வளமான நிலங்கள் மற்றும் இயற்கை அழகிற்காக அறியப்பட வேண்டிய அவர்களின் சொர்க்கத் தீவை சாவு, அச்சம் மற்றும் அழிவு ஆகியவற்றின் சோகம் மூழ்கடித்தது. வெறுப்பின் அரசியல், தேச பக்திக்கான அழைப்பு மற்றும் சம உரிமைக்கான கதறல்கள் ஆகியவை இணைந்த போரின் கொடுமைகளின் கட்டுப்பாட்டில் அதன் பண்பாடும் மக்களும் நெடுங்காலம் இருந்தனர்.

தற்போது 21ஆம் நூற்றாண்டின் இரண்டாவது பத்தாண்டின் தொடக்கத்தில் நாம் இருக்கும் நிலையில், அதிகாரபூர்வமாக சண்டை நிறுத்தப்பட்ட நிலை என்பது, அமைதிக்கான காலத்தை கொண்டு வந்து விட்டதா என்ற கேள்வி இன்னமும் நம்முன் இருக்கிறது. ஆயுதப் போர் முடிந்தது என்பது அமைதி என்றாகாது. உண்மையான அமைதி என்பது மனித மாண்பிற்கான மதிப்பை மீட்டெடுப்பதில் (அல்லது உருவாக்குவதில்), அரசின் அனைத்துப் பிரிவினரும் குடிமக்கள் என்ற முறையில் பாகுபாடற்ற உரிமைகள் மற்றும் மதிப்பினைப் பெற்றுள்ளனர் என்பதை சட்டம் மற்றும் நடைமுறையில் அங்கீகரிப்பது என்பதே யாகும். 'மனித உரிமைகளை ஊக்கப்படுத்தி, மதித்து, கடைப்பிடிப்போம்' என்ற அய். நா. உறுப்பு நாடுகளின் உத்தரவாதத்துடன் நிறைவேற்றப்பட்ட உலகளாவிய மனித உரிமைகள் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகள், மதம், மொழி பயன்பாடு மற்றும் இனக் குழு ஆகிய எதன் அடிப்படையிலும் பாகுபாடின்றி ஒவ்வொரு தனி மனிதருக்கும் உறுதிப்படுத்தப்படு வதேயாகும் (அய். நா. சட்டங்கள் பிரிவு 55 மற்றும் 56).

தனது குடிமக்களை சிதைத்து, ஒருவரை ஒருவர் கொல்லவும், காயப்படுத்தவும் தூண்டிவிட்டுள்ள ஒரு கசப்பான போருக்குப் பின் மனித உரிமைகள் மீதான கடப்பாட்டினை மீட்டெடுத்து நிலைநாட்டுவது என்பது எளிதான பணி அல்ல. 'தூய்மைப்படுத்தும் பணி', அதாவது சமூகத்தை சட்ட மீறல்கள் மற்றும் மனித உரிமைகள் மீறல்களிலிருந்து சுத்தப்படுத்துவது என்பது, சில இடங்களில் நிறைவேறியுள்ளது. பல இடங்களில் இல்லை. வெற்றி பெற்ற அரசும் சமூகமும், தோற்கடிக்கப்பட்ட சிறுபான்மையினரின் உரிமைகளையும் நலன்களையும் மதிக்கும் விதத்தில் கடந்த கால தீங்குகளை கவனிக்கும் இடத்தில் ஓர் ஆரோக்கியமான எதிர்காலத்திற்கு இது அவசியமான தாக இல்லாமல் இருக்கலாம். ஆனால், நடைமுறையில் பெரும்பாலும் ஓர் ஆரோக்கியமான சமூகத்தை நிறுவுவதற்கான முன்னோடியாக ஆற்றுப்படுத்தும் நடவடிக்கையை தொடங்கி, தங்களின் குடும்பங் களையும் சமூகத்தையும் பீடித்த போரின் கொடூரங் களுடன் போராட அனைவரையும் அனுமதிக்கும் ஒரு வழிமுறையே உள்ளது.

மனித நேயச் சட்டம், ஜெனிவா ஒப்பந்தங்கள் போன்றவற்றிற்கு எதிரான மீறல்களைப் புரிந்த படை யினர் மற்றும் 'கொடூரமான திட்டமிட்ட மனித உரிமை மீறல்களை' புரிந்தவர்கள் ஆகியோரின் குற்றங்களை விசாரிப்பதோடு தூய்மைப் பணி தொடங்க வேண்டும் என்பது அடிப்படையானதாகத் தோன்றுகிறது.

அது அரசு சார்பாக பணியாற்றியவர்களோ அல்லது அரசு அல்லாதவர்களோ, போர்ச் சட்டங்கள் மற்றும் மனித உரிமைகள் சட்டங்களை மீறியவர்கள் எவராயினும் அவர்கள் நீதிக்கு முன் நிறுத்தப்பட வேண்டியவர்கள். ஆற்றுப்படுத்தும் நடைமுறைக்கு கடந்த காலத்தின் உண்மை ஒரு முக்கிய உள்ளீடாகும். 'தி டெம்பஸ்ட்' என்ற தனது படைப்பில் ஷேக்ஸ்பியர் குறிப்பிட்டதைப் போல 'கடந்த காலமே முன்னோடியாகும்'. உண்மையான அமைதியை நோக்கி இலங்கை செல்ல வேண்டுமெனில், அதற்கான முன்னோடியாக கடந்த காலம் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கைப் போர் 'சாட்சிகளற்ற போர்' என்று அடிக்கடி குறிப்பிடப்படுகிறது. இதனால் உண்மை அறியும் வழிமுறை மிகவும் கடினமானதாகவும் சிக்கலானதாகவும் ஆகியுள்ளது. போர் தீவிரமாக நடைபெற்ற நேரத்தில், குறிப்பாக அது முடிவை நெருங்கிய போதும் முடிவுற்ற போதும், பன்னாட்டு ஊடகங்களோ சுதந்திரமான அரசு சாரா தொண்டு நிறுவனங்களோ அங்கு இல்லை என்பது போரின் பங்கேற்பாளர்கள் நடத்திய சகிக்க முடியாத கொடூர செயல்களை கணிக்கவோ, தடுக்கவோ உலக சமூகத்தின் கண்கள் இல்லை என்றாக்கியது. இலங்கையின் பொறுப்பேற்கும் நடவடிக்கைகள் குறித்த செயலாளர் நாயகத்தின் வல்லுநர் குழுவின் அறிக்கை இவ்வாறு அறுதியிடுகிறது : 'ஆட்களை கடத்தவும், காணாமல் போகச் செய்யவும் வெள்ளை வேன்களை பயன்படுத்தியது உட்பட பல்வேறு வகையிலான அச்சுறுத்தல்கள் மற்றும் செயல்களின் மூலம் ஊடகங்களையும், போரை விமர்சிக்கும் பிறரையும் அமைதிப்படுத்தவும் அச்சுறுத்தவும் அரசு முற்பட்டது' (சுருக்கம் : ப. 2).

என்றபோதும், உண்மையை அறிவது என்பது காத்திருப்பில் வைக்க இயலாத ஒன்று என்ற நிலையில் நாம் இருக்கிறோம். காலம் நினைவுகளையும், பொருள் தடயங்களையும் அழித்துவிடும். மீறல் குற்றச்சாட்டுகளுக்கான சான்றுகள் இல்லாத நிலையில் அவை வெறும் குற்றச்சாட்டுகளாகவே நின்றுவிடும். காலம் கடக்கும் முன், உண்மையை அறிவதற்கு அவசிய தேவையாக இருக்கின்ற சான்றுகளை சேகரிப்பதற்கு தற்போது முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதுதான் மீறல்களை சட்டப்படி ஆராய்வதற்கு பயனளிக்கும். அரசுப் படையினரும் தனி நபர்களும் போரின்போது கடைப்பிடிக்க வேண்டியதென இச்சமூகம் கோரும் கட்டுப்பாடுகளை அலட்சியப் படுத்தி, மீறியவர்களை நீதியின் முன் நிறுத்த பயன்படும். அதே நேரத்தில், போரில் வெற்றி பெற்றவர்கள் தோற்ற எதிரிகள் மீது நடத்திய மனித உரிமை மீறல்களை விசாரிப்பதும் முக்கியமானது. போர்களை வென்ற பிறகும், தோற்ற பிறகும், மனித உரிமைகள் மீதான மதிப்புடன் மட்டுமே ஒரு சமூகம், தனது குடிமக்களின் மனித மாண்பிற்கான மரியாதையை உறுதி செய்யும் கடப்பாடினை நிறை வேற்றுவது நோக்கி முன்னேற முடியும்.

போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களைப் புரிந்தவர்களை நீதிக்கும் முன் நிறுத்த வேண்டும் என்ற எண்ணத்தை வலுப்படுத்தும் ஒரு முயற்சி அண்மையில் எடுக்கப்பட்டது. அதை எந்த வொரு அதிகாரபூர்வ அமைப்பும் செய்யவில்லை. மாறாக, அதை செய்தது ஓர் ஊடகம். சானல் 4 (பிரிட்டன்) வெளியிட்ட ஆவணப்படம் பொதுக்கருத்தில் மட்டும் ஓர் அதிர்வலையை ஏற்படுத்தவில்லை. அதனுடன், மீறல்கள் மீது அதிகாரபூர்வ வழிகளில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என கோரும் அரசுகளிடையேயும் அது அதிர்ச்சியை ஏற்படுத்தியது. 'சானல் 4' ஆவணப் படம் போன்ற ஊடகங்கள் வெளிப்படுத்தும் உண்மைகள், கண்களை மூடிக் கொண்டிருப்பவர்களின் விழிகளைத் திறக்கவும், சாளரங்களைத் திறக்கவும், அதன் மூலம் வெளிச்சமும் புதிய காற்றும் ஊடுருவி, தேடப்படும் உண்மைகளை உணரவும் செய்யலாம். ஆனால், தவறுகள் குறித்த உண்மைகளை அறிய அது முதல் படி மட்டுமே. அரசு அமைப்பும் இறை யாண்மையும் இன்னமும் கோலோச்சும் ஓர் உலகில், கடந்த காலத்தின் மீது நடவடிக்கை எடுக்க மேலும் அதிகாரபூர்வ வழிகளை மேற்கொள்ள வேண்டியது தவிர்க்க இயலாத ஒன்றாக உள்ளது. அதன் மூலம் எதிர்காலத்தின் ஆரோக்கியம் பேணப்படலாம். அய். நா. அறிக்கை முக்கியமானதுதான். எனினும், அதுவே அந்தப் பாதையின் இறுதி அல்ல. ஆனால், அது குறிப் பிட்டுள்ள குற்றச்சாட்டுகளை கண்டறிவதற்கான ஒரு வழிமுறையை நிறுவுவதில் இவ்வறிக்கை ஒரு தூண்டுகோலாக இருக்கும்.

பொறுப்பேற்பது குறித்தும், குற்றவாளிகள் மீதான தீர்ப்பு குறித்தும் குற்றம் சாட்டப்பட்டவர்களை மன்னிப்பது குறித்தும் இறுதியான முடிவை தேடுபவர்கள் ஒன்றை ஏற்றக் கொள்ள வேண்டும். செயலாளர் நாயகத்தின் வல்லுநர் குழு, அதன் பெயரே உரைப்பது போல, அது ஒரு குழுவே அன்றி, தீர்ப்பாயம் அல்ல.

குழுவின் பணியின் தரத்தையும் அதன் ஆழமான ஆய்வுகளையும் கடந்தும், அது அதிகாரபூர்வமற்றது. ஏனெனில், முறையான நீதி விசாரணை வழி முறைகளின் மூலம் குற்றச்சாட்டுகளை விசாரிக்கக் கூடிய சரியான நடைமுறையாக அது இல்லை. குழுவின் அறிக்கையின் சுருக்கத்தின் முதல் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதைப் போல, அது 'மீறல் குற்றச் சாட்டுகளின் தன்மை மற்றும் வீச்சை' கவனத்தில் கொண்ட போதும், அதன் 'பணி வரையறையானது, உண்மை அறிவது மற்றும் விசாரணைகளை உள்ளடக்க வில்லை.' குழு ஒப்புக்கொண்டதை போல அது முதன்மைச் செய்திகளை சார்ந்திருந்தது. அதன்

குற்றச்சாட்டுகள் கவனத்தில் கொள்ளத்தக்கவை என்பதில் அய்யமில்லை. குற்றச்சாட்டுகளுக்குப் பின்னணியில் இருக்கும் செயலோ அல்லது நிகழ்வோ நடந்தது என்பதை நம்புவதற்கு தகுதிவாய்ந்த அடிப்படை இருப்பதைப் பொருத்தே குற்றச்சாட்டுகளின் நம்பகத்தன்மை உறுதி செய்யப்பட்டது என குழு தெளிவுற உரைக்கிறது. எனவே, அதிகார பூர்வமான வழிமுறைக்கு குறைந்ததாக இருந்த போதும், குழுவின் அறிக்கை, குழுவின் பரிந்துரைகள் உறுதிப்படுத்துவதை போல, குற்றச்சாட்டுகளை மேலும் விசாரிப்பதற்கு தேவையான அதிகாரபூர்வ நடவடிக்கைகளை எடுப்பதற்கு தேவையான உண்மைகளை அறிவதற்கான வழிமுறைகளை தொடங்குவதற்கு என செயலாளர் நாயகத்தால், தனித்துவமான உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கப்பட்ட, ஒரு தகுதிவாய்ந்த குழுவின், பொதுவான, நிகர்அதிகாரபூர்வ அறிக்கையாக அது செயல்படும் தகுதி வாய்ந்தது என வாதாடலாம்.

விசாரணையை அதிகாரபூர்வமாக முன்னெடுக்கக் கூடிய அமைப்புகள் கவனத்தில் கொள்ளத்தக்க முதன்மைச் சான்றுகளை நிறுவுவதற்கு நீண்ட தூரம் பயணிக்க வேண்டும். ஏதேனும் ஓர் அதிகாரபூர்வ அமைப்பு இந்த குற்றச்சாட்டுகளை கவனத்தில் கொள்ளுமா என்பதே தெளிவற்ற ஒன்றாக உள்ளது. பன்னாட்டுச் சமூகத்தின் அரசியல் விருப்பம் அல்லது மனித நேய மற்றும் மனித உரிமைச் சட்டங்களை மீறியவர்களை நீதியின் முன் நிறுத்துவதற்கான தனது பொறுப்பை இலங்கை அரசு ஏற்றுக் கொள்வதன் மூலமே அது சாத்தியம்.

போர் நடத்தப்பட்ட விதம் குறித்த இலங்கை அரசின் அறிக்கைகளை இந்த அறிக்கை துணிவுடன் கேள்விக்குள்ளாக்குகிறது. 'போரின் இறுதிக் கட்டங்கள் பற்றி இன்று வரை இலங்கை அரசு சொல்லிவரும் நிலைக்கு முற்றிலும் மாறுபட்டதாகவே தகுதிவாய்ந்த குற்றச்சாட்டுகள் குறித்த குழுவின் முடிவுகள் வெளிப்படுத்துகின்றன'. (சுருக்கம் பக்கம் 2) உலகளாவிய மனித நேய மற்றும் மனித உரிமைச் சட்டங்கள் மோசமாக மீறப்பட்டது குறித்த அதன் கண்டுபிடிப்புகள் அலட்சியப்படுத்தப்பட முடியாதவை. மனித உரிமைகளுக்காகப் போராடும் அனைவரும் வலியுறுத்தக்கூடியதாக, வரலாறு பதிலுரைக்க வேண்டிய குற்றச்சாட்டுகளாக குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் இருக்க வேண்டும்.

இந்த குற்றச்சாட்டுகள் அலட்சியப்படுத்தப்பட்டால், உலகளாவிய சட்டங்களின் அடித்தளமே ஆட்டங் கண்டுவிடும். அரசின் உத்தரவாதத்தினால் ஊக்கம் பெற்று பாதுகாப்புத் தேடிய பொது மக்கள் மீது தாக்குதல் நடத்த 'பாதுகாப்பு வலயங்கள்' பயன்படுத்தப் பட்டது என்பது நிச்சயமாக நீதி விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும்; அல்லது குறைந்தது, மனித நேயச் சட்டம் எதிர்கால போர்களுக்கு தடுப் பரணாக அமைய வேண்டுமெனில், இவை அதிகார பூர்வமாக நிச்சயிக்கப்படவேண்டும். நீதிக்கான தேவை மட்டும் இருளில் இல்லை. எதிர்காலத்தில் நடைபெறக் கூடிய போர்கள் மற்றும் மோதல்களைத் தடுக்கவும், கட்டுப்படுத்தவும் உலகளாவிய சட்டத்திற்கு உள்ள திறனே கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கை கோரும் கவனத்தை ஈர்க்க இந்த குற்றச்சாட்டுகள் தவறுமாயின், நூரம்பெர்க், டோக்கியோ, முன்னாள் யுகோஸ்லேவியா, ருவாண்டா, சியரா லியோனே ஆகிய இடங்களிலும், உலகளாவிய குற்றவியல் நீதிமன்றத்தை ஏற்படுத்துவதிலும் முக்கியமான பங்கை ஆற்றிய உலகளாவிய நீதியின் தோல்வியாகவே அது பார்க்கப்படும்.

குழு தனது குற்றச்சாட்டுகளில் நடுநிலையுடன் உள்ளது. விடுதலைப் புலிகளின் தரப்பிலான மீறல்களாக, பொதுமக்களைப் பணயமாகப் பயன்படுத்தியது, 14 வயதுடைய சிறுவர்கள் உட்படப் போராளிகளை வலுக்கட்டாயமாகப் படையணியில் இணைத்தது, மற்றும் போர்ப் பகுதியிலிருந்து தப்பி ஓட முயன்ற பொதுமக்களைக் கொன்றது உள்ளிட்டவற்றையும் குறிப்பிட்டுள்ளது.

போரின் இரு தரப்பினரும் சந்தேகமின்றி இந்த குற்றச்சாட்டுகளை மறுப்பார்கள். மறுத்திருக்கிறார்கள். இந்த குற்றச்சாட்டுகளுக்கு அடிப்படையாக உள்ள உண்மைகளை மறுப்பது மட்டுமல்லாமல், அதை நியாயப்படுத்தவும், குற்றத்திலிருந்து விடுவிக்கவும் வாதங்கள் நடைபெறும். மேலும், அதிகாரபூர்வ நடைமுறைக்கு குற்றச்சாட்டுகள் ஒரு காரணமாக இருப்பதை போல, நீதி விசாரணையிலோ அல்லது பிற முறைகளிலோ தேவையான நடைமுறை கட்டுப்பாடுகளுடன் இந்த எதிர் வாதங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். இவை இந்த அறிக்கையை ஒதுக்க முடியாது என்பதற்கான காரணத்திற்கு வலு சேர்க்கிறது. குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதைப் போல, 'உலகளாவிய மனித நேய மற்றும் மனித உரிமைகள் சட்டங்களை மோசமாக மீறியவை குறித்து பொறுப்பேற்பது என்பது விருப்பத் தேர்வோ, கொள்கை முடிவோ அல்ல. அது உள்நாட்டு மற்றும் உலகளாவிய சட்டங்களின் கீழான கடமையாகும். மீறல்கள் குறித்த இந்த நம்பத்தகுந்த குற்றச்சாட்டுகள் நேர்மையான விசாரணை மற்றும் அதற்கு பொறுப்பானவர்களுக்கு தண்டனை ஆகியவற்றை கோருகிறது'.

நீதி மற்றும் இணக்கத்திற்கு இலங்கையின் அணுகு முறையாக உள்ள 'கற்ற பாடங்கள் மற்றும் இணக்கத் திற்கான ஆணையம்' (க.பா.இ.ஆ.) மீதான விமர்சனங்கள் அலட்சியப்படுத்தப்படக் கூடாத மற்றொரு உண்மையாகும். குழுவைப் பொருத்த வரையில் '.. க.பா.இ.ஆ., அதன் அமைப்பு மற்றும் அதன் உறுப்பினர்கள் சிலரின்

ஆழமாக வேரூன்றி இருக்கக் கூடிய முரண் நலன்கள் ஆகியவற்றினால் அது சுதந்திரம் மற்றும் சார்பின்மை குறித்த உலகளாவிய வரையறைகளுக்கு ஏற்ப இல்லை. க.பா.இ.ஆ. மிகவும் தவறான ஒன்றாக உள்ளது...' அதே போன்று, இந்த குற்றச்சாட்டுகளை விசாரிக்க உள்நாட்டு சட்ட அமைப்பினைப் பயன்படுத்தும் இலங்கை அரசின் செயலையும் குழு விமர்சிக்கிறது. அதன் மூலம், இந்த குற்றச்சாட்டுகள் மீது சட்டபூர்வ எதிர் வினையை உறுதி செய்யக்கூடிய பன்னாட்டு எதிர்வினையை அது கோருகிறது.

(அ) பொறுப்பேற்கும் முயற்சிகள் குறித்த இலங்கை அரசின் அணுகுமுறையை கண்காணிக்கவும் (ஆ) விசாரணைகளை சுதந்திரமாக நடத்தவும் (இ) செய்திகளை சேகரிக்கவும் பாதுகாக்கவும் 'ஒரு சுதந்திரமான பன்னாட்டு நடைமுறையை நிறுவ செயலாளர் நாயகம் உடனடியாக செயல்பட வேண்டும்' அய். நா. அமைப்புகளோ, மனித உரிமைக் குழுவோ, செயலாளர் நாயகமோ அல்லது வேறு ஏதும் பொருத்தமான பன்னாட்டு அமைப்போ இறுதியாக இந்த பரிந்துரைகளை கவனத்தில் கொள்ளுமா என்பதை காலமும் சூழல்களுமே முடிவு செய்யும். பொறுப்பேற்பது குறித்த இலங்கையின் அணுகுமுறையில் விரைவில் மாற்றம் ஏற்படும் என்பது நடவாத ஒன்றாகவே தோன்றுகிறது. உலகளாவிய நீதியின் திறனையும், இணக்கத்திற்கான உண்மையான முயற்சிகள் குறித்தும் கேள்வி எழுப்புபவர்கள், தற்போதைய அரசியல் சூழலில் தங்கள் கருத்தே நிலைபெறுவதை காண்கின்றனர்.

வேதனைக்குரிய ஒன்றாக, தற்போதைய அரசியல் சூழல் உடனடியான மற்றும் பாதிப்பினை ஏற்படுத்தக் கூடிய பன்னாட்டு எதிர்வினைக்கு ஏற்றதாக இல்லை. என்றபோதும், பாதுகாப்பு அவை லிபியா சிக்கலில் எதிர் வினை ஆற்றியது போல செயல்படும் என ஓராண்டுக்கு முன் யார் எதிர்பார்த்திருக்கக் கூடும்? தனது சொந்த மக்களை 'பாதுகாப்பதற்கான பொறுப்பு' அரசுக்கு உண்டு என அய். நா. வின் செயல் அழைப்பானது, 'லிபியாவில் எதிர்வினையாற்றும் போது, ஏன் இலங்கைக்கு எதிர்வினையாற்ற முடியாது?' என்ற கேள்வியை எழுப்பியுள்ளது. குறைந்தபட்ச அளவில் இலங்கையில் தலையிட உலகம் அணியமாக இல்லை என்று நாம் முடிவுக்கு வர வேண்டுமெனில், மிக அண்மையில் முடிந்த போரில் அத்துமீறியவர்களை உண்மையாகவும் பாகுபாடின்றியும் பொறுப்பேற்க செய்வதற்கு நாம் கோர வேண்டாமா?

கடந்த காலம் ஒரு நீதிபதி எனில், அரசியல், சூழல் நிச்சயம் மாறும். உலகளாவிய குற்றங்களை புரிந்தவர்களை நீதியின் முன் நிறுத்த இலங்கை தவறியதை பல அரசுகள் கண்டித்ததும், சானல் 4 ஆவணப்படம் வெளியான பிறகு நீதிக்கான அழைப்பு மீண்டும் எழுந்துள்ளது என்பதும் பன்னாட்டு கருத்தினை மாற்ற முடியும் என்பதற்கான சான்றுகளாகும். இலங்கையின் அனைத்து மக்களுக்கான நீதி என்பது தொலைந்த அல்லது மறந்து போன ஒன்று அல்ல.

செப்டம்பர் 2010இல் வெளியிடப்பட்ட இவ்வறிக்கையானது, தேவையான அளவு பரவலாக எடுத்துச் செல்லப்படவோ, விவாதிக்கப்படவோ இல்லை. தற்போது இதனை தமிழில் கொண்டு வரும் இந்த பதிப்பானது தவறு செய்தவர்களை நீதியின் முன் நிறுத்தும் பாதையில் மற்றொரு படி எனும் வகையில் வரவேற்கத்தக்கது. தமிழ் பேசும் அனைவரும், அவர்கள் இலங்கையில் வாழ்ந்தாலும், புலம் பெயர்ந்து வட அமெரிக்கா, அய்ரோப்பா அல்லது ஆசியாவில் வாழ்ந்தாலும், அல்லது தங்கள் சகோதரர்களுடன் ஒத்த வாழ்நிலையைக் கொண்டு இந்தியாவில் வாழ்ந்தாலும் அல்லது பிற இடங்களில் வாழ்ந்தாலும், அவர்கள் இந்த அறிக்கையில் குழு விவரித்துள்ள சூழலை நன்கு பரிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும். நீதி இன்னமும் வழங்கப்படாத, தவறிழைத்தவர்கள் இன்னமும் பொறுப்பாக்கப்படாத சூழலை மாற்றுவதில் தமிழ்ச் சமூகத்தின் நண்பர்களும் உறவினர்களும் பங்காற்ற வேண்டுமெனில், அவர்கள் உண்மைகளை சேகரித்து, அரசியல் நோக்கங்கள் மற்றும் முன் தீர்மானங்களை களைந்து, நியாயத்தின் அடிப்படையில் சரியான வழிமுறையில் நீதியை கோர வேண்டும். தவறுகள், உலகளாவிய குற்றங்கள் மற்றும் மனித உரிமைகள் மீறல்கள் ஆகியவற்றிற்கு உண்மையாகப் பொறுப்பேற்கச் செய்வதன் மூலமே உண்மையான இணக்கச் சூழலை அடைய இயலும். •

அணிந்துரை



ரான் ரிடெநொர்

முன்னாள் பத்திரிகையாளர்;
கியூபா மற்றும் நிகரகுவா குறித்து பல நூல்கள் எழுதியுள்ளார்;
இவருடைய, 'இலங்கையில் தமிழ்த் தேசம்' -
'Tamil Nation in Sri Lanka' என்கிற ஆங்கில நூல்,
தமிழ்நாட்டின் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தால்
அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது

இலங்கையில் பொறுப்பேற்பது குறித்த செயலாளர் நாயகத்தின் வல்லுநர் குழுவின் அறிக்கை, செயலாளர் நாயகம் பான் கிமூனிடம் மார்ச் 31, 2011 அன்று அளிக்கப் பட்டது. இலங்கையில் நடைபெற்ற 26 ஆண்டு கால உள்நாட்டுப் போரின் இறுதிக் கட்டமான செப்டம்பர் 2008 முதல் மே 19, 2009 வரையிலான காலக்கட்டத்தில் நடைபெற்றிருக்கக் கூடிய போர்க் குற்றங்கள் மற்றும் மனிதத்திற்கு எதிரான குற்றங்கள் ஆகியவற்றைப் பற்றி

அந்த அறிக்கை கூறியது. அத்துடன், இலங்கை மக்கள் தொகையான 2 கோடியே 10 இலட்சம் மக்களில் 13 விழுக்காடாக இருக்கக் கூடிய 27 இலட்சம் இலங்கைத் தமிழர்களில் உள்நாட்டில் இடம் பெயர்ந்துள்ள ஏறத்தாழ 3 இலட்சம் மக்களின் நிலை பற்றியும் தெரிவித்தது.

அய். நா. வின் வல்லுநர் குழு அறிக்கை, மனித உரிமைக் குழுவின் மே மற்றும் சூன் 2011 கூட்டங்களில் குறிப்பிடப்பட்ட போதும், முடிவெடுக்கும் விவாதத் திற்கு வைக்கப்படவே இல்லை. வழக்கத்திற்கு மாறாக, மிகவும் நேரடியாகவும் நேர்மையாகவும் இருக்கக் கூடிய இந்த அய். நா. அறிக்கை, அரசுகளுக்கு அதிகப் படியான கொதி நீராக இருக்கிறது.

குழுவின் அறிக்கையின் படி, ஏறத்தாழ இறுதிக் கட்டத்தில் பல்லாயிரக்கணக்கான விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் மற்றும் இலங்கை இராணுவத் தினர் உட்பட 40,000 பொது மக்களை கொன்ற கொடூரமான போரில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு மறுவாழ்வு அளிக்கவும், அவர்களுடன் இணக்கத்தை ஏற்படுத்தவும் இலங்கை அரசு தவறியதை அடுத்து சூன் 22, 2010 அன்று மர்சூகி தருஸ்மன் (இந்தோனேசியா) தலைமையில், ஸ்டீவன் ராட்னர் (அமெரிக்கா), மற்றும் யாஸ்மின் சூகா (தென்னாப்பிரிக்கா) ஆகியோரை கொண்ட குழுவினை செயலாளர் நாயகம் அமைத்தார்.

அய். நா. வின் அமைப்பு தங்கள் நாட்டில் நுழை வதற்கு இலங்கை அரசு மறுத்துவிட்ட நிலையில், குழு தனது ஆய்வினை இலங்கைக்கு வெளியே நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. பல மாதங்கள் தடுப்புக் காவல் முகாம்களில் வைக்கப்பட்டு, விடுவிக்கப்பட்ட அல்லது இலஞ்சம் கொடுத்து வெளியேறியவர்கள் மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் வழங்கிய படகுகளில் போர்ப் பகுதியிலிருந்து தப்பியவர்கள் ஆகிய நேரடி சாட்சிகள் பலரை குழு சந்தித்து நேர் காணல் செய்தது.

குழு அளித்த பல பரிந்துரைகளில், கடைசி இரண்டும் அய். நா. தொடர்புடையவை

''அ. மனித உரிமை ஆணையம் கடந்த மே 2009இல் இலங்கைக்கான தனது சிறப்புக் கூட்டத்தில் நிறை வேற்றிய தீர்மானத்தை (A/HRC/S-11/L.1/Rev.2) இந்த அறிக்கையின் அடிப்படையில் மறுபரிசீலனை செய்ய வேண்டும்.''

போரில் நடந்து கொண்ட விதம் குறித்து இலங்கை அரசைப் புகழ்ந்தும், போர்க் குற்றங்கள் மற்றும் பயங்கர வாதத்திற்காக விடுதலைப் புலிகளை மட்டுமே கண்டித்தும் மனித உரிமைக் குழு தீர்மானம் நிறைவேற்றிய தால், 'மனித உரிமைக் குழு அரைகுறையான தகவல்களின் அடிப்படையில் செயல்பட்டிருக்க வேண்டும்' என குழு தீர்மானித்தது.

''ஆ. இலங்கையில் போர் நடைபெற்றப் போதும் அதற்குப் பின்னான காலக்கட்டங்களிலும் அய். நா.வின் மனித நேய மற்றும் பாதுகாப்புத் தீர்மானங் களை நடைமுறைப்படுத்துவதற்கு மேற்கொள்ளப் பட்ட செயல்கள் குறித்து செயலாளர் நாயகம் மறு ஆய்வு நடத்த வேண்டும்.''

இப்போரில் அய். நா. வின் பங்கை குழு விமர் சித்தது. 'போரின் இறுதிக் கட்டங்களில், அய். நா. வின் அரசியல் உறுப்புகளும் அமைப்புகளும், மக்களைப் பாதுகாத்திருக்கக் கூடிய நடவடிக்கைகளை எடுக்கத் தவறி விட்டன.

இலங்கை அரசு 'நேர்மையான விசாரணைகளை தொடங்க வேண்டும்' என்றும், அய். நா. செயலாளர் நாயகத்தினால் அமைக்கப்பட்ட ஒரு சுதந்திரமான பன்னாட்டு வழிமுறையும் என்ன நடந்தது என்பதை விசாரிக்க வேண்டும் என குழு பரிந்துரைத்தது.

'போரின் இறுதிக் கட்டத்தில் மிகப்பெரும் எண்ணிக் கையில் பொது மக்கள் இறந்தது குறித்து தனது பங்கு மற்றும் பொறுப்பை ஏற்று, ஒரு வெளிப்படையான அறிக்கையை' இலங்கை அரசு வெளியிட வேண்டும் எனவும் வல்லுநர்கள் பரிந்துரைத்தனர்.

214 பக்கங்கள் கொண்ட குழுவின் முழுமையான அறிக்கை, இரு தரப்பினரும் செய்திருக்கக் கூடிய போர்க் குற்றங்கள் மற்றும் மனிதத்திற்கு எதிரான குற்றங்கள் குறித்த விவரங்களைப் பட்டியலிடுகிறது.

அரசு தரப்பின் மீது கீழ்க்காணும் குற்றச்சாட்டுகள் வைக்கப்பட்டுள்ளன : கொலை, அழித்தொழிப்பு, காயப்படுத்துதல், காரணமின்றி சிறை வைப்பது, வன்புணர்வு, சித்திரவதை, இனம், மதம் மற்றும் அரசியல் அடிப்படையிலான பாகுபாடுகள் மற்றும் காணாமல் போகச் செய்தல்.

விடுதலைப் புலிகள் தரப்பின் மீது கீழ்க்காணும் குற்றச்சாட்டுகள் வைக்கப்பட்டுள்ளன : உயிர் அல்லது உடலின் மீது வன்முறை, சித்திரவதை, காயப்படுத்துதல், கட்டாயமாக வேலை வாங்குதல், கட்டாயமாக குழந்தைகளைப் படையில் சேர்ப்பது, போர்ப் பகுதி யிலிருந்து தப்பிச் செல்லும் பொதுமக்களை சுடுவது.

உள்நாட்டில் இடம் பெயர்ந்த தமிழர்கள் கொடூர மான முறையில் தனிமைச் சிறையில் அடைக்கப் பட்டு மோசமாக நடத்தப்பட்டனர். தமிழர்கள் தங்களின் பாரம்பரிய வடக்கு மற்றும் கிழக்கு 'உயர் பாதுகாப்பு வலயங்களில்' இராணுவமயமாக்கப்பட்டு, அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டு, அச்சுறுத்தப் பட்டு, வன்முறைக்கு பலியாக்கப்பட்டுள்ளனர். எனவே, இலங்கை அரசு அனைத்து விதமான அரசு வன்முறையையும் முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்றும், இடம் பெயர்ந்த அனைத்து மக்களையும் விடுவித்து, அவர்கள் தங்கள் சொந்த வாழ்விடங் களுக்கு திரும்பவும் அவர்களுக்கான மறுவாழ்வுக்கும் வழி வகுக்க வேண்டும் என்றும் குழு பரிந்துரைத் துள்ளது (தமிழர்களுக்கு சொந்தமான ஆயிரக்கணக்கான வீடுகள் இராணுவத்தினராலும் பிற சிங்களர்களாலும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன). மேலும், ஜனநாயக மற்றும் சமூக உரிமைகளை மறுக்கும் அனைத்து அவசர நிலை சட்டங்களையும் அது திரும்பப் பெற வேண்டும்.

மகிந்த ராஜபக்சே குடும்ப ஆட்சி, எந்தத் தவறும் நடக்கவில்லை என்று தொடர்ந்து மறுப்பதோடு, பொதுமக்கள் எவரும் கொல்லப்படவில்லை என்றும், பின்னர் அவர்கள் உள்நாட்டில் இடம் பெயர்ந்தோருக் கான முகாம்களில் நல்ல முறையில் நடத்தப்பட்டனர் என்றும் கூறுகின்றனர்.

2009 ஆம் ஆண்டு மனித உரிமைக் குழு தீர்மானம் நிறைவேற்றிய பிறகு, 47 உறுப்பினர்கள் கொண்ட குழுவில் 15 புதிய நாடுகள் இணைந்துள்ளன. அவற்றில் ஒன்று வட அமெரிக்கா. லிபியாவின் இறையாண்மை யுள்ள அரசுக்கு எதிராகவும், ஆப்கானிஸ்தான், இராக், பாகிஸ்தான், சோமாலியா, ஏமன் ஆகிய நாடுகளின் மக்களுக்கு எதிராகவும் தொடர்ந்து போர் நடத்திக் கொண்டிருக்கிற, பாலஸ்தீனத்தில் இஸ்ரேலுக்கு உதவு கின்ற, அணி சேரா நாடுகளின் உறுப்பினர்கள் மற்றும் பிறர் மீது தொடர்ந்து கடுமையான போரை நடத்து கின்ற மிக மோசமான அடக்குமுறையாளர்களான வட அமெரிக்கா மற்றும் அதன் அய்ரோப்பிய கூட்டாளிகள், இலங்கை அரசின் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக உரத்த குரல் எழுப்புவதன் பின்னணியில் உள்ள நோக்கம் என்னவாக இருக்கும் என ஒருவர் கேட்கக் கூடும்.

குழுவின் உறுப்பினர்களில் ஒருவரான ராட்னர், இத்தகைய விரிவான, முழுமையான மற்றும் நியாயமான அறிக்கையில் ஏன் பங்கெடுக்க வேண்டும் என்றும் ஒருவர் கேட்கலாம். உலகில் மிகப் பெரும் அரசியல் ஒடுக்குமுறையாளரும், தமிழர்களின் விடுதலை முயற்சிகளுக்கு எதிராக சிங்கள தேசியவாத அரசு களுக்கு, ஆயுதங்கள், உளவுத் தகவல்கள், பொருளா தார உதவிகள், இராணுவப் பயிற்சிகள் மற்றும் பிரச்சாரங்கள் மூலம் உதவி செய்தவர்களுமான வட அமெரிக்காவின் அரசு துறைக்கு, பன்னாட்டுச் சட்டங் களின் நிபுணர் என்ற முறையில், ஆலோசகராக இருந்தார் *(1998–2000)*. (http://dissidentvoice.org/2009/11/the-terrorists-international-support-for-sri-lankas-racist-discrimination/)

ஆனால், இரு 'தரப்பிலும்' இருந்த பெரும் பான்மையான நாடுகள் இதையே செய்துள்ளன : சீனா, ரஷ்யா, இந்தியா, பிரிட்டன் மற்றும் பிற அய்ரோப்பிய அரசுகள், ஏன், ஈரான் மற்றும் இஸ்ரேலும் கூட.

மனித உரிமைக் குழுவில் உள்ள மற்றும் இல்லாத மிக அதிகமான எண்ணிக்கையிலான அரசுகள், தாங்களே போர்க் குற்றவாளிகளாக உள்ளனர்; அல்லது, இலங்கை உள்ளிட்ட போர்க் குற்றவாளி அரசுகளுடன் இயல்பாக தொழில் உறவுகளை தொடர்கின்றனர். மனித உரிமை மீறல்களுக்காக இலங்கை மீது குற்றம் சாட்டப்பட்டால், தனது எதிர் வாதத்தில் அது, எவ்வாறு அனைத்து வல்லரசுகளும், ஆயுதங்கள், உளவுச் செய்திகள், தொழில்நுட்ப மற்றும் இராணுவப் பயிற்சி மற்றும் அரசியல் அதிகாரம் ஆகியவற்றின் ஊடாக தங்களுக்கு துணை புரிந்தன என்பதை காட்டக்கூடும். இன்னும் கூடுதலான அழுத்தம் கொடுக்கப்பட்டால், வட அமெரிக்காவும், வட அட்லான்டிக் உடன்பாட்டு நாடுகளும் (NATO) ஏறத்தாழ 20 இலட்சம் ஈராக்கியர் களின் கொலைக்கு பொறுப்பாக இருந்ததையும், இலங்கையில் 1981ஆம் ஆண்டு தமிழ்ப் பண்பாட்டு வரலாற்று நூலகத்தினை இலங்கை அழித்ததற்கு ஒத்த வகையில் ஈராக்கில் பண்பாட்டு இனப்படுகொலையை நடத்தியதையும் அது காட்டக்கூடும்.

இலங்கைக்கு ஆதரவாக வாக்களித்த, சோசலிச நாடு என்று கருதப்படும் கியூபா மற்றும் பிற அணி சேரா நாடுகளின் அரசுகளின் சிந்தனைப் போக்கு எவ்வாறாக இருக்கும் என்று பார்க்கிறேன். அவர்களது குழப்பம் என்னவெனில், மூன்றாம் உலக நாடுகளின் இறையாண்மைக்கு ஆதரவாக இருப்பதற்கும், ஏகாதி பத்திய மற்றும் முன்னாள் காலனியாதிக்க அரசுகளின் தலையீடுகளை எதிர்கொள்வதென்ற ஒரு நியாயமான காரணத்திற்கும், தங்களது தேசியக் கொள்கையான 'மக்களில் எந்தப் பிரிவினரும் திட்டமிட்ட முறையில் பாகுப்படுத்தப்படவோ அல்லது இனப்படுகொலைக்கு ஆளாக்கப்படவோ கூடாது' என்பதை உயர்த்திப் பிடிப்பதற்கும் இடையிலான ஊசலாட்டம் அது.

வட அமெரிக்காவின் நிரந்தர போர் ஒடுக்கு முறைகளுக்கு பலியாகியுள்ள கியூபா போன்ற நாடுகள், 'மனித உரிமைகளுக்கு' அது அளிக்கும் போலியான 'ஆதரவிற்கு' எதிராக, அதற்கு 'பலியாகி' இருக்கும் இலங்கைக்கு ஆதரவளிக்கின்றன. ஆனால், எல்லா சந்தர்ப்பங்களிலும் 'பலியாகிறவர்கள்' அப்பாவி களாக இருப்பதில்லை. ஏகாதிபத்திய நாடுகள் மட்டுமே மனித உயிர்களுக்கும் குடிமை உரிமைகளுக்கும் எதிரானவர்கள் அல்ல. இலங்கையில் பவுத்த ஆதிக்க மதத் தலைமையும், சிங்களர்களால் தலைமையேற்கப் பட்ட ஒவ்வொரு அரசும், சிங்கள தேசியவாத ஆதிக்கத்தை உருவேற்றி எழுப்பும் போதும், தமிழர்கள் வேற்று மொழியும் மதமும் உடையவர்கள் என்ற ஒரே காரணத்திற்காக, அவர்களை இரக்கமின்றி கொல்லும் போதும் அவர்களும் மனித உரிமை களுக்கு எதிரானவர்களே.

மனித உரிமைக் குழுவின் உறுப்பினர்களான சீனா, ரஷ்யா, வட அமெரிக்கா மற்றும் பிற பெரிய நாடுகள், உலக மக்கள் தொகையில் பாதிக்கும் மேற்பட்ட வர்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். மனித உரிமைக் குழுவில் மூன்றாம் உலக நாடுகளே பெரும்பான்மையாக இருக்கின்றன. அவர்களிடையே, பல்லாண்டு காலமாக பிற இனக் குழுக்களாலும் தேசிய மற்றும் பன்னாட்டு அரசுகளாலும் ஒடுக்கப் படும் மற்றும் கொடூரமாக நடத்தப்படும் பல இனக் குழுக்கள் உள்ளன. ருவாண்டாவை நினைவிருக்கிறதா' அங்கு எவ்வாறு அய். நா. தலையிட்டு 10 இலட்சம் மக்கள் படுகொலை செய்யப்படுவதை தடுக்கத் தவறியது என்பது நினைவிருக்கிறதா' இலங்கை யிலும் இதே போன்றதொரு பேரழிவைத் தடுக்க அய்.நா. மீண்டும் தவறியுள்ளது.

ஆனால், அய். நா. வின் கோட்பாடுகளில் வரையறுக் கப்பட்டுள்ள நன்னடத்தைக் கூறுகளினால் எவ்விதத் திலும் பாதிக்கப்படாத அரசுகளின் சிறப்பான நோக்கங் களின் போலித்தனத்திற்கான சிறந்த சான்றாக, மூன்று நேர்மையான் வல்லுநர்களால் தயாரித்து அளிக்கப் பட்டுள்ள அய். நா. வின் சிறப்பு அறிக்கை திகழும். ●

அணிந்துரை



இராஜிவ் சிறீதரன்
செயற்கைக் கோள் பட சட்ட ஆய்வாளர்,
பொறுப்பாளர் – 'இனப்படுகொலைக்கு எதிரான தமிழர்கள்' - Tamils Against Genocide, அமெரிக்கா

முள்ளிவாய்க்காலின் துயரத்தையும் நினைவுகளையும் மிகச் சிலரால் மட்டுமே மறக்க இயலும். மே 2009இல் முள்ளிவாய்க்காலின் கடற்கரை மணலிலும் புதர்களிலும் நடத்தப்பட்ட தமிழ்க் கொலைக் களம், இலங்கையின் வரலாற்றிலேயே அரசின் ஆதர வோடு நடந்த தமிழர்களுக்கு எதிரான மிகப் பெரும் அட்டூழியமாகும். 1983இல் நடந்த கருப்பு சூலையில் கொல்லப்பட்டவர்களைக் காட்டிலும் ஏறத்தாழ மூன்று மடங்கு அதிகமான மக்கள் இங்கு கொல்லப் பட்டனர்.

முள்ளிவாய்க்கால் நமது 'ஹோலோகாஸ்ட்' ஆகும். 'இலங்கை ஜனநாயகத்தில், இலங்கை அரசு மதிக்கக் கூடிய, வாழ்வதற்கான உரிமை உட்பட எந்த ஓர் உரிமையும் தமிழர்களுக்கு இல்லை' என தேசிய விடுதலைக்காக தமிழ் அறவழி இயக்கங்களும் ஆயுதப் போராட்டங்களும் பல ஆண்டுகளாக பல முறைகளில் அங்கீகரித்த ஒன்றை இன்று ரத்தத்தாலும் எலும்புக் கூடுகளாலும் உலகத்திற்கு இது எழுதிக் காட்டியுள்ளது.

2009இல் போரின் இறுதிக்கட்டத்திற்கு முந்தைய பல மாதங்களாக, உலகச் சமூகம் பார்த்துக் கொண்டி ருக்கையில், இலங்கை இராணுவத்தின் திட்டமிட்ட தாக்குதல்கள், வன்னிப் பகுதியின் பாதுகாப்பு வலயங் களில் இருந்த பெரும் கடற்கரைப் பரப்பையும், பசுமைக் காடுகளையும் தமிழ் சுடுகாடாக மாற்றின. இதில் ஏறத்தாழ 40,000 பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டதாகக் கணிக்கப்படுகிறது. கூர் முனை யுடைய கத்திகளைப் போல 'ஆர்ட்டிலரி' குண்டுகள் பாதுகாப்பு வலயத்தில் இருந்த கூடாரங்களையும் பதுங்கு குழிகளையும் துளைத்த போது, ஒருவரை ஒருவர் பிணைத்துக் கொண்டு பதுங்கிக் கிடந்த தமிழ்க் குடும்பங்களின் பல தலைமுறையினரும் கொல்லப் பட்டனர். அவர்களின் சாவானது, உலகெங்கும் பரந்து வாழ்ந்த தமிழர்களின் இதயங்களையும் கண்ணீர் சுரப்பிகளையும் ஓர் அதிர்ச்சி அலையாக வந்தடைந்து ஆழமாகத் தாக்கியது.

இலங்கை இராணுவத்தின் கொடூரமான, மற்றும் கண்மூடித்தனமானத் தாக்குதல்களும், அதற்கு உலக அளவில் கிடைத்த ஒத்துழைப்பும் புரிந்து கொள்ள கடினமானவை. கிராமங்கள், மருத்துவமனைகள், ஆதரவற்றக் குழந்தைகளுக்கான இல்லங்கள், பள்ளிகள், கோயில்கள், தேவாலயங்கள், மனித நேய உதவிகள் வழங்கும் மய்யங்கள், முக்கிய சாலைகள், இடம் பெயர்ந்து செல்லும் மக்கள் கூட்டம் மற்றும் மக்களின் தற்காலிக இருப்பிடங்கள் ஆகியவற்றின் மீது வான் தாக்குதல், பீரங்கி தாக்குதல், பல்குழல் ஏவுகணை தாக்குதல், பதுங்கு குழிகளை தகர்க்கும் குண்டுகள் மற்றும் கொத்து குண்டுகள் உள்ளிட்ட பல்வேறு வகையான ஆயுதக் கட்டமைப்புகளைப் பயன்படுத்தி இலங்கை இராணுவம் திட்டமிட்டத் தாக்குதலை நடத்தியது.

ஒவ்வொரு நொடியும், இரவிலும் பகலிலும் வானில் வட்டமடித்த உளவு விமானங்கள் தமிழ் உயிரின் அரவங்களை துல்லியமாக அறிந்து இந்த ஆயுதக் கட்டமைப்புகளுக்கு அவர்களின் இருப்பிடங் களை வழங்கி, மிகத்துல்லியமாக கொல்வதற்கு துணை புரிந்தன. பாதுகாப்பு வலயத்திற்குள் நுழைவதற்கான இராணுவ நுழைவுச் சாவடிகளில் உணவு வழங்கல் கட்டுப்படுத்தப்பட்டது அல்லது முற்றிலுமாக மறுக்கப்

பட்டது. இதனால் பட்டினி கிடக்கும் நிலை உருவானது. மருந்துகள் மறுக்கப்பட்டன. இதனால் காயம்பட்டவர்கள் மரணம் அடைந்தனர். அதோடு பெருமளவில் உடல் உறுப்புகளைத் துண்டிக்கும் அறுவை சிகிச்சைகளை நடத்தும் நிலைக்கு மருத்துவர்கள் தள்ளப்பட்டனர். ஊடகங்களின் பார்வைக்கு எல்லாம் இருட்டடிக்கப்பட்டன. இதனால், தமிழர்களை குறிவைத்து நடத்தப்பட்ட இனப் படுகொலை என்பது உண்மையில் இராணுவ ரீதியில் அவசியமான ஒரு நடவடிக்கையாகவே முன்னிறுத்தப்படும் மாயத் தோற்றம் உருவானது. துப்பாக்கிகள் மவுனமாக்கப் பட்டப் பிறகு மாணிக் பண்ணையில் மையப்படுத்தப் பட்ட முள்வேலி தடுப்பு முகாம்களுக்குள் உயிர் பிழைத்த தமிழர்கள் ஆடு, மாடுகளைப் போல் ஓட்டிச் செல்லப்பட்டனர். அங்கு கடத்தல்கள், சட்டத்திற்குப் புறம்பான கொலைகள் மற்றும் வன்புணர்வு, வலுக் கட்டாயமான விபச்சாரம் உள்ளிட்ட பாலின அடிப்படையிலான வன்முறைகள் எந்தத் தடையுமின்றி இலங்கை இராணுவத்தினர் மற்றும் துணை இராணுவ ஒட்டுக் குழுவினரால் தொடர்ந்து நடத்தப்பட்டன.

இந்த கொடூரமான இன அழிவின் முடிவில் ஓர் உண்மை தெளிவாக இருந்தது. இனப்படுகொலை மற்றும் ஆயுதப் போரின் உலக வரலாற்றில், ஒரு குறிப்பிட்ட மக்கள் சமூகத்தை முழுமையாகவோ, அல்லது பகுதியாகவோ அழிப்பதை நோக்கமாகக் கொண்ட அரசு ஆதரவைப் பெற்ற இத்தனை பெரிய இராணுவ படையெடுப்பை எதிர்கொண்டு துன்பப் பட்டு பிழைத்தவர்கள், மிகக் குறைந்த எண்ணிக்கையிலான தேசியங்களே. நாஜி ஜெர்மனியின் கீழான அய்ரோப்பிய யூதர்கள், ருவாண்டாவின் டுட்சிகள், ஸ்ரெப்ரேனிகாவின் பாஸ்னிய முஸ்லிம்கள், தர்பூரின் பூர், சகாவா மற்றும் மசாலித்-கள் போன்ற இனப்படுகொலைக்குப் பின்னான சமூகங்களின் பட்டியலில் தமிழ் மக்களும் தற்போது இணைந்துள்ளனர்.

இருந்த போதும், இலங்கை அரசு முள்ளிவாய்க்காலை நடத்த முற்பட்டபோது அதனை உலகச் சமூகம் அனுமதித்தது. கொலைக் களத்திற்கு முன்பும் நடந்த போதும் பின்பும் தமிழ் மக்களை காப்பாற்ற வேண்டிய பொறுப்பில் இருந்து உலகச் சமூகம் தவறியது என்பது, இலங்கை இராணுவத்தின் படுகொலைகளுக்கு நிகரான வெளிப்படையான மற்றும் திட்டமிட்ட செயலாகும்.

உலகளாவிய மனித நேயச் சட்ட மீறல்களுக்கு காரணமானவர்களை அதற்கு பொறுப்பேற்கச் செய்ய வேண்டுமென்ற அய். நா. குழு அறிக்கையின் பரிந்துரைகளின் அடிப்படையில், இலங்கை இராணுவத்தின் குற்றத் தன்மைக்கும், பன்னாட்டுச் சமூகத்தின் தேவைக்கும் இடையில் எழுந்துள்ள இந்தப் பதற்றம், முள்ளிவாய்க்காலுக்குப் பிறகு எழுந்துள்ள தமிழர்களின் நீதி குறித்த கேள்விக்கும், செப்டம்பர் 11-க்குப் பிறகான உலகில் (அமெரிக்க இரட்டை கோபுரம் மீதான தாக்குதலுக்குப் பிறகு) , தென்னாசியாவில் தமிழர்களுக்கான அடிப்படை மனித உரிமைகள் போதுமான அளவு காக்கப்படுமா என்பதையும் விளக்கியுள்ளது.

ஒரு புறம், கொலைக் களத்தின் அழிவுப் படையும் அதன் படுகொலைகளும் உலகின் பல மூலைகளிலும் உள்ள தமிழர்களை தமிழர்களுக்கான நீதிக்காக திரண்டெழவும், ஒன்று சேரவும் உதவியுள்ளது. மறு புறம், தமிழ் பொதுமக்கள் மற்றும் போராளிகளை இன அடிப்படையில் குறி வைத்துத் தாக்கிய, இலங்கை அரசின் உலகளாவிய மனித நேய மற்றும் மனித உரிமைச் சட்ட மீறல்களின் அளவு மற்றும் வீச்சை அதிகாரபூர்வமாக அங்கீகரிக்க இந்த அறிக்கை நிறைய முயற்சிகளை எடுத்துள்ள போதும், அய். நா. குழுவின் பரிந்துரைகள், அதை செயல்படுத்துவதில் உள்ள நடைமுறைச் சிக்கல்களின் அடிப்படையில் விமர்சனத்திற்குரியதாக உள்ளது.

முள்ளிவாய்க்காலைத் தொடர்ந்த நாட்களிலும், மாதங்களிலும், இலண்டன், நியூயார்க், பாரிசிலிருந்து ஜெனிவா வரை, சென்னை மற்றும் அதைக் கடந்தும் பல நாடுகளில் பரவியிருக்கும் புலம்பெயர்ந்த தமிழ் மக்களின் அனைத்து தலைமுறையினரும், தனித் தனியாகவும் பன்னாட்டு மனித உரிமைச் சமூகத்துடன் இணைந்தும் அய். நா. வல்லுநர் குழுவிடம் சான்றுகளை அளிக்க பணிபுரிந்துள்ளனர். அதே நேரத்தில், கொலை செய்யப்பட்டவர்களின் உரிமைகளைக் காக்க, தேசிய, பிராந்திய மற்றும் உலக அளவில், மனித உரிமை அமைப்புகளையும் நீதிமன்றங்களையும் நேரடியாக அணுகும் சாத்தியங்களைக் கண்டறியும் பணியை புலம் பெயர்ந்த தமிழ்ச் சமூகம் தொடங்கியுள்ளது.

ஆனால், நமது சமூகம் கண்டறிந்து கொண்டிருக்கும் வேளையில், போருக்குப் பின்னான நீதிக்கான பயணம் என்பது விடுதலைக்கான பயணத்தைப் போன்றே மிக நீளமானது. முள்ளிவாய்க்கால் நடந்து முடிந்து இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, அய். நா. குழுவின் பரிந்துரைகளை செயல்படுத்துவதன் மூலம், தண்டனை வழங்கும் நீதியின் அடிப்படையில், போருக்குப் பின்னான மாற்றத்திற்கான நீதியை உருவாக்கவும், பயனளிக்கக் கூடிய விசாரணைகளை நடத்தவுமான சாத்தியங்கள் நிச்சயமற்று உள்ளன. விசாரணைகளை முன்னெடுப்பதற்கு இருக்கக் கூடிய மய்யச் சிக்கல் என்னவெனில், சாத்தியமான செயல்முறைக்கு ஏற்ற ஒரு வழிமுறையையோ, விவாதத்தையோ அது தரவில்லை.

செய்யப்பட்ட குற்றம் இனப்படுகொலையேயாயினும், தமிழர்களுக்கான நீதியின்றி போருக்குப் பின்னான வளர்ச்சித் திட்டங்களை உருவாக்கும் கொள்கையை ஆதரிக்கும் இலங்கை அரசுக்கு இது வசதியாகவே இருக்கிறது.

விசாரணைகளில் போதுமான முன்னேற்றம் இல்லாதது என்பது, அய். நா. அறிக்கையிலேயே தொடங்குகிறது. இலங்கையில் போருக்குப் பின்னான மாற்றத்திற்கான நீதி என்பது இருக்கவேயில்லை என்பதே அய். நா. குழுவின் அறிக்கையின் மய்யச் சிக்கலாகும். இலங்கையில் போருக்குப் பின்னான அமைதி முயற்சிகளில் பங்கெடுத்த அனைவருமே அறிக்கையின் இந்த கருத்தை அறிந்து வைத்திருந்தனர். அய். நா. அறிக்கை இலங்கைக்குப் பரிந்துரைத்திருப்பது போன்ற மாற்றத்திற்கான நீதி வழிமுறைகள், போர் மற்றும் மோதல்களுக்குப் பின் ஆட்சி மாற்றம் ஏற்பட்டப் பிறகே சாத்தியப்படும். புதிய அரசு பழைய அரசின் மீறல்களை விசாரிக்கும். போரினால் சிதைக்கப்பட்ட சமூகத்தின் நினைவுகளில் ஆழப் பதிந்திருக்கும் அரசு ஆதரவு பெற்ற கொடூரங்களுக்கு பொறுப்பேற்பதையும் உண்மை உரைப்பதையும் போருக்குப் பின்னான இணக்க முயற்சிகள் உள்ளடக்கியுள்ளன. லத்தின் அமெரிக்காவிலோ, ஆப்பிரிக்காவிலோ நடைபெற்றதைப் போன்று, மாற்றத்திற்கான நீதிக்கு ஆதரவளிக்க தேவையான முன் நிபந்தனையாக இருக்கக்கூடிய ஆட்சி மாற்றம், இலங்கையில் முள்ளிவாய்க்காலுக்குப் பிறகு ஏற்படவில்லை.

அய். நா. குழுவின் பரிந்துரைகளை செயல் முறைப்படுத்துவதை சாத்தியமாக்கும், மாற்றத்திற்கான நீதியின் தருணத்தை உருவாக்கக்கூடிய ஆட்சி மாற்றத்திற்கு இணையாக, முள்ளிவாய்க்காலுக்குப் பின், விடுதலைப் புலிகள் இயக்கம் இல்லாமல் போனதை, அய். நா. வல்லுநர் குழு அறிக்கையின் உள்ளார்ந்த கருத்தானது தவறாகப் புரிந்து கொண்டுள்ளது. உண்மையில், ஆட்சிமாற்றம் ஏற்படவேயில்லை. மே 2009-க்கு முன்பும் பின்பும் இராஜபக்சேதான் ஆட்சியில் இருந்தார். ஆக, தமிழ் மக்களுக்கு எதிராகத் தான் நடத்திய மனித உரிமை மற்றும் மனித நேயச் சட்ட மீறல்களை தானே விசாரிக்க வேண்டுமென இராஜபக்சே நிர்வாகத்திடம் அய். நா. நம்பி ஒப்படைத்துள்ளது. மாற்றத்திற்கான நீதி மற்றும் மனித நேய நடவடிக்கைகளில் அய். நா.வுக்கு இருக்கக்கூடிய ஆழமான அனுபவங்கள் இருக்கின்ற போது, இந்த முரண் குறித்து அய். நா. அறியாமல் இல்லை என்று அனுமானிக்கவும், இந்த காலக்கட்டத்தில் செயல் முறைப்படுத்துவதற்காக அய்.நா. அறிக்கை அளிக்கப் படவில்லை என்ற முடிவுக்கும் வர வேண்டியுள்ளது.

எனினும், தமிழர்களின் நீதிக்கு ஆதரவளிக்கும் செயல்பாடுகளின் மூலம் உலகத் தமிழ்ச் சமூகம் தொடர்ந்து இணைந்திருக்கும் வேளையில், இந்த விஷயத்தில் அய்.நா. தனது இறுதி முடிவை அறிவிக்கும் சாத்தியமில்லை. போருக்குப் பின்னான காலக்கட்டத்தில், தமிழர்களுக்கான நீதி மறுக்கப்படுவதும், தாமதிக்கப் படுவதும், நீர்த்துப்போகச் செய்யப்படுவதும் நியாய மற்றது என நாடுகளை கடந்தும் தமிழர்களின் குரல் ஒருங்கிணைந்து ஒலிக்கிறது. விசாரணைகள் குறித்த பரிந்துரைகளை செயல்படுத்துவதற்காக தமிழ்ச் சமூகம் அய். நா.விடம் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருந்த போதும், இலங்கையில், முள்ளிவாய்க்காலில் இறந்த வர்களுக்கும், அதற்குப் பிறகு அலட்சியப்படுத்தப் பட்டவர்களுக்கும் மறக்கப்பட்டவர்களுக்குமான போருக்குப் பின்னான மாற்றத்திற்கான நீதிக்கு ஆதரவாக செயல்படும் தமிழ்ச் சமூகத்தின் இயக்கத்தை நெறிக்க அய். நா. வின் செயலற்றத் தன்மை மட்டும் போதாது.

முள்ளிவாய்க்காலில் நடந்த தமிழர்களின் கொலைக் களமும் அதற்கு பின்னானவையும் தமிழர்களின் 'ஆன்மா'வில் ஏற்பட்ட கீறல். அது தலைமுறைகளைக் கடந்தும் மாறாத வடுவாக நீடிக்கும். ருவாண்டாவிலும் ஸ்ரெப்ரெனிகாவிலும் கிடைத்ததைப் போல, முள்ளி வாய்க்காலுக்கான தமிழர்களின் நீதிக்கான பாதை அத்தனை எளிதானது அல்ல. ஆனால் அதே வேளையில், தமிழர் களின் கொலைக்களத்தின் உண்மையை காலவரை யின்றி மறைக்க முடியாது. உலக வரலாற்றில் முள்ளி வாய்க்கால், தண்டனை வழங்கும் நீதியின் மொழியில் எழுதப்பட வேண்டும். இராஜபக்சேயின் நிர்வாகம் விரும்புவது போல 'வருத்தத்திற்குரிய சேதமாக' அல்ல. பன்னாட்டுச் சமூகமும், புலம் பெயர்ந்த தமிழர் களும், கொலைக்களத்தில் பிழைத்த தமிழ்ச் சமூகமும், இலங்கை அரசின் இனப் பாகுபாட்டுச் செயல்களை எதிர்த்துத் தொடர்ந்து போராடி வரும் அனைவரும் இதனை உறுதி செய்யவேண்டும். •

அணிந்துரை



முனைவர் **பால் நியூமன்**

'வட இலங்கையின், உள்நாட்டில் இடம்பெயர்தல் மற்றும் மனித உரிமைச் சூழல்கள்' என்ற தலைப்பில் பெங்களூர் பல்கலைக்கழகத்திலிருந்து முனைவர் பட்டம் பெற்றுள்ளார்; இலங்கையின் போர்க்குற்றங்களுக்கு எதிராக டப்ளினில் நடைபெற்ற 'நிரந்தர மக்கள் தீர்ப்பாய'த்தின் நான்கு பொதுப்பேச்சாளர்களில் ஒருவராக செயல்பட்டார்

இலங்கை இன்று தேரவாத பவுத்தத்தின் இருப்பிடம் என சிங்களர்கள் கூறுகின்றனர். இலங்கையில் பவுத்தம் பின்பற்றப்படும் முறையை காண்பது ஒரு நகைமுரணாக இருக்கிறது. பவுத்தத்தின் அடிப்படையாக இருக்கக் கூடிய இருபெரும் கூறுகளான கருணை அதாவது செயல் வடிவம் கொண்ட கருணை, மென்மையான அன்பு, பிறரின் வலியை ஏற்றுக் கொள்ளும் விருப்பம் மற்றும் இரக்கம். மெத்தா – அன்பு – அனைத்து உயிர்களிடத்திலும், பாகுபாடின்றி, தன்னலத்திலிருந்து விடுபட்ட அன்பு கொள்வது. அனைத்து உயிர்களும் மகிழ்ச்சியுடன் இருப்பதற்கான வலிமையான மற்றும் நேர்மையான விருப்பம். மெத்தா சூத்திரம், 'மெத்தா' என்பதை தன் குழந்தைகளுக்கு உயிர் கொடுக்கும் தாயின் அன்புடன் ஒப்பிடுகிறது. இலங்கையில் காணாமல் போனவை பெரும் எண்ணிக்கையிலான ஆண்களும் பெண்களும் மட்டுமல்லர். அமைதி மற்றும் நல்லிணத்தின் பெரு மதமாக, காயப்பட்டவர்களுக்கு ஆறுதலையும், நோயாளிகளுக்கு சிகிச்சையையும் அளிக்க வல்ல மதமாகப் போற்றப்படும் பவுத்தத்தின் தூண்களாக இருக்கக்கூடிய இந்த இரு பெரும் கோட்பாடுகளும்தான்!

இன்று, மின்னல் வேகத்தில் செய்திகளை பெறும் ஒரு புதிய உண்மையை உலகம் அறிந்துள்ளது. தொழில்நுட்பத்தின் ஆதிக்கம் மிகுந்த இக்காலத்தில், தனி நபர்களை காப்பதில் மனித உரிமைகள் பெரும் பங்காற்றும் இக்காலத்தில், ஊடகங்களின் மீது அடக்குமுறை சட்டங்களை ஏவுவதன் மூலம், உள்நாட்டுப் போரை 'சாட்சிகளற்ற போராக' மாற்றி உலகை ஏமாற்ற முடியும் என இலங்கை நினைத்தது. ஆனால், நவீன தொழில்நுட்பம் எத்தகைய சான்றுகளையும் சேகரித்து விடும் என்பதை அது அறிந்திருக்கவில்லை. பொது மக்கள் மீதான அடக்குமுறைகளையும் அட்டூழியங்களையும் உலகம் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்காது. இலங்கைக்கான செய்தி மிகத் தெளிவாக இருக்கிறது. நாகரிகமான உலகம் ஒரு பொறுக்கி அரசை சகித்துக் கொண்டிருக்காது. அரச பயங்கரவாதத்திற்கு எதிராக மிகக் கடுமையான அடியினை கொடுக்கும்.

இலங்கை அரச படைகள் பல்லாயிரக்கணக்கான ஆயுதம் ஏந்தாத பொது மக்களை கொன்றதற்கும், மேலும் பலரை ஊனமாக்கியதற்கும், ஆதரவற்றவர்களாக, கணவனை இழந்தவர்களாக ஆக்கியதற்கும் ஏராளமாக சான்றுகள் உள்ளன. உயிர் பிழைத்தவர்களின் வாழ்க்கை இன்னமும் சிதைவுற்றே இருக்கிறது. பிச்சைக்காரர்களின் வாழ்நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர். தமிழர்களை ஏதுமற்றவர்களாக ஆக்குவதன் மூலம் அவர்களுக்கு பாடம் புகட்ட வேண்டும் என இலங்கை அரசு உறுதி எடுத்துள்ளது.

ஆயுதப் போரை முடித்து 2 ஆண்டுகளுக்குப் பிறகு, படித்த தமிழ் இளைஞர்களுக்கு வேலை இல்லாமை, வடக்கு மற்றும் கிழக்கை சிங்களமயமாக்குதல், தமிழ்ப் பண்பாட்டினை முழுவதுமாக மறுதலித்தல், சிங்கள மொழி திணிக்கப்படுதல், அடிப்படை மனிதத் தேவைகளை மறுத்தல், இராணுவமயமாக்குதல், உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்வது போன்ற முறைகளில் தமிழ் மக்கள் மீதான போர் இன்னமும் தொடர்கிறது. எங்கும் மக்கள் அமைதி, நீதி, சட்டத்தின் ஆட்சி மற்றும் மனித மாண்பிற்கான மதிப்பு ஆகியவற்றையே வேண்டுகிறார்கள். ஆனால், இந்த அரசு அவற்றில் எதையும் மதிக்கவில்லை என்பது

கவலைக்குரிய ஒன்றாகும். மிகவும் எதிர்பார்க்கப் பட்ட உள்நாட்டுத் தீர்வு என்பது, கடந்த கால கதை யாகிப் போனது. இந்த ஆட்சி, தமிழர்களை தன்னுரிமை நோக்கி கொண்டு செல்வதற்கு பதில் அடிமைத்தனத்தை நோக்கி இட்டுச் செல்கிறது.

அய். நா. உறுப்பு நாடுகள் மற்றும் மனித உரிமை அமைப்புகளின் தொடர்ந்த அழுத்தம் காரணமாக, அய். நா. பொதுச் செயலாளர் திரு. பான் கி மூன் இலங்கையில் நடைபெற்ற போர்க் குற்றங்களை விசாரிக்க மூன்று வல்லுநர்கள் கொண்ட குழு ஒன்றினை கடந்த ஆண்டு அமைத்தார். கடந்த ஏப்ரல் 26 2011 அன்று வெளியிட்ட தனது அறிக்கையில் அந்த வல்லுநர் குழு, இலங்கையில் நடைபெற்ற போர்க் குற்றங்கள் மற்றும் மனிதத்திற்கு எதிரான குற்றங்கள் மீது சார்பற்ற பன்னாட்டு விசாரணை நடைபெற வேண்டும் என பரிந்துரைத்துள்ளது. மூன்று பெரும் வல்லரசுகளான இந்தியா, சீனா, ரஷ்யா ஆகியவை இலங்கையை காக்க முடிவு செய்துள்ளன என்பது வருந்தத்தக்கது. இலங்கையை பொருத்தவரையில் சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிப்பது என்பது தொடர்ந்து நடை பெற்று வந்துள்ளது. எத்தனை காலத்திற்கு இலங்கை உலகச் சட்டங்களிலிருந்து விதிவிலக்கு பெறுகிறது என்பதைப் பார்க்க வேண்டும். உலகை வாழ்வதற்கு மேன்மையான இடமாக உருவாக்குவதற்கு, இலங்கை யின் தமிழினப் படுகொலை போன்ற கொடூர செயல்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

அய். நா. வல்லுநர் குழு அமைக்கப்படுவதற்கு முன்பே, நிரந்தர மக்கள் தீர்ப்பாயம், உலக சிக்கல் குழு, உலக மன்னிப்பு அவை, மனித உரிமைகள் கண்காணிப்பகம், மூத்தோர் குழு போன்ற அமைப்புகள் மற்றும் அய். நா. வில் பணியாற்றிய கார்டன் வெயிஸ் போன்ற தனி நபர்கள் ஆகியோர் சார்பற்ற பன்னாட்டு விசாரணையை கோரியிருந்தனர்.

தன்னுரிமை என்பது ஒரு குற்றமெனில், உலகின் எந்த நாடும் இருக்க முடியாது. காலனியத்திற்கு எதிராக போராட்டத்தின் மூலம் விடுதலை பெற்ற நாடுகள் அனைத்தும் பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்தப்பட வேண்டும். ஏனெனில், அவர்கள் தங்களின் மக்களின் உரிமைகளைக் காக்க ஏதோ ஒரு முறையில் போராடியுள்ளனர்.

போர்க் குற்றங்கள் மற்றும் மனிதத்திற்கு எதிரான குற்றங்கள் விசாரிக்கப்பட வேண்டும் என்ற உலக நாடுகளின் அழைப்பிற்கு முதலில் இலங்கை அரசு பதில் கூறட்டும். அனைத்தையும் இழந்தவர்களுக்கு நீதி கிடைக்கப்பெற வேண்டும். ஒருவரின் உரிமை களைக் கோருவதும், தன்னுரிமைக்காக வேண்டுவதும் அதனளவில் ஒரு குற்றமா என்பதற்கு உலகம் பதில் உரைக்க வேண்டும்.

தனது சொந்த மக்கள் மீதே குண்டுகளைப் பொழியும் அரசுக்கு நாகரிகமிக்கவர்களிடையே இவ் வுலகில் வாழ எந்த உரிமையும் இல்லை. ஒவ்வொரு முகத்திற்கு உயிர் உள்ளது. அது தனித்துவமானது. அது நம்மிடையே பகிர்ந்து கொள்ள ஒரு கதை வைத்துள்ளது. வேதனைக்குரிய ஒன்றாக, இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் வாழும் தமிழர்களின் கடந்த 30 ஆண்டுகால கதைகள் குருதியால் மூடப்பட்டுள்ளன. போரினால் பாதிக்கப்படாத ஒற்றைக் குடும்பம் கூட இல்லை. இந்த மனிதப் பேரவலத்தை அலட்சியப் படுத்துவதாக உலகம் நடித்தது. ஏனெனில், அப்பாவி களின் கதறல்களை அலட்சியப்படுத்த நாடுகளின் பிராந்திய அரசியல் நலன்கள் வற்புறுத்தின. இலங்கையை தண்டிக்க சிறிது காலம் எடுக்கலாம். ஆனால், இறுதியில் உண்மையை அடக்க முடியாது.

மாபெரும் மவுரிய அரசரான அசோகர், கலிங்கப் போருக்குப் பின் பவுத்தத்தை தழுவியதால் மாபெரும் மனித நிலையை அடைந்தார். அவர் தான் கண்ட குருதி வழியும் காட்சிகள் மற்றும் பிணங்கள், காயப் பட்டவர்கள் மற்றும் உடல் உறுப்புகளை இழந்த வர்கள், போருடன் எந்தத் தொடர்பும் அற்ற ஆதர வற்றோர் மற்றும் கணவனை இழந்தோரின் கொடூர காட்சிகள் ஆகியவற்றினால் பெரும் மன வேதனை அடைந்தார். இறுதியாக, தனது தவறான செயல் களுக்கான பரிகாரமாக, அவர் போரை கைவிட்டு தர்மத்தின் பாதையை தேர்ந்தெடுத்தார். தனது மகன் மகேந்திரன் மற்றும் மகள் சங்கமித்திரையை பவுத்தத்தை பரப்புவதற்காக இலங்கைக்கு அனுப்பினார். ஆனால், பரிதாபகரமாக, பவுத்தம் பரவி ஏறத்தாழ 75 விழுக்காடு மக்களின் மதமாக மாறிய போதும், அதன் கருத்தியல் களும் கோட்பாடுகளும், சிறுபான்மையினரை நடத்தும் முறை என்று வந்த போது, மிக வசதியாக மறக்கப் பட்டன. இலங்கையில் மீண்டும் புத்தர் புன்னகைப் பார் என்று நம்பிக்கையுடன் காத்திருப்போம். ●

உள்ளடக்கம்

சுருக்கம் 26

அறிமுகம் 39

1 **பணிகள், அமைப்பு மற்றும் செயல் திட்டம்** 42

அ) குழுவின் உருவாக்கம் 42

ஆ) குழுவின் பணி வரையறைகள் 42

இ) செயல் திட்டம் 46

ஈ) இலங்கை அரசுடனான தொடர்பாடல்கள் 47

உ) குழுவின் ஆவணங்களின் இரகசிய காப்புத் தன்மை 48

2 **போரின் வரலாறு, அரசியல் பின்னணி** 49

அ) இனமும் அரசியலும் 50

ஆ) சட்டத்தின் ஆட்சி மற்றும் மனித உரிமைகள் தேய்ந்து அழிதல் 53

இ) போரின் இறுதிக் கட்டத்தை நோக்கி 55

3 **மீறல் குற்றச்சாட்டுகளின் தன்மையும் வீச்சும்** 58

அ) குற்றச்சாட்டுகளை மதிப்பிடும் முறைகள் 59

ஆ) இராணுவத் திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகளின் பின்னணி 60

இ) ஆயுதப் போர் நடத்தப்பட்ட விதம் குறித்த தகுதி வாய்ந்த குற்றச்சாட்டுகள் 66

ஈ) மனிதநேய உதவிகளை மறுப்பதற்கான அடிப்படையாக இடம்பெயர்ந்த மக்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட குழப்பம் 84

உ) பொதுமக்களின் சாவு எண்ணிக்கை 87

ஊ) போர் நடைபெற்ற இடத்திற்கு வெளியிலும், போருக்குப் பிறகுமான சூழலில் நடந்த நிகழ்வுகள் குறித்த தகுதிவாய்ந்த குற்றச்சாட்டுகள் 90

எ) பிற குற்றச்சாட்டுகள் 98

ஏ) நிகழ்வுகள் குறித்து அரசுத் தரப்பினரின் வாக்குமூலங்கள் 99

ஐ) முடிவுகள் 100

4 **குற்றச்சாட்டுகளின் சட்டபூர்வ ஆய்வு** 103

அ) பொருந்தக்கூடிய சட்டங்கள் 104

ஆ) சமநிலையில் அல்லாத போர்முறையும் உலகளாவிய மனித நேயச் சட்டமும் 107

இ) சட்டப்பொறுப்பின் வடிவங்கள் 107

ஈ) இலங்கை அரசு நடத்தியதாகக் கூறப்படும் மீறல்கள் 108

உ) விடுதலைப்புலிகள் மீதான மீறல் குற்றச்சாட்டுகள் 120

ஊ) உலகளாவியச் சட்டத்தின் கீழ் தனிநபர்களுக்குரிய குற்றவியல் பொறுப்புகள் 122

எ) இலங்கை சட்டப்படி தனிநபர் குற்றவியல் பொறுப்பு 127
ஏ) முடிவுகள் 128

5 **பொறுப்பேற்பது : இலங்கையின் அணுகுமுறை** 130
அ) பொருந்தக்கூடிய உலகளாவிய வரையறைகள் மற்றும் ஒப்பிடக்கூடிய அனுபவங்கள் 131
ஆ) பொறுப்பேற்பது குறித்து இலங்கை அரசின் நிலை 136
இ) கற்ற பாடங்கள் மற்றும் இணக்கத்திற்கான ஆணையம் (க.பா.இ.ஆ.) 140
ஈ) இலங்கையில் நீதி அமைப்பு 158
உ) இலங்கையின் மனித உரிமைகள் ஆணையம் (இ.ம.உ.ஆ) 169
ஊ) இறப்புச்சான்றிழ் நடைமுறைகள் 171
எ) முடிவுகள் 173

6 **பொறுப்பேற்பதற்கான பிற தடைகள்** 175
அ) வெற்றி மனப்பான்மை மற்றும் மறுதலிப்பு 176
ஆ) இன அடிப்படையிலான ஒதுக்குதல் கொள்கைகள் 177
இ) போர்க்கால நடவடிக்கைகள் தொடர்வது 178
ஈ) ஊடகங்கள் மீதான கட்டுப்பாடுகள் 179
உ) உலகத் தமிழர்கள் 180

7 **முடிவுகள்** 181

8 **பரிந்துரைகள்** 189

இணைப்புகள் 194

1. மே 23, 2009 – அய். நா. செயலாளர் நாயகமும் இலங்கை அதிபரும் வெளியிட்ட கூட்டறிக்கை 195

2. கடிதத் தொடர்புகள் 196
விளக்கக் குறிப்பு 196
கடிதத் தொடர்புகளின் விவரங்கள் 200

3. செயற்கைக்கோள் படங்கள் 257
விளக்கக் குறிப்பு 257
செயற்கைக்கோள் படங்களின் பட்டியல் 258

4. வன்னியில் இருந்த மருத்துவமனைகள் 267



சுருக்கம்

அய்க்கிய நாடுகள் அவையின் செயலாளர் நாயகம் அவர்கள் மார்ச் 23, 2009 அன்று, இலங்கையில் மேற்கொண்ட பயணத்தின் இறுதியில், செயலாளர் நாயகமும் இலங்கை அதிபரும் ஒரு கூட்டு அறிக்கை வெளியிட்டனர். அந்த அறிக்கையில் இணைக்கப்பட்ட கூட்டுக் கட்டப்பாடுகளை நடைமுறைப்படுத்துவது குறித்து, தனக்கு ஆலோசனை கூறச் செயலாளர் நாயகம், வல்லுநர்கள் குழு ஒன்றை அமைத்தார். அது குறித்த அறிவிப்பினை சூன் 22, 2010 அன்று வெளியிட்டார். அக்கூட்டறிக்கையில், செயலாளர் நாயகம் 'பொறுப்பேற்பதற்கான வழிவகைகளைக் கண்டறிவது குறித்த முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்'. இலங்கை அரசும் 'அக்குறைகளைக் களைவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக' ஒப்புக்கொண்டது.

இலங்கையில் நடைபெற்ற ஆயுதப் போரின் இறுதிக் காலங்களில் உலகளாவிய மனிதநேய மற்றும் மனித உரிமைச் சட்டங்கள் மீறப்பட்டதன் தன்மைகளையும், அதன் வீச்சையும் கருத்தில் கொண்டு, பொறுப்பேற்கும் நடைமுறைகள் குறித்த சாத்தியக் கூறுகள், பொருந்தக்கூடிய உலகளாவிய நடைமுறைகள் மற்றும் ஒப்பிடக்கூடிய அனுபவங்கள் குறித்துச் செயலாளர் நாயகத்திற்கு ஆலோசனை வழங்குவகே குழுவிற்கு இடப்பட்ட பணியாகும். இக்குழுவின் தலைவராக, மர்சூகி தருஸ்மன் (இந்தோனேசியா), உறுப்பினர்களாக ஸ்டீவன் ரட்னர் (வட அமெரிக்கா), யாஸ்மின் சூகா (தென்னாப்பிரிக்கா) ஆகியோரைச் செயலாளர் நாயகம் நியமித்தார். செப்டம்பர் 16, 2010 அன்றுக் குழு அதிகார பூர்வமாகச் செயல்படத் தொடங்கியது. செயலாளர் நாயகத்தின் அலுவலகம், குழுவிற்கு முழுமையாகத் துணை நின்றது.

1.1) குழுவின் பணி வரையறைகள்

போரின் இறுதிக் கட்டங்களில் ஏற்பட்ட சூழல் காரணமாக எழுந்தப் பொறுப்பேற்பதற்கான தேவைகளைப் புரிந்து கொள்வதற்காக, 'சொல்லப்பட்ட மீறல்களின் தன்மை மற்றும் வீச்சினைக்' குறித்த கணிப்பினைக் குழு மேற்கொண்டது. எனினும், குழுவின் பணியானது உண்மை அறிவது அல்லது துப்பறிவதை உள்ளடக்கியது அல்ல. குற்றச்சாட்டுகளின் வீச்சை அறியும் பொருட்டும், திரட்டப்பட்டத் தரவுகளின் அடிப்படையில் குற்றச்சாட்டுகளில் எவை தகுதியானவை என்பதைக் கண்டறிந்து, அவற்றின் மீது சட்டபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கவும், பல்வேறு வழிகளில் திரட்டப்பட்டத் தரவுகளைக் குழு ஆராய்ந்தது. ஒரு குற்றச்சாட்டு தகுதியானது என்பதை, அக்குற்றச்சாட்டிற்கு அடிப்படையான நிகழ்வு அல்லது செயல் நடைபெற்றதை நம்புவதற்குத் தகுந்த ஆதாரங்கள் கிட்டுவதைப் பொருத்துக் குழு முடிவு செய்தது. இந்த வரையறையானது, அரசு அல்லது பிற பங்காளர்கள் பதிலுரைப்பதற்கான சட்டபூர்வப் பொறுப்பை ஏற்படுத்துகிறது.

இந்த அறிக்கையில், குழு பொருத்தமானது என்றும் நம்பத்தகுந்தது என்றும் கருதக்கூடிய முதன்மையான ஆதாரங்களின் அடிப்படையில் மட்டுமே, குற்றச்சாட்டுகள் தகுதியானவை என்று சான்றுரைக்கப் பட்டது. தனது சட்ட பூர்வக் கணிப்பில், வெகு காலமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட உலகளாவியச் சட்டங்களையும், இலங்கையில் நடைபெற்றது போன்ற ஆயுதப் போரின் போது பொருந்தக்கூடிய உலகளாவிய மனித நேயச் சட்டங்கள் மற்றும் உலகளாவிய மனித உரிமைச் சட்டங்களையும் தனது அடிப்படையாகக் கொண்டது. குழுவானது, உலகளாவிய மனித நேய மற்றும் மனித உரிமைச் சட்டங்களை, போரின் இரு முதன்மைப் பங்கேற்பாளர்களான தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் இலங்கை அரசு ஆகிய இருவருக்கும் பொருத்தியது. இரு தரப்பினரும் வெளிப்படையாக அறிவித்த நோக்கங்கள் (அரசு தரப்பை பொருத்தவரை, பயங்கரவாதத்திற்கு எதிரான போர்; தமிழீழ விடுதலைப் புலிகளைப்

இந்த ஆவணங்கள் வெளிப்படுத்தும் அடிப்படைப் புரிதல் என்னவெனில், உலகளாவியச் சட்டங்களின் அடிப்படையில், குற்றங்களுக்குப் பொறுப்பேற்க வைப்பது என்பது, உண்மைக்கான உரிமை, நீதிக்கான உரிமை, நிவாரணத்திற்கான உரிமை ஆகியவற்றை உள்ளடக்கி, வரையறுக்கப்பட்ட உத்தரவாதங்களின் மூலம் மீண்டும் நடக்காதவாறு உறுதிப்படுத்துவதே.

பொருத்தவரை தனித் தாய்நாட்டிற்கான போராட்டம்), அல்லது அவர்கள் கையாண்ட சமமற்ற முறைகள் ஆகியவை உலகளாவிய மனித நேய மற்றும் மனித உரிமைச் சட்டங்களை அதற்குப் பொருத்துவதிலிருந்து விலக்கு அளிக்கவில்லை.

இலங்கை, பல்வேறு மனித உரிமை ஒப்பந்தங்களின் பங்காளராக இருக்கிறது. அதன் காரணமாக, உலகளாவிய மனித நேய மற்றும் மனித உரிமைச் சட்டங்கள் மீறப்படுவது குறித்த குற்றச்சாட்டுகளை விசாரித்து, அதற்குப் பொறுப்பானவர்கள் மீது சட்டபூர்வ நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் இலங்கைக்கு இருக்கிறது. ஆயுதப் போருக்குப் பொருந்தக்கூடிய வழமையான உலகளாவியச் சட்டங்களும் அத்தகையப் பொறுப்பை உள்ளடக்கியுள்ளன. இந்தச் சட்டபூர்வப் பொறுப்புகளை வலியுறுத்தும் அதே வேளையில், செயலாளர் நாயகத்திற்கு அளிக்கக்கூடிய ஆலோசனையில், குழுவானது அய்.நா.வின் பல்வேறு ஆவணங்கள் மற்றும் ஒப்பந்தங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள உலகளாவிய வரையறைகளையும் பெரிதும் உள்வாங்கியுள்ளது.

இந்த ஆவணங்கள் வெளிப்படுத்தும் அடிப்படைப் புரிதல் என்னவெனில், உலகளாவியச் சட்டங்களின் அடிப்படையில் குற்றங்களுக்குப் பொறுப்பேற்க வைப்பது என்பது, உண்மைக்கான உரிமை, நீதிக்கான உரிமை, நிவாரணத்திற்கான உரிமை ஆகியவற்றை உள்ளடக்கி, வரையறுக்கப்பட்ட உத்தரவாதங்களின் மூலம் மீண்டும் நடக்காதவாறு உறுதிப்படுத்துவதே. இதற்கு முன் வேறு பல நாடுகளில் இதே மாதிரியான சிக்கல்களை எதிர் கொண்ட போது கடப்பாடுகளை உறுதிப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட, இந்த வரையறைகளுக்கு உட்பட்ட, பல கோணங்களிலான, நடைமுறைச் சாத்தியமுள்ள அணுகுமுறைகளையும் இக்குழு பரிசீலித்துள்ளது. உள்நாட்டுக் கொள்கை, நடவடிக்கைகள் மற்றும் நிறுவனங்கள் ஆகியவற்றைப் பரிசீலித்து, இலங்கை அரசு கடப்பாடுகளை நோக்கி இதுநாள் வரை மேற்கொண்ட அணுகுமுறைகளுக்குப் பொருந்தக்கூடியவற்றை அனுமானிக்கவும், செயலாளர் நாயகத்திற்குத் தனது பரிந்துரைகளை வரையவும் இந்த வரையறையைக் குழு பயன்படுத்திக் கொண்டது.

இறுதியாக, தனது ஆலோசனைகளை வடிவமைக்கும்போது, இலங்கையில் நடைபெற்ற நீண்ட நெடிய ஆயுத மோதலில் ஈடுபட்டிருந்த இரு தரப்பினரின் செயல்களாலும், கொடூரமாகப் பாதிக்கப்பட்ட மக்களின் உரிமைகள் மற்றும் தேவைகளுக்கு குழு முக்கியத்துவம் அளித்துள்ளது.

இறுதியாக, தனது ஆலோசனைகளை வடிவமைக்கும் போது, இலங்கையில் நடைபெற்ற நீண்ட நெடிய ஆயுத மோதலில் ஈடுபட்டிருந்த இரு தரப்பினரின் செயல்களாலும் கொடூரமாகப் பாதிக்கப்பட்ட மக்களின் உரிமைகள் மற்றும் தேவைகளுக்குக் குழு முக்கியத்துவம் அளித்துள்ளது. பொதுவாக போர்களில், பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியவர்களே வேதனையையும் இழப்பையும் அதிகமாக அனுபவிக்க நேரும். இதற்கு இலங்கையும் விதிவிலக்கல்ல.

1.2) குழுவால் தகுதியானவை என அறிந்துணரப்பட்ட குற்றச்சாட்டுகள்

குழு தகுதியானவை என அறிந்துணர்ந்த குற்றச்சாட்டுகள், போரின் இறுதிக் கட்டத்தில் நடந்தவை பற்றி இலங்கை அரசு இதுநாள் வரை கூறி வந்த நிலைக்கு முரணான ஒரு நிலையை வெளிக் கொணர்கிறது. 'பொதுமக்களில் ஒருவர் கூடப் பாதிப்படையக் கூடாது' என்ற கொள்கையுடன், தான் ஒரு மனிதநேய மீட்பு நடவடிக்கையை மேற்கொண்டதாக அரசு கூறியது. ஆனால் அதற்கு நேர் எதிராக, குழு தகுதியான குற்றச்சாட்டுகளைக் கண்டறிந்தது. அவை நிரூபிக்கப்படுமானால், இலங்கை அரசு, விடுதலைப் புலிகள் இயக்கம் இரண்டுமே, மிகப் பரவலாக, உலகளாவிய மனித நேயச் சட்டம் மற்றும் உலகளாவிய மனித உரிமைகள் சட்டம் ஆகியவற்றை மீறியிருப்பதும், அவற்றில் சில போர்க் குற்றங்கள் மற்றும் மனிதத்திற்கு எதிரான குற்றங்கள் என வகைப்படுத்தக் கூடியதாகவும் இருக்கும். போர் மற்றும் அமைதி ஆகிய இரு நேரங்களிலும் மனித மாண்பைக் காப்பதற்காக உருவாக்கப்பட்ட உலகளாவியச் சட்டங்களின் மீது, மிக மோசமான அத்துமீறல்கள் நடந்திருப்பதையே போர் நடத்தப்பட்ட விதம் காட்டுகிறது.

குறிப்பாக, போரின் இறுதிக் கட்டங்களோடு தொடர்புடைய தகுதியான குற்றச்சாட்டுகளைக் குழு கண்டறிந்தது. செப்டம்பர் 2008 முதல் 19 மே 2009 வரையிலான காலக்கட்டத்தில், இலங்கை இராணுவம், வன்னிக்குள் தனது இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள, மிகப் பாரிய மற்றும் மிகப் பரவலான குண்டு வீச்சுகளை பயன்படுத்தியது. இதில் மிகப் பெரும் எண்ணிக்கையிலான பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இந்நடவடிக்கை வன்னியின் மக்களை தனிமைப்படுத்தியது.

இந்த நடவடிக்கையானது, வன்னி மக்கள் தொகையைப் பெருமளவு அழிப்பது, ஏறத்தாழ 3 லட்சத்து 30 ஆயிரம் பொதுமக்கள் தொடர்ந்து குறுகிக் கொண்டு வந்த பரப்பளவிற்குள் சிக்கியிருந்தனர். இவர்கள் குண்டு வீச்சுகளுக்கு தப்பி ஓட முயன்று, ஆனால் விடுதலைப் புலிகளால் பணயமாக வைக்கப் பட்டிருந்தனர். ஊடகங்கள் மற்றும் பிற விமர்சகர்களை அச்சுறுத்தவும் அமைதிப் படுத்தவும் அரசு பல வகையான அச்சுறுத்தல்கள் மற்றும் நடவடிக்கைகளை மேற்கொண்டது. இதில் வெள்ளை வேன்களில் ஆட்களைக் கடத்திக் காணாமல் போகச் செய்வதும் ஒரு வழிமுறை ஆகும். பொதுமக்களை, பாதுகாப்புப் பகுதி என்று அறிவிக்கப்பட்ட பகுதிகளில் பெருமளவு திரளச் செய்து, கனரக ஆயுதங்களை பயன்படுத்தவில்லை என்று அறிக்கையும் அளித்து, பாதுகாப்பு வலயத்தில் திரண்ட மக்கள் மீது மூன்று முறை தொடர்ச்சியாகப் பாரிய குண்டு வீச்சுகளை அரசு மேற்கொண்டது. அய். நா. அமைப்பினர் தங்கியிருந்த குடில், உணவு வழங்கு வரிசைகள், காயம்பட்டவர்கள் மற்றும் அவர்களின் உறவினர்களைக் கடற்கரையில் இருந்து அழைத்துக்கொண்டு செல்ல வந்திருந்த உலகளாவிய செஞ்சிலுவைச் சங்கத்தின் கப்பல்களுக்கு அருகே, எனப் பொதுமக்கள் கூடிய இடங்களில் அரசு குண்டு வீசியது.

அய். நா., செஞ்சிலுவைச் சங்கம் போன்றவர்கள் எச்சரித்ததை மீறியும், தனது சொந்த உளவுத்துறை, அதன் விளைவுகளை விளக்கியதை மீறியும் அது குண்டு வீச்சை மேற்கொண்டது. போரின் இறுதிக் கட்டங்களில் பெருமளவிலான மக்கள் இறந்தது அரசின் குண்டு வீச்சினால்தான். அரசு திட்டமிட்டே முதன்மையாக மருத்துவமனைகள் மீது குண்டு வீசியது. வன்னியில் உள்ள அனைத்து மருத்துவமனைகளும் குண்டு வீச்சினால் தாக்கப்பட்டுள்ளன. அதில் சில தொடர்ச்சியான தாக்குதல்களுக்கு ஆளாகின. இந்த இடங்களைப் பற்றி நன்கு அறிந்திருந்த போதுமே அரசு இதனை செய்தது. மேலும் போர் நடந்த பகுதியில் இருந்த மக்களுக்கு உணவு, மருத்துவ உதவிகள் குறிப்பாக அறுவை சிகிச்சைக்கான உபகரணங்கள் போன்ற மனித நேய அடிப்படையிலான உதவிகளை மறுத்ததன் மூலம் அவர்களின் துன்பத்தைக் கூட்டியது. இந்த நிலையில் போர்ப் பகுதியில் இருந்த மக்களின் எண்ணிக்கையை அது வேண்டுமென்றே குறைத்து மதிப்பிட்டது. சனவரி முதல் மே 2009 திற்குள் பல்லாயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர். அதில் பெரும்பான்மையானவர்கள் அடையாளம் தெரியாதபடி போரின் இறுதிக் கட்டங்களில் நடந்த கொடூரத் தாக்குதல்களிலேயே உயிரிழந்தனர்.

போரில் பாதிக்கப்பட்டவர்களும், பிழைத்தவர்களும் போர் நடைபெற்ற பகுதியில் இருந்து வெளியேறிய பிறகு அரசு அவர்களுக்கு மேலும் துன்பத்தையே அளித்தது. விடுதலைப் புலிகள் எனச் சந்தேகத்திற்குரியவர்களை அடையாளம் காண்பதற்கான சோதனைகள் எந்த வெளிப்படைத் தன்மையுடனோ, பொது நபர்களின் முன்போ நடைபெறவில்லை. தனிமைப்படுத்தி அழைத்துச் செல்லப் பட்டவர்களில் சிலர் கொல்லப்பட்டுள்ளனர். சில பெண்கள் பாலியல் வன்புணர்விற்கு ஆளாக்கப்பட்டிருக்கலாம். எஞ்சியிருந்தவர்கள் காணாமல் போயினர். இது, அரசு அமைத்தக் குழுவின் முன் சாட்சியமளித்த அவர்களின் மனைவிமார் மற்றும் உறவினர்களின் ஊடாகத் தெரிய வருகிறது. இடம்பெயர்ந்த மக்கள் அனைவரும் வெளி உலகத் தொடர்பற்ற முகாம்களிலேயே வைக்கப்பட்டிருந்தனர். முகாமின்



பாதுகாப்புப் பகுதி என்று அறிவிக்கப்பட்ட பகுதிகளில் பொது மக்களைப் பெருமளவு திரளச் செய்து, கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தவில்லை என்று அறிக்கையும் அளித்து, பாதுகாப்பு வலயத்தில் திரண்ட மக்கள் மீது மூன்று முறை தொடர்ச்சியாகப் பாரிய குண்டு வீச்சுகளை அரசு மேற்கொண்டது.

அய். நா. அமைப்பினர் தங்கியிருந்த குடில், உணவு வழங்கு வரிசைகள், காயம்பட்டவர்கள் மற்றும் அவர்களின் உறவினர் களைக் கடற்கரை யிலிருந்து அழைத்துச் செல்ல வந்திருந்த உலகளாவிய செஞ்சிலுவைச் சங்கத்தின் கப்பல்களுக்கு அருகே, எனப் பொது மக்கள் கூடிய இடங்களில் அரசு குண்டு வீசியது.



கொள்ளளவுக்கு மீறிய மக்கள் கூட்டம் காரணமாக மிக மோசமான சூழலும், தடுத்து வைக்கப்பட்டவர்களின் அடிப்படைச் சமூக மற்றும் பொருளாதார உரிமைகள் மறுக்கப்பட்டதும், இதன் காரணமாகத் தேவையின்றி பல உயிர்கள் இறந்ததும் நடந்தது. முகாம்களில் இருந்த சிலர் விசாரணைக்குட்படுத்தப்பட்டு துன்புறுத்தலுக்குள்ளாக்கப்பட்டனர். விடுதலைப் புலிகள் எனச் சந்தேகிக்கப் பட்டவர்கள் எவ்வித வெளியுலகத் தொடர்புமற்ற இடங்களுக்கு மாற்றப்பட்டனர். இதனால் மேலும் பல துன்புறுத்தல்களுக்கு ஆளாகக்கூடிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

போர் நடைபெற்ற பெரும் ஆபத்து நிலவிய போதும் விடுதலைப் புலிகள், பொதுமக்களை வெளியேற அனுமதி அளிக்கவில்லை. அவர்களைப் பணயமாக வைத்திருந்ததோடு, சில நேரங்களில் தங்களுக்கும் முன்னேறி வரும் இராணுவத்திற்கும் இடையில் மனித அரணாக அவர்களின் இருப்பைப் பயன்படுத்திக் கொண்டனர். போர் நடைபெற்ற காலம் முழுவதிலும் தனது படைக்கு வலுக்கட்டாயமாக ஆட்களைச் சேர்ப்பதை ஒரு கொள்கையாகப் பின்பற்றிய விடுதலைப் புலிகள் இயக்கம், போரின் கடைசிக் கட்டங்களில் ஆட்களைச் சேர்ப்பதை மிகவும் வேகப்படுத்தி - எல்லா வயதினரையும், 14 வயதான குழந்தைகள் உட்பட அனைவரையும் தனது படையில் இணைத்துக் கொண்டது. தங்களுடைய பாதுகாப்பிற்காகப் பதுங்கு குழிகள் மற்றும் பிற பாதுகாப்பு அரண்களை அமைப்பதற்குப் பொதுமக்களைக் கட்டாயப்படுத்தியதன் மூலம் போராளிகள் மற்றும் பொதுமக்களுக்கு இடையேயான வேறுபாட்டை உணரத் தடை ஏற்படுத்தியதோடு, கொல்லப்படும் ஆபத்தான நிலைக்குப் பொது மக்களைத் தள்ளியது.

மிக வெளிப்படையாகத் தோல்வியை நோக்கிச் சென்றுக் கொண்டிருந்த ஒரு போரை, நடத்தியே ஆக வேண்டும் என்ற தாகத்தின் காரணமாகவே இவையனைத்தையும் அவர்கள் செய்தனர். விடுதலைப் புலிகளின் இந்த நோக்கத்திற்காகவும், அவர்களின் மூத்த தலைவர்களைக் காக்க அவர்கள் மேற்கொண்ட முயற்சிகளின் காரணமாகவும் நிறையப் பொதுமக்கள் பலியாக்கப்பட்டனர். பிப்ரவரி 2009 முதல் போர் நடைபெற்ற பகுதியிலிருந்து தப்ப முயன்ற பொதுமக்களை நேருக்கு நேராக விடுதலைப் புலிகள் சுட்டுக் கொல்லத் தொடங்கினர். இது, போரின் இறுதிக் கட்டங்களில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தியது.

இடம் பெயர்ந்த மக்கள் பெரும் குழுக்களாகத் தங்கியிருந்த இடத்திற்கு அருகிலேயே அவர்கள் ஆயுதங்களைப் பயன்படுத்தினர். அத்துடன், இடம் பெயர்ந்த மக்களின் இருப்பிடங்கள் அல்லது பொதுமக்கள் நடமாடும் பிற பகுதிகளான மருத்துவமனைகள் போன்ற இடங்களில் இருந்து சுட்டதோடு அவ்விடங்களுக்கு அருகிலேயே இராணுவ உபகரணங்களையும் அவர்கள் வைத் திருந்தனர். போரின் இறுதிக் கட்டங்கள் முழுவதும் போர் நடைபெற்ற இடத்திற்கு வெளியே தற்கொலைத் தாக்குல்களைத் தொடர்ந்து மேற்கொண்டனர். போரின் முந்தைய காலங்களில் நடைபெற்றதைப் போல் அல்லாமல், இத்தகையத் தாக்குதல்களை நடத்துவதற்கான திறன் குறைந்திருந்த போதும் - போர் நடைபெற்ற இடத்திற்கு வெளியே இருந்த மக்களின் மீது நடத்தக்கூடியத் தாக்குதல்களையும் அது அதிகரித்தது. இறுதியாக, இலங்கை அரசு அய்ந்து முக்கிய வகைகளில் மோசமான அத்துமீறல்களை மேற்கொண்டதற்கான தகுதி வாய்ந்த குற்றச்சாட்டுகளைக் குழு கண்டறிந்துள்ளது.

1) பரவலான குண்டு வீச்சின் மூலம் பொதுமக்களைக் கொன்றது.

2) மருத்துவமனைகள் மற்றும் பிற மனித நேய அமைப்புகள் மீது குண்டு வீச்சு நடத்தியது.

3) மனித நேய உதவிகளை மறுத்தது.

4) இடம் பெயர்ந்த மக்கள் மற்றும் சந்தேகத்திற்குரிய புலிகள் இயக்க உறுப்பினர்கள் ஆகியோர் உள்ளிட்ட, போரில் தாக்கப்பட்டவர்கள் மற்றும் உயிர் பிழைத்தவர்கள் அனுபவித்த மனித உரிமை மீறல்கள்.

5) ஊடகங்கள் மற்றும் அரசை விமர்சித்த பிறர் மீது நட்ந்த மனித உரிமை மீறல்கள்.

போரின் இறுதிக் கட்டங்களில் விடுதலைப் புலிகளோடு தொடர்புடைய குற்றச்சாட்டுகளை ஆறு முக்கிய வகைகளிலான மோசமான மீறல்களாகக் குழு நிர்ணயிக்கிறது.

1) பொதுமக்களை மனித அரணாகப் பயன்படுத்தியது.

2) விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்து தப்ப முற்பட்ட பொதுமக்களைக் கொன்றது.

3) பொதுமக்களின் இருப்பிடங்களுக்கு அருகே ஆயுதங்களைப் பயன்படுத்தியது.

4) வலுக்கட்டாயமாகக் குழந்தைகளைப் படையில் இணைத்தது.

5) வலுக்கட்டாயமாக வேலை வாங்கியது.

6) தற்கொலைத் தாக்குதல்கள் மூலம் பொதுமக்களைக் கொன்றது.

பொறுப்பேற்பது

உலகளாவிய மனிதநேய மற்றும் மனித உரிமைச் சட்டங்களை மிக மோசமாக மீறியதற்காகப் பொறுப்பேற்பது என்பது, ஒரு விருப்பத்தேர்வோ அல்லது கொள்கை சார்ந்ததோ அல்ல. உள்நாட்டு மற்றும் உலகளாவியச் சட்டங்களின் கீழ் அது ஒரு கடமை. இந்த நம்பத்தகுந்த மீறல் குற்றச்சாட்டுகள், அதற்குக் காரணமானவர்கள் மீது முழுமையான விசாரணை நடத்துவதையும் தண்டனைக் குட்படுத்துவதையும் கோருகிறது. இவை நிரூபிக்கப்பட்டால், அதற்குக் கூடுதல் பொறுப்பான - இலங்கை இராணுவத் தளபதிகள், மூத்த அரசு அதிகாரிகள் இவர்களோடு விடுதலைப் புலிகளின் இராணுவ மற்றும் அரசியல் தலைவர்கள் ஆகியோரும் உலகளாவிய குற்றங்களுக்குப் பொறுப்பேற்க வேண்டும். அதே வேளையில், பொறுப்பேற்பது என்பது, செய்யப்பட்ட மோசமான குற்றங்களை விசாரிப்பதையும், தண்டனை வழங்குவதையும் கடந்த ஒன்றாக இருக்கிறது. உண்மையில் கடந்த காலத்தில் மனித உரிமைகள் மற்றும் மனித மாண்பை மீறியதற்காகத் தனி நபர்களும் நிறுவனங்களும் மேற்கொள்ள வேண்டிய அரசியல், சட்டபூர்வ மற்றும் தார்மீகப் பொறுப்பை ஏற்றுக் கொள்வதற்கான விரிவான நடைமுறையே அது.

மேலே குறிப்பிடப்பட்ட உலகளாவிய வரையறைகளுக்கு ஏற்பப் பொறுப் பேற்பது என்பது உண்மை, நீதி மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கான மறு சீரமைப்பு ஆகியவற்றை அடைவதை நிச்சயமாக உள்ளடக்கி இருக்கிறது. பொறுப்பு ஏற்பது என்பது தனது சொந்த மக்களின் உரிமைகள் மீறப்பட்டதில் தனது பங்கு மற்றும் பொறுப்பை, அரசு, அதிகாரபூர்வமாக அங்கீகரிப்பதையும் உள்ளடக்கியது. அய்.நா.வின் கொள்கைக்கு ஏற்பப் பொறுப்பேற்பதற்கான வரைமுறையில் இதுவரை வெளிநாடுகளில் பின்பற்றப்பட்ட முறைகளை இங்கு இறக்குமதி செய்வதையோ, அனைவருக்கும் ஒரே மாதிரியான நடைமுறையைப் பின்பற்றுவதையோக் குழு கொண்டிருக்கவில்லை. மாறாக, மிகப்பெரிய அளவில் பொதுமக்களின் பங்களிப்பு, தேவைகள் மற்றும் விருப்பங்களைத் தேசிய அளவிலான ஆய்வுகளின் அடிப்படையில் பொறுப்பேற்கும் நடைமுறையை வடிவமைப்பதையே அது ஆதரிக்கிறது. எவ்வாறாயினும், எந்த ஒரு தேசிய நடைமுறையும் நிச்சயம் உலகளாவிய வரையறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். ஆக, பொறுப்பேற்பது குறித்த இலங்கையின் அணுகுமுறையானது அந்த வரையறைகளின் மீது நிர்ணயிக்கப்பட்டு, இப்போரின் இறுதிக் கட்டங்களில் பாதிக்கப் பட்டவர்கள் எவ்வாறு உண்மை, நீதி மற்றும் மறு சீரமைப்புக் குறித்த தங்கள் உரிமை களைப் பெற முடியும் என்பதைக் கருத்தில் கொண்டதாக இருக்க வேண்டும்.



உலகளாவிய மனிதநேய மற்றும் மனித உரிமைச் சட்டங்களை மிக மோசமாக மீறியதற்காகப் பொறுப்பேற்பது என்பது, ஒரு விருப்பத்தேர்வோ அல்லது கொள்கை சார்ந்ததோ அல்ல. உள் நாட்டு மற்றும் உலகளாவி யச் சட்டங்களின் கீழ் அது ஒரு கடமை. இந்த நம்பத் தகுந்த மீறல் குற்றச் சாட்டுகள், அதற்குக் காரணமானவர்கள் மீது முழுமையான விசாரணை நடத்துவதையும், தண்டனைக்கு உட்படுத்துவதையும் கோருகிறது.

அரசுத் தரப்பில் இருக்கக்கூடிய 'வெற்றி மனப்பான்மை', 'பயங்கரவாதத்தைத்' தோற்கடிக்கத் தேவையான வழிமுறைகளையும் உறுதியையும் வளர்த்து, அதன் மூலம் 'தமிழர்களின் கனவான அரசியல் தன்னுரிமையை முடிவுக்குக் கொண்டு வருவது' என்ற அரசின் பேச்சின் ஊடாகவும், மனித உயிர்கள் குறித்த அக்கறையற்ற இராணுவத் திட்டங்களின் ஊடாகவும் அது வெளிப்பட்டுள்ளது.



சட்ட அடிப்படையிலான நிவாரணம் வழங்குவதற்கு முக்கியத்துவம் கொடுக்கக்கூடிய வகையில், மறுசீரமைப்பு மற்றும் பொறுப்பேற்பது ஆகியவற்றை சமன்படுத்துவதற்கான முயற்சியில் ஈடுபட்டிருப்பதாக அரசு குறிப்பிட்டுள்ளது. சட்ட அடிப்படையிலான நிவாரணம் மற்றும் தண்டனை ஆகிய இரண்டில் விருப்பத் தேர்வை மேற்கொள்ளும் செயலானது ஒரு பொய்யான நடைமுறையே. இரண்டுமே தேவை. மேலும், குழுவின் பார்வையில் நிவாரணம் அளிப்பது என்ற அரசின் முடிவானது குறைபாடு உடையதாகவே இருக்கிறது. ஏனெனில், அது கடந்த கால அரசுகளின் அரசியல் பொறுப்பு குறித்த தெளிவற்ற தன்மையையும் அவர்கள் பயங்கரவாதத்திலிருந்து பொதுமக்களை காக்கத் தவறியதையும் கருத்தில் கொண்டு, நேர்மையான, பாதிக்கப்பட்டவர்களை மய்யப்படுத்திய, உண்மை, நீதி மற்றும் மறுசீரமைப்பிற்கு முக்கியத்துவம் கொடுக்கக்கூடியப் பொறுப்பேற்கும் முயற்சியைத் திசை திருப்புகிறது.

மேலும், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் குறிப்பிட்ட உறுப்பினர்கள் மீதான குற்றச்சாட்டுகளுக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இதைப் பொருத்த அளவில் அரசின் திட்டமானது, பெரும்பான்மை மக்களுக்கான மறுவாழ்வு மற்றும் பிழைத்திருக்கக்கூடிய விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களில் முக்கியமானவர்களுக்குக் குறைந்த அளவு தண்டனைகளை வழங்குவது என்பதைக் குறித்துச் சிந்திக்க வைக்கிறது. பொறுப்பேற்பது குறித்து அரசின் இரு வகையிலான தீர்மானங்கள் குழுவிற்கு விவரிக்கப்பட்டபடி, கடந்த கால அரசுகள் மற்றும் விடுதலைப் புலிகளின் பொறுப்புகள் மீதே கவனம் செலுத்துகிறது. மாறாக, போரின் இறுதிக்கட்டங்களிலும் அதற்குப் பிறகும் அரசு எடுத்த முடிவுகள் குறித்தோ போரை நடத்திய விதம் குறித்தோ அதன் காரணமாக நடந்த சட்ட மீறல்கள் குறித்தோ ஒரு சரியான விசாரணையை நடத்துவதை அது நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை.

பொறுப்பேற்பது தொடர்பான அரசின் தீர்மானமானது, உலகளாவிய வரையறைகளுக்கு உட்படவில்லை எனக் குழு தீர்மானிக்கிறது. இரு தரப்பினராலும் நடத்தப்பட்ட மீறல்கள் பற்றிய குற்றச்சாட்டுகளை நேர்மையாக விசாரிக்காமல், பொறுப்பேற்பது குறித்த தனது அணுகுமுறையின் மையப் புள்ளியாக, போரில் பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகள் மற்றும் மாண்பினை வைக்காமல், உலகளாவிய எதிர்பார்ப்புகளை அதன் முயற்சிகள் ஒருபோதும் எட்ட முடியாது.

கற்ற பாடங்கள் மற்றும் இணக்கத்திற்கான ஆணையம்

2002 போர் நிறுத்த ஒப்பந்தக் காலத்திலிருந்து தொடங்கிப் போரின் இறுதிக் கட்டமான மே 2009 வரையிலான கடந்த காலத்தில் நிகழ்ந்தவற்றுக்கு பரிகாரம் காணவேண்டும் என்பதற்கான தனது கொள்கையின் அடிப்படையாக 'கற்ற பாடங்கள் மற்றும் இணக்கத்திற்கான ஆணையத்'தினை (க.பா.இ. ஆணையம்) அரசு அமைத்தது. இந்த ஆணையமானது இலங்கையின் சிக்கல் குறித்து ஒரு தேசிய அளவிலான உரையாடலை தொடங்குவதற்குப் பயன்தரத்தக்க ஒரு வாய்ப்பைத் தருகிறது. இந்த ஆணையத்தின் முன் தானாக முன்வந்து பேசிய பெரும் எண்ணிக்கையிலான மக்கள் – குறிப்பாக பாதிக்கப்பட்டவர்கள் – அத்தகைய ஓர் உரையாடலின் அவசியத்தை எடுத்துக்காட்டுகின்றனர். ஆணையத்தின் உறுப்பினர்கள் சிலரின் இனச்சிக்கல் குறித்த ஆழமாக வேரூன்றிய கருத்துகளும் நலன்களும் இந்த ஆணையத்தின் சுதந்திரம் மற்றும் பாகுபாடற்ற தன்மை குறித்த உலகளாவிய வரையறைகளைப் பூர்த்தி செய்யவில்லை. இந்த ஆணையத்திற்கு பணிக்கப்பட்ட பணிகள், அதன் செயலாற்றும் முறை ஆகியவை இதுநாள் வரை உலகளாவிய மனித நேய மற்றும் மனித உரிமைச் சட்டங்களை மிக மோசமாக மீறியது குறித்த குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கு ஏற்ற வகையிலோ, அல்லது, பல்லாண்டுகளாக நீடித்திருக்கும் இனச்சிக்கலின் வேர்க் காரணிகளை கண்டறிவ

தாகவோ இல்லை. மாறாக, மேலே குறிப்பிட்ட விரிந்த அளவிலான அரசியல் பொறுப்புக் குறித்தே கவனம் செலுத்துகிறது. இது அரசு முன்வைத்த குறை பாடுடைய மற்றும் அரைகுறையான செயல்திட்டத்தின் பகுதியாகும்.

இன்று வரை இந்த ஆணையத்தின் செயல்பாடுகள் போரின் இறுதிக் கட்டங்களில் உண்மையில் என்ன நடந்தது என்பதைக் குறித்து நேர்மையாக விசாரிக்கவில்லை. போரில் இரு தரப்பினரும் செய்த மோசமான அத்துமீறல்கள் குறித்த திட்டமிட்ட மற்றும் பாகுபாடற்ற விசாரணையை அது நடத்தவில்லை. பாதிக்கப்பட்டவர்களை அவர்களின் மாண்பு மற்றும் பாதிப்புக்கு உண்டான முழு மதிப்புடன் நடத்தக்கூடிய அணுகுமுறை இருக்கவில்லை. தனிப்பட்ட முறையில் உயிர்ப் பாதுகாப்பற்ற நிலை இருந்த போதும், சாட்சிகளுக்குரிய பாதுகாப்பு வழங்கப்படவில்லை. மொத்தத்தில் இந்த ஆணையம், ஆழமான குறைபாடுகளை உடையதாகவும், பொறுப்பேற்பதற்கான ஒரு சரியான நடைமுறை குறித்த உலகளாவிய வரையறைகளுக்குட்படாததாகவும் இருக்கிறது. இதனால் இலங்கையின் அதிபர் மற்றும் செயலாளர் நாயகம் ஆகியோர் இணைந்து உறுதி கொடுத்தப் பொறுப்பேற்கும் நடைமுறைக்கு இந்தக் குழு உதவாது.

பிற உள்நாட்டு வழிமுறைகள்

க.பா.இ. ஆணையத்தின் செயல்பாடுகள் மற்றும் விளைவுகளுக்கு அப்பால் பொறுப்பேற்கும் நடைமுறையில் நீதித்துறை முன்னணிப் பங்கு வகிக்க வேண்டும். ஆனால், இலங்கையின் நீதித்துறையின் கடந்த காலச் செயல்பாடுகள் மற்றும் தற்போதைய கட்டமைப்பை ஆய்வு செய்ததில், நிலவக்கூடிய அரசியல் சூழலில் நீதித்துறையானது சரியான நீதியை வழங்கும் என்ற நம்பிக்கை அய். நா. குழுவிற்கு இல்லை. இதற்குக் காரணம் அதன் திறன் இன்மை அல்ல. மாறாக அரசியல் உறுதிப்பாடின்மை. குறிப்பாக அண்மைக் காலத்தில் அட்டார்னி ஜெனரலின் சுதந்திரம் வலுவிழந்துள்ளது. அதிபரிடம் அதிகாரங்கள் குவிக்கப் பட்டுள்ளன. மேலும் அவசர கால நிலை தொடர்வதும் அதனுடன் இணைந்து பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் அது தற்போதும் இருக்கும் வடிவத்தில் தொடர்வதும், நீதித்துறையானது அரசு புரியும் தவறுகளைக் கேள்வி கேட்கவும் மனித உரிமை உத்திரவாதங்களை அளிக்கவும் முக்கியத் தடையாக உள்ளது. இதற்கிணையாக இராணுவ நீதி மன்றங்களும் போரின் இறுதிக் கட்டங்களில் தகுதி வாய்ந்ததாகக் கருதப்படக்கூடிய குற்றச்சாட்டுகள் மற்றும் பிற குற்றங்களை விசாரித்துப் பொறுப்பேற்பதற்கான எந்த அறிகுறியும் கிடைக்கவில்லை.

பொறுப்பேற்பதை உறுதி செய்யக்கூடிய பணிகளில் பங்காற்றும் திறன் வாய்ந்த பிற உள்நாட்டு நிறுவனங்களும் அமைப்புகளும் தற்போது மிகவும் வலுவிழந்த நிலையிலேயே உள்ளன. கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக பெரும் எண்ணிக்கையிலான மிக மோசமான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளை விசாரிக்க விசாரணை ஆணையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒரு சில ஆணையங்கள் முக்கியமான உண்மை நிலையைக் கண்டறிந்த போதும் பெரும்பாலான ஆணையங்கள் கண்டறியப்பட்ட அத்துமீறல்களுக்குப் ப் பொறுப்பேற்கும் சரியான செயல்பாடுகளை முன்னெடுக்கத் தவறிவிட்டன. நிறைய ஆணையங்கள் ஒரு வெளிப்படையான அறிக்கையை தரத் தவறியுள்ளன. அளிக்கப்பட்ட அறிக்கைகளிலிருந்த பரிந்துரைகளும் மிக அரிதாகவே நடைமுறைப் படுத்தப்பட்டன. இலங்கையின் மனித உரிமை ஆணையம், பொறுப்பேற்கும் செயல்பாடுகளில் மிக முக்கியப் பங்காற்றலாம். ஆனால் காணாமல் போனவர்கள் குறித்த வழக்குகளில் தொடர் விசாரணைகளை மேற்கொள்வதிலும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களின் நலன்களைக் கண்காணிப்பதிலும் அது தனது திறன் மற்றும் அரசியல் உறுதிப்பாட்டைக் காட்டினால் மட்டுமே அவர்களை நம்பி ஏற்க இயலும்.

வெற்றி மனப்பான்மை யிலிருந்து அடிப்படை யிலேயே விலகி, இலங்கையில் இருக்கக் கூடிய இன வேறுபாடு களை அங்கீகரித்து, தமிழர்கள் உட்பட அந்நாட்டின் மக்கள் அனைவரையும் முழுமையாக இணைத்துக் கொள்ளக்கூடிய ஓர் அரசியல் தீர்வுக்கான நேர்மையான கடப் பாட்டை மறுப்பதி லிருந்தும் விலகுவதே, நாட்டின் எதிர்காலத்திற்கு அடிப்படையாக இருக்க முடியும்.

போரின் இறுதிக் கட்டங்களில் பொதுமக்களைக் காத்திருக்கக்கூடிய நடவடிக்கைகளை எடுக்க அய். நா.வின் அரசியல் உறுப்புகளும் அமைப்பு களும் தவறி விட்டன. வன்னியில் நடைபெற்றுக் கொண்டிருந்த நிகழ்வுகள் வெளி உலகிற்குத் தெரியவந்த நேரத்தில், பாதிக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கையானது வெளிப்படையாகத் தெரியப்படுத்தப் பட்டிருக்குமானால், பொதுமக்களைக் காப்பதற்கான குரல்களை அது வலிமைப்படுத்தி இருக்கும்.



பொறுப்பேற்பதற்கு உள்ள பிற தடைகள்

தனது பணியின் போக்கில் இலங்கையில் வேறு பல நடப்புச் சிக்கல்களையும் குழுவால் கண்டறிய முடிந்தது. இவை கவனிக்கப்படாமல் போயின் பொறுப் பேற்பதற்கான நேர்மையான முயற்சிகளுக்கு இடையூறு ஏற்படுத்தக் கூடியதாகவும் நீடித்த அமைதிக்கான வாய்ப்புக்களைக் குறைக்கக்கூடியதாகவும் போகும். குறிப்பிடத்தகுந்த அச் சிக்கல்களாவன :

(அ) அரசு தரப்பில் இருக்கக்கூடிய 'வெற்றி மனப்பான்மை'. இது, 'பயங்கரவாதத்தைத்' தோற்கடிக்க தேவையான வழிமுறைகளையும் உறுதியையும் வளர்த்து, அதன் மூலம் 'தமிழர்களின் கனவான, அரசியல் தன்னுரிமையை, முடிவுக்குக் கொண்டு வருவது' என்ற அரசின் பேச்சின் ஊடாகவும், மனித உயிர்கள் குறித்த அக்கறையற்ற இராணுவத் திட்டங்களின் ஊடாகவும் அது வெளிப்பட்டுள்ளது.

(ஆ) தொடர்ந்து கொண்டிருக்கக்கூடிய ஒதுக்குதல் கொள்கைகள். இது குறிப்பாக மிகவும் தீங்கானது. ஏனெனில், உண்மையாக இருக்கிறதோ அல்லது அவ்வாறு புரிந்து கொள்ளப்பட்டதாகவோ நிலவக்கூடிய, இன அடிப்படை யிலான அரசியல், சமூக மற்றும் பொருளாதார ஒதுக்குதலே இப்போரின் இதயமாக இருக்கிறது.

(இ) போர்க் கால நடவடிக்கைகள் தொடர்வது. இதில் அவசர கால நிலை மற்றும் பயங்கரவாதத் தடுப்புச்சட்டம் ஆகியவை தொடர்வது மட்டுமல்லாது, போர் நடைபெற்ற இடங்களைத் தொடர்ந்து இராணுவமயப்படுத்துவது மற்றும் ஒட்டுக் குழுக்களைப் பயன்படுத்துவது ஆகிய அனைத்தும் அச்சம், அச்சுறுத்தல் மற்றும் வன்முறைக்கான சூழலையே உருவாக்குகின்றன.

(ஈ) ஊடகங்கள் மீதான தடைகள். இவை ஜனநாயக அடிப்படையிலான நிர்வாகத்திற்கு எதிராகவும் அடிப்படை மக்கள் உரிமைகளைச் சுருக்குவதாகவும் இருக்கிறது.

(உ) பல ஆண்டுகளாக விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு முக்கிய தார்மீக ஆதரவு மற்றும் பொருளுதவி வழங்கி வந்த உலகத் தமிழர்களின் பங்கு. அவர்களில் சிலர் வன்னியில் நடைபெற்ற மனிதப் பேரழிவில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பங்கு குறித்து ஏற்க மறுக்கின்றனர். இதுப் பொறுப்பேற்பது மற்றும் தொடர்ச்சியான அமைதி ஆகியவற்றிற்கு மேலும் ஒரு தடையாக இருக்கிறது.

நீண்ட காலமாக நிலவக் டிய தேசியஇனப் போராட்டத்தின் வேர்க் காரணிகள் உள்ளிட்ட கடந்த காலத்தின் நிகழ்வுகளை அமைதியாகப் பரிசீலிப்பதை அனுமதிக்கக்கூடிய, பொறுப்பேற்பதற்குத் தகைவான சூழல், தற்போது நிலவவில்லை. மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கக்கூடிய கூடிய, ஒரு வெளிப்படையான சமூகத்தைக் கட்டமைப்பதற்குத் தீர்க்கமான முயற்சிகள் தேவைப்படுகின்றன. அத்துடன், வெற்றி மனப்பான்மையிலிருந்து அடிப்படை யிலேயே விலகி, இலங்கையில் இருக்கக்கூடிய இன வேறுபாடுகளை அங்கீகரித்து, தமிழர்கள் உட்பட அந்நாட்டின் மக்கள் அனைவரையும் முழுமையாக இணைத்துக் கொள்ளக்கூடிய ஓர் அரசியல் தீர்வுக்கான நேர்மையான கடப்பாட்டை மறுப்பதி லிருந்தும் விலகுவதே நாட்டின் எதிர்காலத்திற்கு அடிப்படையாக இருக்க முடியும்.

பொதுமக்களைப் பாதுகாப்பதில் உலக நாடுகளின் பங்கு

போரின் இறுதிக் கட்டங்களில் பொதுமக்களைக் காத்திருக்கக்கூடிய நடவடிக்கைகளை எடுக்க அய். நா.வின் அரசியல் உறுப்புகளும் அமைப்புகளும் தவறிவிட்டன. அரசு மக்களைக் காக்க வேண்டும் என்றும் மருத்துவமனைகள், அய். நா. மற்றும் செஞ்சிலுவைச் சங்கக் கட்டடங்கள் ஆகியவற்றின் மீது குண்டு

வீசுவதை நிறுத்த வேண்டும் என்றும் மூத்த பன்னாட்டு அதிகாரிகள் வெளிப் படையாகவும் தனிப்பட்ட முறையிலும் கேட்டுக்கொண்ட போதும், குழுவின் பார்வையில், வன்னியில் நடைபெற்றுக்கொண்டிருந்த நிகழ்வுகள் வெளி உலகிற்குத் தெரியவந்த நேரத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கையானது வெளிப்படையாகத் தெரியப்படுத்தப்பட்டிருக்குமானால் பொதுமக்களைக் காப்பதற்கான குரல்களை அது வலிமைப் படுத்தி இருக்கும். அத்துடன், மனித உரிமை ஆணையமானது, போர் முடிந்தவுடன், மே 2009இல், இலங்கை மீதான தனது தீர்மானத்தை நிறைவேற்றிய போது, அரைகுறையான தகவல்களின் அடிப்படையிலேயே அது செயல் பட்டிருக்கக்கூடும்.

பரிந்துரைகள்

இச்சூழலில், குழு, கீழ்க்காணும் நடவடிக்கைகளைப் பரிந்துரைக்கிறது. இவை செயலாளர் நாயகம் மற்றும் இலங்கை அரசு ஆகியவற்றுக்கிடையேப் பொறுப்பேற்பது குறித்து மேற்கொள்ளப்படக்கூடிய ஆக்கபூர்வமான செயல் பாடுகளுக்கு அடிப்படையாகத் திகழும் எனக் குழு நம்புகிறது. பொறுப்பேற்பது குறித்த பல்வேறு பரிமாணங்களையும் இந்தப் பரிந்துரைகள் சுட்டிக்காட்டு கின்றன. இவை நிறைவேற்றப்படுவதற்கு இலங்கை அரசு அய். நா. மற்றும் வேறு பலரின் ஒத்துழைப்பும் தேவைப்படும்.

பரிந்துரை 1 : விசாரணைகள்

அ) குழு, தான் நம்பத்தகுந்தது எனக் கண்டறிந்த குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் இலங்கை அரசு தான் ஏற்றுக்கொண்ட உலகளாவியச் சட்டங்களுக்கு ஏற்பவும் உள்நாட்டில் பொறுப்பேற்பதற்கான ஒரு சிறந்த நடைமுறையை உருவாக்கும் பொருட்டும் ஆயுதப் போரில் ஈடுபட்டிருந்த இரு தரப்பினரும் உலகளாவிய மனித நேய மற்றும் மனித உரிமைச் சட்டங்களின் அடிப்படையில் புரிந்துள்ள அத்துமீறல்கள் குறித்து உடனடியாக நேர்மையான விசாரணைகளைத் தொடங்க வேண்டும்.

ஆ) கீழ்க்காணும் செயல்பாடுகளைத் தனது செயல்திட்டமாகக் கொண்டிருக்கக் கூடிய ஒரு சுதந்திரமான பன்னாட்டு அமைப்பினை உடனடியாக செயலாளர் நாயகம் உருவாக்க வேண்டும்.

1) அத்துமீறல் குற்றச்சாட்டுகள் குறித்த நேர்மையான விசாரணைகள் உள்ளிட்ட உள்நாட்டுப் பொறுப்பேற்கும் நடைமுறைகளை இலங்கை அரசு எந்த அளவிற்குத் திறம்படச் செயல்படுத்துகிறது என்பதைக் கண்காணித்து, தான் கண்டறிந்தவற்றை அவ்வப்போது செயலாளர் நாயகத்திற்கு வழங்க வேண்டும்.

2) நேர்மையான மற்றும் திறன் வாய்ந்த உள்நாட்டு விசாரணைகளை கருத்தில் கொண்டு அத்துமீறல்கள் குற்றச்சாட்டுகள் குறித்து ஒரு தனியான விசாரணையை மேற்கொள்ள வேண்டும்.

3) இக்குழு மற்றும் அய். நா. அமைப்பின் பிற உறுப்புகள் சேகரித்த விவரங்கள் உள்ளிட்ட போரின் இறுதிக் கட்டங்களுக்குப் பொறுப்பேற்பதற்குத் தேவையான அனைத்து விவரங்களையும் சேகரித்துப் பாதுகாத்து வருங்காலப் பயன்பாட்டிற்கு அணியப்படுத்தி வைக்க வேண்டும்.

பரிந்துரை 2 : பொறுப்பேற்கும் செயல்முறைகளை முன்னெடுப்பதற்கான பிற உடனடி நடவடிக்கைகள்

அ) வன்னியில் பாதிக்கப்பட்ட மற்றும் உயிர்பிழைத்த அனைவரின் உரிமைகள் மற்றும் மாண்பை அங்கீகரிப்பதை நோக்கமாகக் கொண்ட கீழ்க்காணும் குறுகிய கால நடவடிக்கைகளை இலங்கை அரசு மேற்கொள்ள வேண்டும்.



உயிர்பிழைத்த அனைவருக்கும் அவர்களின் பண்பாட்டுக் கூறுகள் மற்றும் மரபு சார்ந்த பழக்கங்களை கருத்தில் கொண்டு, உளவியல் மற்றும் சமூகப் பாதுகாப்பை அளிக்க வேண்டும். இடம் பெயர்ந்த அனைத்து மக்களையும் விடுவித்து, அவர்கள் தங்களது சொந்த வாழ்விடங் களுக்குத் திரும்பவோ, அவர்களை மறு குடியமர்த்தவோ அவர்களின் விருப்பத் திற்கேற்ப வசதிகளைச் செய்து தர வேண்டும்.

மோசமான குற்றங்களைப் புரிந்ததற்கு போதுமான ஆதாரங்கள் உடையவர் களைத் தண்டனைக் குள்ளாக்கி, மற்ற அனைவரையும் விடுவித்து, அவர்கள் மேலும் எந்த இடையூறும் இன்றிச் சமூகத்தில் கலக்க அனுமதிக்க வேண்டும். நடமாடுவது, கூடுவது மற்றும் கருத்துரைப் பதற்கான சுதந்திரத்தை தடுக்கக்கூடிய அனைத்து நடவடிக்கைகளையும், அரசு வன்முறையையும், ஓர் அச்சுறுத்தலான சூழலை உருவாக்கக் கூடிய பிற நடவடிக்கை களையும் அரசு உடனடியாக நிறுத்த வேண்டும்.



1) அரசு, அதன் உறுப்புகள் மற்றும் அரசால் உருவாக்கப்பட்ட அல்லது சகித்துக்கொள்ளப்பட்ட அனைத்து ஒட்டுக்குழுக்கள் மற்றும் பிறக் குழுக்கள் ஆகிய அனைவரின் வன்முறையும் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும்.

2) இறந்து போனவர்களின் உடல்களை மீட்டு அவர்களின் குடும்பத்திடம் திருப்பி அளித்து, அவர்கள் மத, பண்பாட்டுச் சடங்குகளைச் செய்வதற்கு அனுமதிக்க வேண்டும்.

3) இறந்து போனவர்கள் மற்றும் காணாமல் போனவர்களுக்கு அவர்கள் குடும்பத்தினர் இறப்புச் சான்றிதழ் கோரினால், அதைச் சரியாகவும், மதிப்புடனும், எவ்விக் கட்டணமுமின்றியும் முக்கியமாகப் பிற்காலத்தில் மேலும் விசாரணை மற்றும் நிவாரணம் கோருவதற்கான உரிமைகளை மறுக்காமல் இறப்புச் சான்றிதழை வழங்க வேண்டும்.

4) உயிர்பிழைத்த அனைவருக்கும் அவர்களின் பண்பாட்டுக் கூறுகள் மற்றும் மரபு சார்ந்த பழக்கங்களைக் கருத்தில் கொண்டு உளவியல் மற்றும் சமூகப் பாதுகாப்பை அளிக்க வேண்டும்.

5) இடம் பெயர்ந்த அனைத்து மக்களையும் விடுவித்து அவர்கள் தங்களது சொந்த வாழ்விடங்களுக்குத் திரும்பவோ அல்லது அவர்களை மறு குடியமர்த்தவோ அவர்களின் விருப்பத்திற்கேற்ப வசதிகளைச் செய்து தர வேண்டும்.

6) உயிர்பிழைத்த அனைத்து மக்களும் இயல்பான வாழ்க்கைக்குத் திரும்புவதற்குத் தேவையான இடைக்கால உதவிகளை தொடர்ந்து அளிக்க வேண்டும்.

ஆ) வலுக்கட்டாயமாக காணாமல் போக்கப்பட்டதாகப் புகார் எழுந்துள்ள மக்களின் நிலை மற்றும் அவர்கள் தற்போதுள்ள இடம் ஆகியவை குறித்து இலங்கை அரசு விசாரித்து வெளிப்படுத்த வேண்டும். இது குறித்து 'வலுக்கட்டாயமாக மற்றும் விருப்பமற்று காணாமல் போனவர்கள் குறித்த செயல்பாட்டுக் குழு'வை இலங்கைக்கு இந்திய அரசு அழைக்க வேண்டும்.

இ) நாட்டில் நிலவக்கூடிய அரசியல் சூழ்நிலை காரணமாக அவசரகால நிலையை இலங்கை அரசு உடனடியாகத் திரும்பப்பெறவேண்டும். மேலும் இலங்கை அரசு அளித்துள்ள உலகளாவிய கடப்பாடுகளுக்குப் பொருத்தமற்ற உள்ள பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் பிரிவுகளை மாற்ற வேண்டும். அத்துடன் இந்தப் பிரிவுகள் மற்றும் பிற பிரிவுகளின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேகத்திற்குரிய விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் மற்றும் அனைவர் குறித்தும் கீழ்க்காணும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

1) தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைவரின் பெயர்கள், அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதன் அடிப்படைகள் ஆகியவை குறித்து அறிவிக்க வேண்டும்.

2) தடுத்து வைக்கப்பட்டவர்கள் அனைவரும் தங்கள் குடும்பத்தினருடனும் வழக்கறிஞருடனும் தொடர்பு கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும்.

3) தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைவரும் தாங்கள் தடுத்து வைக்கப் பட்டதற்கு எதிராக வழக்கு நடத்த அனுமதிக்கப்பட வேண்டும்.

4) மோசமான குற்றங்களைப் புரிந்ததற்குப் போதுமான ஆதாரங்கள் உடையவர் களைத் தண்டனைக்குள்ளாக்கி, மற்ற அனைவரையும் விடுவித்து அவர்கள் மேலும் எந்த இடையூறும் இன்றிச் சமூகத்தில் கலக்க அனுமதிக்க வேண்டும்.

ஈ) நடமாடுவது, கூடுவது மற்றும் கருத்துரைப்பதற்கான சுதந்திரத்தைத் தடுக்கக்கூடிய அனைத்து நடவடிக்கைகளையும் அரசு வன்முறையையும் ஓர்

அச்சுறுத்தலான சூழலை உருவாக்கக்கூடிய பிற நடவடிக்கைகளையும் அரசு உடனடியாக நிறுத்த வேண்டும்.

பரிந்துரை 3 : பொறுப்பேற்பதற்கான நீண்ட கால நடவடிக்கைகள்

தற்போதைய சூழலானது கடந்த காலத்தை நேர்மையாக அணுகுவதற்கு இணக்கமாக இல்லாத நிலையில், நீண்ட காலத்தில் அரசியல் வெளிகள் திறக்க அனுமதிக்கப்படுமாயின் முழுமையாகப் பொறுப்பேற்பதற்கான செயல்பாடுகளை முன்னெடுக்க கீழ்க்காணும் நடவடிக்கைகளை மேற் கொள்ளவேண்டும்.

அ) க.பா.இ. ஆணையத்தின் பணிகளுக்கு அப்பால் ஆனால் அவற்றையும் கருத்தில் கொண்டு மக்களின் வலுவான பங்கெடுப்புடன் கூடிய ஒரு செயல் முறையை இலங்கை தொடங்கிட வேண்டும். இது இனச்சிக்கலின் வேர்க் காரணிகளை கண்டறியவும் இரு தரப்பிலும் இருக்கக்கூடிய தேசிய இனத் தீவிரவாதத்தை அடையாளம் காணவும், போர் நடத்தப்பட்ட விதம் மற்றும் அத்துமீறல்களின் வடிவங்களை அறியவும், அது தொடர்பாக நிர்வாகப் பொறுப்புகளைக் கண்டறியவும் ஒரு விமர்சனப் பார்வையோடு கூடிய ஆய்வினை மேற்கொள்ள வேண்டும்.

ஆ) போரின் இறுதிக் கட்டத்தில் மிகப்பெரும் எண்ணிக்கையில் பொதுமக்கள் இறந்தது குறித்துத் தனது பங்கு மற்றும் பொறுப்பை ஏற்று ஒரு வெளிப்படையான அறிக்கையை இலங்கை அரசு வெளியிட வேண்டும்.

இ) போரின் இறுதிக் கட்டத்தில் மிக மோசமான அத்துமீறல்களால் பாதிக்கப்பட்டவர்கள் அனைவருக்கும் குறிப்பாக பெண்கள், குழந்தைகள் மற்றும் பிற எளியக் குழுவினர் ஆகியோருக்கு நிவாரணம் வழங்குவதற்கான ஒரு திட்டத்தை இலங்கை அரசு செயல்படுத்த வேண்டும்.

பரிந்துரை 4 : அய்க்கிய நாடுகள் அவை

இலங்கையில் நடைபெற்ற போரின் இறுதிக்கட்டத்திலும் அதற்குப் பிறகும் வன்னியில் உள்ள மக்களின் நிலை குறித்த அய். நா.வின் எதிர்வினையைக் கருத்தில் கொண்டு கீழ்க்காண்பவற்றை அய். நா. செயல்படுத்த வேண்டும்.

அ) மனித உரிமை ஆணையம் கடந்த மே 2009இல் நிறைவேற்றிய சிறப்புத் தீர்மானத்தை (A/HRC/S-11/L.1/Rev.2) இந்த அறிக்கையின் அடிப்படையில் மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

ஆ) இலங்கையில் போர் நடைபெற்ற போதும் அதற்குப் பின்னாலான காலக்கட்டங்களிலும் அய். நா.வின் மனித நேய மற்றும் பாதுகாப்புத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட செயல்கள் குறித்துச் செயலாளர் நாயகம் மறு ஆய்வு நடத்த வேண்டும்.

இந்தப் பரிந்துரைகளில் சுருக்கமாக வரையறுக்கப்பட்டக் குழுவின் அறிக்கைக்கும், செயலாளர் நாயகத்திற்கான அதன் ஆலோசனைக்கும் இலங்கையின் பொது சமூகம் மற்றும் போரில் பாதிக்கப்பட்டவர்கள் ஆகியோரின் தீரம் மற்றும் இயல்பு வாழ்க்கைக்கு மீண்டும் திரும்புவதற்கான அவர்களின் திறன் ஆகியவையே உந்து சக்தியாக இருந்தன. இந்தப் பரிந்துரைகள் நடைமுறைப் படுத்தப்பட்டால் கூட்டுக் கடப்பாடுகளை நிறைவேற்றக்கூடிய நேர்மையானப் பொறுப்பேற்கும் நடைமுறைகளை அவை ஏற்படுத்துவதோடு, நீதி, மாண்பு மற்றும் அமைதியின் வழியில் இலங்கை நடந்திட வழிவகுக்கும். •



இலங்கையின் சட்ட அமைப்பு மற்றும் பொறுப்பேற்பதற்குரிய பிற உள்நாட்டு நிறுவனங்கள் ஆகிய வற்றையும் குழு ஆராய்ந்தது. தனது பணி நெடுக இலங்கையின் வரலாற்று மற்றும் அரசியல் சூழ்நிலை யையும் பொறுப்பேற் பதற்கான நடப்புச் சூழ்நிலையையும் குழு கருத்தில் எடுத்துக் கொண்டுள்ளது. இந்த அறிக்கையானது, குழுவின் பணியின் விளைவு ஆகும். இதில் செயலாளர் நாயகத் திற்கான ஆலோசனைகள் பரிந்துரைகளின் சுருக்கமாகக் கூறப் பட்டுள்ளன.


SRI LANKA
National capital
Provincial capital
Town, village
Provincial boundary
Main road
Secondary road
Railroad
Airport
INDIA
Gulf of Mannar
Bay of Bengal
INDIAN OCEAN
Laccadive Sea
Palk Strait
Palk Bay
Dhanushkodi
Talaimannar
Mannar
Puttalam
Trincomalee
Batticaloa
Kalpitiya
Anuradhapura
Polonnaruwa
Vavuniya
Jaffna
Kankesanturai
Point Pedro
Elephant Pass
Kilinochchi
Mullaitivu
Vengalam
Pesalai
Chilaw
Kurunegala
Kegalla
Matale
Kandy
Nuwara Eliya
Badulla
Colombo
Sri Jayewardenepura Kotte
Moratuwa
Panadura
Kalutara
Beruwela
Matugama
Galle
Matara
Hambantota
Ambalangoda
Tangalle
Kataragama
Monaragala
Ampara
Trincomalee
Batticaloa
Vavuniya
Mannar
Puttalam
Chilaw
Kurunegala
Kegalla
Kandy
Matale
Nuwara Eliya
Badulla
Monaragala
Ampara
Batticaloa
Trincomalee
Jaffna
Kilinochchi
Mullaitivu
Vavuniya
Anuradhapura
Polonnaruwa
Puttalam
Kalpitiya



ஈழப்போரின் பொழுது
இராணுவத்தின் துப்பாக்கிக் குண்டுகளால்
சல்லடையாக்கப்பட்ட தேவாலயம்

அறிமுகம்

கனா. குறிஞ்சி

விடுதலைப்புலிகள் நாட்டின் வடகிழக்கு கடலோரப் பகுதியில், வன்னியின் ஒரு சிறு மூலையில் முடக்கப்பட்ட போது இலட்சக் கணக்கான தமிழ்ப் பொதுமக்கள், இரண்டு பெரும் உறுதியான படைகளுக்கு இடையே தப்ப இயலாது சிக்கிக் கொண்டதை எச்சரித்த வாறும், வேதனை யுடனும், இவர்கள் பல மாதங்களாகக் கவனித்து வந்தனர்.



இலங்கையில் நடைபெற்ற போர் பெரும் சர்ச்சைக்கிடையே துயரத்துடன் முடிவுக்கு வந்தது. தங்கள் கொடூரத்திற்கு பெயர் போன தமிழீழ விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டதும் 27 ஆண்டு கால ஆயுதப் போர் முடிவுற்றதும், பல இலங்கையர் களையும் உலகில் உள்ள பிறரையும் நிம்மதி கொள்ள வைத்தது. என்ற போதும், நாட்டின் ஆயுதப் படையினர் இந்த வெற்றியை அடைவதற்கு பயன் படுத்திய வழிமுறைகள் குறித்து இலங்கையில் உள்ள பலரும் பிறரும் பெரும் வேதனைக்குள்ளாயினர்.

விடுதலைப் புலிகள் நாட்டின் வட-கிழக்கு கடலோரப் பகுதியில் வன்னியின் ஒரு சிறு மூலையில் முடக்கப்பட்ட போது இலட்சக்கணக்கானத் தமிழ்ப் பொது மக்கள், இரண்டு பெரும் உறுதியான படைகளுக்கு இடையே தப்ப இயலாது சிக்கிக் கொண்டதை எச்சரித்தவாறும் வேதனையுடனும் இவர்கள் பல மாதங்களாகக் கவனித்து வந்தனர். கொல்லப்பட்ட மற்றும் காயப்பட்ட பொதுமக்களின் எண்ணிக்கை மிக வேகமாக அதிகரித்தது. அரசுத் தரப்பின் குண்டு வீச்சில் பொதுமக்கள் சிக்கிக் கொண்டனர். அந்த இடத்தை விட்டு அவர்கள் தப்ப முயன்ற போது பெண்கள் குழந்தைகள் உட்பட பலரும் விடுதலைப் புலிகளால் சுடப்பட்டனர். மனித நேய உதவிகளுக்கான தேவைகள் அதிகரிக்க அதிகரிக்க அரசு மேலும் மேலும் அதைத் தடுத்தது. ஓர் அரசியல் தீர்வுக்கு இடைத் தரகு செய்த முயற்சிகளும், குறைந்த பட்சம் பொதுமக்கள் ஒரு பாதுகாப்பான இடத்திற்கு செல்ல வழிவகுக்கக்கூடிய அளவில் போரை நிறுத்துவதற்கான முயற்சிகளும் பயனற்றுப் போயின.

2) போர் நடைபெற்ற இடத்திலிருந்து நேர்மையான செய்திகளின் வரத்து அரிதாக இருந்த நிலையில் மே 19 2009 அன்று இலங்கையின் அதிபர் வெற்றியை அறிவிக்க வாய்ப்பு ஏற்படுத்திய இறுதி இராணுவ நடவடிக்கையில் உண்மையில் என்ன நடந்தது என்பதைக் கணிப்பது கடினமாயிருந்தது. போர் நடைபெற்ற இடத்திலிருந்து இடம் பெயர்ந்த ஏறத்தாழ 2,90,000 மக்கள் - இந்த எண்ணிக்கை அரசு இதற்கு முன் அங்கு இருப்பதாகக் கணித்த மக்கள் தொகையைவிட பல மடங்கு அதிகமானது - பாதுகாப்பு முகாம்களில் அடைக்கப்பட்டனர். உலகளாவிய செஞ்சிலுவைச் சங்கத்தின் பராமரிப்பில் ஏறத்தாழ 14 ஆயிரம் மக்கள் கடல் வழியாக காப்பாற்றப்பட்டனர். இவர்களில் பலர் பெரும் காயம்பட்டிருந்தனர்.

அனைத்துத் தரவுகளின் அடிப்படையிலும் உண்மையான சாவு எண்ணிக்கை என்பது மிகமிக அதிகமானது. ஆனாலும் இன்றைய நிலையில் கூட ஒரு சரியான எண்ணிக்கை கணிக்கப்படவில்லை. இந்த நிலையில் பொதுமக்களுக்கு எவ்விதத் திலும் பாதிப்பு ஏற்படுத்தாத மனித நேய மீட்பு நடவடிக்கையையே தான் மேற்கொண்டதாக அரசு தொடர்ந்து சொல்லி வருகிறது.

3) போர் முடிந்து மூன்றே நாட்களில் செயலாளர் நாயகம் இலங்கைக்குச் சென்றார். போர் நடைபெற்ற இடங்கள் மற்றும் போர் நடைபெற்ற இடத்திலிருந்து இடம் பெயர்ந்தவர்களின் முகாம்கள் ஆகியவற்றில் சில பகுதிகளை அவரே நேரடியாகச் சென்று பார்த்தார். அந்தப் பயணத்தின் இறுதியில் இலங்கை அதிபருடன் இணைந்து செயலாளர் நாயகம் ஒரு கூட்டறிக்கையை வெளியிட்டார். அந்த அறிக்கையில் இராணுவ நடவடிக்கைகளின் போது நடத்தப்பட்ட உலகளாவிய மனித நேய மற்றும் மனித உரிமைச் சட்ட மீறல்கள் குறித்து நடவடிக்கை எடுப்பதற்கானப் பொறுப்பேற்கும் நடைமுறையின் முக்கியத்துவத்தை செயலாளர் நாயகம் வலியுறுத்தினார். அதிபரும் அந்தச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக உறுதி அளித்தார். இக்கூட்டு அறிக்கையின் தொடர் நடவடிக்கையாகவே செயலாளர் நாயகம் வல்லுநர்கள் குழுவை நியமித்தார்.

4) போரின் இறுதிக் கட்டங்கள் தொடர்பாகக் கூட்டுக் கடப்பாடுகளை செயல்படுத்துவதற்கான வழிமுறைகளை செயலாளர் நாயகத்திற்கு ஆலோசனையாக கூறுவதே இக்குழுவிற்கு இடப்பட்ட பணியாகும். இந்த அறிக்கையில் உலகளாவியச் சட்ட மீறல்கள் குறித்த குற்றச்சாட்டுகளின் தன்மை மற்றும் வீச்சு ஆகியவற்றைக் குழு கணிக்கிறது. அத்துடன், இதற்கான இலங்கை அரசின் எதிர்வினையும் இவ்வறிக்கையில் உள்ளது. குறிப்பாக கற்ற பாடங்கள் மற்றும் இணக்கத்திற்கான ஆணையத்தை உலகளாவிய வரையறைகளின் கீழும் முன் அனுபவங்களோடு ஒப்பிட்டும் குழு ஆய்வு செய்கிறது. அத்துடன், இலங்கையின் சட்ட அமைப்பு மற்றும் பொறுப்பேற்பதற்குரிய பிற உள்நாட்டு நிறுவனங்கள் ஆகியவற்றையும் குழு ஆராய்ந்தது. தனது பணி நெடுக இலங்கையின் வரலாற்று மற்றும் அரசியல் சூழ்நிலையையும் பொறுப்பேற்பதற்கான நடப்புச் சூழ்நிலையையும் குழு கருத்தில் எடுத்துக்கொண்டுள்ளது. இந்த அறிக்கையானதுக் குழுவின் பணியின் விளைவு. இதில் செயலாளர் நாயகத்திற்கான ஆலோசனைகள் பரிந்துரைகளின் சுருக்கமாக கூறப்பட்டுள்ளன.



போரின் இறுதிக் கட்டத்தில் மிகப்பெரும் எண்ணிக்கையில் பொதுமக்கள் இறந்தது குறித்து தனது பங்கு மற்றும் பொறுப்பை ஏற்று, ஒரு வெளிப்படையான அறிக்கையை இலங்கை அரசு வெளியிட வேண்டும். போரின் இறுதிக் கட்டத்தில் மிக மோசமான அத்துமீறல்களால் பாதிக்கப்பட்டவர்கள் அனைவருக்கும் குறிப்பாக பெண்கள், குழந்தைகள் மற்றும் பிற எளிய குழுவினர் ஆகியோருக்கு நிவாரணம் வழங்கு வதற்கான ஒரு திட்டத்தை இலங்கை அரசு செயல்படுத்த வேண்டும்.



போருக்குப் பின்னான மறுவாழ்வு நடவடிக்கையில் ஈழத்தமிழர்களுக்கு இலங்கை அரசு 'கட்டித் தந்த' இருப்பிடத்தின் அவலத்தோற்றம்

1 பணிகள், அமைப்பு, செயல்திட்டங்கள்

கனா குறிஞ்சி

அ) குழுவின் உருவாக்கம்

இலங்கையில் நடைபெற்ற போரின் இறுதிக் கட்டங்களில் உலகளாவிய மனிதநேய மற்றும் மனித உரிமைச் சட்டங்களின் மீறல்கள் குறித்தக் குற்றச்சாட்டுகளுக்குப் பொறுப்பேற்பது குறித்து தனக்கு ஆலோசனை கூறுவதற்காக வல்லுநர்க் குழுவை அமைத்திருப்பது குறித்து, செயலாளர் நாயகம் 22 சூன் 2010 அன்று அறிவித்தார். குழுவின் பணி வரையரைகள் கீழ்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டன.

23 மே 2009 அன்று இலங்கையில் மேற்கொண்ட தனது பயணத்தின் இறுதியில் செயலாளர் நாயகம் இலங்கை அதிபருடன் இணைந்து ஒரு கூட்டறிக்கையை வெளியிட்டார். இவ்வறிக்கையில் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகளின் போது நடத்தப்பட்ட உலகளாவிய மனிதநேய மற்றும் மனித உரிமைச் சட்ட மீறல்கள் குறித்துப் பொறுப்பேற்பதற்கான நடைமுறையின் முக்கியத்துவத்தை செயலாளர் நாயகம் வலியுறுத்தினார். இலங்கை அதிபர் இது குறித்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக உறுதி அளித்தார். இந்த நேரத்தில் இந்த பின்னணியில்:

1) போரின் இறுதிக் கட்டங்கள் குறித்த மேற்சொன்ன கடப்பாடுகளை நிறைவேற்ற தனக்கு ஆலோசனை வழங்க ஒரு வல்லுநர்க் குழுவை அமைப்பது எனச் செயலாளர் நாயகம் முடிவு செய்தார்.

2) இக்குழுவின் நோக்கமானது அத்து மீறல் குற்றச்சாட்டுகளின் தன்மை மற்றும் வீச்சை கருத்தில் கொண்டு, பொறுப்பேற்பதற்கான நடைமுறை குறித்த கூட்டுக் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்குரிய சாத்தியங்கள், இதற்குப் பொருந்தக்கூடிய உலகளாவிய வரையறைகள் மற்றும் முன் அனுபவங்களுடனான ஒப்பீட்டு ஆய்வுகள் ஆகியவை குறித்துச் செயலாளர் நாயகத்திற்கு ஆலோசனை கூறவேண்டும்.

3) இதற்குப் பொருத்தமான மற்றும் தேவையான அனுபவங்களைக் கொண்ட 3 பேரைக் கொண்டதாக இக்குழு அமைக்கப்படும். இந்தக் குழு தனக்கேற்ற செயல் வடிவங்களை உருவாக்கிக் கொள்ளலாம். அய்.நா.வின் மனித உரிமைகள் உயர் ஆணையத்தின் அலுவலகத்தின் துணையோடு கூடிய ஒரு செயலகம் குழுவிற்கு துணை புரியும்.

4) தனது பணியைத் தொடங்கி நான்கு மாதங்களுக்குள் குழு செயலாளர் நாயகத்திடம் தனது அறிக்கையை அளிக்க வேண்டும்.

5) செயலாளர் நாயகத்தின் எதிர்பாராத செலவுகளின் கீழ்க் குழுவிற்கு நிதி ஒதுக்கப்படும்.

6) மர்சூகி தருஸ்மனை (இந்தோனேசியா) தலைவராகவும், ஸ்டிவன் ராட்னர் (அமெரிக்கா) மற்றும் யாஸ்மின் சூகா (தென்னாப்பிரிக்கா) ஆகியோரைக் குழுவின் உறுப்பினர்களாகவும் செயலாளர் நாயகம் நியமித்தார். செப்டம்பர் 16, 2010 அன்றுக் குழு தனது பணிகளை அதிகாரபூர்வமாகத் தொடங்கியது.

ஆ) குழுவின் பணி வரையறைகள்

1) குழுவின் ஒட்டுமொத்தப் பணி

7) அனைத்துக் குற்றச்சாட்டுகளின் உண்மையான தன்மை மற்றும் வீச்சின் அடிப்படையில் பொறுப்பேற்பது குறித்து மே 23, 2009 அன்று செயலாளர் நாயகமும் இலங்கையின் அதிபரும் வெளியிட்ட கூட்டு அறிக்கையைச் செயல்படுத்த இலங்கை இதுவரை எடுத்த மற்றும் எதிர்காலத்தில் எடுக்க வேண்டிய

போர் நடைபெற்ற இடத்திலிருந்து இடம் பெயர்ந்த ஏறத்தாழ 2,90,000 மக்கள் - இந்த எண்ணிக்கை அரசு இதற்கு முன் அங்கு இருப்பதாகக் கணித்த மக்கள் தொகையைவிடப் பல மடங்கு அதிகமானது - பாதுகாப்பு முகாம்களில் அடைக்கப்பட்டனர். உலகளாவிய செஞ் சிலுவைச் சங்கத்தின் பராமரிப்பில் ஏறத்தாழ 14 ஆயிரம் மக்கள் கடல் வழியாகக் காப்பாற்றப் பட்டனர். இவர்களில் பலர் பெரும் காயம் பட்டிருந்தனர்.

இக்குழுவின் நோக்க மானது, அத்து மீறல் குற்றச்சாட்டுகளின் தன்மை மற்றும் வீச்சை கருத்தில் கொண்டு பொறுப்பேற்பதற்கான நடைமுறை குறித்த கூட்டுக் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்குரிய சாத்தியங்கள், இதற்குப் பொருந்தக்கூடிய உலக ளாவிய வரையறைகள் மற்றும் முன் அனுபவங்க ளுடனான ஒப்பீட்டு ஆய்வுகள் ஆகியவை குறித்து செயலாளர் நாயகத்திற்கு ஆலோசனை கூற வேண்டும்.

நடவடிக்கைகள் குறித்து செயலாளர் நாயகத்திற்கு ஆலோசனை வழங்குவதே இக் குழுவின் பணியாகும். பெண்கள் குழந்தைகள் போன்ற எளிய வகுப்பினருக்கு எதிரான தனித்த மீறல்கள் உட்பட உலகளாவிய மனித நேய மற்றும் மனித உரிமைச் சட்ட மீறல்களுக்குப் பொறுப்பேற்பது குறித்த வழிமுறைகள் வரையறைகள் மற்றும் முன் அனுபவ ஒப்பீடுகள் ஆகியவற்றின் மீதே குழு கூடுதல் கவனம் செலுத்தியது. இந்த விசயத்தில் அரசுகள் மற்றும் உலகளாவிய அமைப்புகள் ஆகியவற்றின் தற்போதைய அணுகுமுறை குறித்து ஒரு முழுமையான தோற்றத்தைத் தர க் குழு முயன்றுள்ளது. பொறுப்பேற்பதற்குப் பொருந்தக்கூடிய இலங்கையின் உள்நாட்டு நடைமுறைகள் எந்த அளவிற்கு இலங்கையின் உள்நாட்டு மற்றும் உலகளாவிய கடப்பாடுகளை பூர்த்தி செய்கிறது என்பதையும் எந்த அளவிற்கு உலகளாவிய சிறந்த வழிமுறைகளை அவை கடைப்பிடிக்கின்றன என்பதையும் ஆராய்ந்துள்ளது. இறுதியாக போரின் இறுதிக் கட்டங்கள் குறித்துப் பொறுப்பேற்பது தொடர்பாக அரசின் தற்போதைய கொள்கைகளையும் அது கவனத்தில் கொண்டுள்ளது. கற்ற பாடங்கள் மற்றும் இணக்கத்திற்கான ஆணையம் உருவாக்கப்பட்டது உள்ளிட்டவையே இந்தக் கொள்கைகள்.

8) கடந்த காலத்தில் நிகழ்ந்த மனித உரிமைகள் மற்றும் மனித மாண்புகள் மீதான அத்து மீறல்களுக்கு தனி நபர்கள் மற்றும் நிறுவனங்கள், அரசியல், சட்ட, தார்மீக அடிப்படையில் பொறுப்பேற்பது குறித்த ஒரு விரிவான நடைமுறை யாகவேப் பொறுப்பேற்கும் நடைமுறையைக் குழு நோக்குகிறது. பொறுப்பேற்பது என்பது பாதிக்கப்பட்டவர்களுக்கு உண்மை, நீதி மற்றும் நிவாரணங்களை அடைவதை நிச்சயமாக உள்ளடக்கியதே. போருக்குப் பின்னான ஒரு நாட்டில் இது நீடித்த அமைதியை நோக்கிய ஒரு விரிந்த செயல் வடிவமே ஆகும். இந்த அறிக்கையின் பின் பகுதியில் பொறுப்பேற்பதற்கான கூறுகளைக் குழு விளக்குவதோடுப் பொறுப்பேற்பது குறித்த இலங்கை அரசின் கருத்துக்களையும் விளக்குகிறது.

9) பொறுப்பேற்பது குறித்த வரையறைகளையும் வழிமுறைகளையும் வெற்றிடத்தில் ஆராய முடியாது. அத்துடன் குழுவின் அடிப்படை ஆவணங்கள் குறித்த குறிப்பில் செயலாளர் நாயகத்திற்குக் குழு வழங்கும் ஆலோசனையானது. அத்துமீறல்கள் குறித்த குற்றச்சாட்டுகளின் தன்மை மற்றும் வீச்சைக் கருத்தில் கொண்டதாக இருக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. தன்மை மற்றும் வீச்சு என்பது அந்தக் குற்றச்சாட்டுகள் எந்த அளவிற்குச் சட்ட ரீதியாக தகுதி பெறுகின்றன என்பதை குறிப்பிடுகிறது. இதனால் குழுவானது, பல தரப்பிலிருந்தும் செய்திகளைச் சேகரித்து அதன் அடிப்படையில் குற்றச்சாட்டுகளின் வீச்சை நிர்ணயித்து அவற்றைச் சட்டபூர்வமாக ஆராய்ந்து அதன் பின்னரேப் பொறுப்பேற்பது குறித்த கூட்டறிக்கையை நடைமுறைப்படுத்துவது குறித்து செயலாளர் நாயகத்திற்கு சிறந்த ஆலோசனையை வழங்க இயலும். அய்.நா. வழக்கத்தில் புரிந்து கொள்ளப்பட்ட முறையில் உண்மை அறிதல் என்னும் சொற்றொடரைக் குழு செயல்படுத்தவில்லை. ஏன் எனில் சர்ச்சைக்குரிய விஷயங்கள் குறித்துக் குழு ஒரு முடிவுக்கு வரவில்லை. அத்துடன் அரசுகள் அரசு அல்லாத பங்கேற்பாளர்கள் அல்லது தனி நபர்களின் சட்டபூர்வ கடப்பாடுகள் அல்லதுப் பொறுப்புகள் குறித்து முடிவுக்கு வருவதற்குரிய ஓர் அதிகாரபூர்வ விசாரணையை அது மேற்கொள்ளவில்லை.

10) குற்றச்சாட்டுகள் குறித்தக் குழுவின் முடிவுகள் மற்றும் பொறுப்பேற்பது குறித்த நடைமுறைகள் ஆகியவற்றின் அடிப்படையில் இலங்கையில் பொறுப்பேற்பது குறித்துச் செயலாளர் நாயகம் பயன்படுத்துவதற்குரிய பரிந்துரைகளைக் குழு வழங்கியுள்ளது. குழுவின் பணிக் காலக்கட்டத்தில் குழுவிற்குக் கிடைத்த தரவுகள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் இந்த அறிக்கை அமைக்கப்பட்டுள்ளது.

11) தனது பணியை அது தொடங்கிய காலத்திலிருந்து செயலாளர் நாயகம் மற்றும் அய்.நா.வின் மூத்த அதிகாரிகள் குழு இறுதியில் செயலாளர் நாயகத்திற்குதான் ஆலோசனை வழங்க இருக்கிறது என்ற போதும், செயலாளர் நாயகத்திற்கு பதில் உரைக்கும் இடத்தில் உள்ளது என்ற போதும், தனக்கு இடப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதில் சுதந்திரமாகச் செயல்படும் அதிகாரம் குழுவிற்கு உள்ளது என்பதை மிகத் தெளிவாக விளக்கியுள்ளனர். மேலும் குழுவின் சுதந்திரம் குறித்து இலங்கை அரசிடமும் அய்.நா. அதிகாரிகள் தெளிவு படுத்தியுள்ளனர்.

2) குழுவின் கால அளவு

12) 'போரின் இறுதிக் கட்டங்கள்' குறித்த கூட்டறிக்கையை செயல்படுத்துவது குறித்துச் செயலாளர் நாயகத்திற்கு ஆலோசனை வழங்குவகே குழுவின் பணி என குறிக்கப்பட்டுள்ளது. உலகளாவியச் சட்டங்களின் மிக மோசமான அத்துமீறல்கள் பெரும்பாலும் நடைபெற்று இருக்கக்கூடியதாக கருதப்படும் இப்போரின் மிக உக்கிரமான மற்றும் வன்முறையான காலக் கட்டமான செப்டம்பர் 2008இல் தொடங்கி மே 2009 வரையினலான காலக் கட்டத்தில் குழு தனது கவனத்தை செலுத்தியது. செப்டம்பர் 2008 என்பது விடுதலைப் புலிகளின் தலைநகரமாகக் கருதப்பட்ட கிளிநொச்சி மீதான அரசப் படைகளின் இறுதித் தாக்குதலின் தொடக்கத்தைக் குறிக்கிறது. அத்துடன், வன்னியில் பணியாற்றக்கூடிய உலகளாவிய அமைப்புகளின் பன்னாட்டு பணியாளர்களின் பாதுகாப்பிற்கு இனி உத்திரவாதம் அளிக்க முடியாது என அரசு அறிவித்ததன் விளைவாக போரின் மீதான பன்னாட்டுக் கண்காணிப்பு முடிவுக்கு வந்ததும் இதே காலத்தில்தான். மே 2009 என்பது போரின் முடிவையும் விடுதலைப் புலிகளின் இராணுவத் தோல்வியையும் குறிக்கிறது.

13) சில நேரங்களில் தேவைக்கேற்ப மேற்குறிப்பிட்ட இறுதிக் கட்டங்களுக்கு முன்னரான காலக்கட்டத்தில் நடந்த நிகழ்வுகளைக் குறித்தும் குழு விவாதித் துள்ளது. கூடுதலாக போரின் இறுதிக் கட்டங்களுக்கு முன்னரே தொடங்கி போரின் இறுதிக்கட்டங்களோடு தொடர்புடைய மனித உரிமை மற்றும் மனித நேயச் சட்ட மீறல் குற்றச்சாட்டுகளையும் குழு அறிந்து வைத்திருந்தது. அவை உண்மையில் போர் முடிவுக்கு வந்த பிறகும் இன்று வரையில் தொடர்வதையும் குழு அறிந்து வைத்துள்ளது. நடைபெற்ற போரோடு நெருக்கமானத் தொடர்பில்லாத போதும், தற்போதும் தொடரக்கூடிய பிற மீறல்கள் குற்றச்சாட்டுகள் குறித்து, குறிப்பாக இலங்கையின் பிற பகுதிகளில் நடக்கும் மீறல்கள் குறித்துக் குழு கவனத்தில் கொள்ளவில்லை.

3) மீறல் குற்றச்சாட்டுகளின் அடிப்படை ஆவணங்கள்

14) குழுவின் செயற் திட்டங்கள் உலகளாவிய மனித நேய மற்றும் மனித உரிமைச் சட்ட மீறல்கள் குறித்தக் குற்றச்சாட்டுகளை பற்றி குறிப்பிடுகின்றன. மனித உரிமைச் சட்டங்களைப் பொருத்தவரையில் போரில் நேரடியாக பங்கு பெறாத மற்றும் போர் முறைகளில் பங்கு பெறாத மக்களை நடத்தும் முறைகள் குறித்து ஜெனீவா ஒப்பந்தங்களில் வரையறுக்கப்பட்ட மரபுகள் மற்றும் அதனோடு தொடர்புடைய உலகளாவியச் சட்டங்களின் வரையறைகள் ஆகியவற்றைக் குழு கருத்தில் கொண்டுள்ளது. மனித உரிமைச் சட்டங்களைப் பொறுத்த வரையில் இலங்கை அரசு அதிகாரபூர்வமாக ஏற்றுக்கொண்டுள்ள உலகளாவிய மனித உரிமை ஒப்பந்தங்களை கவனத்தில் கொண்டு அரசியல் மற்றும் சமூக உரிமைகள் மற்றும் பொருளாதார, சமூக மற்றும் பண்பாட்டு உரிமைகள் ஆகியவற்றையும் குழு கவனத்தில் கொண்டுள்ளது. இதன் மூலம் பெண்கள் மற்றும் குழந்தைகள் மீது ஆயுதப் போர் ஏற்படுத்தும் பாதிப்புக்கள் குறித்து பாதுகாப்பு அவையின் தீர்மானங்களை வலியுறுத்துவதோடு, இவை நீடித்த அமைதி மற்றும் இணக்கமான

இலங்கையில் நடை பெற்ற நீண்ட நெடிய ஆயுத மோதலில் ஈடுபட்டிருந்த இரு தரப்பினரின் செயல் களாலும், கொடூரமாகப் பாதிக்கப்பட்ட மக்களின் உரிமைகள் மற்றும் தேவைகளுக்கு குழு முக்கியத்துவம் அளித்துள்ளது.

குழுவின் பணி செயல் திட்டம் இரண்டு கட்டங்களாக அமைக்கப் பட்டது. முதல் கட்டத்தில் தனது பணி நோக்கத்தோடு தொடர்புடைய திறனோ, அனுபவமோ கொண்ட தனி நபர்கள் மற்றும் நிறுவனங்களிடம் இருந்து இலங்கையில் நடைபெற்ற போர் குறித்த பல்வேறு வகையான தரவுகளைக் குழு திரட்டியது. தனது பணியின் இரண்டாம் கட்டத்தில் குழு இந்த அறிக்கையைத் தயாரித்தது.



சூழல் ஏற்படுவதற்கு ஏற்படுத்தும் பாதிப்புக்களை அங்கீகரிக்கிறது. உலகளாவிய மனித நேய மற்றும் மனித உரிமைச் சட்டங்களோடுப் பொறுப்பேற்பது குறித்து பிற சட்டங்களையும் இலங்கையின் உள் நாட்டுச் சட்டம் ஏற்றுக் கொண்டிருக்கிற அளவோடு இலங்கையின் சட்டம் மற்றும் தொடர்புடைய அமைப்புக்கள் குறித்தும் குழு விவாதித்துள்ளது. இறுதியாக போரின் முக்கிய பங்கேற் பாளர்களான அரசு மற்றும் விடுதலைப் புலிகள் மீதான மீறல் குற்றச்சாட்டுகள் குறித்துக் குழு விவாதிக்கிறது.

இ) குழுவின் செயல் திட்டம்

15) குழு தனது சொந்த வழிமுறைகளை உருவாக்கிக் கொள்ளும் என்றும் செயலகம் அதற்கு துணையாக இருக்கும் என்றும் குழுவின் வரையறைகளில் குறிக்கப்பட்டுள்ளது. செப்டம்பர் 2010 இன் நடுப்பகுதியில் அதிகாரபூர்வமாகத் தனது பணியை அது தொடங்குவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னர் அய்.நா. அமைப்பில் பணியாற்றியவர்களைக் கொண்டு ஒரு செயலகம் அமைக்கப்பட்டது. கூடுதலாக தனக்கு ஆலோசனை வழங்குவதற்கு வெளியில் இருந்து சில ஆலோசகர்களையும் குழு செயலகத்திற்குள் இணைத்துக் கொண்டது. அய்.நா.வின் செயலகத்தில் உள்ள பல்வேறு தொடர்புடைய துறைகளின் பிரதிநிதிகளைக் கொண்ட நோக்குக் குழு ஒன்றும் வல்லுநர்க் குழுவிற்கு துணை புரிந்தது.

16) குழுவின் பணி செயல் திட்டம் இரண்டு கட்டங்களாக அமைக்கப்பட்டது. முதல் கட்டத்தில் தனது பணி நோக்கத்தோடு தொடர்புடைய திறனோ, அனுபவமோ கொண்ட தனி நபர்கள் மற்றும் நிறுவனங்களிடம் இருந்து இலங்கையில் நடைபெற்ற போர் குறித்த பல்வேறு வகையான தரவுகளைக் குழு திரட்டியது. இத்தகைய தரவுகளில் சில எழுத்து வடிவில் அளிக்கப்பட்டன. அரசு அய்.நா. அல்லது அரசு சாரா அமைப்புகளின் அறிக்கைகள் போன்ற வெளிப் படையான ஆவணங்களாகவும், குழுவிடம் தனிப்பட்ட முறையில் இரகசியமாக அளிக்கப்பட்ட ஆவணங்களாகவும் அவை இருந்தன. பிற தரவுகள், குழுவும் அதன் செயலகமும் நடத்திய பெரும் எண்ணிக்கையிலான சந்திப்புகளின் வாயிலாகத் திரட்டப்பட்டன. அய்.நா. மற்றும் பன்னாட்டு அமைப்புகளின் அதிகாரிகள் மற்றும் அரசு மற்றும் அரசு சாரா அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் போரின் இறுதிக் கட்டத்தில் நிகழ்ந்த நிகழ்வுகளில் நேரிடையாகப் பாதிக்கப்பட்ட தனி நபர்கள் ஆகியோரைக் குழு சந்தித்தது. தனது பணியின் இரண்டாம் கட்டத்தில் குழு இந்த அறிக்கையைத் தயாரித்தது. வெளிப்படையாக வெளியிடுவதற்கு ஏற்ற வகையில் இந்த அறிக்கை எழுதப்பட்டது.

17) விருப்பமுள்ள அமைப்புகள் மற்றும் தனி நபர்களிடமிருந்து எழுத்து பூர்வமான வாக்கு மூலங்களை பெற தயாராக இருப்பதாக, பொதுமக்களைப் பரவலாக சென்றடையக்கூடிய வகையில் ஒரு பொதுவான அழைப்பைக் குழு விடுத்தது. அக்டோபர் 21, 2010 அன்றுக் குழுவின் பணியாளர் தலைவர் இலங்கையின் நிரந்தர பிரதிநிதிக்கு இந்த முடிவு குறித்து ஆலோசனை கூறவேண்டிக் கடிதம் எழுதினார். அதனுடன் இந்த அறிக்கையின் நகலையும் இணைத்து அந்த அறிக்கை அய்.நா.வின் இணையத் தளத்தில் வெளியிடப்படும் என்ற குறிப்பையும் எழுதி அனுப்பினார். ஆங்கில அறிக்கையானது 27 அக்டோபர் 2010 அன்று வெளியிடப்பட்டது. தொடர்ந்து சிங்கள மற்றும் தமிழ் அறிக்கைகளும் வெளியிடப்பட்டன. இந்த வாக்கு மூலங்களை அளிப்பதற்கான இறுதி நாளாக முதலில் டிசம்பர் 15, 2010 குறிக்கப்பட்டது. பின்னர் அது டிசம்பர் 31 2010 வரை நீடிக்கப்பட்டது. டிசம்பர் 31, 2010 வரையில் ஏறத்தாழ 2300க்கு மேற்பட்ட நபர்கள் அனுப்பிய நான்காயிரத்திற்கும் அதிகமான வாக்குமூலங்களைக் குழு பெற்றது.

18) வாக்குமூலங்களில் பெருந்தொகையானவை குறிப்பிட்ட வகையிலான

அத்துமீறல்கள் பற்றியும் அல்லது போரின் இறுதிக்கட்டங்களில் குறிப்பிட்ட காலக்கட்டத்தில் நடந்தவை குறித்தும், மற்றும் மனித உரிமைகள் மற்றும் மனித நேயச் சட்டங்கள் மீறப்பட்டவை குறித்த குறிப்பான தனி நபர் புகார்களாகவும் இருந்தன. நிகழ்வுகள் அல்லது பாதிக்கப்பட்டவர்களின் பட்டியல்கள், நிழற்படங்கள், மற்றும் ஒளிப்படங்கள் ஆகியவற்றைக் கொண்ட ஆவணத் தரவுகளும் பெறப்பட்டன. குறிப்பிட்ட எண்ணிக்கையிலான சார்பற்ற ஆய்வறிக்கைகள் பொதுவான தரவுகள், போக்குகள் அல்லது சூழலின் சில குறிப்பிட்டத் தன்மைகள் பற்றிய ஆய்வுகளை அளித்தன. ஊடக அறிக்கைகள் இணைய தள முகவரிகள் மற்றும் வரலாற்று சான்றுகள் போன்றவை கொண்ட பொதுவான தரவுகளும் முன்பே வெளியிடப்பட்ட தரவுக் களஞ்சியத்தில் இருந்து அளிக்கப்பட்டன. இறுதியாக, க் குழு உடனடியாகச் செயல்பட வேண்டும் என்றும் குறிப்பான பரிந்துரைகளை அளிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தக்கூடிய ஆனால் எந்த அடிப்படை தரவுகளோ அல்லது ஆய்வோ இணைக்கப்படாத வேண்டுகோள்களும் மிகப்பெரும் எண்ணிக்கையில் பெறப்பட்டன.

19) குழுவிற்கு அனுப்பப்பட்ட இந்த வாக்குமூலங்களைத் தனித்தனியாக ஆராய இயலாத சூழ்நிலையில், குற்றச்சாட்டுகளின் நம்பகத்தன்மையை தீர்மானிப்பதற்கு இவற்றை நேரிடையான அடிப்படையாகக் குழுவால் ஏற்க முடியவில்லை. எனினும் சில குறிப்பிட்ட வழக்குகளில் பிற தரவுகளுக்கு துணைச் சேர்ப்பதாக இந்த வாக்குமூலங்கள் அமைந்தன. குழுவின் ஆய்வுக் காலக்கட்டத்திற்கு முந்தைய காலக்கட்டத்தில் நிகழ்ந்த நிகழ்வுகள் குறித்து பெரும் எண்ணிக்கையிலான வாக்குமூலங்கள் பெறப்பட்டன. அவை போரின் இறுதிக் கட்டங்கள் குறித்து மட்டுமல்லாது, இன்னும் விரிவாகக் கடந்த கால நிகழ்வுகளை கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியத்தை வலியுறுத்தின.



டிசம்பர் 31, 2010 வரையில் ஏறத்தாழ 2,300க்கும் மேற்பட்ட நபர்கள் அனுப்பிய நான்காயிரத்திற்கும் அதிகமான வாக்குமூலங்களைக் குழு பெற்றது. வாக்கு மூலங்களில் பெருந்தொகை யானவை குறிப்பிட்ட வகையிலான அத்து மீறல்கள் பற்றியும் அல்லது போரின் இறுதிக் கட்டங் களில் குறிப்பிட்ட காலக்கட்டத்தில் நடந்தவை குறித்தும், மனித உரிமைகள் மற்றும் மனித நேயச் சட்டங்கள் மீறப்பட்டவை குறித்த குறிப்பான தனி நபர் புகார்களாகவும் இருந்தன.

ஈ) இலங்கை அரசுடனான தொடர்பாடல்கள்

20) தனது பணியைத்தொடங்கிய நாள் முதல், குழுவானது, தனக்கு இடப்பட்ட பணிகளை நிறைவேற்றுவது குறித்து விவாதிக்கவும், பொறுப்பேற்பது குறித்த சிக்கல்களை அரசு எவ்வாறு அணுகுகிறது என்பதுக் குறித்து அறிந்து கொள்ளவும், இலங்கை அரசுடன் தொடர்புகளை ஏற்படுத்த விரும்பியது. உண்மையில், 'குழுவானது அரசுக்கான ஒரு வள ஆதாரமாக செயல்பட வேண்டும்' என்ற தன் நம்பிக்கையைக் குழு மற்றும் அரசு இருவரிடமும் செயலாளர் நாயகம் வெளியிட்டிருந்தார். அரசு உள்நாட்டில் உருவாக்கப்பட்ட 'பொறுப்பேற்கும் நடைமுறை' எனக் கற்ற பாடங்கள் மற்றும் இணக்கத்திற்கான ஆணையத்தை (க. பா. இ. ஆணையம்) வெளிப்படையாக குறிப்பிட்டிருந்த காரணத்தால், குழுவானது, குறிப்பாக இந்த ஆணையத்துடன் தொடர்பு கொள்வது பயனளிக்கும் என்ற தனது கருத்து நிலையில் தொடர்ந்து உறுதியாக நின்றது. அதே வேளையில் பொறுப்பேற்பது குறித்து பிற உள்நாட்டு நிறுவனங்களுக்கும் முக்கியப்பங்கு இருப்பதை உணர்ந்து, அரசின் மூலமாக அவர்களுடனும் தொடர்புகளை ஏற்படுத்த விளைந்தது. இலங்கை அரசு மற்றும் க.பா.இ ஆணையம் ஆகியவற்றுடன் இணைந்து செயல்படக் குழு எடுத்த முயற்சிகள், இணைப்பு 2 இல் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

21) அந்த இணைப்பில் உள்ளபடி, செப்டம்பர் 2010 இன் தொடக்கத்தில் இருந்து தனது பணி நிறைவு பெற்ற காலம்வரையில் குழுவானது, இலங்கை அரசுடன் இணைந்து செயல்பட வாய்மொழியாகவும் எழுத்துபூர்வமாகவும் தொடர் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது தெரியவருகிறது. குழுவின் பணி வரையறையானது செயலாளர் நாயகத்திற்கு ஆலோசனைக் குழுவாக இருப்பதேயன்றி அது எவ்வகையான விசாரணையையும் மேற்கொள்ளவில்லை என்பதைக் குழுவும், அய்.நா அதிகாரிகளும் தொடர்ந்து அரசுக்குத் தெளிவுபடுத்தி வந்துள்ளனர். பல மாதங்களாகக் குழுவுடன் தொடர்பற்று இருந்த அரசு, பின்னர்க்

குழுவை இலங்கைக்கு அழைத்தது. ஆனால், தனது நிலையை உடனே மாற்றிக்கொண்டு அத்தகைய பயணத்திற்கான எந்த வழிவகைகளையும் குழுவுடன் விவாதிக்க மறுத்தது. க.பா.இ ஆணையத்திடம் 'பிரதிநிதித்துவங்கள் மட்டுமேக் குழுவால் மேற்கொள்ள முடியும்' என வலியுறுத்தி டிசம்பர் 2010 இல் அரசு எழுதிய கடிதத்திற்குப் பின்னரும், இலங்கைக்கு பயணம் செய்வதற்கான தனது விருப்பத்தை, குழு மீண்டும் வலியுறுத்தியது. ஆனால் சனவரி 2011 இன் தொடக்கத்தில் இந்த வேண்டுகோளையும் அரசு மறுத்தது. அத்துடன் அந்தப் பயணம் குறித்து மேற்கொண்டு எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப் படவில்லை. மாறாக, க.பா.இ ஆணையம் மற்றும் பிற உள்நாட்டு வழிமுறைகள் குறித்தக் குழுவின் கேள்விகளுக்குப் பதில் அளிக்கும் வகையில், சனவரியின் இறுதியில் நியூயார்க்குக்கு ஒரு சிறிய பிரதிநிதிகள் குழுவை இலங்கை அரசு அனுப்பியது. இக்குழுவில் க.பா.இ ஆணையத்தின் உறுப்பினர்கள் எவரும் சேர்க்கப்படவில்லை.

இலங்கைக்குப் பயணம் செய்து 'கற்ற பாடங்கள் மற்றும் இணக்கத்திற்கான ஆணையம்' மற்றும் பொறுப்பேற்பது குறித்த நடைமுறைகளில் ஈடுபட்டுள்ள அரசு அலுவலர்கள் ஆகியோரைச் சந்திக்க இலங்கை அரசு அனுமதிக்காதது குறித்து குழு தனது வருத்தத்தை வெளியிட்டுள்ளது.

22) இலங்கைக்குப் பயணம் செய்து க.பா.இ. ஆணையம் மற்றும் பொறுப்பேற்பது குறித்த நடைமுறைகளில் ஈடுபட்டுள்ள அரசு அலுவலர்கள் ஆகியோரைச் சந்திக்க இலங்கை அரசு அனுமதிக்காதது குறித்துக் குழு தனது வருத்தத்தை வெளியிட்டுள்ளது. இலங்கைக்குப் பயணம் செய்வது என்பது அதன் பணிகளுக்கு அவசியமானது இல்லை என்ற போதும், அத்தகைய பயணமானது க.பா.இ ஆணையம் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோரைச் சந்திக்கவும், அவர்களுடைய பார்வையில் செய்திகளை நேரடியாக அறியவும், தங்களுடைய அனுபவங்களையும் ஆற்றலையும் அவர்களுடன் பகிர்ந்துகொள்ளவும் ஒரு வாய்ப்பு கிடைத்திருக்கக்கூடும். (இருந்த போதும் அதிகாரபூர்வ பார்வை எவ்வாறு இருந்தது என்பதைப் பிற வழிகளில் குழுவானது அறியமுடிந்தது) எழுத்துபூர்வமான பதில்களையும் இலங்கை அதிகாரிகளுடன் நேருக்குநேரான உரையாடலுக்கான வாய்ப்பையும் குழுவானது வரவேற்ற போதும் உண்மையில் குழு விரும்பியது இத்தகைய தொடர்புகளை அல்ல.

உ) குழுவின் ஆவணங்களின் இரகசியக் காப்புத்தன்மை

23) சிலகுறிப்பிட்ட நிகழ்வுகளில் கிடைக்கப்பெற்ற தரவுகள் முழுமையாக இரகசியமாகப் பாதுகாக்கப்படும் என்ற உறுதியின் கீழ் மட்டுமேக் குழுவானது எழுத்துபூர்வ மற்றும் வாய்மொழி ஆவணங்களைப் பெற்றது. 'நுட்பமான தரவுகள், பகுத்தறிதல் மற்றும் கையாளுதல்' குறித்த செயலாளர் நாயகத்தின் அறிக்கையில் (ST/SGB/2007/6) குறிப்பிடப்பட்டுள்ள வரையறைகளை இந்த ஆவணங்களுக்குப் பொருத்தலாம் என, சட்டப்பணிகளுக்கான அலுவலகம் ஓர் அதிகாரபூர்வ சட்ட அறிக்கை மூலம் உறுதிப்படுத்தியது. செயலாளர் நாயகத்தின் இந்த அறிக்கையானது, ஆவணங்களை 'கண்டிப்பாக இரகசியமானது' என்ற பிரிவின் கீழ் பகுத்தறிவதன் மூலம் 20 ஆண்டு காலத்திற்கு அந்த ஆவணங்களை எவரும் காணமுடியாதவாறான நிலையை ஏற்படுத்துகிறது. 20 ஆண்டுகளுக்குப் பின் அதை மீண்டும் பரிசீலித்து அதை வெளியிடுவதோ அல்லது பாதுகாப்பாகவே வைப்பதோ முடிவு செய்யப்படும். மேலும் சட்டப்பணிகளுக்கான அலுவலகமானதுக் குழுவின் பணிகளின் தேவை மற்றும் சூழலைப் பொருத்து தொடர் பயன்பாட்டுக்கான முற்றிலும் இரகசியக்காப்பு குறித்த உத்தரவாதத்தைக் குழு வழங்கலாம். இதன் விளைவாகக் குழுவின் அனைத்து, ஏறத்தாழ அனைத்து, ஆவணங்களும் முற்றிலும் இரகசியமானது என்ற பிரிவின் கீழ் பகுக்கப்பட்டு சில வழக்குகளில் அதை எதிர்காலத்தில் பயன்படுத்துவது குறித்த கூடுதல் பாதுகாப்பு வழிமுறைகளும் ஏற்படுத்தப்பட்டன.



கிளிநொச்சியில் இருந்தவரலாற்றுச் சிறப்புமிக்க மாவீரர் துயிலுமிடத்தைத் தகர்த்துவிட்டு, அதே இடத்தில் சிங்கள இராணுவத்தின் வெற்றிச் சின்னமாக மாற்றப்பட்ட இடம்

2

போரின் வரலாறு, அரசியல் பின்னணி

கண. குறிஞ்சி

இலங்கையில், 1978 ஆம் ஆண்டு அரசமைப்புச் சட்டமானது, அரசை ஓர் ஒற்றைத்தன்மை உடையதாகவும், அரசின் தலைவராகவும் அரசாங்கத்தின் தலைவராகவும் ஆயுதப் படைகளின் தலைமைத் தளபதியாகவும் செயல் படக்கூடிய அதிபரிடம், அளவுக்கதிகமான, மய்யப்படுத்தப்பட்ட அதிகாரங்கள் குவிந்திருக்கும் வகையிலும் எழுதப் பட்டுள்ளது. கூடுதலாக, தனது விருப்பத்திற்குரிய துறையின் தலைவராகவும் அதிபர் செயல்படலாம்.



ஏறத்தாழ 30 ஆண்டுகளாக நடந்துவந்த கொடூரமான ஆயுதப்போருக்குப்பின் மே 19, 2009 அன்று இலங்கை அரசு விடுதலைப்புலிகள் மீதான தனது வெற்றியை அறிவித்தது. போரின் இறுதிக்கட்டங்களில் உலகளாவிய மனிதநேய மற்றும் மனித உரிமை சட்டங்கள் மீறப்பட்டதாக எண்ணிலடங்காக் குற்றச்சாட்டுகள் எழுந்தன. இதுகுறித்துச் செயலாளர் நாயகத்திற்கு ஆலோசனை வழங்குமாறு வல்லுநர்க் குழு கேட்டுக்கொள்ளப்பட்டது. இலங்கையின் சிக்கலான சர்ச்சை மிகுந்த அரசியல் வரலாற்றை பகுத்தாராய்வதுக் குழுவின் பணி அல்ல. ஆனாலும் போரின் இறுதிக்கட்டங்களை ஒரு சரியான அரசியல் மற்றும் சமூகப்பின்னணியில் நிர்ணயிப்பதற்கு போரின் சில வரலாற்றுக் கூறுகளை அறிந்துகொள்வதும், கவனத்தில் எடுப்பதும் அவசியம் எனக் குழு கருதுகிறது.

25) இலங்கை ஒரு சனநாயக சோசலிசக்குடியரசு. அது இந்தியாவின் தென்கிழக்குக் கடற்கரையிலிருந்து 18 மைல்கள் தொலைவில் இந்துமாக்கடலில் அமைந்துள்ள ஒரு தீவு நாடாகும். இனம், மொழி மற்றும் மத அடிப்படையில் பன்முகம் கொண்ட, இரண்டு கோடியே பத்து இலட்சம் மக்கள் தொகை கொண்ட நாடு இலங்கை. இவற்றில் 74 விழுக்காட்டினர் சிங்களர்கள். சிங்களம் பேசும் இவர்கள் பெரும்பாலும் பவுத்தர்களாக உள்ளனர். 18 விழுக்காட்டினர் தமிழர்கள். இவர்கள் பெரும்பாலும் இந்து மதத்தினராக உள்ளனர் (இதில் 13 விழுக்காடு இலங்கைத் தமிழர்களும், 5 விழுக்காடு இந்தியத் தமிழர்களும் அடங்கும்). 7 விழுக்காட்டினர் முஸ்லீம்களாக, மூர்கள் மற்றும் மலாய் இனத்தவர்களாக உள்ளனர். இவர்கள் இஸ்லாம் மதத்தைப் பின்பற்றுவதோடு பெரும்பாலும் தமிழ் பேசுபவர்களாகவே உள்ளனர். ஒரு விழுக்காட்டினர் சிறிய இனக்குழுக்களான பர்கர்கள் மற்றும் வேதாக்கள் போன்ற இனங்களைச் சேர்ந்தவர்களாக உள்ளனர். சில சமூகங்களில் குறைந்த விழுக்காட்டில் கிறித்தவர்கள் உள்ளனர்.

26) முதலில் போர்ச்சுக்கீசியர்களால், பின்பு டச்சுக்களால், இறுதியாக பிரிட்டிஷாரால் காலனிய ஆதிக்கத்துக்கு உட்பட்டு ஏறத்தாழ நான்கு நூற்றாண்டுகளுக்குப் பின்னர் பிரிட்டிசாரிடமிருந்து 1948 இல் இலங்கை விடுதலை பெற்றது. விடுதலை பெற்றது முதல் சிங்களர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட அரசாக, சிங்களர்கள் ஆதிக்கம் செலுத்தக்கூடிய, பல்வேறு இனக்குழுக்களைச் சேர்ந்த உறுப்பினர்களைக் கொண்ட ஓர் உயர்தட்டுக் குழுவினால் இலங்கை நிர்வகிக்கப்படுகிறது. இலங்கையில் சனநாயகத்தின் முக்கிய வெளிப்பாடுகளான அதிகாரப்பரவல், பலகட்சி முறை, துடிப்பான தேர்தல் நடைமுறைகள் ஆகியவற்றோடு, முக்கியமான மனிதவளச் சாதனைகளான ஆண் பெண் இருதரப்பினரும் கல்வியறிவு பெற்றவர்களாக இருத்தல், குழந்தை சாவுகளின் எண்ணிக்கை குறைவாக இருத்தல் போன்றவை, இலங்கையின் நெடிய போர்வரலாற்றிற்கு பெரிதும் முரண்பட்டு நிற்கின்றன.

அ) இனமும் அரசியலும்

27) இலங்கையின் ஆயுதப்போர் என்பது அரசியல் மற்றும் இன அடிப்படையில் நிலவும் ஆழமான வேறுபாடுகளின் வன்முறையான வெளிப்பாடே ஆகும். சிங்களர்கள் மற்றும் தமிழர்களின் இருத்தலுக்கான போராட்டமாக அது நடைபெற்றது.

1) இனவழி தேசியத்தின் எழுச்சி

28) விடுதலைக்குப்பின் குடிமக்களின் பன்முகப்பண்பாட்டுத் தன்மையை வெளிப்படுத்தக்கூடிய, அரவணைக்கும் தன்மை உடைய ஓர் அரசைக் கட்டி எழுப்பும் நீண்டகால கொள்கைகளுக்கு மாறாக, வகுப்பு மற்றும் இன உணர்வுகளைத் தூண்டிவிடக்கூடிய குறைந்தகால அரசியல் இலாபங்களுக்கு,

முன்னணி அரசியல்வாதிகள் முக்கியத்துவம் அளித்தனர். இந்தப் பரிமாணங்கள் மற்றும் பாகுபாடுகளின் காரணமாக ஓர் ஒருங்கிணைந்த தேசிய அடையாளத்தை உருவாக்குவது என்பது பெரிதும் பாதிக்கப்பட்டது. இந்நிலையில் சிங்கள பவுத்த தேசியவாதம் வேரூன்றி, பவுத்தத்தின் புனித நாடாக இலங்கையையும் அதன் பாதுகாவலர்களாக சிங்களர்களுக்கு ஒரு மதிப்புமிகுந்த இடத்தையும் உருவாக்கியது. இந்தக் கூறுகள் காரணமாக அரசு மற்றும் நிர்வாகத்தின் தன்மை மற்றும் இனக்குழுக்களுக்கு இடையிலான உறவுகள் ஆகியவை இலங்கையில் சிதிலமடையத் தொடங்கின.

29) 1970 களில் தென்னிலங்கையைச் சேர்ந்த இளம் சிங்களர்கள் வர்க்க அடிப்படையில் தாங்கள் புறக்கணிக்கப்பட்டதான கருத்திலும், வடக்கைச் சேர்ந்த தமிழ் இளைஞர்கள் இன அடிப்படையில் தாங்கள் புறக்கணிக்கப்பட்டதான கருத்திலும், தனித்தனியாக அரசுக்கு எதிராக போராட்டங்களைத் தொடங்கி, அவை அரசுக்கெதிரான ஆயுதப் போராட்டங்களாக உருவெடுத்தன. இந்த இயக்கங்களை, தேசியப்பாதுகாப்புக்கான அச்சுறுத்தலாக அரசு கருதியது. அதன் பின்னணியில் உள்ள அரசியல் காரணங்களை ஆராயாமல், அரசதிகாரத்தைப் பயன்படுத்தி இந்தப் போராட்டங்களை ஒடுக்க முனைந்தது. இதில், காணாமல் போதல், சட்டவிரோக் கொலைகள் மற்றும் துன்புறுத்தல்கள் ஆகியவைகள் அடங்கும்.

30) 1950 களில் நடந்த தமிழர்களுக்கு எதிரான வன்முறைகள், பாகுபாடுகள் நிறைந்த அரசின் கொள்கைகள் ஆகியவற்றின் காரணமாக தமிழர்களின் உரிமைப் போராட்டமானது, காந்திய முறையில் வன்முறையற்ற போராட்டமாகத் தொடங்கி, அதன் தொடர்ச்சியாக தமிழ் ஆயுக் கிளர்ச்சிகளாக எழுந்து, தனி நாட்டுக் கோரிக்கையை மய்யப்படுத்தின. *1970* களில், விடுதலைப்புலிகள் இயக்கம் உட்பட பல தமிழ் அரசியல் ஆயுதக்குழுக்கள் எழுந்தன. ஒன்றிணைந்த இலங்கை நாட்டுக்குள்ளான தீர்வு என்ற நிலையிலிருந்து தனிநாடு என்ற நிலைக்குக் கோரிக்கைகள் வடிவம் பெற்றன. சிங்களத் தேசியவாதிகளால் தமிழர்கள் வன்முறையால் ஒடுக்கப்பட்டதன் காரணமாக இப்போராட்டங்களின் கூர்மை அதிகரித்தது.

பாதுகாப்புப்படையினருக்கு எதிரான தமிழ் ஆயுதக்குழுக்களின் தாக்குதல் களும் அதிகரித்தன. *1977, 1979, 1981* மற்றும் *1983* ஆகியவற்றில் நடந்த தமிழர்களுக்கு எதிரான வன்முறைகள் அரசின் உறுப்புகளால் ஊக்குவிக்கப்பட்டதாகவும், சில நிகழ்வுகளில் நேரடியாக அவர்களாலேயே நடத்தப்பட்டதாகவும் இருந்தன. இதில் *1983* இல் நடைபெற்ற தமிழர்களுக்கு எதிரான தாக்குதல்கள் வன்முறையின் உச்சத்தை எட்டின. சிங்கள வன்முறைக்கும்பல்கள், அரசுப் பேருந்துகளில் கொண்டு செல்லப்பட்டு, அதிகாரபூர்வ வாக்காளர் பட்டியலைப் பயன்படுத்தித் தமிழர்களை அடையாளம் கண்டு, தாக்க முற்பட்டனர். ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர்.

பெருமளவிலான இடப்பெயர்தலும், தமிழர்களின் உடைமைகள் அழிக்கப் பட்டமையும், வெளிநாட்டிற்குத் தமிழர்கள் புலம் பெயர்ந்ததும் இதன் விளைவாக நடைபெற்றது. வட மாகாணமான யாழ்ப்பாணத்தில் 13 இலங்கை இராணுவத் தினர் விடுதலைப்புலிகளால் கொல்லப்பட்டதற்கு எதிர்வினையாகவே இந்தத் தாக்குதல்கள் நடைபெற்றன என்று அரசு உறுதிபடக்கூறியது. *1983* க்கு முன்பே இருதரப்பிலும் வன்முறை நிகழ்வுகள் தொடங்கிவிட்ட போதிலும், *1983*தான், பொதுவாக இலங்கை அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான போரின் தொடக்கமாகக் கருதப்படுகிறது.



பிப்ரவரி 2008 இன் நடுப்பகுதியில், தீவில் பல பகுதிகளில் விடுதலைப்புலிகள் தற்கொலைத் தாக்குதல் களை மேற்கொண்ட நிலையில், போர் நடைபெற்ற பகுதிகளுக்கு வெளியே இருந்த பொதுமக்கள், போரின் பாதிப்பை நுகரும் நிலை ஓர் எச்சரிக்கையான அளவை எட்டியது. அரசப்படைகளின் வான் குண்டு வீச்சுகளும், ஆழ ஊடுருவி நடத்தும் தாக்குதல்களும், போர் நடைபெற்ற பகுதிகளில் இருந்த பொதுமக்களைப் பெரிதும் பாதித்தன.

2) தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம்

31) 1983 இனக்கலவரத்திற்குப்பின், தமிழர்கள் மீதான ஒடுக்குமுறை அதிகரித்த

1950 களில் நடந்த தமிழர்களுக்கு எதிரான வன்முறைகள், பாகு பாடுகள் நிறைந்த அரசின் கொள்கைகள் ஆகிய வற்றின் காரணமாக – தமிழர்களின் உரிமைப் போராட்டமானது, காந்திய முறையில் வன்முறையற்ற போராட்டமாகத் தொடங்கி, அதன் தொடர்ச்சியாக தமிழ் ஆயுதக் கிளர்ச்சிகளாக எழுந்து, தனி நாட்டுக் கோரிக்கையை மய்யப்படுத்தின.

நிலையில், தமிழ்ச் சமூகமானது மேலும் ஆயுதம் ஏந்தியது. ஆயுதக்குழுக்களின் எண்ணிக்கையும் அளவும் வேகமாக அதிகரித்தன. தமிழ்நாட்டில் பயிற்சி அளிக்கவும் அணி திரளவும் இருந்த வாய்ப்பான சூழலை இவர்கள் பயன்படுத்திக் கொண்டனர். தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம், தமிழ் விடுதலை இயக்கமாகத் தொடங்கி, காலப்போக்கில் தமிழ் ஆயுதக் குழுக்களிடையே அதிக ஒழுக்க மானதும், அதிக தேசியச் சிந்தனை உடையதாகவும் உருவெடுத்து, 1980களின் மத்தியில் தனிநாட்டு விடுதலைக்கொள்கையை கொண்ட வீச்சான ஒரு படையாக எழுந்தது.

இக்காலக்கட்டத்தில், விடுதலைப் புலிகள் இயக்கம் வன்முறையான வழிமுறைகளைக் கையாண்டு, பிற தமிழ்க் குழுக்களை அடக்குவதற்கு வன்முறையைப் பயன்படுத்தி, தமிழ்மக்களின் ஒரே பிரதிநிதியாகத் தன்னைத்தானே நியமித்துக்கொண்டது. அதன் அரிய தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் முழுமையான விசுவாசத்தையும் தியாகத்தையும் எதிர்பார்த்தார். ஒரு மதம் மாதிரியான உணர்வினை உருவாக்கினார். இயக்கத்திற்குள்ளே எதிர்ப்பு என்பது சகித்துக்கொள்ள முடியாதது. அரசுடன் இணைந்து பணிபுரிவதாகவோ அல்லது ஒத்துழைப்பு நல்குவதாகவோ சந்தேகத்துக்குரியவர்கள், துரோகிகள் முத்திரை குத்தப்பட்டு, பெரும்பாலும் கொல்லப்பட்டனர். தமிழர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட விடுதலைப்புலிகளின் வன்முறைச்செயல்கள் தமிழ்ச் சமூகத்தி னிடையே ஆழமான அச்சத்தையும் சந்தேகத்தையும் ஏற்படுத்தியது.

32) இராணுவ, அரசியல் மற்றும் பொதுச் சமூகத்திற்கு எதிராக நவீன தற்கொலை குண்டுத்தாக்குதலை விடுதலைப்புலிகள் இயக்கம் முதன்முறையாக அறிமுகப் படுத்தியது. விடுதலைப்புலிகளின் தற்கொலை ஆயுததாரிகள் ஆண் பெண் இருபாலினராகவும் இருந்தனர். இந்தியப் பிரதமர் இராஜீவ்காந்தி *(1991)* மற்றும் இலங்கை அதிபர் இரணசிங்க பிரேமதாச *(1993)* உட்பட பல இலங்கை அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மிதவாத தமிழ் அரசியல் தலைவர்கள் ஆகியோர்களின் கொலைக்கு இவர்களே காரணமாயினர். பொருளாதார மற்றும் மத முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் பொது மக்களுக்குப் பெரும் பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் தற்கொலைத் தாக்குதல் களையும் அது நடத்தியது.

விடுதலைப்புலிகள் இயக்கம் விலக்கிவைக்கும் அரசியலை நடத்தியது. *1990*இல் வடக்கிலிருந்த முஸ்லீம்களை அவர்களது சொந்த இடங்களிலிருந்து வெளியேற்றியது. தனது கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய எல்லையோரப் பகுதிகளில் உள்ள கிராமங்களில் வாழ்ந்த சிங்களர்களையும் முஸ்லிம்களையும் படுகொலை செய்தது. தமிழ் மக்களைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க விடுதலைப்புலிகள் இயக்கம் வன்முறை, அச்சுறுத்தல் மற்றும் அச்சம் ஆகியவற்றை அதிகதிகமாகப் பயன்படுத்தியது. சிறுவர்கள் மற்றும் சிறுமிகள் ஆகிய இருபாலினரையும் உள்ளடக்கிய குழந்தைப்போராளிகளைக் கட்டாயமாகப் படையில் இணைத்து பயன்படுத்தியதற்கு விடுதலைப்புலிகள் இயக்கம் பெயர்பெற்றது. அதன் வழிமுறைகள் காரணமாக கனடா, அய்ரோப்பிய யூனியன், இந்தியா, இங்கிலாந்து மற்றும் வடஅமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகளில் அந்த இயக்கம் தடைசெய்யப்பட்டது. செப்டம்பர் *11 2001*க்குப்பிறகு அதன்மீதான தடைகள் அதிகரித்தன.

33) 1990 களில் தொடங்கி மே *2009* வரை இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் பெரும்பகுதிகளை விடுதலைப்புலிகள் இயக்கம் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. நிலப்பகுதிகளை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கு அரசுப்படைகளுக்கும் விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கும் இடையே நடந்த தொடர் போர்களின் காரணமாக விடுதலைப்புலிகள் கட்டுப்பாட்டுப் பகுதிகளின் சரியான எல்லைகள் மாறிக்கொண்டே இருந்தன. ஓர் அதிகாரபூர்வமற்ற

அரசாகத் தன்னை முன்னிறுத்திக்கொண்டு அது செயல்பட்டது. இந்த நிலையில் விடுதலைப்புலிகள் இயக்கம் நன்கு வடிவமைக்கப்பட்ட ஒரு பன்னாட்டுக் கொள்கையை வகுத்தது. தனது கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளில் சொந்தமாக காவல்துறை, சிறைகள், நீதிமன்றங்கள், குடிவரவுத் துறை, வங்கிகள் மற்றும் சில சமூகத் தொண்டு அமைப்புகள் ஆகியவற்றை அமைத்தது. அத்துடன் தரை, விமானம் மற்றும் கடற்படைகளைக்கொண்ட நன்கு நவீனப்படுத்தப்பட்ட இராணுவத்தை அது உருவாக்கியது. கொரில்லா மற்றும் மரபு இராணுவ வழி முறைகளையும் அது கையாண்டது. இத்துடன் மிகப்பரந்த உளவுவலைப் பின்னலையும் அது கொண்டிருந்தது.

34) இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்த தமிழர்கள், ஏறத்தாழ பத்து இலட்சம் மக்கள், உலகெங்கிலும் பரவியுள்ளனர். 1980களில் அரசின் வன்முறை மற்றும் ஒடுக்குமுறையின் காரணமாக, பெரும் எண்ணிக்கையிலான தமிழர்கள் வெளி நாடுகளில் அடைக்கலம் புகுந்தனர். வேறு சிலர் பொருளாதார வாய்ப்புகளுக்காக வெளிநாடுகளுக்குச் சென்றனர். போரின் காலம் முழுவதிலும் புலம் பெயர்ந்த தமிழர்கள் முக்கிய பங்கை ஆற்றியுள்ளனர். விடுதலைப் புலிகளுக்கு, எவ்வித விமர்சனமும் அற்ற முழுமையான ஆதரவை சிலர் நல்கினர். அவர்களின் ஆதரவானது, பெரும் நிதியை அளிப்பது மற்றும் போரின் காலம் முழுவதிலும் விடுதலைப்புலிகள் செய்த எந்த ஒரு தவறையும் மறுத்து அவர்களுக்காக வாதாடுவது என்ற முறையில் அமைந்தது.

எனினும் எல்லா ஆதரவும் தன்னிச்சையாக எழுந்தது அல்ல. இலங்கையின் கடல் எல்லையைத் தாண்டியும், இலங்கைத் தமிழர்கள் அகதிகளாகப் பெரும் எண்ணிக்கையில் வாழும் நாடுகளிலும், விடுதலைப்புலிகள் இயக்கம், கட்டாயப் படுத்துதல் உள்ளிட்ட தனது செயல்வழிமுறைகளை விரிவுபடுத்தியது. இதன் மூலம் ஒரு சொந்த நாட்டிற்கான தமிழர்களின் தாகம் குறித்த தனது விளக்கத்தையும் அதை அடையும் வழிமுறைகளையும் அவர்களிடம் திணித்தது. மேலும், எவ்வகையான விமர்சனத்தையும் அது சகித்துக்கொள்ளவில்லை. விடுதலைப் புலிகளின் வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களின் குரல்களுக்கு எந்த ஒரு வாய்ப்பையும் அது வழங்கவில்லை.

ஆ) சட்டத்தின் ஆட்சி மற்றும் மனித உரிமைகள் தேய்ந்து அழிதல்

35) இலங்கையில், 1978 ஆம் ஆண்டு அரசமைப்புச் சட்டமானது, அரசை, ஓர் ஒற்றைத்தன்மை உடையதாகவும், அரசின் தலைவராகவும் அரசாங்கத்தின் தலைவராகவும் ஆயுதப்படைகளின் தலைமைத்தளபதியாகவும் செயல்படக் கூடிய அதிபரிடம், அளவுக்கதிகமான, மையப்படுத்தப்பட்ட அதிகாரங்கள் குவிந்திருக்கும் வகையிலும் எழுதப்பட்டுள்ளது. கூடுதலாக, தனது விருப்பத்திற் குரிய துறையின் தலைவராகவும் அதிபர் செயல்படலாம். தற்போது அதிபர் இராஜபக்சே, 5 துறைகளை தலைமைப்பொறுப்பேற்று நடத்துகிறார்: பாதுகாப்பு, நிதி மற்றும் திட்டமிடுதல், துறைமுகங்கள் மற்றும் விமானப்போக்குவரத்து, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை. உச்சநீதிமன்றம் மற்றும் மேல்முறையீட்டு நீதிமன்றங்களின் தலைவர் மற்றும் நீதிபதிகளையும் நியமிக்கும் அதிகாரத்தை அதிபருக்கு அரசமைப்புச் சட்டம் வழங்குகிறது. மேலும், நெருக்கமான குடும்ப உறுப்பினர்களை நியமனம் செய்வதற்கு அதிபருக்கு எவ்விக் கட்டுப்பாடும் இல்லை. அதில், தற்போதைய அரசானது, குடும்பஆட்சி நடத்துகிறது எனற விமர்சனத்துக்கு ஆளாகியுள்ளது.

36) அவசரகால நிலையை தொடர்ந்து நீட்டித்து வருவதும், அரசமைப்புச் சட்டத்தால் அனுமதிக்கப்பட்ட அவசரகாலச் சட்டங்களை பயன்படுத்துவதும், அதிபரின் அதிகாரத்தை மேலும் வலுப்படுத்தியது. அத்துடன் நீதித்துறை உள்ளிட்ட அரசின் நிறுவனங்களையும் அமைப்புகளையும் கூடுதலாக அரசியல்படுத்தியது.

1977, 1979, 1981 மற்றும் 1983 ஆகியவற்றில் நடந்த தமிழர்களுக்கு எதிரான வன்முறைகள் – அரசின் உறுப்புகளால் ஊக்கு விக்கப்பட்டதாகவும், சில நிகழ்வுகளில் நேரடியாக அவர்களாலேயே நடத்தப்பட்டதாகவும் இருந்தன. இதில் 1983 இல் நடைபெற்ற தமிழர் களுக்கு எதிரான தாக்கு தல்கள் வன்முறையின் உச்சத்தை எட்டின.

இதன் விளைவாக, சுதந்திரமான தடுப்புகளும் சமன்நிலையும் வலுவிழந்தது. 1989 இல் ஒரு சிறிய இடைவெளியைத் தவிர 1983 முதல் 2001 வரை அவசரகால நிலை தொடர்ந்து இருந்து வந்துள்ளது. மீண்டும் 2005 முதல் தற்போது வரை தொடர்கிறது. தற்போது நடைமுறையில் உள்ள அவசரகால நிலைச்சட்டமும், 1979இன் பயங்கரவாதத் தடுப்புச்சட்டமும் இணைந்து அரசுக்கு அசாதாரணமான அதிகாரத்தை வழங்கி, அதிகாரத்தைத் தவறாகப்பயன்படுத்துதல் மற்றும் உரிமைமீறல்கள் ஆகியவை குறித்து நீதிமன்றங்கள் விசாரிப்பதற்கான சட்ட எல்லையைக் குறுக்கியுள்ளது. பிற சட்டங்களும், மோசமான உரிமை மீறல்களைச் சரியானபடி கவனிக்கவேண்டிய அரசின் கடமையை பெரிதும் வலுவிழக்கச் செய்துள்ளன.

1980களில் அரசின் வன்முறை மற்றும் ஒடுக்குமுறையின் காரணமாக, பெரும் எண்ணிக்கையிலான தமிழர்கள் வெளிநாடு களில் அடைக்கலம் புகுந்தனர். வேறு சிலர் பொருளாதார வாய்ப்பு களுக்காக வெளிநாடு களுக்குச் சென்றனர். போரின் காலம் முழுவதிலும் புலம் பெயர்ந்த தமிழர்கள் முக்கியப் பங்கை ஆற்றியுள்ளனர். விடுதலைப்புலிகளுக்கு, எவ்வித விமர்சனமும் அற்ற முழுமையான ஆதரவை சிலர் நல்கினர்.

குறிப்பாக 1982 இன் பாதுகாப்புச் சட்ட எண் 20 (ஆகஸ்ட் 1977 முதல் 16 டிசம்பர் 1988 வரை இச்சட்டம் நடைமுறையில் இருந்தது) இச்சட்டமானது எந்த ஓர் அமைச்சர், குடிமை அல்லது இராணுவ அதிகாரி அல்லது அவர்களின் வழிகாட்டுதலின்கீழ் செயல்படக்கூடிய எந்த ஒரு தனிநபர், ஆகியோரின் எந்த ஒரு செயல்குறித்தும், அது சட்டபூர்வமானதோ அல்லது சட்ட விரோதமானதோ, சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நல்லெண்ணத்தில் செயல்படுத்தப்பட்டதோ இல்லையோ அல்லது பொதுநன்மை கருதி செயல்படுத்தப்பட்டதோ, எதுவாயினும், இவர்கள் மீது எவ்வித சட்ட நடவடிக்கையையும் எடுப்பதைத் தடுக்கிறது. விதிவிலக்குகளை அதிகாரபூர்வமாக ஆக்கியதன் மூலம் பாதுகாப்புச் சட்டமானது மிக ஆபத்தான முன்மாதிரியாக அமைந்துள்ளது.

37) காணாமல் போதல், சட்டவிரோக் கொலைகள் மற்றும் துன்புறுத்தல்கள் உள்ளிட்ட மனிதஉரிமை மீறல்களுக்கு இணைவான ஒரு சூழலை இந்த நடவடிக்கைகள் ஏற்படுத்தின. இந்த மீறல்களுக்கு எதிராக முறையான சட்ட மற்றும் அரசமைப்புச் சட்ட பாதுகாப்புகள் இருந்த போதும் இவை அனைத்தும் பெரும்பாலும் தண்டிக்கப்படாமலேயே போயின. வன்புணர்வு, பாலியல் வன்கொடுமைகள் மற்றும் பாலியல் சுரண்டல் உள்ளிட்ட பாலின அடிப்படை யிலான வன்முறைகளும், சட்டப்பாதுகாப்பை மீறியும் நடைபெற்றுள்ளன. வலுக்கட்டாயமாக காணாமல் போக்கப்பட்டவர்கள் மற்றும் பிற கொடூரமான மனித உரிமை மீறல்கள் ஆகியவற்றின் தன்மை குறித்து விசாரிக்க அதிபரால் அமைக்கப்பட்ட பல ஆணையங்கள், சில வழக்குகளில், முக்கியமான உண்மை அறியும் செயல்களைச் செய்தன.

ஆனால் ஒன்றுகூட பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியை வழங்கவோ அல்லது திட்டமிடப்பட்ட ஒரே வகையிலான மீறல்களின் தன்மைகுறித்துக் கேள்வி எழுப்பவோ இல்லை. இந்த அடிப்படையில் விசாரணையிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டமைக்கு எதிராகப்போராடவோ அல்லது உண்மையை நிலை நிறுத்தவோ, நீதியைப் பெறவோ, இந்த விசாரணை ஆணையங்கள் ஒரு சரியான கருவியாக இருக்கவில்லை.

38) அரசு நிறுவனங்களை வலுப்படுத்தவும் அவர்களின் சுதந்திரத்தை உறுதிப்படுத்தவும் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் 2001ஆம் ஆண்டின் 17 ஆவது சட்டத்திருத்தத்தை மேற்கொள்ள வழிசெய்தன. அதிபரின் அதிகாரத்தின்மீது அரசமைப்புச் சட்டக் கண்காணிப்பை மேற்கொள்வதை நோக்கமாகக்கொண்டு, காவல்துறை, தேர்தல், மனிதஉரிமை, லஞ்சம், நீதி மற்றும் பொதுப்பணி ஆணையங்களின் நியமனத்தைக் கண்காணிக்க ஒரு சுதந்திரமான அரசமைப்புச் சட்டக் குழுவை அது உருவாக்கியது. கூடுதலாக, இக்குழு, சட்டத்துறையின் உயர் அதிகாரிகள், சட்டத்துறை நிர்வாக ஆணையம் மற்றும் அட்டர்னி ஜெனரல் ஆகியோரின் நியமனத்தையும் அங்கீகரிக்கவேண்டும். ஆனால் இச்சட்டத்திருத் தமானது ஒப்பீட்டளவில் செயல் பயனற்றுப் போனது. ஏனெனில், அண்மைக் காலத்தைய அதிபர்கள் எவ்வித கூர்மையான எதிர்வினையுமின்றி இதனைப்

புறந்தள்ள முடிந்தது. செப்டம்பர் 2010 இல் 17 ஆவது சட்டத்திருத்தத்தைச் செயலற்றதாக ஆக்கிய 18 ஆவது சட்டத்திருத்தத்தை நாடாளுமன்றம் அங்கீகரித்தது. இதன்மூலம் சுதந்திரமான கண்காணிப்புகள் மற்றும் சமன்களையும் நடவடிக்கைகளையும் நீக்கி, அதிபரின் பதவிக்கால வரையறையை ஒழித்தது.

39) முப்பதாண்டுக் காலமாக நடந்த போர், சுதந்திரமான நிறுவனங்களின் வீழ்ச்சி மற்றும் சட்டவிதிமுறைகள் வலுவிழந்தது ஆகியவற்றின் காரணமாக அனைத்துக் குடிமக்களின் மனித உரிமைகளும் பெரிதும் பாதிக்கப்பட்டன. விடுதலைப் புலிகளுக்கு எதிரான தனது இறுதித்தாக்குதலுக்கு அரசு தயாரான வேளையில் மனித உரிமைகள் மேலும் தேய்ந்து அழிந்தன. சுதந்திரமான செய்தி சேகரிப்பு, விமர்சனங்கள் மற்றும் மனிதநேய உதவிகளுக்குக்கூட பெரிதும் கட்டுப்பாட்டை விதிக்கக்கூடிய பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 2006ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இராணுவ நடவடிக்கைகள் குறித்துச் செய்தி வெளியிடும் ஊடகவியலாளர்களுக்குக் கூடுதலான கட்டுப்பாட்டு விதிமுறைகளை விதித்து இராணுவ நடவடிக்கைகளை எதிர்மறையாகச் சித்தரிப்பதை ஒரு குற்றச்செயலாக ஆக்கி, பாதுகாப்புச் செயலாளர் ஓர் அறிக்கையை வெளியிட்டார்.

மூத்த மற்றும் புகழ்பெற்ற பத்திரிகையாளர்கள் மீதான தாக்குதல்கள், காணாமல் போதல் மற்றும் கொலைகள் உள்ளிட்ட ஊடகங்கள் மீதான கூடுதல் அழுத்தமானது பெரிய அளவில் ஊடகங்கள் தாங்களே செய்திகளைத் தணிக்கை செய்து வெளியிடும் நிலைக்குத் தள்ளியது. உள்ளூர் செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீது அடையாளம் காணாத இடங்களில் இருந்து வந்த அச்சுறுத்தல்கள் காரணமாக சிலர் நாட்டைவிட்டு வெளியேறும் நிலை ஏற்பட்டது. பன்னாட்டுப் பணியாளர்கள் மற்றும் அரசு சாரா அமைப்புகளுக்கு விசா மறுக்கப்பட்டமை மற்றும் திரும்பப் பெறப்பட்டமை ஆகியவை அவர்களைப் பாதுகாப்பற்ற நிலையில் வைத்ததோடு, சிலர் தங்களது நிலைகளில் ஒரு சமரசத்திற்கு வரவேண்டிய சூழலும் ஏற்பட்டது.

இ) போரின் இறுதிக்கட்டங்களை நோக்கி

40) போரின் இறுதிக்கட்டங்கள் என்று சொல்லக்கூடிய சூழலை உருவாக்குவதில் மூன்று கூடுதல் காரணிகள் வெளிப்படையாக இருந்தன.

41) முதலாவதாக குறுகிய காலமே நீடித்த சமாதான நடவடிக்கைகள். 2000ஆவது ஆண்டு, இலங்கை அரசும் விடுதலைப்புலிகள் இயக்கமும் நார்வேயைத் தங்களுக்கு இடையேயான அமைதிப் பேச்சுக்களுக்கு உதவ கேட்டுக்கொண்டதை அடுத்து இந்நடவடிக்கைகள் தொடங்கின. பிப்ரவரி 2002 இல் இரு தரப்பினரும் போர்நிறுத்த ஒப்பந்தத்திற்கு ஒப்புக்கொண்டனர். தொடர்ந்து நேருக்குநேரான பேச்சுவார்த்தைகளைத் தொடங்கும் முன்னர், ஒருவருக்கொருவர் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப, விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த பெண்கள் மற்றும் தென்னிலங்கையைச் சேர்ந்த பெண்களைக் கொண்ட, பாலினம் குறித்த ஒரு துணைக் குழுவை அமைத்தது உள்ளிட்ட பல நடவடிக்கைகளை எடுத்தனர்.

இந்நடவடிக்கைகளை, பன்னாட்டுச் சமூகம், 2003 ஆம் ஆண்டு நடைபெற்ற மறுகட்டமைப்பு மற்றும் வளர்ச்சிக்கான டோக்கியோ மாநாட்டின் ஊடாக ஆதரித்தது. டோக்கியோ இணைத்தலைமை நாடுகள் என்று அழைக்கப்பட்ட அய்ரோப்பிய யூனியன், ஜப்பான், நார்வே மற்றும் வட அமெரிக்கா ஆகியவற்றின் மூலம் பன்னாட்டுச் சமூகம் அரசியல் முன்னெடுப்புக்களைக் கண்காணித்தது. போர்நிறுத்த ஒப்பந்தத்தின் இருதரப்பினரும் உருவாக்கிய ஒரு சுதந்திரமான பன்னாட்டு அமைப்பான இலங்கைக் கண்காணிப்புக்குழு சனவரி 2008 வரைகளத்தில் நடந்த அத்துமீறல்களைக் கண்காணித்தது. அதன்பிறகு அரசு அதைக் கலைத்தது. தொடர்ந்து போர்நிறுத்த ஒப்பந்தத்தையும் அதிகாரபூர்வமாக இரத்து செய்தது. ஏப்ரல் 2003 இல் விடுதலைப்புலிகள் இயக்கம் தன்னிச்சையாக போர்



வலுக்கட்டாயமாகக் காணாமல் போக்கப் பட்டவர்கள் மற்றும் பிற கொடூரமான மனித உரிமை மீறல்கள் ஆகியவற்றின் தன்மை குறித்து விசாரிக்க அதிபரால் அமைக்கப் பட்ட பல ஆணையங்கள், சில வழக்குகளில், முக்கியமான உண்மை அறியும் செயல்களைச் செய்தன. ஆனால், ஒன்றுகூட பாதிக்கப் பட்டவர்களுக்கான நீதியை வழங்கவோ அல்லது திட்டமிடப்பட்ட ஒரே வகையிலான மீறல்களின் தன்மை குறித்துக் கேள்வி எழுப்பவோ இல்லை. இந்த அடிப்படையில், விசாரணையிலிருந்து விதிவிலக்கு அளிக்கப் பட்டமைக்கு எதிராகப் போராடவோ அல்லது உண்மையை நிலை நிறுத்தவோ, நீதியைப் பெறவோ, இந்த விசாரணை ஆணையங்கள் ஒரு சரியான கருவியாக இருக்கவில்லை.

நிறுத்த ஒப்பந்தத்தை விட்டு விலகியது. அதன்பிறகு, 2006 இல் மோதல்கள் மீண்டும் தொடங்கியதை அடுத்து காரணமாகப் போர்நிறுத்த ஒப்பந்தம் பெயரளவில் மட்டுமே நீடித்தது. ஆனால் பெயரளவில் நீடித்தபோதும் அதன் இருப்பு, இலங்கைக் கண்காணிப்புக்குழுவின் பன்னாட்டு உறுப்பினர்கள் அங்கு தொடர்ந்து இருப்பதற்கு வாய்ப்பை ஏற்படுத்தியது.

முப்பதாண்டுக் காலமாக நடந்த போர், சுதந்திர மான நிறுவனங்களின் வீழ்ச்சி மற்றும் சட்டவிதி முறைகள் வலுவிழந்தது ஆகியவற்றின் காரணமாக, அனைத்துக் குடிமக்களின் மனித உரிமைகளும் பெரிதும் பாதிக்கப்பட்டன. விடுதலைப்புலிகளுக்கு எதிரான தனது இறுதித்தாக்குதலுக்கு அரசு தயாரான வேளையில், மனித உரிமைகள் மேலும் தேய்ந்து அழிந்தன. சுதந்திரமான செய்தி சேகரிப்பு, விமர்சனங்கள் மற்றும் மனிதநேய உதவிகளுக்குக்கூட பெரிதும் கட்டுப்பாட்டை விதிக்கக்கூடிய பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

42) இன அடிப்படையிலான பிளவு மற்றும் சகிப்புத்தன்மை அற்ற சூழல் ஆகியவை தொடர்வதற்குக் காரணமாயிருந்த, இரு தரப்பிலும் நிலவிய தீவிரவாத மனநிலையே, இதற்குமுன் மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகளைத் தோல்வியுறச் செய்ததைப் போலவே, இந்தச் சமாதான முயற்சியையும் தோல்வியுறச் செய்தது. போர்நிறுத்த ஒப்பந்தத்தில் கையெழுத்து இடுவதைத் தொடக்கத்தில் இருந்தே சிங்கள இனவாதிகள் எதிர்த்துவந்தனர். கூடுதலாக ஏப்ரல் 2003 இல் ஒப்பந்தத்தைவிட்டு வெளியேறுவது என விடுதலைப்புலிகள் எடுத்த முடிவும் வடகிழக்கில் ஒரு தன்னாட்சி அதிகார அமைப்பை இடைக்காலமாக உருவாக்குவதற்காக அது தன்னிச்சையாக விடுத்த அழைப்பும், சிங்கள தேசியவாத எதிர்ப்புகளை மேலும் தீவிரப்படுத்தியது. மேலும் ஆழமான தேசியவாத அடிப்படையைக் கொண்ட அரசியல் கட்சிகளின் ஒரு கூட்டமைப்பை அய்க்கிய மக்கள் விடுதலைக்கூட்டணி உருவாக்க வழிவகுத்தது. இந்தக் கூட்டணி 2005 இல் மிகக்குறைந்த வாக்கு வேறுபாட்டில் வென்றது. தற்போதைய அதிபர் இராஜபக்சே தலைமையிலான இக்கூட்டணி இறுதிக்கட்டப்போரை நடத்து வதற்கான அரசியல் ஆதரவை வழங்கியது.

43) இரண்டாவதாக, மார்ச் 2004 இல் விடுதலைப்புலிகளின் கிழக்குப்பகுதி தளபதி, கர்னல் கருணா என்று அறியப்பட்ட விநாயகம் முரளிதரன் தன்னுடன் 5000 போராளிகளை அழைத்துக்கொண்டு விடுதலைப்புலிகளிடமிருந்து பிரிந்து சென்றார். பின்னர் அவர் தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் என்ற பெயரில் ஒரு பதிவுசெய்யப்பட்ட அரசியல் கட்சியை உருவாக்கினார். இக்கட்சி ஓர் ஒட்டுக்குழுவாகச் செயல்பட்டுப் பின்னர் ஆளும் கூட்டணியின் அங்கமாக மாறியது. விடுதலைப்புலிகள் இயக்கத்தில் ஏற்பட்ட இப்பிளவானது இயக்கத்தின் மீது மிக மோசமான பாதிப்பை ஏற்படுத்தியது. விடுதலைப்புலிகள் தலைமையில் கருணாவுக்கு வழங்கப்பட்ட இடம் காரணமாக மிகவும் இரகசியமான அமைப்பாக இருந்த விடுதலைப்புலிகள் இயக்கத்தைக் குறித்து அவருக்கு ஆழமான அறிவு இருந்தது. இறுதிக்கட்டத் தாக்குதலுக்கான தயாரிப்பில் அரசு இதனைத் திறம்படப் பயன்படுத்திக்கொண்டது. அதனுடன் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் ஒட்டுக்குழுவினரும், பிற முன்னாள் தமிழ் ஆயுதக் குழுக்களின் உறுப்பினர்களும் விடுதலைப்புலிகளால் பாதிக்கப்பட்டிருந்தவர்களும் விடுதலைப்புலிகளுக்கு எதிரான இராணுவப் பிரச்சாரங்களில் அரசால் பயன்படுத்தப்பட்டதோடு தமிழ்ப் பொதுமக்களிடையே உளவு வேலைகளுக்கும் பயன்படுத்தப்பட்டனர்.

44) மூன்றாவதாக, பன்னாட்டுக்காரணிகளும் முக்கியமானவையே. 'பயங்கர வாதத்திற்கு எதிரான உலகளாவிய போரின்' பகுதியாக வட அமெரிக்காவும் பிற மேற்கத்திய அரசுகளும் முன்னணி அரசுகளோடு இணைந்து பயங்கரவாத அமைப்புகளையும் அதன் நாடு கடந்த வலைப்பின்னலையும் முறியடிக்க மேற்கொண்ட முயற்சிகள் விடுதலைப்புலிகளின் மீது மோசமான பாதிப்பை ஏற்படுத்தின. ஏற்கனவே பல நாடுகளால் பயங்கரவாத அமைப்பாக தடைசெய்யப்பட்ட நிலையில், உள்நாட்டிலும் உலக அளவிலும் விடுதலைப்புலிகள் இயக்கம் பெரிதும் தனிமைப்படுத்தப்பட்டது. இலங்கையின் வெளிநாட்டு அமைச்சராக இருந்த ஒரு தமிழரை 2005 ஆம் ஆண்டு அது படுகொலை செய்ததானது இயக்கத்திற்கு உலகளவில் இருந்த பிம்பத்தின் மீதான இறுதி அடியாக விழுந்தது. இலங்கை அரசு இந்த சூழலுக்குள் பணியாற்றி, பிற நாடுகளுடன் ஒரு கூட்டணியை ஏற்படுத்தி, விடுதலைப் புலிகளின் மீதான இறுதித்தாக்குதலுக்குத் தயாரானது.

45) 2005 தேர்தலுக்குப் பிறகு அரசும் விடுதலைப்புலிகளும் போர்நிறுத்த ஒப்பந்தத்தின் கூறுகளை மதிப்பதாக உறுதி அளித்திருந்தன. ஆனால் இரு தரப்பினருமே தங்களது இராணுவச் சீண்டல்களைத் தொடர்ந்ததின் விளைவாக, ஆகஸ்ட் 2006 இல், முழுஅளவிலான ஆயுதப்போர் தொடங்கியது. ஆயிரக் கணக்கான உழவர்களுக்குப் பாசனநீரை வழங்கிய மாவில் ஓயா அணைக்கட்டின் மதகுகளை விடுதலைப்புலிகள் அடைத்தபோது, அரசு, கிழக்கு மாகாணத்தை விடுதலைப்புலிகளிடமிருந்து கைப்பற்ற, ஆயிரக்கணக்கான படையினரை அனுப்பி, பெரும் தாக்குதலை நடத்தியது. கடந்த 20 ஆண்டுகளில் முதன்முறையாக, சூலை 2007இல், அரசு, கருணாக் குழுவினரின் உதவியுடன் கிழக்கு மாகாணம் முழுவதையும் தனது முழுக்கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தது.

46) கிழக்கு மாகாணத்தில் அரசுப்படைகளின் இராணுவ வெற்றி மற்றும் சனவரி 2008 இல் வடக்கு மாகாணத்தின் சில பகுதிகளில் அது பெற்ற வெற்றி, ஆகியவற்றின் காரணமாக வன்னிப்பகுதியின் பெரும் பகுதிகள் மட்டுமே விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் எஞ்சியிருந்தன. குறிப்பாக, வன்னிப் பகுதியின் 4 மாவட்டங்களில் அதன் 'அங்கீகரிக்கப்படாத தலைநகர'மான கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகியவை விடுதலைப்புலிகளின் முழுக்கட்டுப்பாட்டில் இருந்தன. மேலும் வவுனியாவின் வடக்குப்பகுதி, வடமேற்கு மன்னார் மற்றும் யாழ்ப்பாண தீபகற்பத்தின் சில துண்டுகள் ஆகியவையும் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தன.

47) கிழக்கு மாகாணத்தில் பெற்ற இராணுவ வெற்றியால் ஊக்கம்பெற்று ஏறத்தாழ 2 ஆண்டுகள் திட்டமிட்ட தயாரிப்பின் பிறகு சனவரி 16, 2008 இல் முழுமையான இராணுவ நடவடிக்கையை மேற்கொள்வதாக அரசு அறிவித்தது. போர்நிறுத்த ஒப்பந்தத்தை உடைத்து இராணுவத் தீர்வை மேற்கொள்வது மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என அய்.நா வின் செயலாளர் நாயகம், டோக்கியோ இணைத்தலைமை நாடுகள் மற்றும் பிற உறுப்பு நாடுகள் ஆகியோர் அரசை எச்சரித்தனர். ஆனால் அதே நேரத்தில் அரசு தனது எல்லைக் குட்பட்ட பகுதியில் பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கையை மேற்கொள்ளும் உரிமையைக் கொண்டிருப்பதை அவை அங்கீகரித்தன.

பிப்ரவரி 2008 இன் நடுப்பகுதியில், தீவில் பல பகுதிகளில் விடுதலைப்புலிகள் தற்கொலைத் தாக்குதல்களை மேற்கொண்ட நிலையில், போர் நடைபெற்ற பகுதிகளுக்கு வெளியே இருந்த பொதுமக்கள் மீதான போரின் பாதிப்பு அஞ்சத் தக்க அளவு அதிகரித்தது. அரசப்படைகளின் வான் குண்டு வீச்சுகளும், ஆழ ஊடுருவி நடத்தும் தாக்குதல்களும், போர் நடைபெற்ற பகுதிகளில் இருந்த பொதுமக்களைப் பெரிதும் பாதித்தன. செப்டம்பர் 2008 இல் கிளிநொச்சியை நோக்கி நகரத் தொடங்கி, அரசு தனது இறுதி இராணுவத் தாக்குதலைத் தொடங்கியது.



மூத்த மற்றும் புகழ்பெற்ற பத்திரிகையாளர்கள் மீதான தாக்குதல்கள், காணாமல் போதல் மற்றும் கொலைகள் உள்ளிட்ட ஊடகங்கள் மீதான கூடுதல் அழுத்தமானது, பெரிய அளவில் ஊடகங்கள் தாங்களே செய்திகளைத் தணிக்கை செய்து வெளியிடும் நிலைக்குத் தள்ளியது. உள்ளூர் செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீது அடையாளம் காணாத இடங்களில் இருந்து வந்த அச்சுறுத்தல்கள் காரணமாக, சிலர் நாட்டைவிட்டு வெளியேறும் நிலை ஏற்பட்டது.



கிளிநொச்சியின் மய்யச் சாலையை
ஒட்டி புதிதாக தற்பொழுது
உருவாக்கப்பட்டுள்ள புத்தர் கோயில்

3

மீறல் குற்றச்சாட்டுகளின் தன்மையும் வீச்சும்

க.ம. குறிஞ்சி

செயலாளர் நாயகத்திற்கு ஆலோசனை வழங்கவேண்டும் என்று குழுவிற்கு இடப்பட்ட பணியானது, 'மீறல் குற்றச்சாட்டுகளின் தன்மை மற்றும் வீச்சைக் கருத்தில் கொண்டதாக' இருக்க வேண்டும் என்பதற்கேற்ப போரின் இறுதிக்கட்டங்கள் (செப்டம்பர் 2008 மே 2009) மற்றும் அதற்குப் பிறகான காலக்கட்டங்களில் நடத்தப்பட்ட உலகளாவிய மனிதநேய மற்றும் மனித உரிமைச் சட்டமீறல்கள் குறித்த குற்றச்சாட்டுகள் நோக்கிக் குழு தனது கவனத்தைத் திருப்புகிறது. பொறுப்பேற்பது குறித்துக் குழு வழங்க இருக்கும் ஆலோசனையின் தன்மையை, குற்றச்சாட்டுகளின் தன்மையும் வீச்சுமே முடிவு செய்கின்றன. அத்தியாயம் நான்கில் அந்தக் குற்றச்சாட்டுகளைச் சட்டப் பார்வையில் இருந்துக் குழு பரிசீலித்துள்ளது. இதன்மூலம் அந்தக் குற்றச்செயல்கள் நிரூபிக்கப்பட்டால், அது உலகளாவியச் சட்ட மீறல்களாக இருக்குமா என்பதை முடிவு செய்யக் குழு முற்பட்டுள்ளது.

அ) குற்றச்சாட்டுகளை மதிப்பிடும் முறைகள்

49) போரின் இறுதிக்கட்டங்கள் குறித்து எழுப்பப்பட்ட குற்றச்சாட்டுகளைக் கவனமாக ஆராய்ந்து சீர்தூக்கிப் பார்ப்பதன் அடிப்படையிலேயேக் குழுவின் முடிவுகள் இருக்கும். எழுத்து வடிவிலான தரவுகள் தனிப்பட்ட நபர்களுடனான நேர்காணல்கள் ஆகிய இரண்டுமேக் குழுவின் பரிசீலனைக்கு உட்பட்டன. எழுத்துவடிவிலான ஆவணங்களில், அய்க்கிய நாடுகள் மற்றும் பிற பன்னாட்டு அமைப்புகளின் நிறுவனங்கள், துறைகள், நிதியங்கள், அலுவலகங்கள் மற்றும் திட்டங்கள், அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் இலங்கையின் ஊடக வியலாளர்கள் மற்றும் வல்லுநர்கள் உள்ளிட்ட தனிநபர்கள் ஆகியோரின் ஆவணங்களும் பிற எழுத்துவடிவிலான தரவுகளும் இருந்தன. இவற்றுடன் போரின் இறுதிக்கட்டங்களில் எடுக்கப்பட்ட செயற்கைக்கோள் படங்கள், நிழற்படங்கள், காணொளிகள் ஆகியவையும் அடங்கும்.

அய்.நா வின் இணையதளத்தில் அது வெளியிட்ட அறிக்கைக்கு எதிர் வினையாகப் பெறப்பட்ட வாக்குமூலங்களும் இவற்றில் அடங்கும். இவை அனைத்தும் தனித்தனியாக ஆராயப்பட முடியாதவை என்றபோதும், சில சமயங்களில், பிற ஆவணங்களுக்குத் துணை ஆவணங்களாக அவை உதவின. இலங்கை அரசின் அறிக்கைகள் அல்லது வேறு சில பொது அறிக்கைகள் உள்ளிட்ட பொருத்தமான ஊடக ஆவணங்கள் இதில் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால் அவைக் குழு சேகரித்த விபரங்களுக்குத் துணையாகவே இணைக்கப்பட்டுள்ளன. வன்னியில் நடந்த நிகழ்வுகள் குறித்துப் பல அரசு சாரா நிறுவன அறிக்கைகள் இருக்கின்றன. அவற்றில் சிலவற்றைக் குழு ஆராய்ந்த போதும், இந்தக் குற்றச் சாட்டுகளைத் தொகுப்பதற்குக் குழு அதனைச் சார்ந்து இருக்க வில்லை. மாறாக, குற்றச்சாட்டுகளின் தன்மை மற்றும் வீச்சை தானே நேரடியாகக் கணித்தது.

50) பன்னாட்டு அமைப்புகளின் அதிகாரிகள், அரசு சாரா நிறுவனங்கள், ஊடகவியலாளர்கள், உயர் அதிகாரிகள், கல்வியாளர்கள், மற்றும் ஆயுதப்போர் குறித்து ஆழ்ந்த அறிவும் முன் அனுபவமும் கொண்ட தனிநபர்கள் உள்ளிட்ட அனைவரையும் குழு கலந்தாலோசித்தது. இவர்களில் சிலர் இலங்கையில் அல்லது வன்னியில் அந்த குறிப்பிட்ட காலத்தில் இருந்துள்ளனர்.

51) குழுவின் பணித்திட்டத்தில் உண்மை அறிவதோ அல்லது விசாரணையோ இல்லாத போதும், பொது அரங்கில் வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள், கூடுதல் விசாரணையை மேற்கொள்ளும் அளவிற்குத் தகுதி வாய்ந்தனவா என்பதை நிர்ணயிப்பது அவசியம் எனக் குழு நம்பியது. இந்தக் குற்றச்சாட்டுகளின் தன்மையையும் வீச்சையும் அளவிடுவது என்பது இந்த குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் எழக்கூடியப் பொறுப்பேற்கும் சிக்கல்களைச் சரியாக

பன்னாட்டுப் பணியாளர்கள் மற்றும் அரசு சாரா அமைப்புகளுக்கு விசா மறுக்கப்பட்டமை மற்றும் திரும்பப் பெறப்பட்டமை ஆகியவை அவர்களைப் பாதுகாப்பற்ற நிலையில் வைத்ததோடு, சிலர் தங்களது நிலைகளில் ஒரு சமரசத்திற்கு வரவேண்டிய சூழலும் ஏற்பட்டது.

வரையறுப்பதற்கு அனுமதிக்கும். ஒரு குற்றச்சாட்டு தகுதியானதுதான் என்பதை முடிவு செய்ய, அக்குறிப்பிட்ட செயலோ அல்லது நிகழ்வோ நடந்தது என்பதற்குச் சரியான அடிப்படைகள் இருக்க வேண்டும் எனக் குழு முடிவு செய்தது. குழு பயன்படுத்திய இந்த அளவுகோலானது, 'குறிப்பிட்ட அந்த நிகழ்வு அல்லது செயல் நடைபெற்றது என்பதற்குச் சரியான அடிப்படை இருக்க வேண்டும்' - என்பது உள்நாட்டு மற்றும் உலகளாவியச் சட்டங்களின் அடிப்படையில் அரசோ அல்லது பிறரோ தங்கள் பதிலை எடுத்து வைப்பதற்கானப் பொறுப்பை எழுப்புகிறது.

52) ஒரு குற்றச்சாட்டு தகுதியானது என்பதை முடிவு செய்ய, தன்னிடமிருந்த தரவுகளின் முழுமைத் தன்மை, அதன் பொருத்தப்பாடு குறித்துக் கவனமான பரிசீலனை, தரவுகள் கிடைக்கப்பெற்ற மூலங்கள் ஒவ்வொன்றின் நம்பகத்தன்மை, ஆகியவற்றோடு, தரவுகளின் செய்தியோடு அதற்கு இருக்கக்கூடிய உறவு ஆகிய அனைத்தையும் குழு கருத்தில் எடுத்துக் கொண்டது. பொருத்தமானது மற்றும் நம்பிக்கைக்குரியது என்று தான் கருதிய நேரடித் தரவு மூலங்களை அடிப்படையாகக் கொண்ட குற்றச்சாட்டுகளையே தகுதிவாய்ந்தவையாகக் குழு எடுத்துக் கொண்டது. இந்த நேரடி மூலங்களுக்குப் பிற வகையான நேரடி மற்றும் மறைமுகத் தரவுகள் துணை நின்றன. கீழே வழங்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் நேரடியான, நம்பத்தகுந்த மற்றும் நீடித்த மூலங்களின் அடிப்படையில் தகுதிவாய்ந்ததாகக் கணிக்கப்பட்டன. உண்மையில் நிறைய குற்றச்சாட்டுகள் இன்னும் அதிக தகுதி வாய்ந்த சான்றுகளைக் கோருகின்றன.

53) தான் தகுதி வாய்ந்ததெனக் கண்டறிந்த குற்றச்சாட்டுகளை, சட்ட அடிப்படையில் பாகுபடுத்தி வழங்குவதற்கு மாறாக, விளக்க உரையாகவே அளிப்பது எனக் குழு முடிவு செய்துள்ளது. இதன் மூலம், பரந்துப்பட்ட பொருத்தப்பாடு மற்றும் நோக்கத்தினை அது வழங்கும். இந்த விளக்க உரையை நிரூபிக்கப்பட்ட உண்மைகளாக எடுத்துக் கொள்ளக் கூடாது. குறிப்பான சட்டக் கட்டுப்பாட்டைத் தீர்மானிக்கும் எந்தவொரு முயற்சிக்கும் உயரியத் தோடக்கம் தேவைப்படுகிறது.

கிழக்கு மாகாணத்தில் பெற்ற இராணுவ வெற்றியால் ஊக்கம் பெற்று, ஏறத்தாழ இரண்டு ஆண்டுகள் திட்டமிட்ட தயாரிப்பின் பிறகு, முழுமையான இராணுவ நடவடிக்கையை மேற் கொள்வதாக சனவரி 16, 2008 அன்று அரசு அறிவித்தது. போர்நிறுத்த ஒப்பந்தத்தை உடைத்து இராணுவத் தீர்வை மேற்கொள்வது மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என அய்.நா வின் செயலாளர் நாயகம், டோக்கியோ இணைத் தலைமை நாடுகள் மற்றும் பிற உறுப்பு நாடுகள் ஆகியோர் அரசை எச்சரித்தனர்.

ஆ) இராணுவத் திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகளின் பின்னணி

54) இந்த அத்தியாயத்தின் '(இ)' முதல் '(ஊ)' வரையான பிரிவுகளில் பட்டியலிடப்பட்டுள்ள தகுதி வாய்ந்த குற்றச்சாட்டுகளைப் புரிந்துகொள்வதற்குத் தேவையான பின்னணியை அமைப்பதற்காக, போரின் இறுதிக்கட்டங்களில் இலங்கை அரசு மற்றும் விடுதலைப்புலிகள் ஆகிய இருவரின் அரசியல் மற்றும் இராணுவத் திட்டங்கள் மற்றும் திறன்கள் ஆகியவற்றைக் குழு ஆராய்ந்தது. பொதுவான திட்டங்கள் குறித்த அதன் ஆய்விற்காக, வெளிப்படையாகக் கிடைக்கப்பெறும் அரசியல் மற்றும் இராணுவ ஆய்வறிக்கைகள், இலங்கையின் பாதுகாப்புத்துறை அமைச்சகத்தின் இணையதளம் மற்றும் அய்க்கிய நாடுகளின் இராணுவ நடவடிக்கை அலுவலகம் மற்றும் பன்னாட்டு இராணுவ வல்லுநர்கள் வரை பல்வேறு தரப்பினரையும் குழு சார்ந்திருந்தது. குறிப்பிட்ட குற்றச் சாட்டுகளைக் குழு ஆராய்ந்தது என்பது அதன் முதன்மைத் தரவுகளின் அடிப்படையிலேயே செய்தது.

1) இலங்கை அரசு

55) 2006 இல் அமைதிப்பேச்சுவார்த்தைகள் முறிந்த பிறகு, விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க ஒரு முழுமையான பல்முனைத்திட்டத்தை இலங்கை அரசு வடிவமைத்தது. இந்தத்திட்டமானது இராஜதந்திர மற்றும் அரசியல் கூறுகளை உள்ளடக்கியதாகவும், போர்முனைகள் குறித்த தகவல்களையும் போர்முனைக்குச் செல்லும் வழிகளையும், கூடுதலாக, இராணுவக் கூறுகள் குறித்த தகவல்களையும் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளையும் உள்ளடக்கியது.

56) தனது இராஜ தந்திர முயற்சிகளில், 'பயங்கரவாதத்திற்கு எதிரான போர்' என்ற பின்னணியில் பல நாடுகளின் ஆதரவைப் பெற்று, ஒரு சாதகமான உலகச் சூழலை அரசு ஏற்படுத்திக்கொண்டது. தனது பிராந்தியத்தில், இராஜீவ்காந்தியை விடுதலைப்புலிகள் கொன்றதை அடிப்படையாக வைத்து, இந்திய அரசுடனான தனது கூட்டை வலுப்படுத்திக்கொண்டது. இதற்கு ஒரு குறிப்பிடத்தகுந்த சான்று என்னவெனில், விடுதலைப்புலிகளுக்கு ஆயுதம் மற்றும் பிற பொருட்களை தாங்கிவந்த கப்பல்களை இடைநிறுத்த இலங்கைப்படையினருக்கு இந்தியக் கடற்படை நேரடியாக உதவியது.

57) ஒரு கூட்டான அரசியல் மற்றும் இராணுவத்தலைமையை உள்நாட்டு அரசு உறுதிப்படுத்தியது. அதிபர் தன்னைத்தானே பாதுகாப்புத்துறை அமைச்சராகவும், தனது தம்பி கோத்தபாய இராஜபக்சேயைப் பாதுகாப்புத்துறைச் செயலராகவும் நியமித்தார். பின்னர் அவர் லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகாவை இராணுவத் தளபதியாக நியமித்தார். பாதுகாப்புத்துறைச் செயலர் மற்றும் லெப்டினென்ட் ஜெனரல் பொன்சேகா ஆகிய இருவருமே விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரில் பெரும் அனுபவங்களைப் பெற்றவர்களாக இருந்தனர். இவர்கள் இருவருமே 2006 இல் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட கொலை முயற்சியில் இருந்து தப்பியுள்ளனர். இதன்பிறகு அதிபர் இராணுவத்திற்கான ஒதுக்கீட்டை உயர்த்துவதற்கு நாடாளுமன்றத்தின் ஒப்புதலைப்பெற்றார். இது 2008 இல் 1.8 பில்லியன் அமெரிக்க டாலராக உயர்ந்ததன் மூலம் நாட்டின் ஒட்டுமொத்த வரவுசெலவில் 20 விழுக்காட்டைக் கொண்டதாக இருந்தது.

58) இராணுவத்தைப் பொருத்தவரையில் லெப்டினன்ட் ஜெனரல் பொன்சேகா இலங்கை இராணுவத்தைப் பெரிதும் ஊக்கப்படுத்தி புத்துணர்ச்சி ஊட்டினார். ஆயுதப்படையினரின் எண்ணிக்கை ஏறத்தாழ மூன்று மடங்காக, 3 லட்சத்தை எட்டியது. அத்துடன், சுழற்சிமுறையைப் பயன்படுத்தியதன் மூலம் போர்முனைக்கு ஒவ்வொருமுறையும் புதிய படையினர் தொடர்ந்து அனுப்பப்பட்டனர். இராணுவம் புதிய ஆயுதங்களையும் தளவாடங்களையும் வாங்கியது. பல்குழல் ஏவுகணைத் தாங்கிகள், 'மார்ட்டர்'கள், 'ஹெலிகாப்டர்'கள், 'எம்.அய்.ஜி 29', 'கிஃபிர்' மற்றும் உலங்கு வானூர்தி, ஆயுதவிமானங்கள் ஆகியவற்றை வலுப்படுத்தியது. இலங்கை விமானப்படையானது பல்வேறு வகையான ஆட்களற்ற வான் ஊர்திகளை வாங்கிப் பயன்படுத்தியது. இவை வேவு பார்ப்பதற்கும், தாக்குதல் முனையைக் கண்டறிவதற்கும், போரின் பாதிப்புகளைக் கண்டறிவதற்கும் பயன்படுத்தப்பட்டன.

59) இலங்கை இராணுவமானது, அதன் பரந்து விரிந்த சிறப்புவாய்ந்த சூட்டுத் திறன் மற்றும் படையினரின் எண்ணிக்கை ஆகியவற்றோடு அதன் வான்பகுதி மீதான ஆளுமை ஆகியவற்றைப் பெரிதும் சார்ந்திருந்தது. இதன் மூலம் ஒரே நேரத்தில் பலமுனைகளில் தொய்வற்ற தாக்குதலை நடத்த முடிந்தது. இவற்றிலிருந்து விடுதலைப்புலிகளால் மீள முடியவில்லை. பேச்சுவார்த்தைக்கான அனைத்து முயற்சிகளும் மறுக்கப்பட்டன. போர்நிறுத்தங்களுக்கு உடன்பட மறுத்தனர். விடுதலைப்புலிகள் போர்நிறுத்தக்காலத்தை மீண்டும் அணிதிரள்வதற்குப் பயன்படுத்துவார்கள் என அரசு வாதிட்டது.

60) இலங்கை இராணுவம் தனது தரைப்படை முன்னேறுவதற்கு, நெகிழ்வுத் தன்மை உள்ள உளவுத்துறையினரால் முன்னெடுக்கப்பட்ட கொரில்லாத் தாக்குதல் மாதிரியான தந்திரங்களைப் பயன்படுத்தி, எதிரிக்குப் பெரும் சேதத்தை விளைவித்தது. இந்த முனையில் இராணுவத்தளபதி தனது படையினரை மீண்டும் அணிதிரட்டி மறு பயிற்சி அளித்தார். இதில், சிறப்பு தரைப்படைத் தாக்குதல் குழுக்கள் என்ற பெயரில், சுயசார்புடைய 'கமாண்டோ' பயிற்சி பெற்ற, கண்காணிப்பு தாக்குதல் மற்றும் வான்வழி குண்டுவீச்சுகள் அனைத்தையும் ஒருங்கிணைக்கும் திறன்பெற்ற ஒருக் குழுவினை உருவாக்கினர். மேலும், இலங்கை இராணுவம், எதிரிப்படை அணிவகுப்புக்குப் பின்னே மறைமுக

எழுத்து வடிவிலான தரவுகளுடன் தனிப்பட்ட நபர்களுடனான நேர்காணல்கள் ஆகிய இரண்டுமே குழுவின் பரிசீலனைக்கு உட்பட்டன. எழுத்து வடிவிலான ஆவணங்களில் அய்க்கிய நாடுகள் மற்றும் பிற பன்னாட்டு அமைப்புகளின் நிறுவனங்கள், துறைகள், நிதியங்கள், அலுவலகங்கள், திட்டங்கள் – அரசு சாரா நிறுவனங்கள் – இலங்கையின் ஊடகவியலாளர்கள், வல்லுநர்கள் உள்ளிட்ட தனிநபர்கள் ஆகியோரின் ஆவணங்களாகவும் பிற எழுத்துவடிவிலான தரவுகளாகவும் இருந்தன.

ஒரு குற்றச்சாட்டு தகுதியானது என்பதை முடிவு செய்ய, தன்னிடமிருந்த தரவுகளின் முழுமைத் தன்மை, அதன் பொருத்தப்பாடு குறித்து கவனமான பரிசீலனை, தரவுகள் கிடைக்கப்பெற்ற மூலங்கள் ஒவ்வொன்றின் நம்பகத்தன்மை, ஆகியவற்றோடு, தரவுகளின் செய்தியோடு அதற்கு இருக்கக்கூடிய உறவு ஆகிய அனைத்தையும் குழு கருத்தில் எடுத்துக் கொண்டது.

நடவடிக்கைகளையும் பயன்படுத்தியது. இவற்றை ஆழ ஊடுருவித் தாக்கும் அணிகள் செயல்படுத்தின. நீண்ட தூரக் கண்காணிப்புக் குழுக்கள் என்று அழைக்கப்பட்ட இந்தப்படைகள் விடுதலைப்புலிகளின் முன்னாள் தளபதி மாத்தையாவுடன் நெருங்கிய தொடர்பில் இருந்த தமிழ்ப் போராளிகளைக் கொண்டு உளவுவேலைக்காக உருவாக்கப்பட்டது. முன்னேறும் இராணுவத்துக்கு ஏற்படும் பாதிப்புகளைக் குறைப்பதற்காக சில இலங்கை இராணுவ நடவடிக்கைகள் 'களத்தை மென்மை ஆக்க' வடிவமைக்கப்பட்டு, அதன் மூலம் விடுதலைப் புலிகளின் எதிர்ப்புமுனைகளைப் பாரிய குண்டுவீச்சின் மூலம் ஊடுருவினர். ''பொதுமக்களை அந்த இடத்திலிருந்து விடுவிப்பதற்கான ஒரு மனிதநேய நடவடிக்கையை மேற்கொள்ளவும், அந்த முயற்சியில் பொது மக்களில் ஒருவருக்கும் பாதிப்பு ஏற்படாதவண்ணம் செயல்படவும் தான் எடுத்துவரும் முயற்சிகள்'' குறித்து அரசு பேசிக்கொண்டிருக்கும் போது நடைமுறையில் படையினர் தாங்கள் முன்னேற ஆட்லரி தாக்குதல்களை நடத்துவதற்கு எவ்விதத் தயக்கமும் காட்டவில்லை.

61) குண்டுவீச்சிற்கு முன் சரியான தாக்குதல் முனைகளை அடையாளம் காணப் பெரும்பாலும் ஆளற்ற விமானங்கள் பயன்படுத்தப்பட்டன. ஆளற்ற விமானங்களில் எடுக்கப்பட்ட படங்களின் நேரடியான காட்சிகள் களத்தில் இருப்பவர்களுக்கு வழங்கப்பட்டன. இதன்மூலம் தளபதிகள் அத்தகவலைப் பயன்படுத்தி எவ்விதத் தாமதமும் இன்றி முடிவுகளை எடுக்க முடிந்தது. சில பகுதிகளில் காடுகள் மற்றும் கரடுகள் தெளிவான காட்சிக்கு இடையூறாக இருந்தன. ஆனால் பொதுவாக ஆளற்ற விமானங்கள் உயர்தரமான படங்களையே காட்சிப்படுத்தின.

இலங்கை விமானப்படை பயன்படுத்திய ஆளற்ற விமானங்கள், ஒற்றைத் தாக்குதல் முனையங்களை அடையாளம் காணவும், குறிப்பாக தனிநபர்கள் மற்றும் அவர்களது நடமாட்டங்கள், நிலைகள் ஆகியவற்றை அறியவும், களத்தின் தன்மைகளைக் காட்டவும் திறன் படைத்தவையாக இருந்தன. இதன்மூலம் களத்தில் இருந்த படையினருக்கு, துல்லியமான, உண்மையான தகவல்கள் கிடைத்தன. ஆளற்ற விமானங்களைப் பயன்படுத்தியன் மூலம் இலங்கை விமானப்படையானது எதிரிகளின் நடமாட்டத்தை, பல்வேறு நிலப்பகுதிகளிலும் இரவுபகலாக கண்காணிக்கும் திறனைப் பெற்றது. தனிநபர்களை அடையாளம் காணவும் மருத்துவமனைகள் போன்ற மக்களுக்குத் தேவையான கட்டடங்களை அடையாளம் காணவும் இலங்கை விமானப்படையினருக்கு ஆளற்ற விமானங்கள் உதவின.

62) லெப்டினன்ட் ஜெனரல் பொன்சேகா, கொழும்பில் உள்ள இராணுவ நடவடிக்கைகளின் தலைமையகத்தில் இருந்தபடி, தானே முன்னின்று போரை நேரடியாக நடத்தினார். அத்துடன் தான் நேரடியாகத்தேர்வுசெய்த நன்கு பயிற்சி பெற்ற மூத்த தளபதிகளைப் போர்முனைக்கு அனுப்பினார். வன்னி பாதுகாப்புப்படைக்கு மேஜர் ஜெனரல் ஜெகத் ஜெயசூர்யா தலைமை ஏற்றார். இவர் வவுனியாவைத் தலைமையகமாகக் கொண்டு செயல்பட்டார். இவரோடு யாழ்ப்பாண தீபகற்பத்திலிருந்து தெற்கு நோக்கி முன்னேறிய படையணிகளான, மேஜர் ஜெனரல் கர்மல் குணரத்ணே யின் தலைமையின் கீழ் இயங்கிய 53 ஆவது படையணி மற்றும் பிரிகேடியர் பிரசன்ன சில்வா தலைமையில் இயங்கிய 55 ஆவது படையணி, தெற்கு மற்றும் தென் மேற்கிலிருந்த முன்னேறிய படையணிகளான, மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ் தலைமையிலான 57 ஆவது படையணி, பிரிகேடியர் சவேந்திர சில்வா தலைமையிலான 58 ஆவதுபடையணி, மேஜர் ஜெனரல் நந்தனா உதவத்தா தலைமையிலான 59 ஆவது படையணி ஆகியவை உள்ளிட்ட 6 பெரும் படையணிகள் போரின் இறுதிக்கட்டங்களில் செயல்பட்டன. சிறப்புப் படையினரும், கமாண்டோக்களும்கூட முக்கியப்பங்கு ஆற்றினர். வலிமையான தலைமை, புதிய பயிற்சி, பல வெற்றிகளால் ஊக்கப்படுத்தப்பட்ட வலுவான

சிந்தனைப்போக்கு ஆகியவை படையிலிருந்து தப்பி ஓடுபவர்களின் எண்ணிக்கையைக் குறைத்ததோடு இலங்கை இராணுவப்படையினர் இடையே உளவியல் ரீதியான தெம்பை அதிகரித்தது.

63) வழமையான இராணுவ நடவடிக்கைகளோடு விடுதலைப்புலிகளின் பதுங்கிடங்களைக் கண்டறியவும், தெற்கே உள்ள விடுதலைப்புலிகளின் தொடர்புகளை அறுக்கவும், விடுதலைப் புலிகளோடு தொடர்புடையவர்களாகக் கருதப்படும் நபர்களை அழிக்கவும், மறைமுக நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அரசு ஆட்களை நியமித்தது. இந்த நடவடிக்கைகளின் வெளிப்படையான அடையாளமாக இருந்ததுதான் 'வெள்ளை வேன்'. அரசை விமர்சிப்பவர்களையும், விடுதலைப் புலிகளோடு தொடர்புடையவர்களாகச் சந்தேகிக்கப்படுபவர்களையும், கடத்தவும், காணாமல் போக்கவும் பொதுவாக மக்களிடம் ஓர் அச்சத்தை விதைக்கவும் வெள்ளை வேன்கள் பயன்படுத்தப் பட்டன. காவல் துறையின் சிறப்பு அதிரடிப்படையின் ஓர் உயர்மட்டக் குழுவானது இத்தகைய வெள்ளை வேன் நடவடிக்கைகளை நடத்துவதில் ஈடுபட்டிருந்தது.

கடத்தப்பட்டவர்கள் இரகசியமான இடங்களுக்குக்கொண்டு செல்லப்பட்டு, விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு, அடித்தல், வலுக்கட்டாயமாக உடைகள் களையப் படுதல், பிளாஸ்டிக் பைகளின் மூலம் மூச்சுத்திணறலை ஏற்படுத்துதல், நீருக்குள் மூழ்கச்செய்தல், கைவிரல் மற்றும் கால்விரல் நகங்களைப் பிடுங்குதல் மற்றும் மின்சார அதிர்வுகளைக் கொடுத்தல் போன்ற பலமுறைகளில் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டனர். நிறையப் பேர் கொல்லப்பட்டு அவர்களது உடல்கள் இரகசியமாக எரிக்கப்பட்டன. மனித உரிமைச் செயல் பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள், பத்திரிகை ஆசிரியர்கள் மற்றும் மனிதநேயப்பணியாளர்கள் ஆகியோர் புலி அனுதாபிகள் எனக் குற்றம் சாட்டப்பட்டு இந்த வலையில் சிக்கவைக்கப் பட்டனர். 2006 தொடங்கி போரின் இறுதிக்காலம் வரையிலான காலக்கட்டத்தில் மட்டும் 66 மனித நேயப் பணியாளர்கள் காணாமல் போயோ, கொல்லப்பட்டோ உள்ளனர்.

64) இந்தத்திட்டமானது ஊடகம் மற்றும் செய்திகளின் வரத்து மீது மேலும் கூடுதல் கட்டுப்பாட்டை விதித்தது. இதன் மூலமாக ஊடகங்கள் முற்றிலுமாகப் போர் முயற்சிகளை வெளியிட இயலாமல் அதைப் பற்றிய விமர்சனங்களைத் தர இயலாமல் முடங்கின. 2006 தொடங்கி சுதந்திரமான பத்திரிகையாளர் எவரும் விடுதலைப்புலிகள் கட்டுப்பாட்டுப்பகுதிகளில் பயணிக்க அனுமதிக்கப்பட வில்லை. பாதுகாப்பு அமைச்சகத்தின் இணையதளம் சில ஊடகவியலாளர்களைப் புலி அனுதாபிகள் எனப் பெயரிட்டது. இந்தச் சட்டதிட்டங்களுக்கு அடிபணிய மறுத்த ஊடகவியலாளர்கள் அல்லது வேறு வகையில் அரசை விமர்சித்தவர்கள் கைது மற்றும் மிக மோசமான அளவிலான அச்சுறுத்தல்களுக்கு ஆளாக்கப்பட்டனர்.

சூன் 2008 இல், அசோசியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஆஃப் சிலோன் என்ற ஊடகத்தைச் சேர்ந்த இரு முக்கிய ஊடகவியலாளர்களைப் பாதுகாப்புச் செயலாளர் நேரடியாக மிரட்டினார். அவர்களில் ஒருவரான பொடல்லா ஜெயந்தா சூன் 2009 இல், வெள்ளைவேனில் கடத்தப்பட்டு மிகக்கடுமையாகத் தாக்கப்பட்டார். சனவரி 08, 2009 இல், புகழ்பெற்ற முக்கிய பத்திரிகை ஆசிரியரான லசந்த விக்ரம துங்கே, அடையாளம் தெரியாத நபர்களால் கொழும்பில் வைத்துக் கொல்லப் பட்டார். இராணுவத் தளவாடங்கள் வாங்குவதில் பாதுகாப்புச் செயலாளர் மீது ஊழல் குற்றச்சாட்டுகளைச் சுமத்த வல்ல தரவுகளை அவர் சேகரித்து வைத்திருந்தார். அவற்றை ஒரு வழக்காக அவர் வெளி கொணரத் திட்டமிட்டிருந்தார். இந்த நிகழ்விற்கு இரு நாட்களுக்கு முன் மகாராஜா தொலைக்காட்சி மற்றும் ஒளிபரப்பு நிறுவனம் ஆயுதம் தாங்கிய மனிதர்களால் தாக்கப்பட்டது. பாதுகாவலர்களைத் துப்பாக்கி முனையில் நிறுத்தி நிறுவனத்தின் உபகரணங்களை அழித்துள்ளனர். இந்த நிகழ்வுகள் எவையும் விசாரணைக்கு உட்படுத்தப்படவில்லை. 2006



இராணுவத்தைப் பொருத்தவரையில் லெப்டினன்ட் ஜெனரல் பொன்சேகா, இலங்கை இராணுவத்தைப் பெரிதும் ஊக்கப்படுத்தி புத்துணர்ச்சி ஊட்டினார். ஆயுதப்படையினரின் எண்ணிக்கை ஏறத்தாழ மூன்று மடங்காக, 3 இலட்சத்தை எட்டியது. அத்துடன், சுழற்சி முறையைப் பயன்படுத்தியதன் மூலம் போர்முனைக்கு ஒவ்வொருமுறையும் புதிய படையினர் தொடர்ந்து அனுப்பப் பட்டனர். இராணுவம் புதிய ஆயுதங்களையும் தளவாடங்களையும் வாங்கியது.

இலங்கை இராணுவமானது, அதன் பரந்து விரிந்த சிறப்புவாய்ந்த சூட்டுத்திறன் மற்றும் படையினரின் எண்ணிக்கை ஆகியவற்றோடு அதன் வான்பகுதி மீதான ஆளுமை ஆகியவற்றைப் பெரிதும் சார்ந்திருந்தது. இதன் மூலம் ஒரே நேரத்தில் பலமுனைகளில் தொய்வற்ற தாக்குதலை நடத்த முடிந்தது. இவற்றிலிருந்து விடுதலைப்புலிகளால் மீள முடியவில்லை. பேச்சுவார்த்தைக்கான அனைத்து முயற்சிகளும் மறுக்கப்பட்டன.



தொடங்கி 2009 இல் தொடக்க காலம் வரையிலான காலக்கட்டத்தில் குறைந்தது 10 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டனர். பத்திரிகைத் தணிக்கை நடவடிக்கைகளுடன் இவ்வாறு கொல்லப்படுவது அல்லது தாக்கப்படுவது குறித்த அச்சமும் இணைந்து ஊடகம் பங்காற்றக்கூடிய ஒரு சுதந்திரமான சூழலுக்கு மிக மோசமான பாதிப்பை ஏற்படுத்தியது. பாதுகாப்புச் செயலாளர் கூறியதாக ஒரு செய்தி வெளிவந்தது. ''என்னிடம் இரண்டுக் குழுக்கள் மட்டுமே உள்ளன. பயங்கரவாதத்திற்கு எதிராகப் போராடுபவர்கள் மற்றும் பயங்கரவாதிகள்''.

65) விடுதலைப்புலிகளை அளவுக்கு அதிகமாகச் சகித்துக்கொண்டதாகவும், பயங்கரவாதத்தை ஆதரித்ததாகவும் அரசு பன்னாட்டுச் சமூகத்தையும் தொடர்ந்து வெளிப்படையாக விமர்சித்தது. இதனைத்தொடர்ந்து பன்னாட்டுச் சமூகம் போர் நடைபெற்ற இடங்களிலிருந்து ஒட்டுமொத்தமாக வெளியேற்றப்பட்டது. சண்டையை நிறுத்துவதற்கும், போர் நிறுத்தத்தை ஏற்படுத்துவதற்கும் எடுக்கப்பட்ட அனைத்து பன்னாட்டு முயற்சிகளும் அலட்சியப்படுத்தப்பட்டன.

2) தமிழீழ விடுதலைப்புலிகள்

66) செப்டம்பர் 2008 இல் விடுதலைப்புலிகளின் இராணுவத் திறனானது அதன் கடந்தகாலத் திறனோடு ஒப்பிடுகையில் மிக மோசமாகக் குறைந்திருந்தது. அந்தக் காலக்கட்டத்தில் அதன் சரியான எண்ணிக்கை தெரியாதபோதும் அதன் உச்சக்காலத்தில் கூட 20000 பேருக்கு மிகவில்லை. போரின் இறுதிக் கட்டங்களில் அதன் முக்கியமான போராளிகள் அவற்றில் ஒரு பகுதியினராக 5000 பேருக்கு மிகாமலேயே இருந்தனர். தெற்கே அதன் தொடர்புகளும் கொழும்பில் இருந்த அதன் உறுப்புகளும் பிற இடங்களில் இருந்த உளவுப் பின்னலும் பெரிதும் வலுவிழந்திருந்தது. அரசின் தொடர்ந்த எதிர்நடவடிக்கைகளின் விளைவாக விடுதலைப்புலிகளின் தற்கொலைத் தாக்குதல்கள் செயல்பட்டுக் கொண்டிருந்த போதும் எண்ணிக்கையில் குறைந்துவிட்டன. தனது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளை 'ஈழம்' என்ற அரசாக நிர்மாணிக்க விடுதலைப்புலிகள் கெரில்லாத் தாக்குதல் முறைகளில் இருந்து விலகி மரபு ரீதியிலான போரினை நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. போரின் இறுதிக்கட்டத்தில் அதன் முயற்சிகள் பெரும்பாலும் தடுப்புத்தாக்குதல்களாகவே இருந்தன.

கடந்த காலத்தில் பெரும் வெற்றியை அளித்த எதிர்பாராத தாக்குதல்களை அவர்களால் நடத்த முடியவில்லை. இதன் விளைவாக வேகமாகச் சுருங்கிக்கொண்டிருந்த ஒரு பகுதிக்குள் விடுதலைப்புலிகள் முடக்கப்பட்டனர். இதனால் மண் தடுப்புகள், சுவர் தடுப்புகள், கண்ணிவெடிகள், குழிகள் ஆகிய தடுப்புகளின் பின்னே தங்களைப் பாதுகாத்துக்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

67) கிட்டத்தட்ட 32 நாடுகளில் தடைசெய்யப்பட்ட இயக்கமாக இருக்கக்கூடிய அதன் நிலையானது அதன் உலகளாவிய செயல்பாடுகளையும் ஆதரவையும் கட்டுப்படுத்தியது. இலங்கை இராணுவத்தோடு ஒப்பிடுகையில் அளவில் மிகச்சிறியதாக இருக்கக்கூடிய விடுதலைப்புலிகளின் படையணியின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் அனுபவமற்றவர்களாக இருந்தனர். ஆனால் இராணுவப்பிரிவும் அதன் கீழான அரசியல் பிரிவும் கொண்டு அதன் அடிப்படைக் கட்டமைப்பு சீரானதாக இருந்தது. இந்த இரண்டு பிரிவுகளும் மத்தியக் குழுவினால் வழிநடத்தப்பட்டன. வேலுப்பிள்ளை பிரபாகரன் தலைமையிலான மத்தியக்குழுவுடன் சூசை தலைமையிலான கடற்புலிகள், பிரபாகரனின் மகன் சார்ல்ஸ் ஆண்டனி மற்றும் இரத்னம் மாஸ்டர் தலைமையிலான வான்புலிகள், ஓர் உயர்தர தாக்குதல் படையணியான சார்ல்ஸ் ஆண்டனி படையணி, கரும்புலிகள், பொட்டு அம்மான் தலைமையிலான உளவுப்பிரிவு மற்றும் நடேசன் தலைமையிலான அரசியல் பிரிவு ஆகியவை இயங்கின. இத்தலைவர்களில்

பெரும்பான்மையானோர் போரின் இறுதிக்கட்டங்களில் கொல்லப்பட்டனர்.

68) தனது படையணியின் எண்ணிக்கையைக் காப்பாற்றும் முயற்சியில் விடுதலைப்புலிகள் கட்டாயமாக ஆள்சேர்க்கும் நடவடிக்கையையே பெரிதும் சார்ந்திருந்தனர். முன்னதாக ஒரு குடும்பத்திலிருந்து ஒருவர் என்ற அடிப்படையில் தனது படைக்கு ஆட்களைச் சேர்த்த விடுதலைப்புலிகள் இயக்கம், போர் தொடரத் தொடர அதன் கொள்கைகள் இறுக்கமடைந்து வன்மையாக நடைமுறைப் படுத்தப்பட்டன. ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 14 வயதே ஆன சிறுவர் சிறுமியர் உட்படப் பல குழந்தைகள் படையில் சேர்க்கப்பட்டனர். பொதுமக்களும் விடுதலைப்புலிகளின் போர் முயற்சிகளில் வேறு விதமாகப் பயன்படுத்தப் பட்டனர். உதாரணத்திற்கு பதுங்குகுழிகளை வெட்டவும், தடுப்புச்சுவர்களை எழுப்பவும் அவர்கள் பயன்படுத்தப்பட்டமையானது அவர்களைக் கூடுதல் ஆபத்திற்கு இட்டுச்சென்றது.

69) அதன் சரக்குக்கப்பல்கள் தாக்கி அழிக்கப்பட்ட பிறகு விடுதலைப் புலிகளுக்கு பொருட்கள் வரவு பாதிக்கப்பட்ட போதும், ஆயுதக்குவியல்கள் சில அவர்களுக்கு எட்டும் இடத்திலேயே இருந்தன. அவற்றில் 'ஆர்ட்டிலரி', 'மார்ட்டர்'கள் மற்றும் 'எம்.பி.ஆர்.எல்.'களும் அடங்கும். இவற்றைத் தடுப்புச்சுவர்கள் மற்றும் மண்தடுப்புகளுக்குப் பின் இருந்து கடுமையான எதிர்ப்பைத் தருவதற்குப் பயன்படுத்தியது. அத்துடன் தொடர்ச்சியான தற்கொலைத் தாக்குதல்களையும் மேற்கொண்டது. அதன் கரும்புலிகள் அணி தொடர்ந்து செயல்பட்டது. இலங்கை இராணுவத்தைத் தாக்கக்கூடிய தற்கொலைத் தாக்குதல்களில் அவர்கள் ஈடுபட்டனர். அத்துடன் போர் நடைபெற்ற இடத்திற்கு வெளியே சில தாக்குதல் களையும் மேற்கொண்டு அதன் விளைவாகப் பொதுமக்கள் பலர் பாதிக்கப்பட நேர்ந்தது. கடற்புலிகள் வசம் இதுவரையில் சில கடற்படை உபகரணங்களும், படகுகளும் இருக்கவே செய்தன. ஆனால் விடுதலைப்புலிகளின் பயன்பாட்டில் இருந்த 'ஸ்லின் 143' விமானம், பிப்ரவரி 2009 இல் கொழும்பு மீது மேற்கொண்ட ஒரு தற்கொலை நடவடிக்கையில் சுட்டுத்தள்ளப்பட்டது.

70) தனது கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதிகளில் மக்களை நிறுத்திவைப்பது என்பது விடுதலைப் புலிகளின் செயற்திட்டங்களுக்கு அவசியத் தேவையாய் இருந்தது. விடுதலைப்புலிகளின் தனிநாட்டுக்கோரிக்கைக்கு நியாயம் சேர்ப்ப தாகவும், இலங்கை இராணுவத்தின் தாக்குதலுக்கு தடுப்பாகவும், இருவகைகளில் மக்களின் இருப்பு அவர்களுக்குப் பயன்பட்டது. இந்த நிலையில் வன்னியில் வசித்த மக்கள், அங்கிருந்து வெளியேற முற்பட்ட போது விடுதலைப்புலிகள் அவர்களைத் தடுத்தனர். பொதுமக்கள் இழப்பு மிக மோசமாக அதிகரித்த நிலையிலும் மக்கள் வெளியேறுவதை அனுமதிக்க விடுதலைப்புலிகள் மறுத்தனர். நிலைமை மோசமாவது என்பது பன்னாட்டுத் தலையீட்டைத் தூண்டி அதன் மூலம் சண்டையை நிறுத்தும் என அவர்கள் நம்பினர். இறுதி நிமிடங்கள் வரை தனது தலைமையைக் காக்க புதிதாக இயக்கத்தில் இணைக்கப்பட்ட, மிக மோசமாகப் பயிற்றுவிக்கப்பட்ட இயக்க உறுப்பினர்களையும், மக்களையும் அரசுத்தரப்பின் குண்டு வீச்சுகளுக்கு இரையாக்கினர்.

3) போர் நடைபெற்ற பகுதியில் இருந்த பொதுமக்கள்

71) செப்டம்பர் 2008 இல் இலங்கை இராணுவம் பல திசைகளில் இருந்தும் வன்னியை நோக்கி முன்னேறியது. இதன் விளைவாக அந்தப் பகுதியிலிருந்து வெளியேற முடியாத பெரும் எண்ணிக்கையிலான பொதுமக்கள் அங்கு சிக்கிக் கொண்டனர். பொதுமக்கள் அவ்விடத்தைவிட்டு வெளியேற வற்புறுத்தி அரசு தொடர்ந்து துண்டறிக்கைகளை பொதுமக்கள் இருந்த பகுதிகளில் போட்டது. ஆனால் எவ்வாறு அதனை செய்யவேண்டும் என்பது குறித்து எந்த குறிப்பான தகவலையும் அவர்கள் அளிக்கவில்லை. ஆனாலும் பெரும்பான்மையானோர்

கடத்தப்பட்டவர்கள் இரகசியமான இடங்களுக்குக்கொண்டு செல்லப்பட்டு, விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு, அடித்தல், வலுக்கட்டாயமாக உடைகள் களையப்படுதல், பிளாஸ்டிக் பைகளின் மூலம் மூச்சுத்திணறலை ஏற்படுத்துதல், நீருக்குள் மூழ்கச்செய்தல், கைவிரல் மற்றும் கால்விரல் நகங்களைப் பிடுங்குதல் மற்றும் மின்சார அதிர்வுகளைக் கொடுத்தல் போன்ற பலமுறைகளில் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டனர். நிறையப் பேர் கொல்லப்பட்டு அவர்களது உடல்கள் இரகசியமாக எரிக்கப்பட்டன.

வெளியேறாமல் தங்கினர். விடுதலைப்புலிகளின் கடவுச்சீட்டுமுறைக்கு அப்பால் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் பொதுமக்கள் சிக்கிக் கொள்வதற்குப் பல்வேறு காரணிகளும் உள்ளன. அம்மக்களில் பெரும்பான்மை யானோர்க்கு வன்னியே அவர்களின் சொந்த நிலமாக இருந்தது. பலர் யாழ்ப் பாணத்தில் இராணுவ ஆக்கிரமிப்பை அனுபவித்து அங்கிருந்து விடுதலைப் புலிகளுடன் 1995 இல் வெளியேறியிருந்தனர்.

அவர்களது அனுபவத்தின் காரணமாக, அரசுக் கட்டுப்பாட்டுப்பகுதிகளில் நுழைந்தால் என்ன நடக்கும் என்ற அச்சம் அவர்களுக்கு இருந்தது. நிச்சயமாக தாங்கள் தடுப்புக்காவலில் வைக்கப்படுவோம் என்பதை அவர்கள் அறிந்திருந் தனர். மேலும் வெள்ளை வேன்கள் குறித்தும் அவர்கள் அஞ்சினர். அத்துடன் இராணுவத்தால் வன்புணர்வுக்கோ, சித்திரவதைக்கோ ஆளாகக்கூடும் அஞ்சினர். கூடுதலாக விடுதலைப்புலிகள் இயக்கத்தின் கட்டாய ஆள்சேர்க்கும் வழக்கத்தின் காரணமாகப் பெரும்பான்மைக்குடும்பங்கள் தங்கள் உறவினர்களை இயக்கத்தில் விட்டிருந்தனர். எந்த சூழலிலும் அரசுக்கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குச் செல்வது என்பது நேரடியாக ஆர்ட்லரி தாக்குதல், உக்கிரமான சண்டை மற்றும் கண்ணிவெடிகள் ஆகியவற்றிலிருந்து விலகிச்செல்வதற்கு மாறாக, அவற்றை நோக்கிச்செல்வதாகவே அமையும்.

72) இலங்கை இராணுவம் குண்டு வீச்சுகளின் மூலம் வன்னிக்குள் மேலும் நுழைந்தபோது உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் மேலும் ஆழமாகப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் சென்றனர். இறுதியாகச் செல்வதற்கு வேறிடம் இல்லாத நிலை வரை அவர்களும் தொடர்ந்து இடம்பெயர்ந்தனர். சிலர் தொடர்ச்சியாக ஏறுத்தாழ இரண்டாண்டு காலம் வரையில் மன்னாரில் இருந்து மேற்கு நோக்கி இடம்பெயர்ந்தவாறே இருந்திருக்கின்றனர். ஒவ்வொரு முறை அவர்கள் இடம் பெயரும் போதும் உழவூர்திகள், மிதிவண்டிகள் அல்லது மாட்டு வண்டிகளில் தங்களது உடைமைகளை ஏற்றி, கால்நடைகள் இருப்பின் அவற்றையும் எடுத்துக்கொண்டு நகர்ந்தனர். இடம்பெயர்ந்த மக்களுக்கான வாழ்நிலைகள் மிகமோசமாகவும், தொடர்ச்சியான இடப்பெயர்வின் காரணமாக மேலும் மோசமடைந்தும் வந்தன. அடிப்படைத் தேவைகளான உணவு உள்ளிட்டவை மேலும் மேலும் கிடைப்பதற்கு அரியனவாயின.

மக்கள் மேலும் எளிதாக பாதிப்படைவதற்கான நிலைக்குத் தள்ளப்பட்டு, உணவு மற்றும் உறைவிடத்திற்காக மனிதநேய உதவிகளை எதிர்பார்த்து நின்றனர். இடம் பெயர்ந்த மக்களில் ஒரு பெரும் பகுதியினர், குறிப்பாக, எளிதாக பாதிப்படையக்கூடியவர்களான, தனியாகப் பயணிக்கும் பெண்கள், கணவனை இழந்த மற்றும் கர்ப்பிணிப் பெண்கள், குழந்தைகள் மற்றும் வயது முதிர்ந்தவர்கள் ஆகியோராகவே இருந்தனர். இடம்பெயர்ந்த மக்கள் வாழ்ந்த எளிய உறை விடங்கள் துணியாலும், பழைய தார்ப்பாலினாலும் அமைக்கப்பட்டிருந்ததன் காரணமாக போதுமான பாதுகாப்பை வழங்கக்கூடியவையாக இல்லை. தேவை யான அளவிற்கான கழிப்பிட வசதிகளும் இல்லாததன் காரணமாகப் பெண்களுக்கு பெரும் துன்பத்தை ஏற்படுத்தியதோடு, பாலியல் வன்முறைகளுக்கான சாத்தியங் களை அதிகப்படுத்தின. நிறையப்பேர் நோய்வாய்ப்பட்டனர். இந்தக் கடினமான சூழல்களினாலும் இடப்பெயர்வின் காரணமாக ஏற்பட்ட நிரந்தரமற்ற நிலை யினாலும் இடம்பெயர்ந்த குழந்தைகள் குறிப்பாக பாதிக்கப்பட்டனர். அவர்களால் படிப்பைத் தொடர இயலவில்லை.

2006 தொடங்கி 2009 இன் தொடக்க காலம் வரையிலான காலக்கட்டத்தில், குறைந்தது 10 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டனர். பத்திரிகைத் தணிக்கை நடவடிக்கைகளுடன் இவ்வாறு கொல்லப்படுவது அல்லது தாக்கப்படுவது குறித்த அச்சமும் இணைந்து, ஊடகம் பங்காற்றக்கூடிய ஒரு சுதந்திரமான சூழலில் மிக மோசமான பாதிப்பை ஏற்படுத்தியது. பாதுகாப்புச் செயலாளர் கூறியதாக ஒரு செய்தி வெளிவந்தது : "என் முன் இரண்டு குழுக்கள் மட்டுமே உள்ளன. பயங்கரவாதத்திற்கு எதிராகப் போராடுபவர்கள் மற்றும் பயங்கரவாதிகள்."

இ) ஆயுதப்போர் நடத்தப்பட்ட விதம் குறித்த தகுதிவாய்ந்த குற்றச்சாட்டுகள்

1) முன்னேற்பாடுகள் :
வன்னியிலிருந்து பன்னாட்டுச் சமூகத்தின் இருப்பை விலக்குதல்

73) செப்டம்பர் 2008 இல் விடுதலைப்புலிகள் வலிமையாக இருந்த அவர்களின்

அங்கீகரிக்கப்படாத தலைநகரமான கிளிநொச்சிக்குள் 57 ஆவது மற்றும் 58 ஆவது படையணிகள் நுழைந்த நிலையில், அரசின் இராணுவ நடவடிக்கைகளானது ஒரு பெரும் முன்னேற்றத்தை அடைந்தன. விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த கிளிநொச்சியில் அய்.நா அதுவரையிலும் தனது அலுவலகங்கள் மற்றும் பிற பன்னாட்டு அமைப்புகளின் அலுவலகங்களைக் கொண்ட மனிதநேய தலைமையகத்தை கிளிநொச்சி நகருக்குள் கிளிநொச்சி பெட்டி என்று அழைக்கப் பட்ட பகுதியில் வைத்திருந்தது.

74) 2008 வெயில் காலத்தின் பிற்பகுதியில் கிளிநொச்சிப் பெட்டி மீது பல 'ஆர்ட்டிலரி' மற்றும் வான்தாக்குதல்கள் நடைபெற்றன. அந்தப் பகுதி பாதுகாப்புப் பகுதி என்று வரையறுக்கப்பட்டிருந்த போதும், இலங்கை அரசுக்கு அதன் கூறுகள் நன்கு தெரிந்திருந்த போதும் இவை நடந்தன. பின்னர் 8, செப்டம்பர் 2008 இல் வன்னியில் உள்ள மனிதநேயப்பணியாளர்களின் பாதுகாப்பிற்கு, தான் இனிமேல் உத்திரவாதம் அளிக்க இயலாது என அரசு அறிவித்தது. அய். நாவின் பன்னாட்டு அலுவலர்களும் பிற பன்னாட்டு அரசு சாரா நிறுவனங்களின் அலுவலர்களும் அம்மாத இறுதிக்குள் கிளிநொச்சிக்குள் இருந்து வெளியேற வேண்டும் என அரசு அறிவித்தது. அக்காலக்கட்டத்தில் அய்.நா.வுக்கு ஏற்பட்ட அச்சுறுத்தலானது, இலங்கை இராணுவத்தின் தாக்குதல்களால் எழுந்தவையே. இதன் காரணமாக, பாதுகாப்புக்கு உத்திரவாதம் அளிக்க இயலாது என்ற அரசின் கூற்றின் நம்பகத்தன்மை குறைக்கப்பட்டது. உண்மையில், அரசு பாதுகாப்பு அளிக்க விரும்பவில்லை.

75) அய்.நா வன்னியில் தனது நடவடிக்கைகளை நிறுத்திக் கொண்டு, தனது அலுவலகங்களை கிளிநொச்சியில் இருந்து வவுனியாவுக்கு மாற்ற முடிவெடுத்தது. பிற பன்னாட்டு அமைப்புகள், தங்களது பன்னாட்டு அலுவலர்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டனர். ஆனால் அய்.நாவின் உள் நாட்டுப் பணியாளர்கள் வெளியேறுவதற்கு விடுதலைப்புலிகள் அனுமதி அளிக்க மறுத்துவிட்டனர். பல பன்னாட்டு அரசுசாரா அமைப்புகளின் பெரும் எண்ணிக்கையிலான உள்நாட்டுப்



1. Frontlines, September 2008
Source: Government of Sri Lanka Ministry of Defence website

தனது படையணியின் எண்ணிக்கையைக் காப்பாற்றும் முயற்சியில் விடுதலைப்புலிகள் கட்டாயமாக ஆள் சேர்க்கும் நடவடிக்கையையே பெரிதும் சார்ந்திருந்தனர். முன்னதாக, ஒரு குடும்பத்திலிருந்து ஒருவர் என்ற அடிப்படையில் தனது படைக்கு ஆட்களைச் சேர்த்த விடுதலைப் புலிகள் இயக்கம், போர் தொடரத் தொடர அதன் கொள்கைகள் இறுக்கமடைந்து வன்மையாக நடைமுறைப் படுத்தப்பட்டன. ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 14 வயதே ஆன சிறுவர் சிறுமியர் உட்படப் பல குழந்தைகள் படையில் சேர்க்கப்பட்டனர்.

இடம்பெயர்ந்த மக்கள் வாழ்ந்த எளிய உறைவிடங்கள் துணியாலும், பழைய தார்ப்பாலினாலும் அமைக்கப்பட்டிருந்ததன் காரணமாக, போதுமான பாதுகாப்பை வழங்கக் கூடியவையாக இல்லை. தேவையான அளவிற்கான கழிப்பிட வசதிகளும் இல்லாததன் காரணமாக, பெண்களுக்கு பெரும் துன்பத்தை ஏற்படுத்தியதோடு பாலியல் வன்முறை களுக்கான சாத்தியங் களை அதிகப்படுத்தின.



பணியாளர்கள் ஏறத்தாழ 320 பேரும், அவர்களைச் சார்ந்து இருந்தவர்களும் வன்னியிலேயே தங்கினர். அய்.நா வின் பன்னாட்டு அலுவலர்கள் கிளிநொச்சியில் இருந்து வெளியேறத் தயாரான நிலையில், வான் தாக்குதல்கள் அய்.நா வளாகத்திற்கு வெகு அருகிலேயே நடத்தப்பட்டன. 15, செப்டம்பர் 2009 அன்று அவர்கள் வெளியேறிய போது, பொதுமக்கள் அவர்களைச் சுற்றி பெரும் கூட்டமாக கூடி நின்று அவர்கள் வெளியேறக் கூடாது எனக் கெஞ்சினர். அவர்கள் இல்லாத நிலை என்பது என்ன மாதிரியாக இருக்குமோ என அஞ்சினர்.

76) அய்.நா மற்றும் பன்னாட்டு அரசு சாரா நிறுவனங்களின் பன்னாட்டுப் பணியாளர்கள் கிளிநொச்சியில் இருந்து திரும்பப் பெறப்பட்டமையானது, போரின் இறுதிக்கட்டங்களில் மிக முக்கிய நிகழ்வாக இருந்தது. அந்த நொடியில் இருந்து பரந்துபட்ட உலகத்திற்கு வன்னியில் என்ன நடக்கிறது என்பதைப் பற்றி செய்திகளை அளிக்க, ஒரு வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கூட இருக்கவில்லை. இலங்கை இராணுவத்துடன் கூட்டணி அமைத்துக்கொண்ட அல்லது விடுதலைப் புலிகளுடன் பணியாற்றிய ஊடகவியலாளர்கள் மட்டுமே தொடர்ந்து செய்திகளை அளித்தனர். கைப்பேசிக் குறுந்தகவல்கள், மின்னஞ்சல்கள், தொலைபேசி அழைப்புகள் போன்றவற்றின் மூலம் பன்னாட்டு அமைப்புகளின் உள்நாட்டுப் பணியாளர்கள், மதத்தலைவர்கள், உள்ளூர் அரசு ஊழியர்கள், மருத்துவர்கள் அல்லது விடுதலைப்புலிகளுக்கு ஆதரவான இணைய தளமான 'தமிழ்நெட்' ஆகியவற்றின் மூலம் மட்டுமே செய்திகள் வெளிவந்தன. ஆனால், இந்தச் செய்தி மூலங்கள் அனைத்துமே தமிழர்களாக இருந்தமையால் அரசு அவற்றை நிராகரித்தது.

77) சனவரி 2009 இல், அரசு பல முக்கியமான வெற்றிகளைப் பெற்றிருந்தது. நவம்பர் 2008 இல் முக்கிய நகரமான பூநகரியை இராணுவம் கைப்பற்றியது. மேற்குக் கடற்கரையின் ஒரு பெரும்பகுதியை அது கைப்பற்றி, ஏ 32 நெடுஞ்சாலையை மீண்டும் திறந்தது. தொடர்ந்து சனவரி 2, 2009 அன்று இலங்கை இராணுவத்தின் 57 மற்றும் 58 ஆவது படையணிகள் கிளிநொச்சியைக் கைப்பற்றின. இலங்கை அதிபரும், பன்னாட்டுச் சமூகமும் 'விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கைவிட வேண்டும்' என வற்புறுத்தின. சனவரி 9, 2009 அன்று இலங்கை இராணுவத்தின் 53 ஆவது மற்றும் 55 ஆவது படையணிகள் ஆனையிறவைக் கைப்பற்றி ஏ 9 நெடுஞ்சாலையை விடுவித்தன.

கடந்த 23 ஆண்டுகளில் முதன் முறையாக அந்த ஒட்டுமொத்த நெடுஞ் சாலையையும் அரசுக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. அந்த மாதத்தின் பிற்பகுதியில், சனவரி 25 அன்று 59 ஆவது படையணி விடுதலைப்புலிகளின் மற்றொரு முக்கியத் தளமான முல்லைத்தீவைக் கைப்பற்றியது. இந்த நிகழ்வுகள் ஆயுதப்போரின் தொடர்ச்சி மற்றும் தீவிரத்தில் ஒரு புது நிலையைக் குறித்தன. இதன் மூலம் விடுதலைப்புலிகளின் ஒட்டுமொத்தத் தோல்வியானது வெளிப் படையாக உறுதிசெய்யப்பட்டது.

2) மனிதநேயப் பணிகளுக்கு அரசின் கட்டுப்பாடுகள்

78) அய்.நாவின் பன்னாட்டுப் பணியாளர்கள் கிளிநொச்சியைவிட்டு வெளியேறிய பிறகு, அய்.நாவின் மனிதநேய ஒருங்கிணைப்பாளர் மற்றும் உலக உணவுத்திட்டத்தின் இலங்கைப் பகுதிக்கான தலைவர் அரசுடன் ஓர் ஒப்பந்தத்தை மேற்கொண்டார். அதன் மூலம் அய்.நா தனது மனிதநேய உதவிகளை வாரந் தோறும் வன்னிக்கு அனுப்பி, அதன் மூலம் உணவு, உறைவிடம் மற்றும் மருத்துவ உதவிகளை அளிப்பதைத் தொடர அனுமதிக்கப்பட்டது. ஆனால் பாதுகாப்பு அமைச்சகமானது, பொருட்களை எடுத்துச் செல்லும் பணியாளர்கள் மீது அதீதமான கட்டுப்பாடுகளை விதித்ததோடு, தார்ப்பாலின் போன்ற உணவு அல்லாத பிற பொருட்கள் இராணுவத் தேவைகளுக்கு பயன்படுத்தப்படக்கூடும்

என்று வாதிட்டு அவற்றையும் கட்டுப்படுத்தியது. அத்துடன் உணவு மற்றும் மருந்து வழங்கலிலும் கட்டுப்பாடுகளை விதித்தது. அவை கீழே விரிவாக விளக்கப் பட்டுள்ளன. உதவிப் பொருட்களை ஏற்றிக் கொண்ட முதல் குழு, அக்டோபர் 3, 2008 அன்று வன்னிக்குள் நுழைந்தது. 5 மாத காலத்தில் ஏறத்தாழ 7435 மெட்ரிக் டன் உணவுப்பொருட்களைச் சுமந்துசென்ற 11க் குழுக்கள் வன்னிக்குள் சென்றன. ஆனால், இவை அங்கு இருந்த பொதுமக்களுக்குப் போதுமானதாக இல்லை.



2. Frontlines, January 2009
Source: Government of Sri Lanka Ministry of Defence website

79) இக்குழுக்களின் பயணத்தைச் சூழ்ந்திருந்த ஆபத்துகள் அதிகரித்த வண்ணம் இருந்தன. 9 ஆவது மற்றும் 10 ஆவதுக் குழுக்கள் சென்றபோது, சாலையில் இருந்து 200 மீட்டர் தொலைவில் குண்டுகள் விழுந்து வெடித்தன. இக்குழுக்களை இலங்கை இராணுவம், விடுதலைப்புலிகள் ஆகிய இருவருமே தங்களின் இராணுவ நிலைகளை முன்னே எடுத்துச் செல்வதற்கான கவசமாகப் பயன்படுத்தின. சனவரி 16, 2009 அன்று அய்.நா புதுக்குடியிருப்புக்கு தனது 11ஆவது உணவுக்குழுவை அனுப்பியது. இக்குழு வவுனியாவிலிருந்து ஓமந்தை வழியாகச் சென்றது. மனிதநேய உதவிகளை வழங்கியதோடு அய்.நா வின் உள் நாட்டுப் பணியாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்திருந்தவர்களை விடுவிக்க விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தக் குழுவில் சிலர் முயன்றனர். 11 ஆவதுக் குழுவில் 7 பன்னாட்டுப் பணியாளர்களும் 50 லாரிகளில் அடிப்படைத் தேவையான பொருட்களான அரிசி, சர்க்கரை, எண்ணெய் மற்றும் கோதுமை ஆகியவை கொண்டு செல்லப்பட்டன. குழு கொண்டு சென்ற பொருட்களை இறக்கிய பிறகும், மிகக்கடுமையாக நடந்த சண்டையின் காரணமாக வவுனியாவிற்கான சாலையில் செல்ல அனுமதிக்கப் படவில்லை. இச்சண்டை 4 நாட்களுக்கு நீடித்தது.

3) முதல் பாதுகாப்பு வலயத்தில் பொதுமக்கள் மீது இலங்கை இராணுவம் நடத்திய குண்டுவீச்சு

80) 20, சனவரி 2009 அன்று அரசு தன்னிச்சையாக ஒரு பாதுகாப்பு வலயத்தை

19 முதல் 21 சனவரிக்குள் இலங்கை இராணுவம் நடத்திய குண்டுவீச்சுத் தாக்குதல், முதல் பாதுகாப்பு வலயத்தில் அமைந்திருந்த வல்லிபுனம் மருத்துவமனை மீது விழுந்ததில் நோயாளிகள் கொல்லப்பட்டனர். போரின் இறுதிக்கட்டங்களில் ஏறத்தாழ வன்னியில் இருந்த அனைத்து மருத்துவமனைகளும், அவை நிரந்தரமானவை யாயினும் தற்காலிகமானவை யாயினும், 'ஆர்ட்டிலரி' தாக்குதலுக்கு உள்ளாயின. குறிப்பாக, காயமடைந்த விடுதலைப்புலிகள் இயக்கத்தினர் இருந்த மருத்துவமனைகள் தொடர் தாக்குதலுக்கு உள்ளாயின.

அறிவித்தது. வன்னியின் கட்டளைத்தளபதியான மேஜர் ஜெனரல் ஜெயசூர்யா, ஓர் அறிக்கையின் வழியாக, 'மீட்கப்படாத முல்லைத்தீவுப் பகுதிகளில் சிக்கிக்கொண்ட அல்லது விடுதலைப்புலிகளால் வலுக்கட்டாயமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு அதிகப்பட்ச பாதுகாப்பை வழங்குவதில் பாதுகாப்புப் படையினர் உறுதி கொண்டிருக்கும் நிலையில், இராணுவத் தலைமையகம் இப்பகுதியைப் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கிறது' என அறிவித்தார். பாதுகாப்பு வலயத்தின் வரைபடங்களும் எல்லைகளும் மாவட்ட அதிகாரிகளின் வழியாக மக்களிடம் கொண்டு சேர்க்கப்பட்டன. பாதுகாப்பு வல ய அறிவிப்புத் தங்களைக் கட்டுப்படுத்தாது என விடுதலைப்புலிகள் அதனை ஏற்க மறுத்தனர். பாதுகாப்பு வலயம் அமைக்கப்பட்ட பகுதி விடுதலைப்புலிகளின் மேற்கு மற்றும் தெற்கு எதிர் முனைகளைக் கடந்ததாக இருந்தது. அதன் எல்லை ஏ-35-அய் ஒட்டியும் முன்னேறிக்கொண்டிருந்த இலங்கை இராணுவத்தின் முன்னணிப் படையினரிடமிருந்து 800 மீட்டர் தொலைவில்தான் இருந்தது.

அய்.நா.வின் பணியாளர்கள், முதல் காலை வெளிச்சத்தில் கிடைத்த முதல் வாய்ப்பில், பதுங்கு குழியில் இருந்து வெளியே வந்தபோது, அவர்களைச் சுற்றி சிதைந்த உடல்களும், உறுப்புகளும் சிதறிக்கிடந்தன. இவற்றில் பெண்கள் மற்றும் குழந்தைகளும் அடங்குவர். குழந்தைகளின் உடல் பகுதிகள் வெடித்து, மேலுயர்ந்து மரங்களில் ஒட்டிக்கிடந்தன. முந்தின நாள் பதுங்குக்குழிகளை வெட்ட உதவியவர்களும் கொல்லப்பட்டவர்களில் இருந்தனர்.



81) 19 முதல் 21 சனவரிக்குள் இலங்கை இராணுவம் நடத்திய குண்டுவீச்சுத் தாக்குதல் முதல் பாதுகாப்பு வலயத்தில் அமைந்திருந்த வல்லிபுனம் மருத்துவமனை மீது விழுந்ததில் நோயாளிகள் கொல்லப்பட்டனர். போரின் இறுதிக்கட்டங்களில் ஏறத்தாழ வன்னியில் இருந்த அனைத்து மருத்துவ மனைகளும் அவை நிரந்தரமானவையாயினும் தற்காலிகமானவையாயினும் 'ஆர்ட்டிலரி' தாக்குதலுக்கு உள்ளாயின. காயமடைந்த விடுதலைப்புலிகள் இயக்கத்தினர் இருந்த மருத்துவமனைகள் குறிப்பாக தொடர்த் தாக்குதலுக்கு உள்ளாயின.

82) 21 சனவரி 2009 இல் அய். நா வின் 11 ஆவதுக் குழு புதுக்குடியிருப்பிலிருந்து வெளியேறி வவுனியாவிற்கு தனது உள்நாட்டுப் பணியாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்களை ஏற்றிக் கொண்டு செல்ல முற்பட்டது. ஆனால், இக்குழு வவுனியாவை நோக்கிச் செல்வதற்கு விடுதலைப்புலிகள் அனுமதி அளிக்க மறுத்துவிட்டனர். உள்நாட்டுப் பணியாளர்கள் குழுவில் இருந்ததே இதற்குக் காரணம். இதன்பிறகு பெரும்பான்மையான பன்னாட்டுப் பணியாளர்கள் வவுனியாவிற்குத் திரும்பிவிட்டனர். உள்நாட்டுப் பணியாளர்களுடன் தங்க விருப்பம் தெரிவித்த 2 பன்னாட்டுப் பணியாளர்கள் மட்டும் அங்கேயே இருந்தனர்.

83) 23 சனவரி 2009 அன்று, புதுக்குடியிருப்பின் மீதான இலங்கை இராணுவத் தாக்குதல்கள் அதிகரித்த நிலையில் அய்.நா வின் பணியாளர்கள் முதல் பாதுகாப்பு வலயத்திற்குள் இடம்பெயர்ந்தனர். சுதந்திரபுரம் சந்திப்பிற்கு அருகே ஏ 35 நெடுஞ்சாலையில் அவர்கள் தங்களின் இருப்பிடத்தை அமைத்துக் கொண்டனர். அதனை வன்னியின் கட்டளைத் தளபதிக்கும் தெரிவித்தனர். பெரும் எண்ணிக்கையிலான பொதுமக்களும் பாதுகாப்பு வலயத்திற்கு இடம்பெயர்ந்து. அய்.நா. வின் இருப்பிடத்தைச் சுற்றித் தங்களுக்கான இருப்பிடங்களையும் அமைத்துக் கொண்டனர். பெரும்பாலான பொதுமக்கள் ஏ 35 க்கு சற்று வடக்கே தங்கள் இருப்பிடங்களை அமைத்துக் கொண்டனர். பாதுகாப்பு வலயத்தின் பிற இடங்கள் இருப்பிடங்களை அமைத்துக்கொள்வதற்கு ஏற்றவையாக இல்லை. மாவட்டத்தின் கூடுதல் நிர்வாக அதிகாரி அதன் அருகில் உணவு வழங்கும் மையத்தை அமைத்தார். பகலில் தெற்கிலிருந்த அரசுக் கட்டுப்பாட்டுப் பகுதியி லிருந்து சுடப்பட்ட குண்டுகள் பாதுகாப்பு வலயத்தில் அவ்வப்போது விழுந்தன. மாலையில் உணவு வழங்கும் நிலையத்தில் விழுந்த குண்டுகள், பெரும் எண்ணிக்கையிலான பொதுமக்களைக் கொன்றும் காயப்படுத்தியும் விட்டன.

84) சனவரி 24 அன்று அதிகாலையில் நூற்றுக்கணக்கான குண்டுகள் பாதுகாப்பு வலயத்தில் மழையாய்ப் பொழிந்தன. அய்.நா வின் பதுங்குகுழிக்கு அருகில் இருந்தவர்கள் தங்களைக் காத்துக்கொள்ள அதற்குள் குதித்தனர். ஆனால், பெரும்பாலான மக்கள் பதுங்குகுழிகள் இல்லாத நிலையில் தங்களைக் காத்துக்



3. No Fire Zones in the Final Stages of the War

கொள்ள வேறு இடமும் அற்று நின்றனர். உதவி வேண்டி மக்கள் கூச்சலிட்டும் அழுதுகொண்டும் இருந்தனர். அங்கிருந்த அய்.நாவின் மிகவும் அனுபவம் மிக்க பாதுகாப்பு அதிகாரியும் பிறரும் இந்த குண்டுகள் தெற்கில் இருந்து, அதாவது இலங்கை இராணுவ நிலைகளிலிருந்து வந்ததை உறுதிப் படுத்தினர்.

கொழும்பில் இருந்த அய்.நா பாதுகாப்புப் பிரிவின் தலைமைக்கு அவர் தொடர்ந்த அழைப்புகளை விடுத்தார். அத்துடன் வவுனியாவில் இருந்த வன்னிப் படைகளின் கட்டளைத் தளபதிக்கும், கொழும்பில் இருந்த கூட்டு நடவடிக்கைகள் தலைமையகத்திற்கும் தொடர் அழைப்புகள் விடுத்து, குண்டு வீச்சுகளை நிறுத்தக் கோரினார். இவற்றின் விளைவாக, தற்காலிகமாக குண்டுவீச்சுகள் நிறுத்தப்பட்டு, மீண்டும் தொடர்ந்தன. இரவு முழுவதும் கடுமையான குண்டு வீச்சுகள் தொடர்ந்தன. அய்.நாவின் இருப்பிடம் மற்றும் உணவு வழங்கல் நிலையம் ஆகியவற்றையும் குண்டுகள் தொடர்ந்து தாக்கி எண்ணற்ற பொதுமக்களைக் கொன்றன.

85) அய்.நாவின் பணியாளர்கள், முதல் காலை வெளிச்சத்தில் கிடைத்த முதல் வாய்ப்பில், பதுங்கு குழியில் இருந்து வெளியே வந்தபோது, அவர்களைச் சுற்றி சிதைந்த உடல்களும், உறுப்புகளும் சிதறிக்கிடந்தன. இவற்றில் பெண்கள் மற்றும் குழந்தைகளும் அடங்குவர். குழந்தைகளின் உடல் பகுதிகள் வெடித்து, மேலுயர்ந்து மரங்களில் ஒட்டிக்கிடந்தன. முந்தின நாள் பதுங்குகுழிகளை வெட்ட உதவியவர்களும் கொல்லப்பட்டவர்களில் இருந்தனர்.

86) பாதுகாப்பு வலயத்தில் விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்களும் இருந்த போதும் அய். நா இருப்பிடத்திற்குள் அவர்கள் இல்லை. அவ்விடத்தில் இருந்து ஏறத்தாழ 500 மீட்டர்கள் தள்ளியிருந்தும், பாதுகாப்பு வலயத்திற்குள் பின்னால் இருந்தும், விடுதலைப்புலிகள் 'ஆர்ட்டிலரி'களை வெடித்தனர். ஆனால் அய்.நா.வின் இருப்பிடம் இருந்த பகுதி மிகத் தெளிவாகப் பொதுமக்கள் வாழ்விடமாகவே இருந்தது. பாதுகாப்பு வலயத்தில் இருந்த ஒரே பன்னாட்டு அமைப்பான அய்.நா.வின் இருப்பிடத்தில் குண்டுமழை பொழிந்ததற்கு, அரசு எவ்வித விளக்கத்தையும் அளிக்கவே இல்லை.

சாலையோரம், சிதைந்த இருப்பிடங்கள், சிதறடிக்கப்பட்ட உடைமைகள் மற்றும் இறந்துபோன மிருகங்களுக்கு நடுவே கொல்லப்பட்ட அல்லது மிக மோசமாக காயம்பட்ட பொதுமக்கள் கிடந்தனர். நூற்றுக்கணக்கான சிதைந்த வாகனங்களும் சாலையோரமாகக் கிடந்தன. வல்லிபுனம் மருத்துவமனையில் நிறுத்தப்பட்டிருந்த ஆம்புலன்ஸ்கள் மிக மோசமாகச் சிதைந்திருந்தன.

87) தடையின்றி கடுமையான குண்டு வீச்சுகள் தொடர்ந்தன. பாதுகாப்பு வலயத்திற்குள் தெளிவான மருத்துவ முத்திரைகளோடு இருந்த உடையார்கட்டு மருத்துவமனையை சனவரி 24 அன்று பல குண்டுகள் தாக்கின. சனவரி 25 அன்று இரவு முதல் பாதுகாப்பு வலயமும் அய்.நா வின் இருப்பிடமும் இருந்த பகுதியைச் சுற்றியும் தொடர் குண்டுவீச்சுகள் நடத்தப்பட்டன. முதல் பாதுகாப்பு வலயத்தில் தொடர்ந்து இருநாட்களாக நடந்த குண்டு வீச்சில் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டனர். மேலும் அதிகமானோர் காயமடைந்தனர். கடுமையான குண்டு வீச்சிலிருந்து தப்பிக்க பொதுமக்கள் பாதுகாப்பு வலயத்திலிருந்து தப்பி, இலங்கை இராணுவத்திலிருந்து விலகி, வடக்கே இரணைப்பாலையை நோக்கியோ அல்லது மீண்டும் புதுக்குடியிருப்புக்கோ சென்றனர். உலகளாவிய செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் கூடுதல் மாவட்ட நிர்வாக அதிகாரி ஆகியோருடன் அய்.நா.வின் குழுவும் பாதுகாப்பு வலயத்தை விட்டு வெளியேறிப் புதுக்குடியிருப்புக்குத் திரும்ப முடிவெடுத்தன. அவர்கள் வெளியேறியப் பிறகு அவர்கள் கைவிட்டுச் சென்ற பதுங்குகுழிக்குள் பதுங்க நூற்றுக்கணக்கான பொதுமக்கள் ஓடிச்சென்றனர்.

முதல் பாதுகாப்பு வலயத்தின் மீது நடத்தப்பட்ட குண்டு தாக்குதல்கள், போரில் ஒரு முக்கிய திருப்புமுனையாக இருந்தன. பொதுமக்களின் இழப்பு அதிகரித்துக் கொண்டே இருந்தது. புதுக்குடியிருப்பு மருத்துவமனையில், முதல் பாதுகாப்பு வலயத்தில் காயம்பட்ட நூற்றுக்கணக்கான பொதுமக்கள் நிரம்பி வழிந்தனர். 'ஆர்ட்டிலரி' தாக்குதல் அல்லது தீக்காயங்கள் காரணமாக, மோசமான அல்லது உயிருக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய கடுமையான காயங்களைக் கொண்ட பலர் அதில் இருந்தனர்.

88) புதுக்குடியிருப்புக்குச் செல்லும் சாலையான ஏ 35 நெடுஞ்சாலையின் வழி நெடுகிலும் பாதுகாப்பு வலயத்திற்குள் தென்பட்ட காட்சியானது, மிகப்பெரும் அழிவைக் காட்டுவதாகவும், பயிர்கள்கூட சிதறடிக்கப்பட்ட நிலையிலும் இருந்தன. சாலையோரம் சிதைந்த இருப்பிடங்கள், சிதறடிக்கப்பட்ட உடைமைகள் மற்றும் இறந்துபோன மிருகங்களுக்கு நடுவே கொல்லப்பட்ட அல்லது மிக மோசமாகக் காயம் பட்ட பொதுமக்கள் கிடந்தனர். நூற்றுக்கணக்கான சிதைந்த வாகனங்களும் சாலையோரமாகக் கிடந்தன. வல்லிபுனம் மருத்துவமனையில் நிறுத்தப்பட்டிருந்த ஆம்புலன்சுகள் மிக மோசமாகச் சிதைந்திருந்தன.

89) இது, பாதுகாப்பு வலயத்திற்கு வெளியே மஞ்சள் பாலம் நெடுகிலும் மேலும் ஏ 35 இன் ஓரங்களிலும் இருந்த நிலைக்கு நேர் மாறாக இருந்தது. இவ்விடங்களில் குண்டு வீச்சிற்கான மிகச்சில அடையாளங்களே இருந்தன. அரசு அமைத்த பாதுகாப்பு வலயத்திற்கு வெளியே புதுக்குடியிருப்பு இருந்தபோதும், அப்பகுதிமீது குண்டு வீச்சு நடத்தப்படவில்லை. அதிலும் அப்பகுதிகளிலேயே விடுதலைப்புலிகள் பெரும் எண்ணிக்கையில் இருந்தனர் என்பதும், பொதுமக்கள் மிகக்குறைவான எண்ணிக்கையிலேயே இருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

4) புதுக்குடியிருப்பு மருத்துவமனை மீது இலங்கை இராணுவத்தின் குண்டுவீச்சு

90) புதுக்குடியிருப்பைக் கைப்பற்ற 55 மற்றும் 58ஆவது படையணிகள் மேற்கொண்ட முயற்சிகளின் காரணமாக, இலங்கையின் விடுதலையை குறிக்கும் நாளான பிப்ரவரி 4 அன்று அப்பகுதியில் சண்டை கடுமையானது. வன்னியில் எஞ்சியிருந்த ஒரே நிரந்தர மருத்துவமனை புதுக்குடியிருப்பு மருத்துவமனை மட்டுமே. அந்த மருத்துவமனையின் சார்பற்ற தன்மையை அரசு மற்றும் விடுதலைப்புலிகள் ஆகிய இருவருமே அங்கீகரித்துள்ளனர். 5 மருத்துவர்கள் உள்ளிட்ட மருத்துவமனை ஊழியர்கள் அவைனவரும் தங்களது ஆற்றலை மீறியும் பணிபுரிந்தனர். மருத்துவப் பொருட்களோ குறைந்த அளவிலேயே இருந்தன. முதல் பாதுகாப்பு வலயத்தின் மீது நடத்தப்பட்ட குண்டு தாக்குதல்கள், போரில் ஒரு முக்கிய திருப்புமுனையாக இருந்தன.

பொதுமக்களின் இழப்பு அதிகரித்துக் கொண்டே இருந்தது. புதுக்குடியிருப்பு மருத்துவமனையில், முதல் பாதுகாப்பு வலயத்தில் காயம்பட்ட நூற்றுக்கணக்கான பொதுமக்கள் நிரம்பி வழிந்தனர். 'ஆர்ட்டிலரி' தாக்குதல் அல்லது தீக்காயங்கள் காரணமாக, மோசமான அல்லது உயிருக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய கடுமையான காயங்களை கொண்ட பலர் அதில் இருந்தனர். கிடைத்த ஒவ்வொரு

இடத்திலும், படுக்கைகளில், மேசைகளுக்கு அடியில், பாதைகளில், வெளியே சாலையோரத்தில், என எல்லா இடங்களிலும் பாதிக்கப்பட்ட மக்கள் நிரம்பி யிருந்தனர். இவர்களில் பெரும்பான்மையானவர்கள் குழந்தைகள், சிறுவர்கள் மற்றும் வயதில் முதிர்ந்தவர்கள் ஆவர்.

91) சனவரி 29 2009 அன்று, அங்கு எஞ்சியிருந்த அய்.நாவின் 2 பன்னாட்டு ஊழியர்களும் வவுனியாவை நோக்கிக் கிளம்பினர். ஆனால், அவர்களுடன் உள்நாட்டு ஊழியர்கள் கிளம்ப அப்போதும் விடுதலைப்புலிகள் அனுமதி அளிக்க மறுத்தனர். செஞ்சிலுவைச் சங்கம் ஒரு சிறப்புக் குழுவை தனியே அனுப்பி காயம்பட்ட 200 நோயாளிகளை வெளியேற்றியது. அதைத் தொடர்ந்து உடனடி யாக, 29 சனவரி முதல் 4 பிப்ரவரி வரையான ஒரு வார காலத்தில் புதுக்குடியிப்பு மருத்துவமனை தினமும் 'எம்.பி.ஆர்.எல்.'கள் மற்றும் பிற 'ஆர்ட்டிலரி'களால் தொடர்ந்து தாக்கப்பட்டது. குறைந்தது ஒன்பது குண்டுவீச்சுகள் நேரடியாக மருத்துவமனையைத் தாக்கின. இதனால் ஏற்கனவே காயம்பட்டிருந்த பல நோயாளிகளும் மருத்துவமனை ஊழியர்களும் கொல்லப்பட்டனர். அறுவை சிகிச்சை அரங்கும் கூடத் தாக்கப்பட்டது. பிப்ரவரி 4 2009 அன்று மருத்துவமனை தாக்கப்பட்ட போது, 2 செஞ்சிலுவைச் சங்கப் பன்னாட்டு ஊழியர்கள் இருந்தனர். குண்டு வீச்சுகள் இலங்கை இராணுவத்தின் நிலைகளில் இருந்தே வந்திருந்தன.

92) புதுக்குடியிருப்பு மருத்துவமனை அமைந்திருந்த இடத்தின் சரியான அளவுகோல்கள் இலங்கை இராணுவத்திற்கு தெரிந்தே இருந்தது. ஆளற்ற விமானங்களின் பார்வையில் எளிதில் படும்படியாக மருத்துவமனை முத்திரைகள் பெரிய அளவில் தெளிவாக பதிக்கப்பட்டிருந்தன. பிப்ரவரி 1 2009 அன்று, செஞ்சிலுவைச் சங்கம் ஒரு பொது அறிக்கையை வெளியிட்டது, அதில், 'காயம் பட்ட மற்றும் நோய்வாய்ப்பட்ட மக்கள் மருத்துவ ஊழியர்கள் மற்றும் மருத்துவ வசதிகள் ஆகியவை உலகளாவிய மனிதநேயச் சட்டத்தின் பாதுகாப்புக்கு உட்பட்டவை. எச்சூழலிலும் அவற்றின் மீது நேரடியான தாக்குதல் நடத்தக் கூடாது' என வலியுறுத்தி இருந்தனர்.

93) இதற்குப் பதில் அளித்த 'மனித உரிமைகள் மற்றும் பேரழிவு மேலாண்மை அமைச்சகம்', செஞ்சிலுவைச் சங்கம் அலட்சியமாகவோ அல்லது அறியாமை யிலோ இருக்கிறது எனக் குற்றம் சாட்டியது. தொடக்கத்தில் மருத்துவமனை மீது தாக்குதல் நடத்தியதை அரசு மறுத்த போதும், பிப்ரவரி 2 2009 அன்று 'ஸ்கை நியூசு' தொலைக்காட்சிக்கு வழங்கிய நேர்காணலில் பாதுகாப்புச் செயலாளர் கீழ்க் காணும் அறிக்கையை அளித்தார். 'அவர்கள் புதுக்குடியிருப்பு மருத்துவமனையை குறிப்பிடுகிறார்கள் என்றால், தற்போது அங்கு எந்த ஒரு மருத்துவமனையும் இருக்க இயலாது. ஏனெனில், நாங்கள் அவற்றைத் திரும்ப பெற்றுவிட்டோம். அங்கிருந்து எல்லா நோயாளிகளையும் வவுனியாவிற்கு அழைத்துச் சென்று விட்டோம். எனவே, பாதுகாப்பு வலயத்திற்கு அப்பால் எதுவும் இருக்க இயலாது. எந்த ஒரு மருத்துவமனையும் அங்கு செயல்படக் கூடாது. எதுவும் செயல்படக் கூடாது. இதற்காகவே நாங்கள் மிகத் தெளிவாக பாதுகாப்பு வலயங்களை ஏற்படுத் தினோம். விடுதலைப் புலிகளை, பயங்கரவாதிகளை நசுக்க, பொருத்தமற்றது என்று எதுவும் இல்லை'.

94) கிளிநொச்சி வீழ்ந்த பிறகு, இலங்கை இராணுவத்திற்கு எதிரான போரில், புதுக்குடியிருப்புதான் விடுதலைப் புலிகளின் உறுதியான நிலையாக இருந்தது. இதன் விளைவாகப் புதுக்குடியிருப்பு பகுதியில், விடுதலைப்புலிகள் கணிசமான அளவில் இருந்தனர். புதுக்குடியிப்பு மருத்துவமனையில் தங்களின் காயம்பட்ட போராளிகளுக்கென ஒரு தனியான பகுதியை அவர்கள் செயல்படுத்தி வந்தனர். ஆனால், அந்தப் போராளிகள் ஆயுதம் தரித்திருக்கவில்லை. அவர்களின் முன்னணிப் படை, அருகிலேயே இருந்தது. புதுக்குடியிருப்புப் பகுதிகளில் சண்டையின் தீவிரம் அதிகரித்த நிலையில், காயம்பட்ட விடுதலைப்புலிகள் அதிகமாக



கிடைத்த ஒவ்வொரு இடத்திலும் – படுக்கை களில், மேசைகளுக்கு அடியில், பாதைகளில், வெளியே சாலை யோரத்தில் என எல்லா இடங்களிலும் பாதிக்கப் பட்ட மக்கள் நிரம்பி யிருந்தனர். இவர்களில் பெரும்பான்மையானவர்கள் குழந்தைகள், சிறுவர்கள் மற்றும் வயதில் முதிர்ந்தவர்கள் ஆவர்.

மருத்துவமனைக்கு வரத் தொடங்கினர். மருத்துவமனைக்கு அருகில் விடுதலைப் புலிகள் நடமாடும் 'ஆர்ட்டிலரி'யை பயன்படுத்தினர் என்றாலும், மருத்துவ மனையைக் காலி செய்யும் வரை அதனை இராணுவக் காரணங்களுக்கு அவர்கள் பயன்படுத்தவில்லை என்ற போதும், அந்தப் பகுதியைக் கைப்பற்றும் ஆர்வத்தில், இலங்கை இராணுவமானது மருத்துவமனையையும், அதைச் சுற்றியிருந்த பகுதிகளையும் தொடர்ந்து தாக்கியது. இடையறாத குண்டு வீச்சின் காரணமாக, புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் இருந்த ஏறத்தாழ 300 நோயாளிகளை 6 முதல் 8 கிலோ மீட்டர் தொலைவில் நந்திக்கடலுக்கு அடுத்து இருந்த கடற்கரையோரப் பகுதியான புதுமாத்தளனுக்குக் கொண்டு செல்ல மண்டல மருத்துவச் சேவைகளுக்கான இயக்குநர், அய்.நா., மாவட்ட உதவி நிர்வாக அதிகாரி மற்றும் செஞ்சிலுவைச் சங்கம் ஆகியோர் முடிவு செய்தனர். பிப்ரவரி 6, 2009 அன்று, பொன்னம்பலம் மருத்துவமனை என்ற தனியார் மருத்துவமனை தாக்கப்பட்டதில் அதன் ஒரு பகுதி முற்றிலும் சிதைந்தது. இந்த மருத்துவமனையின் ஒரு பகுதியை விடுதலைப்புலிகள் பயன்படுத்தி வந்தனர்.

பிப்ரவரி 6 2009இல் இருந்தே இரண்டாவது பாதுகாப்பு வலயம் என அறிவிக்கப்பட்ட பகுதிக்குள் நிலம், கடல், வான் என எல்லா திசைகளில் இருந்தும் இலங்கை இராணுவம் தொடர்ந்து குண்டுவீச்சுகளை நடத்தியது. அந்தச் சின்ன பகுதிக்குள் ஏறத்தாழ 3 லட்சம் முதல் 3 லட்சத்து 30 ஆயிரம் வரையிலான மக்கள் இருந்ததாகக் கணிக்கப்பட்டது.

95) கடுமையான எதிர்ப்பைச் சந்தித்ததால், புதுக்குடியிருப்பு பகுதியில் விடுதலைப்புலிகளுடன் நடந்த சண்டையில் இலங்கை இராணுவம் பெரும் பின்னடைவையும், அதிக அளவிலான இழப்பையும் சந்தித்தது. ஏப்ரல் 5 2009 வரை 58 மற்றும் 53 ஆவது படையணிகளால் புதுக்குடியிருப்பை கைப்பற்ற இயல வில்லை. பிப்ரவரி 5 அன்று கடற்புலிகளின் உறுதியான பிடியில் இருந்த சாளை என்ற ஊர், 55 ஆவது படையணியால் கைப்பற்றப்பட்டது.

96) ஆனந்தபுரம், இரணைப்பாலை, தேவிபுரம் ஆகிய இடங்களில் நடை பெற்றுக் கொண்டிருந்த கடுமையான சண்டையில் இருந்து தப்பிக்க, பெரும் எண்ணிக்கையிலான பொதுமக்கள், இறுதி அடைக்கலமாக இருந்த கடற்கரையை நோக்கி ஓடினர். அம்பலவான் பொக்கனை, கரிய முள்ளிவாய்க்கால், புதுமாத்தளன், வலையன்மடம் மற்றும் வெள்ளை முள்ளிவாய்க்கால் ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய 12 கிலோ மீட்டர் நீளக் கடற்கரையோரப் பகுதியை தனது இரண்டாவது பாதுகாப்பு வலயமாக பிப்ரவரி 12 2009 அன்று அரசு அறிவித்தது.

5) இரண்டாவது பாதுகாப்பு வலயத்தில், விடுதலைப் புலிகளின் கட்டாய ஆள்சேர்ப்பு மற்றும் கட்டாய வேலை வாங்குதல்

97) விடுதலைப்புலிகள் படையணியினர், தங்களது இறுதி எதிர்ப்பை நெருங்கிய நிலையில் இரண்டாவது பாதுகாப்பு வலயத்திற்குள், குறிப்பாக முள்ளிவாய்க்கால் பகுதிக்குள் இருந்த கடற்கரைப் பகுதிக்குள் நகர்ந்தனர். அங்கு பெரும் எண்ணிக்கையிலான பதுங்கு குழிகள் மற்றும் தடுப்புச் சுவர்களை விடுதலைப்புலிகளின் தலைமை கொண்டிருந்தது. இங்கு தான் அவர்கள் தங்களது இறுதி நிலையை மேற்கொண்டனர். விடுதலைப்புலிகளின் நடமாட்டம் முடக்கப்பட்டது. பாதுகாப்பு வலயம் நெடுகிலும் மண் தடுப்புகளை தங்களுடைய பாதுகாப்பிற்காக அவர்கள் அமைத்தனர். இடம் பெயர்ந்த மக்களிடையே நின்று தங்களது 'மார்ட்டர்'களையும் பிற 'ஆர்ட்டிலரி'களையும் நிலைப்படுத்தியதன் காரணமாக, அரசு தரப்பிலிருந்து அதனை நோக்கிய தாக்குதல்களும் அதனால் பொதுமக்கள் இழப்பும் ஏற்பட்டது. விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்கள், இந்த நிலையில் எப்பொழுதும் சீருடையுடன் நடமாடவில்லை. யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி முனைகளில் ஏற்பட்ட தோல்வியின் காரணமாக, விடுதலைப்புலிகளின் பொருள் வரத்தும், போக்குவரத்தும் பெரும் பாதிப்படைந்தது. இதனால் அவர்களால் தங்களது பொருட்களையும் ஆயதங்களையும் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு எடுத்துச் செல்வது இயலாததாக இருந்தது. இதன் காரணமாக எரிபொருள், குண்டுகள் மற்றும் சில உணவுப் பொருட்கள் ஆகியவை விடுதலைப்புலிகளுக்கு கிடைக்கவில்லை. சில ஆயுதங்கள் அவர்களிடம் இருந்த போதும் பெரிய 'ஆர்ட்டிலரி'களின் எண்ணிக்கை



4. IDP settlement near Putumattalan Hospital in second No Fire Zone, March 2009
Source: submission to the Panel by the photographer

குறைவாகவே இருந்தது. இவற்றில் சிறிய அளவிவாள எம்.பி.ஆர்.எல்களும் அடங்கும். இலங்கை விமானப்படை வான்பகுதியை முழுமையாகத் தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தது. இதனால் வானில் இருந்து அடையாளம் காண்பதைக் கடினமாக்கும் முயற்சியில், தங்களது ஆயுதங்களையும் தளவாடங்களையும் செடி கொடிகளைக் கொண்டு மறைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

98) அவர்களது இராணுவ நிலை மிக மோசமான பாதிப்பிற்கு ஆளான போதும் விடுதலைப்புலிகள் சரணடைய மறுத்ததோடு, பொதுமக்கள் தொடர்ந்து தங்களுக்கான மனித அரணாக இருக்கும் வகையில், அவர்கள் அங்கிருந்து வெளியேறுவதைத் தொடர்ந்து தடுத்து வந்தனர். இராணுவக் கட்டுமானங்கள் மற்றும் தடுப்புச் சுவர்கள் போன்றவற்றை கட்ட உதவவும் அல்லது பிற வகையான உடல் உழைப்பில் ஈடுபடவும் பொதுமக்களை அவர்கள் வற்புறுத்தினர். அத்துடன், தங்களது படையின் எண்ணிக்கை குறைவதைச் சமாளிக்க குழந்தைகள் உட்பட பொதுமக்களை கட்டாயமாக இயக்கத்தில் இணைத்துக் கொள்ளும் வழக்கத்தை அதிகரித்தனர். விடுதலைப்புலிகளின் கட்டாய ஆள்சேர்ப்பு அதிகரித்த நிலையில், பெற்றோர்கள் அதனைக் கடுமையாக எதிர்த்தனர். தங்கள் குழந்தைகளைக் கட்டாய ஆள்சேர்ப்பு பணியில் இருந்து காக்க, குடும்பங்கள் பலவித நடவடிக்கைகளை மேற்கொண்டன. இரகசிய இடங்களில் தங்களது குழந்தைகளை மறைப்பது அல்லது மிக இளவயதில் திருமணங்களை ஏற்பாடு செய்து கட்டி வைப்பது போன்றவற்றை மேற்கொண்டனர். கட்டாய ஆள்சேர்ப்பிற்கு எதிர்ப்பு தெரிவித்தால், விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்கள் அவர்களது உறவினர்களை அல்லது பெற்றோர்களை அடித்தனர். சில சமயம் மிகக் கடுமையாகவே தாக்கியுள்ளனர். இந்த அணுகுமுறைகள் அனைத்தும் விடுதலைப்புலிகளையும் அதன் தலைமையையும் காப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தன. இவை பொதுமக்களின் பரிதாபகரமான நிலையின் கொடூரத் தன்மையை சித்தரிப்பதாகவும், தங்களது உயிரைத் தியாகம் செய்யும் விருப்பத்தை காட்டுவதாகவும் அமைந்திருந்தது.

இலங்கை இராணுவத்தின் தாக்குதலானது, வான்வழி குண்டுவீச்சு, நீண்ட தூர 'ஆர்ட்டிலரி', 'ஹோவிட்சர்'கள் மற்றும் 'எம்.பி.ஆர்.எல்.'கள் ஆகியவற்றுடன் சின்ன 'மார்ட்டர்'கள், 'ஆர்.பி.ஜி.'கள் மற்றும் சிறு துப்பாக்கிச் சூடு ஆகியவற்றையும் பயன்படுத்தியது.

99) இரண்டாவது பாதுகாப்பு வலயத்தில் நிலைமை மோசம் அடைந்தபோது,

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியில் இருந்து தப்பி ஓடப் பெரும் எண்ணிக்கையிலான பொதுமக்கள் முயன்றனர். குளங்கள் மற்றும் கண்ணிவெடிகள் மிகுந்திருக்கும் வழியாக, பெரும்பாலும் இரவு நேரத்தில், நீண்ட தூரத்தைப் பொதுமக்கள் கடந்து சென்றனர். தவிர்க்க இயலாமல் மக்கள் கண்ணிவெடிகளை மிதித்து, அதனால் தங்களது உறுப்புகளை இழந்தனர் அல்லது பெரும் காயம் அடைந்தனர். பிப்ரவரி மாதத்தின் தொடக்கத்தில் தப்பி ஓட முயன்ற மக்களைச் சுடும் நடவடிக்கையை விடுதலைப்புலிகள் தொடங்கினர். இந்நிலையில் பொது மக்கள் தப்பி ஓடக்கூடிய இடங்களைக் காண வசதியான நிலைகளில் போராளிகள் தங்களை நிறுத்திக் கொண்டனர்.

பிப்ரவரி 25 அன்றும் மீண்டும் ஏப்ரல் 27 அன்றும் இலங்கை அரசு, ''இலங்கை இராணுவ மானது கனரக ஆயுதங் களை 2 ஆவது மற்றும் 3 ஆவது பாதுகாப்பு வல யத்திற்குள் இனி பயன்படுத்தாது'' என அறிவித்தது. ஆனால், உண்மையில் களத்தில் நடந்தது நேர் எதிராக இருந்தது. இலங்கை இராணுவத்தின் இராணுவ நடவடிக்கைகளில் தொடக்கத்தில் இருந்தே கடுமையான 'ஆர்ட்டிலரி' சூடுகளை நடத்துவது, அதன் அடிப்படைத் திட்டமாகவே இருந்தது. வெற்றி நெருங்க நெருங்க இந்தத் திட்டம் கைவிடப்படுவதற்கு மாறாக, அதன் பயன்பாடு மேலும் தீவிரமடைந்தது.

6) இரண்டாவது பாதுகாப்பு வலயத்தின் மீது இலங்கை இராணுவத்தின் குண்டுவீச்சு

100) பிப்ரவரி 6 2009இல் இருந்தே இரண்டாவது பாதுகாப்பு வலயம் என அறிவிக்கப்பட்ட பகுதிக்குள் நிலம், கடல், வான் என எல்லா திசைகளில் இருந்தும் இலங்கை இராணுவம் தொடர்ந்து குண்டுவீச்சுகளை நடத்தியது. அந்தச் சின்ன பகுதிக்குள் ஏறத்தாழ 3 லட்சம் முதல் 3 லட்சத்து 30 ஆயிரம் வரையிலான மக்கள் இருந்ததாக கணிக்கப்பட்டது. இலங்கை இராணுவத்தின் தாக்குதலானது வான்வழி குண்டுவீச்சு, நீண்ட தூர 'ஆர்ட்டிலரி', 'ஹோவிட்சர்'கள் மற்றும் 'எம்.பி.ஆர்.எல்.'கள் ஆகியவற்றுடன் சின்ன 'மார்ட்டர்'கள், 'ஆர்.பி.ஜி.'கள் மற்றும் சிறு துப்பாக்கிச் சூடு ஆகியவற்றையும் பயன்படுத்தியது. சில நேரங்களில் மிக நெருக்கத்தில் இருந்தே சுட்டது. 'எம்.பி.ஆர்.எல்.'கள் என்பன மிகப்பெரும் நிலப்பரப்பின் மீது குண்டு வீச வடிவமைக்கப்பட்ட ஆளற்ற ஏவுகணை அமைப்புகளாகும். ஆனால் மக்கள் நெருக்கமாக வாழும் இடங்களில் பயன்படுத்தப்பட்டால் அவற்றின் பாதிப்பானது மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்திப் பெரும் எண்ணிக்கையிலான உயிரிழப்பை ஏற்படுத்தும்.

101) இந்தக் கட்டத்தில் பாதுகாப்புச் செயலர் இவ்வாறு கூறினார்: ''பொதுமக்கள் அடிபடுவதைத் தடுக்கத் தேவையான அவசர நடவடிக்கைகளை நாங்கள் எடுக்கிறோம். நாங்கள் மிகவும் அக்கறை கொண்ட விசயம் இது. இல்லையெனில், நாங்கள் நிறைய 'ஆர்ட்டிலரி'களை பயன்படுத்தி நகர்ந்திருப்போம்''. பிப்ரவரி 25 அன்றும் மீண்டும் ஏப்ரல் 27 அன்றும் இலங்கை அரசு, இலங்கை இராணுவமானது கனரக ஆயுதங்களை 2 ஆவது மற்றும் 3 ஆவது பாதுகாப்பு வலயத்திற்குள் இனிப் பயன்படுத்தாது என அறிவித்தது. ஆனால், உண்மையில் களத்தில் நடந்தது நேர் எதிராக இருந்தது. இலங்கை இராணுவத்தின் இராணுவ நடவடிக்கைகளில் தொடக்கத்தில் இருந்தே கடுமையான 'ஆர்ட்டிலரி' சூடுகளை நடத்துவது, அதன் அடிப்படைத் திட்டமாகவே இருந்தது. வெற்றி நெருங்க நெருங்க இந்தத் திட்டம் கைவிடப்படுவதற்கு மாறாக அதன் பயன்பாடு மேலும் தீவிரமடைந்தது.

விடுதலைப்புலிகள் நடமாட்டம் இப்பொழுது முடக்கப்பட்ட நிலையில் இருந்தபோதும், பெரும் எண்ணிக்கையிலான பொதுமக்கள் மிக நெருக்கமாக வாழ்ந்த இடத்தைச் சூழ்ந்திருந்த போதும் இது தொடர்ந்தது. இத்தகைய தீவிரமான குண்டு வீச்சானது பெரும் எண்ணிக்கையிலான பொதுமக்கள் அந்த இடங்களில் இருந்து தப்பி ஓட வழிவகுத்தது. இது, அரசின் மற்றொரு நோக்கமான, பொதுமக்களை தங்களது வழியில் இருந்து வெளியேற்ற அழுத்தம் கொடுக்கக்கூடியதாக இருந்தது. அரசின் அறிவிப்புகளுக்கு அப்பாலும் 'இணைப்பு – 3'இல் உள்ள செயற்கைக்கோள் படங்கள் இலங்கை இராணுவத்தின் ஆட்டிலறி பேட்டரிகள் பாதுகாப்பு வலயத்தைக் குறி வைப்பதற்கு ஏற்பத் தொடர்ந்து சரிசெய்யப்பட்டதைக் காட்டுகின்றன. விடுதலைப்புலிகளிடம் தற்போது மிகச்சிறிய எண்ணிக்கையிலேயே கனரக ஆயுதங்கள் இருந்தன. அத்துடன், அதைப் பயன்படுத்துவதற்கு மிகச்சிறிய இடமே இருந்தது.



5. IDP shelter destroyed by shelling in second No Fire Zone, April 2009
Source: submission to the Panel by the photographer

102) அந்தக் கடற்கரைப் பகுதியில் மேலும் மேலும் கூட்டம் அதிகரித்தது. வாழ்வதற்கான இடங்கள் சுருங்கின. இடம்பெயர்ந்த மக்கள் தங்கள் இருப்பிடங்களை அமைத்துக் கொண்ட நிலப்பகுதியானது, பெரும்பாலும் கடற்கரை மண்ணாகவும், நீர் ஊறிய நிலமாகவும் மனிதர்கள் வாழ்வதற்குத் தகுதியற்றவையாகவும் இருந்தன. இடம் பெயர்ந்த மக்கள் தங்களைக் காத்துக் கொள்ள தற்காலிகப் பதுங்கு குழிகளை அமைப்பது மிகக் கடினமாக இருந்தது. அந்தக் காலக்கட்டத்தில், இடம்பெயர்ந்த மக்களின் அன்றாட வாழ்க்கை, பெரும்பாலும் பதுங்கு குழிக்குள்ளேயே கழிந்தது. தங்களைக் காத்துக் கொள்ளும் முயற்சியில் மக்களில் சிலர் வெள்ளைக் கொடிகளை தங்கள் இருப்பிடங்களின் மீது ஏற்றி வைத்தனர். குடிநீர் அரிதாயிருந்தது. மக்களில் சிலர் பட்டினியால் சாகக்கூடிய அளவிற்கே உணவு வரத்து இருந்தது. பருவமழை வந்தபோது பெரும்பாலான பதுங்கு குழிகளில் நீர் நிரம்பிவிட்டது. இது, மக்களின் துன்பத்தை மேலும் அதிகரித்தது.

7) புதுமாத்தளன் மருத்துவமனை மீது குண்டுவீச்சு

103) புதுக்குடியிருப்பு மருத்துவமனை, புதுமாத்தளனுக்கு இடம் பெயர்ந்த போது வன்னியில் அரசுக் கட்டுப்பாட்டிற்கு வராத பகுதியில் எந்த ஒரு மருத்துவமனையும் தற்போது இயங்கவில்லை என அரசு குறிப்பிட்டிருந்தது. இரண்டாவது பாதுகாப்பு வலயத்தில் 3 தற்காலிக மருத்துவமனைகள் இருந்தன. புதுமாத்தளன் மருத்துவமனை, வலையன்மடத்தில் ஒரு சிறிய மருத்துவமனை மற்றும் முள்ளிவாய்க்காலில் ஒரு மருத்துவமனை ஆகியவை இருந்தன. இவற்றின் சரியான இருப்பிடங்கள் அரசுக்குத் தெரிந்தே இருந்தன. அத்துடன், அம்மருத்துவமனைகளின் மீது மருத்துவக் குறியீடுகள் தெளிவாக குறிப்பிடப் பட்டிருந்தன. அரசு மருத்துவர்கள் தங்களுடைய பணிகளை இங்கு தொடர்ந்து செய்து வந்தனர். புதிதாகக் காயம்பட்ட நூற்றுக்கணக்கான மக்களால் புதுமாத்தளன் மருத்துவமனை நிரம்பி வழிந்தது. வன்னிக்கு அடிப்படை மருத்துவ பொருட்களை அரசு அனுமதிக்காத நிலையில், புதுமாத்தளன் மருத்துவமனையின் நிலை மிக மோசமாக இருந்தது. கை, கால்களில் காயம்பட்டவர்களின் உறுப்புகளை அறுவைச் சிகிச்சை மூலம் அகற்றும் சூழலில் அந்த அறுவைச் சிகிச்சைகள் கசாப்புக் கத்திகளை கொண்டு எவ்வித மயக்க மருந்தும் இன்றி நடத்தப்பட்டன. பருத்தித் துணிகளும் மாதவிலக்குப் பட்டைகளும் கட்டுப்போடுவதற்கு பயன்படுத்தப்பட்டன. நரம்புகளில் ஏற்றப்படும்

வன்னிக்கு அடிப்படை மருத்துவப் பொருட்களை அரசு அனுமதிக்காத நிலையில், புதுமாத்தளன் மருத்துவமனையின் நிலை மிக மோசமாக இருந்தது. கை, கால்களில் காயம்பட்டவர்களின் உறுப்புகளை அறுவை சிகிச்சை மூலம் அகற்றும் சூழலில், அந்த அறுவை சிகிச்சைகள் கசாப்பு கத்திகளைக் கொண்டு எவ்வித மயக்க மருந்தும் இன்றி நடத்தப்பட்டன. பருத்தி துணிகளும், மாதவிலக்கு பட்டைகளும் கட்டுப்போடுவதற்குப் பயன்படுத்தப்பட்டன. நரம்புகளில் ஏற்றப்படும் மருந்துகள் மரத்தில் இருந்து தொங்க விடப்பட்டன. அதற்கு கீழ் மிக மோசமாக காயம்பட்ட நோயாளிகள் தரையில் படுத்துக் கிடந்தனர்.

தினசரி பல தனிநபர்கள் மற்றும் குடும்பங்களின் வாழ்க்கையை அழித்த குண்டுவீச்சுகளும், துப்பாக்கிச் சூடுகளும் தனித்தனி நிகழ்வுகளாக நடந்த போதும், மற்றொரு புறத்தில், ஆளற்ற விமானங்கள் மூலம் மக்கள் பெருமளவில் கூடியிருக்கும் பகுதிகள் அடையாளம் காணப்பட்டு, அவற்றின் மீதும் இலங்கை இராணுவம் குண்டுவீச்சு தாக்குதல் நடத்தியது. 25 மார்ச் அன்று அம்பலவான் பொக்கனை மீது நடத்தப்பட்ட ஒரு 'எம்.பி.ஆர்.எல்.' தாக்குதலில் நிறைய குழந்தைகள் உட்பட 140 பேர் கொல்லப்பட்டனர்.



6. Frontlines, March 2009
Source: Government of Sri Lanka Ministry of Defence website

மருந்துகள் மரத்தில் இருந்து தொங்க விடப்பட்டன. அதற்குக் கீழ் மிக மோசமாகக் காயம்பட்ட நோயாளிகள் தரையில் படுத்துக் கிடந்தனர். மிகவும் குறைவான எண்ணிக்கையில் இருந்த மருத்துவர்கள் எடுத்த பெரும் முயற்சிகளுக்குப் பின்னும் சரியான மருத்துவ உதவியின்றி நிறைய நோயாளிகள் இறந்து போயினர். மருத்துவ மனையின் முன், தினமும் பெரும் எண்ணிக்கையிலான உடல்கள் குவிந்தன.

104) பிப்ரவரி 9 2009 அன்று புதுமாத்தளன் மருத்துவமனையின் மீது குண்டுகள் விழுந்து குறைந்தது 16 நோயாளிகளை கொன்றது. சாளை எனும் ஊரில் அமைந் திருந்த இலங்கை இராணுவத் தளங்களில் இருந்தே இந்த குண்டுகள் வந்தன. பின்னர் குளத்திற்கு அப்பால் இருந்த இலங்கை இராணுவ நிலைகளில் இருந்தும் தாக்குதல் நடந்தது. அந்த இடத்தில் இருந்து மருத்துவமனை மிகத் தெளிவாகத் தெரியும் நிலையிலேயே இருந்தது. புதுமாத்தளன் மருத்துவ மனையில் சில காயம்பட்ட விடுதலைப்புலிகள் இயக்கத்தினர் சிகிச்சை பெற்று வந்தனர். ஆனால் அவர்கள் மிகச்சிறிய எண்ணிக்கையிலேயே இருந்தனர் என்பதோடு, தனியான பிரிவில் வைக்கப்பட்டிருந்தனர். அதன் பிறகு பிப்ரவரி மற்றும் மார்ச்சில் புதுமாத்தளன் மருத்துவமனை பலமுறை தாக்குதலுக்கு ஆளானது. மார்ச் 27 அன்று மருத்துவமனை மீது 'ஆர்.பி.ஜி.'கள் சுடப்பட்டு பல பொதுமக்கள் கொல்லப் பட்டனர். பொதுமக்களின் இழப்போடுக் கூடுதலாக அறுவைச் சிகிச்சை அறை, தற்காலிக அறைகள் மற்றும் கூரைகள் அனைத்தும் சிதிலமடைந்தன.

105) தினசரி பல தனிநபர்கள் மற்றும் குடும்பங்களின் வாழ்க்கையை அழித்த குண்டுவீச்சுகளும் துப்பாக்கிச் சூடுகளும் தனித்தனி நிகழ்வுகளாக நடந்த போதும் மற்றொரு புறத்தில் ஆளற்ற விமானங்கள் மூலம் மக்கள் பெருமளவில் கூடியிருக்கும் பகுதிகள் அடையாளம் காணப்பட்டு அவற்றின் மீதும் இலங்கை இராணுவம் குண்டுவீச்சு தாக்குதல் நடத்தியது. 25 மார்ச் அன்று அம்பலவான் பொக்கனை மீது நடத்தப்பட்ட ஒரு 'எம்.பி.ஆர்.எல்.' தாக்குதலில் நிறைய குழந்தைகள் உட்பட 140 பேர் கொல்லப்பட்டனர். ஏப்ரல் 8 2009 அன்று மண்டல மருத்துவச் சேவைகள் இயக்குநரகம் ஏற்பாடு செய்திருந்த பால்மாவு வழங்கல் வரிசையில் பெரும் எண்ணிக்கையிலான பெண்களும் குழந்தைகளும் திரண்டிருந்த நிலையில் அம்பலவான் பொக்கனையில் அவர்கள் மீது குண்டுவீச்சுத் தாக்குதல் நடந்தது. சில இறந்த தாய்மார்களின் கை, தங்கள் குழந்தைகளுக்கு பால்மாவு வாங்குவதற்கான அடையாள சீட்டினை இறுகப் பற்றியபடியே இருந்தது.

8) செஞ்சிலுவைச் சங்கக் கப்பல்களின் ஊடாக வந்த மனிதநேய உதவிகளுக்கு ஏற்பட்ட தடைகள்

106) வன்னியில் இருந்த மக்களின் துன்பத்தை குறைக்கும் பணியில் செஞ்சிலுவைச் சங்கம் தொடர்ந்து முன்னணிப் பங்கை ஆற்றியது. பிப்ரவரி 10 2009 தொடங்கி காயம்பட்ட மக்களைக் கடற்கரையில் இருந்து கப்பல் மூலமாக வெளியேற்றும் பணியை அது தொடங்கியது. போரின் இறுதி மாதங்களில், மொத்தத்தில் 16 செஞ்சிலுவைச் சங்கக் கப்பல்கள், போர்ப் பகுதிக்கு வந்தன. புதுமாத்தளனில் தங்கியிருந்த செஞ்சிலுவைச் சங்கப் பன்னாட்டு ஊழியர்கள் முதல் கப்பலில் வெளியேறினர். ஆனால் ஒவ்வொரு முறை கப்பல்கள் திரும்பி வரும் பொழுதும் அவர்களும் உடன் வந்து கரையில் சில மணி நேரங்கள் இருந்து சென்றனர். அய்.நா உள்நாட்டு ஊழியர்களை அந்த கப்பல்களில் வெளியேற அரசு அனுமதிக்கவில்லை.

107) செஞ்சிலுவைச் சங்கக் கப்பல்களில் வெளியேற காயம் அடைந்த பொதுமக்களுக்கும் அவர்களை சார்ந்திருக்கும் சிலருக்கும் விடுதலைப்புலிகள் அனுமதிச் சீட்டு வழங்கினர். கப்பல்கள், கரையில் இருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பால் நிறுத்தி வைக்க மட்டுமே அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், காயம்பட்டவர்கள் சிறிய படகுகளில் ஏற்றப்பட்டு கப்பலுக்கு கொண்டு செல்லப்பட்டனர். காயம்பட்டவர்கள் கடற்கரையில் நீண்ட வரிசையில் திரண்டிருந்தனர். ஆனால் பல சமயங்களில் அவர்கள் துப்பாக்கிச் சூட்டுக்களில் மாட்டிக் கொள்ள நேர்ந்தது. ஏப்ரல் 22-அய் ஒட்டி கப்பலுக்கு அருகே குண்டு விழுந்ததன் காரணமாக, கப்பலை மேலும் ஆழமான கடற்பகுதிக்கு எடுத்துச் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

108) உணவு வழங்கலுக்கும் செஞ்சிலுவைச் சங்கக் கப்பல்களே ஒரே வாய்ப் பாக இருந்தன. ஆனால் அரசு அனுமதித்த அளவானது போதுமானதாக இல்லை. பாதுகாப்பு வலயத்திற்குள் இருந்த நிலை மோசமடைந்த போது, மார்ச் 17 அன்று, கரைக்கு வந்த செஞ்சிலுவைச் சங்கப் பன்னாட்டு ஊழியரை, இடம் பெயர்ந்த மக்கள் பெருங்கூட்டமாக சுற்றிக் கொண்டு, வன்னியில் இருந்து தங்களை வெளியேற்றித் தங்கள் உயிர்களைக் காக்க வேண்டுமெனக் கெஞ்சினர். விடுதலைப் புலிகள் வலுக்கட்டாயமாகக் கூட்டத்தைக் கலைத்தனர். மே 9, 2009 அன்று செஞ்சிலுவைச் சங்கத்தின் கடைசிக் கப்பல் வன்னிக்கு வந்தது. மே 15, 2009 அன்று ஒரு கப்பல் வர முயன்று, பின்னர் சண்டையின் தீவிரம் காரணமாகத் திரும்பிச் சென்றது. மொத்தில் 2வது மற்றும் 3வது பாதுகாப்பு வலயத்தில் இருந்து செஞ்சிலுவைச் சங்கம், 14,000 காயம்பட்ட மக்களையும் அவர்களது உறவினர்களையும் வெளி யேற்றியது. அத்துடன், 2,350 மெட்ரிக் டன் உணவு பொருட்களை முள்ளிவாய்க் காலில் வழங்கியது. வெளியேற்றப்பட்டவர்கள் அனைவரும் பொதுமக்களே. ஏனெனில் விடுதலைப்புலிகள் தங்கள் உறுப்பினர்களை போர்ப் பகுதியில் இருந்து சிகிச்சைக்காக வெளியேற அனுமதிக்கவில்லை.

9) முள்ளிவாய்க்கால் மருத்துவமனை உள்ளிட்ட இடங்களில் இலங்கை இராணுவத்தின் குண்டுவீச்சுகள்

109) 2009 ஏப்ரல் மாதத்தின் தொடக்கத்தில் ஆனந்தபுரத்தில் ஏற்பட்ட தங்களது தோல்விக்குப் பின் விடுதலைப்புலிகளின் எஞ்சிய படையணியினர் அனைவரும் கடற்கரைத் திட்டுக்குள் ஏறத்தாழ முழுவதுமாகவே பின்வாங்கிவிட்டனர். பாதுகாப்பு வலயத்திற்குள் அரசின் குண்டு வீச்சுகள் தீவிரமடைந்தன. பெரும்பாலும் 'மார்ட்டர்'களையே இறுதி நிமிடங்கள் வரை போரின் காலம் முழுவதிலும் அது சார்ந்திருந்த போதும் 'எம்.பி.ஆர்.எல்.'கள் போன்ற கனரக ஆயுதங்கள் மற்றும் வான் வழி தாக்குதல்களை அரசு தொடர்ந்து பயன்படுத்தியது. அந்த நிலையிலும், அரசு, தான், 'சிக்கிக் கொண்டிருந்த பொதுமக்களை மனித நேய

இலங்கை இராணுவத்தின் 58ஆவது படையணி விடுதலைப்புலிகளின் தடுப்புகளை உடைத்து, பாதுகாப்பு வலயத்தை இரண்டாகப் பிளந்து கடற்கரை திட்டுக்குள் முதன்முறையாக நுழைந்தது. ஆனால், அதே நேரத்தில் மிகப்பெரிய அளவிலான பொதுமக்கள் இழப்புகளையும் அது ஏற்படுத்தியது. பாதுகாப்பு வலயத்தை அந்த படையணி இரண்டாக உடைத்ததன் காரணமாக, ஏறத்தாழ ஒரு இலட்சம் பொதுமக்கள் அரசுக் கட்டுப்பாட்டு பகுதிக்குள் தப்பிச் செல்ல முடிந்தது. இவர்களோடு ஏற்கனவே வெளியேறிய 70,000 பேரும் அங்கு இருந்தனர். குறைந்தது மற்றுமொரு 1,30,000 மக்கள் மேலும் தெற்கே சிக்கியிருந்தனர்.

சூழல் மிக மோசமான சுகாதாரச் சீர்கேட்டோடு இருந்தது. இதன் காரணமாகக் காயங்கள் கிருமிகளால் பாதிக்கப்படும் பெரும் ஆபத்து நிலவியது. இந்த மருத்துவமனையிலும், அறுவை சிகிச்சைக்கான கருவிகளின் பற்றாக்குறை காரணமாக, அறுவைச் சிகிச்சைகள் கசாப்புக் கத்திகளால் நடத்தப்பட்டன. நறுக்கி எறியப்பட்ட உடல் உறுப்புகள் குவித்து வைக்கப்பட்டிருந்தன. பல நேரங்களில் நோயாளி களின் உயிரைக் காக்க காயத்திற்குத் தேவை யான எந்த சிகிச்சையும் தர வழியில்லாத நிலை யில், உறுப்புகளை வெட்டி எறிவதைத் தவிர வேறு வாய்ப்பு இல்லாமல் போனது.



7. Putumattalan Hospital, March 2009
Source: submission to the Panel by the photographer

அடிப்படையில் மீட்கும் நடவடிக்கை'யை மேற்கொண்டிருப்பதாகதான் சொல்லிக் கொண்டது. ஏப்ரல் 19, 2009 அன்று புதுமாத்தளனுக்கும் அம்பாரன் பொக்கனைக்கும் இடையிலான பகுதியின் மீது மிகக் கடுமையான குண்டுவீச்சு நடைபெற்றது. இலங்கை இராணுவத்தின் 58வது படையணி விடுதலைப் புலிகளின் தடுப்புகளை உடைத்து, பாதுகாப்பு வலயத்தை இரண்டாக பிளந்து கடற்கரைத் திட்டுக்குள் முதல்முறையாக நுழைந்தது. ஆனால் அதே நேரத்தில் மிகப்பெரிய அளவிலான பொதுமக்கள் இழப்புகளையும் அது ஏற்படுத்தியது. பாதுகாப்பு வலயத்தை அந்தப் படையணி இரண்டாக உடைத்தன் காரணமாக ஏறத்தாழ 1,00,000 பொதுமக்கள் அரசுக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் தப்பிச் செல்ல முடிந்தது. இவர்களோடு ஏற்கனவே வெளியேறிய 70,000 பேரும் அங்கு இருந்தனர். குறைந்தது மற்றுமொரு 1,30,000 மக்கள் மேலும் தெற்கே சிக்கியிருந்தனர்.

110) பாதுகாப்பு வலயத்தின் வடபகுதியை இலங்கை இராணுவம் கைப்பற்றிய பிறகு போர் பகுதியில் எஞ்சியிருந்த ஒரே மருத்துவமனை முள்ளிவாய்க்கால் மருத்துவமனையே. இந்த மருத்துவமனையில் சீருடை அணிந்த எந்த ஒரு விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினரும் தங்கியிருக்கவில்லை. யாரும் ஆயுதங் களையும் உள்ளே கொண்டு வரவில்லை. நிலைமைகள் மிக மோசமாகவே இருந்தன. மருத்துவமனையில் 4 மருத்துவர்கள் இருந்தனர். இரண்டு அறுவைச் சிகிச்சை அறைகளை அவர்கள் நடத்தி வந்தனர். மிக மோசமான தலைக்காயம் மற்றும் பிற வெளிப்படையான மோசமான காயங்கள் உடையவர்கள் உட்பட சில நோயாளிகள் சற்று வசதியான நிலையில் வைக்கப்பட்டனரே அன்றி அவர்களைக் காப்பதற்கான எந்த முயற்சியும் எடுக்க இயலவில்லை. குறைந்த எண்ணிக்கையிலான படுக்கைகளே இருந்த நிலையில் காயம்பட்ட நோயாளிகள் பெரும்பாலும் மருத்துவமனைக்கு முன் கிடத்தி வைக்கப்பட்டிருந்தனர். சிலர் பாய்களிலும், பிறர் தூசி மற்றும் சிதைவுகளின் மீது கிடந்தனர். படுக்கை விரிப்புகள் கூரையாக அமைய, தங்களுக்கு நெருக்கமானவர்களின் துணையுடனோ அல்லது தனியாகவோ கிடந்தனர். கட்டுப்போடுவதற்கு சுத்திகரிக்கப்பட்ட துணிகளின் பற்றாக்குறை காரணமாகப் பழைய துணிகளும் சேலைகளும் கட்டுப்போடப் பயன்படுத்தப்பட்டன.

கையுறைகள் இருக்கவில்லை. சூழல் மிக மோசமான சுகாதாரச் சீர்கேட்டோடு இருந்தது. இதன் காரணமாகக் காயங்கள் கிருமிகளால் பாதிக்கப்படும் பெரும் ஆபத்து நிலவியது. இந்த மருத்துவமனையிலும் அறுவை சிகிச்சைக்கான கருவிகளின் பற்றாக்குறை காரணமாக அறுவைச் சிகிச்சைகள் கசாப்புக் கத்திகளால் நடத்தப் பட்டன. நறுக்கி எறியப்பட்ட உடல் உறுப்புகள் குவித்து வைக்கப்பட்டிருந்தன. பல நேரங்களில் நோயாளிகளின் உயிரைக் காக்க காயத்திற்குத் தேவையான எந்த சிகிச்சையும் தர வழியில்லாத நிலையில் உறுப்புகளை வெட்டி எறிவதைத் தவிர வேறு வாய்ப்பு இல்லாமல் போனது. மயக்க மருந்துகளின் கடுமையான பற்றாக் குறை காரணமாக இருந்த கொஞ்சமும், சுத்திகரிக்கப்பட்ட நீரோடு கலந்தே பயன்படுத்தப்பட்டன. நிறைய அறுவை சிகிச்சைகள் மயக்க மருந்து இன்றியும் கூடச் செய்யப்பட்டன. பரவலாக இருந்த சத்துக் குறைவை மீறியும் சில மக்கள் தொடர்ந்து இரத்ததானம் செய்தனர். ஆனால் இரத்தப் பற்றாக்குறை நிலவியதின் காரணமாக நோயாளியின் சொந்த இரத்தம் பிளாஸ்டிக் பைகளில் பிடிக்கப்பட்டு துணியில் வடிகட்டப்பட்டு மீண்டும் அதே நோயாளியின் உடலில் ஏற்றப்பட்டது.

111) மருத்துவமனை மீது பல நேரங்களில் நடத்தப்பட்ட கடுமையான குண்டு வீச்சின் காரணமாக மண்டல மருத்துவச் சேவைகள் இயக்குநர் அலுவலகம் வெள்ள முள்ளிவாய்க்காலுக்கு இடம் பெயர்க்கப்பட்டது. மே 11 அல்லது 12 அன்று இந்த இரண்டாவது மருத்துவமனையும் இலங்கை இராணுவத்தின் குண்டுகளால் தாக்கப்பட்டதால், நிறைய மக்கள் கொல்லப்பட்டனர். இந்த மருத்துவமனையின் மீதும் மருத்துவ முத்திரைகள் தெளிவாகப் பொறிக்கப்பட்டே இருந்தன. இந்த இரண்டாவது மருத்துவமனையிலும் முதல் மருத்துவமனையில் இருந்த அதே மோசமான நிலை நிலவியது. சில மருத்துவமனை ஊழியர்கள் இலங்கை இராணுவக் குண்டுவீச்சில் கொல்லப்பட்டனர்.

மயக்க மருந்துகளின் கடுமையான பற்றாக்குறை காரணமாக, இருந்த குறைந்த அளவிலான மயக்க மருந்தும், சுத்திகரிக்கப்பட்ட நீரோடு கலந்தே பயன்படுத்தப்பட்டது. நிறைய அறுவை சிகிச்சைகள் மயக்க மருந்து இன்றியும் செய்யப்பட்டன. பரவலாக இருந்த சத்துக் குறைவை மீறியும் சில மக்கள் தொடர்ந்து இரத்த தானம் செய்தனர். ஆனால், இரத்தப் பற்றாக் குறை நிலவியதின் காரணமாக, நோயாளி யின் சொந்த இரத்தம் பிளாஸ்டிக் பைகளில் பிடிக்கப்பட்டு, துணியில் வடிகட்டப்பட்டு, மீண்டும் அதே நோயாளி யின் உடலில் ஏற்றப் பட்டது.

10) விடுதலைப்புலிகள் பொதுமக்களைக் கொன்றதும் கட்டாயமாக ஆள் சேர்த்ததும்

112) இரண்டாவது பாதுகாப்பு வலயத்தில் நிலைமை மோசமானதைத் தொடர்ந்து பெரும் எண்ணிக்கையிலான பொதுமக்கள் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து வெளியேற முயன்றனர். ஆனால் இதனைத் தடுக்க விடுதலைப்புலிகள் கொடூர வழிமுறைகளைப் பயன்படுத்தினர். விடுதலைப் புலிகளின் சில உறுப்பினர்கள் பொதுமக்களைத் தப்பிச் செல்ல அனுமதித்தனர். ஆனால் பிறர் தங்களிடம் இருந்த 'ஏ.கே.47'களை பயன்படுத்தி மக்கள் மீது துப் பாக்கிச்சூடு நடத்தி ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என்ற வேறுபாடின்றிக் கொன்றனர். தப்பிக்கும் முயற்சியில் மக்கள் இலங்கை இராணுவ நிலைகளை அடையக் குழந்தைகள் அல்லது உடைமைகளை தூக்கிக் கொண்டு அல்லது பதட்டத்தில் அவற்றைக் கீழே தவறவிட்டும் ஓடிச்செல்ல முயன்றனர். சிலர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். பிறர், ஆழமில்லாத குளத்து நீரில் சிக்கிக் கொண்டனர் அல்லது கண்ணிவெடியை மிதித்து கடுமையாகக் காயப்பட்டனர். சின்னக் குழந்தைகளும் பிறரும் குளத்தில் மூழ்கினர். இந்த வகையில் எத்தனை பேர் இறந்தனர் என்று தெரியாத நிலையில் அந்த எண்ணிக்கை கணிசமாகவே இருந்தது. போர் தீவிரமடைய அது கூடியது.

113) விடுதலைப்புலிகள் புதிய படையணிக்கான தேவை அதிகரித்த நிலையில் கட்டாய ஆள்சேர்ப்பை அதிகரித்து மேலும் மேலும் இளைஞர்களை அதிலும் வயது குறைந்தவர்களையும் கூட இழுத்து வந்து முன்னணி வரிசைகளில் நிறுத்த பயன்படுத்தினர். ஏப்ரல் மாத நடுவில் ஒரு கட்டத்தில் திரிகோணமலையின் முன்னாள் அரசியல் பிரிவுத் தலைவர் எழிலன் என்றழைக்கப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர், நூற்றுக்கணக்கான இளைஞர்களை வலையன்மடம் தேவாயலத்திலிருந்து கட்டாயமாக இழுத்து வந்து முள்ளிவாய்க்காலுக்குப் பேருந்துகளில் அனுப்பி வைத்தார். சண்டைக்காகவும் ஏறத்தாழ நிச்சய சாவுக்காகவும்

மருத்துவமனை மீது பல நேரங்களில் நடத்தப்பட்ட கடுமையான குண்டு வீச்சின் காரணமாக, மண்டல மருத்துவச் சேவைகள் இயக்குநர் அலுவலகம் வெள்ள முள்ளி வாய்க்காலுக்கு இடம் பெயர்க்கப்பட்டது. மே 11 அல்லது 12 அன்று இந்த இரண்டாவது மருத்துவமனையும் இலங்கை இராணுவத்தின் குண்டுகளால் தாக்கப் பட்டதால், நிறைய மக்கள் கொல்லப்பட்டனர். இந்த மருத்துவமனையின் மீதும் மருத்து'வ முத்திரைகள் தெளிவாகப் பொறிக்கப் பட்டே இருந்தன. இந்த இரண்டாவது மருத்துவ மனையிலும் முதல் மருத்துவமனையில் இருந்த அதே மோசமான நிலை நிலவியது. சில மருத்துவமனை ஊழியர் கள் இலங்கை இராணுவக் குண்டுவீச்சில் கொல்லப்பட்டனர்.



8. Infant amputee in second No Fire Zone, March 2009
Source: submission to the Panel by the photographer

அவர்கள் இழுத்துச் செல்லப்படுவதைத் தடுக்க பெற்றோர்கள் கெஞ்சிக் கதறினர். ஆனால் எந்தப் பயனும் இல்லை.

114) ஏப்ரல் 26, 2009 அன்று விடுதலைப்புலிகள் ஒரு தன்னிச்சையான போர் நிறுத்தத்தை அறிவித்தனர். ஆனால் அதை ஒரு நகைச்சுவை என குறிப்பிட்ட அரசு அதை ஏற்றுக்கொள்ளவில்லை. ஏப்ரல் 27, 2009 அன்று விடுதலைப்புலிகளுடனான நேரடிப் போர் நடவடிக்கைகள் முடிவுக்கு வந்ததாகவும், கனரக ஆயுதங்கள் பயன்படுத்துவதை நிறுத்துவதாகவும் அரசு இரண்டாம் முறையாக அறிவித்தது. மே 8 2009 அளவில் அரசு மூன்றாவது மற்றும் இறுதிப் பாதுகாப்பு வலயத்தை அறிவித்தது. இது இரண்டாவது பாதுகாப்பு வலயத்தின் தெற்கே ஒரு சிறிய பகுதியாக இருந்தது.

11) இறுதி நாட்களில் இலங்கை இராணுவத்தின் குண்டுவீச்சுகள் (13–18 மே, 2009)

115) மே 13 அன்று கிழக்கில் இருந்து கடற்கரை நோக்கிச் சென்று அங்கிருந்து தெற்கு நோக்கி முன்னேறும் நோக்கத்துடன் 58ஆவது படையணி முன்னேறிக் கொண்டிருந்தது. 53ஆவது படையணி ஏ35 சாலையின் வழியே குளத்தை நோக்கி கிழக்குத் திசையில் முன்னேறியது. 55ஆவது படையணி புதுமாத்தளையில் இருந்து மேலும் தெற்கே சென்றது. இந்த நிலையில் 3 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் 1,00,000 பொதுமக்கள் சிக்கியிருந்ததாக அய்.நா கணித்தது. ஆனால் அரசோ வெறும் 10,000 பேர் மட்டுமே இருந்ததாகக் கூறியது.

116) ஆயுதப்போரின் இறுதிநாட்கள் பொதுமக்கள் இழப்பின் எண்ணிக்கை அதிவேகமாக எழுந்ததை கண்டது. வெள்ள முள்ளிவாய்க்காலில் இருந்த மருத்துவமனையில் மிக மோசமான காயங்களில் இருந்து இரத்தம் வழிய நூற்றுக் கணக்கான நோயாளிகள் தரையில் கிடந்தனர். மிக மோசமாகக் காயம்பட்டவர் களுடன் கலந்து, இறந்து போனவர்களும் கிடந்தனர். காயம்பட்டவர்களைக் கவனித்துக் கொண்டிருந்த உறவினர்கள் தாமே சத்துக்குறைவான நிலையில் மிகவும் சோர்வாக இருந்தனர்.

117) மூன்றாவது பாதுகாப்பு வலயத்திற்குள் நடந்த குண்டு வீச்சானது செஞ்சிலுவைச் சங்கம் அதற்கு மேல் எவ்வித கடல்வழி மீட்பிலும் ஈடுபட இயலாத நிலையை ஏற்படுத்தியது. விடுதலைப்புலிகளின் மூத்த தலைமையின் பதுங்கிடத்தை இலங்கை இராணுவம் நெருங்கிய போது, அதன் தாக்குதலின் அளவு மிகத் தீவிரமாகியது. அதே பகுதியில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் சிக்கியிருந்த போதும் இது நடந்தது. தங்களுடைய எதிர்ப்பு நடவடிக்கையில் தற்கொலைத் தாக்குதல்கள் உட்பட பெரும் எண்ணிக்கையிலான போராளிகளை விடுதலைப்புலிகளின் தலைமை சாகக்கொடுத்தது.

118) மூன்றாவது பாதுகாப்பு வலயத்தில் இடப்பற்றாக்குறையின் காரணமாக எல்லாப் புறங்களில் இருந்தும் வந்து விழுந்த குண்டுகளில் இருந்து தப்பிக்க பொதுமக்களுக்கு மறைவிடமே இருக்கவில்லை. குண்டுகள் எல்லா இடங்களிலும் மழையாய்ப் பொழிந்தன. துப்பாக்கிக் குண்டுகள் காற்றில் சீறிப் பாய்ந்தன. பெரும் எண்ணிக்கையில் மக்கள் உயிரிழந்தனர். அந்தச் சாவுகள் ஆவணப்படுத்தப்படாமல் பதுங்கு குழிகளுக்கு அடியிலும், இருப்பிடங்களுக்கு கீழும் புதைக்கப்பட்டன. கரும் புகையும் இறந்த உடல்களின் நெடியும் காற்றை நிரப்பியது. பட்டினி கிடக்கும் தங்களின் குழந்தைகளுக்கான உணவுக்காகவும் காயம்பட்ட அல்லது செத்துக் கொண்டிருப்பவர்களுக்கு உதவவும் சில மக்கள் பிச்சை எடுத்தனர். இந்தக் காட்சியானது 'நரகத்தைக் கண் முன் கொண்டு வருவதை போன்று இருந்த'தாக விவரிக்கப்பட்டது.

119) மாவட்டத்தின் உதவி நிர்வாக அதிகாரியும் மருத்துவர்களும் காயம்பட்டவர்களையும் இறந்தவர்களையும் கவனிக்கத் தங்களை அனுமதிக்க வேண்டி, குண்டு வீச்சை நிறுத்துமாறு கேட்டுப் பலமுறை தொலைபேசியில் அழைத்தும், இலங்கை இராணுவத்திடமிருந்து எந்த சாதகமான பதிலும் வரவில்லை. மே 14, 2009க்கு பிறகு குண்டு வீச்சின் தீவிரம் அதிகமான நிலையில் மருத்துவர்களால் மருத்துவமனைக்குச் செல்ல இயலவில்லை. இதனால் மருத்துவமனையை மூட வேண்டி வந்தது. அங்கிருந்து தூக்கிச் செல்லப்பட முடியாத பல நோயாளிகள் அங்கேயே விடப்பட்டனர். தற்காலிகமான மறைவிடங்களில் உயிர்பிழைத்த அனைவரும் ஒருவரோடு ஒருவர் பிணைந்து பதுங்கிக் கிடந்தனர். சமைப்பது என்பது சாத்தியமற்றதானது. கழிவறைக்குச் செல்வதற்காக மறைவிடங்களில் இருந்து வெளியே வருவது கூட ஒருவரின் உயிருக்கு ஆபத்தை விளைவிப்பதாக இருந்தது. சில பொதுமக்கள் மொத்தமாக இணைந்து உடைத்து வெளியேற முயன்றனர். ஆனால் விடுதலைப்புலிகள் சுட்டும் அவர்கள் மீது குண்டுகளை வீசவும் செய்தனர். தப்ப முடிந்தவர்களைத் தனிப்பட்ட இலங்கை இராணுவ சிப்பாய்கள் கடக்க உதவினர்.

120) மே 15 அன்று விடுதலைப்புலிகள் தங்களது தொடர்புச் சாதனங்களை அழிக்கத் தொடங்கினர். மே 16 அன்று விடுதலைப்புலிகளின் பகுதியில் ஒரு வெடிச்சத்தம் அதிர்ந்தது. பெருநெருப்பு எழுந்து, மக்கள் மறைவிடங்களை நூற்றுக்கணக்கில் அழித்தது. அதே நாளில் 58 மற்றும் 59ஆவது படையணிகள் கடற்கரையில் இரு முனைகளில் இருந்தும் வந்து இணைந்த நிலையில் இராணுவத் தளபதி லெப்டினென்ட் ஜெனரல் பொன்சேகா விடுதலைப்புலிகளுக்கு எதிரான வெற்றியை அறிவித்தார். 53ஆவது படையணி நந்திகடல் வழியே தொடர்ந்து தெற்கு நோக்கி முன்னேறியது. எஞ்சிய விடுதலைப்புலிகள் அதன் முக்கிய தலைவர்கள் மற்றும் 250 முக்கிய போராளிகள் உட்பட அனைவரும் வெள்ள முள்ளிவாய்க்காலில் உள்ள 3 சதுர கிலோ மீட்டர் பரப்பளவே கொண்ட சிறிய இடத்தில் சிக்கிக் கொண்டனர். முடிவு நெருங்கியது. அந்த தலைவர்களின் சாவு குறித்த சூழல்கள் இன்னமும் சர்ச்சைக்குரியதாகவே இருக்கின்றன.

121) மே 18, 2009 அன்று பாதுகாப்பு வலயத்தில் இருந்து உடைத்து வெளியேற முற்பட்ட போது பிரபாகரன், சூசை மற்றும் பொட்டுஅம்மான் ஆகியோர்

அய்.நா.வின் குழு தனது கணிப்பில், பிப்ரவரி 2009 இற்குப் பிறகு விடுதலைப்புலிகள் கட்டுப்பாட்டுப் பகுதியில் 2,67,618 பேர் இருந்ததாகக் கூறியது. இந்தக் கணிப்பு, இடம்பெயர்ந்த மக்களின் இருப்பிடங்களை செயற்கைக்கோள் படங்கள் மூலம் எண்ணப் பயன்பட்டது. ஏப்ரல் இறுதியில் 1,27,117 பொதுமக்கள் இன்னமும் சிக்கிக் கொண்டிருப்பதாக அய்.நா. மதிப்பிட்டது. ஆனால், அரசோ 10,000 பேர் மட்டுமே எஞ்சியிருந்ததாக கூறியது. அந்த இடத்தில் இருந்து வெளியேறி பின்னர் மாணிக் பண்ணை மற்றும் பிற முகாம்களில் வைக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 2,90,000 ஆகும். இந்த எண்ணிக்கைகளில் ஏற்பட்ட குழப்பத்திற்கு அரசு தேவையான விளக்கத்தை அளிக்கவில்லை.

கொல்லப்பட்டதாகப் பாதுகாப்பு அமைச்சகச் செய்திகள் கூறின. சார்லஸ் ஆண்டனி, நடேசன் மற்றும் புலித்தேவன் ஆகியோரும் இறந்து போயினர். மே 19 அன்று பிரபாகரனும் அவரது முக்கியத் துணைவர்களும் கொல்லப்பட்டதாக இலங்கை அரசு அதிகாரபூர்வமாக அறிவித்து அவர்களது உடல்களைத் தொலைக்காட்சியில் காட்டியது. அந்த உடல்களின் பல புகைப்படங்கள் பின்னர் வெளிவந்தன. அதே நாளில் விடுதலைப்புலிகளின் மீதான வெற்றியை அறிவித்து அதிபர் இலங்கை நாடாளுமன்றத்தில் உரையாற்றினார்.

போரின் இறுதிக் கட்டங்களில் ஏறத்தாழ 40 ஆயிரம் அறுவைச் சிகிச்சைகளும், 5000 உடல் உறுப்பு நீக்க அறுவைச் சிகிச்சைகளும் நடத்தப்பட்டதாக ஒரு மதிப்பீடு கூறுகிறது. காயம்பட்டவர்களுக்கும் இறந்துபோனவர்களுக்கும் இடையே உள்ள விகிதாச்சாரமானது, பல நேரங்களில் ஒன்றுக்கு இரண்டு அல்லது ஒன்றுக்கு மூன்று என இருந்தது. இதனடிப் படையில் செய்யப்பட்ட மதிப்பீட்டின்படி, கூடுதலான சாவு இருந்திருக்க வேண்டும்.



122) மே 16 மற்றும் 19 க்கு இடைப்பட்ட காலத்தில் பாதுகாப்பு வலயத்தில் சிக்கியிருந்த பொதுமக்கள் தெற்கு நோக்கி நகர்ந்து கடற்கரையை விட்டு வெளியேறி வட்டுவாகால் பாலத்தைக் கடந்து அரசுக் கட்டுப்பாட்டு பகுதிக்குச் சென்றனர். குண்டுவீச்சு தொடர்ந்தது. ஆங்காங்கே பெரும் நெருப்பு எரிந்து கொண்டிருந்தது (விடுதலைப்புலிகளிடம் இருந்து கைப்பற்றி அழிக்கப்பட்ட ஆயுதங்களும் இவற்றில் அடங்கும்). இறந்த உடல்கள் எல்லா இடங்களிலும் சிதறிக் கிடந்தன. நடக்க இயலாத காயம்பட்டவர்கள், நடக்கக்கூடிய நிலையில் இருந்தவர்களிடம் உதவி கேட்டு கெஞ்சிக் கொண்டு, ஆனால் அவை கிடைக்க இயலாத நிலையில் சாலை ஓரங்களில் கிடந்தனர். தாங்கள் நேசிப்பவர்களின் உடல்களை விட்டுவிட்டு வர, சிலரை வலுக்கட்டாயமாக பிய்த்து வர வேண்டியிருந்தது. இறந்தவர்கள் மற்றும் இறந்து கொண்டிருப்பவர்களின் நெடி எங்கெங்கும் வீசியது.

123) வன்னியில் நடைபெற்ற ஆயுதப் போரின் இறுதியைக் குறிக்கும் நாளாக மே 18 2009 இருந்தது. செஞ்சிலுவைச் சங்கத்தின் சொற்களில் 'இறுதிநாட்கள் கற்பனைக்கு எட்டாத மனிதப் பேரழிவை ஏற்படுத்தின'.

ஈ) மனிதநேய உதவிகளை மறுப்பதற்கான அடிப்படையாக இடம்பெயர்ந்த மக்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட குழப்பம்

124) ஆயுதப் போரின் இறுதிக்கட்டம் முழுவதிலும் குறிப்பாக 2009 சனவரி முதல் மே வரையில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்த பொதுமக்களின் எண்ணிக்கையை அரசு குறைத்தே கூறியது. இந்த குறைத்த மதிப்பீட்டை பயன்படுத்தி மனிதநேய உதவியாகத் தரக்கூடிய உணவு மற்றும் மருந்துப் பொருட்களின் அளவைக் குறைத்தனர்.

125) இறுதிக்கட்டம் தொடங்கிய போது சனவரி 13, 2009 அன்று சுதந்திரமான கணிப்பு மற்றும் உறுதிப்படுத்தல்களின்படி வன்னியில் இருந்த பொதுமக்களின் எண்ணிக்கை 1,50,000 முதல் 2,50,000 வரையில் இருக்கிறது என அரசு இணையதளம் அறிவித்தது. அய்.நாவின் அப்போதைய மதிப்பீடு 2,50,000 ஆக இருந்தது (பின்னர் அதன் மதிப்பீடு அதிகரித்தது). பின்னர் 2009 சனவரியில் வன்னியில் இருந்த மக்களின் எண்ணிக்கை அதிகபட்சம் 75,000 முதல் 1,00,000 வரை எனப் பாதுகாப்பு அமைச்சகம் அறிவித்தது. வன்னியில் இருந்த மக்களின் சரியான எண்ணிக்கையைத் துல்லியமாக கணக்கிடத் தேவையான தரவுகளை அரசு வைத்திருந்தது. ஒவ்வொரு மாதமும் மாவட்ட அதிகாரிகள் இடம்பெயர்ந்த மக்கள் பற்றிய தரவுகளைக் கணித்து அதன் மூலம் உலக உணவுத் திட்டத்தின் கீழ் உலர்ந்த உணவைப் பெறுவதற்கான வேண்டுகோள்களை வைத்தனர். 2008 செப்டம்பருக்கு முன் முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்ட அதிகாரிகள் செய்த மதிப்பீட்டின்படி அக்காலக்கட்டத்தில் விடுதலைப்புலிகள் கட்டுப்பாட்டுப் பகுதியில் ஏறத்தாழ 4,20,000 மக்கள் இருந்தனர். இந்த எண்ணிக்கை சற்று மிகைப்படுத்தப்பட்டதாக இருக்கலாம் என்ற போதும், அய்.நா வின் குழந்தைகள் நிதியத்தின் மதிப்பீட்டின்படி வன்னியில் பதிவு செய்யப்பட்ட பள்ளிக் குழந்தைகளின் எண்ணிக்கை 70,000 ஆக இருந்தது. இது ஏறத்தாழ இடம் பெயர்ந்த மக்களின் எண்ணிக்கை குறித்த அரசின் மதிப்பீட்டோடு ஒத்துப்போனது.



9. Civilian deaths in second No Fire Zone, May 2009
Source: submission to the Panel by the photographer

126) இதற்குப் பின் பாதுகாப்பு அமைச்சகம் கொடுத்த எண்ணிக்கையானது பெரிதும் வேறுபட்டிருந்தது. பொதுவாக அவர்கள் வேண்டுமென்றே எண்ணிக்கையைக் குறைத்துக் காட்டினர். வேறு எண்ணிக்கையோ அல்லது தேவைகள் குறித்த வேறு கணக்கீட்டையோ அளித்த பாதுகாப்பு வலயத்தில் இருந்த சில அரசு ஊழியர்கள் நீக்கப்பட்டனர். உதாரணத்திற்கு பிப்ரவரி 2, 2009 அன்று இரண்டாவது பாதுகாப்பு வலயத்தில் இருந்த உதவி மாவட்ட அதிகாரி நிலவும் சூழலைக் குறித்த ஓர் அறிக்கையை பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டு அமைச்சகத்திற்கு அனுப்பினார். அதில் முல்லைத்தீவு மாவட்டத்தில் அக்காலக்கட்டத்தில் ஏறத்தாழ 81,000 குடும்பங்கள் இருந்ததாக குறிப்பிட்டார். இது மொத்தத்தில் 3,30,000 மக்களைக் குறிக்கும். ஆனால் மார்ச் 18 அன்று தேசிய கட்டுமான அமைச்சகத்தின் செயலரிடமிருந்து அவருக்கு ஒரு பதில் வந்தது. 3,30,000 என்று குறிப்பிடப் பட்டுள்ள எண்ணிக்கையானது அடிப்படையற்ற தவறான கணிப்பு என்றும், இடம் பெயர்ந்த மக்களின் எண்ணிக்கை குறித்து எவருக்கேனும் தவறான தகவல் அளித்தால், அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்படும் என அரசு கூறியது.

127) அய்.நா.வின் குழு தனது கணிப்பில், பிப்ரவரி 2009 இற்கு பிறகு விடுதலைப்புலிகள் கட்டுப்பாட்டுப் பகுதியில் 2,67,618 பேர் இருந்ததாக கூறியது. இந்தக் கணிப்பு, செயற்கைக்கோள் படங்கள் மூலம் இடம்பெயர்ந்த மக்களின் இருப்பிடங்களை எண்ணப் பயன்பட்டது. ஏப்ரல் இறுதியில் 1,27,117 பொது மக்கள் இன்னமும் சிக்கிக் கொண்டிருப்பதாக அய்.நா மதிப்பிட்டது. ஆனால் அரசோ 10,000 பேர் மட்டுமே எஞ்சியிருந்ததாக கூறியது. அந்த இடத்தில் இருந்து வெளியேறி பின்னர் மாணிக்பண்ணை மற்றும் பிற முகாம்களில் வைக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 2,90,000 ஆகும். இந்த எண்ணிக்கைகளில் ஏற்பட்ட குழப்பத்திற்கு அரசு தேவையான விளக்கத்தை அளிக்கவில்லை.

128) அரசின் குறைந்த மதிப்பீட்டின் காரணமாக உலக உணவுத் திட்டம் மூலம் வழங்கப்பட்ட உணவு, உண்மையான தேவையுடன் ஒப்பிடுகையில் மிகமிகக்

போர் நடைபெற்ற இடத்தில் இருந்ததாகக் கருதப்பட்ட எண்ணிக்கையில் இருந்து (சனவரி தொடங்கி பாதுகாப்பு வலயத்தில் ஏறத்தாழ 3 லட்சத்து 30 ஆயிரம் பேரும், கூடுதலாக, முன்பு விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து வெளியேறிய 35 ஆயிரம் பேரும்) மக்களின் எண்ணிக்கையை (ஏறத்தாழ 2,90,000) கழிப்பதன் மூலம் 75 ஆயிரம் பேர் இறந்து போனதாக மற்றொரு மதிப்பீடு கூறுகிறது.

போர் முடிந்த பிறகு நடத்தப்பட்ட குறைந்த எண்ணிக்கையிலான ஆய்வுகளின் மூலம் தங்கள் உறவினர்கள் இறந்து போய்விட்டதாகக் கூறும் பொதுமக்களின் விழுக்காடு, மிக அதிகமாகவே இருப்பதை அறிய முடிகிறது. நம்பிக்கைக்குரிய பலர் ஏறத்தாழ 40 ஆயிரம் பொதுமக்கள் இறந்திருக்கக்கூடும் எனக் கணிக்கின்றனர்.



9.1 மிக மோசமாகக் காயம்பட்டவர்களுடன் கலந்து, இறந்து போனவர்களும் கிடந்தனர்.

குறைந்த அளவாகவே உள்ளது. இதன் காராணமாகப் பரவலான சத்துக் குறைவு, பட்டினி நிலவியது. அதே போன்று வன்னிக்குள் அனுமதிக்கப்பட்ட மருத்துவப் பொருட்களின் அளவானது, குண்டு வீச்சினால் தாக்கப்பட்டவர்களுக்கு மருத்துவம் செய்வதற்கு எந்த வகையிலும் போதுமானதாக இல்லை. இரண்டாவது பாதுகாப்பு வலயத்தில் ஏற்பட்ட காயங்களின் வகைகளைக் கவனத்தில் கொண்டு மயக்க மருந்துகள், இரத்தம் ஏற்றுவதற்கான இரத்தப் பைகள், பூச்சிக் கொல்லிகள், அறுவை சிகிச்சை உபகரணங்கள், கையுறைகள் போன்ற மருத்துவப் பொருட்களை மருத்துவர்கள் கோரியிருந்தனர். ஆனால் இந்தப் பொருட்கள் மிகச்சிறிய அளவில் மட்டுமே வன்னிக்குள் அனுமதிக்கப்பட்டது. இதற்குப் பதிலாக பனடால், ஒவ்வாமை மருந்துகள் மற்றும் ஊட்டச் சத்து மருந்துகள் போன்றவை அவர்களுக்கு வழங்கப்பட்டன. மார்ச் 2010இல் பொதுமக்களின் பாதிப்பு அதிகமான நிலையில் தேவையான மருத்துவப் பொருட்கள் இல்லாததால் பெரும்

துன்பமும் இதனால் நிறைய உயிரிழப்பும் ஏற்பட்டது. மருத்துவப் பொருட்களின் போதாமை குறித்து கடிதங்கள் மற்றும் ஒளிப்பதிவு செய்யப்பட்ட நேர்க்காணல்கள் ஊடாக மண்டல மருத்துவச் சேவைகள் இயக்குநரகத்தின் மருத்துவர்கள் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். காயம்பட்ட மற்றும் இறந்து போனவர்கள் பெயர்ப் பட்டியல் மற்றும் நிழற்படங்களை அவர்கள் தொகுத்து அனுப்பினர். மருத்துவ அமைச்சகம் ஊடகங்களிடம் பேசுவதை நிறுத்துமாறும், புகார் அளிப்பதை நிறுத்துமாறும் இவர்களை எச்சரித்தது. நிறுத்தாவிடில் தண்டிக்கப் படுவார்கள் என்றும் கூறியது. மார்ச் 16 அன்று மருத்துவர்கள் சத்தியமூர்த்தி மற்றும் வரதராஜா ஆகியோர் 'முல்லைத்தீவில் தேவையான மருந்துகள் இல்லாததால் ஏற்பட்ட தேவையற்ற சாவுகள்' என்று ஓர் அறிக்கையை அரசுக்கு அனுப்பினர். அதில் : ''அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளும், தேவையான மருந்துகளும் கிடைத்திருந்தால் மருத்துவமனைச் சாவுகள் பலவற்றை தடுத்திருக்கலாம். எங்களுக்குக் கிருமி நாசினிகள், மயக்க மருந்துகள் மற்றும் ஒரு பாட்டில் குளுக்கோஸ்கூட வழங்கப்படவில்லை. உயிர்காக்கக்கூடிய அவசர அறுவைச் சிகிச்சையைக்கூட வழங்க இயலாத மோசமான நிலையில் நாங்கள் விடப் பட்டோம்'' என்று குறிப்பிட்டனர்.

129) மார்ச் 19, 2009 அன்று மருத்துவ மற்றும் ஊட்டச் சத்து மற்றும் அமைச்சகத்தின் செயலாளர் இதற்கு அளித்த பதிலில், முள்ளிவாய்க்கால் மருத்துவமனையில் பயிற்சி பெற்ற மயக்க மருந்து நிபுணர்கள் இல்லை என்பதால், வீரியமிக்க வலி நிவாரணிகளும் நரம்புகளில் செலுத்தத்தக்க மருந்துகளும் மட்டுமே அனுப்பி வைக்க இயலும் என்று கூறியது. மேலும், மருத்துவர்கள் தங்கள் கடிதங்களை இந்தியாவின் துணைத் தூதுவர் தமிழ்நாட்டின் முதலமைச்சர் ஆகியோருக்கு நகல் அனுப்புவதன் மூலம் மரபுகளை மீறுவதை நிறுத்த வேண்டும் என்றும், இல்லையெனில் நடைமுறைகளை மீறி அரசை தர்மசங்கடப் படுத்தியதற்கு அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அந்தக் கடிதம் எச்சரித்தது.

130) 16 மே அன்று மருத்துவர்கள் போர் நடைபெற்ற இடத்தில் இருந்து வெளியேறியபோது அவர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுப் பல மாதங்கள் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர். 2009 சூலையின் தொடக்கத்தில் மருத்துவர்கள் பத்திரிகையாளர் சந்திப்பை நடத்தினர். அதில் அவர்கள் போரின் போது உண்மையில் மிகக் குறைந்த அளவிலான பொதுமக்கள் சாவும் காயங்களுமே இருந்தன என்றும் அதைப்பற்றிப் பொய்யுரைக்குமாறு விடுதலைப் புலிகளால் கட்டாயப்படுத்தப் பட்டதாகவும் கூறினர். இந்தக் கூற்றானது வன்னியில் அவர்கள் இருந்த போது, நேர்காணல்கள், மின்னஞ்சல்கள் மற்றும் பொது அறிக்கைகள் வழியாக அவர்கள் தெரிவித்தவற்றிற்கு நேர் எதிராக இருந்தது. அவர்கள் மீது அரசு அழுத்தம் கொடுத்ததாக வல்லுநர்க் குழு நம்புகிறது. இதனால் தற்போதைய முரணானது, அவர்களது முந்தைய அறிக்கைகளின் நம்பகத்தன்மையைப் பாதிக்காது.

131) மக்கள் தொகையின் கணக்கு மற்றும் தேவைகள் ஆகியவை குறித்து முதன்மையான செய்திகளைப் பெறக்கூடிய வாய்ப்பு இருந்த போதும், இலங்கை அரசு திட்டமிட்டே மிகக் குறைந்த மதிப்பீடுகளைப் பயன்படுத்தி அதன் மூலம் வன்னிக்குள் செல்லக்கூடிய பொருட்களின் அளவைக் கட்டுப்படுத்தியது இதனால் பொதுமக்கள் மீது மிகப்பெரும் அழுத்தத்தை ஏற்படுத்தும் திட்டத்துடன் அது செயல்பட்டது. போருக்குப்பின் ஒரு மூத்த அரசு அலுவலர், மதிப்பீடுகள் இவ்வாறு குறைக்கப்பட்டதை ஒப்புக்கொண்டுள்ளார். போரின் இறுதிக் கட்டங்களில் விடுதலைப் புலிகளையும் பொதுமக்களையும் அரசு குழப்பிக் கொண்டது என்பதையும் இந்த குறைந்த எண்ணிக்கை மதிப்பீடுகள் காட்டுகின்றன.



போர் முடிந்து இரண்டு ஆண்டுகள் ஆன பிறகும் பொதுமக்களின் சாவு குறித்து, ஒரு சரியான எண்ணிக்கை இல்லை. ஆனால், பல்வேறு தரப்பினரிடமிருந்தும் பெறப்பட்ட தகவல்கள் 40,000 பொதுமக்கள் வரை இறந்ததைப் புறந்தள்ள முடியாது எனக் குறிப்பிடுகின்றனர். ஒரு சரியான விசாரணை மட்டுமே பாதிக்கப்பட்ட அனைவரையும் அடையாளம் கண்டு, மொத்தமாக பொதுமக்களின் சாவு எண்ணிக்கையை மிகச் சரியாகக் கணிக்க வழிவகுக்கும்.

உ) பொதுமக்களின் சாவு எண்ணிக்கை

132) போரின் இறுதிக் கட்டங்களில் வன்னியில் பொதுமக்களின் சாவு மற்றும்

காயம் பட்டவர்கள் குறித்த அதிகாரபூர்வ எண்ணிக்கை இல்லை. ஒரு நம்பத் தகுந்த எண்ணிக்கையைக் கணிப்பதை மிகவும் கடினமாக்குகிற காரணங்கள் பல உள்ளன.

பெரும்பான்மையானோர் புதிதாகக் கணவனை இழந்தவர்களாகவும், ஆதரவற்றவர்களாகவும் உடல் குறை ஏற்பட்டவர்களாகவும் இருந்தனர். இலட்சக் கணக்கான மக்கள் போர் தொடர்பான காயங்களைக் கொண்டிருந்தனர். அவற்றில் குறைந்தது 2000 பேர் கை, கால்களை இழந்திருந்தனர்.

அ) போர் நடைபெற்ற பகுதியில் 3,30,000 மக்கள் இருந்திருக்கலாம் என்ற போதும் அதன் சரியான எண்ணிக்கை நிச்சயமற்றதாகவே உள்ளது.

ஆ) வன்னியில் இருந்து வெளியேறி வந்தவர்களிடம் நடத்திய விசாரணைகளின் வெளிப்படையற்ற தன்மை காரணமாக, அவ்வாறு வந்த மக்களின் சரியான எண்ணிக்கை தெரியவில்லை. போரின் இறுதிக்கட்டங்களில் நடைபெற்ற கூடுதல் கட்டாய ஆள் சேர்ப்பின் காரணமாக, விடுதலைப்புலிகள் இயக்கப் போராளிகளின் சரியான எண்ணிக்கை கிடைக்கவில்லை.

இ) சில சூழல்களில் இறந்து போன பொதுமக்கள் அவர்கள் இறந்து விழுந்த இடத்திலேயே எந்தப் பதிவுமின்றி புதைக்கப் பட்டதானது, கவனிப்பற்றுப் போனது.

133) காயம் பட்ட மற்றும் இறந்துபோனவர்களின் எண்ணிக்கை குறித்து மருத்துவர்கள் பதிந்திருந்த தரவுகளின் அடிப்படையிலும், அதனை உறுதி செய்த மருத்துவமனைகள் மற்றும் மாவட்டப் பேரழிவு மேலாண்மைப் பிரிவு ஆகியவற்றின் அடிப்படையிலும் சிலர் சில மதிப்பீடுகளைச் செய்துள்ளனர். போரின் இறுதிக் கட்டங்களில் ஏறத்தாழ 40 ஆயிரம் அறுவைச் சிகிச்சைகளும் 5000 உடல் உறுப்பு நீக்க அறுவைச் சிகிச்சைகளும் நடத்தப்பட்டதாக ஒரு மதிப்பீடு கூறுகிறது. காயம் பட்டவர்களுக்கும் இறந்து போனவர்களுக்கும் இடையே உள்ள விகிதாச்சாரமானது, பல நேரங்களில் ஒன்றுக்கு இரண்டு அல்லது ஒன்றுக்கு மூன்று என இருந்தது. இதனடிப்படையில் செய்யப்பட்ட மதிப்பீட்டின்படி, கூடுதலான சாவு இருந்திருக்க வேண்டும். போர் நடைபெற்ற இடத்தில் இருந்ததாக, கருதப்பட்ட எண்ணிக்கையில் இருந்து (சனவரி தொடங்கி பாதுகாப்பு வலயத்தில் ஏறத்தாழ 3 லட்சத்து 30 ஆயிரம் பேரும் கூடுதலாக முன்பு விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து வெளியேறிய 35 ஆயிரம் பேரும்) மக்களின் எண்ணிக்கையை (ஏறத்தாழ 2,90,000) கழிப்பதன் மூலம் 75 ஆயிரம் பேர் இறந்து போனதாக மற்றொரு மதிப்பீடு கூறுகிறது.

134) அய்.நா.வின் உள்நாட்டுக் குழு, மற்றொரு தகவல் மூலம், வெளிப்படையாக வெளியிடப்படாத ஓர் ஆவணத்தில், ஆகஸ்ட் 2008 இல் தொடங்கி மே 13, 2009 வரை, 7,721 பேர் கொல்லப்பட்டதாகவும், 18,479 பேர் காயம் பட்டதாகவும் அது கணக்கிடுகிறது. இந்தத் தேதிக்குப் பின்னர் எண்ணுவது மிகக் கடினமாகிப் போனது. 2009 பிப்ரவரியின் தொடக்கத்தில் மக்கள் இழப்பின் எண்ணிக்கையைத் திரட்டும் பணியை அய்.நா. தொடங்கியது. ஆனால், தொடர்புகள் எடுப்பதில் இருந்த சிக்கல் காரணமாக இம்முயற்சிகள் தடைபட்டன. பேரிடர் செயல்பாட்டுக்குழு என்ற ஓர் உள்நாட்டுக் குழு அமைக்கப்பட்டு அதன் மூலம் பொதுமக்கள் இழப்பு குறித்த நம்பிக்கைக்கையுரிய தரவுகளும் பிற மனித நேய செய்திகளும் சேகரிக்கப்பட்டன. மண்டல மருத்துவச் சேவைகள் இயக்குநரகத்திடம் இருந்து பெற்ற எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு வன்னியில் இருந்த அய்.நா. மற்றும் அரசுசாரா நிறுவனங்களின் உள்நாட்டு ஊழியர்களிடமிருந்து பெறப்பட்ட அறிக்கைகள் மூலமும், செஞ்சிலுவைச் சங்கம் மத நிறுவனங்கள் மற்றும் பிறவற்றின் மூலம் கிடைத்த தரவுகளை, அடிப்படைத் தரவுகளோடு ஒப்பிட்டு – இதன் மூலம் மொத்த இழப்பு எண்ணிக்கையை கணிக்க முயன்றது. இந்த முறையானது மிகவும் இறுக்கமானதாக இருந்தது. ஒரு நிகழ்வு இந்த மூன்று விதமான நிறுவனங்களால் உறுதி செய்யப்படாவிடில் அல்லது இருமுறை கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டால் அவை விடப்பட்டன. 'தமிழ்நெட்' போன்றவையும்



10. Child in hospital in second No Fire Zone, April 2009
Source: submission to the Panel by the photographer

வன்னிக்கு வெளியே கிடைத்த அரசு சார்ந்த செய்திகளும், சார்புடையவையாக இருக்கக்கூடும் என அவற்றால் கூறப்பட்ட எண்ணிக்கை கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

135) அய்.நா.வின் உள்நாட்டுக்குழுவினால் கணிக்கப்பட்டத் தொகையானது, ஒரு தொடக்கப்புள்ளியாக இருக்கிறது. ஆனால் பல காரணங்களால் அந்தக் கணிப்பு மிகக் குறைவானதாக இருக்க வாய்ப்புள்ளது. விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் கண்காணிக்கும் வாய்ப்பைப் பெற்ற செயல் பாட்டாளர்களின் கவனத்திற்கு வந்த இழப்புகளை மட்டுமே அது கணக்கில் எடுத்துக்கொண்டது. நிறைய இழப்புகள் அவ்வாறு கவனிக்கப்படாமல் போயிருக்கக்கூடும். இரண்டாவதாக மே 13 அன்று அய்.நா. எண்ணுவதை நிறுத்தியபிறகு பொதுமக்கள் இழப்பு அதிவேகமாக அதிகரித்தது. குண்டு வீச்சின் தீவிரம் அதிகமான நிலையில் இறந்து போன பெரும்பாலான பொதுமக்களின் உடல்கள் இறந்த இடங்களிலேயே கைவிடப்பட்டு, அவை பதிவு செய்யப்படவோ, மருத்துவமனைக்கு எடுத்து வரப்படவோ அல்லது குறைந்த பட்சம் புதைக்கப் படவோ கூட இல்லை. இதன் பொருள் என்னவெனில் அய்.நா.வின் எண்ணிக்கையை விட உண்மையான எண்ணிக்கை பல மடங்கு அதிகமாக இருக்கக்கூடும்.

136) அரசுடனான தனிப்பட்ட உரையாடல்களில் அய்.நா. இழப்பு எண்ணிக்கையை அதிகரித்துச் சொன்ன போதும், தனது குறிப்பிட்ட கணிப்பை அது ஒரு போதும் பொதுவில் வெளியிடவில்லை என்பது கவனிக்கத்தக்கது. அய்.நா. வழங்கிய எண்ணிக்கையை அரசு அதிகாரிகள் கடுமையாக மறுத்தனர். இந்த எண்ணிக்கை போலியானது என்றும், இது அய்.நா.வின் பணி அல்ல என்றும் அவர்கள் கூறினர். அய்.நா. வெளிப்படையாகப் போரினால் பொதுமக்களுக்கு பேரிழப்பு ஏற்பட்டது என்றும், இழப்பு எண்ணிக்கை ஏற்றுக்கொள்ள முடியாத அளவு அதிகமாக இருந்தது என்றும் குறிப்பிட்டது. ஆனால், உண்மையான எண்ணிக்கை உறுதி செய்யப்படாமலேயே இருந்தது. உண்மையான எண்ணிக்கையை வழங்குவதில்லை என்ற முடிவின் காரணமாக, பொதுமக்கள் பேரிழப்பு ஒரு முக்கியச் செய்தியாக்கப் படவில்லை. மார்ச் 13, 2009 வரை மூத்த அய்.நா. அதிகாரிகள் இந்த நிலையிலேயே இருந்தனர். மார்ச் 2009 அன்று மனித உரிமைகளுக்கான உயர் ஆணையர், சனவரி 20 தொடங்கி 2800 பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என்றும், 7000 பேர்

பெரும் எண்ணிக்கையிலான மக்கள் வெளியேறிய போது, சூழல் மிகவும் அமளியாக இருந்தது. பெரும்பான்மையான குடும்ப உறுப்பினர்கள் ஒருவரோடொருவர் தொடர்பின்றிப் பிரிந்திருந்தனர். நிறைய குடும்பங்கள் பிரிக்கப்பட்டு, அதன் உறுப்பினர்கள் வெவ்வேறு ஊர்களில் தங்க வைக்கப் பட்டிருந்தனர். குடும்ப உறுப்பினர்களைத் தேடி ஒன்றிணைவதற்கான வாய்ப்புகள் போதுமான அளவுக்கு இல்லை. இது தொடர்பான பங்கை ஆற்றச் செஞ்சிலுவைச் சங்கத்திற்கு அதிகாரம் வழங்கப்படவில்லை.

காயம்பட்டிருக்கலாம் என்றும், அவர்களில் பெரும்பாலானோர் பாதுகாப்பு வலயத்திற்குள்ளேயே தாக்கப்பட்டனர் என்றும் வெளிப்படையாக அறிவித்தார். இலங்கை அரசிடமிருந்து வந்த அழுத்தம் மற்றும் தொடர்புகள் அற்றுப் போகப்படும் என்ற அச்சம் ஆகியவை காரணமாக, மீறல்கள் குறித்து அய்.நா.வின் நிறுவனங்கள் அடக்கி வாசித்திருக்கக்கூடும். நிகழ்வுகள் நடந்து கொண்டிருந்த போது, உண்மையான எண்ணிக்கையை வெளிப்படையாக அறிவிக்காததற்காக அய்.நா.வின் தோல்வி குறித்துச் சிலர் விமர்சித்துள்ளனர். பிற போர்ச் சூழல் களோடு ஒப்பிடுகையில், அய்.நா. இங்கு கூடுதல் கவனத்துடன் இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளனர்.

இளவயதினர் மீது போர் குறிப்பிட்ட பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது. 14 வயதே ஆன குழந்தைகள் கட்டாய ஆள் சேர்ப்புக்காகப் புலிகளால் குறிவைக்கப்பட்டனர். அப்படிப் படையணியில் இணைக்கப்படுவதை தடுப்பதற்கான நடவடிக்கைகளான இளவயது திருமணம் உள்ளிட்டவை, சிறுமிகளின் உடல் நலன் மீது மோசமான பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது.

137) போர் முடிந்த பிறகு நடத்தப்பட்ட குறைந்த எண்ணிக்கையிலான ஆய்வுகளின் மூலம் தங்கள் உறவினர்கள் இறந்து போய்விட்டதாகக் கூறும் பொதுமக்களின் விழுக்காடு மிக அதிகமாகவே இருப்பதை அறிய முடிகிறது. நம்பிக்கைக்குரிய பலர் ஏறத்தாழ 40 ஆயிரம் பொதுமக்கள் இறந்திருக்கக்கூடும் எனக் கணிக்கின்றனர். போர் முடிந்து இரண்டு ஆண்டுகள் ஆன பிறகும் பொதுமக்களின் சாவு குறித்து, ஒரு சரியான எண்ணிக்கை இல்லை. ஆனால் பல்வேறு தரப்பினரிடமிருந்தும் பெறப்பட்ட தகவல்கள் 40,000 பொதுமக்கள் வரை இறந்ததை புறந்தள்ள முடியாது எனக் குறிப்பிடுகின்றனர். ஒரு சரியான விசாரணை மட்டுமே பாதிக்கப்பட்ட அனைவரையும் அடையாளம் கண்டு, மொத்தமாக பொதுமக்களின் சாவு எண்ணிக்கையை மிகச் சரியாக கணிக்க வழிவகுக்கும்.

ஊ) போர் நடைபெற்ற இடத்திற்கு வெளியிலும், போருக்குப் பிறகு மான சூழலில் நடந்த நிகழ்வுகள் குறித்த தகுதிவாய்ந்த குற்றச்சாட்டுகள்

138) அரசுக் கட்டுப்பாட்டுப் பகுதியில் நுழைந்ததோடு, வன்னியில் நடந்த போரில் பிழைத்த பொதுமக்களின் துயர நிலை முடிவுக்கு வரவில்லை. சனவரி 2009 தொடக்கத்தில் இருந்தே வன்னியில் இருந்து பெரும் எண்ணிக்கையிலான மக்களின் இடப்பெயர்வை எதிர்பார்த்துத் தயாராக இருப்பதாக அரசு தொடர்ந்து அறிவித்தபோதும், உண்மையில் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் வந்த போது தேவையான தயாரிப்புகளைச் செய்ய அரசு தவறிவிட்டது. இதனால் சிக்கல்கள் எழுந்தன. இடம் பெயர்ந்த மக்களின் மனித நேயத் தேவைகள் மற்றும் நல்வாழ்வை விட, பாதுகாப்பு விசயங்களுக்கு அரசு முக்கியத்துவம் கொடுத்தது.

139) போர் நடைபெற்றப் பகுதியில் இருந்து வெளிவந்தபோது தாங்கள் வரவேற்கப்படும் விதம் குறித்துப் பொதுமக்கள் அச்சத்துடன் இருந்தனர். தங்களது அண்மை அனுபவங்களின் விளைவாக அவர்கள் மிகக் கடுமையாக மன நிலை பாதிக்கப்பட்டும், தளர்ந்து போயும் இருந்தனர். பெரும்பான்மையானோர் புதிதாகக் கணவனை இழந்தவர்களாகவும், ஆதரவற்றவர்களாகவும் உடல் குறை ஏற்பட்டவர்களாகவும் இருந்தனர். இலட்சக்கணக்கான மக்கள் போர் தொடர்பான காயங்களைக் கொண்டிருந்தனர். அவற்றில் குறைந்தது 2000 பேர் கை, கால்களை இழந்திருந்தனர். பெரும் எண்ணிக்கையிலான மக்கள் வெளியேறிய போது சூழல் மிகவும் அமளியாக இருந்தது. பெரும்பான்மையான குடும்ப உறுப்பினர்கள் ஒருவரோடொருவர் தொடர்பின்றிப் பிரிந்திருந்தனர். நிறைய குடும்பங்கள் பிரிக்கப்பட்டு, அதன் உறுப்பினர்கள் வெவ்வேறு ஊர்களில் தங்க வைக்கப் பட்டிருந்தனர். குடும்ப உறுப்பினர்களைத் தேடி ஒன்றிணைவதற்கான வாய்ப்புகள் போதுமான அளவுக்கு இல்லை. இது தொடர்பான பங்கை ஆற்றச் செஞ்சிலுவைச் சங்கத்திற்கு அதிகாரம் வழங்கப்படவில்லை.

140) குடும்பத்திலிருந்து பிரிந்திருந்தது என்பது நிறைய பெண்களைத் தனிமையாக்கி, பாலியல் வன்முறைக்கு எளிதாகப் பலியாகக்கூடிய நிலையில் விட்டிருந்தது. கர்ப்பிணிப் பெண்கள் தேவையான ஊட்டச் சத்து இன்றியும்,

மருத்துவக் கவனிப்பு இன்றியும் மிக அதிகமான உளவியல் அழுத்தத்துடனும் துன்பப்பட்டனர். குழந்தைகளை வலுக்கட்டாயமாகப் படைகளில் சேர்த்தது, தாய்மார்களின் மீது கடும் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது.

141) இளவயதினர் மீது போர் குறிப்பிட்ட பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது. 14 வயதே ஆன குழந்தைகள் கட்டாய ஆள் சேர்ப்புக்காகப் புலிகளால் குறிவைக்கப்பட்டனர். அப்படிப் படையணி இணைக்கப்படுவதை தடுப்பதற்கான நடவடிக்கைகளான இளவயது திருமணம் உள்ளிட்டவை, சிறுமிகளின் உடல் நலன் மீது மோசமான பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது. கூடுதலாக, குண்டு வீச்சின் காரணமாக ஆயிரக்கணக்கான குழந்தைகள் கொல்லப்பட்டும், உடல் உறுப்புகளை இழந்தும், கடுமையான மீறல்களால் பாதிக்கப்பட்டனர். பதுங்கு குழியிலிருந்து வெளியேறி விளையாடிக் கொண்டிருந்ததால். சிலர் கொல்லப்பட்டிருந்தனர். குண்டுத் துகள்கள் அவர்களுடைய சிறிய மென்மையான உறுப்புகளை எளிதாக துளைத்ததால் குழந்தைகள் குறிப்பாகக் கொடுமையான காயங்களுக்கு எளிதாக ஆட்பட்டனர். அவசர கதியில் நடத்தப்பட்ட ஓர் ஊட்டச் சத்துக் கணிப்பில் ஏறத்தாழ 25 விழுக்காடு குழந்தைகள் மிக மோசமான ஊட்டச்சத்துக் குறைபாடு உடையவர்களாக இருப்பது தெரிந்தது.



கூடுதலாக, குண்டு வீச்சின் காரணமாக ஆயிரக்கணக்கான குழந்தைகள் கொல்லப்பட்டும், உடல் உறுப்புகளை இழந்தும், கடுமையான மீறல்களால் பாதிக்கப்பட்டனர். பதுங்குக்குழியிலிருந்து வெளியேறி விளையாடிக் கொண்டிருந்ததால் சிலர் கொல்லப்பட்டிருந்தனர். குண்டுத்துகள்கள் அவர்களுடைய சிறிய மென்மையான உறுப்புகளை எளிதாக துளைத்ததால், குழந்தைகள் குறிப்பாகக் கொடுமையான காயங்களுக்கு எளிதாக ஆட்பட்டனர். அவசர கதியில் நடத்தப்பட்ட ஓர் ஊட்டச் சத்துக் கணிப்பில் ஏறத்தாழ 25 விழுக்காடு குழந்தைகள் மிக மோசமான ஊட்டச்சத்துக் குறைபாடு உடையவர்களாக இருப்பது தெரிந்தது.

142) தொடர்ந்து பல முறை இடம் பெயர்ந்தது, பெரும்பாலான குழந்தைகள் மீது மிக மோசமான உளவியல் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. பலர் பெற்றோரை இழந்திருந்தனர். இதனால் ஆதரவற்றுப் போயிருந்தனர். அது பதிவு செய்யப்படவும் இல்லை. நிறைய குழந்தைகள் ஊட்டச்சத்து இன்றி இருந்தனர். பல கைக் குழந்தைகள் நீர்ச் சத்துக் குறைவு அல்லது வயிற்றுப் போக்கினால் பாதிக்கப்பட்டிருந்தனர்.

143) இதே போன்று வயது முதிர்ந்தவர்களும் போரினால் குறிப்பாகப் பாதிக்கப்பட்டிருந்தனர். தொடர்ச்சியாக இடம் பெயர்ந்ததன் காரணமாக, தொடர்ந்து நடக்க முடியாத வயது முதிர்ந்தவர்களும் பிறரும் பெரும்பாலும் கைவிடப்பட்டனர். அவர்களது உறவினர்கள் தப்பி ஓடிய நிலையில் சிலர் கைவிடப்பட்டிருந்தனர். பிறர் இடம் பெயர்ந்தோருக்கான முகாம்களில் கவனிப்பின்றி விடப்பட்டு, புறக்கணிப்பு, அயர்ச்சி மற்றும் தடுக்கக்கூடிய நோய்கள் ஆகியவற்றின் காரணமாக உயிரிழந்தனர்.

1) விசாரித்து வடிகட்டும் நடைமுறையில் நடைபெற்ற அத்துமீறல்கள்

144) வன்னியிலிருந்து வெளியேறி வட்டுவாகல் பாலத்திலும் பிற இடங்களிலும் அரசுக் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் நுழைந்த போரில் உயிர் பிழைத்தவர்கள், இலங்கை இராணுவத்திடம் சரணடைந்தனர். அவ்வாறு வந்த பொதுமக்கள் தனித்தனியான பல்வேறுக் குழுக்களாகப் பிரிக்கப்பட்டிருந்தனர். முதலில் இலங்கை இராணுவம் பொதுவாக அவர்களை முற்றிலுமாக உடைகளைக் களைந்து ஆயுதங்கள் அல்லது வெடி பொருட்கள் இருக்கிறதா எனச் சோதித்தது. மடிக் கணினி மற்றும் நிழற்படக் கருவிகள், பாதுகாப்புப் படையினரால் கைப்பற்றப்பட்டன. இதனால் பல முக்கியத் தகவல்களை இழக்க நேரிட்டது. பின்னர் கிளிநொச்சி, புல்மோட்டை மற்றும் பதவியா போன்ற இடங்களில் அமைக்கப்பட்டிருந்த முதற்கட்ட விசாரணை மய்யங்களுக்குப் பெரும்பாலும் நடத்தி அழைத்துச் செல்லப்பட்டனர். இந்த மய்யங்களில் ஒரு நாளேனும் விடுதலைப் புலிகளுடனும் தொடர்பு கொண்டிருந்தவர்கள் தங்களைத் தாங்களே வெளிப்படுத்திச் சரணடையுமாறு இலங்கை இராணுவம் அழைப்பு விடுத்தது. அவ்வாறு சரணடைந்தவர்களுக்குத் தொழிற்பயிற்சியும் வெளி நாட்டில் வேலையும் தருவதாக உறுதியளித்தது. ஆனால், இதற்கு மாறாக அவ்வாறு தங்களைப் புலிகள் என வெளிப்படுத்தியவர்கள் தனி முகாம்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். புலிகள் எனச் சந்தேகிக்கப்பட்டவர்கள் ஒரு குறிப் பிடத்தக்க எண்ணிக்கையினர் பெண்கள் மற்றும் குழந்தைகளாக இருந்தனர்.

குழுவிடம் உள்ள நிழற் படங்கள், பல போராளிகள் அல்லது பொதுமக்களின் இறந்த உடல்களைக் காட்டுகின்றன. அவற்றில் சில கைகள் பின்னால் கட்டப்பட்ட நிலையில் உள்ளன. ஆகஸ்ட் 25, 2009 அன்று பிரிட்டனைச் சேர்ந்த 'சானல் 4' செய்தித் தொலைக்காட்சி ஒரு காணொளியை வெளியிட்டது. பல கைதிகள் தங்கள் கைகள் பின்னால் கட்டப்பட்ட நிலையில் ஒட்டு மொத்தமாக இலங்கை இராணுவத்தினரால் படுகொலை செய்யப் பட்டதை அவை காட்டின. அந்தக் காணொளியில் இருந்த கைதிகள், உடலில் உடையின்றியும் கண்கள் கட்டப்பட்ட நிலையிலும் இருந்தனர். தலையில் மிக அருகில் சுடப்படுவதற்கு முன், அவர்கள் உதைக்கப்பட்டும், மண்ணால் தங்கள் உடலை மூடிக்கொள்ளக் கட்டாயப்படுத்தப்படவும் பட்டுள்ளனர்.



145) கூடுதலாக, கருணா குழுவினர் அல்லது தமிழீழ மக்கள் விடுதலைப் படை (ப்ளாட்) ஆகியவற்றைச் சேர்ந்த விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் உறுப்பினர்களைப் பயன்படுத்தி, விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களை அடையாளம் கண்டு அவர்கள் பிரிக்கப்பட்டு வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். முதற்கட்ட விசாரணை மய்யங்களில் நுழையவோ தொடர்பு கொள்ளவோ, உலகளாவிய மனித நேய அமைப்புகளை அரசு திட்டமிட்டுத் தடுத்தது.

146) இந்த முதற்கட்ட விசாரணைக்குப் பின் தப்பிய பொதுமக்கள் ஓமந்தையில் அமைக்கப்பட்டிருந்த அடுத்தகட்ட விசாரணை மய்யத்திற்கு எடுத்துச் செல்லப் பட்டனர். பெண்களும் ஆண்களும் தனித்தனியாக விசாரிக்கப்பட்ட போதும், விசாரணையின் ஒரு பகுதியாக பொதுவாக மக்கள் உடைகளைக் களையுமாறு வற்புறுத்தப்பட்டனர். இது, பெரும் மன உளைச்சலையும், குறிப்பாக பெண்கள் மற்றும் சிறுமிகளிடையே பலியாவதற்கான வாய்ப்புகளையும் அதிகரித்தது. 'எல்லைகள் கடந்த மருத்துவர்கள்', அகதிகளுக்கான அய்.நா. உயர் ஆணையர் களின் அலுவலகம் மற்றும் செஞ்சிலுவைச் சங்கம் ஆகியோர் ஓமந்தைக்குள் நுழைய ஒரு குறிப்பிட்ட அளவு அனுமதிக்கப்பட்டிருந்தனர். ஆனால், தனிப்பட்ட முறையில் மக்களைச் சந்தித்து உரையாட அனுமதிக்கப்படவில்லை. சூலை 2009க்குப் பிறகு செஞ்சிலுவைச் சங்கம் முற்றிலுமாக விலக்கப்பட்டது.

147) மருத்துவக் கவனிப்புத் தேவைப்பட்ட பொதுமக்கள், வவுனியாவில் உள்ள மருத்துவமனைகளுக்கோ புல்மோட்டையில் இந்திய மருத்துவர்களால் நடத்தப்பட்ட மருத்துவமனைக்கோ அனுப்பப்பட்டனர். வவுனியா மருத்துவ மனை, நோயாளிகளால் நிரம்பி வழிந்தது. இதனால் சிகிச்சை முடியும் முன்னரே பலர் மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டனர். எல்லா நோயாளிகளும் இலங்கை இராணுவத்தால் நெருக்கமாக கண்காணிக்கப்பட்டனர். காவல் துறை விசாரணைப் பிரிவினரான குற்றவியல் விசாரணை மற்றும் பயங்கரவாத விசாரணைப் பிரிவு ஆகியவற்றின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். சில நோயாளிகள் மருத்துவமனையிலிருந்து காணாமல் போயினர்.

148) குறிப்பாக இந்த விசாரணை நடைமுறையின் விளைவாக, படுகொலைகள் காணாமல் போதல் மற்றும் வன்புணர்வு மற்றும் பாலியல் வன்முறை ஆகியவை நடைபெற்றன.

அ) படுகொலைகள்

149) இலங்கை இராணுவம் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களை தனது கட்டுப்பாட்டில் எடுத்த பிறகு, அவர்களில் பலர் படுகொலை செய்யப்பட்டதை உறுதி செய்யப்பட்ட காணொளிகளும் எண்ணற்ற நிழற்படங்களும் காட்டு கின்றன. குழுவிடம் உள்ள நிழற் படங்கள், பல போராளிகள் அல்லது பொதுமக்களின் இறந்த உடல்களைக் காட்டுகின்றன. அவற்றில் சில கைகள் பின்னால் கட்டப்பட்ட நிலையில் உள்ளன. ஆகஸ்ட் 25, 2009 அன்று பிரிட்டனைச் சேர்ந்த 'சானல் 4' செய்தித் தொலைக்காட்சி ஒரு காணொளியை வெளியிட்டது. பல கைதிகள் தங்கள் கைகள் பின்னால் கட்டப்பட்ட நிலையில் ஒட்டுமொத்தமாக இலங்கை இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டதை அவை காட்டின. அந்தக் காணொளியில் இருந்த கைதிகள், உடலில் உடையின்றியும் கண்கள் கட்டப்பட்ட நிலையிலும் இருந்தனர். தலையில் மிக அருகில் சுடப்படுவதற்கு முன் அவர்கள் உதைக்கப்பட்டும், மண்ணால் தங்கள் உடலை மூடிக்கொள்ளக் கட்டாயப்படுத்தப்படவும் பட்டுள்ளனர். அந்தக் காணொளியில் இந்த நிகழ்விற்கு முன் கொல்லப்பட்டிருக்கக்கூடிய பல கைதிகளும் தெரிகின்றனர். அதே காட்சியைப் பற்றி இரண்டாவது காணொளியையும் அதே 'சானல் 4' டிசம்பர் 2, 2010 அன்று வெளியிட்டது. அந்தக் காணொளியில், ஒரு பரந்த நிலப்பரப்பில்

பெரும் எண்ணிக்கையில் படுகொலை செய்யப்பட்ட கைதிகளின் உடையற்ற உடல்களைக் காட்டுகிறது. அவற்றில் ஆண்கள், பெண்கள் இரு பாலரும் இருக்கின்றனர். அவற்றில் ஒரு சிறுவனும் ஒரு பெண்ணும் உள்ளனர். அந்தப் பெண் இசைப்பிரியா என்று அறியப்பட்ட விடுதலைப் புலிகளின் ஊடகத் துறையைச் சேர்ந்த புகழ்பெற்ற ஒருவராக அடையாளம் காணப்பட்டுள்ளார். 53ஆவது படையணியின் ஒரு நடவடிக்கையில் மே 18, 2009 அன்று கொல்லப்பட்டவர்களின் பட்டியல் எனப் பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட பட்டியலில் இசைப்பிரியாவின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த 2ஆவது காணொளியானது சில இராணுவத்தினரின் முகங்களையும் இந்தக் காட்சியைத் தங்களின் கைபேசியில் படம் பிடிக்கும் சிலரையும் காட்டுகிறது.

150) படுகொலைக்கு முன் எடுக்கப்பட்டது எனத் தோன்றும் புகைப்படங்களில் அந்தச் சிறுவன் கைகள் பின்னால் கட்டப்பட்ட நிலையில், உயிரோடு உள்ள ஒரு கைதிகள் குழுவினருடன் அமர்ந்திருக்கிறான். அந்த நிழற்படத்தில் உள்ள அனைவரும் மிகத்தெளிவாக பெரும் அச்சத்துடன் இருக்கின்றனர். இலங்கை இராணுவத்தால் முதலில் தடுத்துவைக்கப்பட்டப்போது விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் எனச் சந்தேகிக்கப்பட்ட சிலர் துன்புறுத்தல்களுக்கும் உட்படுத்தப்பட்டள்ளனர். நிழற்படங்களில் காட்டப்படுபவர்களின் உடல்களில், துன்புறுத்தப்பட்ட அடையாளங்கள் தெரிகின்றன. ஒரு காணொளி, ஓர் இளைஞர் மரத்தில் கட்டப்பட்ட நிலையில் உடல் முழுவதும் இரத்தத்தால் மூடப்பட்டு இருப்பதைக் காட்டுகிறது. பின்னர் அதே இளைஞன் இறந்த நிலையில் புலிகளின் கொடி போர்த்தப்பட்ட கல்லறையில் கிடப்பது தெரிகிறது.

ஆ) காணாமல் போனவர்கள்

151) விசாரணை மய்யங்களிலோ, ஓமந்தையிலோ மக்கள் தங்களை வெளிப்படையாகப் பதிவு செய்து கொள்ளும் வாய்ப்பை அரசு தரவில்லை. பன்னாட்டு அமைப்புகள் இந்த நடைமுறையைக் கண்காணிப்பதையும் அது அனுமதிக்கவில்லை. இதனால் தனிநபர்களை கண்டுபிடிப்பது என்பது சிரமமாகிப் போனது, 'கற்ற பாடங்கள் மற்றும் இணக்கத்திற்கான ஆணைய'த்தின் விசாரணையின் போது, பல பெண்கள் தாங்கள் முதலில் அரசுக்கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு நுழைந்தவுடன், எவ்வாறு தங்கள் கணவன்மார் மற்றும் உறவினர்கள் அவர்களிடமிருந்து பிரித்துச் செல்லப்பட்டனர் என்பதையும், அன்று வரை அவர்களை மீண்டும் காண இயலவில்லை என்பதையும் அவர்கள் எங்கிருக் கிறார்கள் என்பதை அரசு உறுதி செய்யவில்லை என்பதையும் வாக்குமூலங்கள் அளித்துள்ளனர். வல்லுநர்க் குழுவிடம் குறைந்தது 32 வாக்குமூலங்கள் மே 2009இல் காணாமல் போனவர்களைப் பற்றிக் குற்றம் சாட்டுகிறது. அதில் சில தனி நபர்கள் அல்லாமல் குழுவாகக் காணாமல் போனவர்கள் பற்றியும் குறிப் பிட்டுள்ளது. இவர்களில் பலர் இலங்கை இராணுவத்திடம் சரண் அடைந்தவர்கள்.



பல நிழற்படங்கள் மற்றும் காணொளிகள், குறிப்பாக 'சானல் 4' அளித்த காணொளி ஆகியவை இறந்த பெண் போராளிகளைக் காட்டுகின்றன. இவற்றில் மீண்டும் மீண்டும் பெண்கள் உடையற்றோ அல்லது மார்பகங்கள் மற்றும் பிறப்பு உறுப்புகளை வெளிப்படுத்தும் வகையில் உள்ளாடைகள் களையப்பட்டோ காட்டப்பட்டுள்ளனர்.

இ) வன்புணர்வு மற்றும் பாலியல் வன்முறைகள்

152) ஆயுதப் போரின் இறுதிக்கட்டங்களிலும், அதன் பிறகும் தமிழ்ப் பெண்களுக்கு எதிராக நடத்தப்பட்ட வன்புணர்வு மற்றும் பாலியல் வன்முறை ஆகியவை மிகக் குறைவாகவே வெளிவந்துள்ளன. பண்பாட்டு உணர்வுகள் மற்றும் அதனோடு தொடர்புடைய சிக்கல்கள் ஆகியவை, பாதிக்கப்பட்டவர்கள் இத்தகைய குற்றங்களைத் தங்கள் உறவினர்களிடம் கூடச் சொல்லாமல் தவிர்க்கும் நிலையை ஏற்படுத்தியுள்ளன. போரின் இறுதிக்கட்டங்களிலும் அதன் பிறகும் அரசப்படைகள் மற்றும் அவர்களுக்குத் துணை நின்ற ஆயுதக் குழுவினர் ஆகியவற்றின் உறுப்பினர்கள் நடத்திய பாலியல் வன்முறை மற்றும் வன்புணர்வு ஆகியவை குறித்துப் பல பெண்கள் அளித்த மறைமுக வாக்குமூலங்கள் உள்ளன.

153) பல நிழற்படங்கள் மற்றும் காணொளிகள் குறிப்பாக 'சானல் 4' அளித்த

காணொளி ஆகியவை இறந்த பெண் போராளிகளைக் காட்டுகின்றன. இவற்றில் மீண்டும் மீண்டும் பெண்கள் உடையற்றோ அல்லது மார்பகங்கள் மற்றும் பிறப்பு உறுப்புகளை வெளிப்படுத்தும் வகையில் உள்ளாடைகள் களையப்பட்டோ காட்டப்பட்டுள்ளனர். 'சானல் 4' இன் படங்களுடன் சிங்கள இராணுவத்தினர் சிங்களத்தில் கொடுத்துள்ள பின்னணிக்குரல் ஆகியவை கொலை செய்யப் படுவதற்கு முன்போ அல்லது பின்போ வன்புணர்வு அல்லது பாலியல் வன்முறை நடந்திருக்கக்கூடும் என்ற உறுதியான கேள்வியினை எழுப்புகிறது. ஒரு காணொளியில் இலங்கை இராணுவத்தினர் இறந்து போன அல்லது இறக்கும் தருவாயில் உள்ள பெண்களில் உடைகளற்ற உடல்களை ஒரு லாரியில் மிகவும் மரியாதையற்ற முறையில் ஏற்றுவதைக் காட்டுகிறது. மற்றொன்றில் நகர முயலும் ஒரு பெண்ணின் காலை அழுத்தி மிதிப்பதைக் காட்டுகிறது. இலங்கைக் காவல் துறையின் குற்றவியல் விசாரணைப் பிரிவு மற்றும் பயங்கரவாத விசாரணைப் பிரிவு மற்றும் இலங்கை இராணுவம் ஆகியவற்றின் கட்டுப்பாட்டில் விசாரணைக்காக இருந்தபோது விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் என்று சந்தேகிக்கப்பட்ட பலர் வன்புணர்வுக்கு ஆளான குற்றச்சாட்டுகளும் எழுந்துள்ளன. இடம் பெயர்ந்தோருக்கான முகாம்களிலும் வன்புணர்வு நடந்ததைக் குறித்துப் பன்னாட்டு அமைப்புகளும் பதிவு செய்துள்ளன. ஆனால் வன்புணர்வு குறித்துக் காவல் துறையிடமோ அல்லது மனித நேயப் பணியாளர்களிடமோ புகார் செய்யக்கூடாது என இராணுவம் மக்களை எச்சரித்திருந்தது.

'சானல் 4' இன் படங்களுடன் சிங்கள இராணுவத்தினர் சிங்களத்தில் கொடுத்துள்ள பின்னணிக்குரல் ஆகியவை கொலை செய்யப்படுவதற்கு முன்போ பின்போ வன்புணர்வு அல்லது பாலியல் வன்முறை நடந்திருக்கக்கூடும் என்ற உறுதியான கேள்வியினை எழுப்புகிறது. ஒரு காணொளியில் இலங்கை இராணுவத்தினர் இறந்து போன அல்லது இறக்கும் தருவாயில் உள்ள பெண்களின் உடைகளற்ற உடல்களை ஒரு லாரியில் மிகவும் மரியாதையற்ற முறையில் ஏற்றுவதைக் காட்டுகிறது.



2) இடம் பெயர்ந்தோர் முகாம்களில் நடைபெற்ற அத்துமீறல்கள்

அ) இடம் பெயர்ந்த மக்களை சட்டத்திற்குப் புறம்பாக இரகசிய முகாம்களில் தடுத்து வைத்தல்

154) யாழ்ப்பாணம், மன்னார், திரிகோணமலை மற்றும் வவுனியா மாவட்டங்களில் பரந்து இருந்த 21 இடம்பெயர்ந்தோர் முகாம்களில் போர்ப் பகுதியில் இருந்து வெளியேறிய மக்கள் முதற்கட்டமாகத் தங்க வைக்கப்பட்டனர். பெரும்பாலானோர் வவுனியாவிற்கு மாணிக் பண்ணைக்கு அனுப்பப்பட்டனர். அதில் ஒரு கட்டத்தில் அதிகபட்சமாக 2,50,000 மக்கள் தங்க வைக்கப்பட்டிருக் கின்றனர். இதன் மூலம் உலகிலேயே மிகப்பெரிய இடம் பெயர்ந்தோர் முகாம்களில் ஒன்றாகவும், இலங்கையில் மிகப்பெரிய அளவில் வாழும் இடங்களில் ஒன்றாகும் அது ஆனது.

155) மாணிக் பண்ணையும் பிற இடம் பெயர்ந்தோர் முகாம்களும் தடுப்பு முகாம்களாக இராணுவத்தால் பாதுகாக்கப்பட்டு, முள்வேலியால் சுற்றி வளைக்கப்பட்டு இருந்தன. திட்டமிட்டே வன்னியின் ஒட்டுமொத்த இடம்பெயர்ந்த மக்களும் தடுத்து வைக்கப்பட்டு, வெளியேற அனுமதிக்கப் படவில்லை. விசாரணைகள் முடியும்வரையிலும், மற்றும் வன்னியில் இருந்து கண்ணி வெடிகள் முற்றிலுமாக அகற்றப்படும் வரையிலும் ஒட்டுமொத்த இடம்பெயர்ந்த மக்களையும் தடுத்து வைப்பது அவசியமானது என அரசு கூறியது. மாணிக் பண்ணையின் உள்ளேயும் விசாரணைகள் தொடர்ந்தன. முன்னாள் தமிழ் ஆயுதக் குழுக்களின் இராணுவத் துணைக் குழுவினர் பெரும்பாலும் முகமூடி அணிந்து கொண்டு பெரும்பாலும் இரவுகளில் சுற்றி வந்தனர். மனித நேய அமைப்புகளின் பார்வையில் படாமல் இவர்கள் விடுதலைப் புலிகளோடு தொடர்புடையவர்கள் எனக் குற்றம் சாட்டிச் சிலரைத் தேர்ந்தெடுத்து வெளியேற்றும் பணியில் ஈடுபட்டனர்.

156) மாணிக் பண்ணையில் இருந்த அதிகபட்சக் கட்டுப்பாடுகளின் காரணமாக பன்னாட்டு நிறுவனங்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுவதோ அல்லது மக்களுடன் தனிப்பட்ட முறையில் உரையாடுவதோ முடியாததாக இருந்தது. முதலில் சிறிது காலத்திற்கு, செஞ்சிலுவைச் சங்கம் மாணிக் பண்ணையில் பணியாற்றியது. ஆனால், விரைவிலேயே அது வெளியேற்றப்பட்டது. போர்

நடைபெற்ற இடத்திலிருந்து வெளியேறிய மக்கள் தங்களது அனுபவங்களைப் பன்னாட்டு அமைப்புகளிடமும், அரசு சாரா நிறுவனங்களிடமும் பகிர்ந்து கொள்வதைத் தடுக்கும் முயற்சியிலேயே அரசு இக்கட்டுப்பாடுகளை விதித்தது. மூன்றாம் தரப்பினரின் சுதந்திரமான கண்காணிப்பு இல்லாத நிலையில், முகாம்களுக்குள் மக்கள் மீதான அத்துமீறல்களுக்கு அதிக வாய்ப்புகள் ஏற்பட்டன. ஆண் உறவினர்கள் இல்லாத பெண்கள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகள் மீது பாலியல் மற்றும் பிற வகையிலான வன்முறைகள் நடைபெற வாய்ப்பு ஏற்பட்டது.

157) மாணிக் பண்ணை அமைக்கப்படுவதற்கு முன் இடம் பெயர்ந்தோருக்கான பன்னாட்டு அமைப்பு, அகதிகளுக்கான அய்.நா.வின் உயர் ஆணையம், அய்.நா.வின் குழந்தைகள் கல்வி நிதியம் மற்றும் பலர் உள்ளிட்ட பன்னாட்டு அமைப்புகள் முகாம்களைப் பொருத்தவரையில் அரசு உலகளாவிய வரையறைகளைச் சந்திக்கும் வண்ணம் தங்களது மனித நேய உதவிகளை எவ்வாறு தருவது என்பது குறித்துத் தங்களுக்குள் விவாதித்துக் கொண்டன. அகதிகளுக்கான அய்.நா.வின் உயர் ஆணையம் போன்ற அமைப்புகள் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் ஆகியவை பொருந்தக்கூடிய வரையறைகள் குறித்து இலங்கை அரசுக்குப் பல்வேறு செய்திகளை அனுப்பின. ஆனால் பெரும் எண்ணிக்கையில் இடம் பெயர்ந்த மக்கள் வெளிவந்த போது முன் நிபந்தனைகளின் அடிப்படையில் ஒரு பொதுவான நிலை எடுக்க பன்னாட்டு அமைப்புகள் தவறிவிட்டன. மாணிக் பண்ணையில் நிலவிய கற்பனைக்கெட்டாத தரக்குறைவான சூழலிலும் பல பன்னாட்டு அமைப்புகள் தங்கள் உதவிகளைத் தொடர்ந்து கொண்டிருந்தன.

158) இடம் பெயர்ந்த மக்கள் தடுத்து வைக்கப்பட்ட நிலையானது, பல மாதங்களும் சில இடங்களில் ஆண்டுக் கணக்கிலும் தொடர்ந்தது. டிசம்பர் 2009 காலக்கட்டத்தில் ஏறத்தாழ 1,49,000 மக்கள் விடுவிக்கப்பட்டிருந்தனர். 1,35,000 பேர் இன்னமும் முகாம்களில் எஞ்சியிருந்தனர். செப்டம்பர் 2010 இல் 2,42,741 பேரை விடுவித்திருப்பதாகவும் 25,795 ஆகியோர் விடுவிக்கப்பட காத்திருப்பதாகவும் அரசு கூறியது.

ஆ) முகாம்களில் நிலவிய மனிதத் தன்மையற்ற சூழல்கள்

159) இடம்பெயர்ந்த மக்களுக்கான நல் வாழ்வு கிராமம் என அரசு மாணிக் பண்ணையைக் குறிப்பிட்டபோதும், உண்மையில் அது காட்டுக்கு நடுவே நீராதாரம் எதுவுமற்ற சூழலில் அமைக்கப்பட்டிருந்தது. ஏப்ரல், மே மாதங்களில் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் வந்த பிறகு மாணிக் பண்ணையின் நிலை உலகளாவிய வரையறைகளுடன் ஒப்பிடுகையில் மிகவும் தரம் தாழ்ந்த நிலையில் இருந்தது. இந்தச் சூழ்நிலைகள், பொதுமக்கள் மீது தேவையற்ற கூடுதல் துன்பங்களையும், மன உளைச்சலையும் ஏற்படுத்தியது. புதிதாக முகாம்களுக்கு வருபவர்கள் பெரும்பாலும் பல நாட்கள் சாப்பிடாத நிலையில் வருகின்றனர். பெரும்பாலானோர் மனநிலை பாதிக்கப்பட்டு மனச் சோர்வினால் அவதியுறும் நிலையில் அவர்களுக்குத் தேவையான உளவியல் உதவிகளைத் தர சமூக நல அமைச்சகம் அனுமதி மறுத்தது. இதனால் சிலர் தற்கொலை செய்து கொண்டனர். அடிப்படை மருத்துவ சிகிச்சைக்காக அனுமதிச் சீட்டு பெறக் காத்திருந்த நிலையில் அல்லது தடுக்கக்கூடிய நோய்களின் காரணமாகச் சிலர் இறந்து போயினர்.

160) முகாம்களில் நிலவிய அதிகப்படியான கூட்டம் காரணமாக சிலர் பாதுகாப்பற்ற வாழ்வியல் நிலைக்குத் தள்ளப்பட்டனர். ஏப்ரல், மே மாதங்களில் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் வந்த நிலையில் மாணிக் பண்ணையில் இருந்த உணவு, நீர், உறைவிடம் மற்றும் சுகாதார வசதிகள் முற்றிலும் போதாமையாக இருந்தது. கொதிக்கும் வெப்பத்தில் தார்ப்பாலின்களால் அமைக்கப்பட்ட உறைவிடங்கள் மிகவும் சூடேறிப்போயின. உணவு மற்றும் நீருக்காக மக்கள் பல மணி நேரங்கள் அல்லது சில சமயம் ஒரு முழு நாள் கூடக் காத்திருக்க வேண்டி

இலங்கைக் காவல் துறையின் குற்றவியல் விசாரணைப் பிரிவு மற்றும் பயங்கரவாத விசாரணைப் பிரிவு மற்றும் இலங்கை இராணுவம் ஆகியவற்றின் கட்டுப்பாட்டில் விசாரணைக்காக இருந்தபோது, விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் என்று சந்தேகிக்கப்பட்ட பலர் வன்புணர்வுக்கு ஆளான குற்றச்சாட்டுகளும் எழுந்துள்ளன. இடம் பெயர்ந்தோருக்கான முகாம்களிலும் வன்புணர்வு நடந்ததைக் குறித்துப் பன்னாட்டு அமைப்புகளும் பதிவு செய்துள்ளன. ஆனால், வன்புணர்வு குறித்துக் காவல் துறையிடமோ அல்லது மனித நேயப் பணியாளர்களிடமோ புகார் செய்யக்கூடாது என இராணுவம் மக்களை எச்சரித்திருந்தது.

வந்தது. உணவு மிகவும் தரமற்ற நிலையில் இருந்தது. சில நேரங்களில் தட்டுகள் இன்றி வெறும் கைகளில் உணவு பெறப்பட்டது.

தொடர்பில்லாத பிற குடும்பங்களுடன் இணைந்தே கூடாரங்களில் ஒன்றாக வசிக்க நேர்ந்தது. கணவன்மார் காணாமல் போயோ இறந்து போன நிலையிலோ பெண்கள் தலைமையேற்ற குடும்பங்களில், அதே கூடாரங்களுக்குள் வாழ்ந்த பிற தொடர்பற்ற ஆண்களால் தவறாக நடத்தப்படும் சூழல் பெண்களுக்கு நேர்ந்தது. மக்கள் ஒருவர் மீது ஒருவர் பாலியல் வன்முறை மற்றும் சுரண்டல் உள்ளிட்ட பல வன்முறைச் செயல்களில் ஈடுபட முகாம்களில் இருந்த மோசமான சூழல் தூண்டியது. குறிப்பாக, ஆண் குடும்ப உறுப்பினர்கள் அற்ற பெரும் எண்ணிக்கை யிலான பெண்களும், ஆதரவற்ற குழந்தைகளும் இதற்கு ஆளாயினர்.



161) தொடர்பில்லாத பிற குடும்பங்களுடன் இணைந்தே கூடாரங்களில் ஒன்றாக வசிக்க நேர்ந்தது. கணவன்மார் காணாமல் போயோ அல்லது இறந்து போன நிலையில் பெண்கள் தலைமையேற்ற குடும்பங்களில், அதே கூடாரங் களுக்குள் வாழ்ந்த பிற தொடர்பற்ற ஆண்களால் தவறாக நடத்தப்படும் சூழல் பெண்களுக்கு நேர்ந்தது. மக்கள் ஒருவர் மீது ஒருவர் பாலியல் வன்முறை மற்றும் சுரண்டல் உள்ளிட்ட பல வன்முறைச் செயல்களில் ஈடுபட முகாம்களில் இருந்த மோசமான சூழல் தூண்டியது. குறிப்பாக, ஆண் குடும்ப உறுப்பினர்கள் அற்ற பெரும் எண்ணிக்கையிலான பெண்களும் ஆதரவற்ற குழந்தைகளும் இதற்கு ஆளாயினர். பெண்களுக்குப் போதுமான அளவு தனிமை வழங்கப்படவில்லை. அவர்கள் கழிவறையைப் பயன்படுத்தும் போதும், குளிக்கும் போதும் இராணுவத்தினர் ஊடுருவி அவர்களின் தனிமை மற்றும் மாண்பைக் குலைக்கும் வகையில் வேடிக்கை பார்த்தனர். உணவு, உறைவிடம், அல்லது முகாம்களில் பிற உதவிகள் பெறுவதற்கு மாற்றாகச் சில பெண்கள் பாலியல் நடவடிக்கைகளில் ஈடுபட வற்புறுத்தப்பட்டனர்.

162) மாணிக் பண்ணையில் நிலவிய அடிப்படை சூழல்கள் பெரிதும் மனிதத் தன்மைக்கு முரணாக இருந்த நிலையில், பண மாற்று வசதிக்கென ஒரு 'வெஸ்டர்ன் யூனியன்' வங்கி அங்கு திறக்கப்பட்டது. இதன் மூலம் ஆயிரக்கணக்கான மக்கள் குறிப்பாக அதில் பலர் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் வெளிநாடு வாழ் தமிழர்களுடன் தங்களுக்கு இருந்த தொடர்புகள் மூலம் இராணுவத்துக்கு இலஞ்சம் அளித்து, முகாம்களில் இருந்து வெளியேற முடிந்தது. பன்னாட்டுச் சமூகம் மற்றும் பன்னாட்டுச் சமூகத்தின் கடுமையான எதிர்ப்பு மற்றும் நிதியளிப்போர் நிதியை நிறுத்தி விடுவதாக விடுத்த மிரட்டல்கள் ஆகியவற்றின் காரணமாக மாணிக் பண்ணையின் நிலைமைகளில் ஒரு காலக்கட்டத்திற்குப் பின் சிறிது முன்னேற்றம் ஏற்பட்டது.

இ) தடுப்புக் காவலில் துன்புறுத்தல்கள்

163) மாணிக் பண்ணையில் இருந்த முகாம்களில் குற்றவியல் விசாரணைப் பிரிவும் பயங்கரவாத விசாரணைப் பிரிவும் தங்கள் அலுவலகங்களை நடத்தி வந்தன. அங்கு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டது. மருத்துவர்கள், மாவட்ட உதவி நிர்வாக அதிகாரி மற்றும் அய்.நா.வின் இரண்டு பணியாளர்கள் உள்ளிட்ட பிற தனி நபர்களும் தடுத்து வைக்கப்பட்டு விடுதலைப் புலிகளுடனான அவர்களது தொடர்புகள் குறித்து விசாரிக்கப்பட்டனர். சிலர் துன்புறுத்தல்களுக்கும் உள்ளாக்கப்பட்டனர். சித்திரவதைக் கூடாரங்களில் இருந்து அடிக்கும் சத்தமும், அலறல்களும் கேட்கக்கூடியதாய் இருந்தன. அகதிகளுக்கான பன்னாட்டு உயர் ஆணையம் தடுப்புக் காவலின் போது துன்புறுத்தல்கள் குறித்து குறைந்தது ஒன்பது வழக்குகளைப் பதிவு செய்தது. தடுத்து வைக்கப்பட்டவர்களில் சிலர் அங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டு மீண்டும் வரவில்லை.

3) விடுதலைப்புலிகள் என சந்தேகிக்கப்பட்டவர்களின் அதிகாரபூர்வமற்ற தடுப்புக்காவல்

164) விசாரணை நடைமுறையின் போது, விடுதலைப் புலிகளாக இருக்கக் கூடும் எனச் சந்தேகிக்கப்பட்டவர்களை இலங்கை இராணுவம் தனியாக வெளியேற்றி பூசா மற்றும் ஓமந்தையில் இருந்த தனி தடுப்புக்காவல் மய்யங்களில் வைத்தது. இவர்கள் மீது பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் அல்லது அவசரகாலச் சட்டம் ஆகியவற்றின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டது. பல வழக்குகளில் தங்கள் உறவினர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டது குறித்து அவர்களின் உறவினர் களுக்கு இலங்கை இராணுவம் தகவல் அளிக்கவில்லை. அத்துடன், விடுதலைப்

புலிகள் எனச் சந்தேகிப்பதற்கான அடிப்படையை அது வெளியிடவில்லை. செப்டம்பர் 2010இல் குழுவிற்கு அரசு அளித்த தகவலின்படி மொத்தமாக 11,696 நபர்கள் முதல் கட்டமாக சரணடைந்து விசாரணைக்கு உள்ளாகி வருகின்றனர். அய். நா., செஞ்சிலுவைச் சங்கம் அல்லது இலங்கை மனித உரிமைகள் ஆணையம் ஆகியவற்றின் சுதந்திரமான கண்காணிப்பை அரசு மறுத்ததினால், இந்த எண்ணிக்கை உறுதிப்படுத்த முடியாத ஒன்றாக இருந்தது. போரில் பங்கெடுக் காதவர்களும், போரின் இறுதி வாரங்கள் அல்லது நாட்களில் படையணியில் இணைக்கப்பட்டவர்களும் கூட இந்த எண்ணிக்கையில் அடங்குவர். அவர்களில் அரசுத் தரப்புத் தகவலின்படி, 594 பேர் குழந்தைகள் ஆவர். தொடக்கத்தில் குழந்தைகள் பெரியவர்களுடனேயே அடைக்கப்பட்டிருந்தனர் என்ற போதும், 'யுனிசெப்'பில் பதிவு செய்யப்பட்டிருந்தனர். பின்னர் அவர்கள் தனியான குழந்தைகள் மறுவாழ்வு மய்யங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். பெரும் பாலான இந்த மய்யங்கள் இலங்கையின் தென் பகுதியில் இருந்ததால், குடும்பங்கள் அவர்களைக் காண்பது கடினமானதாக இருந்தது.

165) விடுதலைப் புலிகளுடனான தொடர்புகள் குறித்து, காவலில் இருப்பவர் களிடம் விரிவான விசாரணை நடத்தப்பட்டது. அவர்களில் சிலர் பின்னர் 'பாதுகாப்பான உள்ளிருப்பு மற்றும் மறுவாழ்வு மய்யங்களுக்கு' மாற்றப்பட்டனர். இது, மறுவாழ்விற்கான ஆணையர் நாயகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது. அவசரகாலச் சட்டத்தின் கீழ் 2006ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட இந்தத் துறை, சரணடைந்த ஒருவரை, மறுவாழ்வுக் காரணங்களுக்காகப் பாதுகாப்புச் செயலரின் உத்தரவின் கீழ், இரண்டு ஆண்டுகள் வரை தடுத்து வைக்கும் அதிகாரம் உடையது. ஒவ்வொரு வழக்கிலும் ஆணையர் நாயகம் மறுவாழ்வின் தன்மையைக் குறித்து முடிவெடுக்கிறார். ஆயுதங்களைக் களைதல், நடமாட்டங்களை கட்டுப்படுத்துதல் மற்றும் மறு ஒருங்கிணைப்பு ஆகியவை குறித்த உலகளாவிய வரையறைகளை இந்தத் திட்டம் கடைப்பிடிக்கவில்லை. அரசு தேர்ந்தெடுத்த முறையில் தொழில் பயிற்சி அளிப்பதை இத்திட்டம் கொண்டிருந்த போதும் அதிகாரபூர்வ மறுவாழ்வு என்பது, சரணடைந்தவர்களைச் சீர்திருத்தும் உளவியல் கூற்றையும் கொண்டிருந்தது. வல்லுநர்க் குழுவிற்கு செப்டம்பர் 2010இல் அரசு அளித்த தகவலின்படி 'ஏறத்தாழ 6500' முன்னாள் போராளிகள் குறைந்த கால மறுவாழ்வு திட்டத்திலும், 'ஏறத்தாழ 3500' பேர் நீண்ட கால மறுவாழ்வுத் திட்டத்திலும் வைக்கப்பட்டுள்ளனர் என்றும், விடுதலைப் புலிகளின் தீவிர உறுப்பினர்கள் என அடையாளம் காணப்பட்ட '1500க்கும் குறைவானர்கள்' தண்டனைக்காக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரியவருகிறது.

166) வல்லுநர் குழுவிற்கு அரசு அளித்த ஆவணங்களின் படி, பிப்ரவரி 8, 2011 வரை 5809 பேர் 'மறுவாழ்வு' மய்யங்களில் இருந்து 'மறு ஒருங்கிணைப்பு' செய்யப் பட்டுள்ளனர். அதாவது விடுவிக்கப்பட்டுள்ளனர். மேலும் 4,581 பேர் மறுவாழ்வுக் கான ஆணையர் நாயகத்தின் அதிகாரத்தின் கீழ் ஒன்பது வெவ்வேறு மய்யங்களில் 'மறுவாழ்வில்' ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதன் மூலம் 1,206 பேர் விடுதலைப் புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில், குற்றவியல் விசாரணை மற்றும் தண்டனைக் காக இரகசியத் தடுப்புக் காவல் மய்யங்களில் இன்னமும் தடுத்து வைக்கப் பட்டிருப்பது தெரிய வருகிறது.

167) இந்தத் தனியான இடங்களில் உள்ள நிலைகள் பற்றி முற்றிலுமாக எந்தத் தகவலும் இல்லை. அரசின் திட்டமிட்ட வெளிப்படையற்ற தன்மையே இதற்குக் காரணம். ஏறத்தாழ இரண்டு ஆண்டுகளாக மூன்றாம் தரப்பினரின் எவ்வித கண்காணிப்புமின்றி விசாரணைகள் மற்றும் 'மறுவாழ்வு' நடவடிக்கைகள் நடந்து கொண்டிருப்பது என்பது – வன்புணர்வு, துன்புறுத்தல்கள் அல்லது காணாமல் போவது போன்ற அத்துமீறல்கள் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் மீது வன்மத்தின் காரணமாக நடைபெறுவதற்கு அதிக வாய்ப்புகள் அளித்துள்ளன.

பெண்களுக்குப் போதுமான அளவு தனிமை வழங்கப்பட வில்லை. அவர்கள் கழிவறையைப் பயன்படுத்தும் போதும், குளிக்கும் போதும் இராணுவத்தினர் ஊடுருவி அவர்களின் தனிமை மற்றும் மாண்பைக் குலைக்கும் வகையில் வேடிக்கை பார்த்தனர். உணவு, உறைவிடம், அல்லது முகாம்களில் பிற உதவிகள் பெறுவதற்கு மாற்றாகச் சில பெண்கள் பாலியல் நடவடிக்கை களில் ஈடுபட வற்புறுத்தப்பட்டனர்.

தெளிவான முத்திரைகள் போடப்பட்டிருந்த போதும், அவற்றின் சரியான இருப்பிடங்களை அரசு அறிந்திருந்த போதும், மருத்துவ மனைகள் மற்றும் மனித நேயக் கட்டமைப்புகள் மீது தாக்குதல்கள் நடத்தியதான குற்றச்சாட்டுகள், 'நோய்வாய்ப்பட்டவர்கள் மற்றும் காயம்பட்டவர் களைப் பாதுகாத்து கவனிக்க வேண்டும்' என்று பொதுப் பிரிவு 3 இல் குறிக்கப்பட்டுள்ள கடமையை மீறுவதாகும். மேலும், நன்கு அறியப்பட்ட, மக்கள் மிகுந்திருந்த, மருத்துவ மனைகள் மற்றும் மனிதநேயக் கட்டமைப்புகள் மீது நேரடியாகவோ அல்லது அக்கறையின்றியோ நடத்தப்பட்டத் தாக்குதல்களானது, சாவினை ஏற்படுத்தும் என்பதைத் தாக்குதலை நடத்தியவர்கள் நன்கு அறிந்திருந்த போதும் நடத்தப்பட்டது என்பது, பொதுப் பிரிவு 3இன் கீழ், கொலை எனவும் கொள்ளப்படுகிறது.

எ) பிற குற்றச்சாட்டுகள்

168) மேலே விவாதிக்கப்பட்ட தகுதி வாய்ந்த குற்றச்சாட்டுளுடன் கூடுதலாகக் குழுவிடம் வேறுபல எண்ணற்ற குற்றச்சாட்டுகள் அளிக்கப்பட்டிருந்தன. அவற்றின் தகுதி மீது ஒரு முடிவுக்கு வருவதற்குக் குழுவால் இயலவில்லை. அவற்றின் முக்கியமான தன்மை காரணமாக அக்குற்றச்சாட்டுகளும் விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

1) கொத்து குண்டுகள் அல்லது வெள்ளை பாஸ்பரஸ் பயன்படுத்தியது என்ற குற்றச்சாட்டு

169) இலங்கை இராணுவம் கொத்துக் குண்டுகள் அல்லது வெள்ளைபாஸ்பரஸ் அல்லது பிற இரசாயன பொருட்களைப் பொதுமக்களுக்கு எதிராக, குறிப்பாக புதுகுடியிருப்பைச் சுற்றியும் இரண்டாவது பாதுகாப்பு வலயத்திலும் பயன் படுத்தியதாகக் குற்றச்சாட்டுகள் உள்ளன. ஒரு பெரிய வெடிச்சத்தமும் அதனை தொடர்ந்து எண்ணற்ற சிறிய வெடிச்சத்தங்களும் கேட்டது குறித்தான வாக்கு மூலங்கள், கொத்துக் குண்டின் சத்தத்துடன் ஒத்துப்போகின்றன. பல்வேறு மருத்துவமனைகளில் இருந்த காயம் பட்டவர்களின் காயங்கள் கொத்துகுண்டுகள் அல்லது வெள்ளைபாஸ்பரஸால் ஏற்பட்டதாகக் குற்றம் சாட்டப்படுகின்றன. இலங்கை அரசு இந்த ஆயுதங்களைப் பயன்படுத்தியதை மறுத்துள்ளது. மாறாக விடுதலைப்புலிகள் வெள்ளை பாஸ்பரஸ் பயன்படுத்தியதாகக் குற்றம் சாட்டுகிறது.

2) 'வெள்ளைக் கொடி' நிகழ்வு

170) விடுதலைப்புலிகளின் அரசியல்தலைமையும் அவர்களைச் சார்ந்திருந்த வர்களும் இலங்கை இராணுவத்தினரிடம் சரணடைந்தபோது கொல்லப் பட்டார்கள் எனப் பல்வேறு அறிக்கைகளும் குற்றம் சாட்டுகின்றன. போரின் ஆக இறுதி நாட்களில் விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவு தலைவர் நடேசனும் புலிகளின் சமாதானச் செயலகத் தலைவர் புலித்தேவனும் சரண் அடைவதற்கான பேச்சுவார்த்தைக்கென பல்வேறு மூன்றாம் தரப்பினருடனும் தொடர்ந்து தொடர்பில் இருந்தனர். அவர்கள் ஏறத்தாழ 300 பொதுமக்களைக் கொண்ட குழுவாக இருந்ததாகச் சொல்லப்படுகிறது. ஒரு நிபந்தனையற்ற சரணடை தலுக்குத் தொடக்கத்தில் விடுதலைப்புலிகளின் அரசியல் தலைமை தயக்கம் காட்டியது. ஆனால் அவர்களின் இறுதி மறைவிடத்தை இலங்கை இராணுவம் நெருங்கிய நிலையில் நடேசன் மற்றும் புலித்தேவன் ஆகியோருடன் கர்னல் இரமேசும் கூட நிபந்தனையற்றுச் சரணடைய தயாராக இருந்தனர். இவர்களின் இந்த நோக்கம் அய்.நா அதிகாரிகள், நார்வே,பிரிட்டன், வட அமெரிக்கா ஆகிய அரசுகள் மற்றும் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் போன்றவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. மகிந்தா, கோத்தபாயா மற்றும் பசில் இராஜபக்சே, முன்னாள் வெளியுறவுச் செயலாளர் பலித்த கோகன்ன மற்றும் இலங்கை இராணுவத்தின் மூத்த அதிகாரிகளுக்கும் மூன்றாம் தரப்பினர் ஊடாகத் தெரிவிக்கப்பட்டது.

171) அதிபர் இராஜபக்சே மற்றும் பாதுகாப்புச் செயலாளர் பசில் இராஜபக்சே ஆகிய இருவருமே அவர்களின் சரணடைதல் ஒப்புக்கொள்ளப்படும் என உறுதியளித்தனர். மூன்றாம் தரப்பினர் ஊடாக இந்தத் தகவலும் விடுதலைப் புலிகளின் தலைவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. பசில் இராஜபக்சே அடையாளம் காட்டிய ஒரு குறிப்பிட்ட பாதையின் ஊடாக வெள்ளைக் கொடி ஏந்தியபடி இராணுவத்தை நோக்கி மெதுவாக நடந்து வருமாறு அவர்களுக்கு அறிவுறுத்தப் பட்டது. சரணடையும் இடத்தில் மூன்றாம் தரப்பினரின் இருப்பைக் கோரிய விடுதலைப்புலிகளின் வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டது. மே18 2009 அன்று அதிகாலை 6.30 மணி அளவில் நடேசனும் புலித்தேவனும் தங்கள் குடும்பத்தினர்

உள்ளிட்ட ஒரு பெரும் குழுவுடன் 58ஆவது படையணியின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதியை நோக்கிச் செல்வதற்கு தங்கள் மறைவிடங்களில் இருந்து வெளிப்பட்டனர். கர்னல் இரமேஸ் வேறொருக் குழுவினருடன் அவர்களைப் பின்தொடர்ந்தார். இதன் பிறகு சற்று நேரத்திலேயே பி.பி.சி மற்றும் பிற தொலைக்காட்சி நிலையங்கள் நடேசனும் புலித்தேவனும் சுட்டுக் கொல்லப் பட்டதாக அறிவித்தனர். இதைத் தொடர்ந்து இந்த நிகழ்வு பற்றிப் பல்வேறு விதமான விவரணைகளை அரசு அளித்தது. அவர்களின் சாவு நடந்த சூழல் குறித்துக் குறைந்த அளவிலான தகவல்களே இருக்கும் நிலையில், விடுதலைப் புலிகளின் தலைமை உண்மையில் சரணடையவே முற்பட்டது எனக் குழு நம்புகிறது.

ஏ) நிகழ்வுகள் குறித்து அரசுத் தரப்பினரின் வாக்குமூலங்கள்

172) மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகுதி வாய்ந்த குற்றச்சாட்டுகள், போரின் இறுதிக்கட்டங்கள் குறித்த இலங்கை அரசு தரப்பின் செய்திகளில் இருந்து பெரிதும் வேறுபட்ட ஒரு பார்வையை அளித்துள்ளன. பொதுமக்களில் எவருக்கும் இழப்பு ஏற்படுத்தாத கொள்கையின் அடிப்படையிலான மனிதநேய மீட்பு நடவடிக்கையை மேற்கொண்டதாக அரசு கூறுகிறது. மே 7, 2010 அன்று அளித்த ஓர் உரையில், ''உலகிலேயே முதன்முறையாக, ஒரு போர்களத்தில், இராணுவ நடவடிக்கைகள் குறித்த கட்டளைகளில் பொதுமக்களில் எவருக்கும் இழப்பு ஏற்படுத்தாத கொள்கை சேர்க்கப்பட்டுள்ள''தாகப் பாதுகாப்புச் செயலாளர் கூறினார். ஜூன் 18, 2010 அன்று அதிபர் இராஜபக்சே ஓர் உரையில் ''சாதாரணப் பொதுமக்களுக்கு எதிராக ஒரு துப்பாக்கி குண்டேனும் சுடப்படுவதற்கான வாய்ப்பை நாங்கள் வழங்கவில்லை'' என்று கூறினார். மே 18, 2010 அன்று போர் முடிந்ததற்கான முதலாண்டின் நிறைவில் பாதுகாப்புச் செயலாளர் கீழ் கண்டவாறு நினைவு கூறுகிறார்.

''நாங்கள் பாதுகாப்பு வலயங்களை அறிவித்தோம். பொதுமக்களின் வாழ் விடங்களில் போர் நடைபெற வேண்டிய சூழலை எதிர் கொண்ட போதெல்லாம் வான்வெளி குண்டுவீச்சு, 'ஆர்ட்டிலரி', 'மார்ட்டர்'கள் ஆகியவற்றைப் பயன் படுத்துவதற்கு எங்களுக்கு நாங்களே தடைவிதித்துக் கொண்டோம். எங்களது கட்டளைத் தளபதிகள் இது குறித்து எப்பொழுதும் கவனத்துடன் இருந்து பல நேரங்களில் தங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டுள்ளனர். உலக உணவுத்திட்டம், செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் அய்.நா ஆகியவற்றின் ஊடாக உணவு மற்றும் மருந்துப் பொருட்கள், சிக்கிக்கொண்டுள்ள பொதுமக்களை அடைவதை, போரின் ஒவ்வொரு கட்டத்திலும் நாங்கள் உறுதிப்படுத்தினோம்.''

173) மார்ச் 2, 2009 அன்று பேரழிவு மேலாண்மை மற்றும் மனித உரிமைக்கான அமைச்சர் மகிந்த சமரசிங்கே, 'பி.பி.சி ஹார்ட் டாக்' எனும் நிகழ்ச்சியில் உரையாடும்போது ''கனரக ஆயுதங்களைப் பயன்படுத்துவதற்கான எந்த நியாயமும் இல்லை. சொல்லப்போனால் பத்து நாட்களுக்கு முன் எவ்வித கனரக ஆயுதங்களை பயன்படுத்துவது இல்லை என ஆயுதப்படையினர் தெளிவான ஒரு முடிவை எடுத்தனர். உங்களுக்குத் தெரிந்தபடி, ஏறத்தாழ 48 சதுரகிலோமீட்டர் பரப்பளவே கொண்ட மிகச் சிறிய இடத்தில் விடுதலைப்புலிகள் முடக்கப்பட்டுள்ளனர். அதனால் எங்களால் கனரக ஆயுதங்களை பயன்படுத்த இயலாது'' எனக்கூறினார். ஆனால் பிற அரசு அதிகாரிகள் போரின் இறுதிவரை 81 மில்லிமீட்டர் 'மார்ட்டர்'கள் பயன்படுத்தப்பட்டதாகக் கூறினாலும், இவை கனரக ஆயுதங்கள் ஆகாது என வாதிட்டனர்.

174) ஏப்ரல் 6, 2009 அன்று இலங்கையின் 'அப்சர்வர்' நாளிதழில் லெப்டினன்ட் ஜெனரல் சரத்பொன்சேகா, இலங்கை இராணுவம், உலகின் மிகப்பெரும் 'பணய கைதிகள் மீட்பு நடவடிக்கை'யில் ஈடுபட்டு இருப்பதாகக்



'சேனல் 4' காணொளி மற்றும் நிழற்படங்களில் காணப்பட்ட இறந்து போன பெண் போராளியின் படங்கள் மற்றும் இலங்கை இராணுவத்தினரின் தரக்குறைவான பின்னணிக்குரலுடன் காட்டப்பட்ட பெண்களின் உடைகளற்ற உடல்கள் குறித்த காணொளியும் கொலைசெய்யப்படுவதற்கு முன்போ அல்லது பின்போ வன்புணர்வு அல்லது பாலியல் வன்முறைகள் நடத்தப்பட்டிருக்க வேண்டும் என்ற கேள்வியை உறுதியாக எழுப்புவதைக் குழு கவனத்தில் கொண்டுள்ளது. இடம்பெயர்ந்த மக்களில் இருந்த பெண்களை, விசாரணை நடைமுறையின்போது, தரக்குறைவாக நடத்தியது குறித்தும் குற்றச்சாட்டு கள் எழுந்துள்ளன.

கூறினார். மே 18, 2009 அன்று ஒரு மிக மோசமான இரத்தக்களரி ஏற்படக்கூடும் என்ற எச்சரிக்கைகள் தவறாய் போயின என மனித உரிமைகள் அமைச்சர் சமரசிங்கே கூறினார். போர் நடைபெற்றப் பகுதியில் இருந்து வரக்கூடிய பொதுமக்கள், நல்வாழ்வு மையங்களுக்கு அழைத்துச் செல்லப்படுவதாகவும், விடுதலைப்புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள், அவர்களின் மறுவாழ்வை கவனத்தில் கொண்ட மறுசீரமைப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுவதாகவும் அரசு கூறியது.

175) தன்னிடம் உள்ள அனைத்துத் தரவுகளையும் கடுமையாக ஆராய்ந்து கணித்த பிறகு, நிகழ்வுகள் குறித்து இலங்கை அரசு தரப்பின் செய்திகளைக் குழுவால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

பெரும் எண்ணிக்கையிலான முன்னாள் போராளிகள் மற்றும் பொதுமக்களை, பாதுகாக்கப்பட்ட முகாம்களில் தடுத்து வைத்து, அவர்களின் நிலைகுறித்து அவர்களின் குடும்ப உறுப்பினர் களுக்குத் தெரிவிக்கா மலும், அவர்கள் தங்கள் குடும்பத்தினரோடு மீண்டும் இணைவதற்கு ஒரு கால வரையறை யுடன் கூடிய வழி முறையை ஏற்படுத்தா மலும் அரசு இருந்தது.



ஐ) முடிவுகள்

176) போரின் இறுதிக்கட்டங்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டுகள் குறித்துக் குழு நடத்திய ஆய்வின் அடிப்படையில், இலங்கை அரசு அய்ந்து முக்கிய பிரிவுகளில் மிக மோசமான மீறல்களை நடத்தி இருப்பதற்கான சாத்தியங்கள் இருப்பது தெரிய வருகின்றது.

(அ) பரவலான குண்டுவீச்சின் மூலம் பொதுமக்களைக் கொன்றது: இலங்கை இராணுவம் வன்னிக்கு உள்ளேயான தனது இராணுவ நடவடிக்கைகளை முன்நடத்த, மிகப் பெரிய மற்றும் பரவலான குண்டுவீச்சைப் பயன்படுத்தியது. இதற்காக, பல நேரங்களில், பல்குழல் எறிகணைக் கருவிகள் மற்றும் பிற பெரிய 'ஆர்ட்டிலரி'கள் போன்ற கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தியது. இதனால் பெரும் எண்ணிக்கையில் பொதுமக்கள் இழப்பு ஏற்பட்டது. கனரக ஆயுதங்களைப் பயன்படுத்த மாட்டோம் எனக்கூறி, பொதுமக்கள் திரண்டு குவிய அது ஊக்குவித்த மூன்று அடுத்தடுத்தப் பாதுகாப்பு வலயங்கள் மீதும் அது தொடர்ச்சியானத் தாக்குதலை நடத்தியது. ஆளற்ற விமானங்கள் உட்பட இலங்கை இராணுவத்தின் உளவுப்பிரிவின் மூலம் கிடைத்த தகவல்கள் மற்றும் அய்.நா, செஞ்சிலுவைச் சங்கம் போன்ற பல்வேறு வெளி ஆட்கள் கொடுத்த அறிக்கைகள் ஆகியவை மூலமாக, விளைவுகளை நன்கு அறிந்திருந்த போதும், அது இத்தாக்குதல்களை நடத்தியது. போரின் இறுதிக் கட்டங்களில் ஏற்பட்ட பொதுமக்கள் இழப்பில் பெரும்பகுதி அரசு குண்டுவீச்சினால்தான் நேர்ந்தது. போர் நடைபெற்ற இடங்களில் இருந்து பன்னாட்டு அமைப்புகளை விலக்கி வைப்பதன் மூலம் வெளி அழுத்தங்களையும் கண்காணிப்பையும் கட்டுப்படுத்த அரசு முற்பட்டது.

(ஆ) மருத்துவமனைகள் மற்றும் பிற மனிதநேய கட்டமைப்புகள் மீது நடத்தப்பட்ட குண்டுவீச்சுகள்: முன்நிலைகளில் இருந்த மருத்துவமனைகள் மீது அரசு திட்டமிட்ட குண்டுவீச்சை நடத்தியது. இதில் சில இடைவெளியின்றித் தொடர்ச்சி யாகத் தாக்கப்பட்டன. ஏற்கனவே குண்டுவீச்சில் காயம் பட்டு மருத்துவமனைக்கு வந்திருந்தவர்கள் இந்த குண்டு வீச்சினால் மீண்டும் காயப்பட்டனர் அல்லது கொல்லப்பட்டனர். வன்னியிலிருந்த அனைத்து மருத்துவமனைகளும் குண்டு வீச்சால் தாக்கப்பட்டு காலி செய்யப்பட வேண்டிய நிலைக்கு ஆளாகியினர். அவர்களின் இருப்பிடம் குறித்து அரசு நன்கு அறிந்திருந்த போதும் இது நடந்தது.

(இ) மனித நேய உதவிகள் மறுப்பு: போர் நடைபெற்ற இடத்தில் இருந்த மக்களுக்கு உணவு மற்றும் அடிப்படை மருந்துப் பொருட்கள், குறிப்பாக காயங்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்கான பொருட்கள், ஆகிய மனிதநேய உதவிகள் கிடைப்பதை அரசு திட்டமிட்டு தடுத்தது. இந்த நிலையில் போர் பகுதியில் இருந்த பொதுமக்களின் எண்ணிக்கையை அது வேண்டுமென்றே குறைத்து மதிப்பிட்டது. குறிப்பாக, அறுவைச் சிகிச்சை செய்வதற்கான பொருட்கள் மறுக்கப்பட்டமை பொதுமக்களின் துன்பத்தை அதிகரித்ததோடு, சாவு எண்ணிக்கையையும் அதிகரித்தது.

(ஈ) போரில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் உயிர் பிழைத்தவர்கள் அனுபவித்த மனித உரிமை மீறல்கள்: 'மனிதநேய மீட்பு நடவடிக்கைகள்' என்று தனது செயல்களை அது குறிப்பிட்ட போதும், போரினால் பாதிக்கப்பட்டவர்களையும் உயிர் பிழைத்தவர்களையும் அவர்கள் போர்ப் பகுதியிலிருந்து வெளியேறிய பிறகும் அரசு மேலும் துன்பப்படுத்தியது.தங்குமிடங்களில் இருந்த அதிகப்படியான கூட்ட நெரிசல் காரணமாக அங்கு இருந்த மக்களின் சமூக பொருளாதார உரிமைகள் மறுக்கப்பட்டு மிக மோசமான வாழ்வியல் நிலைகளில் தேவையற்ற உயிர் இழப்புகளும் ஏற்பட்டன. அனைத்து மக்களும் பாதுகாக்கப்பட்ட முகாம்களிலேயே தடுத்து வைக்கப்பட்டு இருந்தனர். மனிதநேய அமைப்புகளுடன் தனித்து உரையாட அவர்கள் அனுமதிக்கப்படவில்லை. முகாம்களிலும் தடுப்புகாவலிலும் பெண்கள் கூடுதலான துன்பங்களுக்கும் சுரண்டலுக்கும் ஆளாயினர். விடுதலைப் புலிகள் எனச் சந்தேகிக்கப்படுபவர் குறித்த விசாரணை எவ்வித வெளிப்படை தன்மையின்றியும் வெளிக்கண்காணிப்பு இன்றியும் நடைபெற்றது. விடுதலைப் புலிகள் எனச் சந்தேகிக்கப்பட்ட சிலர் கொல்லப்பட்டனர். பிறர் காணாமல் போயினர். பெண் போராளிகளின் உடைகளற்ற உடல்களின் நிழற்படங்கள் மற்றும் காணொளிகள் ஊடாக, அவர்கள் வன்புணர்வுக்கோ அல்லது பாலியல் வன்கொடுமைக்கோ ஆளாகி இருக்கவேண்டுமெனத் தெரிகிறது. விசாரணையின் போதும் சித்திரவதைகள் தொடர்ந்தன. விடுதலைப் புலிகள் எனச் சந்தேகிக்கப் பட்டவர்கள், செஞ்சிலுவைச் சங்கம், இலங்கை மனித உரிமை ஆணையம் மற்றும் பிற அமைப்புகளின் கண்காணிப்புக்கு அப்பால் தனி முகாம்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு ஆண்டுக்கணக்கில் தடுத்து வைக்கப்பட்டனர்.

(உ) போர்ப் பகுதிகளுக்கு வெளியே நடைபெற்ற மனித உரிமை மீறல்கள்: ஊடகங்கள் மற்றும் பிற விமர்சகர்களை அச்சுறுத்தி அமைதிப்படுத்த வெள்ளை வேன்கள் பயன்படுத்திக் கடத்திக் காணாமல் போகச் செய்வது உள்ளிட்ட பல்வேறு வகையான அச்சுறுத்தல்களை அரசு பயன்படுத்தியது.

177) போரின் இறுதிக்கட்டங்களோடு தொடர்புடைய குற்றச்சாட்டுகள் குறித்துக் குழுவின் ஆய்வின்படி, விடுதலைப்புலிகள் 6 முக்கியப் பிரிவுகளின் கீழ் மோசமான மீறல்களை புரிந்திருப்பதற்கான சாத்தியங்கள் தெரியவருகின்றன.

(அ) பொதுமக்களை மனித அரணாக பயன்படுத்தியமை: போர் நடைபெற்ற பகுதிகளில் நிலவிய மிகப் பெரும் ஆபத்துக்கள் மோசமான சூழல்கள் ஆகியவற்றையும் மீறி, பொதுமக்கள் வெளியேறுவதற்கு அனுமதி அளிக்க மறுத்து விடுதலைப்புலிகள் மறுத்து, அவர்களைப் பணயக் கைதிகளாகவும், சில நேரங்களில் அவர்களது இருப்பை, முன்னேறிக்கொண்டிருக்ககூடிய இலங்கை இராணுவத்திற்கும் தங்களுக்கும் இடையிலான ஒரு மனித அரணாகவும் பயன்படுத்திக் கொண்டனர். விடுதலைப்புலிகள் தங்களது மூத்த தலைமையைக் காக்க போரிட்டுக் கொண்டிருந்தபோது, வந்து விழுந்து கொண்டிருந்த குண்டு களுக்குத் தீனியாக பொதுமக்கள் பலர் தியாகம் செய்யப்பட்டனர். பொதுமக்கள் அவ்விடத்திலிருடந்து வெளியேறுவதற்கு விடுதலைப்புலிகள் மறுத்ததன் மூலம் போரின் சாவு எண்ணிக்கையை அதிகப்படுத்தினர்.

(ஆ) விடுதலைப்புலிகள் கட்டுப்பாட்டிலிருந்து தப்ப முயன்ற மக்களை கொன்றமை: பிப்ரவரி 2009 முதல், போர்ப் பகுதியிலிருந்து தப்ப முயன்ற மக்களை சுட்டுக் கொல்லும் கொள்கையை நடைமுறைபடுத்தி, அதன் மூலம் போரின் இறுதிக் கட்டங்களில் இறந்த மக்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தினர். பொதுமக்கள் தப்பிச் செல்ல முயலும் பகுதிகளில் தனது உறுப்பினர்களை அது நிறுத்தியது. அரசு கட்டுப்பாட்டு பகுதியை அடைந்து விட வேண்டும் என்ற பதட்டத்தில் குளங்களில் நீந்தியும், கண்ணிவெடிகள் இருந்த நிலங்களை கடந்தும் செல்ல தயாராக இருந்த ஆண், பெண் மற்றும் குழந்தைகள் கொண்டக் குழுவினரை நோக்கி அவர்கள் சுட்டனர். அந்தத் தாக்குதலிலிருந்து தப்பிக்கும் பயத்தில் சிலர் மூழ்கிப் போயினர்.

'இறந்தவர்களின் உடல்கள் மரியாதையான முறையில் அடக்கம் செய்யப்பட வேண்டும். அவர்களது கல்லறைகள் மதிக்கப்பட்டு சரியாகப் பராமரிக்கப்பட வேண்டும்' என்ற உலகளாவிய மனிதநேயச் சட்ட விதியைக் குழு நினைவு கூர்கிறது (விதி 115, செஞ்சிலுவைச் சங்க ஆய்வு). ஆடைகள் அற்ற பெண்களின் உடல்கள் உட்பட இறந்தவர்களின் உடல்களை இலங்கை இராணுவத்தினர் மிகவும் மரியாதை அற்ற முறையில் நடத்துவதைக் காட்டக்கூடிய காணொளிகளும், நிழற்படங்களும் அளிக்கப்பட்டுள்ளன.

அரசின் அதிகாரம் மற்றும் கட்டுப்பாட்டிற்குள் மாணிக் பண்ணையில் இருந்த தனிநபர்கள், அவர்கள் வந்த, மற்றும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட தொடக்கக்காலக் கட்டங்களில், போதுமான உணவு, நீர் மற்றும் மருத்துவப் பராமரிப்புகள் வழங்கப்படாததினால் ஏற்பட்ட உயிர் இழப்புகளைத் தடுத்திருக்கலாம் என்ற அடிப்படையில், இந்தப்பிரிவின் கீழான மீறல் குற்றச்சாட்டுகள் உறுதி செய்யப் படுகின்றன. முகாம்களில் இருந்த இடம்பெயர்ந்த மக்களுக்கு உடல்ரீதியான பாதுகாப்பை அரசு உறுதியளிக்கவில்லை.



(இ) பொதுமக்கள் இருந்த பகுதிகளில் இராணுவ உபகரணங்களை பயன்படுத்தியமை: பாதுகாப்பு வலயங்களிலிருந்து இடம் பெயர்ந்த மக்களின் நடமாட்டத்திற்கு அருகிலிருந்து, விடுதலைப்புலிகள் 'ஆர்ட்டிலரி'களை பயன்படுத்திச் சுட்டனர். மக்களின் வாழ்விடங்களுக்கு அருகே, அல்லது மக்கள் நலக் கட்டுமானங்களான மருத்துவமனை போன்றவற்றிற்கு அருகிலிருந்து சுடவும், தங்களது இராணுவ தளவாடங்களை அங்கு பாதுகாக்கவும் முற்பட்டனர். இதனால் இலங்கை இராணுவம் ஒரு பதிலடி கொடுக்க முற்படும் என்பதையும், அப்படி நடத்தப்படும் பதில் தாக்குதல்கள் பொதுமக்களுக்குத் தீங்கை ஏற்படுத்தும் என்பதையும் அறிந்திருந்த போதும், இவர்கள் இதைச் செய்தனர். வேகமாக இவ்விடங்களை விட்டு நகர்வதற்கு முன் பொதுமக்களுக்கு இடையே இருந்து சுடுவதனால் பதில் தாக்குதல்களுக்கு பொதுமக்களை எதிர்கொள்ள விடும் நிலையும் சில நேரங்களில் நடந்தது.

(ஈ) குழந்தைகளைக் கட்டாயமாகப் படையணியில் சேர்த்தது: போர் நடைபெற்ற காலம் நெடுகிலும் கட்டாய ஆள் சேர்ப்பு கொள்கையைப் புலிகள் நடைமுறைப்படுத்திய போதும், போரின் இறுதிக் கட்டங்களில் தனது ஆள் சேர்ப்புப் பணியை தீவிரப்படுத்தி, 14 வயதே ஆன குழந்தைகள் உட்பட எல்லா வயதினரையும் படையணியில் சேர்க்கத் தொடங்கினர். ஒரு குடும்பத்திலிருந்து ஒரு குழந்தைக்கு மேலும் கூடச் சேர்த்தனர். தங்கள் குழந்தைகளை தங்களிட மிருந்துப் பிரித்து, ஏறத்தாழ நிச்சய மரணத்தை நோக்கி எடுத்துச் செல்வதைத் தடுக்க வேண்டும் என்ற பதைப்பில் எதிர்ப்பு தெரிவித்த உறவினர்களை அடித்தனர். விடுதலைப்புலிகளின் நம்பிக்கையற்ற இராணுவ நிலையைக் கவனத்தில் கொள்ளாமல், இந்த கொள்கையானது மிகவும் கொடூரமாக நடைமுறைப் படுத்தப்பட்டது.

(உ) கட்டாய வேலை: பதுங்கு குழிகள் வெட்டுவது, தங்களுடைய சொந்த பாதுகாப்புக்கென பிற கட்டுமானங்களை அமைப்பது என, தங்களது பாதுகாப்பு அரண்களை வலுப்படுத்திக் கொள்வதற்குப் பொதுமக்களை விடுதலைப்புலிகள் கட்டாய வேலை வாங்கினர். இதன் மூலம் பொதுமக்களுக்கும் போராளிகளுக்கும் இடையே வேறுபாடு காண்பது சிரமமாகிப் போனது. இதனால் குண்டு வீச்சிலிருந்து கூடுதல் தீங்கைப் பெறும் நிலைக்குப் பொதுமக்கள் தள்ளப்பட்டனர்.

(ஊ) தற்கொலை தாக்குதல்கள் மூலம் பொதுமக்களை கொன்றமை: போரின் இறுதிக் கட்டங்களில், போர்ப் பகுதிகளுக்கு வெளியே தனது தற்கொலைத் தாக்குதல் கொள்கைகளை விடுதலைப்புலிகள் தொடர்ந்தனர். அத்தாக்குதல்களை வெற்றிகரமாக நடத்துவதற்கான அதன் திறன், போரின் முந்தைய காலங்களோடு ஒப்பிடுகையில் குறைந்திருந்த போதிலும், போர்ப் பகுதிகளுக்கு வெளியே இத்தகைய எண்ணற்றத் தாக்குதல் முயற்சிகளை அது நடத்தியது. பிப்ரவரி 9, 2009 அன்று முல்லைதீவில் ஒரு விசாரணை மய்யத்தின் மீது நடந்த தற்கொலை குண்டு தாக்குதலில் 30 மக்கள் இறந்து போயினர். மார்ச் 10, 2009 அன்று அக்குரேசாவில் அமைச்சர் மகிந்த விஜே சேகரவைக் கொன்ற ஒரு தற்கொலைத் தாக்குதலில் 15 மக்கள் கொல்லப்பட்டனர். •



4 குற்றச்சாட்டுகளின் சட்டபூர்வ ஆய்வு

துணை ஆயுதக்குழுவினர் முகாம்களுக்குள் நுழைவதும், தனி நபர்களை அடையாளம் கண்டு வெளியேற்று வதைத் தொடர்வதும் அரசின் அனுமதி யுடனேயே நடந்தது. கொடூரமான, மனிதத்தன்மையற்ற மற்றும் தரக்குறைவான நடத்தைகள், வன்புணர்வு அல்லது சித்திரவதைகள் ஆகியவை குற்றவியல் விசாரணைப் பிரிவு அல்லது பயங்கரவாத விசாரணைப் பிரிவு ஆகியவற்றின் விசாரணைகளின் போது நடைபெற்றிருக்கக்கூடும்.

அத்தியாயம் 3 இல் விவரிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தகுதிவாய்ந்தவை எனக் குழுவின் முடிவின் அடிப்படையில், அந்தக் குற்றச்சாட்டுகளின் சட்டபூர்வத் தகுதிகளைத் தற்போது ஆராயலாம். குழுவின் பணி வரையறையின் அடிப்படையில் இந்த ஆய்வு தேவையாய் உள்ளது. குழு, மீறல் குற்றச்சாட்டுகளின் தன்மை மற்றும் வீச்சு குறித்துக் கவனத்தில் கொள்ள வேண்டும் என அதன் பணிவரையறை தெளிவு படுத்துகிறது. எனவே மேலே கூறப்பட்டுளள குற்றச்சாட்டுகளின் அடிப்படையாக உள்ள நிகழ்வுகள், சட்டப்படியான மீறல் குற்றச்சாட்டுகளாக இருக்குமா என்ற கேள்வி எழுகிறது. பிற்காலத்தில் அவை உண்மை என உறுதிசெய்யப்படின் உண்மையான மீறல்களாக ஆகுமா என்ற கேள்வியை நோக்கிக் குழு தனது கவனத்தைத் திருப்புகிறது. குற்றச்சாட்டுகளின் சட்டபூர்வத் தன்மைகளோடு தற்போதைய ஆய்வு தன்னை நிறுத்திக்கொள்கிறது. குழுவின் இந்த முடிவினால், உலகளாவியச் சட்ட மீறல்களாகக் கருதப்படமுடியாத குறிப்பிட்ட குற்றச் சாட்டுகளுக்கு அடிப்படையாய் உள்ள குற்றச்செயலுக்கு, குழு அங்கீகாரம் அளித்ததாகக் கருதப்படக்கூடாது. அத்தியாயம் 3 இன் இறுதியில் அடையாளம் காணப்பட்டுள்ள பிரிவுகளின் அடிப்படையில் குற்றச்சாட்டுகளைக் குழு ஆராய்கிறது.

அ) பொருந்தக்கூடிய சட்டங்கள்

179) உலகளாவிய மனிதநேயச் சட்டம் மற்றும் உலகளாவிய மனித உரிமைச் சட்டங்கள் ஆகிய இரண்டு சட்ட மீறல்களையும், குழுவின் பணிவரையறை கவனத்தில் கொள்கிறது. உலகளாவியச் சட்டங்களின் அடிப்படையாகவும் நீண்டகால வரையறையாகவும் இருக்கின்ற இடத்திலிருந்து, அதாவது இலங்கையில் நடந்தது போன்ற ஓர் ஆயுதப்போரில் உலகளாவிய மனிதநேயச் சட்டங்கள் மற்றும் உல களாவிய மனிதஉரிமைச் சட்டங்கள் ஆகிய இரண்டும் பொருந்தும் என்ற நிலையில் இருந்து, குழு தனது பணியைத் தொடங்குகிறது.

180) உலகளாவிய மனிதநேய மற்றும் மனித உரிமைச்சட்டங்களில் அனைத்தையும் விவாதிப்பதைவிட, பொருந்தக்கூடியவை குறித்து மட்டும் விவாதிப்பதுக் குழுவின் தேவைகளுக்குப் போதுமானதாக இருக்கிறது. அத்துடன், நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள மனிதநேய மற்றும் மனித உரிமைச்சட்டங்களின் கூறுகள், தொடர்ந்து அரசு, பன்னாட்டு அமைப்புகள், நீதிமன்றங்கள், சட்டபூர்வக் கண்காணிப்பு அமைப்புகள் மற்றும் பிற நிறுவனங்கள் ஆகியவற்றின் விவாதப் பொருளாக இருந்து வருகிறது.

1) உலகளாவிய மனிதநேயச் சட்டம்

181) ஓர் உள்நாட்டுப் போருக்கான வரையறைகள் இந்தச் சண்டைக்குத் தெளிவாகப் பொருந்துகின்றன. அதாவது அரசுக்கும் நிறுவனப்படுத்தப்பட்ட ஓர் ஆயுதக்குழுவிற்கும் இடையிலான ஆயுத வன்முறை. இதனால் உலகளாவிய மனித நேயச் சட்டங்கள் இதற்குப் பொருந்துகின்றன. முன்னாள் யுகோஸ்லேவியா விற்காக அமைக்கப்பட்ட பன்னாட்டுக் குற்றவியல் ஆணையம் குறிப்பிட்டுள்ள படி 'இருநாடுகளுக்கு இடையே ஆயுதம் ஏந்திய மோதலோ அல்லது அரசுப்படைகளுக்கும் ஆயுதம் தாங்கியக் குழுவினர்க்கும் இடையே நடக்கக்கூடிய ஆயுத வன்முறையோ அல்லது ஒரு நாட்டிற்குள் ஆயுதக் குழுக்களுக்கு இடையே நடைபெறும் வன்முறையோ ஓர் ஆயுதப்போர் நடை பெறுவதைக் குறிக்கிறது.' இலங்கையில், குழு ஆய்வுக்குட்பட்ட அந்தக் காலக்கட்டத்தில், சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள படியான தீவிரத்துடன் ஓர் உள்நாட்டு ஆயுதப்போர் நடைபெற்றது என்பதில் சந்தேகமில்லை. இதன் விளைவாக அரசு மற்றும் விடுதலைப்புலிகள் இருவரும் போரின் போது நடந்துகொண்ட முறை குறித்து அளவிட உலகளாவிய மனிதஉரிமைச் சட்டமே சரியான சட்டமாகும்.

182) 1949இல் நான்கு ஜெனிவா தீர்மானங்களில் இலங்கை கையெழுத்திட்டுள்ளது. இரு நாடுகளுக்கு இடையே அல்லாத ஆயுதப் போர்களில் பாதிப்படைந்தவர்களைப் பாதுகாப்பது தொடர்பான ஜெனீவா தீர்மானங்களுக்கு கூடுதல் மரபுகள்–1977 (மரபு II)–இல் அது கையெழுத்திடவில்லை. எனவே, நான்கு ஜெனிவா தீர்மானங்களின் பொதுப்பிரிவு 3 இல் விவரிக்கப்பட்டவையே, போரில் இருதரப்பினருக்குமான கடப்பாடுகளாகப் பொருந்துபவை. இந்தப் பிரிவு ஒன்றே பன்னாட்டுத் தன்மையில் அல்லாத போர்கள் குறித்த பிரிவாகும். அத்துடன், பன்னாட்டுத் தன்மையில் அல்லாத அல்லது உள்நாட்டு ஆயுதப்போர்களை கண்காணிக்கக்கூடிய வழமையான உலகளாவிய மனிதநேயச் சட்டத்தின் பகுதிகளும் பொருந்தும். பொதுப்பிரிவு 3 இல் விவரிக்கப்பட்டுள்ள முக்கியக் கூறுகளில் குறிப்பிடுவது தேவையானது.

1) தங்கள் ஆயுதங்களைக் கைவிட்டுவிட்ட ஆயுதப்படைகளின் உறுப்பினர்கள் மற்றும் நோய், காயங்கள், தடுப்புக்காவல் அல்லது வேறு காரணங்களால் நேரடியான போரில் இருந்து விலக்கிவைக்கப்படுள்ளவர்கள் உட்பட சண்டையில் ஈடுபடாத நபர்கள், எல்லாச்சூழல்களிலும் மனிதநேயத்தோடு நடத்தப்பட வேண்டும். இனம், நிறம், மதம் அல்லது நம்பிக்கை, பாலினம், பிறப்பு அல்லது சொத்து அல்லது இதுபோன்ற வேறு எந்த அடிப்படையிலும் அவர்கள் மீது பாகுபாடுகள் காட்டப்படக்கூடாது. இந்த நிலையில் கீழ்க்காணும் செயல்கள் எப்பொழுதும் எந்த நேரத்திலும் எந்த இடத்திலும், மேலே குறிப்பிட்டுள்ள மனிதர்களைப் பொருத்தவரையில் தடை செய்யப்பட்டவை.

அ) உயிர் அல்லது உடல் மீதான வன்முறை குறிப்பாக அனைத்து வகையான கொலைகள், காயப்படுத்துதல், கொடூரமாக நடத்துதல் மற்றும் சித்திரவதை.

ஆ) பணயக்கைதிகளாகப் பிடித்து வைப்பது.

இ) தன்மதிப்பின் மீதான தாக்குதல்கள். குறிப்பான அவமானப்படுத்துதல் மற்றும் தரக்குறைவாக நடத்துதல்.

2) காயம்பட்டவர்களும் நோயாளிகளும் கவனித்துக்கொள்ளப்பட வேண்டும்.

183) வழமையான உலகளாவியச் சட்டத்தின் உள்ளடக்கம் மற்றும் பொருளை நிர்ணயிப்பதற்காக, குழுவானது பல்வேறு தரப்புகளைச் சார்ந்திருந்தது. செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆய்வறிக்கையான், வழமையான உலகளாவிய மனிதநேயச்சட்டம் 2005, அரசின் நடைமுறைகள் மற்றும் சிந்தனைப்போக்கு ஆகியவற்றை விரிவாக ஆராய்வதோடு, பன்னாட்டு மற்றும் தேசிய நீதித்துறை முடிவுகள் மற்றும் பன்னாட்டுக் குற்றவியல் ஆணையங்களின் தீர்ப்புகள் மற்றும் சட்டவரையறைகள் ஆகியவை குறித்தும் விரிவாக ஆராய்ந்துள்ளது. அரசுகளிலேயே, வழமையான சட்ட நிலை குறித்தும் , பன்னாட்டுத் தன்மையில் அல்லாத ஆயுதப்போரில் இரு தரப்பினரின் நடத்தைப் பற்றியக் கட்டுப்பாடுகளின் வீச்சைக் குறித்தும் அரசுகளிடையே சில ஒப்புதலற்ற போக்கு இருப்பதைக் குழு அங்கீகரிக்கும் அதே நேரத்தில், குழு சார்ந்திருக்கக்கூடிய வரையறைகள் அதன்பார்வையில் வழமையான உலகளாவிய மனிதநேயச் சட்டத்தின் வரையறைகளாகவே இருக்கின்றன. இதில் எந்த மாற்றுக்கருத்தும் இல்லை.

2) உலகளாவிய மனித உரிமைச் சட்டம்

184) ஆயுதப்போரின் சூழல்களில் மனிதஉரிமைச் சட்டங்களும் பொருந்துகின்றன. இதனை பெரும்பாலான அரசுகள் ஏற்றுக்கொண்டுள்ளன. ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனப் பகுதியில், ஒரு சுவர் எழுப்புவதன் சட்டப்படியான விளைவு மீது உலகளாவிய நீதிமன்றம் 2004 இல் வெளியிட்ட ஆலோசனைக் கருத்தில் இதனை உறுதி செய்துள்ளது. 2005 இல், காங்கோவின் பகுதிகளில் ஆயுத நடவடிக்கைகள் குறித்தான தனது தீர்ப்பில் இதனை வலியுறுத்தியுள்ளது. ஓர்

ஏறத்தாழ 2,90,000 மக்களின் தடுப்புக் காவல், நீடித்த மற்றும் கடுமையாக நடைமுறைப்படுத்தப்பட்ட கட்டுப்பாடுகளின்கீழ், நியாயமான பாதுகாப்பு நடைமுறைகளின் அவசியத்திற்கு அப்பால் நீடித்தது. ஏப்ரல் முதல் செப்டம்பர் வரையிலான காலக்கட்டத்தில் இடம்பெயர்ந்த மக்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாக, எவ்விதக் காரணமுமின்றி, தடுப்புக்காவலில் வைக்கப் பட்டிருந்தனர்.

விடுதலைப்புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் என குற்றம் சாட்டப்பட்டவர்கள் ஏறத்தாழ 12,000 பேர் தனியான இடங்களில் காரணமற்ற தடுப்புக்காவலில், செஞ்சிலுவைச் சங்கத்தின் பாதுகாப்பு மற்றும் தொடர்புகள் இன்றி வைக்கப் பட்டிருந்தனர். இவ்வாறு தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட பெரும்பான்மையான மக்கள் மீது எவ்வித சட்டபூர்வக் குற்றச்சாட்டுகளும் வைக்கப்படவில்லை. அவ்வாறு குற்றம் சாட்டப் பட்டவர்களும்கூட விசாரணைக்காகத் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பது ஏறத்தாழ ஒரு பொதுவான விதியாக இருந்தது.



ஆயுதப்போரின் போது குடிமை மற்றும் அரசியல் உரிமைகளுக்கான உலகளாவிய வரையறைகளை உகாண்டா மீறியுள்ளதாக அத்தீர்ப்பில் அது குறிப்பிட்டுள்ளது.

185) ஆயுதப்போருடன் தொடர்புடைய தகுதிவாய்ந்த குற்றச்சாட்டுகளின் மீது உலகளாவிய மனிதநேயச் சட்டத்தின் வரையறைகளைக் குழு பொருத்தி, இதில் பெரும்பான்மையானவை மனித உரிமை மீறல்களாகவும் ஆகும் என்பதை அங்கீகரிக்கிறது. மே 19 2009 அன்று போர் முடிந்ததில் இருந்து உலகளாவிய மனித உரிமைச் சட்டமே, பொருந்தக்கூடிய ஒரே சட்டமாக மாறியது. போரின் நடத்தைக்கு வெளியே நடைபெற்ற மனித உரிமை மீறல்களையேக் குழு கவனத்தில் கொண்டுள்ளது.

186) குடிமையியல், பண்பாடு, பொருளாதாரம், அரசியல் மற்றும் சமூக உரிமைகள் தொடர்பான முக்கியமான உலகளாவிய மனித உரிமை ஒப்பந்தங்கள் அனைத்திலும் இலங்கை கையெழுத்திட்டுள்ளது. அத்துடன், சித்திரவதையை தடுப்பது, பெண்கள் மற்றும் குழந்தைகளின் உரிமைகள் ஆகியவை குறித்த ஒப்பந்தங்களிலும் அது கையெழுத்திட்டுள்ளது. இந்த ஒப்பந்தங்களில் தனக்கு முரண்பாடுடைய பகுதிகள் என இலங்கை எதனையும் குறிப்பிடவில்லை. மே 20, 2000 அன்று குடிமையியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான உலகளாவிய வரையறைகளின் இப்பிரிவு 4 இன் கீழ் சில விலக்கல்களை இலங்கை, செயலாளர் நாயகத்திற்குத் தெரிவித்தது. அதன்படி அந்த ஒப்பந்தத்தின் சில பிரிவுகளில் இருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.

கைது மற்றும் தடுப்புக்காவல் மற்றும் விரைவான விசாரணை ஆகியவை குறித்து பேசும் பிரிவு 9 (3) தவிர பிற விலக்குகள் அனைத்தையும் முடித்துக் கொள்வதாக ஜூன் 4, 2010 அன்று இலங்கை, செயலாளர் நாயகத்திடம் அறிவித்தது. ஒரு நாட்டின் இருப்பிற்கே அச்சுறுத்தல் ஏற்படுத்தக்கூடிய பொது அவசரநிலை மற்றும் சூழலின் தீவிரத்தின் அடிப்படையில் மிக அவசியமாகத் தேவைப்படுபவை ஆகியவற்றின் அடிப்படையில் மட்டுமே குடிமையியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான உலகளாவிய வரையறைகளின் பிரிவு 4 விலக்குகளை அளிக்கிறது. இதன் அடிப்படையில் இலங்கைக்கு அளிக்கப்பட்ட விலக்குகளின் அகலமும் காலமும் கவனத்தில் கொள்ளவேண்டியவை. உலகளாவியச் சட்ட ஆணையம் மற்றும் மனித உரிமைக்குழு ஆகியவை முன்மொழிந்துள்ள விலக்குகளுக்கான சோதனைகளில், மீதமுள்ள விலக்குகள் தேறாது. இந்த விலக்குகளின் தன்மை குறித்து நிலவும் நிச்சயமற்ற சூழல்களின் அடிப்படையில் குடிமையியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான உலகளாவிய வரையறைகளின் பொருத்தமான அனைத்துப் பிரிவுகளையும் குழு விவாதிக்கிறது.

188) விடுதலைப்புலிகளைப் பொருத்தவரையில் அரசு அல்லாதவர்கள் மனித உரிமை ஒப்பந்தங்களின் பகுதியாய் அதிகாரபூர்வமாக ஆக முடியாது என்ற போதும் ஓர் அரசின் பகுதியில் ஒரு குறிப்பிட்ட பகுதி மீது அதிகாரபூர்வமற்ற ஆட்சியை நடத்தக்கூடிய அரசு அல்லக் குழுக்கள் அந்தப் பகுதியில் உள்ள மக்களின் அடிப்படை மனித உரிமைகளை மதிக்கவேண்டும் எனத் தற்போது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அய்.நா. வின் பாதுகாப்பு அவை உள்ளிட்ட பல்வேறு உறுப்புகளும், இவ்வாறான அரசு அல்லாக் குழுக்களும், மனித உரிமைகளை மதிக்க வேண்டும் என தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளன. பன்னாட்டுப் பங்கேற்பாளர்கள் இடையே இது குறித்து கருத்து மாறுபாடுகள் நிலவுகின்றன என்பதைக் குழு அங்கீகரித்தபோதும், தனது அதிகாரத்திற்குட்பட்ட மக்களின் அடிப்படை மனித உரிமைகளான, உயிர் வாழ்வதற்கான உரிமை, பாதுகாப்பு மற்றும் சித்திரவதைகள் மற்றும் கொடூரமான மனிதத்தன்மையற்ற அல்லது தரம் குறைவான நடத்தை மற்றும் தண்டனை ஆகியவற்றிலிருந்து விடுதலை போன்ற வற்றை மதிக்கவேண்டும் என்ற அடிப்படையில் குழு தனது ஆய்வினைத் தொடர்கிறது.

ஆ) சமநிலையில் அல்லாத போர்முறையும் உலகளாவிய மனித நேயச் சட்டமும்

189) இந்த ஆயுதப்போரில் இரு தரப்பினரும் வெளிப்படுத்திய நோக்கங்கள், (அரசைப் பொருத்தவரையில், 'பயங்கரவாதத்தை அழிப்பது', விடுதலைப் புலிகளைப் பொருத்தவரையில் 'தனி நாட்டுக்காகப் போராடுவது') அல்லது போரில் இருதரப்பினராலும் பயன்படுத்தப்பட்ட உத்திகளின் சமநிலையில் அல்லாத தன்மை ஆகியவை இருதரப்பினர் மீதும் உலகளாவிய மனித நேயச் சட்டங்களைப் பொருத்துவதைப் பாதிக்கிறது. உலகளாவியச் சட்டங்களின்படி தனது தேசியப் பாதுகாப்பை உறுதிசெய்யும் உரிமை அரசுக்கு இருக்கிறது. கிளர்ச்சிக்காரர்கள் உட்பட பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடக்கூடியவர்களின் ஆயுதத்தாக்குதல்களில் இருந்து தன்னைக் காத்துக்கொள்ளும் உரிமை அரசுக்கு உள்ளது. ஆனாலும், அதற்காக, இதனை அடைய அது மேற்கொள்ளும் அனைத்து முயற்சிகளையும் நியாயப்படுத்த இயலாது. சட்டப்படியான நோக்கங்களுக்காக மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளும் உலகளாவியச் சட்டத்தின் தேவைகளோடு பொருந்தி இருக்கவேண்டும். உலகளாவிய நீதிமன்றம் கண்டறிந்தபடி பொதுப்பிரிவு 3 ஆனது, 'ஒரு குறைந்தபட்ச அளவுகோலாக இருந்து மனித குலத்தின் அடிப்படைத் தேவைகளைப் பிரதிபலிக்கிது'

190) உலகளாவிய மனித நேயச் சட்டமானது, விடுதலைப்புலிகள் போன்ற ஓர் அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் இலங்கை போன்ற ஒரு நாட்டின் சட்டபூர்வ நலன்களை மதிக்கிறது. கடந்த பல்லாண்டுகளாக இலங்கையின் உள்நாட்டுப்போர் குறித்து இரு தரப்பினரும் வெளியிட்டுள்ள அறிக்கைகள், பல்வேறு காரணங் களுக்காக இந்தப்போரானது உலகளாவிய மனித நேயச் சட்டத்தின் வரையறைக்கு அப்பாற்பட்டதாக உள்ளதாகவும், உலகளாவியச் சட்டத்தின்படி தவறு என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. மேலும் ஒரு தரப்பினர் நடத்தும் அத்துமீறல்களானது பொதுவாக மறுதரப்பினர் தங்களது கடப்பாடுகளைக் கைவிடக் காரணமாய் இருக்க முடியாது என்பதே உலகளாவிய மனிதநேயச் சட்டத்தின் நன்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படை வரையறை ஆகும்.

இ) சட்டப்பொறுப்பின் வடிவங்கள்

191) குற்றச்சாட்டுகளின் சட்டத்தன்மையை ஆராயும் போது உலகளாவிய மனிதநேய மற்றும் மனிதஉரிமைச் சட்டங்கள் தனது கடப்பாடுகளை சுமத்தும் பல்வேறு அமைப்புகளையும் மீறல்குற்றச்சாட்டுகளுக்கு இதனால் பொறுப்பாகக் கூடியவர்களையும் குழு கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். குழுவானது மூன்று வகையானப் பொறுப்புகளைக் கவனத்தில் கொண்டுள்ளது. குற்றம் சாட்டப்படுள்ள செயல்கள் உண்மை என அறியப்படின், இலங்கை அரசு அந்த மீறல்களுக்குப் பொறுப்பாக இருக்குமா என்பதைக் குறித்த அரசின் பொறுப்பு. உல களாவியச் சட்டங்களின்படி அரசின் பொறுப்பு என்பது இலங்கை அரசின் செயல்களுக்கு மட்டுமே பொருந்தும். அரசு அல்லாத செயல்பாட்டாளர்களான ஒட்டுக்குழுக்கள் அல்லது அரசின் உத்தரவின்கீழோ அல்லது வழிகாட்டுதலின் படியோ அல்லது கட்டுப்பாட்டின் கீழோ செயல்படக்கூடிய தனிநபர்களின் செயல்களுக்கு அரசுப் பொறுப்பாகாது. அமைப்பு சார்ந்தப் பொறுப்பு என்பது அரசு அல்லாத ஆயுதக்குழுக்கள் மீது உலகளாவிய மனிதநேயச் சட்டங்கள் சுமத்தக் கூடிய கடமைகளை அங்கீகரிப்பது. இந்தச் சூழலில் அது விடுதலைப்புலிகளைக் குறிக்கும். தனிநபர் பொறுப்பு என்பது, பொதுவாக ஆயுதப்போருடன் உள்ள தங்களது தொடர்புகளுக்கு அப்பால், குற்றவியல் சட்டப்படி மீறல்களுக்குப் பொறுப்பாவதை குறிக்கிறது. குற்றவியல் பொறுப்பு என்பது, அந்த நபர் அரசின் சார்பாகவோ அல்லது விடுதலைப்புலிகளின் சார்பாகவோ செயல்பட்டிருந்தாலும், அதற்கு அப்பால், அது சில செயல்களுடன் தொடர்புடையதாக இருக்கிறது. இவற்றுடன் இலங்கை உள்நாட்டுச் சட்டத்தின் சில பகுதிகளைப் பொருத்துவது குறித்தும் குழு விவாதிக்கிறது.



மாணிக் பண்ணையில் மிக மோசமாக நடந்த வன்புணர்வுகள் உட்பட பெண்கள் மீது பாலியல் அடிப்படையில் நடத்தப் பட்ட வன்முறைகள், முகாம்களிலும் மறுகுடியமர்வு நடைமுறைகளின் போதும் நடத்தப் பட்டவை ஆகியவை விசாரிக்கப்படவில்லை. இவையே இந்த உரிமைகளை மீறியதற் கான தகுதிவாய்ந்த குற்றச்சாட்டுகளை உறுதிசெய்கின்றன. பாலியல் அடிப்படையி லான வன்முறைகளை ஊக்குவிக்கும் சூழல் நிறைந்த முகாமின் நிலைகளை மாற்றுவதற் கான நடவடிக்கைகளை எடுக்க அரசு தவறி விட்டது.

சரணடைந்தவர்களில் இருந்த குழந்தைகள், மறுவாழ்வு என்ற பெயரில், எவ்வித விசாரணையும் இன்றி அரசின் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் பல்வேறு மறுவாழ்வு மய்யங்களுக்கு இடையே தொடர்ந்து மாற்றப்பட்டனர். இதனால் அவர்கள் எங்கு இருக்கிறார்கள் என்பதைக் கண்டறிவதும், குடும்பத்தினர் அவர்களை சந்திப்பதும் கடினமாகியது.



ஈ) இலங்கை அரசு நடத்தியதாகக் கூறப்படும் மீறல்கள்

192) இலங்கை அரசின் நடத்தை குறித்த அய்ந்து வகையான தகுதிவாய்ந்த அத்துமீறல்கள் குறித்து அத்தியாயம் 3 அடையாளம் காண்கிறது. இந்தப் பகுதியானது, ஒவ்வொரு குற்றச்சாட்டுப் பிரிவிலும் உள்ள சட்ட மீறல்கள் குறித்து மதிப்பிடுகிறது.

1) பரவலான குண்டுவீச்சுகள் மூலம் பொதுமக்களை கொன்றமை

அ) ஜெனிவா ஒப்பந்தத்தின் பொதுப் பிரிவு 3

193) பொதுப் பிரிவு 3–இன் பத்தி (1–அ), உயிர் மற்றும் உடல் மீதான வன்முறை, குறிப்பாக, அனைத்து வகையான கொலைகள், காயப்படுத்துதல், கொடூரமாக நடத்துவது, சித்திரவதை, ஆகியவற்றைக் குறிப்பிட்டுள்ளது. இதில், தகுதிவாய்ந்தக் குற்றச்சாட்டுகள், இலங்கை இராணுவம் நடத்திய பாகுபாடற்ற பரவலான குண்டுவீச்சுகளினால் ஏற்பட்ட பொதுமக்கள் படுகொலைகள் குறித்துக் குறிப்பிடுகின்றன. இவை, 3 பாதுகாப்பு வலயங்கள் மீது நடத்தப்பட்டத் தாக்குதல்கள் உள்ளிட்டவற்றைக் குறிக்கின்றன. பாகுபாடற்ற குண்டு வீச்சுகள் கொலைகளுக்கு காரணமாக இருக்க முடியுமா என்பது குறித்து, 'ஆர்ட்டிலரி' தாக்குதல் போன்ற தாக்குதல்களுக்கு பொதுமக்கள் ஆட்படும் சூழலில், அது பொதுமக்களின் சாவில் கொண்டு விடுமானால், அத்தாக்குதலை நடத்தியவர்கள், அத்தாக்குதல் சாவை ஏற்படுத்தும் என்பதை எந்த அளவு அறிந்திருந்தனர் என்பதன் அடிப்படையில், அச்சாவுகள் கொலை என வகைப்படுத்தப்படும் என உலகளாவிய நீதித் துறையானது ஏற்றுக் கொண்டுள்ளது. 'சானல் 4' காணொலி போன்றவை மூலம், குறிப்பாக, போரின் இறுதி நாட்களில், தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட ஆயுதம் அற்ற விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்களை, இலங்கை இராணுவம் கொன்றதைக் காட்டும் செய்திகள், ஒரு தகவலாக அறியப்பட்டதன் அடிப்படையிலும் கொலை குறித்தத் தகுதிவாய்ந்தக் குற்றச்சாட்டுகளாக குறிக்கப்படுகின்றன.

ஆ) போராளிகள் மற்றும் பொதுமக்களை வேறுபடுத்திக் காட்டும் தேவை

194) 'போரின் இரு தரப்பினரும் எல்லா நேரங்களிலும் பொதுமக்கள் மற்றும் ஆயுதந்தரித்தவர்களுக்கிடையே வேறுபடுத்திக் காண வேண்டும். ஆயுதந்தரித்தவர்களை நோக்கியே தாக்குதல்கள் இருக்க வேண்டுமே ஒழிய பொதுமக்களை நோக்கி இருக்கக் கூடாது.' என உலகளாவிய மனித நேயச் சட்டம் கூறுகிறது. (விதி 1, செஞ்சிலுவைச் சங்க ஆய்வு). 'ஆயுதக் குழுக்களின் உறுப்பினராகவோ அல்லது போரில் பங்கெடுத்திருக்கக்கூடிய எந்த ஒரு இராணுவப் பிரிவின் உறுப்பினராகவோ இல்லாதவர்கள் அனைவரும்' பொதுமக்கள் என விவரிக்கப்பட்டுள்ளது. ஒரு நபரின் நிலை குறித்து சந்தேகம் ஏற்படுமானால் அவர் பொதுமக்களில் ஒருவராகவே கருதப்படுவார்.

195) வேறுபடுத்திக் காட்டுதல் குறித்த அடிப்படை கோட்பாட்டை இலங்கை அரசு மதிக்கவில்லை என குற்றச்சாட்டுகள் காட்டுகின்றன. வன்னியில், தான் நடத்திய இராணுவ நடவடிக்கைகள் பொதுமக்களில் ஒருவருக்குக் கூடப் பாதிப்பை ஏற்படுத்தவில்லை என அரசு கூறுகிறது. ஆனால் பொதுமக்கள் இழப்போ பல்லாயிரக்கணக்கில் இருக்கிறது. போர்ப் பகுதிகளில் சிக்கியிருந்த மக்களின் எண்ணிக்கை குறித்து அது மிகக் குறைவான மதிப்பீட்டை வழங்கியது. இவற்றின் மூலம், அரசு, போர்ப் பகுதிகளில் விடுதலைப் புலிகளுடன் பெரும் பான்மையான மக்களைத் தொடர்புப் படுத்திப் பார்த்தது என்பதும், அதனால் இந்த அடிப்படைக் கோட்பாட்டை கவனத்தில் கொள்ள அது தவறிவிட்டது என்றும் தெரிகிறது.

இ) பொதுமக்கள் மற்றும் பொதுமக்கள் கட்டுமானங்கள் மீதான தாக்குதல்கள் மீதுள்ள தடை

196) பொதுமக்கள் மற்றும் பொதுமக்கள் கட்டுமானங்கள் மீது தாக்குதல் நடத்துவதை உலகளாவிய மனித நேயச் சட்டம் தடை செய்கிறது. இராணுவக் கட்டுமானங்கள் மீதும் ஆயுதந்தரித்தவர்கள் மீதும் மட்டுமே தாக்குதல்கள் நடத்தப்பட வேண்டும். (விதி 7, செஞ்சிலுவைச் சங்க ஆய்வு). வழமையான உலகளாவியச் சட்டத்தின்படி, பொதுமக்களைக் குறிவைப்பதற்கு எதிராக நிபந்தனையற்ற முழுமையான தடை இருக்கிறது. பாகுபாடுகள் குறித்தக் கோட்பாட்டிலிருந்து பரவும் கோட்பாடுகளில் மிகவும் அடிப்படையான கோட்பாடு இது. தாக்குதல்களின் பாதிப்பிலிருந்து காயம்பட்டவர்கள், நோயாளிகள் மற்றும் பொதுமக்களைக் காக்க ஏற்படுத்தப்பட்ட பகுதிகளுக்கு எதிராக எத்தரப்பினரும் தாக்குதல் நடத்தக் கூடாது என்பது கூடுதல் கோட்பாடாகும். பாதுகாப்பு வலயங்களில் பொதுமக்களுக்கு அருகிலேயே விடுதலைப் புலிகளும் இருந்ததை பொருத்த வரையில், பன்னாட்டு ஆணையங்கள், பெரும்பான்மையாகப் பொதுமக்கள் உள்ள பகுதிகளின் மீது தாக்குதல் நடத்தப்படுவதைத் தடை செய்வதை விளக்கியுள்ளன. பொதுமக்களுக்கிடையே, பொதுமக்கள் என்ற வரையறைக்குள் வராத தனி நபர்கள் இருப்பது என்பது பொதுமக்களின் தன்மையை மறுப்பதாகாது என்றும் விளக்குகிறது.

197) இலங்கையைப் பொருத்தவரையில் தனி நபர் பொறுப்பு குறித்து சட்டப்பார்வையில் இந்தத் தடையின் உளவியல் கூற்றினைக் கவனத்தில் கொள்ள வேண்டியது முக்கியமானது. பொதுமக்களைக் கொல்வதைத் திட்டமிட்ட ஒற்றை நோக்கமாகக் கொண்ட தாக்குதல்களை மட்டும் சட்டம் தடை செய்யவில்லை. ஒரு பன்னாட்டு ஆயுதப் போரில் பொதுமக்களைத் தாக்குதலின் இலக்காக வைக்கும் போர்க்குற்றம் குறித்து விவரிக்கும் முதல் கூடுதல் மரபினை அடிப்படையாக வைத்து நோக்கும் போது, அவ்வாறு பொதுமக்கள் மீது நடத்தப்படும் தடை செய்யப்பட்ட தாக்குதலானது 'வேண்டுமென்றே' நடத்தப்பட்டதாக இருக்க வேண்டும். இந்த மரபு குறித்த செஞ்சிலுவைச் சங்கத்தின் அதிகாரபூர்வ விளக்கமானது, 'குற்றம் சாட்டப்பட்டவர், சுயஉணர்வோடும், உள் நோக்கத்தோடும், அதாவது, தனது மனதை இச்செயலில் நிறுத்தி, அதன் விளைவுகளை உணர்ந்து, அதை விரும்பிச் செயல்பட்டிருக்க வேண்டும். (குற்றவியல் நோக்கம் அல்லது முன்பகை அல்லது வெறுப்பு)' பொதுமக்கள் மீதான பாதிப்புக் குறித்து அக்கறையற்ற தாக்குதல்களையும் 'வேண்டுமென்றே' நடத்தப்படும் தாக்குதலாகவே கருத வேண்டும் என 'முன்னாள் யுகோஸ்லோவியாவுக்கான உலகளாவிய குற்றவியல் தீர்ப்பாய'த்தின் சட்டக் குழு விவரிக்கிறது.

198) பொதுமக்களைத் தாக்கும் அந்த நோக்கம் குறித்த அந்த விளக்கத்தைப் பொருத்த வரையில், வேண்டுமென்றோ அல்லது அக்கறையற்றோ, 'பொதுமக்களை இலக்கு வைப்பதை நோக்கமாகக் கொண்டதை, நேரடியான அல்லது சூழ்நிலை சாட்சியங்களின் மூலம், நிரூபிக்க முடியும். குறிப்பிட்ட நபர்களைத் தாக்குவதை நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை. மாறாக, தனி நபர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் அனைவரையும் ஒட்டுமொத்தமாக அப்படியே தாக்குதலின் இலக்காக வைப்பதை அது தடை செய்கிறது'. அந்தத் தாக்குதல் பொதுமக்களை இலக்கு வைத்து நடத்தப்பட்டதா என்பதை, தாக்குதல் நடத்தப் பயன்படுத்தப்பட்ட முறைகள், பாதிக்கப்பட்டவர்களுக்கும் தாக்குதல் நடத்துபவர்களுக்கும் இடையிலான தூரம், பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மற்றும் தோற்றம் உள்ளிட்ட எண்ணற்ற பல காரணிகளை வைத்து மதிப்பிட முடியும். மேலும், 'பாகுபாடற்ற தாக்குதல்கள், அதாவது, பொதுமக்கள் மற்றும் பொதுமக்கள் கட்டுமானங்களையும் இராணுவக் கட்டுமானங்களையும் வேறுபடுத்தாமல் நடத்தப்படக்கூடிய தாக்குதல்கள் ஆகியவையும் பொதுமக்கள் மீதான நேரடித் தாக்குதலாகவே கருதப்படும்' என்றும் 'முன்னாள் யுகோஸ்லோ

போரின் இறுதிக் கட்டங்களில் மீறல்கள் குறித்து வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளில், மிகக்குறைந்த எண்ணிக்கையிலானவையே விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. அவையும், திறன் மற்றும் சுதந்திரமான செயல்பாடு குறித்த உலகளாவிய தரங்களோடு எந்த வகையிலும் ஒத்துப் போவதாக இல்லை. இவையே இந்தச் சட்டங்களின் கீழான மீறல்கள் குறித்த தகுதிவாய்ந்த குற்றச்சாட்டுகள் ஆகும். பாதிக்கப்பட்டவர்கள் நீதிமன்றங்களை அணுகும் வாய்ப்பு என்பது திட்டமிட்டுத் தடுக்கப்பட்டது அல்லது சட்டப்படி இல்லாமல் ஆக்கப்பட்டது. மேலும் நடைமுறையிலும் கட்டுப்படுத்தப்பட்டது.

வியாவுக்கான உலகளாவிய குற்றவியல் தீர்ப்பாயம்' கூறுகிறது. அதைப் போலவே, 'சில வெளிப்படையான பொருத்தமற்ற தாக்குதல்களும் அவை பொதுமக்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதல்கள் என்ற முடிவுக்கு வரும் நிலையை ஏற்படுத்தும்'.

நெருக்கடி நிலைச் சட்டங்கள் மற்றும் வரையறைகளின் கீழ் அரசு அதிகாரிகள் தங்களது அதிகாரபூர்வ அதிகாரத்தைச் செயல்முறைப்படுத்துவது குறித்து நீதிமன்றங்களை அணுகுவது என்பது, தனிநபர்களுக்கு ஏறக்குறைய இல்லாமல் ஆனது. இந்த அதிகாரங்களின் கீழ் தடுத்து வைக்கப் பட்டவர்கள் குறித்து, அவர்கள் தடுத்து வைக்கப்பட்டதன் நியாயத்தை மறு பரிசீலனை செய்வதற் கான குறைந்தபட்ச அதிகாரங்களையே நீதிமன்றங்கள் கொண்டிருந்தன.

199) ஒரு வாதத்திற்காக, இலங்கை இராணுவம் பொதுமக்களை தனது தாக்குதல் இலக்காக வைப்பதை நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை என்றும், உண்மையில் அவை விடுதலைப் புலிகளையே குறி வைத்தன என்றும் எடுத்துக் கொண்டாலும், சட்டபூர்வ இலக்கான இராணுவக் கட்டுமானங்கள் மற்றும் சட்ட விரோத இலக்கான பொதுமக்கள் ஆகிய இரண்டின் மீதும் ஒரே நேரத்தில் தாக்குதல் நடத்தப்படும் எனில் அத்தாக்குதல் சட்ட விரோதமாகிறது. இலங்கை இராணுவமானது, சட்டபூர்வ இலக்கை முடிவு செய்வதற்கு உதவக்கூடிய ஆயுதங்களையும், ஆளற்ற விமானம் உள்ளிட்ட உளவுக் கட்டமைப்புகளையும் வைத்திருந்தது. அவற்றை இயக்கவும் செய்தது. மேலும், இலங்கை இராணுவம் பொதுமக்களைத் தாக்கிய போதெல்லாம், வன்னி கட்டளைத் தளபதியும் அரசு அதிகாரிகளும் அது குறித்து எண்ணற்றச் செய்திகளைப் பெற்றனர். கூடுதலாக, மருத்துவமனைகளைப் பொருத்த வரையில், அம்மருத்துவமனைகளில் காயம் பட்ட விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் இருக்கக் கூடும் என்ற நிலையானது, அம்மருத்துவமனையை சட்டபூர்வ இராணுவ இலக்காக மாற்றிவிடாது, அவை தொடர்ந்து பாதுகாக்கப்பட்ட பொதுமக்கள் கட்டுமானமாகவே இருக்கும்,

200) எனவே, இலங்கை இராணுவமானது திட்டமிட்டோ, அக்கறையற்றோ, பாதுகாப்பு வலயத்தில் இருந்த பொதுமக்களையும் மருத்துவமனைகள் மற்றும் உணவு வழங்கல் வரிசைகள் உள்ளிட்ட மனித நேயப் பொருட்கள் உள்ளிட்ட பொதுமக்கள் கட்டுமானங்களைத் தாக்கியது என்பதால், பொதுமக்களை இலக்கு வைத்து நடத்தப்படும் தாக்குதல்கள் மீதான தடையை அது மீறியிருக்கிறது என்பதான தகுதிவாய்ந்த குற்றச்சாட்டுகள் குறித்துக் குழு தெளிவாக உள்ளது. அரசின் கட்டாயத்தின் பெயரில் மக்கள், தொடர்ந்து அமைக்கப்பட்ட பாதுகாப்பு வலயங்களில் இடம் பெயர்ந்த நிலையில், பாதுகாப்பு வலயங்கள் மீது அரசு நடத்திய பரவலான குண்டுவீச்சுத் தாக்குதல்களானது, பொதுமக்களிடையே அச்சத்தைப் பரப்புவதை முதன்மை நோக்கமாகக் கொண்ட தாக்குதல்களைத் தடை செய்யும் வழமையான சட்டத்தையும் அது மீறியிருக்கிறது என்பதை குறிக்கிறது. (விதி 2, செஞ்சிலுவைச் சங்க ஆய்வு)

ஈ) பொதுமக்கள் மீதான பாகுபாடற்ற மற்றும் பொருத்தமற்ற தாக்குதல்கள் மீதான தடை

201) உலகளாவிய மனிதநேயச் சட்டம் பாகுபாடற்ற தாக்குதல்களைத் தடை செய்கிறது. அவை,

''...குறிப்பிட்ட இராணுவக் கட்டுமானங்கள் மீது நடத்தப்படாதவை. (ஆ) ஒரு குறிப்பிட்ட இராணுவக் கட்டுமானம் மீது நடத்தப்பட முடியாத தாக்குதல் முறையைப் பயன்படுத்துவது. (இ) உலகளாவிய மனிதநேயச் சட்டத்தின் தேவைகளுக்கு கட்டுப்படாத மாதிரியான பாதிப்புகளைக் கொண்ட தாக்குதல் முறையைப் பயன்படுத்துவது. மேலும், இந்த ஒவ்வொரு முறையிலும் இராணுவக் கட்டமைப்புகள் மற்றும் பொதுமக்கள் அல்லது பொதுமக்கள் கட்டமைப்புகளை பாகுபாடின்றி ஒரு சேரத் தாக்கும் தன்மை'' (விதி 1113, செஞ்சிலுவைச் சங்க ஆய்வு).

202) குறிப்பிட்ட இராணுவக் கட்டமைப்புகளை மட்டுமல்லாமல், தானே அறிவித்த பாதுகாப்பு வலயங்களின் உள்ளேயும், மருத்துவமனைகள், உணவு வழங்கல் வரிசைகள் போன்ற பொதுமக்கள் கட்டமைப்புகள் உள்ளிட்ட இடங்களில் பொதுமக்கள் மீது எவ்வித பாகுபாடுமின்றித் தாக்கக்கூடிய வகையில்

இலங்கை இராணுவம் 'ஆர்ட்டிலரி'களைப் பயன்படுத்தியது குறித்த மீறல்களைத் தகுதிவாய்ந்த குற்றச்சாட்டுகள் குறிக்கின்றன. பொதுமக்கள் நெருக்கமாக வாழ்ந்த இடங்களின் மீது கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தியதும், அவ்விடங்களின் மீது பரவலாக 'ஆர்ட்டிலரி'களை பயன்படுத்தியதும் பாகுபாடற்றது எனக் கருதக்கூடியது.

203) 'எதிர்பார்க்கக்கூடிய காத்திரமான மற்றும் நேரடியான இராணுவ பலன்களோடு ஒப்பிடுகையில், நடத்தப்படும் தாக்குதலினால் ஏற்படக்கூடிய பொதுமக்கள் உயிரிழப்பு, காயங்கள், பொதுமக்கள் கட்டுமானங்களுக்குச் சேதம் அல்லது இவை அனைத்தும் ஏற்படக்கூடிய ஒரு தாக்குதலை' அரசு தடை செய்கிறது. *(விதி 14, செஞ்சிலுவைச் சங்க ஆய்வு).* மிக அதிகமான அளவில் பொதுமக்களுக்குப் பாதிப்பினை எதிர்பார்க்கக்கூடிய விதத்தில், பொருத்தமற்ற முறையில் படையணியினரைப் பயன்படுத்துவது என்பதைத் தடை செய்துள்ளது. அனைத்து நிகழ்வுகள் குறித்தும் குழுவிடம் தகவல்கள் இல்லாத போதும், இந்தச் சட்டப் பிரிவின் அடிப்படையில் எண்ணற்ற மீறல்கள் நடைபெற்றுள்ளதை இந்தக் குற்றச்சாட்டுகள் காட்டுகின்றன. ஏனெனில் பாதுகாப்பு வலயங்கள் மீதான தாக்குதல்கள், அத்தாக்குதல்களின் மூலம் கிடைக்கக்கூடிய இராணுவப் பலன்களோடு ஒப்பிடுகையில், மிகவும் பொருத்தமற்றதாக இருந்தது.

இந்தப் பாதுகாப்பு வலயங்களில் கனரக ஆயுதங்களைப் பயன்படுத்துவதை, தான் நிறுத்திவிட்டதாக அரசு தொடர்ந்து அறிவித்ததானது அத்தகைய பயன்பாட்டைப் பொருத்தமற்றது எனக் கருதுவதற்கு ஏற்றது. இரண்டாவது மற்றும் மூன்றாவது பாதுகாப்பு வலயங்களில் பொதுமக்களும் விடுதலைப்புலிகளும் மிகச் சிறிய இடத்தில் முடக்கப்பட்டப் போது, விடுதலைப் புலிகளை வெல்வதற்கு, பரவலான 'ஆர்ட்டிலரி' மற்றும் 'மார்ட்டர்' தாக்குதல்களுக்கு மாற்றாக, உலகளாவிய மனித நேயச் சட்டங்களை மதிக்கும் வகையில், மேலும் குறிப்பான தாக்குதல் முறைகளைப் பயன் படுத்தியிருக்கலாம்.

உ) தாக்குதல்களுக்கு முன்பும் நடத்தும் போதும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளின் தேவை

204) பொதுமக்கள் இழப்பினைக் குறைப்பதற்கு, அனைத்து வகையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும், அதாவது, தங்களது இலக்குகள் இராணுவ இலக்குகள் என்பதை உறுதி செய்வது, பொதுமக்கள் இழப்பினை இயன்ற அளவிற்குக் குறைப்பதற்கு ஏற்றவாறு தாக்குதல் கருவிகளையும் முறைகளையும் பயன்படுத்தவது, சூழல்கள் அனுமதிக்குமெனில், முன்பே எச்சரிக்கைகள் விடுப்பது உட்பட அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுப்பது என்பது இரு தரப்பினருக்கும் அவசியமானது என உலகளாவிய மனிதநேயச் சட்டம் கோருகிறது. *(விதிகள் 15–20, செஞ்சிலுவைச் சங்க ஆய்வு)*

205) இந்த பிரிவின் கீழான மீறல்களைத் தகுதிவாய்ந்தக் குற்றச்சாட்டுகள் சுட்டுகின்றன. இராணுவ இலக்குகள் மீது என்ற போதிலும் பொதுமக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய தாக்குதல்கள் உட்பட எந்தத் தாக்குதல்கள் குறித்தும் எவ்வித அல்லது போதுமான முன்னெச்சரிக்கை அறிவிப்புகளை ஆயுதப் படையினர் விடவில்லை. வன்னியில் விநியோகிக்கப்பட்ட துண்டறிக்கைகளும் குறிப்பிட்ட தாக்குதல்கள் குறித்துப் போதுமான முன்னெச்சரிக்கைகளைக் கொண்டிருக்கவில்லை. அத்துடன், பாதுகாப்பு வலயங்களுக்குச் செல்லுமாறு பொதுமக்களுக்கு அரசு அறிவிப்பு கொடுத்து, பின்னர் பாதுகாப்பு வலயங்கள் மீதே இலங்கை இராணுவம் குண்டுத் தாக்குதல்கள் நடத்தியது என்பது, இந்தச் சட்டத்தை மதியாத நிலை என்பது மட்டுமல்ல அதைத் தங்கள் பலன்களுக்காகத் தவறாகப் பயன்படுத்தியதும் ஆகும்.



போரின் இறுதிக் கட்டங்களுக்கு முன்னும், இறுதிக் கட்டத்தின் போதும் அரசு சார்பாகச் சிலர் மேற்கொண்ட பரவலான காணாமல் போக்கும் நடவடிக்கைகள், இந்த உரிமைகள் மீறப்பட்டதற்கான தகுதிவாய்ந்த குற்றச்சாட்டுகள் ஆகும். இதற்குப் பலியானவர்கள் பெரும்பாலும் விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்கள் எனச் சந்தேகிக்கப் பட்டவர்கள், சமூகச் செயல்பாட்டாளர்கள், பத்திரிகையாளர்கள் அல்லது மனிதஉரிமைப் பாதுகாவலர்களே ஆவர். விசாரணை நடைமுறை களின் போது சிலர் காணாமல் போயினர். இதுபோன்ற தனி நபர்கள் வெள்ளை வேன்களில் கடத்தப்பட்டு, காணாமல் போக்கப்பட்டு, அதன் பிறகு என்ன ஆனார்கள் என்பதே தெரியாமல் போனது என்பது பரவலான செயலாக இருந்தது.

14 வயதே ஆன சிறுவர்கள் மற்றும் சிறுமிகளை விடுதலைப் புலிகள் போரின் இறுதிக்கட்டங்களில் வலுக்கட்டாயமாகப் படையணியில் இணைத்தது என்பது, இந்தப்பிரிவின் கீழான மீறல்கள் குறித்த தகுதிவாய்ந்த குற்றச்சாட்டுகள் ஆகும். இறுதிப்போரில் உறுப்பினர்கள் இறந்துபோவதற்கான சாத்தியங்கள் அதிக மிருந்த நிலையில் இளவயதினரை அவர்களது குடும்பங்களி லிருந்து பிரித்து நடத்தப்பட்ட இந்தக் கட்டாய இணைத்தல் என் பது, பொதுப்பிரிவு 3இன் கீழ் கொடூரமாக நடத்தப் படுவது என்ற மீறல் குற்றச்சாட்டாக இருக்கின்றது.



2) மருத்துவமனைகள் மற்றும் மனித நேயக் கட்டமைப்புகள் மீதான குண்டுவீச்சுகள்

அ) ஜெனிவா ஒப்பந்தத்தின் பொதுப் பிரிவு 3

206) தெளிவான முத்திரைகள் போடப்பட்டிருந்த போதும், அவற்றின் சரியான இருப்பிடங்களை அரசு அறிந்திருந்த போதும், மருத்துவமனைகள் மற்றும் மனித நேயக் கட்டமைப்புகள் மீது தாக்குதல்கள் நடத்தியதான குற்றச்சாட்டுகள், 'நோய்வாய்ப்பட்டவர்கள் மற்றும் காயம்பட்டவர்களைப் பாதுகாத்து கவனிக்க வேண்டும்' என்று பொதுப் பிரிவு 3இல் குறிக்கப்பட்டுள்ள கடமையை மீறுவ தாகும். மேலும், நன்கு அறியப்பட்ட, மக்கள் மிகுந்திருந்த, மருத்துவமனைகள் மற்றும் மனிதநேயக் கட்டமைப்புகள் மீது நேரடியாகவோ அல்லது அக்கறை யின்றியோ நடத்தப்பட்டத் தாக்குதல்களானது, சாவினை ஏற்படுத்தும் என்பதைத் தாக்குதலை நடத்தியவர்கள் நன்கு அறிந்திருந்த போதும் நடத்தப்பட்டது என்ப தும், பொதுப் பிரிவு 3இன் கீழ், கொலை எனவும் கொள்ளப்படுகிறது.

ஆ) மருத்துவ ஊழியர்கள், மனிதநேயப் பணியாளர்கள் மற்றும் கட்டமைப்புகளைச் சிறப்பாகப் பாதுகாப்பதற்கான தேவை

207) அனைத்து மருத்துவ ஊழியர்கள், மருத்துவப் பெரிருட்கள், மருத்துவ போக்குவரத்து, மனிதநேய மீட்பு ஊழியர்கள் மற்றும் மனித நேய மீட்பு கட்டமைப்புகள் ஆகியவற்றை போரில் ஈடுபடும் இரு தரப்பினரும் மதித்து பாதுகாக்க வேண்டுமென உலகளாவிய மனிதநேயச் சட்டம் கோருகிறது. (விதிகள் 25, 28, 31 மற்றும் 32, செஞ்சிலுவைச் சங்க ஆய்வு), ஜெனிவா ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடியான தனித்துவமான முத்திரைகளைப் பொறித்துள்ள மருத்துவ ஊழியர்கள் மற்றும் கட்டமைப்புகள் மீது தாக்குதல் நடத்தக் கூடாது. இது இலங்கையைப் பொருத்த வரையில், செஞ்சிலுவை அல்லது செஞ்சிலுவைச் சங்கக் கொடியை குறிக்கும். (விதி 30, செஞ்சிலுவைச் சங்க ஆய்வு). தெளிவான முத்திரைகள் பொறித்திருந்த எண்ணற்ற மருத்துவமனைகள் மற்றும் மனித நேயக் கட்டமைப்புகள் ஆகியவற்றின் சரியான இருப்பிடம் இலங்கை அரசுக்குத் தெளிவாக தெரிவிக்கப்பட்டிருந்த போதும் அவற்றின் மீது நடத்தப்பட்ட குண்டுவீச்சுகள் குறித்த குற்றச்சாட்டுகள், இந்தச் சட்டத்தை மீறுவதாக உள்ளன. அதே போல, முதல் பாதுகாப்பு வலயத்தில் நடந்ததைப் போன்று அய். நா. வளாகத்தின் மீது, அய். நா. வின் கொடி தெளிவாக ஏற்றப்பட்டிருந்த போதும், நடத்தப்பட்ட தாக்குதல்கள், இதே முடிவுக்கு வரச் சொல்கின்றன.

இ) பொதுமக்கள் மற்றும் பொதுக்கட்டமைப்புகள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் மீதான தடை

208) மருத்துவமனைகள் மற்றும் மனித நேயக் கட்டமைப்புகள் மீது நடத்தப் பட்ட தாக்குதல்களானவை, பொதுமக்கள் கட்டமைப்புகள் மீது நடத்தப்பட்ட சட்ட விரோத தாக்குதல்களாகவும் இருக்கின்றன. சில மருத்துவமனைகள் (புதுக் குடியிருப்பு, புதுமாத்தளன் மற்றும் முள்ளிவாய்க்கால்) ஆகியவை, விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களுக்கு சிகிச்சை அளிக்க ஒரு தனிப் பிரிவு வைத்திருந்த போதிலும், அக்கட்டமைப்பின் பொதுமக்கள் தன்மையை அது மாற்றி விடாது. இந்த மருத்துவமனைகள் தொடர்ச்சியாகத் தாக்கப்பட்டதானது, அவைதான் நேர டியாகக் குறி வைக்கப்பட்டன என்ற சந்தேகத்தை எழுப்புகின்றன.

3) மனிதநேய உதவிகள் மறுப்பு

அ) ஜெனிவா ஒப்பந்தத்தின் பொதுப்பிரிவு 3

209) நோய்வாய்ப்பட்டவர்கள் மற்றும் காயம் பட்டவர்களைக் கவனித்துப்

பராமரிக்க வேண்டும் என்ற கடப்பாட்டைப் பொருத்தவரையில், போரின் இறுதிக்கட்டங்களில், அடிப்படை மருத்துவப் பொருட்கள், குறிப்பாக அறுவைச்சிகிச்சைப் பொருட்கள், அய்.நா. வின் மனிதநேயக் குழுவினர் அல்லது செஞ்சிலுவைச்சங்கக் கப்பல்கள் ஊடாகப் போர்ப்பகுதிகளுக்கு வருவதன் மீது அரசு கூடுதலான கட்டுப்பாடுகளை விதித்தது. மாவட்டச் சுகாதாரச்செயலாளர் உயிர்காக்கும் அறுவைச்சிகிச்சைகளுக்குத் தேவையான மருந்துப்பொருட்களை வேண்டி பல்வேறு வழிகளில் விடுத்த வேண்டுகோள்களை அது நிராகரித்தது. தனது சுதந்திரமான, சார்பற்ற மனிதநேய உதவிகள் வழங்கும் பணிக்கு, உலகளவில் பெயர்பெற்ற செஞ்சிலுவைச் சங்கமும் காயம் பட்ட பொதுமக்களுக்கு உதவக்கூடிய தனது பணிகள் பெருமளவு பாதிக்கப்பட்டதைக் கண்டது. கப்பல்கள் மூலம் மருந்துப்பொருட்களை அளிப்பதற்கு அது அனுமதிக்கப்பட்டிருந்த போதும், அதில் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் மற்றும் காயம்பட்டவர்களை வெளியேற்றுவதற்காக அனுப்பப்பட்ட கப்பல்களுக்கு அருகே நடந்த துப்பாக்கிச் சூடுகள் மற்றும் குண்டு வீச்சுகள் ஆகியவற்றின் காரணமாக அதன் பணிகள் பாதிக்கப்பட்டன.

ஆ) மருத்துவ ஊழியர்கள், மனிதநேயப் பணியாளர்கள் மற்றும் கட்டுமானங்களுக்கு சிறப்புப்பாதுகாப்பு வழங்க வேண்டியதன் தேவை

210) குறிப்பு 2 இன் கீழ் விவாதிக்கப்பட்ட வகையில் மருத்துவமனைகள் மீது நடத்தப்பட்ட குண்டு வீச்சுகளுக்கு அப்பால் இந்தப்பிரிவின் கீழ் நடத்தப்பட்ட மீறல்கள் குறித்தும் தகுதிவாய்ந்த குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. குறிப்பாக அய்.நா. வின் 11–ஆம் மனிதநேயக்குழு, புது மாத்தளன் அருகே இருந்த அய்.நா. வின் கட்டமைப்பு, முதல் பாதுகாப்பு வலயம் மற்றும் அம்பலவான் பொக்கனையில் உணவு வழங்கல் வரிசைகள், போன்ற பல மனிதநேய உதவிக் கட்டமைப்புக்கள் இலங்கை இராணுவத்தின் குண்டுத்தாக்குதலுக்கு உள்ளாயின. இவற்றோடு செஞ்சிலுவைச் சங்கக் கப்பல்களுக்கு அருகிலும் குண்டுவீச்சுகள் நடந்தன.

இ) பொதுமக்களை பட்டினிப் போடுவது மற்றும் மனிதநேய உதவிகள் மறுக்கப்படுவது ஆகியவற்றின் மீதான தடை

211) போரின் ஒரு உத்தியாகப் பட்டினியைப் பயன்படுத்துவதை உலகளாவிய மனிதநேயச் சட்டம் தடை செய்கிறது. சார்பற்ற தன்மை கொண்ட மற்றும் எவ்விதப் பாகுபாடும் அற்ற முறையில் தரப்படுகின்ற மனிதநேய உதவிகளை தங்களுடைய கட்டுப்பாட்டின் கீழ் இருக்கக்கூடிய, உதவித் தேவைப்படும் பொதுமக்களுக்கு வழங்குவதற்கு, வேகமான மற்றும் தடையற்ற வழிகளை ஏற்படுத்த வேண்டியது அவசியம் என இப்பிரிவு கூறுகிறது. (விதி 53 மற்றும் 55, செஞ்சிலுவைச் சங்க ஆய்வு)

212) இந்தப்பிரிவின் கீழ் அரசு நடத்தியமீறல்கள் தொடர்பான தகுதிவாய்ந்த குற்றச்சாட்டுகள் கீழ்க்காண்பவற்றைச் சுட்டுகின்றன. *(1)* உணவு வழங்கலின் அளவைக் குறைப்பதை நியாயப்படுத்தவேண்டி, திட்டமிட்டும் வெளிப்படையாகவும் வன்னியில் இருந்த பொதுமக்களின் எண்ணிக்கையைக் குறைத்து மதிப்பிட்டமை. *(2)* போர்ப்பகுதிகளுக்குள் மனிதநேய உதவிக்குழுக்களும் கப்பல்களும் நுழைவதற்கு தடைகள் ஏற்படுத்தியமை மற்றும் *(3)* மனிதநேயப் பணியாளர்களின் அருகிலேயே, நன்றாக உணர்ந்தே தாக்குதல்களை நடத்தியமை. இதன் விளைவாக, பொதுமக்கள் தேவையான உணவு மற்றும் மருந்துப் பொருட்கள் கிடைக்காமல் தவித்தனர். குறிப்பாக இரண்டாவது பாதுகாப்பு வலயத்தில் இந்நிலை ஏற்பட்டது. தனது மாவட்ட உதவி நிர்வாக அதிகாரியின் அறிக்கைகள் வாயிலாக இதன் விளைவுகளை அரசு நன்கு அறிந்திருந்த போதும் இவ்வாறு நடந்தது.

இலங்கை அரசைப் பொருத்தவரையில் போரின் இறுதிக் கட்டங்களின் போதும் அதன் பிறகும், சொல்லப்போனால் அதற்கு முன்பும் கூட, வன்னியில் இருந்த பொதுமக்கள் மீது பரவலான அல்லது திட்டமிட்ட தாக்குதல்கள் நடத்தப்பட்டதை இந்தத் தகுதிவாய்ந்த குற்றச்சாட்டுகள் குறிக்கின்றன. பெரும் எண்ணிக்கையிலான இடம்பெயர்ந்த மக்கள் கூட்டத்தின் மீது நடத்தப்பட்ட பரவலான குண்டுவீச்சுத் தாக்குதல்கள், ஆயுதப்போருக்கு பின்னான காலத்தில் நடந்த சட்டவிரோத கொலைகள் மற்றும் காணாமல் போதல்கள், உணவு மற்றும் மருந்து மறுக்கப்பட்டமை, பெரும் எண்ணிக்கையில் சிறையில் அடைத்தது மற்றும் பாகுபாடுகளின் அடிப்படையில் நடத்தப்பட்ட மீறல்கள் உள்ளிட்ட பிற மீறல்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகவே இந்தத் தாக்குதல்கள் இருந்தன.

மனிதத்திற்கு எதிரான குற்றங்களைக் குறிக்கக்கூடிய குறிப்பான செயல்களைப் பொருத்த வரையில், தகுதிவாய்ந்த குற்றச்சாட்டுகளும் மீறல்களும், அரசானது கீழ்க்காணும் மனிதத்திற்கு எதிரான குற்றங்களைப் புரிந்திருப்பதை குறிப்பதாகக் குழு முடிவுசெய்கிறது.



4) போரில் பாதிக்கப்பட்டவர்களும் உயிர் பிழைத்தவர்களும் அனுபவித்த மனித உரிமை மீறல்கள்

213) இந்தப்பிரிவின் கீழ் அரசின் செயல்கள் போரின்போதும் அதற்குப்பின்பும் நடைபெற்றதால் இவற்றை உலகளாவிய மனித நேயச் சட்டம் மற்றும் உலகளாவிய மனித உரிமைச் சட்டம் ஆகிய இரண்டின் கீழும் குழு விவாதிக்கிறது.

அ) ஜெனிவா ஒப்பந்தத்தின் பொதுப்பிரிவு 2

214) 'தன்மதிப்பின்மீது நடத்தப்படும் தாக்குதல்கள், குறிப்பாக, அவமானப் படுத்துதல் மற்றும் தரக்குறைவாக நடத்துதல்' மீதான தடையைப் பொருத்த வரையில், இராணுவத் தடுப்புக்காவலில், கொலை செய்யப்படுவதற்கு முன்போ அல்லது தடுப்புக்காவலில் இருக்கும் போதோ, பெண்கள் மற்றும் சிறுமிகள் மீது, குறிப்பாக, விடுதலைப்புலிகள் எனச் சந்தேகிக்கப்பட்டவர்கள் மீது, வன்புணர்வு அல்லது பாலியல் வன்முறைச் செயல்களில் இலங்கை இராணுவ உறுப்பினர்கள் ஈடுபட்டிருக்கக்கூடும் என்பது இந்தப் பிரிவின்கீழான மீறல்கள் குற்றச்சாட்டுகளை அடையாளம் காட்டுகிறது. 'சேனல் 4' காணொளி மற்றும் நிழற்படங்களில் காணப்பட்ட இறந்துபோன பெண் போராளியின் படங்கள் மற்றும் இலங்கை இராணுவத்தினரின் தரக்குறைவான பின்னணிக்குரலுடன் காட்டப்பட்ட பெண்களின் உடைகளற்ற உடல்கள் குறித்த காணொளியும் கொலை செய்யப்படுவதற்கு முன்போ அல்லது பின்போ வன்புணர்வு அல்லது பாலியல் வன்முறைகள் நடத்தப்பட்டிருக்க வேண்டும் என்ற கேள்வியை உறுதியாக எழுப்புவதைக் குழு கவனத்தில் கொண்டுள்ளது. இடம்பெயர்ந்த மக்களில் இருந்த பெண்களை, விசாரணை நடைமுறையின்போது, தரக்குறைவாக நடத்தியது குறித்தும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

ஆ) வலுக்கட்டாயமாகக் காணாமல் போகச்செய்தல் மீதான தடை

215) வலுக்கட்டாயமாகக் காணாமல் போகச்செய்தலை உலகளாவிய மனிதநேயச்சட்டம் தடைசெய்துள்ளது. (விதி 98, செஞ்சிலுவைச்சங்க ஆய்வு) இலங்கை இராணுவம் மற்றும் துணைஆயுதக்குழுக்கள் ஆகியவை பல இடங்களில் விசாரணை நடைமுறையின் போதோ அல்லது சரணடைந்தபோதோ, தனி நபர்களைத் தனித்து வெளியேற்றியதும், பின்னர் இன்றுவரையில் அவர்களைப்பற்றி எந்தத் தகவலும் இல்லாமல் போனதும் இந்தப்பிரிவின்கீழ் மீறல்கள் நடை பெற்றதற்கான குற்றச்சாட்டுகளை உறுதிசெய்கின்றன. இந்த விசயங்கள், கற்ற பாடங்கள் மற்றும் இணக்கத்திற்கான ஆணையத்தின் விசாரணையின் போதும் எடுத்துவைக்கப்பட்டுள்ளன.

இ) சுதந்திரமான நடமாட்டம் மறுக்கப்பட்டவர்களின் குறைந்தபட்ச தேவைகளை கவனிக்க வேண்டியதன் அவசியம்

216) தடுத்து வைக்கப்பட்டவர்களுக்குத் தேவையான உணவு, நீர், உடை, உறைவிடம் மற்றும் மருத்துவக் கவனிப்புகளை வழங்கவேண்டியது அவசியம் என உலகளாவிய மனிதநேயச் சட்டம் கோருகிறது. (விதி 118 – செஞ்சிலுவைச் சங்க ஆய்வு) குறைந்தபட்சத் தேவைகளைத் தர இயலாத சூழலிலேயே இடம்பெயர்ந்த மக்களை இலங்கை அரசு வைத்திருந்தது என்பது ஆயுதப்போரின் போது இந்தப் பிரிவின்கீழ் நடத்தப்பட்ட மீறல் குற்றச்சாட்டுகளை உறுதி செய்கிறது.

ஈ) இறந்துபோனவர்கள் மற்றும் காணாமல் போனவர்கள் குறித்த தேவைகள்

217) இறந்துபோனவர்களைத் தேடி, அவர்களது உடல்களை மதிப்புடன் நடத்தி, கல்லறைகளின் இருப்பிடத்தைப் பதிவு செய்து, காணாமல் போனவர்களின் நிலைகுறித்து அவர்களது குடும்பங்களுக்குத் தெரிவிக்கத்

தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டியது அவசியம் என உலகளாவிய மனிதநேயச்சட்டம் கோருகிறது. (சட்டங்கள் 112, 113, 115, 116,117 – செஞ்சிலுவைச் சங்க ஆய்வு)

218) இறந்துபோன பொதுமக்கள் அல்லது போராளிகளைத் தேடுவதற்கான நடைமுறை முயற்சிகள் அனைத்தையும் அரசு மேற்கொள்ளவில்லை என்ற நிலையில், இந்தப்பிரிவின் கீழான மீறல் குற்றச்சாட்டுகள் உறுதி செய்யப்படுகின்றன. பெரும்பாலான இந்த மக்கள், வன்னியில், குறிக்கப்படாத கல்லறைகளில், புதைக்கப்பட்டிருந்தனர். சிலர் விசாரணை மற்றும் சரணடையும் நடைமுறைகளில் காணாமல் போயிருக்கக்கூடும். இது குறித்து, கற்ற பாடங்கள் மற்றும் இணக்கத்திற்கான ஆணையத்தின் முன் எழுப்பப்பட்டுள்ளது. பெரும் எண்ணிக்கையிலான முன்னாள் போராளிகள் மற்றும் பொதுமக்களை, பாதுகாக்கப்பட்ட முகாம்களில் தடுத்து வைத்து, அவர்களின் நிலைகுறித்து அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்குத் தெரிவிக்காமலும், அவர்கள் தங்கள் குடும்பத்தினரோடு மீண்டும் இணைவதற்கு ஒரு கால வரையறையுடன் கூடிய வழிமுறையை ஏற்படுத்தாமலும் அரசு இருந்தது. 'இறந்தவர்களின் உடல்கள் மரியாதையான முறையில் அடக்கம் செய்யப்பட வேண்டும். அவர்களது கல்லறைகள் மதிக்கப்பட்டு சரியாகப் பராமரிக்கப்பட வேண்டும்' என்ற உலகளாவிய மனிதநேயச் சட்ட விதியைக் குழு நினைவு கூர்கிறது (விதி 115, செஞ்சிலுவைச் சங்க ஆய்வு). ஆடைகள் அற்ற பெண்களின் உடல்கள் உட்பட இறந்தவர்களின் உடல்களை இலங்கை இராணுவத்தினர் மிகவும் மரியாதை அற்ற முறையில் நடத்துவதைக் காட்டக்கூடிய காணொளிகளும், நிழற்படங்களும் அளிக்கப்பட்டுள்ளன.

அழித்தொழிப்பிற்கு இலக்காக்கப்படும் மக்கள் கூட்டத்தின் எண்ணிகையானது, 'குறிப்பிடத்தகுந்த' அளவிற்கு இருக்க வேண்டும். போரின் இறுதி மாதங்களில் பாதுகாப்பு வலயங்களில் இருந்த பொதுமக்கள் மீது திணிக்கப்பட்ட சூழல்களானது, அந்த மக்கள் கூட்டத்தின் ஒரு குறிப்பிடத்தகுந்த பகுதியினை அழிப்பதை நோக்கமாகக் கொண்டு திட்டமிடப்பட்டிருந்தது என்பது, அழித்தொழிப்பு குறித்த மனிதத்திற்கு எதிரான குற்றத்தைக் காண்பதற்குத் தகுதிவாய்ந்த குற்றச்சாட்டுகள் துணைநிற்கின்றன.

உ) உயிர்ப் பாதுகாப்பு, உடல்சார்ந்த பாதுகாப்பு மற்றும் மதிப்பு குறித்த தனிநபர் உரிமைகள்

219) உயிர் வாழ்வதற்கான உரிமைகள் அலட்சியமாக மறுக்கப்படுவதற்கு எதிரான பாதுகாப்பையும் தனிநபர்களின் உடல்ரீதியான பாதுகாப்பிற்கான உரிமையை உறுதி செய்தும் உலகளாவிய மனித உரிமைச் சட்டம் பாதுகாப்பினை வழங்குகிறது. (குடிமை மற்றும் அரசியல் உரிமைகளுக்கான உலகளாவிய ஒப்பந்தம் – பிரிவுகள் 6 மற்றும் 9) இதனோடு நெருங்கிய தொடர்புடையதாக சித்திரவதைகள் மற்றும் கொடூரமான மனிதத்தன்மையற்ற மற்றும் தரக்குறைவான நடத்தைகள் அல்லது தண்டனைகள் ஆகியவற்றிற்கு எதிரான பாதுகாப்பும் உறுதி செய்யப் பட்டுள்ளது. (குடிமை மற்றும் அரசியல் உரிமைகளுக்கான உலகளாவிய ஒப்பந் தம் – பிரிவு 7 மற்றும் சித்திரவதைகளுக்கு எதிரான ஒப்பந்தம்) பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறைகள் மற்றும் அவமானங்கள் ஆகியவற்றிற்கு எதிரான பாதுகாப்பையும் உள்ளடக்கியதாகவே இந்த உரிமைகள் இருக்கின்றன.

220) அரசின் அதிகாரம் மற்றும் கட்டுப்பாட்டிற்குள் மாணிக் பண்ணையில் இருந்த தனிநபர்கள், அவர்கள் வந்த, மற்றும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட தொடக்கக்காலக்கட்டங்களில், போதுமான உணவு, நீர் மற்றும் மருத்துவப் பராமரிப்புகள் வழங்கப்படாததினால் ஏற்பட்ட உயிர் இழப்புகளைத் தடுத்திருக்கலாம் என்ற அடிப்படையில் இந்தப்பிரிவின் கீழான மீறல் குற்றச்சாட்டுகள் உறுதி செய்யப்படுகின்றன. முகாம்களில் இருந்த இடம்பெயர்ந்த மக்களுக்கு உடல்ரீதியான பாதுகாப்பை அரசு உறுதியளிக்கவில்லை. துணை ஆயுதக்குழுவினர் முகாம்களுக்குள் நுழைவதும், தனி நபர்களை அடையாளம் கண்டு வெளியேற்றுவதைத் தொடர்வதும் அரசின் அனுமதியுடனேயே நடந்தது. கொடூரமான, மனிதத்தன்மையற்ற மற்றும் தரக்குறைவான நடத்தைகள், வன்புணர்வு அல்லது சித்திரவதைகள் ஆகியவை குற்றவியல் விசாரணை பிரிவு அல்லது பயங்கரவாத விசாரணைப் பிரிவு ஆகியவற்றின் விசாரணைகளின் போது நடைபெற்றிருக்கக்கூடும்.

பொதுமக்கள் எவ்வித சரியான காரணமுமின்றி, அதிகாரபூர்வமற்ற முறையில், சட்ட அடிப்படைகள் இன்றி சிறைவைக்கப்படுவது என்பது, மனிதத்திற்கு எதிரான குற்றமாகும். இலட்சக்கணக்கான பொதுமக்கள் மாணிக் பண்ணையில் எவ்வித சரியான காரணமுமின்றிச் சிறைவைக்கப்பட்டது என்பது, மனிதத்திற்கு எதிரான குற்றமாகக் காண்பதற்குத் தகுதிவாய்ந்த குற்றச் சாட்டுகள் துணை நிற்கின்றன.



ஊ) காரணமற்ற தடுப்புக்காவல் மீதான தடை

221) காரணமற்ற மற்றும் சட்ட விரோதமான தடுப்புக்காவல்களிலிருந்து அனைத்து மக்களுக்கும் விடுதலையை, உலகளாவிய மனித உரிமைச்சட்டம் உறுதிப்படுத்துகிறது. (குடிமை மற்றும் அரசியல் உரிமைகளுக்கான உலகளாவிய ஒப்பந்தம் – பிரிவு 9) சரியான காரணம் மற்றும் சட்டபூர்வத் தன்மை ஆகியவை, உள்நாட்டு மற்றும் உலகளாவியச் சட்டங்கள் ஆகிய இரண்டின் அடிப்படையிலும், அதன் பொருத்தப்பாடு மற்றும் தேவைகளைப்பொருத்து கணக்கிடப்படுகிறது. கைது செய்யப்பட்ட எவர்க்கும், அவர்கள் கைது செய்யப்பட்டதற்கான காரணங்களும், ஏதேனும் குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் இருப்பின் அவையும் தெரிவிக்கப்பட வேண்டும். குற்றவியல் குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட அல்லது தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட எவரும், ஒரு நீதித்துறை அதிகாரியின் முன் நிறுத்தப்படவேண்டும். ஒரு நியாயமான காலக்கட்டத்திற்குள் விசாரணைகளை நடத்தவும் விடுதலை செய்யப்படவுமான உரிமைகள் அவர்களுக்கு உண்டு. விசாரணைகளுக்காகக் காத்திருப்பவர்கள், பொதுவாக, தடுப்புக்காவலில் வைக்கப்படக்கூடாது.

222) காரணமற்ற தடுப்புக்காவல்கள் பெரும்பாலும் நீண்ட காலங்களுக்கு அதிலும் பெரும் எண்ணிக்கையில் மற்றும் வழக்கறிஞரையோ அல்லது நீதிமன்றத்தையோ அணுக இயலாத சூழலில் வைத்திருக்கும் திட்டமிட்ட நடைமுறைகள் குறித்துத் தகுதி வாய்ந்த குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. மாணிக் பண்ணை போன்ற இராணுவப் பாதுகாப்பில் இருந்த முகாம்களில், பெரும் எண்ணிக்கையிலான இடம்பெயர்ந்த மக்களைத் தடுத்துவைத்திருந்ததையும் இது உள்ளடக்கும். ஏறத்தாழ 2,90,000 மக்களின் தடுப்புக் காவல், நீடித்த மற்றும் கடுமையாக நடைமுறைப்படுத்தப்பட்ட கட்டுப்பாடுகளின்கீழ், நியாயமான பாதுகாப்பு நடைமுறைகளின் அவசியத்திற்கு அப்பால் நீடித்தது. ஏப்ரல் முதல் செப்டம்பர் வரையிலான காலக்கட்டத்தில் இடம்பெயர்ந்த மக்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாக, எவ்வித காரணமுமின்றி, தடுப்புக்காவலில் வைக்கப் பட்டிருந்தனர். அத்துடன், விடுதலைப்புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் என குற்றம் சாட்டப்பட்டவர்கள் ஏறத்தாழ 12,000 பேர் தனியான இடங்களில் காரணமற்ற தடுப்புக்காவலில், செஞ்சிலுவைச் சங்கத்தின் பாதுகாப்பு மற்றும் தொடர்புகள் இன்றி வைக்கப்பட்டிருந்தனர். இவ்வாறு தடுப்புக்காவலில் வைக்கப் பட்ட பெரும்பான்மையான மக்கள் மீது எவ்வித சட்டபூர்வக் குற்றச்சாட்டு களும் வைக்கப்படவில்லை. அவ்வாறு குற்றம் சாட்டப் பட்டவர்களும்கூட விசாரணைக்காகத் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பது ஏறத்தாழ ஒரு பொதுவான விதியாக இருந்தது.

எ) உணவு, நீர், உடை, உறைவிடம் மற்றும் பிற சுகாதார உரிமைகள்

223) அனைத்து மக்களுக்கும் தேவையான உணவு, உடை மற்றும் உறை விடத்திற்கான உரிமையை உலகளாவிய மனித உரிமைச்சட்டம் உறுதிப் படுத்துகிறது. (பொருளாதார, சமூக மற்றும் பண்பாட்டு உரிமைகளுக்கான உல களாவிய ஒப்பந்தம் – பிரிவு 11).'இந்த உரிமையை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும், சுதந்திரமான ஒப்புதலின் அடிப்படையில் இதற்கு உலக நாடுகளின் ஒத்துழைப்பைப் பெற வேண்டியதன் முக்கியத்துவம்' பற்றி அரசுகள் உறுதியுடன் இருக்க வேண்டும். கூடுதலாக, அனைத்து மனிதர்களும், சாத்தியப்படக் கூடிய அளவிளான உயர்தர உடல் மற்றும் உளவியல் ஆரோக்கியத்தை அனுபவிக்கும் உரிமை பெற்றவர்கள். (பொருளாதார, சமூக மற்றும் பண்பாட்டு உரிமைகளுக்கான உலகளாவிய ஒப்பந்தம் – பிரிவு 12). சுகாதார நிலைகளை மேம்படுத்தவும், நோய்களைத் தடுக்கவும், தேவையான சிகிச்சை அளிக்கவும், தேவையான மருத்துவக் கவனிப்பை அளிக்கவும் உரிய அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுக்க வேண்டும்.

224) போர்ப் பகுதியிலிருந்து வரக்கூடிய, தாங்கள் போதுமான கவனிப்பை நல்க வேண்டிய, மக்களின் உண்மையான எண்ணிக்கையை அரசு அறிந்திருந்திருக்க வேண்டும். ஆனால் வெளிப்படையாக குறிக்கப்பட்ட எண்ணிக்கையைக் காட்டிலும் உண்மையான எண்ணிக்கை மிக அதிகமாக இருந்தது என்பது இந்தப் பிரிவின் கீழ் அரசு செய்த மீறல்கள் குறித்த குற்றச்சாட்டுகளை உறுதிப் படுத்துகின்றன. முன்பே தேவையானவற்றைத் தராததோடு, அவர்களின் தேவைகள் தெரிய வந்த பின்னும் சூழலைச் சரி செய்ய வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை. மாணிக் பண்ணை மற்றும் பிற முகாம்களை இராணுவப் பாதுகாப்பின் கீழ் வைத்திருந்ததன் மூலமும், மக்களை விடுவிக்க மறுத்ததன் மூலமும், மக்கள் தங்கள் உறவினர்களிடம் அடைக்கலம் புகுவதையும் அது தடுத்தது. போருக்குப் பிறகு, மாணிக் பண்ணையில், தவிர்த்திருக்கக்கூடிய சாவுகளின் எண்ணிக்கை மற்றும் நோய்கள் மற்றும் மனிதத் தன்மையற்ற சூழல்கள் ஆகியவை இந்த மீறல்கள் குறித்த குற்றச்சாட்டுகளை உறுதி செய்கின்றன.

ஏ) கூடுவதற்கும், ஒன்றிணைவதற்குமான சுதந்திரம்

225) கூடுவதற்கும் ஒன்றிணைவதற்குமான சுதந்திரத்திற்கும் உலகளாவிய மனித உரிமைச் சட்டம் உறுதியளிக்கிறது. (குடிமை மற்றும் அரசியல் உரிமைகளுக்கான உலகளாவிய ஒப்பந்தம் – பிரிவுகள் 21, 22). தேசப் பாதுகாப்பு, பொது பாதுகாப்பு, அல்லது பொது ஒழுங்கு, பொது ஒழுக்கத்தைக் காத்தல், அல்லது பிறரின் உரிமைகள் மற்றும் சுதந்திரத்தைக் காத்தல் ஆகியவற்றிற்காக, அவசியமெனில், சட்டப்படியான அறிவிப்பின் மூலம் இந்த உரிமைக்குக் கட்டுப்பாடு விதிக்கலாம். ஆனால் அவ்வாறு விதிக்கப்படும் எந்தக் கட்டுப்பாடும் அதன் பொருத்தப்பாடு குறித்த சோதனையைக் கடக்க வேண்டும்.

226) இடம் பெயர்ந்த மக்கள் விசாரணை மய்யங்களிலோ அல்லது மாணிக் பண்ணையிலோ, பன்னாட்டு அமைப்புகள் அல்லது அரசு சாரா நிறுவனங்களைச் சந்திக்க விதிக்கப்பட்டக் கட்டுப்பாடுகள் உட்பட, பொதுமக்கள் குழுவாகக் கூடுவதற்கும் ஒன்றிணைவதற்குமான வாய்ப்புகள் தொடர்ந்து அடக்கப்பட்டு வந்துள்ளன என்பதே இந்தப் பிரிவின் கீழான தகுதி வாய்ந்த குற்றச்சாட்டுகளை மெய்ப்பிப்பதாகும். இந்தக் கட்டுப்பாடுகள், பொதுப்பாதுகாப்புக்கு ஏற்படுத்தக் கூடிய பாதிப்புகள் குறித்த நியாயமான கணிப்புக்குப் பொருத்தமற்றதாக இருக்கிறது. அத்துடன், போரில் உயிர் பிழைத்தவர்கள் வெளி உலகத்தோடு வைத்துக் கொள்ளக்கூடிய தொடர்புகளைக் கட்டுப்படுத்தும் நோக்கம் கொண்டதாக உள்ளது.



வன்னியில் இருந்த தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளை ஆதரித்தார்கள் என்ற அரசின் அனுமானத்தின் அடிப்படையில், அவர்களுக்கு எதிராக இனம் மற்றும் அரசியல் அடிப்படையில் நடத்தப்பட்ட செயல்கள், மனிதத்திற்கு எதிரான குற்றமாகக் காண்பதற்குத் தகுதிவாய்ந்த குற்றச்சாட்டுகளுக்குத் துணைநிற்கின்றன.

(ஐ) பெண்களின் உரிமைகள்

227) எவ்விதப் பாகுபாடுமின்றி அனைத்துவிதக் குடிமையியல், அரசியல், பொருளாதார, சமூக மற்றும் பண்பாட்டு உரிமைகளை பெண்கள் அனுபவிப்பதற்கான சமஉரிமையை உறுதிப் படுத்தவேண்டிய கடப்பாடு உலகளாவிய மனித உரிமைச் சட்டத்தின் கீழ் அரசுகளுக்கு உண்டு. (குடிமை மற்றும் அரசியல் உரிமைகளுக்கான உலகளாவிய ஒப்பந்தம் – பிரிவு 2 (1), பிரிவு 3 : பொருளாதார, சமூக மற்றும் பண்பாட்டு உரிமைகளுக்கான உலகளாவிய ஒப்பந்தம் – பிரிவு 2 (1), பிரிவு 3 : பெண்களுக்கு எதிரான அனைத்துவிதமான பாகுபாடுகளையும் களைவது குறித்த தீர்மானங்கள்) இந்தக் கடப்பாடானது பெண்களுக்கு எதிரான பாகுபாடுகளைக் களைவதற்கான அனைத்துவித நடவடிக்கைகளையும் எடுப்பதற்கான கடமையையும் உள்ளடக்கியது. (பெண்களுக்கு எதிரான அனைத்துவிதமான பாகுபாடுகளையும் களைவது குறித்த தீர்மானங்கள் – பிரிவு 2 (உ)) 'ஒரு பெண்மீது அவர் பெண் என்பதால் காட்டப்படும் வன்முறை அல்லது ஒரு பெண்ணைப் பொருத்தமற்ற முறையில் பாதிக்கும்

அரசின் அணுகுமுறையை விமர்சித்ததற்காகவோ, விடுதலைப்புலிகள் மீது அனுதாபத்துடன் இருந்ததாக அரசு கருதியதாலோ, பெரும் எண்ணிக்கையிலான மனிதர்கள் போரின் இறுதிக் கட்டங்களின் போதும் அதற்குப் பிறகும் காணாமல் போயினர். இது, மனிதத்திற்கு எதிரான குற்றமாகக் காண்பதற்கு தகுதி வாய்ந்த குற்றச்சாட்டுகள் துணைநிற்கின்றன.



வன்முறை மற்றும் மறைமுகமான உடல் உளவியல் அல்லது பாலியல் தீங்கு அல்லது துன்பம் ஏற்படுத்தக்கூடிய செயல்கள்' என்பதே பாலியல் அடிப்படையிலான வன்முறை அல்லது பெண்களுக்கு எதிரான பாகுபாடு என்பதை குறிக்கிறது. (பெண்களுக்கு எதிரான அனைத்துவிதமான பாகுபாடுகளையும் களைவது குறித்த தீர்மானங்கள் – பொதுவான பரிந்துரைகள் 19) இப்படியான மீறல்கள் ஒரு பொது அமைப்பினாலோ அல்லது தனி நபர்களாலோ மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் அத்தகைய மீறல்களைத் தடுப்பதும், விசாரிப்பதும், வன்முறைச் செயல்களுக்கு தண்டனை அளிப்பதும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்ட ஈடு தருவதும் அரசுகளின் கடமையாகும்.

228) மாணிக் பண்ணையில் மிக மோசமாக நடந்த வன்புணர்வுகள் உட்பட பெண்கள் மீது பாலியல் அடிப்படையில் நடத்தப்பட்ட வன்முறைகள், முகாம்களிலும் மறுகுடியமர்வு நடைமுறைகளின் போதும் நடத்தப்பட்டவை ஆகியவை விசாரிக்கப்படவில்லை. இவையே இந்த உரிமைகளை மீறியதற்கான தகுதி வாய்ந்த குற்றச்சாட்டுகளை உறுதிசெய்கின்றன. பாலியல் அடிப்படையிலான வன்முறைகளை ஊக்குவிக்கும் சூழல் நிறைந்த முகாமின் நிலைகளை மாற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க அரசு தவறிவிட்டது. கணவனை இழந்த பெண்கள், ஒற்றைப்பெண்களால் வழிநடத்தப்படும் குடும்பங்கள், இளம் தாய்மார்கள், மனைவிகள் மற்றும் தடுத்து வைக்கப்பட்டவர்கள் மற்றும் காணாமல் போனவர்களின் மனைவிகள் மற்றும் தாய்மார்கள், பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறைகளில் பிழைத்தவர்கள் விடுதலைப்புலிகள் எனச் சந்தேகிக்கப்படுபவர்கள் மற்றும் முன்னாள் பெண் போராளிகள் ஆகியோர் உள்ளிட்ட போரினால் பாதிக்கப்பட்ட, எளிதில் வன்முறைகளுக்கு பலியாகக்கூடிய பெண்களின் தேவைகளை ஈடுசெய்வதற்கான சிறப்பு நடவடிக்கைகளும் இருக்கவில்லை.

(ஒ) குடும்பங்களுக்கான சிறப்புப் பாதுகாப்பு

229) உலகளாவிய உரிமைச் சட்டமானது குடும்பம் என்ற அமைப்பிற்குக் குறிப்பான முக்கியத்துவத்தை அளிக்கிறது. அதை பாதுகாக்கவும் வளப்படுத்தவுமான கடப்பாடு அரசுக்கு உள்ளது. (குடிமை மற்றும் அரசியல் உரிமைகளுக்கான உலகளாவிய ஒப்பந்தம் – பிரிவுகள் 17 மற்றும் 23. பொருளாதார, சமூக மற்றும் பண்பாட்டு உரிமைகளுக்கான உலகளாவிய ஒப்பந்தம் – பிரிவு 10) போர்ப் பகுதிகளிலிருந்து தப்பிக்கும் போதும், விசாரணை நடவடிக்கைகளின் போதும், மருத்துவமனைகள் மற்றும் முகாம்களுக்கு மாற்றப்பட்டபோதும், அரசின் காவலில் இருந்த குடும்ப உறுப்பினர்கள், குடும்பம் என்ற அமைப்பைப்பற்றிக் குறைந்தபட்ச அக்கறையும் இன்றி பிரிக்கப்பட்டு, தனிப்பட்ட குடும்ப உறுப்பினர்களுடன் தொடர்பு கொள்ளவோ அல்லது தங்களின் இருப்பிடங்கள் குறித்த தகவல்களை அவர்களுக்கு அளிக்கவோ மறுக்கப்பட்டமையானது, இந்தக் கடமைகள் மீறப்பட்டதற்கான தகுதிவாய்ந்த குற்றச்சாட்டுகள் ஆகும். எளிதில் பாதிப்பிற்கு உள்ளாகக்கூடிய குடும்பங்கள் குறிப்பாகப் பெண்கள் தலைமையேற்று நடத்தும் குடும்பங்களைப் பாதுகாப்பதற்கான சிறப்பான நடவடிக்கைகள் என்று எதுவும் எடுக்கப்பட்டிருப்பின், அவை மிகக் குறைவானதே. மேலும், பிரிந்த குடும்பங்களை இணைக்கும் செயல்பாடுகளில் மிகவும் தேர்ந்தவர்களான உலகளாவிய செஞ்சிலுவைச் சங்கம், ஒரு மாற்றினை வழங்குவதற்குரிய வாய்ப்பினையும் அரசு வேண்டுமென்றே மறுத்துவிட்டது.

(ஓ) குழந்தைகளுக்கான சிறப்புப் பாதுகாப்பு

230) குழந்தைகள் மிக எளிதாக பாதிக்கப்படக்கூடும் என்ற நிலையை குறிப்பாகக் கருத்தில் கொண்டு அவர்களை பாதுகாப்பதற்கான சிறப்பு நடவடிக்கைகளை அரசு எடுக்கவேண்டும் என உலகளாவிய மனிதஉரிமைச் சட்டம் கோருகிறது. (குடிமை மற்றும் அரசியல் உரிமைகளுக்கான உலகளாவிய ஒப்பந்தம் –

பிரிவு 24. பொருளாதார, சமூக மற்றும் பண்பாட்டு உரிமைகளுக்கான உலகளாவிய ஒப்பந்தம் – பிரிவு 10. குழந்தைகளின் உரிமைகளுக்கான தீர்மானங்கள்) ஆதரவற்ற குழந்தைகளைப் பொருத்தவரை, அவர்களது பெற்றோர்களோ அல்லது பாதுகாவலர்களோ இல்லாத நிலையில், மிக எளிதில் பாதிப்பை உண்டாக்கும் நிலையில் அவர்களின் சூழல் இருப்பதால், அரசின் இந்தக் கடப்பாடு அவர்களைப் பொருத்தவரையில் மேலும் அதிகமாகிறது. விசாரணை மய்யங்களிலும், மாணிக் பண்ணையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தொடக்கக்காலங்களிலும், இது தொடர்பான சிறப்பு நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படவில்லை என்பது இந்த உரிமைமீறலுக்கான தகுதிவாய்ந்த குற்றச்சாட்டாகும். மேலும், சரணடைந்தவர்களில் இருந்த குழந்தைகள், மறுவாழ்வு என்ற பெயரில், எவ்வித விசாரணையும் இன்றி அரசின் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் பல்வேறு மறுவாழ்வு மையங்களுக்கு இடையே தொடர்ந்து மாற்றப்பட்டனர். இதனால் அவர்கள் எங்கு இருக்கிறார்கள் என்பதைக் கண்டறிவதும், குடும்பத்தினர் அவர்கள் சந்திப்பதும் கடினமாகியது.

(ஒள) நீதிமன்றங்களுக்குச் செல்லும் வாய்ப்பு உள்ளிட்ட சரியான நிவாரணத்திற்கான உரிமை

231) மனித உரிமை மீறல்கள் நடத்தப்பட்டது பற்றி வைக்கப்படும் குற்றச் சாட்டுகளுக்கு ஒரு சரியான நிவாரணம் அளிக்கும் கடமை அரசுக்கு இருப்பதை உலகளாவியச் சட்டம் உறுதிப்படுத்துகிறது. (குடிமை மற்றும் அரசியல் உரிமைகளுக்கான உலகளாவிய ஒப்பந்தம் – பிரிவு 2) உயிர் வாழ்வதற்கான உரிமை மற்றும் உடல் ரீதியான பாதுகாப்பு குறித்த உரிமை ஆகியவை மீறப்பட்டது பற்றி மிக மோசமான குற்றச்சாட்டுகள் இருப்பின், அவற்றிற்கான நிவாரணம் என்பது, அக் குற்றச்சாட்டினை விசாரித்து, அதற்குப் பொறுப்பான தனிநபர்களுக்குத் தண்டனை அளிப்பதையும் உள்ளடக்கியது. நேர்மையான மற்றும் சுதந்திரமான நீதிமன்றங்களை அணுகும் வாய்ப்பு தடுத்து வைக்கப்பட்டிருப்பதன் சட்டபூர்வத் தன்மையை சோதிப்பதற்கான வாய்ப்பு, மீறல்களுக்கு நிவாரணம் வழங்குவது ஆகியவை இந்தப் பாதுகாப்பில் முக்கிய கூறுகளாகும். (குடிமை மற்றும் அரசியல் உரிமைகளுக்கான உலகளாவிய ஒப்பந்தம் – பிரிவுகள் 2, 9, 14, மற்றும் 26) இந்தக் கடப்பாடு குறித்து அத்தியாயம் அய்ந்தில் விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளது.

232) போரின் இறுதிக் கட்டங்களில் மீறல்கள் குறித்து வைக்கப்பட்ட குற்றச் சாட்டுகளில், மிக க்குறைந்த எண்ணிக்கையிலானவையே விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. அவையும், திறன் மற்றும் சுதந்திரமான செயல்பாடு குறித்த உலகளாவிய தரங்களோடு எந்த வகையிலும் ஒத்துப்போவதாக இல்லை. இவையே இந்தச் சட்டங்களின் கீழான மீறல்கள் குறித்த தகுதிவாய்ந்த குற்றச் சாட்டுகள் ஆகும். பாதிக்கப்பட்டவர்கள் நீதிமன்றங்களை அணுகும் வாய்ப்பு என்பது திட்டமிட்டுத் தடுக்கப்பட்டது அல்லது சட்டப்படி இல்லாமல் ஆக்கப் பட்டது. மேலும் நடைமுறையிலும் கட்டுப்படுத்தப்பட்டது. நெருக்கடி நிலைச் சட்டங்கள் மற்றும் வரையறைகளின் கீழ் அரசு அதிகாரிகள் தங்களது அதிகாரபூர்வ அதிகாரத்தைச் செயல்முறைப்படுத்துவது குறித்து நீதிமன்றங்களை அணுகுவது என்பது தனிநபர்களுக்கு ஏறக்குறைய இல்லாமல் ஆனது. இந்த அதிகாரங்களின் கீழ் தடுத்து வைக்கப்பட்டவர்கள் குறித்து, அவர்கள் தடுத்து வைக்கப்பட்டதன் நியாயத்தை மறுபரிசீலனை செய்வதற்கான குறைந்தபட்ச அதிகாரங்களையே நீதிமன்றங்கள் கொண்டிருந்தன.

5) போர் நடைபெற்ற இடங்களுக்கு வெளியே நடத்தப்பட்ட மனிதஉரிமை மீறல்கள்

(அ) காணாமற் போக்குதல் மீதான தடை

233) அரசு தரப்பினரால் மேற்கொள்ளப்படும் எந்தவகையான காணாமல் போக்கப்படுதலும் உலகளாவிய மனிதஉரிமைச் சட்டத்தின்படி தடைசெய்யப்

இலங்கையில் நடந்த போரின் இறுதிக் கட்டங்களும் அதற்குப் பிறகும் ஆன நிலை என்பது, இலங்கை அரசு மற்றும் விடுதலைப் புலிகள் ஆகிய இருதரப்பினருமே உலகளாவிய மனிதநேயச் சட்டம் மற்றும் மனித உரிமைச் சட்டங்களைப் பரவலாக மீறியதையும், அவற்றில் சில போர்க்குற்றங்கள் மற்றும் மனிதத்திற்கு எதிரான குற்றங்களாக இருந்ததையும் கண்டது. போர் புரிந்த இருதரப்பினரும் உலகளாவிய வரையறைகள் மீது அக்கறையற்றுச் செயல் பட்டதின் காரணமாக, 3 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டனர்.

பட்டுள்ளது. ஒரு தனி மனிதரின் சுதந்திரம் மற்றம் பாதுப்பிற்கான உரிமை, (குடிமை மற்றும் அரசியல் உரிமைகளுக்கான உலகளாவிய ஒப்பந்தம் – பிரிவு 9) சித்திரவதைகள் அல்லது கொடூரமான, மனிதத் தன்மையற்ற அல்லது தரம் தாழ்ந்த முறையில் நடத்தப்படுதல் அல்லது தண்டனைகள் ஆகியவைகளுக்கு ஆட்படாமல் இருக்கும் உரிமை (குடிமை மற்றும் அரசியல் உரிமைகளுக்கான உலகளாவிய ஒப்பந்தம் – பிரிவு 7) மற்றும் மனிதநேயம் மற்றும் மாண்புடன் நடத்தப்படவேண்டும் என்பது குறித்துத் தடுப்புக்காவலில் உள்ளவர்களுக்கான உரிமை ஆகியவற்றை மீறுவதாகவே காணாமல் போக்கப்படும் செயல் கருதப்படும். அது சரியானபடி தீர்க்கப்படும் வரை தொடர்ந்த மனிதஉரிமை மீறலாகவே கருதப்படும்.

போர்க் காலங்களிலும் அமைதிக் காலங்களிலும் தனிப்பட்ட மாண்பினைக் காப்பதற்காக வடிவமைக்கப்பட்ட உலகளாவியச் சட்டங்களின் மொத்தப் பயனையுமே மிக மோசமாக அவமானப் படுத்துவதாகவே போர் நடத்தப்பட்ட முறை இருந்தது. ஒரு தரப்பினர் பெற்ற வெற்றி என்பது, பயங்கரவாதத்திற்கு எதிராகப் போரிடுவது என்ற பெயரில் இந்த விதிகள் அலட்சியப் படுத்தப்படலாம் என்று சிலர் நம்புவதற்கான துணிவை அளித்துள்ளது.



234) போரின் இறுதிக் கட்டங்களுக்கு முன்னும், இறுதிக் கட்டத்தின் போதும் அரசு சார்பாகச் சிலர் மேற்கொண்ட பரவலான காணாமல் போக்கும் நடவடிக்கைகள், இந்த உரிமைகள் மீறப்பட்டதற்கான தகுதிவாய்ந்த குற்றச்சாட்டுகள் ஆகும். இதற்குப் பலியானவர்கள் பெரும்பாலும் விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்கள் எனச் சந்தேகிக்கப்பட்டவர்கள், சமூகச் செயல்பாட்டாளர்கள், பத்திரிகையாளர்கள் அல்லது மனிதஉரிமைப் பாதுகாவலர்களே ஆவர். விசாரணை நடைமுறைகளின் போது சிலர் காணாமல் போயினர். இதுபோன்ற தனி நபர்கள் வெள்ளை வேன்களில் கடத்தப்பட்டு, காணாமல் போக்கப்பட்டு, அதன்பிறகு என்ன ஆனார்கள் என்பதே தெரியமல் போனது என்பது பரவலான செயலாக இருந்தது, தகுதிவாய்ந்த குற்றச்சாட்டுகளாக எழுப்பப்பட்டுள்ளன.

(ஆ) கருத்துரிமைக்கான சுதந்திரம்

235) செய்திகளை அனுப்புவதற்கும் பெறுவதற்குமான சுதந்திரம், கருத்துக்கள் வைத்துக்கொள்வதற்கும் வெளிப்படுத்துவதற்குமான சுதந்திரம் ஆகியவற்றை உலகளாவிய மனித உரிமைச் சட்டம் பாதுகாக்கிறது (குடிமை மற்றும் அரசியல் உரிமைகளுக்கான உலகளாவிய ஒப்பந்தம் – பிரிவு 19). பிறரின் உரிமைகளையோ அல்லது மதிப்பையோ பாதுகாப்பதற்கோ அல்லது தேசப் பாதுகாப்பிற்கோ அல்லது பொது ஒழுங்கு மற்றும் பொது ஒழுக்கம் ஆகியவற்றைப் பாதுகாப்பதற்குச் சட்டப்படியான தேவைகள் ஏற்படும் போது மட்டுமே இந்த உரிமைகள் கட்டுப்படுத்தப்படுகின்றன. இத்தகைய கட்டுப்பாடுகள் அதன் பொருத்தப்பாடுகளின் அடிப்படையில் சோதனைக்கு உட்படுத்தப்படவேண்டும்.

236) போர் நடைபெற்ற பகுதிகளில் சுதந்திரமான பத்திரிகையாளர்கள் முழுமையாக தடுக்கப்பட்டமையானது எவ்விதப் பொதுப்பாதுகாப்பு நோக்கத்திற்கும் பொருத்தமற்றதாக இருந்தது என்பது இதன் கீழான மீறல்கள் குறித்த தகுதிவாய்ந்த குற்றச்சாட்டு ஆகும். 2008இல் ஊடகங்களுக்கான வழிகாட்டு நெறிகள் நடைமுறைப்படுத்தப்பட்டமையானது போர் குறித்த செய்திகளை மிக இறுக்கமாகக் கட்டுப்படுத்தியதோடு ஊடக சுதந்திரத்தைப் பறிப்பதாக இருந்தது. அரசின் கருத்துகளுக்கு எதிரான கருத்துக்களை முன்வைத்த பத்திரிகையாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்கள், மிகப் பரவலான பல்வேறு வகையான அச்சுறுத்தல்களுக்கு ஆளாக்கப்பட்டனர் என்பதோடு, சிலர் கொல்லவும் பட்டனர் அல்லது காணாமல் போயினர் அல்லது மிக மோசமான தாக்கப்பட்டனர்.

உ) விடுதலைப்புலிகள் மீதான மீறல் குற்றச்சாட்டுகள்

1) பொதுமக்களை மனித அரணாகப் பயன்படுத்தியது

237) ஜெனிவா தீர்மானங்களின் பொதுப்பிரிவு 3 : போரின் இறுதிக் கட்டங்களின் போது ஆயிரக்கணக்கான பொதுமக்களைப் பெரும்பாலும் உயிர் அச்சுறுத்தலின் கீழ் தங்கள் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருக்க வைத்தனர் என்பதும் அந்தப் பகுதிகளை விட்டு வெளியேற முயன்றவர்களை கொன்றதன் மூலம் இந்தக் கட்டுப்பாட்டைச் செயல்படுத்தினர் என்பதும் பொதுப்பிரிவு 3 குறிக்கும் 'மக்களை

பணயக் கைதிகளாக பிடித்து வைப்பதற்கு எதிரான தடை' மீறப்பட்டது குறித்த தகுதிவாய்ந்த குற்றச்சாட்டாகும் (போர்க் குற்றம் குறித்த வழமையான விளக்கம் குறிப்பது போன்று, தங்களைத் தாக்குதல்களிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு, பொதுமக்களைத் திட்டமிட்டு இராணுவத் தாக்குதல்களின் இலக்குகளை நோக்கி விடுதலைப்புலிகள் நகர்த்திச் சென்றனர் என்பதற்குத் தகுதிவாய்ந்த சான்றுகள் எதையும் காண இயலாததால் விடுதலைப்புலிகள் பொதுமக்களைப் போர்ப் பகுதியில் இருந்து வெளியேற அனுமதிக்க மறுத்தது குறித்த தகுதிவாய்ந்த குற்றச்சாட்டுகளை, சட்டப்படி மனித அரணாக அவர்களை பயன்படுத்தியதாக எடுத்துக்கொள்ள முடியாது எனக் குழு நம்புகிறது.)

2) விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளிலிருந்து தப்ப முயன்ற பொதுமக்களைக் கொன்றது

238) ஜெனிவா தீர்மானங்களின் பொதுப்பிரிவு 3 : விடுதலைப்புலிகளின் தரப்பில் முன்னணி நிலைகளில் பொதுமக்களைக் கட்டாயமாக நிறுத்தி வைக்கும் முயற்சியில், குறிப்பாக இரண்டாவது மற்றும் மூன்றாவது பாதுகாப்பு வலயங்களில், பெண்கள் குழந்தைகள் உட்பட போர்ப் பகுதிகளிலிருந்து வெளியேற முற்பட்ட பொதுமக்களை, விடுதலைப்புலிகள் வேண்டும் என்றே சுட்டதும் கொன்றதும் பொதுப்பிரிவு 3 (கொலை) மீறப்பட்டதற்கான தகுதிவாய்ந்த குற்றச்சாட்டுகள் ஆகும்.

3) பொதுமக்களின் நடமாட்டம் இருந்த பகுதிகளில் இராணுவ உபகரணங்களைப் பயன்படுத்தியது

239) பொதுமக்கள் நெருக்கமாக வாழும் பகுதிகளில் இராணுவ உபகரணங்களை வைத்திருப்பதன் மீதான தடை: பொதுமக்கள் நெருக்கமாக வாழும் பகுதிகளில், சாத்தியப்படும் சூழலில், இராணுவ உபகரணங்களை வைத்திருப்பதை உலகளாவிய மனிதநேயச் சட்டம் தடைசெய்கிறது (விதிகள் 23–24, செஞ்சிலுவைச் சங்க ஆய்வு). 'மார்ட்டர்' துண்டுகள், பிற சிறிய 'ஆர்ட்டிலரி'கள் இராணுவ வாகனங்கள், 'மார்ட்டர்' குழிகள், பதுங்கு குழிகள் மற்றும் தடுப்பு அரண்கள் ஆகியவற்றை விடுதலைப்புலிகள் திட்டமிட்டே பொதுமக்கள் நடமாட்டம் மிகுந்த பகுதிகளில் வைத்திருந்ததும் பயன்படுத்தியதுமான செயல் முதலானவை, இந்தப் பிரிவின்கீழ் மீறல்கள் நடைபெற்றதற்கான தகுதிவாய்ந்த குற்றச்சாட்டுகள் ஆகும். அனைத்து பாதுகாப்பு வலயங்கள் உட்பட மருத்துவ மனைகள் மற்றும் மக்கள் வாழ்ந்த பகுதிகள் உள்ளிட்ட பகுதிகளில் இவை நடைபெற்றன. வேறுபடுத்திப் பார்ப்பது மற்றும் பொருத்தப்பாடுகள் குறித்த வரையறைகளை மதித்து உறுதி செய்வதற்கு வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பதற்கு, இலங்கை இராணுவத்திற்கு இருக்கும் கடமைகளிலிருந்து விடுதலைப்புலிகளின் இந்தச் சட்டவிரோத வழக்கம் விடுவிப்பதாகாது.

4) குழந்தைகளை வலுக்கட்டாயமாகப் படையணியில் இணைத்தது

240) குழந்தைகளை வலுக்கட்டாயமாகப் படையணியில் இணைப்பது மீதான தடை: குழந்தைகளை வலுக்கட்டாயமாகப் படையணியில் இணைப்பதை உலகளாவிய மனித நேயச் சட்டம் தடைசெய்கிறது. சரியான வயது வரையறைமீது ஒரு பொதுகருத்து இல்லை என்ற போதும் அது குறைந்தது 15 என்பதை அரசுகள் ஒப்புக்கொண்டுள்ளன (விதி 136, செஞ்சிலுவைச் சங்க ஆய்வு). 14 வயதே ஆன சிறுவர்கள் மற்றும் சிறுமிகளை விடுதலைப்புலிகள் போரின் இறுதிக்கட்டங்களில் வலுக்கட்டாயமாகப் படையணியில் இணைத்தது என்பது இந்தப்பிரிவின் கீழான மீறல்கள் குறித்த தகுதிவாய்ந்த குற்றச்சாட்டுகள் ஆகும். இறுதிப்போரில் உறுப்பினர்கள் இறந்துபோவதற்கான சாத்தியங்கள் அதிகமிருந்த நிலையில்

இலங்கை ஒரு தரப்பினராக உள்ள பல்வேறு உலகளாவிய மனித உரிமை ஒப்பந்தங்களில் விசாரணை குறித்த கடப்பாடுகள் உள்ளன. குடிமை மற்றும் அரசியல் உரிமைகளுக்கான உலகளாவிய ஒப்பந்தத்தின் பிரிவு 2 (3) இன்படி, மனித உரிமை மீறல்களுக்குப் பலியானவர்களுக்கு பயன்தரக்கூடிய ஒரு நிவாரணத்தை அரசு அளிப்பது அவசியமாகிறது. இந்த ஒப்பந்தத்தின் இந்தப் பிரிவினை அய்.நா.வின் மனித உரிமைக் குழு விவரித்துள்ளது. அதன்படி இந்த ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள அனைத்து மீறல்களையும் அரசு விசாரிப்பது அவசியமாகிறது. அந்த விசாரணையில் மிக மோசமான மீறல்கள் நடந்திருப்பின் அல்லது உலகளாவிய குற்றங்கள் நடந்திருப்பின், அதனைச் செய்தவர்களை நீதியின் முன் நிறுத்துவது அவசியமாகிறது.

இளவயதினரை அவர்களது குடும்பங்களிலிருந்து பிரித்து நடத்தப்பட்ட இந்தக் கட்டாய இணைத்தல் என்பது பொதுப்பிரிவு 3ன் கீழ் கொடூரமாக நடத்தப்படுவது என்ற மீறல் குற்றச்சாட்டாக இருக்கின்றது.

இலங்கை ஒரு தரப்பினராக உள்ள 'சித்திரவதை மற்றும் பிற கொடூரமான மனிதத் தன்மையற்ற அல்லது தரம் குறைந்த நடத்தை அல்லது தண்டனை ஆகியவற்றிற்கு எதிரான தீர்மானங்களின்' பிரிவு 12இன் படி, சித்திரவதை எனப்படும் உலளாவிய குற்றத்தைச் செய்ததாகக் குற்றஞ்சாட்டப்படும் அனைவரும் அரசினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு தண்டனை அளிக்கப்பட வேண்டும் அல்லது விசாரணை நடத்தி தண்டனை அளிப்பதற்கு அது தொடர்புடைய வேறு அரசிடம் ஒப்படைக்கப் பட வேண்டும்.



5) வலுக்கட்டாயமாக வேலை வாங்குதல்

241) வலுக்கட்டாயமாக வேலை வாங்குதல் மீதான தடை: சம்பளம் இல்லாத அல்லது வேறு வகைகளில் வலுக்கட்டாயமாக வேலை வாங்குவதை உலகளாவிய மனித நேயச் சட்டம் தடை செய்கிறது (விதி 95 செஞ்சிலுவைச் சங்க ஆய்வு) பொதுமக்களில் நிறைய பேரைத் தங்களுக்கான தடுப்பரண்கள் மற்றும் தங்களது பிற போர் முயற்சிகளுக்குத் தேவையானயானவற்றை, சில நேரங்களில் மிகவும் ஆபத்தான சூழல்களிலும், பல நேரங்களில் அவர்கள் குடும்பத்தினரிடம் இருந்து அவர்கள் பிரிந்து இருக்கும் போதும், தங்களுக்கு உதவி செய்ய விடுதலைப்புலிகள் கட்டாயப்படுத்தினர். உயிர் இழப்புக்கோ அல்லது உடல் ரீதியான ஆபத்துக்கோ அதிக வாய்ப்பு இருக்கும் சூழல்களில், குறிப்பாகப் போரின் இறுதிக் கட்டங்களில், இம்மாதிரியான நடவடிக்கைகள் என்பவை பொதுப்பிரிவு 3ன் கீழ் கொடூரமாக நடத்தப்படுவது குறித்த அத்துமீறலாக கருதப்படும்.

6) தற்கொலைத்தாக்குதல்கள் மூலம் பொதுமக்களைக் கொன்றது

242) ஜெனிவா தீர்மானங்களின் பொதுப்பிரிவு 3: போர் நடைபெற்ற இடங்களிலும், அதற்கு வெளியிலும் பொதுமக்களுக்கு எதிராக சில தற்கொலைத்தாக்குதல்கள் விடுதலைப்புலிகள் மேற்கொண்டதாகத் தகுதிவாய்ந்த குற்றச்சாட்டுகள் எழுப்பப்பட்டுள்ளன. இவை பொதுப்பிரிவு 3 (கொலை) –யின் கீழ், மீறல்கள் நடைபெற்றதற்கான தகுதிவாய்ந்த குற்றச்சாட்டுகள் ஆகும். போர் நடைபெற்ற இடத்திற்கு வெளியே பெரும் எண்ணிக்கையிலான பொதுமக்களைக் கொன்றது உள்ளிட்ட சில தற்கொலைத் தாக்குதல்களைப் போரின் இறுதிக் கட்டங்களில் விடுதலைப்புலிகள் நடத்தினர். பிப்ரவரி 9, 2009 அன்று முல்லைத் தீவில் இருந்த ஒரு விசாரணை மய்யத்தின் மீது நடத்தப்பட்டதும், மார்ச் 10, 2009 அன்று அமைச்சர் மகிந்த விஜேசேகர மீது நடந்த தாக்குதலின் பகுதியாக விளைந்ததும் இவற்றில் குறிப்பிடத்தக்கவை. பொதுமக்கள் மீது திட்டமிட்டோ அல்லது பாகுபாடு இன்றியோ நடத்தப்படும் தாக்குதல்கள் தடை செய்யப் பட்டமை குறித்து மேலே விவரிக்கப்பட்டவற்றை மீறியதாகவே இந்தத் தாக்குதல்கள் இருப்பதாகக் குழு குறித்துள்ளது. விடுதலைப்புலிகள் இருந்த காலம் முழுவதும் தற்கொலைத்தாக்குதல் என்பது அவர்களின் பொதுவான வழக்கமாகவே இருந்து வந்திருக்கிறது. தற்கொலைத்தாக்குதல் குறித்த அச்சமானது, அரசு மேற்கொண்ட அத்துமீறல்களுக்குத் தூண்டுதலாக இருந்திருக்கலாம் என்ற போதும் அதை நியாயப்படுத்த இயலாது.

243) அரசு அல்லாதவர்களின் மனித உரிமைக் கடப்பாடுகள் குறித்தக் குழுவின் பார்வையின் அடிப்படையில் உலகளாவிய மனித நேயச் சட்ட மீறல்கள் என வகைப்படுத்தப்பட்டவை தவிர, பிற மனித உரிமை மீறல்களைக் குழு கவனத்தில் எடுத்துக்கொள்ளவில்லை. தங்களுடைய கட்டுப்பாட்டிற்கு வெளியே உள்ள பகுதிகளில் அரசு அல்லாதவர்களுக்கு மனித உரிமைக் கடப்பாடுகள் இருக்கின்றதா என்பதைக் குறித்து நிலவுகின்ற நிச்சயமற்ற தன்மை காரணமாக, போர் நடைபெற்ற பகுதிகளுக்கு வெளியே விடுதலைப்புலிகளின் செயல்களை உலகளாவிய மனித உரிமைச் சட்டத்தின் கீழ்க் குழு எடுத்துக்கொள்ளவில்லை.

ஊ) உலகளாவியச் சட்டத்தின் கீழ் தனிநபர்களுக்குரிய குற்றவியல் பொறுப்புகள்

244) மேலே விவாதிக்கப்பட்ட உலகளாவிய மனித நேய மற்றும் மனித உரிமைச் சட்ட மீறல் குற்றச்சாட்டுகளில் பல, உலகளாவியச் சட்டத்தின் கீழ்

தனிநபர் குற்றவியல் பொறுப்பை அளிப்பதாக இருக்கின்றன. போரின் இருதரப் பினரிலும் குறிப்பான தனிநபர்களின் சாத்தியப்படக்கூடிய கடப்பாடுகள் குறித்து விவாதிப்பது என்பதுக் குழுவின் பணிவரையறைக்குள் இல்லை. கீழே குறிக்கப்பட்டுள்ள முடிவுகளானவை இந்தத் தகுதிவாய்ந்த குற்றச்சாட்டுகள் ஒருவேளை உண்மை என நிரூபிக்கப்படுமானால், உலகளாவியச் சட்டத்தின் கீழ் குற்றங்களாக அவை இருக்கும் என்பதோடு நிறுத்திக்கொள்கிறது. மேலும் இந்தக் குற்றவியல் செயல்களுக்கு காரணமான தனிநபர்களை அடையாளம் காண்பதற்கு விசாரணை மேற்கொள்ளப்படவேண்டும் என்பதையும், குற்றம் நடைபெற்ற போது அவர்களது மனநிலையைக் கணிப்பதையும் கோருகிறது.

245) இலங்கை அரசு ஒருதரப்பாக இருக்கக்கூடிய ஒப்பந்தங்களில் விவரிக்கப்பட்டுள்ள குற்றங்கள் அல்லது வழமையான உலகளாவியச் சட்டத்தின் கீழ் உள்ள குற்றங்கள் ஆகியவற்றோடு தனது கவனத்தைக் குழு வரையறுத்துக் கொள்கிறது. தகுதிவாய்ந்த குற்றச்சாட்டுகள் ஒரு குற்றம் நடைபெற்றதை குறிக்கின்றதா என்பதை ஆய்வு செய்வதில் தனது கவனத்தைக் குவித்துள்ளது. முன்பே கூறியதுபோல் மிகவும் மோசமான குற்றங்களை மட்டுமேக் குழு விவாதிக்கிறது. இந்த அறிக்கையின் பின்பகுதியில் இலங்கை மற்றும் பிற அரசுகள் மற்றும் அய். நா. ஆகியவற்றின் கடமைகள் மீது இந்த குற்றவியல் செயல்கள் குறித்த குற்றச்சாட்டுகள் ஏற்படுத்தும் பாதிப்பைக் குழு விவரித்துள்ளது.

1) போர்க் குற்றங்கள்

246) உலகளாவிய மனித நேயச் சட்டத்தின் கீழான குறிப்பான சில மீறல்கள் மீது, அனைத்திற்கும் அல்ல, தனிநபர் குற்றவியல் பொறுப்பினை உலகளாவியச் சட்டம் வழங்குகிறது. ஜெனிவாத் தீர்மானங்கள், உள்நாட்டுப் போர்களின் போது நடந்திருக்கக் கூடிய போர்க் குற்றங்கள் என வகைப்படுத்தப்படக்கூடிய இத்தகைய மீறல்களை பட்டியலிடவோ விளக்கவோ இல்லை என்ற போதும், உலகளாவியச் சட்டத்தின் பிற அதிகாரபூர்வ மூலங்கள் இந்தக் குற்றங்களையும் அவற்றின் குற்றவியல் தன்மையையும் விவரித்துள்ளன. இதனால் அவை சந்தேகத்திற்கிட மின்றி விளக்கப்பட்டுள்ளது. உலகளாவிய குற்றவியல் நீதிமன்றத்தின் ரோம் தீர்ப்பில், குறிப்பாக பிரிவு 8 (2) (இ) மற்றும் 3 ஆகியவை இதில் குறிப்பிடத் தக்கவை. இந்தத் தீர்ப்பிற்கு இலங்கை ஒரு தரப்பினராக இல்லாத போதும், பன்னாட்டுப் போர் அல்லாத போர்களில் போர்க் குற்றங்கள் என்பவை குறித்துப் பட்டியலில் மிக விரிவாக விளக்கப்பட்டுள்ளது. இவை வழமையான உலகளாவியச் சட்டத்தை விளக்குவதாகவே இருக்கின்றன. வழமையான சட்டம் குறித்துச் செஞ்சிலுவைச் சங்கம் மேற்கொண்ட விரிவான ஆய்வையும் இந்த விஷயத்தில் குழு சார்ந்துள்ளது.

247) இலங்கை அரசின் சார்பாகச் செயல்படக்கூடிய மனிதர்களால் கீழ்க்காணும் போர்க் குற்றங்கள் நடைபெற்று இருப்பதைத் தகுதிவாய்ந்த குற்றச்சாட்டுகளும் மீறல்களும் குறிப்பதாகக் குழு நம்புகிறது.

(அ) உயிர் மற்றும் தனிநபர்கள் மீதான வன்முறைகள் உட்படக் குறிப்பாக அனைத்து வகையான கொலைகள், உடல் உறுப்புகளுக்கு தீங்கு, வன்புணர்வு மற்றும் தனிப்பட்ட மாண்பிற்கு எதிரான தாக்குதல்கள், குறிப்பாக அவமானப் படுத்தும் மற்றும் தரக்குறைவான நடத்தை உள்ளிட்ட கொடூரமான நடத்தை மற்றும் சித்திரவதை மற்றும் காயம்பட்ட மற்றும் நோயாளிகளை கண்டறிந்து கவனிக்கத் தவறியது ஆகியவை உள்ளிட்ட பொதுப்பிரிவு 3இன் கீழான மிக மோசமான மீறல்கள்.

(ஆ) பொதுமக்கள் மீதான திட்டமிட்ட தாக்குதல்கள்.

(இ) பொதுமக்கள் மீதான பாகுபாடற்ற மற்றும் பொருத்தமற்ற தாக்குதல்கள்.



கூடுதலாக, பொறுப்பேற்பது குறித்துப் பல்வேறு முக்கிய வரையறை களையும், விதிகளையும் அய்.நா.வின் பல்வேறு செயல்பாடுகள் உருவாக்கியுள்ளன. இதில் குறிப்பான முக்கியத்துவம் வாய்ந்ததான 'போரில் விசாரணையிலிருந்து விலக்கி வைக்கப் பட்டதற்கு எதிராக, மனித உரிமைகளைக் காக்கவும் மேம்படுத்தவும் ஆன கொள்கைகள் – 2005' என்பதாகும்.

அய்.நா.வின் மனித உரிமை ஆணையம் பணித்த வல்லுநர் குழு உருவாக்கியுள்ள இந்த ஆவணமானது, இந்தக் குற்றங்களுக்கு பலியானவர்களுக்கு உலகளாவியச் சட்டத்தின் கீழ் மூன்று அடிப்படை உரிமைகள் உள்ளதாக ஒரு புரிந்துணர்வைக் குறித்துள்ளது: உண்மை காணும் உரிமை, நீதிக்கான உரிமை மற்றும் நிவாரணத்திற்கான உரிமை, இவற்றோடு மீண்டும் இவ்வாறு நேராது என்பதற்கான அதிகாரபூர்வ உறுதிப்பாடுகளும் இணைந்துள்ளன.



(ஈ) மனிதநேயக் குழுக்கள் மற்றும் செஞ்சிலுவை குறிக்கப்பட்ட கட்டுமானங்கள் உள்ளிட்ட மருத்துவ மற்றும் மனிதநேயக் கட்டமைப்புகள் மீதான தாக்குதல்கள்.

(உ) பொதுமக்களைப் பட்டினிபோடுவது மற்றும் மனிதநேய நிவாரணங்களை மறுப்பது.

மற்றும்

(ஊ) வலுக்கட்டாயமாக காணாமல் போகச்செய்தல்

248) விடுதலைப்புலிகளின் சார்பாகச் செயல்படக்கூடிய மனிதர்களால் கீழ்க்காணும் போர்க் குற்றங்கள் நடைபெற்று இருப்பதை தகுதிவாய்ந்த குற்றச் சாட்டுகளும் மீறல்களும் குறிப்பதாகக் குழு நம்புகிறது.

(அ) உயிர் மற்றும் தனிநபர்கள் மீதான வன்முறைகள் உட்படக் குறிப்பாக அனைத்து வகையான கொலைகள், உடல் உறுப்புகளுக்கு தீங்கு, வலுக்கட்டாயமாக வேலை வாங்குதல் உள்ளிட்ட கொடூரமான நடத்தை மற்றும் சித்திரவதை மற்றும் பணயக் கைதிகளாக மக்களை நிறுத்துவது ஆகியவை உள்ளிட்ட பொதுப்பிரிவு 3இன் கீழான மிக மோசமான மீறல்கள்.

(ஆ) குழந்தைகளை வலுக்கட்டாயமாகப் படையணியில் இணைத்தது.

2) மனிதத்திற்கு எதிரான குற்றங்கள்

249) பொதுமக்கள் மீதான பரவலான அல்லது திட்டமிட்ட தாக்குதலின் பகுதியாக நடைபெறக்கூடிய சில மோசமான செயல்களும் உலகளாவிய குற்றங்களாகக் கருதப்படும் என்பதை உலகளாவியச் சட்டம் நிறுவுகிறது. ருவாண்டாவிற்கான உலகளாவிய குற்றவியல் ஆணையம் மற்றும் உலகளாவிய நீதிமன்றத்தின் தீர்ப்புகள் உள்ளிட்ட பல்வேறு உலகளாவிய ஆவணங்களில் மனிதத்திற்கு எதிரான குற்றங்கள் விளக்கப்பட்டுள்ளன. அவற்றில் கூ ப்பட்டுள்ள கூறுகள் இருக்குமாயின், இந்தச் செயல்கள், போரோடு அவை என்னமாதிரியான தொடர்பினை கொண்டிருந்தன என்பதை பற்றிய அக்கறையின்றி, குற்றங்களாகவே கருதப்படும். பல்வேறு ஆவணங்களும் இந்தக் குற்றங்களை வெவ்வேறு விதமாகப் பட்டியலிட்டபோதிலும் போர்க் குற்றப் பட்டியல் எனும்பொழுது உலகளாவியக் குற்றவியல் நீதிமன்றத்தின் தீர்ப்பானது, வழமையான உலகளாவியச் சட்டத்தை விரிவாக விளக்குவதாகவே இருக்கின்றது.

250) மனிதத்திற்கு எதிரான குற்றங்களின் அடிப்படைக்கூறானது பொதுமக்களுக்கு எதிரான ஒரு பரவலான அல்லது திட்டமிட்ட தாக்குதல் நடத்தப்பட்டிருக்கவேண்டும் என்பதே ஆகும். பொதுமக்கள் என்று கூறும்போது, பொதுமக்களின் பகுதியாக இராணுவக் கூறுகளோ அல்லது போராளிகளோ இருப்பது என்பது அதன் பொதுத்தன்மையைப் பாதிக்காது. ஒரு தாக்குதல் எனும்பொழுது, அந்த பொதுமக்கள் கூட்டத்தைத் தவறாக நடத்தும் எந்த செயலையும் குறிக்கும். அது ஓர் ஆயுதப்போராக இருக்கவேண்டிய அவசியம் இல்லை. அந்தத் தாக்குதலின் பரவலான மற்றும் திட்டமிட்டத் தன்மையை நிர்ணயிக்க, ருவாண்டாவிற்கான உலகளாவிய குற்றவியல் ஆணையம், குற்றவியல் செயல்களின் எண்ணிக்கை, வகைகள் மற்றும் அதன் குவிமய்யத் தன்மை ஆகியவற்றைக் கருத்தில் எடுத்துக் கொள்கிறது. மேலும் குறிவைக்கப்பட்ட மக்கள் கூட்டத்தின் மீதான பாதிப்புகள், தாக்குதலில் அதிகாரிகள் மற்றும் அதிகார மய்யங்களின் பங்கெடுப்பு, அதில் ஈடுபடுத்தப்பட்ட தளவாடங்கள் மற்றும் பொருளாதார வளங்கள், பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை, ஒரு திட்டம் அல்லது கொள்கை இருப்பது, (இது உலகளாவிய குற்றவியல் நீதிமன்றத்தின் தீர்ப்பின் கீழ் அவசியமாகிறது.) தாக்குதலில் பயன்படுத்தப்பட்ட வழிமுறைகள், மக்கள் கூட்டத்திற்கு எதிராக

மேற்கொள்ளப்பட்ட பல்வேறு பாகுபாடுகள் நிறைந்த நடவடிக்கைகள் மற்றும் பிற கூறுகளையும் அது கவனத்தில் கொள்கிறது. உலகளாவிய குற்றவியல் நீதிமன்ற தீர்ப்பின் படி தாக்குதலை நடத்துபவர் அதைப்பற்றி அறிந்திருக்க வேண்டும். என்றபோதும் இந்த மனநிலையானது தாக்குதல் பற்றிய அனைத்து விவரங்களையும் அறிந்திருக்க வேண்டிய தேவையை வலியுறுத்தவில்லை.

251) இலங்கை அரசைப் பொருத்தவரையில் போரின் இறுதிக் கட்டங்களின் போதும் அதன் பிறகும், சொல்லப்போனால் அதற்கு முன்பும் கூட, வன்னியில் இருந்த பொதுமக்கள் மீது பரவலான அல்லது திட்டமிட்ட தாக்குதல்கள் நடத்தப் பட்டதை இந்தத் தகுதிவாய்ந்த குற்றச்சாட்டுகள் குறிக்கின்றன. பெரும் எண்ணிக்கை யிலான இடம்பெயர்ந்த மக்கள் கூட்டத்தின் மீது நடத்தப்பட்டப் பரவலான குண்டுவீச்சுத் தாக்குதல்கள், ஆயுதபோருக்கு பின்னான காலத்தில் நடந்த சட்ட விரோத கொலைகள் மற்றும் காணாமல் போதல்கள், உணவு மற்றும் மருந்து மறுக்கப்பட்டமை, பெரும் எண்ணிக்கையில் சிறையில் அடைத்தது மற்றும் பாகுபாடுகளின் அடிப்படையில் நடத்தப்பட்ட மீறல்கள் உள்ளிட்ட பிற மீறல்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகவே இந்தத் தாக்குதல்கள் இருந்தன. மனிதத்திற்கு எதிரான குற்றங்களைக் குறிக்கக்கூடிய குறிப்பான செயல்களை பொருத்த வரையில், தகுதிவாய்ந்த குற்றச்சாட்டுகளும் மீறல்களும், அரசானது கீழ்காணும் மனிதத்திற்கு எதிரான குற்றங்களை புரிந்திருப்பதை குறிப்பதாகக் குழு முடிவுசெய்கிறது.

(அ) கொலை : 'குற்றம்சாட்டப்பட்டவரின் செயல்கள் அல்லது செயல் படாத்தன்மை ஆகியவற்றின் விளைவாக பாதிக்கப்பட்டவரின் சாவு நடை பெற்றிருக்கும் சூழலில், குற்றம் சாட்டப்பட்டவரின் நடத்தையானது பாதிக்கப்பட்டவரின் சாவுக்கு முக்கிய காரணமாக இருந்தது என்பது கொலை என்பதற்கான கூறு ஆகும்.' என ருவாண்டாவிற்கான உலகளாவிய குற்றவியல் ஆணையம் விளக்குகிறது. ஒரு கொலை மனிதத்திற்கு எதிரான குற்றமாகக் கருதப்படுவதற்கான மனநிலை என்பது உள்நோக்கத்தோடு அல்லாமல் மனித உயிர் பற்றிய அக்கறையின்மையையும் உள்ளடக்கியதாகவே இருக்கிறது. இலங்கை இராணுவமானது பரவலான குண்டுவீச்சுத் தாக்குதல் மூலம் பொது மக்களைக் கொன்றது என்பது கொலை என்ற மனிதத்திற்கு எதிரான குற்றமாக காண்பதற்கு தகுதிவாய்ந்த குற்றச்சாட்டுகள் துணைபுரிகின்றன.

(ஆ) அழித்தொழிப்பு : உலகளாவிய குற்றவியல் நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி அழித்தொழிப்பு என்பது 'வாழ்க்கை நிலைகளில் திட்டமிட்டத் தீங்கினை ஏற்படுத்துவது, குறிப்பாக அந்த மக்கள் கூட்டத்தின் பகுதியை அழிப்பதை நோக்கமாக கொண்டு அதற்கேற்றவாறு உணவு மற்றும் மருந்து பொருட்களை மறுப்பது' (பிரிவு 7 (2) (ஆ)) ஆகும். அழித்தொழிப்பிற்கு இலக்காக்கப்படும் மக்கள் கூட்டத்தின் எண்ணிகையானது 'குறிப்பிடத்தகுந்த' அளவிற்கு இருக்க வேண்டும். போரின் இறுதி மாதங்களில் பாதுகாப்பு வலயங்களில் இருந்த பொதுமக்கள் மீது திணிக்கப்பட்ட சூழல்களானது, அந்த மக்கள் கூட்டத்தின் ஒரு குறிப்பிடத்தகுந்த பகுதியினை அழிப்பதை நோக்கமாகக் கொண்டு திட்டமிடப் பட்டிருந்தது என்பது அழித்தொழிப்பு குறித்த மனிதத்திற்கு எதிரான குற்றத்தைக் காண்பதற்குத் தகுதிவாய்ந்த குற்றச்சாட்டுகள் துணைநிற்கின்றன.

(இ) சிறை வைப்பது : பொதுமக்கள் எவ்வித சரியான காரணமுமின்றி, அதிகாரபூர்வமற்ற முறையில், சட்ட அடிப்படைகள் இன்றி சிறைவைக்கப்படுவது என்பது மனிதத்திற்கு எதிரான குற்றமாகும். இலட்சக்கணக்கான பொதுமக்கள் மாணிக் பண்ணையில் எவ்வித சரியான காரணமுமின்றிச் சிறைவைக்கப்பட்டது என்பது மனிதத்திற்கு எதிரான குற்றமாகக் காண்பதற்குத் தகுதிவாய்ந்த குற்றச் சாட்டுகள் துணைநிற்கின்றன.

(ஈ) பாகுபாடுகள் : ஒரு தனிநபர் அடிப்படை உரிமைகளை அனுபவிப்பதைத்

உள்நாட்டு ஆயுதப் போரில் நடத்தப்பட்ட மோசமான மீறல்களை விசாரிப்பதற்கான கடமை, பொது அவையின் தீர்மானம் 60/147இல் ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. உள்நாட்டு ஆயுதப் போரில் நடந்த போர்க் குற்றங்களை, அரசின் வழக்கங்களுக்கு உட்பட்டும், அதனை ஆழமாக ஆராய்ந்தும், அதன் அடிப்படையில் விசாரணை மற்றும் தண்டனைக்கு உட்படுத்த வேண்டிய கடமை, வழமையான உல களாவியச் சட்டத்தின் கீழ் அரசுகளுக்கு இருப்பதை, உலகளாவிய மனித நேயச் சட்டத்தை விளக்குவதில் ஒரு சிறப்பான பங்கை ஆற்றும் செஞ்சிலுவைச் சங்கமும் உறுதி செய்கிறது.

மாற்றத்திற்கான நீதியின் அடிப்படை என்பது, கடந்தகாலத்தில் உழன்றுகொண்டிருப்பதோ அல்லது பரிகாரம் தேடுவதோ அல்ல. மாறாக, கடந்தகாலக் குற்றங்களுக்குப் பொறுப்பேற்பதை உறுதிசெய்வதன் மூலம், வன்முறையின் சுழற்சியை உடைப்பதும், விசாரணையிலிருந்து விலக்கிவைக்கும் தன்மை மற்றும் மறுப்பை எதிர்கொள்வதும், பாதிக்கப்பட்டவர்களின் துன்பத்தை அங்கீகரிப்பதும் ஆகும்.



தடுக்கும் நோக்கத்தில் இனம், மதம் அல்லது அரசியல் அடிப்படையில் பாகுபடுத்திப் பார்க்கும் ஒரு செயலோ அல்லது அவர்களை ஒதுக்குவதோ மற்றும் அதே அளவிற்குப் செய்யப்படும் பிற செயல்களோ மனிதத்திற்கு எதிரான குற்றமாகக் கருதப்படும். வன்னியில் இருந்த தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளை ஆதரித்தார்கள் என்ற அரசின் அனுமானத்தின் அடிப்படையில், அவர்களுக்கு எதிராக இனம் மற்றும் அரசியல் அடிப்படையில் நடத்தப்பட்ட செயல்கள், மனிதத்திற்கு எதிரான குற்றமாக காண்பதற்குத் தகுதிவாய்ந்த குற்றச்சாட்டு களுக்குத் துணைநிற்கின்றன.

(உ) காணாமற் போகச்செய்தல் : 'அரசு அல்லது ஓர் அரசியல் அமைப்பின் ஆதரவுடனோ அல்லது நேரடி மேற்பார்வையிலோ அல்லது அதிகாரத்துடனோ தனிநபர்களைக் கைது அல்லது தடுப்புக்காவல் அல்லது கடத்தல் ஆகியவற்றை செய்வதும், அதனைத் தொடர்ந்து அவர்களை விடுவிக்க மறுப்பதும் அல்லது அவர்கள் நிலை குறித்தோ அவர்கள் எங்கு இருக்கிறார்கள் என்பது குறித்தோ தகவல் அளிக்க மறுப்பதும், இவற்றை அரசின் பாதுகாப்பில் இருந்து நீண்ட காலத்திற்கு விலக்கி வைப்பதை நோக்கமாகக் கொண்டு செய்வது ஆகியவை காணாமல் போகச் செய்தல் என்பதாகும்' என உலகளாவியக் குற்றவியல் நீதிமன்றத்தின் தீர்ப்பு விளக்குகிறது (பிரிவு 7 (2) (1)). அரசின் அணுகுமுறையை விமர்சித்ததற்காகவோ அல்லது விடுதலைப்புலிகள் மீது அனுதாபத்துடன் இருந்ததாக அரசு கருதியதாலோ, பெரும் எண்ணிக்கையிலான மனிதர்கள் போரின் இறுதிக் கட்டங்களின் போதும் அதற்குப் பிறகும் காணாமல் போயினர். இது மனிதத்திற்கு எதிரான குற்றமாகக் காண்பதற்கு தகுதிவாய்ந்த குற்றச்சாட்டுகள் துணைநிற்கின்றன.

252) விடுதலைப்புலிகளைப் பொருத்தவரையில், போரின் இறுதிக் கட்டங் களில் பொதுமக்கள் அவர்களது விருப்பத்திற்கு மாறாகத் தொடர்ந்தும் பரவலாகவும் தடுத்து வைத்த நடைமுறையும் வெளியேற முயன்றவர்களைக் கொன்றதும் வன்னியில் இருந்த பொதுமக்கள் மீது பரவலான திட்டமிட்ட தாக்குதல்கள் குறித்த தகுதிவாய்ந்த குற்றச்சாட்டுகளாகவும் மீறல்களாகவும் இருக்கின்றன. மனிதத்திற்கு எதிரான குற்றம் எனக் கருதக்கூடிய அளவிலான குறிப்பான செயல்களைப் பொருத்தவரையில், மேற்குறிப்பிட்டபடி, விடுதலைப் புலிகள் தப்பி ஓட முயன்றவர்களைக் கொன்றதும் மற்றும் போரின் போது பொதுமக்களுக்கு எதிராகத் தற்கொலைத் தாக்குதல்களைப் பயன்படுத்தியதும் ஆகிய செயல்களின் அடிப்படையில் கொலை என்ற மனிதத்திற்கு எதிரான குற்றத்தை விடுதலைப்புலிகள் புரிந்திருப்பதைத் தகுதிவாய்ந்த குற்றச்சாட்டுகள் குறிப்பதாகக் குழு முடிவுசெய்கிறது.

3) தனிநபர் பொறுப்புகளின் வீச்சு

253) உலகளாவியச் சட்டமானது குற்றவியல் பொறுப்பு என்பது அச்செயல்களை புரிந்த தனிநபர்கள் மற்றும் இராணுவ தளபதிகள் மற்றும் அரசியல் தலைவர்கள் ஆகிய இருவருக்குமே இருப்பதை அங்கீகரிக்கிறது. தனிநபர்கள் இச்செயல்களை புரிவதைப் பொருத்தவரை உலகளாவிய மற்றும் உள்நாட்டு ஆணையங்களின் தீர்ப்புகளும் பரிந்துரைகளும் அக்குற்றங்கள் கீழ்க்காண்பவற்றை உள்ளடக்கியதாக கூறுகின்றன (1) அக்குற்றத்திற்குக் காரணமான செயலை நேரடியாகச் செய்வது (2) நேரடியாகச் செய்தவர்களுக்கு உதவுவது மற்றும் துணைநிற்பது (3) அக்குற்றத்தைத் திட்டமிடுவது மற்றும் தூண்டுவது (4) அக்குற்றத்திற்கு ஆணையிடுவது (5) அக்குற்றத்தைப் புரிவதற்கு ஒரு கூட்டு நடவடிக்கையில் அல்லது சதியில் பங்கெடுப்பது.

254) இராணுவ மற்றும் சமூக தளபதிகள் மற்றும் தலைவர்களை பொருத்த வரையில், உலகளாவியச் சட்டமானது கீழ்க்காணும் சூழலில் குற்றவியல்

கடப்பாடு இருப்பதை உறுதிபடுத்துகிறது. (1) அக்குற்றத்தை புரிந்தவர்களுடன் மேலதிகாரி – பணியாளர் தொடர்பு இருப்பதோடு, அவர் மீது முழுமையான கட்டுப்பாடு செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டும். (2) செய்யப்பட்ட குற்றங்கள் அல்லது செய்ய இருக்கின்ற குற்றங்கள் ஆகியவை குறித்து முழுமையான அல்லது செயல்முறை அறிவினை தளபதியோ தலைவரோ கொண்டிருக்கவேண்டும். (3) அச்செயல்களைத் தடுக்கவோ தவிர்க்கவோ அல்லது தண்டிக்கவோ தேவையான மற்றும் சரியான நடவடிக்கைகளை எடுக்க தளபதியோ தலைவரோ தவறியிருக்க வேண்டும்.

255) இந்தக் கடப்பாடுகளின் வடிங்களில் உலகளாவிய குற்றங்களுக்கான குற்றவியல் பொறுப்பு இலங்கை இராணுவ தளபதிகளுக்கும், மூத்த அரசு அதிகாரிகளுக்கும், விடுதலைப்புலிகளின் இராணுவ மற்றும் அரசியல் தலைவர்களுக்கும் இருப்பதைக் குழுவிடம் அளிக்கப்பட்ட தகுதிவாய்ந்த குற்றச்சாட்டுகள் பரிந்துரைக்கின்றன.

எ) இலங்கை சட்டப்படி தனிநபர் குற்றவியல் பொறுப்பு

256) தனிப்பட்ட உள்ளூர் நீதிமன்றங்கள் இலங்கைச் சட்டத்தின் கூறுகளை விவரிக்கும் சிறப்பான நிலையில் இருப்பதை அங்கீகரித்து அச்சட்டத்தின் கீழ் தனிநபர் குற்றவியல் பொறுப்புகளைச் சுருக்கமாக அளிக்கக் குழு விரும்புகிறது. இதற்கான முக்கிய மூலம், இலங்கையின் தண்டனைச்சட்டமாகும். பிற சட்டங்கள் தண்டனைச் சட்டத்திற்கு துணை புரியும் வகையில் குற்றவியல் பிரிவுகளை கொண்டுள்ளன. சான்றாக 'சித்திரவதை மற்றும் பிற கொடூரமான மனிதத் தன்மையற்ற தரக்குறைவான நடத்தை அல்லது தண்டனைக்கு எதிரான தீர்மானச் சட்டம் எண் 22, 1994'. இச்சட்டம் சித்திரவதையை ஒரு குற்றமாக கூறுகிறது. குடிமையியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான பன்னாட்டு ஒப்பந்தச் சட்டம் எண்:56, 2007, ஒரு போரைத் தொடங்குவதும், பாகுபாடுகள், பாதுகாப்பற்ற தன்மை மற்றும் வன்முறை ஆகியவற்றை உருவாக்கக்கூடிய தேசிய, இன அல்லது மத அடிப்படையிலான வெறுப்பை பரப்புவது ஆகியவற்றைக் குற்றமாக அது அறிவிக்கிறது. தண்டனைச்சட்டமானது துணைநிற்பதற்கும் சதிக்கும் கடப்பாடு களை விவரிக்கிறது. (அத்தியாங்கள் 55.அ) மேலும் நியாயப்படுத்துவது விளக்குவது ஆகியவற்றையும் அது உள்ளடக்குகிறது. (அத்தியாயம் 4) இராணுவச் சட்டம் எண்:17, 1949 என்பது இராணுவக் குற்றங்களை விவரிக்கிறது. இராணுவ உறுப்பினர்கள் புரிந்த குற்றங்கள் மீது இராணுவ மற்றும் குடிமையியல் சட்டங்களைப் பொருத்துவதை இது விவரிக்கிறது. இராணுவ உறுப்பினர்கள் எனும்பொழுது, அது வழமையான உறுப்பினர்கள், சிறப்பு உறுப்பினர்கள் மற்றும் தன்னிச்சை உறுப்பினர்கள் ஆகிய அனைவரையும் உள்ளடக்கும்.

257) ஆயுதப்போரில் ஒரு தரப்பினரோ அல்லது இருதரப்பினருமேயோ புரிந்த கீழ்காணும் செயல்கள் தண்டனைச்சட்டத்தின் கீழான குற்றங்களாகக் குறிக்கப் படுவதைத் தகுதிவாய்ந்த குற்றச்சாட்டுகள் உரைக்கின்றன : அரசுக்கு எதிராகப் போர் தொடுப்பது (பிரிவு 114). போர் தொடுக்கும் நோக்கத்துடன் ஆட்களையும் ஆயுதங்களையும் திரட்டுவது (பிரிவு 116). வெறுப்பைக் கொண்டாடுவது (பிரிவு 120). சட்டவிரோதமாகக் கூடுவதும், கலவரத்தில் ஈடுபடுவதுமான குற்றங்கள் (பிரிவுகள் 138 – 155). கொலை மற்றும் திட்டமிட்ட படுகொலை (பிரிவுகள் 293–295). அலட்சியத்தினால் ஏற்படும் சாவு (பிரிவு 298). திட்டமிட்டு, காயம் அல்லது கொடூரமான காயத்தினை ஏற்படுத்துவது (பிரிவுகள் 310–326). மனித உயிரை அல்லது பிறரின் பாதுகாப்பை ஆபத்துக்கு உள்ளாக்குவது (பிரிவு 327). மனித உயிரை அல்லது பிறரின் பாதுகாப்பை அக்கறையற்று ஆபத்திற்கு உள்ளாக்குவதின் மூலம் காயம் அல்லது கொடூரமான காயத்தினை ஏற்படுத்துவது (பிரிவுகள் 328–329). தவறான வகையில் தடுத்து வைப்பது அல்லது பிடித்து வைப்பது (பிரிவுகள் 330–333). சிறப்புப்பிரிவுகளின் கீழ் தவறாகத் தடுத்து வைப்பது (பிரிவுகள் 334–339).



உரிமைகளை மீட்டெடுப்பது, பணமாக ஈடுசெய்வது, மருத்துவ அல்லது உளவியல் உதவிகள், சுகாதாரக் காப்பு, கல்வி உதவி, பொருட்களைத் திரும்ப அளிப்பது அல்லது அதிகாரபூர்வமாக வெளிப்படையாக மன்னிப்புக்கோருவது, அருங்காட்சியகங்கள் அல்லது நினைவிடங்கள் கட்டுவது மற்றும் நினைவுகூரும் வகையில் அதிகாரபூர்வ நாட்களை நிறுவுவது போன்று, ஏற்பட்ட இழப்பிற்கு ஈடுசெய்வது உள்ளிட்ட பல்வேறு வடிவங்களில் இழப்பீடு வழங்கப் படலாம்.

போரின் இறுதிக்கட்டங்களில் அரசு சார்பாக மோசமான குற்றங்களைச் செய்தவர்களை எந்தவிதத்திலும் பொறுப்பாக்காமல் இருப்பது என்ற அதிகார பூர்வமற்ற முடிவானது, அடிப்படையில் இலங்கை அளித்துள்ள உலகளாவிய கடப்பாடுகளை மீறுவதாகவும், மாற்றத்திற்கான நீதி எனும் அடிப்படையில் அனுமதிக்க இயலாததாகவும் உள்ளது.



கடத்தல் (பிரிவுகள் 353–359). வன்புணர்வு (பிரிவுகள் 363–364). அடிப்பது மற்றும் குற்றவியல் முறைகளைப் பயன்படுத்துவது (பிரிவுகள் 340–349). வலுக்கட்டாயமாக வேலை வாங்குவது, அடிமைப்படுத்துவது மற்றும் குழந்தைகளை ஆயுதப்போரில் பயன்படுத்துவது (பிரிவு 358அ). மிகமோசமான பாலியல் தாக்குதல்கள் (பிரிவு 365ஆ). மற்றும் அச்சுறுத்தல் மூலம் பறிப்பது (பிரிவுகள் 372–378). இதேபோன்று சித்திரவதை குறித்த குற்றங்கள் (பிரிவு 2 சிஎடி சட்டம்) மற்றும் போரைத் தூண்டுவது மற்றும் தேசிய, இன, மத வெறுப்பைப் பரப்புவது (பிரிவு 3 – குடிமை மற்றும் அரசியல் உரிமைகளுக்கான உலகளாவிய ஒப்பந்தம் – சட்டம்) ஆகியவை குறித்தும் தகுதிவாய்ந்த குற்றச்சாட்டுகள் கூறுகின்றன. இவற்றுடன் இராணுவச் சட்டத்தின் கீழ் இராணுவ உறுப்பினர்கள் புரிந்த இராணுவக் குற்றங்கள் குறித்தும் தகுதிவாய்ந்த குற்றச்சாட்டுகள் கூறுகின்றன. இவை தரக்குறைவான நடத்தை (பிரிவு 107). கொடூரமான அல்லது நாகரிகமற்ற அல்லது இயற்கைக்கு முரணான தன்மையுடைய செயல்கள் புரிதல் (பிரிவு 109 (உ)). தேவையற்ற தடுப்புக்காவல் (பிரிவு 112 (அ)) மற்றும் நல்ல ஒழுங்கு மற்றும் ஒழுக்கத்திற்கு முரணான நடத்தை (பிரிவு 129 (1)). ஆகியவை குறித்தும் தகுதிவாய்ந்த குற்றச்சாட்டுகள் கூறுகின்றன. இந்தப் பட்டியலானது மிக மோசமான குற்றங்களை மட்டுமே காட்டுகின்றது.

ஏ) முடிவுகள்

258) இலங்கையில் நடந்த போரின் இறுதிக் கட்டங்களும் அதற்குப் பிறகும் ஆன நிலை என்பது இலங்கை அரசு மற்றும் விடுதலைப்புலிகள் ஆகிய இருதரப்பினருமே உலகளாவிய மனிதநேயச் சட்டம் மற்றும் மனித உரிமைச் சட்டங்களைப் பரவலாக மீறியதையும், அவற்றில் சில போர்க்குற்றங்கள் மற்றும் மனிதத்திற்கு எதிரான குற்றங்களாக இருந்ததையும் கண்டது. போர் புரிந்த இருதரப்பினரும் உலகளாவிய வரையறைகள் மீது அக்கறையற்றுச் செயல்பட்டத்தின் காரணமாக 3 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டனர். போர்க் காலங்களிலும் அமைதிக் காலங்களிலும் தனிப்பட்ட மாண்பினைக் காப்பதற்காக வடிவமைக்கப்பட்ட உலகளாவியச் சட்டங்களின் மொத்தப் பயனையுமே மிக மோசமாக அவமானப்படுத்துவதாகவே போர் நடத்தப்பட்ட முறை இருந்தது. ஒரு தரப்பினர் பெற்ற வெற்றி என்பது பயங்கரவாதத்திற்கு எதிராகப் போரிடுவது என்ற பெயரில் இந்த விதிகள் அலட்சியப்படுத்தப்படலாம் என்று சிலர் நம்புவதற்கான துணிவை அளித்துள்ளது.

259) **குழுவின் சட்டபூர்வக் கணிப்பின் சுருக்கம் :**

(அ) அரசைப் பொருத்தவரையில் தகுதிவாய்ந்த குற்றச்சாட்டுகளானவை கீழ்க்காணும் மீறல்களை குறிக்கின்றன : உலகளாவிய மனிதநேயச் சட்ட மீறல்கள். ஜெனிவா ஒப்பந்தத்தின் பொதுப்பிரிவு 3இன் கீழான மீறல்கள். போராளிகளுக்கும் பொதுமக்களுக்கும் இடையே வேறுபாட்டின் தேவை. பொதுமக்கள் மற்றும் பொதுமக்கள் கட்டமைப்புகள் மீது தாக்குதல்கள் நடத்துவதன் மீதான தடை. பொதுமக்களுக்கு எதிராகப் பாகுபாடற்ற அல்லது பொருத்தமற்ற தாக்குதல்கள் மீதான தடை. தாக்குதல்களுக்கு முன்பும் தாக்குதல் நடத்தும்போதும், போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்கான தேவை. மருத்துவ மற்றும் மனித நேயப் பணியாளர்கள் மற்றும் கட்டமைப்புகளுக்குச் சிறப்புப் பாதுகாப்பு வழங்க வேண்டிய அவசியம். பொதுமக்களைப் பட்டினிப்போடுவது மற்றும் மனிதநேய உதவிகளை மறுப்பதன் மீதான தடை. வலுக்கட்டாயமாகக் காணாமல் போகச் செய்தல் மீதான தடை. சுதந்திரம் மறுக்கப்பட்டவர்களைக் குறைந்தபட்ச அளவிலான மரியாதையுடன் நடத்துவதற்கான தேவை. மற்றும் இறந்தவர்கள் மற்றும் காணாமல் போனவர்கள் குறித்த தேவைகள்.

மனித உரிமைச் சட்டத்தைப்பொருத்தவரையில் கீழ்க்காணும் மீறல்களை

அரசு புரிந்ததை தகுதிவாய்ந்த குற்றச்சாட்டுகள் குறிக்கின்றன : உயிர் மற்றும் உடல் பாதுகாப்பு மற்றும் ஒரு தனிநபரின் அடிப்படைப் பாதுகாப்பு குறித்த உரிமைகள். காரணமற்ற தடுப்புக்காவல் மீதான தடை. உணவு நீர் உடை உறைவிடம் மற்றும் ஆரோக்கியம் ஆகியவற்றிற்கான உரிமைகள். ஒன்றுகூடுவது மற்றும் ஒன்றிணைவதற்கான சுதந்திரங்கள். பெண்களின் உரிமைகள். குடும்பங்களுக்கான சிறப்புப் பாதுகாப்பு. குழந்தைகளுக்கான சிறப்புப் பாதுகாப்பு. பலனளிக்கக்கூடிய நிவாரணத்திற்கான உரிமை. காணாமல் போகச்செய்தல் மீதான தடை. மற்றும் கருத்துக்கொள்வது மற்றும் கருத்தை வெளிப்படுத்துவது ஆகியவற்றிற்கான சுதந்திரம்.

(ஆ) விடுதலைப்புலிகளைப் பொருத்தவரையில் தகுதிவாய்ந்த குற்றச்சாட்டுகள் கீழ்க்காணும் மீறல்களைக் குறிக்கின்றன : ஜெனிவா ஒப்பந்தத்தின் பொதுப்பிரிவு 3. மக்கள் நெருக்கமாக வாழும் இடங்களில் இராணுவ தளவாடங்களைப் பொருத்துவது மீதான தடை. குழந்தைகளை வலுக்கட்டாயமாகப் படையணியில் இணைப்பது மீதான தடை. மற்றும் வலுக்கட்டாயமாக வேலை வாங்குவது மீதான தடை.

(இ) அரசின் சார்பாக செயல்படக்கூடிய தனிநபர்கள் புரிந்திருக்கக்கூடிய கீழ்க்காணும் போர்க் குற்றங்களைத் தகுதிவாய்ந்த குற்றச்சாட்டுகள் குறிக்கின்றன : ஜெனிவா ஒப்பந்தத்தின் பொதுப்பிரிவு 3இன் கீழ் மிக மோசமான மீறல்கள். பொதுமக்கள் மீதான திட்டமிட்ட தாக்குதல்கள். பொதுமக்கள் மீது பாகுபாடற்ற மற்றும் பொருத்தமற்ற தாக்குதல்கள். மனிதநேயக் குழுக்கள் மற்றும் செஞ்சிலுவை பொறிக்கப்பட்ட கட்டமைப்புகள் உள்ளிட்ட மருத்துவ மற்றும் மனிதநேயப் பொருட்கள் மீதான தாக்குதல். பொதுமக்களைப் பட்டினி போடுவது மற்றும் மனிதநேய உதவிகளை மறுப்பது. மற்றும் வலுக்கட்டாயமாகக் காணாமல் போகச்செய்வது.

(ஈ) விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்கள் புரிந்திருக்கக்கூடிய கீழ்க்காணும் போர்க் குற்றங்களைத் தகுதிவாய்ந்த குற்றச்சாட்டுகள் குறிக்கின்றன : ஜெனிவா ஒப்பந்தத்தின் பொதுப்பிரிவு 3இன் கீழ் மிக மோசமான மீறல்கள். குழந்தைகளை வலுக்கட்டாயமாகப் படையணியில் இணைப்பது.

(உ) அரசு புரிந்திருக்கக்கூடிய கீழ்க்காணும் மனிதத்திற்கு எதிரான குற்றங்களைத் தகுதிவாய்ந்த குற்றச்சாட்டுகள் குறிக்கின்றன: கொலை, அழித்தொழிப்பு, சிறைப்படுத்துதல், பாகுபாடுகள் மற்றும் காணாமல் போகச்செய்தல்.

(ஊ) விடுதலைப்புலிகள் புரிந்திருக்கக்கூடிய கீழ்க்காணும் மனிதத்திற்கு எதிரான குற்றங்களைத் தகுதிவாய்ந்த குற்றச்சாட்டுகள் குறிக்கின்றன: கொலை.

(எ) போர்க்குற்றங்கள் மற்றும் மனிதத்திற்கு எதிரான குற்றங்கள் ஆகிய இரண்டைப் பொருத்தவரையில், மேலதிகாரிகள் தங்களுக்குக் கீழ் பணிபுரிந்தவர்களின் செயல்களுக்குப் பொறுப்பாகிறார்கள் என்பதற்குத் தகுதிவாய்ந்த சான்றுகள் இருக்கின்றன.

260) இந்தத் தகுதிவாய்ந்த மீறல் குற்றச்சாட்டுகள், அதன் மீது ஒரு சரியான விசாரணையையும், இதற்குப் பொறுப்பானவர்களுக்குத் தண்டனை அளிக்கப் படுவதையும் கோருகிறது. •

வளர்ச்சித் திட்டங்களும் மனித நேய உதவிகளும் நிவாரணத்தோடு சமன் படுத்த இயலாது என் பதை வலியுறுத்துவதும் அவசியமாகிறது. நிவார ணங்கள் என்பவை அர சின் சார்பாக அங்கீகரிக் கப்பட்டு, மக்களின் உரி மைகள் மீறப்பட்டதால், அவர்களுக்கு வழங்கப்பட வேண்டுமே ஒழிய, மனித நேய அடிப்படையில் அல்ல. இதனால் மனிதநேயஅடிப் படையின் முக்கியத்துவம் குறைந்துவிடவில்லை.



5 பொறுப்பேற்பது: இலங்கையின் அணுகுமுறை

இந்த அத்தியாயத்தில் உலகளாவிய வரையறைகள் மற்றும் ஒப்பிடக்கூடிய அனுபவங்களின் அடிப்படையில், அத்தியாயங்கள் மூன்று மற்றும் நான்கில் ஆய்வுக்குட்படுத்தப் பட்ட மீறல் குற்றச்சாட்டுகளின், வீச்சு மற்றும் தன்மையைக் கருத்தில் கொண்டு, பொறுப்பேற்பது குறித்த இலங்கையின் அணுகுமுறையைக் குழு ஆராய்கிறது.

அ) பொருந்தக்கூடிய உலகளாவிய வரையறைகள் மற்றும் ஒப்பிடக்கூடிய அனுபவங்கள்

262) இலங்கையைப் போன்றே போர் நடைபெற்று முடிந்த பல அரசுகளும் இதே மாதிரியான மீறல்களைக் கண்டிருக்கின்றன. அவை போர்க் குற்றங் களாகவும் மனிதத்திற்கு எதிரான குற்றங்களாகவும் அளவிடக்கூடிய அளவில் இருந்திருக்கின்றன. இந்த அனுபவங்கள் பல்வேறு அரசுகளிடமிருந்து பெறப் பட்டப் போதும், இத்தகைய குற்றச்சாட்டுகள் மீது தேவையான எதிர்வினைகள் குறித்த உலகளாவிய வரையறைகளில் ஓர் உலகளாவிய எதிர்பார்ப்பை ஏற்படுத்திய தோடு அந்த வரையறைகளுக்கு உட்பட்டு இந்தக் குற்றங்களைக் கையாள்வதில் பல்வேறு விதமான நடைமுறை அணுகுமுறைகளையும் தந்துள்ளன.

263) இலங்கை ஒரு தரப்பினராக உள்ள பல்வேறு உலகளாவிய மனித உரிமை ஒப்பந்தங்களில் விசாரணை குறித்த கடப்பாடுகள் உள்ளன. குடிமை மற்றும் அரசி யல் உரிமைகளுக்கான உலகளாவிய ஒப்பந்தத்தின் பிரிவு 2 (3) படி, மனித உரிமை மீறல்களுக்குப் பலியானவர்களுக்கு பயன்தரக்கூடிய ஒரு நிவாரணத்தை அரசு அளிப்பது அவசியமாகிறது. இந்த ஒப்பந்தத்தின் இந்தப் பிரிவினை அய்.நா.வின் மனித உரிமைக் குழு விவரித்துள்ளது. அதன்படி இந்த ஒப்பந்தத்தில் கூறப் பட்டுள்ள அனைத்து மீறல்களையும் அரசு விசாரிப்பது அவசியமாகிறது. அந்த விசாரணையில் மிக மோசமான மீறல்கள் நடந்திருப்பின் அல்லது உலகளாவிய குற்றங்கள் நடந்திருப்பின், அதனைச் செய்தவர்களை நீதியின் முன் நிறுத்துவது அவசியமாகிறது. இலங்கை ஒரு தரப்பினராக உள்ள 'சித்திரவதை மற்றும் பிற கொடூரமான மனிதத் தன்மையற்ற அல்லது தரம் குறைந்த நடத்தை அல்லது தண்டனை ஆகியவற்றிற்கு எதிரான தீர்மானங்களின்' பிரிவு 12இன் படி சித்திரவதை எனப்படும் உலளாவிய குற்றத்தைச் செய்ததாக குற்றஞ்சாட்டப்படும் அனைவரும் அரசினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு தண்டனை அளிக்கப்பட வேண்டும் அல்லது விசாரணை நடத்தி தண்டனை அளிப்பதற்கு அது தொடர்புடைய வேறு அரசிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

264) ஒரு சுதந்திரமான வல்லுநர்க் குழு, அண்மையில் மனித உரிமை ஆணையத்திடம் அளித்த ஓர் அறிக்கையில், மனித உரிமை ஒப்பந்தங்கள் மற்றும் குடிமை மற்றும் அரசியல் உரிமைகளுக்கான உலகளாவிய ஒப்பந்தம் விவரிக்கும் அய்.நா.வின் மனித உரிமை க் குழுவின் அறிக்கை ஆகியவற்றின் கீழ் மனித உரிமை நீதி மன்றங்கள் எடுத்த முடிவுகளின் படி விசாரணைக்கான சட்டபூர்வ வரையறைகளின் பயனுள்ள பட்டியலைக் கொண்டுள்ளது.

265) இந்த ஒப்பந்தங்களின் அடிப்படையில் எழும் கடப்பாடுகளைக் கடந்து விசாரணை செய்ய வேண்டியக் கடமையானது. பல்வேறு பிற உலகளாவிய அமைப்புகள் மற்றும் தீர்மானங்களிலும் குறிக்கப்பட்டுள்ளது. மனித உரிமைச் சட்டத்தைப் பொதுஅவையில் விவரித்துள்ளது. அதன்படி அதன் தீர்மானம் 60/147, 2006 'உலகளாவிய மனித உரிமை மற்றும் மனித நேயச் சட்ட மீறல்களுக்கு பலியானவர்களுக்கு நிவாரணமும் மறுவாழ்வும் பெறுவதற்கான உரிமை குறித்த அடிப்படை கொள்கைகள் மற்றும் வழிகாட்டு நெறிகள்' என்பதில் விசாரணை செய்வதற்கான கடப்பாட்டை விவரித்துள்ளது. ஆயுதப் போரில் பொதுமக்களின்

இந்த அறிக்கையில் ஆராயப்பட்டுள்ள தகுதிவாய்ந்த குற்றச் சாட்டுகள் மூலம், இதில் குறிப்பிடப்பட்டுள்ள செயல்கள், அரசு கூறுவது போல் பொதுமக்களை பயங்கரவாதத்திலிருந்து பாதுகாக்கும் முயற்சியில் தவறியது என்பதைக் கடந்து, பெரிய அளவில், போர்க் குற்றங்கள், மனிதத்திற்கு எதிரான குற்றங்கள் உட்படத் தனது மக்களின் உரிமைகள் மீது அரசு நடத்திய நேரடி யான அத்துமீறல் களாகவே உள்ளன.

பாதுகாப்பு குறித்து விவரிக்கும் தீர்மானம் 1674 (2006)இல், பாதுகாப்பு அவையும், போர்க் குற்றங்கள் மற்றும் மனிதத்திற்கு எதிரான குற்றங்கள் மூலம் மனித மாண்பிற்கு ஏற்படுத்தப்படும் இழுக்குகளை, விசாரணையிலிருந்து விலக்கி வைக்கும் தன்மையை நீக்குவதன் அவசியத்தை அடிக்கடி குறிப்பிட்டுள்ளது. இதே அணுகுமுறையை ஓர் உள்நாட்டு ஆயுதப் போரில் ஏற்படும் சூழல்களில், பொதுமக்களைக் காப்பது குறித்து விசாரணையிலிருந்து விலக்கி வைக்கும் தன்மையை கொண்டுவருவது குறித்தும் அது செயல்படுத்தியுள்ளது. கூடுதலாக இலங்கை உட்பட பல்வேறு அரசு மற்றும் அரசாங்கத் தலைவர்கள் பங்கேற்ற உலக மாநாட்டின் விளைவாக 2005இல் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானமான 60/1இல், போர், இனப்படுகொலை, போர்க்குற்றங்கள், இனச்சுத்திகரிப்பு மற்றும் மனிதத்திற்கு எதிரானக் குற்றங்களிலிருந்து தங்கள் மக்களைக் காக்கும் பொறுப்பு அரசுக்கு இருப்பதை உறுதி செய்துள்ளது.

இந்த மீறல்களை ஏற்றுக் கொள்வதன் வெளிப் பாடாக நிவாரணங்களை அரசு பயன்படுத்த வேண்டும். பாதிக்கப் பட்டவர்களுக்குப் பதில் உரைப்பதாக இருக்க வேண்டும். பொறுப் பேற்பதை மூடிமறைப் பதாக இருக்கக்கூடாது. சமூக அளவிலான நிவார ணங்கள் போன்று நிவார ணங்களாகவும் வளர்ச்சித் திட்டங்களாகவும் இருக்கக்கூடியவை, நிவார ணங்களின் ஒரு பகுதியாக இருக்கலாம். ஆனால், குற் றங்களை ஏற்றுக்கொள்ளுதல் என்பதுதான் இந்த அணுகுமுறையின் மய்ய மாக இருக்க வேண்டும்.

266) கூடுதலாக, பொறுப்பேற்பது குறித்துப் பல்வேறு முக்கிய வரையறை களையும் விதிகளையும் அய்.நா.வின் பல்வேறு செயல்பாடுகள் உருவாக்கி யுள்ளன. இதில் குறிப்பான முக்கியத்துவம் வாய்ந்ததான 'போரில் விசாரணையி லிருந்து விலக்கி வைக்கப்பட்டதற்கு எதிராக, மனித உரிமைகளை காக்கவும் மேம்படுத்தவும் ஆன கொள்கைகள் – 2005' என்பதாகும். அய்.நா.வின் மனித உரிமை ஆணையம் பணித்த வல்லுநர்க் குழு உருவாக்கியுள்ள இந்த ஆவண மானது, இந்தக் குற்றங்களுக்கு பலியானவர்களுக்கு உலகளாவியச் சட்டத்தின் கீழ் மூன்று அடிப்படை உரிமைகள் உள்ளதாக ஒரு புரிந்துணர்வைக் குறித்துள்ளது: உண்மை காணும் உரிமை, நீதிக்கான உரிமை மற்றும் நிவாரணத்திற்கான உரிமை, இவற்றோடு மீண்டும் இவ்வாறு நேராது என்பதற்கான அதிகாரபூர்வ உறுதிப்பாடு களும் இணைந்துள்ளன.

267) அய்.நா.வின் உறுப்புகளில் இந்தச் செயல்பாடுகளுக்கு அப்பால், இனப்படுகொலை, போர்க் குற்றங்கள் மற்றும் மனிதத்திற்கு எதிரான குற்றங்களில் பொதுமன்னிப்புகள் வழங்குவதில் இருந்து அரசுகள் பெரிதும் பின்வாங்கியுள்ளன. அல்லது இதற்கு முன் வழங்கப்பட்ட பொதுமன்னிப்புகளை நீதி அல்லது சட்டபூர்வ நடவடிக்கைகள் மூலம் திரும்பப் பெற்றுள்ளன. இத்தகையக் குற்றங் களுக்கு பொதுமன்னிப்புகளை அனுமதிக்க இயலாது என உலகளாவிய நீதி மன்றங்களும் முடிவாக உரைத்துள்ளன. இதுவே அய்.நா.வின் கொள்கை நிலைப்பாடாகவும் உள்ளது. இலங்கை அரசும் ''பொது மன்னிப்புகள் என்பவை மறைமுகமாக விசாரணையிலிருந்து விலக்கி வைக்கும் பண்பாட்டை ஊக்கு விக்கின்றன. எனவே அது முறையற்றது என்பதே எங்களது கருத்தாகும்'' என்று கூறியுள்ளது.

268) ஓர் உள்நாட்டு ஆயுதப் போரில் நடத்தப்பட்ட உலகளாவிய மனித நேயச் சட்ட மீறல்களைப் பொருத்தவரையில், அரசுகளுக்கு அதனை விசாரிக்க வேண்டிய சட்டபூர்வ கடமை உள்ளது என்பது குறித்து உலகளாவிய நடைமுறைகளும் நீதித் துறை முன்னோடிகளும் வலுவான ஆதரவைத் தற்போது அளித்துள்ளன. அத்துடன், சான்றுகள் உறுதிப்படுத்தப்படும் எனில், இத்தகைய மீறல்கள் தண்டனைக்கு உள்ளாக்கப்பட வேண்டும். குறிப்பாகப் பன்னாட்டு ஆயுதப் போர்களில் நடத்தப்பட்ட இத்தகைய மீறல்கள் மட்டுமே விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என்றும், உள் நாட்டு ஆயுதப் போருக்கு இது தேவையில்லை என்றும் கூறப்படும் விளக்கமானது, தற்போது பொருத்தமற்றதாக உள்ளது. 'முன்னாள் யுகோஸ்லோவியாவுக்கான உலகளாவியக் குற்றவியல் தீர்ப்பாய'த்தின் சொற்களில், மனித நேயச் சட்டத்தின் கொள்கைகளும் விதிகளும் மனிதம் குறித்துக் கவனத்தில் கொள்ள வேண்டிய குறைந்த பட்சக் கூறுகளை வெளிப்படுத்து கின்றன. எத்தகைய ஆயுதப்போராயினும், அவற்றில் கடைப்பிடிக்க வேண்டிய குறைந்தபட்ச நடத்தை விதிகளாக இவை பரவலாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இந்தச் செயல்களின் தன்மை குறித்து எவரும் சந்தேகம் கொள்ள இயலாது. அத்துடன்,

இவை தடை செய்யப்பட்டது குறித்து உலகச் சமூகத்தின் அக்கரையையும் எவரும் சந்தேகிக்க இயலாது. உள்நாட்டு ஆயுதப் போரில் நடத்தப்பட்ட மோசமான மீறல்களை விசாரிப்பதற்கான கடமை, பொது அவையின் தீர்மானம் 60/147இல் ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. உள்நாட்டு ஆயுதப் போரில் நடந்த போர்க் குற்றங்களை, அரசின் வழக்கங்களுக்கு உட்பட்டும், அதனை ஆழமாக ஆராய்ந்தும், அதன் அடிப்படையில் விசாரணை மற்றும் தண்டனைக்கு உட்படுத்த வேண்டிய கடமை, வழமையான உலகளாவியச் சட்டத்தின் கீழ் அரசுகளுக்கு இருப்பதை, உலகளாவிய மனித நேயச் சட்டத்தை விளக்குவதில் ஒரு சிறப்பான பங்கை ஆற்றும் செஞ்சிலுவைச் சங்கமும் உறுதி செய்கிறது.

269) உலகளாவிய மனித நேய அல்லது மனித உரிமைச் சட்ட மீறல்களுக்குப் பொறுப்பேற்பதை உறுதி செய்ய குறிப்பான நடைமுறைத் திட்டங்களை அரசுகள் செயல்படுத்த வேண்டிய தேவையை, மேலே விளக்கப்பட்ட சட்டபூர்வக் கடமைகளும் வரையறைகளும் விளக்குகின்றன. மிகப்பெரிய அளவில் மீறல்கள் நடந்த காலக்கட்டத்தில் இருந்து மீண்டு வரக்கூடிய எந்த அரசும் ஒரு நிரந்தரமான அமைதியையும், மேம்பட்டதொரு எதிர்காலத்தையும் கட்டியெழுப்பும் நோக்கத்தைக் கொண்டிருப்பின், அது கடந்த காலத்தை புறந்தள்ளாது. அதனை நேருக்கு நேராக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதை இந்த நடைமுறைகள் காட்டுகின்றன. போருக்குப் பின்னான காலத்திலோ அல்லது ஒரு மாற்றத்திற்கான காலக்கட்டத்திலோ ''பொறுப்பேற்பதை உறுதிப்படுத்தவும், நீதியை வழங்கவும், மறு சீரமைப்பை அடையவும், கடந்த காலப் பாரிய மீறல்களை நேருக்கு நேராக எதிர்கொள்ளும் சமூகத்தின் முயற்சிகளோடு தொடர்பு கொள்ளக்கூடிய நடைமுறைகளையும் திட்டங்களையும் முழு அளவில்' அரசுகள் உருவாக்க வேண்டும். இந்த நடைமுறைகளும் திட்டங்களும் மொத்தமாக சமூக மாற்றத்திற்கான நீதி என்று வழங்கப்படுகின்றன. செயலாளர் நாயகத்தின் சொற்களில் : ''பொறுப்பேற்பது குறித்த தேவை உண்மை மற்றும் நிவாரணம், அமைதியை நிலை நிறுத்துதல் மற்றும் சனநாயகம் மற்றும் சட்டத்தின் ஆட்சியை கட்டமைத்தல் ஆகியவை உள்ளிட்ட பல்வேறு நோக்கங்களைச் சமன் படுத்தக்கூடிய ஓர் அணுகுமுறையின் தேவையே, போருக்குப் பின்னான சூழல்களின் மிகப்பெரும் சவாலாகும். ஒரு மாற்றத்திற்கான நீதி தேவைப்படும்போது, அதற்கானத் திட்டங்கள் முழுமையானதாகவும் தனி நபர்களுக்கு தண்டனை வழங்குதல், நிவாரணம் அளித்தல், உண்மையை அடைதல், அதிகாரபூர்வ மறுவாழ்வு, ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் நீக்குதல் அல்லது இவையனைத்தும் தேவைப்படும் சூழல்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.''

270) மீறல்களின் வடிவங்களைக் கையாள்வதற்கு தேவையான, ஒன்றோடொன்று தொடர்புடைய நடவடிக்கைகளாக, மாற்றத்திற்கான நீதி எனப்படும் இந்தக் கோட்பாடு உலகளாவிய ஒப்புதலைப் பெற்றுள்ளது. மாற்றத்திற்கான நீதி என்பது தனிப்பட்ட மீறல்களை ஆராயும் அதே நேரத்தில், அதற்கும் மேல் இது சிக்கலான கட்டமைப்பின் அநீதிகளின் விளைவாக எழக்கூடிய வன்முறையின் வடிவங்கள் மற்றும் முறைகள் குறித்தும் ஆராய்கிறது. மீண்டும் செயலாளர் நாயகத்தின் சொற்களில் ''மீறல்களின் தன்மை மற்றும் வீச்சு குறித்துத் திட்டமிட்ட மற்றும் சுதந்திரமான முறையில் ஆராயும் பணியில், மாற்றத்திற்கான நீதி என்பது மேலும் மோதல்கள் நடைபெறுவதைத் தடுக்கவும், அமைதியைக் கட்டமைக்கவும், மறு சீரமைப்பை முழுமைப் படுத்தவும், பரந்துபட்ட நோக்கங்களையும் அடைவதற்கு உதவுகிறது.''

271) மாற்றத்திற்கான நீதியின் அடிப்படை என்பது கடந்தகாலத்தில் உழன்றுகொண்டிருப்பதோ அல்லது பரிகாரம் தேடுவதோ அல்ல. மாறாக கடந்தகாலக் குற்றங்களுக்குப் பொறுப்பேற்பதை உறுதிசெய்வதன் மூலம், வன்முறையின் சுழற்சியை உடைப்பதும், விசாரணையிலிருந்து விலக்கிவைக்கும் தன்மை மற்றும் மறுப்பை எதிர்கொள்வதும், பாதிக்கப்பட்டவர்களின் துன்பத்தை

இந்த ஆணையத்தின் தலைவர் ஏப்ரல் 2007 முதல் டிசம்பர் 2008 வரை அட்டர்னி ஜெனரலாகப் பணிபுரிந்துள்ளார். அந்த அடிப்படையில் க.பா.இ.ஆ.விற்கு முன், அரசின் தலைமை சட்ட அதிகாரியாக பல விஷயங்களில் அவர் செயல்பட்டுள்ளார். அத்துடன், இதற்கு முன் அமைக்கப்பட்ட விசாரணை ஆணையத்தில் (ஆகஸ்ட் 1, 2005 முதல் இலங்கையில் எழுந்திருக்கக்கூடிய மோசமான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் குறித்து விசாரிக்க அமைக்கப்பட்ட ஆணையம்) அவருக்கு உள்ள செல்வாக்கு, ஒரு முக்கியமான முரணை வெளிப்படுத்துவதாக உள்ளது. ஆணையத்தின் பணியைக் கண்காணிக்க அமைக்கப்பட்ட 'முக்கிய நபர்களின் பன்னாட்டு சுதந்திரக் குழு' அதை வெளிப்படையாக விமர்சிப்பதற்கான முக்கிய காரணமாக இதுவே அமைந்துவிட்டது.

ஆணையத்தின் இரண்டாவது உறுப்பினர் போரின் இறுதிக் கட்டங்களில் அய். நா. வில் இலங்கைக்கான நிரந்தரப் பிரதிநிதியாக இருந்தார். அக்காலக் கட்டத்தில் நிலவிய இராணுவ மற்றும் மனித நேயச் சூழல்கள் குறித்து அரசின் கருத்துகளை எடுத்துரைக்கவும், அதற்காக வாதிடவும் செய்தார். மூன்றாவது உறுப்பினர், ஆணையத்தின் ஆய்வில் உள்ள காலக்கட்டத்தில், முதலில் வெளியுறவுத் துறை அமைச்சகத்தில் சட்ட ஆலோசகராக இருந்து பின்னர் அந்த அமைச்சகத்தின் உலகளாவியச் சட்டச் சிக்கல்களுக்கான ஆலோசகராக செயல் பட்டார்.

அங்கீகரிப்பதும் ஆகும். மேலும் விரிவாக, திட்டமிட்ட மற்றும் கட்டமைகப் பட்ட கூறுகளையும், போருக்கு வெளியே இருக்கக்கூடிய அல்லது போருக்கு முன் நடந்த அநீதிகளையும், பெண்களுக்கு எதிரான பாகுபாடுகள் உட்பட போரின் அனுபவங்களையும், மீறல்களின் தன்மையையும் நிர்ணயித்தவற்றைக் கையாள்வதே அதன் நோக்கமாகும். மக்களுக்கும் அரசுக்கும் இடையிலான நம்பகத்தன்மையை மீண்டும் கட்டி எழுப்பவும், சட்டத்தின் ஆட்சியை வலுப்படுத்தவும், அதன் மூலம் வருங்காலத்தில் ஒரு மோதல் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்குப் பங்களிக்கவும் அது முயல்கிறது. இந்த நோக்கில் மாற்றத்திற்கான நீதி என்பது உண்மையில் தொலை நோக்குக் கொண்டதே. சான்றாக, தென்னாப்பிரிக்காவில் இந்த நடைமுறையானது ஓர் ஆழமான இனவாத அரசை, அதன் அரசமைப்புச் சட்டத்தின் முன்னுரையில் குறிப்பிடப் பட்டிருப்பதைப்போல, 'ஜனநாயக கூறுகள், சமூகநீதி மற்றும் அடிப்படை மனித உரிமைகள் ஆகியவற்றின் அடிப்படையிலான' சமூகமாக மாற்ற அது துணைபுரிந்தது.

272) மாற்றத்திற்கான நீதி என்பது, பொறுப்பேற்பது குறித்த தனது அணுகு முறையில், இலங்கை தனது கவனத்தை குவிப்பதற்கு பயனாக இருக்கக்கூடிய கண்ணாடியாகும். பெரு நாட்டில் நேர்ந்ததைப்போல, ஓர் எழுச்சியை அரசு தோற்கடித்தது உள்ளிட்ட எவ்வகையான போருக்குப்பின்னான சூழலுக்கும் இது பொருந்தும். குறிப்பாக, பாதிக்கப்பட்டவர்களுக்கு உண்மை, நீதி மற்றும் மறுவாழ் விற்கான உரிமைகள் இருப்பதை இலங்கை உறுதிசெய்யவேண்டும். இவை அனைத்தும் உலகளாவிய வரையறைகளின் அடிப்படையிலும், மாற்றத்தற்கான நீதி அணுமுறையின் முக்கிய பங்காகவும் இருக்கவேண்டும்.

273) உண்மைக்கான உரிமை என்பது வலுக்கட்டாயமாகக் காணாமல் போக்கப்பட்டவர்கள் தொடர்பாகவும், அவர்களின் நிலையை அறிவதற்கு அவர்களின் உறவினர்களுக்கு உள்ள உரிமைகளின் அடிப்படையிலும், அய். நா. வின் மனித உரிமைக்குழுவின் முடிவுகள் மற்றும் அமெரிக்க நாடுகளுக்கான ஆணையம் மற்றும் மனித உரிமைகள் நீதிமன்றம் ஆகியவற்றின் தீர்ப்புகள் ஆகியவற்றிலிருந்து முதன்முதலில் விவரிக்கப்பட்டது. உண்மை முழுவதுமாக அறியப்படாத நிலையில், நிகழ்வுகள் எவ்வாறு நடந்தன என்பது குறித்து முரண்பாடான கூற்றுகள் நிலவும் சூழலில், அரசின் மறுப்பு இருக்கும் போது அல்லது வரலாற்றுபூர்வமான மறு ஆய்வு என்பது ஆதிக்கம் செலுத்தும் நிலையில் அல்லது பாதிக்கப்பட்டவர்களை திட்டமிட்ட முறையில் அமைதிப்படுத்தும் சூழலில், உண்மைக்கான உரிமையை உறுதிப்படுத்துவதும் நடைமுறைப்படுத்தும் செயல்களில் ஈடுபடுவதும் குறிப்பான முக்கியத்துவம் பெறுகிறது.

274) பல ஆண்டுகளாக நடத்தப்பட்ட 'மனித உரிமை அல்லது மனித நேயச் சட்ட மீறல்களின் வடிவங்கள் குறித்து விசாரிக்கும் அதிகாரபூர்வ, தற்காலிக, நீதித்துறை அல்லாத உண்மை அறியும் அமைப்புகள்' என்று செயலாளர் நாயகம் விவரித்துள்ள உண்மை ஆணையங்களை அமைப்பது என்பது உண்மைக்கான உரிமை முன்னெடுக்கப்படுவதற்கான ஒரு வழிமுறையாகும். மீறல்களின் வெவ்வேறு வடிவங்களை வெளிப்படுத்தவும், மோதல்களை தூண்டுவதாகவும் அதற்கு அடிப்படையாக இருக்கக்கூடியதாகவும் உள்ள பாகுபாடுகள் மற்றும் சமத்துவ மின்மைகளை அடையாளம் காணவும், அதிகாரபூர்வப் பொறுப்புகளை குறிக்கவும் உண்மை ஆணையங்கள் பயன்படுகின்றன. உண்மை ஆணையங்கள் பொதுவாக நடைமுறைகள் மற்றும் விளைவுகள் ஆகிய இரண்டிற்கும் முக்கியத்துவம் அளிக்கின்றன. அதில் உண்மையின் இந்தக் கூறுகளை மட்டும் நிறுவ முற்படாமல், பெண்கள், குழந்தைகள் போன்று குறிப்பான ஒதுக்குதலை எதிர்கொள்ளும் குழுவினர் உட்படப் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களுடைய அனுபவங்களின் குரலாகச் செயலாற்றவும் முற்படுகிறது. அண்மையில் வெளிவந்த ஒரு நூல், 1974 முதல் 2009 வரையிலான காலக்கட்டத்தில் செயல்பட்ட 40 உண்மை ஆணையங்கள் குறித்துப் பதிவு செய்துள்ளது. இவற்றில் கடந்த 10 ஆண்டுகளில் மட்டும் 21

ஆணையங்கள் செயல்பட்டுள்ளன. இவற்றில் 8 அமெரிக்கக் கண்டங்களிலும், 1 அய்ரோப்பாவிலும், 7 ஆப்பிரிக்காவிலும், 5 ஆசியாவிலும் இருந்திருக்கின்றன. இவற்றில் பெரும்பாலானவை மிக அண்மைக்காலத்தவை.

275) நீதிக்கான உரிமை என்பது பல்வேறு உலகளாவிய ஒப்பந்தங்களில் சுருக்கமாக கூறப்பட்டுள்ளது. எனினும், 1993இல் முன்னாள் யூகோஸ்லோவியா வுக்கான உலகளாவியக் குற்றவியல் தீர்ப்பாயம் ஏற்படுத்தப் பட்ட பிறகும், அதன் துணை ஆணையமாக 1994இல் ருவாண்டாவுக்காக ஏற்படுத்தப்பட்டபோதுமே, அதை நடைமுறைப்படுத்துவதில் மிகப்பெரிய மாற்றங்கள் ஏற்பட்டன. உலகளாவிய குற்றவியல் நீதிமன்றத்தின் ரோம் தீர்ப்பின் மூலம் இது வலுப்படுத்தப்பட்டது. இத்தீர்ப்பு 2002இல் நடைமுறைக்கு வந்தது. தற்போது 114 அரசுகள் இதில் கையெழுத்திட்டுள்ளன (இலங்கை அதில் ஒன்றன்று) மனித இனத்திற்குத் தெரிந்த மிக மோசமான குற்றங்கள் சிலவற்றைத் தடைசெய்ததன் மூலம் ரோம் தீர்ப்பு உல களாவியச் சட்ட அமைப்பில் ஒரு முக்கிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. அரசுகள் விசாரணையையும் தண்டனை அளிப்பதையும் செய்ய விரும்பாத அல்லது நேர்மையாகச் செய்ய இயலாத நிலையில் மட்டுமே உலகளாவிய குற்றவியல் நீதிமன்றம் அதனைச் செய்யும் என்ற கொள்கையின் மூலம் இத்தகைய குற்றங்களை விசாரிப்பதற்கு தேசிய நீதிமன்றங்களுக்கு உள்ள முக்கியத்துவம் அங்கீகரிக்கப் பட்டுள்ளது. தேசிய நீதிமன்றங்களில் இனப்படுகொலை, போர்க்குற்றங்கள் மற்றும் மனிதத்திற்கு எதிரான குற்றங்களை விசாரித்துத் தண்டனை அளிக்கும் கடமையை எழுப்பக்கூடிய உள்நாட்டுச் சட்டங்களை, பல அரசுத்தரப்பினர் நடைமுறைப் படுத்தியுள்ளனர். அர்ஜென்டினா, வங்காளதேசம், போஸ்னியா, சிலி, கொலம்பியா, காங்கோ ஜனநாயகக் குடியரசு, குத்தாமாலா, பெரு, செர்பியா, ருவாண்டா மற்றும் உகாண்டா ஆகிய பலதரப்பட்ட அரசுகள், உள்நாட்டுப் போரின்போது போர்க்குற்றங்கள் என்று வகைப்படுத்தக்கூடிய மோசமான மீறல்களை செய்ததற்காக, தங்களது சொந்தக் குடிமக்களை உள்நாட்டுக் குற்றவியல் நடைமுறைகளின் கீழ் விசாரணைக்கு உட்படுத்துவது அதிகரித்துள்ளது. கொசோவோ (1999), தைமூர் லெஸ்தே (2000), சியாரா லியோனே (2002), கம்போடியா (2003) மற்றும் போஸ்னியா (2004) உள்ளிட்ட பிற அரசுகள், தேசிய மற்றும் பன்னாட்டுப் பங்களிப்பைக் கொண்ட கூட்டு ஆணையங்களை ஏற்படுத்தி அதன் மூலம் போர்க்குற்றங்கள் மற்றும் மனிதத்திற்கு எதிரான குற்றங்களை விசாரித்தன.

276) மறுவாழ்விற்கான உரிமை என்பது, மோசமான மீறல்களைப் பொருத்த வரையில் மிக நன்றாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. நீதித்துறை மற்றும் நிர்வாகத் துறை ஆகிய இருவழிகளிலும் பல்வேறு விதமான சூழல்களில் அவை நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன. அர்ஜென்டினா, சிலி, தென் ஆப்பிரிக்கா, குத்தாமாலா, பெரு, சியாரா லியோனே, தைமூர் லெஸ்தே, மொராக்கோ மற்றும் லைபீரியா ஆகிய இடங்களில் அமைக்கப்பட்ட ஆணையங்கள் உட்படப் பல்வேறு உண்மை ஆணையங்கள் மறுவாழ்வைப் பரிந்துரைத்துள்ளன. சில நீதிமன்றங்கள் நட்டஈடு வழங்கும் அதிகாரத்தை கொண்டுள்ளன. நட்டஈடு வழங்குவது என்பது 3 முக்கிய நோக்கங்களைக் கொண்டுள்ளது. (1) பாதிக்கப்பட்டவர்களுக்கு செய்யப்பட்ட தவறை அங்கீகரிப்பது. (2) பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏற்பட்ட இழப்பையும், துன்பத்தையும் அங்கீகரிப்பது. அதன் மூலம் நட்டஈடு பெறுவதற்கான உரிமைகளை உடையவர்கள் என்ற அவர்களது அடையாளத்தை உறுதிபடுத்துவது. (3) பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏற்பட்ட இழப்பு என்பது உண்மையில் ஈடுகட்ட இயலாத ஒன்று எனினும், பாதிக்கப்பட்டவர்களுக்கு அடையாளபூர்வமாகவோ அல்லது பொருட்களின் வடிவிலோ சரியான பலனை அளிப்பது.

277) நட்டஈடு என்பது தனிநபர்களுக்கோ அல்லது சமூகக் குழுக்களுக்கோ வழங்கப்படலாம். உரிமைகளை மீட்டெடுப்பது, பணமாக ஈடுசெய்வது, மருத்துவ அல்லது உளவியல் உதவிகள், சுகாதாரக் காப்பு, கல்வி உதவி, பொருட்களைத்

வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள பாதிக்கப்பட்டவர் களும் சாட்சிகளும் போரின் இறுதிக் கட்டங்களில் நிகழ்ந்த முக்கிய நிகழ்வுகள் குறித்து அளித்த மற்றும் அளிக்கக்கூடிய நேரடியான சாட்சியங்கள் உண்மை அறிவதற்கான மய்யமாக இருந்தபோதும் இந்த வாக்குமூலங்களைக் கேட்பதற்கு க.பா.இ.ஆ. மிகக்குறைந்த நேரமே ஒதுக்கியது. கூடுதலாக, மீறல்கள் குறித்து மிகப் பொருத்தமான வாக்குமூலங்களை அளித்த சாட்சிகளுக்கு 15 முதல் 20 நிமிடங்கள் அல்லது அதற்கும் குறைவான நேரமே ஒதுக்கப்பட்டது. இது, நிகழ்வுகள் மற்றும் உண்மைகள் குறித்து சாட்சிக்கு எந்த அளவிற்குத் தெரியும் என்பதைக் கண்டறிய போதுமானதாக இல்லாததோடு, அவரின் மரியாதைக்குப் பங்கம் ஏற்படுத்துவதாகவும் உள்ளது.

திரும்ப அளிப்பது அல்லது அதிகாரபூர்வமாக வெளிப்படையாக மன்னிப்புக் கோருவது, அருங்காட்சியங்கள் அல்லது நினைவிடங்கள் கட்டுவது மற்றும் நினைவுகூரும் வகையில் அதிகாரபூர்வ நாட்களை நிறுவுவது போன்று ஏற்பட்ட இழப்பிற்கு ஈடுசெய்வது உள்ளிட்ட பல்வேறு வடிவங்களில் நட்டஈடு வழங்கப் படலாம். கூட்டுத்தன்மையில் மேற்கொள்ளப்படும் நட்டஈடு நடவடிக்கைகள், நடத்தப்பட்ட உரிமை மீறல்களை அதிகாரபூர்வமாக அங்கீகரிப்பதன் மூலமாகப் பொதுவான வளர்ச்சி முயற்சிகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டப்படுகிறது. இறுதியாகவும் முக்கியமாகவும் நட்டஈட்டில் பாலின கூறுகள் குறித்த விழிப் புணர்வு அதிகரித்து வருகிறது. பெண்கள் மற்றும் ஆண்கள் ஆகிய இருவருக்குமான குறிப்பான நடவடிக்கைகளின் விளைவுகள் மற்றும் அவற்றை நடைமுறைப் படுத்தும் வழிகள் ஆகியவற்றை ஆராய்வதற்கான தேவைவும் அதிகரித்துள்ளது.

கொழும்பு விசாரணைகளில் இருந்த மதிப்புமிகுந்த அணுகுமுறைக்கு நேர்மாறாக, காணாமல் போன மற்றும் தொலைந்துபோன அல்லது தடுத்து வைக்கப்பட்ட நபர்களை பற்றிய சிக்கல்களை எழுப்பிய பாதிக்கப் பட்டவர்களிடம் அலட்சியமான மற்றும் நிராகரிக்கின்ற அணுகுமுறையையே ஆணையர்கள் பெரும் பாலும் எடுத்துள்ளனர். இந்தச் சூழல்களில் பெரும்பாலும் கேள்வி கேட்பது என்பது எந்தக் குறிப்பிட்ட நோக்கமும் அற்றதாக இருந்தது.

ஆ) பொறுப்பேற்பது குறித்து இலங்கை அரசின் நிலை

278) பொறுப்பேற்பதைப் பொருத்தவரையில் 'அனைவருக்கும் ஒரே அளவு பொருந்தும் வழிகளையோ அல்லது வெளிநாட்டில் செயல்படுத்தபட்டவற்றை இறக்குமதி செய்யும் முறைகளையோ' அடிப்படையாக வைத்து அய்.நா. தனது ஆதரவை அமைக்கவில்லை. மாறாக 'தேசிய கணிப்புகள், தேசிய பங்கேற்பு மற்றும் தேசியத் தேவைகளும், விருப்பங்களும்' ஆகியவற்றின் அடிப்படையில் தனது ஆதரவை அது கட்டமைத்துள்ளது. இதனால் பன்னாட்டு வரையறைகளின் முக்கியத்துவம் குறைந்துவிடவில்லை. எந்த ஒரு தேசியச் செயல்முறையிலும் அது நடைமுறை ப்படுத்தப்பட வேண்டும். போரினால் பாதிக்கப்பட்டவர்கள் உண்மை, நீதி மற்றும் நிவாரணம் ஆகியவற்றைப் பெறுவதற்குரிய உரிமைகளை எவ்வாறு செயல்படுத்த முடியும் என்பதை உலகளாவிய வரையறைகள் மற்றும் ஒப்பிடக்கூடிய அனுபவங்களின் மூலம் தனது அணுகுமுறையை இலங்கை கணிக்கவேண்டும்.

279) வல்லுநர்க் குழு எழுப்பிய கேள்விகளுக்கு அளித்த எழுத்துப்பூர்வமான பதில்களிலும், இலங்கை அட்டர்னி ஜெனரல் மோகன் பெய்ரிஸ் தலைமையில் வந்த இலங்கை அரசின் ஓர் உயர்மட்டக் குழுவிற்கும் அய்.நா.விற்கும் இடையே, வல்லுநர்க் குழுவின் முன்னிலையில் பிப்ரவரி 22, 2011 அன்று நியுயார்க்கில் நடை பெற்ற கூட்டத்திலும், பொறுப்பேற்பது குறித்த தனது அணுகுமுறையை, தான் கட்டமைத்திருக்கும் தத்துவத்தை, இலங்கை அரசு விளக்கியுள்ளது. பொறுப்பேற் பதையும் மறுவாழ்வையும் சமன்படுத்தும் திட்டத்துடன், இருமுனை பொறுப்பேற்கும் கோட்பாடுகளை இலங்கை வரையறுத்துள்ளது. அதனை அட்டர்னி ஜெனரல் கீழ்க் காணுமாறு விளக்குகிறார்: (1) விடுதலைப்புலிகள் இயக்கத்தின் சில உறுப்பினர் களுக்கு எதிராக சட்டப்பூர்வ நடவடிக்கைகளை மேற்கொள்வது. (2) இலங்கையின் மக்களையும் அதன் எல்லைக்குட்பட்ட பகுதிகளையும் விடுதலைப் புலிகளிட மிருந்து காக்கவேண்டிய அரசமைப்புச் சட்டப்படியான கடப்பாட்டை நிறை வேற்ற முந்தின அரசுகள் தவறியது குறித்து அவர்கள் ஏற்க வேண்டிய அரசியல் பொறுப்பு. மேலும் தனது எழுத்துப்பூர்வமான பதிலில் அரசு கீழ்க்காணும் கூடுதல் கருத்துக்களையும் தெரிவித்தது:

> மீட்டெடுக்கப்படவேண்டிய நீதி என்ற தத்துவத்தின் அடிப்படையிலேயே கற்ற பாடங்கள் மற்றும் இணக்கத்திற்கான ஆணையம் (க.பா.இ.ஆ.) எனும் நடை முறை கட்டமைக்கப்பட்டுள்ளது என்பதை பாராட்டுவது முக்கியமானது. இந்தத் தத்துவமே சமூக அல்லது குற்றவியல் கடமைகளை ஆட்சி செய்யக்கூடியதாகும். இத்துடன், பெரும்பான்மைச் சமூகம் உட்பட அனைத்துச் சமூகங்களும், கடந்த காலத்தில் நடைபெற்றவற்றை வரலாறாற்றோடு பொருத்திப் பார்க்க வேண்டும். ஜனநாயக நடைமுறையின் மூலம் 'சட்டத்தின் ஆட்சி'யின் மேலாண்மையை அங்கீகரிக்கும் வகையில், தவறு செய்தவர்கள் தங்கள் தவறை உணர்ந்ததற்கான வெளிப்பாட்டை அளிக்கவேண்டும்.

280) தனது அணுகுமுறையின் மய்யமாக இருக்கக்கூடிய க.பா.இ.ஆ., தனி நபர்

பொறுப்பேற்பது குறித்து கவனம் செலுத்துவதைவிட மேலும் விரிவாக, தனது குடிமக்களை பாதுகாக்கும் பொறுப்பு அரசுக்கு இருப்பதை உணர்த்தக்கூடிய, 'அரசியல் பொறுப்பின்' மீது கவனம் செலுத்துவதாக, இலங்கை அரசுக் குழுவிடம் கூறியது. பிரிட்டனில் நடைபெற்ற ஈராக் விசாரணை, இதேபோன்ற பணிவரையறையைக் கொண்டிருந்ததன் அடிப்படையிலேயே க.பா.இ.ஆ.வின் இந்த கூறு உருவாக்கப்பட்டது என அட்டர்னி ஜெனரல் விளக்கியுள்ளார்.

281) போரை நடத்திய விதம் குறித்து, குறிப்பாக போரின் இறுதிக் கட்டங்களில் அரசு செயல்பட்ட விதம் குறித்து, அரசின் இந்த இருமுனை கோட்பாடுகளின் அடிப்படையில் அரசு ஏற்க வேண்டிய பொறுப்புப் பற்றி எந்த குறிப்பும் இல்லை. க.பா.இ.ஆ.நடைமுறையானது, ஒரு குறிப்பான குற்றத்தை எழுப்புமானால், அதை மேலும் விசாரிக்க வேண்டிய தேவையிருப்பின், அட்டர்னி ஜெனரல் அலுவலகத்தின் ஒரு தனியான பிரிவிற்கு அது அனுப்பப்படும் என்று இலங்கை அரசு குறிப்பிட்டுள்ளது. ஆனால், இன்றுவரையில் க.பா.இ.ஆ.விடம் அளிக்கப்பட்ட எந்தவொரு வாக்குமூலமும் அறிக்கையும் இத்தகைய பொறுப்பு அளிக்கக்கூடிய தனி நபர்களையோ அல்லதுக் குழுக்களையோ அடையாளம் காணவில்லை என மேலும் குறிப்பிட்டுள்ளது. இராணுவத்தினரின் கரங்களில் நடைபெற சாத்திமுள்ள மீறல்கள் குறித்து தான் விழிப்புடனும், உணர்வுடனும் இருப்பதாக அரசு கூறியுள்ளது. ஆனால், அதே நேரத்தில் காவல் துறை மற்றும் இராணுவ உறுப்பினர்களுக்கு எதிராக, மிகக் குறைந்த எண்ணிக்கையிலான வழக்குகளே நிலுவையில் உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது. ஆனால், இந்த அமைப்பானது, பெரிய அளவிலும் திட்டமிட்ட அடிப்படையிலும் மீறல்கள் நடந்திருப்பதற்கான சாத்தியங்களை ஒதுக்குவதாக இல்லை. இதுதான் உண்மையெனில், நடத்தப்பட்ட மீறல்கள், கொள்கையின் அடிப்படையில், அரசியல் அல்லது இராணுவத்தின் உயர்நிலைகளில் திட்டமிடப்பட்டு, ஆணையிடப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளன என்பது புரிந்து கொள்ளக்கூடியதாய் உள்ளது.

282) தென்னாப்பிரிக்காவின் உண்மை மற்றும் மறுவாழ்விற்கான ஆணையத்தின் அடிப்படையிலும், பிற இடங்களில் அமைக்கப்பட்ட வேறு சில ஆணையங்களில் அடிப்படையிலும் தனது மறுவாழ்விற்கான அணுகுமுறையை அமைத்திருப்பதாக அரசு விளக்குகிறது. அதன் அடிப்படையில் ஏறத்தாழ 1500 'விடுதலைப் புலிகள் இயக்கத் தீவிர உறுப்பினர்களுக்கு' எதிராக மட்டும் குற்றவியல் வழக்குகள் போடப்படுவதாகவும், எஞ்சியுள்ள மற்ற அனைவரையுமே மறுவாழ்வு நடைமுறைக்கு உட்படுத்துவதாகவும் எடுக்கப்பட்ட தனது முடிவை அது சுட்டிக்காட்டுகிறது. எல்லா வழக்குகளிலும் 'குறைந்த பட்ச தண்டனை வழங்கும் கொள்கையே மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதிலும் சிறையில் இருக்கத் தேவையற்ற தண்டனைகளுக்கு பெருந்தன்மையான இடம் வழங்கப்பட்டுள்ளது'. அட்டர்னி ஜெனரலைப் பொருத்தவரையில் விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்கள் எனச் சந்தேகிக்கப்படுபவர்களுக்கு எதிரான வழக்குகளை மறுஆய்வு செய்வதற்கு, அட்டர்னி ஜெனரலின் துறையை சேர்ந்த ஒரு மூத்த அதிகாரியின் தலைமையில் நான்கு உறுப்பினர்கள் கொண்ட ஒரு சிறப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

283) நட்டஈடு வழங்குவதற்கான அதிகாரமும் க.பா.இ.ஆ.க்கு உள்ளது. ஆனால் எந்த அடிப்படையில் அது வழங்கப்படும் என்பது தெளிவாக இல்லை. 'வென்றவர்கள் என்று யாரும் இல்லை, ஒழிந்தவர்கள் என்று யாரும் இல்லை' என்றும், 'ஒட்டுமொத்த தேசமும் போரினால் பாதிக்கப்பட்டுள்ளது' என்றும் 'அனைவரும் தோற்றுள்ளனர். ஒருவரும் வெல்லவில்லை' என்றும் அரசு தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளது. போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்படும் ஒட்டுமொத்த வளர்ச்சிப் பணிகளின் மூலம், போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் பயனடைவார்கள் என்றும், வடக்கு மற்றும் கிழக்கில் ஒட்டுமொத்த மறுகட்டமைப்பு என்பது அமைதியை மீட்டெடுப்பதற்கு பங்களிக்கும் என்றும் அரசு கூறுகிறது. தனது செயல்களை நிறைவேற்றும் போது மக்களின் 'இதயத்தையும்

பாதுகாப்புப்படையினரின் நடத்தைகள் குறித்துக் குற்றச்சாட்டுகள் வைக்கப்பட்டபோது, அந்தக் குற்றச்சாட்டுகள் உண்மையாக இருக்கக் கூடும் என்ற அனைத்துச் சாத்தியங்களையும் புறந்தள்ளி, பாதிக்கப் பட்டவரின் வாக்கு மூலத்தில் இருந்த முரண்களைச் சுட்டிக்காட்டி மிகுந்த சிரமம் எடுத்துக் கொண்டு ஆணையர்கள் அதனை நிராகரிக்க முற்பட்டனர். வேறுபல சூழல்களில், மனித உரிமைச் சிக்கல்கள் குறித்த சட்டங்களைத் தவறாக விவரித்தனர்.

மனங்களையும்' தொடுவதன்மூலம் தனது வேதனையை வெளிப்படுத்துவதாக இலங்கை அரசு குறிப்பிட்டுள்ளது. பொதுக்கட்டமைப்புகள் மற்றும் வீடுகள் கட்டுவது ஆகியவற்றில் வடக்கிலும் கிழக்கிலும் அரசு செலவு செய்கிறது. இதை 'நாட்டின் பிற பகுதியினரின் செலவில் செய்வதாகக்' கூறுகிறது.

க.பா.இ.ஆ. பாதிக்கப் பட்டவர்களை நடத்திய விதம் என்பது அவர்களது தன்மதிப்பிற்குப் போதுமான மரியாதை அளிப்பதாக இல்லை. மேலும் மீறல்கள் மற்றும் அவர்களின் அசாதாரணமான துன்பங்கள் குறித்த சான்றுகளையும் வாக்குமூலங்களையும் க.பா.இ.ஆ. முன் அளிப்பதற்கான ஒரு நேர்மையான வாய்ப்பை அளிக்கத் தவறியது.

284) தனது அணுகுமுறையில் அது தண்டனை வழங்கும் வழிமுறைக்கு மாறாக, நிவாரணம் காணும் வழியைத் தேர்ந்தெடுத்துள்ளது என்றும், அதன்மூலம், உண்மை ஆணையங்களை அமைத்து, ஆனால் தண்டனை வழங்கும் நிலை வரை செல்லாத, தென்னாப்பிரிக்கா உட்பட பிற நாடுகளின் அனுபவங்களிடமிருந்து தான் கற்றுக்கொண்டதாகவும் இலங்கை அரசு கூறுகிறது. இதன் மீது கருத்து கூறுவதுக் குழுவிற்கு அவசியமாகிறது. இந்த அனுபவங்களைச் சார்ந்திருப்பது என்பது வேறு ஒரு செயல்முறைக்கு இட்டுச்சென்றிருக்கும். தென்னாப்பிரிக்காவின் உண்மை மற்றும் மறுவாழ்விற்கான ஆணையம், அமைப்பு ரீதியான மற்றும் தனி நபர்களின் பொறுப்புகளை முழுமையாக விசாரித்து, இனப் பாகுபாடு பல ஆண்டுகளாகத் தொடர்வதற்கான அடிப்படை காரணங்களை எடுத்துரைத்தது. அச்செயல்களைச் செய்தவர்கள் தாங்களாகவே முன்வந்து தங்கள் செயல்கள் குறித்த முழு விவரங்களை அளிக்க வேண்டும் என அது கோரியது. அவர்களின் குற்றங்கள், அரசியல் காரண மாக செய்யப்பட்டிருப்பின், தனிப்பட்ட பொதுமன்னிப்புகளுக்கும் அது வழிவ குத்தது. மேலும் அந்த நடைமுறையானது, முழுவதும் பாதிக்கப்பட்டவர்களை மய்யப்படுத்தி இருந்தது. பாதிக்கப்பட்டவர்கள் மீறல்கள் குறித்து ஆணையத்திடம் புகார் அளிக்கவும் அதற்கு நட்டஈடு கோரவும் வாய்ப்புகளையும் ஆதரவையும் அளித்தது. ஆனால், இலங்கையின் க.பா.இ.ஆ. வின் நிலை அவ்வாறு இல்லை. அதைப்பற்றி கீழே விரிவாக விளக்கப்பட்டுள்ளது. மேலும், உண்மை ஆணையங்கள் அமைக்கப்பட்ட பெரும்பாலான நாடுகளில், குற்றவியல் நடைமுறைகளை அவை முன்பே நடத்தவில்லை. மாறாக அர்ஜென்டினா, சிலி, குத்தாமாலா, பெரு, சியாரா லியோனே, தைமூர் – லெஸ்தே மற்றும் பிற இடங்களிலும் விசாரணைகள், பின்பே நடைபெற்றுள்ளன.

285) போரின் இறுதிக்கட்டங்களில் அரசு சார்பாக மோசமான குற்றங்களைச் செய்தவர்களை எந்தவிதத்திலும் பொறுப்பாக்காமல் இருப்பது என்ற அதிகாரபூர்வ மற்ற முடிவானது, அடிப்படையில் இலங்கை அளித்துள்ள உலகளாவிய கடப்பாடு களை மீறுவதாகவும், மாற்றத்திற்கான நீதி எனும் அடிப்படையில் அனுமதிக்க இயலாதாகவும் உள்ளது. உலகளாவிய சட்டத்தின் அடிப்படையில், தண்டனை களின் முறைகளில் சில நெகிழ்வுத் தன்மை இருந்தபோதும், விசாரணைகளும் நீதி மன்ற நடைமுறைகளும் தவிர்க்க இயலாதவை. மேலும், க.பா.இ.ஆ.போன்ற ஓர் ஆணையத்தை உருவாக்குவது என்பது மட்டுமே இது குறித்த அரசின் கடமையை முழுமையடையச் செய்வது ஆகாது.

286) மீட்புக்கான நீதி என்பதைப் பற்றிய வாதத்தில், தென்னாப்பிரிக்காவின் உண்மை மற்றும் மறுவாழ்விற்கான ஆணையம் அமைக்கப்பட்டுச் செயலாற்றத் தொடங்கியது முதல், உலகச் சட்டக் கட்டமைப்பே மாறியுள்ளது. மேலும் சில குற்றங்களுக்குப் பொதுமன்னிப்புகள் இனி அனுமதிக்கப்படமுடியாது என்பதற்குப் பரவலான அங்கீகாரம் கிடைத்துள்ளது. அவ்வாறு பொதுமன்னிப்புகள் வழங்கக் கூடாது என்பதை இலங்கையும் அங்கீகரித்துள்ளது என்றபோதும், அதன் இராணுவ மற்றும் அரசியல் தலைவர்களின் பொறுப்பேற்கும் அவசியம் குறித்து எவ்வித நடவடிக்கைகளையும் அது எடுக்கவில்லை. விடுதலைப்புலிகள் இயக்க உறுப் பினர்களுக்கு சிறை தண்டனை அல்லாத நடைமுறைகளைத் தேர்ந்தெடுக்கலாம் என்றும், க.பா.இ.ஆ.வை, பொறுப்பேற்கும் பிற சிக்கல்களை ஆராய விதிக்கலாம் என்றும் வாதிடுகிறது. இந்த விஷயத்தில் விடுதலைப்புலிகளைப் பொருத்தவரையில் இலங்கையின் அணுகுமுறையானது, கொலம்பியாவில் 2005இல் நீதி மற்றும் அமைதிச் சட்டத்தின் முதல் வரைவின் சில கூறுகளை ஒத்திருக்கிறது. 2006 இல் அதன் அரசமைப்புச் சட்ட நீதிமன்றம் அதை மறுஆய்வு செய்து, வரைவுச் சட்டத்தின்

முக்கியப் பகுதிகள் ஏற்புடையவை அல்ல என்பதைக் கண்டன. குறிப்பாக, சிறைத் தண்டனை அல்லாத தண்டனைகளுக்கான வாய்ப்புகள் என்பது, கருத்தில் உள்ள குற்றங்களின் தீவிரத்தோடு ஒப்பிடுகையில், அதற்கு ஈடுசெய்வதாக இல்லை. மேலும், பாதிக்கப்பட்டவர்களுக்கு உண்மை மற்றும் நிவாரணம் அளிப்பதை உறுதி செய்வதை வலுப்படுத்தும் வகையில் சட்டம் இருக்க வேண்டும் என அரசமைப்புச் சட்ட நீதிமன்றம் கோரியது.

287) நிவாரணம் வழங்கும் நீதி மற்றும் தண்டனை வழங்கும் நீதி என்பவற்றிற்கு இடையே தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு உள்ளது என்பதே ஒரு பொய்யான கருத்தியலின் அடிப்படையில் எழுந்ததாகும். மீறல்களை விசாரித்து குற்றங்களுக்கு உரிய தண்டனைகளை அளிப்பதன் மூலம் நீதியை உறுதிபடுத்துவதும், உண்மை மற்றும் நிவாரணங்கள் உட்பட, பாதிக்கப்பட்டவர்களுக்கு பிற வழிமுறைகளை நடை முறைப்படுத்துவதும் அரசின் கடமை என உலகளாவிய வரையறைகள் கோருகின்றன. குற்றவியல் நீதியை, தண்டனை நீதியோடு சமன்படுத்துவது என்பது சரியானது அல்ல. ஏனெனில், குற்றவியல் நீதியின் நோக்கங்கள், தண்டனைகளை தாண்டியும் இருக்கின்றன. முக்கியமாகக் கோட்பாடுகளை உறுதிப்படுத்தவும், ஒருசமூகத்தில் உள்ள அனைத்துக் குடிமக்களுக்கும் அவற்றின் பொருத்தப்பாட்டைச் செயல்படுத்தவும், அதன்மூலம் இதே போன்ற குற்றங்கள் எதிர்காலத்தில் நடப்பதைத் தவிர்த்துப் பொறுப்பேற்பதை வலுப்படுத்துவதுமான முயற்சியில் அது ஈடுபட்டுள்ளது.

288) வளர்ச்சித் திட்டங்களும் மனித நேய உதவிகளும் நிவாரணத்தோடு சமன் படுத்த இயலாது என்பதை வலியுறுத்துவதும் அவசியமாகிறது. நிவாரணங்கள் என் பவை அரசின் சார்பாக அங்கீகரிக்கப்பட்டு, மக்களின் உரிமைகள் மீறப்பட்டதால், அவர்களுக்கு வழங்கப்படவேண்டுமே ஒழிய, மனிதநேய அடிப்படையில் அல்ல. இதனால் மனிதநேயஅடிப்படையின் முக்கியத்துவம் குறைந்துவிடவில்லை. இந்த அறிக் கையில் ஆராயப்பட்டுள்ள தகுதிவாய்ந்த குற்றச்சாட்டுகள் மூலம், இதில் குறிப்பிடப் பட்டுள்ள செயல்கள், அரசு கூறுவதுபோல் பொதுமக்களை பயங்கரவாதத்திலிருந்து பாதுகாக்கும் முயற்சியில் தவறியது என்பதை தாண்டி, பெரிய அளவில், போர்க் குற்றங்கள், மனிதத்திற்கு எதிரான குற்றங்கள் உட்படத் தனது மக்களின் உரிமைகள் மீது அரசு நடத்திய நேரடியான அத்துமீறல்களாகவே உள்ளன. இந்த மீறல்களை ஏற்றுக்கொள்வதன் வெளிப்பாடாக நிவாரணங்களை அரசு பயன்படுத்தவேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்குப் பதில் உரைப்பதாக இருக்கவேண்டும். பொறுப்பேற் பதை மூடிமறைப்பதாக இருக்கக்கூடாது. சமூக அளவிலான நிவாரணங்கள் போன்று நிவாரணங்களாகவும்வளர்ச்சிதிட்டங்களாகவும் இருக்கக்கூடியவை, நிவாரணங்களின் ஒரு பகுதியாக இருக்கலாம். ஆனால், குற்றங்களை ஏற்றுக்கொள்ளுதல் என்பதுதான் இந்த அணுகுமுறையின் மய்யமாக இருக்க வேண்டும்.

289) இறுதியாக, அர்ஜென்டினா முதல் தென்னாப்பிரிக்கா வரை, மொராக்கோ முதல் தைமூர் – லெஸ்தே வரை, வேறு பல சமூகங்களில் மாற்றத்திற்கான நீதியின் கட்டமைப்புக்குள் பொறுப்பேற்பது என்பது, செயல்மிக்கதொரு குடிமைச் சமூகத் தினால் வளர்த்தெடுக்கப்பட்டு, பாதிக்கப்பட்டவர்களின் குழுக்கள் மற்றும் மனித உரிமை அமைப்புகளின் விவாதங்கள், கலந்துரையாடல்கள் மற்றும் செயல்பாடுகள் ஆகியவற்றிற்குக் கூடுதலான வாய்ப்பை வழங்கும் விதத்தில் அமைந்திருந்தன. தற்போது இத்தகைய முயற்சிகளுக்கு இலங்கையின் சூழல் சாதகமாக இல்லை. சாதாரண நினைவுகூரல் நிகழ்வுகளோ அல்லது பிற வடிவிலான நினைவேந்தல் களோ தடைசெய்யப்பட்டுள்ளன. இன்னும் பெரிய அரசியல் வெளியை ஏற்படுத்தவும், சுதந்திரமான விவாதங்களை அனுமதிக்கவும், போரின் இறுதிக்கட்டங்களில் நடந்த உண்மைகளை ஆவணப்படுத்தும் சுதந்திரமான முயற்சிகளை அனுமதிக்கவும், தேவையான முக்கிய முயற்சிகளை இலங்கை அரசு எடுக்கவில்லையெனில், பொறுப் பேற்பதற்கும் பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிக்கவும் ஒரு சரியான பங்களிப்பைச் செய்ய, சிறந்ததொரு முறையில் வடிவமைக்கப்பட்ட மாற்றத்திற்கான நீதி அணுகுமுறையால் கூட இயலாது போய்விடும்.



தங்களது உரிமைகள் மீறப்பட்டது குறித்தும், தங்களது குடும்ப உறுப்பினர்களின் உரிமைகள் மீறப்பட்டது குறித்தும், க.பா.இ.ஆ. முன் வெளிப்படையாக பேசுவதற்குப் பெரும் எண்ணிக்கையிலான பெண்கள் முன்வந்தனர். அதிலும் இதனால் ஏற்படக்கூடிய ஆபத்து களின் காரணமாகப் பாதிக்கப்பட்டவர்கள் பலர் பேச முன்வராத நிலையில் பெண்கள் முன்வந்துள்ளனர். ஆனால், அப்பெண்களை வெளிப்படையாக வாக்குமூலம் அளிக்க க.பா.இ.ஆ. அனுமதிக்க மறுத்தது என்பது, பொதுவாக பெண்களுக்கு எதிரான பாகுபாடுகள் மற்றும் போரினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு எதிரான பாகுபாடுகள் ஆகியவற்றை மீண்டும் செயல்படுத்துவதாகவே இருந்தன.

இ) கற்ற பாடங்கள் மற்றும் இணக்கத்திற்கான ஆணையம் (க.பா.இ.ஆ.)

இன்றுவரை க.பா.இ.ஆ.வின் பணிகள் மற்றும் நடைமுறைகள் அது போரின் இறுதிக் கட்டத்தில் என்ன நடந்தது என்பது குறித்து ஒரு நேர்மையான உண்மையறியும் நடவடிக்கையை மேற்கொள்ளவில்லை என்பதையும், போரின் இரு தரப்பினர் மீதும் வைக்கப்பட்ட மோசமான மீறல் குற்றச்சாட்டு களைத் திட்டமிட்ட முறையில் நடுநிலை யோடு சார்பற்று விசாரிக்க முற்படவில்லை என்பதையும் காட்டுகின்றன.

290) மே 2009இல் போர் முடிவடைந்த பின், சரியாக ஓர் ஆண்டிற்கு பிறகு, 1948இன் விசாரணை ஆணையங்கள் சட்டத்தின் கீழ், 2002இல் போர்நிறுத்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்த நாள் தொடங்கி மே 2009இல் போர் முடிவடைந்த வரையிலான காலக்கட்டத்தில் நிகழ்ந்தவற்றை ஆராய்வதற்கென இலங்கை அதிபர், கற்ற பாடங்கள் மற்றும் இணக்கத்திற்கான ஆணையம் (க.பா.இ.ஆ.) ஒன்றை அமைத்தார். ஆயுதப்போரின் விளைவாக எழுந்தப் பொறுப்பேற்பது குறித்த சிக்கல்களைக் களைவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பதென அய்.நா.வின் செயலாளர் நாயகம் இலங்கைக்குச் சென்றபோது, மே 23, 2009 அன்று இலங்கை அரசு கொடுத்த உத்தரவாதத்தைச் செயல்படுத்தவேண்டுமென அய்.நா. மற்றும் உலக சமூகத்தின் பரவலான, தொடர்ந்த அழுத்தத்தின் காரணமாகவே க.பா.இ.ஆ. அமைக்கப்பட்டது.

291) இந்த ஆணையத்திற்கு தலைமையேற்றுள்ள முன்னாள் அட்டர்னி ஜெனரல் திரு. சித்தன் இரஞ்சன் டிசில்வாவின் சொற்களில் இந்த 8 உறுப்பினர்கள் கொண்ட ஆணையமானது 'இனம் அல்லது மதவேறுபாடின்றி இலங்கையின் அனைத்துக் குடிமக்களும் மதிப்புடனும் சுதந்திர உணர்வுடனும் வாழ்வதற்கு ஏற்றவகையில் தேசிய ஒற்றுமையை வளர்க்கவும், மறுவாழ்வினை அமைக்கவும், போரின் காரணங்களையும், அது மக்கள் மீது ஏற்படுத்திய பாதிப்புக்களையும் ஆராய்வதில் கவனம் செலுத்தவேண்டுமென எதிர்பார்க்கப் படுகிறது'. அத்துடன், 'போரினால் வாழ்வு பாதிக்கப்பட்டுள்ள தனி நபர்களுக்கு நிவாரணம் அளிப்பதற் கான வழிமுறைகளையும் அடையாளம் காண வேண்டுமென எதிர்பார்க்கப் படுகிறது'. கொழும்பில் அமைக்கப்பட்ட க.பா.இ.ஆ., தனது விசாரணையை ஆகஸ்ட் 11, 2010 அன்று தொடங்கியது. தொடக்கத்தில், அது தனது அறிக்கையை நவம்பர் 2009இல் அதிபரிடம் அளிக்கவேண்டுமென உத்தரவிடப்பட்டிருந்தது. ஆனால் 'ஆணையத்திடம் ஆதாரங்களை அளிக்கப் பொதுமக்களின் ஆர்வம் தொடர்ந்து இருப்பதாலும் மேலும் அதிகமான மாவட்டங்கள் மற்றும் இடங்களுக்குச் செல்லவேண்டிய தேவை இருப்பதாலும்' என அது விவரித்த சூழலை அது எதிர்கொள்ளவேண்டி வந்தது. இதனால் தனது அறிக்கையை அளிக்கவேண்டிய காலக்கட்டத்தை நீட்டிக்கவேண்டுமென ஆணையம் கோரியது. இதன் விளைவாக நவம்பர் 2010 இலங்கை அதிபர் ஆணையத்தின் காலக்கட்டத்தை மே 15, 2011 வரை மேலும் 6 மாதங்கள் நீட்டித்தார். மே மாதத்தைத் தாண்டியும் ஆணையத்தின் காலம் செல்லலாம் எனத் தெரிகிறது.

292) ஆயுதப்போரின் விளைவாக எழும் சிக்கல்களைக் கையாள, தான் உருவாக்கிய உள்நாட்டு எதிர்வினையே க.பா.இ.ஆ. என இலங்கை அரசு தொடர்ந்து தெரிவித்து வருகிறது. உலகளாவிய வரையறைகளின் அடிப்படையில் க.பா.இ.ஆ. தனது வடிவம் மற்றும் செயல்பாடுகளில் இன்றுவரை எந்தளவிற்கு பயனளிக்கக்கூடிய பொறுப்பேற்கும் ஒரு நடைமுறையாக இருக்கிறது என்பதைக் குழு கணித்துள்ளது. குறிப்பாக உண்மை, நீதி மற்றும் நிவாரணங்களுக்கான அடிப்படைச் சிக்கல்களை கையாள்வதில் ஆணையத்தின் திறனை அது கவனத்தில் கொண்டுள்ளது.

293) தொடக்கத்திலிருந்தே க.பா.இ.ஆ.வின் செயல்பாட்டினை மேலும் நன்றாக புரிந்துகொள்ளவும், சிக்கல்களையும் கேள்விகளையும் ஆணையத்திடம் நேரடியாக எழுப்பவும், உலகளாவிய சிறந்த நடைமுறைகளையும், ஒப்பிடக் கூடிய அனுபவங்களையும் பகிர்ந்துகொள்ளவும், குழு, க.பா.இ.ஆ.விடம் நேரடியான தொடர்பினை ஏற்படுத்த வேண்டி இருந்தது . ஆனால் தொடர்ச்சியான முயற்சிகள் மற்றும் அரசுடனான பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகும், இலங்கைக்குச் சென்று க.பா.இ.ஆ.விடம் நேரடியான தொடர்பை ஏற்படுத்திக்கொள்ளக் குழுவிற்கு சாத்தியப்படவில்லை. எனவே, குழு, அதற்குமாற்றாக, சனவரி 28, 2011

அன்று, அரசுத்துறை தூதர்கள் வாயிலாக ஆணையத்திடம் சில கேள்விகளை முன்வைத்தது (இணைப்பு 2.14). இக்கேள்விகள் பலவற்றிற்கு அதிபரின் செயலகம் அளித்த பதிலை, கையொப்பமிடப்படாத அரசுக் குறிப்பின் வாயிலாக, இலங்கையின் நிரந்தரக் குழு, பிப்ரவரி 16, 2010 அன்று, செயலாளர் நாயகத்திடம் அளித்தது (இணைப்பு 2.15).

294) இலங்கைக்குச் சென்று க.பா.இ.ஆ.வின் செயல்பாட்டினை நேரடியாக காண வாய்ப்பில்லாதபோதும், அரசின் பதிலோடு, கூடுதலாக, க.பா.இ.ஆ. பொது அரங்கில் வெளியிட்ட தரவுகளை, குறிப்பாக அதன் விசாரணையின் எழுத்து வடிவங்களை, அதன் இணையதளத்திலிருந்து எடுக்கவும் பிற அரசு மூலங்களிலிருந்து பிற தரவுகளை எடுக்கவும், குழுவிற்கு வாய்ப்பு கிடைத்தது. அத்துடன், க.பா.இ.ஆ.விடம் நேரடியான தொடர்பினைக் கொண்ட, தேசிய மற்றும் பன்னாட்டுக் குடிமைச் சமூகக் குழுக்கள் மற்றும் தனி நபர்கள் ஆகியோர் அளித்த அறிக்கைகள், தேசிய மற்றும் பன்னாட்டு ஊடக அறிக்கைகள் ஆகியவற்றையும் அது ஆராய்ந்தது.

295) க.பா.இ.ஆ., இத்தகைய சிக்கல்களை கையாள இலங்கையில் அமைக்கப் பட்ட முதல் ஆணையம் அல்ல. க.பா.இ.ஆ. உள்ளிட்ட இந்த ஆணையங்கள், 1948-இன் விசாரணை ஆணையங்கள் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ளன. இந்தச் சட்டமானது, பொதுத்துறை அமைப்புகளின் நிர்வாகம் மற்றும் அரசு அதிகாரிகளின் நடத்தை ஆகியவற்றைக் கண்காணிக்க ஒரு கட்டமைப்பை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதேயொழிய, மனித உரிமை மீறல்களை கையாள்வதற்கான வழிமுறையாக அல்ல. ஆனால் இச்சட்டத்தின் பொதுவான சமூகப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுச் சட்டப்பிரிவுகள், மனித உரிமை மீறல்களை விசாரிப்பதற்கான ஆணையங்களை உருவாக்குவதற்கான சட்ட அடிப்படையாக செயல்படப் போதுமானதாக உள்ளது. இச்சட்டம் அதிபருக்கு மிகப்பரவலான அதிகாரத்தை அளிக்கிறது. இது கடந்த காலத்தில், ஆணையங்களைக் கட்டுப்படுத்தவும் அவற்றின் சுதந்திரத்தையும் விளைவையும் குறைக்கவும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

296) கடந்த காலத்தில் நடந்த மோசமான மற்றும் திட்டமிட்ட மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்பேற்பது குறித்த கேள்விகளுக்குப் பதிலாக உருவாக்கப் பட்ட முந்தைய விசாரணை ஆணையங்கள் குறித்துத் தொடர்ந்து மோசமான அனுபவங்களே இருந்திருக்கின்றன.

1977-இன் சன்சோனி ஆணையம் தொடங்கி கடந்த 30 ஆண்டுகளாக இந்த ஆணையங்கள் அவர்களின் செயல்பாட்டினைப் பெரிதும் பாதிக்கக்கூடிய பலவகையான தவறுகளின் காரணமாகச் செயலிழந்து போயுள்ளன. மிக இறுக்கமான கட்டுப்பாடுகளை மீறியும் சில ஆணையங்கள் உண்மை அறிவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளதோடு, பொறுப்பேற்பது குறித்து முக்கியப் பரிந்துரைகளையும் அளித்துள்ளன. என்றபோதும் குழுவிற்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில், 1977இல் முதன் முறையாக அமைக்கப்பட்ட வழிமுறை தொடங்கி, கடந்த 33 ஆண்டுகாலங்களில், எந்தவொரு ஆணையத்தின் கண்டுபிடிப்புகளோ, பரிந்துரைகளோ, தனிநபர்கள் அல்லது திட்டமிடப்பட்ட நிலைகளில் சிறிய அளவிலானப் பொறுப்பேற்கும் செயலினைத் தாண்டி எதுவும் தொடர்ந்து செயல்படுத்தப்படவில்லை. முந்தைய இந்நடைமுறைகளிலிருந்து பளிச்சென அறிந்துகொள்ளக்கூடிய பாடம் என்னவெனில், உலகளாவிய வரையறைகளுக்கு உட்பட்ட அளவில், பொறுப்பேற்பது குறித்து கவனம் செலுத்த, தொடர்ந்து வந்த அரசுகளுக்கு ஓர் அரசியல் விருப்பம் இருக்கவில்லை என்பதே. இந்தக் கடந்தகால அனுபவங்களின் மூலம், க.பா.இ.ஆ. எந்தளவிற்கு உண்மையிலேயேப் பொறுப்பேற்பது குறித்து தனது பங்களிப்பையாற்ற முடியும் என்பதை கணிக்கலாம்.



சாட்சிகளுக்கு நிலவிய சூழல் என்பது பெரும் பாலும் அச்சுறுத்து வதாகவும் பல நேரங்களில் பிறழச்செய்வ தாகவும் இருந்தன என பல அறிக்கைகளின் மூலம் தெரியவருகிறது. குழுவிடம் அளித்த எழுத்துபூர்வ பதில்களில் ஆணையத்தின் நடைமுறைகளில் இராணுவம் எந்தப் பங்கும் வகிக்கவில்லை என அரசு வாதிட்டபோதும், விசாரணை அறைகளில் சீருடை அணிந்த இராணுவ அதிகாரிகள் சாட்சிகளையும் கூடியிருந்த பிறரையும் நிழல்படம் எடுத்தபடி அமர்ந்திருந்தனர் என்பதைக் குழு அறிந்திருந்தது.

விசாரணை நடைபெற்ற இடங்களுக்கு உள்ளேயும் வெளியேயும் இராணுவ மற்றும் உளவுத்துறை அதிகாரிகள் இருந்தது என்பது பாதுகாப்புப் படையினரின் சட்ட விரோத நடவடிக்கை குறித்த குற்றச்சாட்டு களை எழுப்புவதினால் ஏற்படக்கூடிய பின் விளைவுகளை நினைத்து அஞ்சிக்கொண்டிருந்த சாட்சிகளுக்கு மேலும் திகிலூட்டுவதாகவே இருந்தது. அத்துடன், சாட்சிகள் வாக்கு மூலங்களை அளிக்கும் போது, அரசு அதிகாரிகள் அங்கு அடிக்கடி இருந்தது என்பதும் இதே வித உணர்வையே ஏற்படுத்தியது.



1) கற்ற பாடங்கள் மற்றும் இணக்கத்திற்கான ஆணையத்தின் பணி வரையறை

297) க.பா.இ.ஆ. எந்தளவிற்கு ஒரு திறன்வாய்ந்தப் பொறுப்பேற்கும் நடை முறையாக இருக்க முடியும் என்பதைக் கணிப்பதற்கான அடிப்படைக் கூறுகளை, அதன் பணி வரையறை வழங்குகிறது. மே 15, 2010 அன்று அதிபர் அளித்த உத்தரவில் குறிப்பிட்டுள்ளபடி, க.பா.இ.ஆ. 'பிப்ரவரி 21, 2002 முதல் மே 19, 2009' வரையிலான காலக்கட்டத்தில் நடைபெற்றிருக்க கூடிய கீழ்க்காணுபவற்றை விசாரித்து அறிக்கை அளிக்கவேண்டும் :

(1) பிப்ரவரி 27, 2002 அன்று நடைமுறைக்கு வந்த போர் நிறுத்த ஒப்பந்தத்தில் தோல்விக்கான காரணங்களும் சூழல்களும் மற்றும் அதற்குப்பின் மே 19, 2009 வரையில் நடைபெற்ற தொடர்ந்த நிகழ்வுகள்.

(2) இதற்கு எந்தவொரு தனிநபரோக் குழுவோ அல்லது அமைப்போ நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோப் பொறுப்பாக இருக்கிறார்களா?

(3) மீண்டும் அவை நிகழாது என்பதை உறுதிப்படுத்துவதற்காக அந்த நிகழ்வுகளிலிருந்தும் அது தொடர்புடைய பிறவற்றிலிருந்தும் நாம் கற்றக்கூடிய பாடங்கள்.

(4) அந்த நிகழ்வுகளினால் பாதிக்கப்பட்ட தனிநபர்களோ அல்லது அவர்களைச் சார்ந்தவர்களோ அல்லது அவர்களின் வாரிசுகளோ நிவாரணம் பெறக்கூடிய வழிமுறைகளும் அதனை நடைமுறைப்படுத்தும் வழியும்.

(5) எதிர்காலத்தில் இத்தகைய சிக்கல்கள் மீண்டும் ஏற்படாதவண்ணம் தவிர்ப்பதற்கு அமைப்புரீதியாகவும், நிர்வாகரீதியாகவும், சட்டரீதியாகவும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் அனைத்துச் சமூகங்களுக்கு இடையேயும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது மற்றும் தேசிய ஒற்றுமையை வளர்த்தெடுப்பது மற்றும் இந்த ஆணையம் கீழ் விசாரிக்கப்பட்டவற்றின் அடிப்படையில் இதுபோன்ற வேறு ஏதேனும் பரிந்துரைகள் இருப்பின் அவற்றை அளிப்பது'.

298) தனது பணி வரையறையைத் தான் எவ்வாறு புரிந்துகொண்டுள்ளது என்பதையோ, தன் முன் வாக்குமூலம் அளிக்க விரும்புபவர்களுக்கு இது குறித்து ஏதேனும் வழிகாட்டு நெறிகளையோ க.பா.இ.ஆ. தெளிவாக அளிக்கவில்லை. போர்நிறுத்த ஒப்பந்தத்தின் தோல்விக்குப்பின் 'நடந்த தொடர்ச்சியான நிகழ்வுகள்' குறித்து ஆராயவேண்டுமென க.பா.இ.ஆ.விற்கு வெளிப்படையாக பணி அளிக்கப்பட்டிருந்தாலும், அதன் பணிவரையறைகள், பொதுவாகப் பொறுப் பேற்பது குறித்தோ, அல்லது குறிப்பாக உலகளாவிய மனித நேய மற்றும் மனித உரிமைச் சட்டமீறல் குற்றச்சாட்டுகள் குறித்தோ விசாரிக்கவேண்டுமென வெளிப்படையாக கூறவில்லை. எனவே, மனித உரிமை மற்றும் உலகளாவிய மனித நேயச் சட்ட மீறல்கள் குறித்து விசாரிப்பது அதன் பணி வரையறையில் சேர்க்கப்பட்டுள்ளதா என்பது தெளிவாக இல்லை.

299) க.பா.இ.ஆ.வை சந்திக்கக் குழுவால் இயலாத நிலையில் க.பா.இ.ஆ. குறித்துக் குழு எழுப்பிய கேள்விகளுக்கு அரசின் எழுத்துபூர்வமான பதில்களாக அதிபரின் செயலகம் தயாரித்து அளித்தவற்றையும், இதுகுறித்து பிப்ரவரி 22 கூட்டத்தில் அய்.நா.விடம் அட்டர்னிஜெனரல் வெளிப்படுத்திய கருத்துக்களையும் குழு சார்ந்து இருந்தது. போரின் இறுதிக் கட்டங்கள் தொடர்பாக எழக்கூடிய, பொறுப்பேற்பது குறித்த சிக்கல்களை ஆராய்வதே க.பா.இ.ஆ.வின் பணியென அட்டர்னிஜெனரல் விளக்கமளித்தார். அதே நேரத்தில் பெறுப்பேற்பதன் கோட்பாடு என்பதுப் பொறுப்பாக்குவதோடு சமன்படுத்தியே கருதப்படுகிறது என்றும், இத்தகைய சிக்கல்களில் முழுமையாக முடிவெடுக்க ஆணையத்திற்கு அனுமதியளிக்கப் பட்டுள்ளது என்றும் கூறினார். உண்மையில், உலகளாவிய வரையறைகள் மற்றும்

நடைமுறைகளின் அடிப்படையில், இந்த இரு கோட்பாடுகளுமே தெளிவாக வெவ்வேறானவை. ஏனெனில் ஒரு குறிப்பிட்ட மீறலுக்குப் பொறுப்பானவர்கள் என்று கருதப்படும் தனிநபர்கள் அல்லது அமைப்புகள் மீது, அதற்கான விளைவுகளை இணைக்கும் நிலைக்கு, பொறுப்பேற்பதன் கோட்பாடு இட்டுச் செல்கிறது. பொறுப்பேற்பதற்கான முன்நிபந்தனையாகப் பொறுப்பாக்குவது முக்கியம் என்றபோதும் மனித உரிமை மற்றும் உலகளாவிய மனித நேயச் சட்டங்கள் மீது மிகமோசமாக நடத்தப்பட்ட மீறல்களுக்குப் பொறுப்பேற்பது குறித்த கடப்பாடுகளிலிருந்து அரசை அது விடுவிக்கவில்லை.

300) தென்னாப்பிரிக்காவின் உண்மை மற்றும் இணக்கத்திற்கான ஆணையம் (உ.இ.ஆ.) மற்றும் பிரிட்டனின் ஈராக் விசாரணை (சில்காட் விசாரணை) ஆகியவற்றிலிருந்து அரசு அனுபவங்களை பெற்றது என்றும், க.பா.இ.ஆ.வை இதற்கு இணையான ஓர் அமைப்பாகக் கருதவேண்டுமென அட்டர்னிஜெனரல் குறிப்பிட்டார். ஆனால் இந்த இரண்டோடும் ஒப்பிடும்பொழுது மிகமுக்கியமான வேறுபாடுகள் உள்ளன. மேலே குறிப்பிட்டதைப்போன்று, க.பா.இ.ஆ.விற்கு நேர்முரணாக, தென்னாப்பிரிக்காவின் உ.இ.ஆ., மோசமான மனித உரிமை மீறல்களை விசாரிக்கவும், அதில் ஈடுபட்ட தனிநபர்கள் மற்றும் அமைப்புகளை அடையாளம் காண்பது உள்ளிட்டவற்றை தனது வெளிப்படையான பணி வரையறையாகக் கொண்டிருந்தது. இலங்கை அரசு குறிப்பிட்டுள்ள சிலி, கென்யா உள்ளிட்ட பிற சான்றுகளிலும் இத்தகைய சூழல்களில் பிறநாடுகளில் உருவாக்கப் பட்ட சிறந்த நடைமுறைகள் மனித உரிமை மற்றும் மனித நேயச் சட்ட மீறல்களை விசாரிப்பதைத் தங்கள் ஆணையங்களுக்கான வெளிப்படையான பணி வரையறை யாகக் கொண்டிருந்தன என்பதைக் குறிப்பது முக்கியமானது.

301) மறுபுறத்தில், ஈராக் விசாரணை, 2001 முதல் 2009 வரையிலான 8 ஆண்டு காலக்கட்டத்தில், 'ஈராக்கில் பிரிட்டனின் ஈடுபாடுகளும், அங்கு என்ன நடந்தது என்பதை துல்லியமாகவும் நம்பத்தகுந்த வகையில் நிறுவவும், கற்றுக்கொள்ளக் கூடிய பாடங்களை அடையாளம் காணவும், அங்கு எடுக்கப்பட்ட முடிவுகள் எவ்வாறு எடுக்கப்பட்டன என்பது குறித்தும், என்ன நடவடிக்கைகள் எடுக்கப் பட்டன என்பது குறித்தும்' ஆராய்கிறது. க.பா.இ.ஆ.வின் பணி வரையறையுடன் மிக நெருக்கமாக இருக்கக்கூடிய இதன் பணி வரையறை, தனி நபர்கள் அல்லது அமைப்பு சார்ந்தப் பொறுப்பேற்பதை உறுதிப் படுத்துவதற்காக வடிவமைக்கப் படவில்லை. மாறாக வரையறுக்கப்பட்ட காலத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு அரசியல் பொறுப்பாளிகளை ஆராயவும், எதிர்காலத்திற்கான பாடங்களைக் கற்கவும் வடிவமைக்கப்பட்டது. இந்தப் புரிதலைத் தனது விளக்கத்தில் அட்டர்னி ஜெனரல் உறுதிபடுத்தியுள்ளார். இதன் மூலம், அரசின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள மக்களை சரியான முறையில் பாதுகாப்பதற்கு, பல காலமாகத் தொடர்ந்து வந்த அரசுகள் தவறியதற்கு, க.பா.இ.ஆ. மூலம், அரசுப் பொறுப் பேற்கிறது என்று கூறுகிறார். இது ஒரு முக்கியமான முடிவு என்றபோதும், உலகளாவிய மனிதநேய மற்றும் மனித உரிமைச் சட்டங்கள் மோசமாக மீறப்பட்டதற்குப் பொறுப்பேற்பது குறித்த கடப்பாடுகளை நிறைவேற்றுவதாக இதனைப் புரிந்துகொள்ள முடியாது. இது அதுவல்ல. மேலும், பாதிக்கப் பட்டவர்களுக்கு உண்மை, நீதி, நிவாரணம் பெறுவதற்கான உரிமைகளை மதிப்பதாகவும் எடுத்துக்கொள்ள இயலாது.

302) பொறுப்பேற்பது குறித்து க.பா.இ.ஆ.வின் பணி வரையறையில் இணைப்பது குறித்து அரசு மிக வெளிப்படையாகவே தெளிவற்று இருந்தது. கடந்தகால மீறல்களைக் கையாளும் முயற்சியில், தண்டனைசார்ந்தப் பொறுப் பேற்கும் கருவியாக இருப்பதை விட, க.பா.இ.ஆ., இணக்கத்தை நோக்கமாக கொண்ட முன்னோக்கிச்செல்லும் நடைமுறையாகும் என ஒருபுறம் மூத்த இலங்கை அதிகாரிகள் அடிக்கடி வலியுறுத்தி வந்துள்ளனர். அதே நேரத்தில் அரசு அதிகாரிகள் வெளியிட்ட பிற அறிக்கைகளில், மனித உரிமை மீறல்கள் குறித்த



போர்க்குற்றங்கள் அல்லது மனிதத்திற்கு எதிரான குற்றங்கள் போன்ற குற்றங்களைத் திறனாக விசாரிப்பதற்குரிய வழிவகைகளைச் சிக்கலாக்குவதாகவே இலங்கையின் குற்றவியல் நீதி அமைப்பில் உள்ள கட்டமைப்பு ரீதியான குறைபாடுகள் உள்ளன. முதலாவதாகச் சாட்சி களை அச்சுறுத்துவது என்பது பரவலாக உள்ள நிலையில், அதிலும் ஆயுதப்படையினர் மட்டுமல்லாமல் சட்டத்தை நடைமுறைப் படுத்தக்கூடிய அனைவ ராலும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் சூழல் நிலவுகையில், பாதிக்கப் பட்டவர்கள் மற்றும் சாட்சிகளைப் பாது காப்பதற்கு தேவையான எவ்விதச் சட்ட நடை முறைகளும் இல்லை.

தங்கள் மீது குற்றச்சாட்டுகள் வைக்கப்பட்டிருந்த நிலையிலும் கூட, சித்திரவதைக் குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகியுள்ள காவல் துறை அதிகாரிகள் அவர்களது பதவிகளில் தொடர்ந்து நீடித்தது, அவர்களுடைய பதவியின் அதிகாரத்தை யும் செல்வாக்கையும் நிலுவையில் உள்ள வழக்குகளின் சாட்சிகளை அச்சுறுத்தவும், சில நேரங்களில் கொல்லவும் கூடப் பயன்படுத்து வதற்கான வாய்ப்பை அளித்துள்ளது.



குற்றச்சாட்டுகளில், சில குறிப்பான நிகழ்வுகளை விசாரிக்கும் அதிகாரம் ஆணையத்திற்கு உண்டு எனப் பரிந்துரைக்கின்றனர். க.பா.இ.ஆ.வின் பணி வரையறையானது உலகளாவியச் சட்ட மீறல்கள் குறித்த தனிப்பட்ட குற்றச் சாட்டுகளை ஆராயும் அளவிற்குப் பரந்ததே என்று வெளியுறவுத்துறை அமைச்சர் ஜி.எல்.பெரிஸ் வெளிப்படையாக அறிவித்துள்ளார். பின்னர், வேறொரு தருணத்தில், ஒரு தொலைக்காட்சி நேர்காணலில் அவர், 'குறிப்பிட்ட போர்க் குற்றக் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கு க.பா.இ.ஆ.வே சரியான இடம்' என உறுதிபடக்கூறுகிறார்.

303) இறுதியாக க.பா.இ.ஆ.வின் பணி வரையறைக்காலம் மே 19, 2009 அன்றோடு முடிகிறது. இதனால் அந்த தேதிக்குப்பிறகு, ஆயுதப்போருக்குப்பின் நடந்த நம்பத்தகுந்த மீறல்கள் குறித்து கவனத்தில் கொள்வதிலிருந்து க.பா.இ.ஆ. திட்டமிட்டு விலக்கப்பட்டுள்ளது.

304) எந்தச் சூழலிலும் பொறுப்பேற்பது குறித்த செயல்திட்டங்கள் குறித்து உலகளாவிய வரையறைகளை, க.பா.இ.ஆ.வின் பணி வரையறை உள்ளடக்க வில்லை. அரசு அல்லது அதற்கு சார்பானவர்கள் உட்படப் போரின் எத்தரப் பினரும் புரிந்த உலகளாவிய மனித நேய மற்றும் மனித உரிமை மீறல்களை விசாரிப்பதற்குரிய அதிகாரம், அதன் பணி வரையறைகளில் வெளிப்படையாக குறிப்பிடப்பட்டிருக்கவேண்டும்.

2) ஆணையத்தின் சுதந்திரம் மற்றும் சார்பற்ற தன்மை

305) மனித நேய மற்றும் மனித உரிமைச் சட்ட மீறல்கள் குறித்த விசாரிக்கக் கூடிய ஓர் அமைப்பு சுதந்திரமாகவும் சார்பற்றதாகவும் திறன்படைத்தாகவும் இருக்கவேண்டும் என உலகளாவியச் சட்டம் கோருகிறது. சுதந்திரம் என்பது, உண்மையான சுதந்திரம் மற்றும் அதைப் பொதுமக்கள் புரிந்துகொள்ளும் விதம் ஆகிய இரண்டையுமே உள்ளடக்கியது.

306) க.பா.இ.ஆ.வைப் பொருத்தவரையில், குறைந்தது அதன் மூன்று உறுப்பினர்கள், மிக மோசமான முரண்களைக் கொண்டுள்ளனர். இதனால் சுதந்திரமாகவும் சார்பற்றும் செயல்படக்கூடிய அவர்களது வாய்ப்பு நேரடியாகச் சாத்தியமற்றதாக போனதோடு, அவர்கள் சுதந்திரமானவர்கள் என்று பொதுமக்கள் கருதுவதற்கும் வாய்ப்பற்று போனது. இந்த ஆணையத்தின் தலைவர் ஏப்ரல் 2007 முதல் டிசம்பர் 2008 வரை அட்டர்னிஜெனரலாகப் பணிபுரிந்துள்ளார். அந்த அடிப்படையில் க.பா.இ.ஆ.விற்கு முன், அரசின் தலைமை சட்ட அதிகாரியாக பல விஷயங்களில் அவர் செயல்பட்டுள்ளார். அத்துடன், இதற்கு முன் அமைக்கப் பட்ட விசாரணை ஆணையத்தில் (ஆகஸ்ட் 1, 2005 முதல் இலங்கையில் எழுந்திருக்கக்கூடிய மோசமான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் குறித்து விசாரிக்க அமைக்கப்பட்ட ஆணையம்) அவருக்கு உள்ள செல்வாக்கு, ஒரு முக்கியமாக முரணை வெளிப்படுத்துவதாக உள்ளது. இதுவே, ஆணையத்தின் பணியைக் கண்காணிக்க அமைக்கப்பட்ட 'முக்கிய நபர்களின் பன்னாட்டு சுதந்திரக் குழு' வெளிப்படையாக விமர்சிப்பதற்கான முக்கிய காரணமாக அமைந்து விட்டது. ஆணையத்தின் இரண்டாவது உறுப்பினர் போரின் இறுதிக் கட்டங்களில் அய். நா. வில் இலங்கைக்கான நிரந்தரப் பிரதிநிதியாக இருந்தார். அக்காலக் கட்டத்தில் நிலவிய இராணுவ மற்றும் மனித நேயச் சூழல்கள் குறித்து அரசின் கருத்துக்களை எடுத்துரைக்கவும், அதற்காக வாதிடவும் செய்தார். மூன்றாவது உறுப்பினர், ஆணையத்தின் ஆய்வில் உள்ள காலக்கட்டத்தில், முதலில் வெளியுறவுத் துறை அமைச்சகத்தில் சட்ட ஆலோசகராக இருந்து பின்னர் அந்த அமைச்சகத்தின் உலகளாவியச் சட்டச் சிக்கல்களுக்கான ஆலோசகராக செயல்பட்டார்.

307) அரசின் உயர்மட்ட அதிகாரிகளாக அவர்கள் பணியாற்றிய காலக்கட்டங் களில் நடைபெற்றதாகக் குற்றம் சாட்டப்படுகின்ற உலகளாவிய மனித நேய

மற்றும் மனித உரிமைச் சட்ட மீறல்கள் குறித்துச் சார்பற்று விசாரணை நடத்தவும், பொறுப்பேற்பதற்குப் பங்களிப்பை அளிக்கவேண்டுமெனவும் எதிர்பார்க்கப் படுகின்ற ஓர் அமைப்பின் உறுப்பினர்களாக, இத்தகைய முரணான நலன்களை கொண்ட தனிநபர்களை, அவர்கள் வேறு எந்த வகையில் தகுதிபெற்றிருந்த போதும் அமர்த்துவது என்பது, முற்றிலும் முறையற்றதாகும். தாங்கள் முக்கியப் பொறுப்புகளை வகித்த ஓர் அரசின் செயல்பாடு குறித்தோ அல்லது தனிப்பட்ட முறையில் அவர்களை நியமித்த அதிபர் குறித்தோ, சுதந்திரமாக கணிக்கும் திறன் அவர்களுக்கு இருக்கும் என எதிர்ப்பார்ப்பது, எந்த வகையில் பார்த்தாலும், அடிப்படையில் சாத்தியமற்ற ஒன்றேயாகும். இது குறித்த சந்தேகங்கள் க.பா.இ.ஆ. செயல்பட்டுக்கொண்டிருந்த காலக்கட்டத்தில், அதற்கு வெளியே, குறைந்தது ஓர் உறுப்பினர் அளித்த வெளிப்படையான அறிக்கைகளின் மூலம் உறுதிப்படுகிறது.

308) கூடுதலாக, பொறுப்பேற்பதை உறுதிசெய்யும் பங்கை ஆற்றக்கூடிய விசாரணை ஆணையங்கள் அல்லது உண்மை ஆணையங்கள் போன்று, அதனோடு ஒப்பிடக்கூடிய அமைப்புகள் விவாதங்களை நடத்தக்கூடிய முறையில் அமைக்கப் படவேண்டும் என சிறந்த உலகளாவிய நடைமுறைகள் காட்டுகின்றன :

> உறுப்பினர்களுக்கு, மனித உரிமைகள் மற்றும் தேவைப்படின், மனித நேயச் சட்டங்கள் குறித்து இருக்கக்கூடிய ஆற்றல் உட்பட உறுப்பினர்களின் திறன் மற்றும் சார்பற்ற தன்மை குறித்துப் பொதுமக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டியது அவசியம் ஆகிறது. மேலும் 'பெண்கள் உட்பட மனித உரிமை மீறல்களுக்கு எளிதில் பலியாகக்கூடிய வாய்ப்புள்ள உறுப்பினர்களைக் கொண்ட பொருத்தமான சமூகக் குழுக்களுக்கு, போதுமான பிரதிநிதித்துவம் உறுதிபடுத்தப்பட வேண்டும்' எனவும் கோருகிறது.

309) க.பா.இ.ஆ. குறித்தக் குழுவின் கேள்விகளுக்கு அளித்த எழுத்துபூர்வமான பதில்களில் அரசு இவ்வாறு கூறுகிறது : 'இலங்கையின் பல இன மற்றும் அனைவரையும் இணைத்துக்கொள்ளும் கொள்கையைப் பிரதிநிதிப்படுத்துவ தாகவே க.பா.இ.ஆ.வின் அமைப்பு உள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட துறைகளில் சிறப்புத்திறன் பெற்ற பல்வேறு சமூகங்களைச் சேர்ந்த நபர்களை அது கொண்டுள்ளது'. ஆனால், குழுவின் பார்வையில், க.பா.இ.ஆ.வின் உறுப்பினர்கள், இலங்கைச் சமூகத்தின் பன்முகத்தன்மையையும் போரின் விளைவுகளையும் போதுமான அளவிற்கு வெளிப்படுத்துவதாகவோ இல்லை. மேலும், உறுப்பினர்களின் பின்னணி மற்றும் திறன்கள், பணிவரையறைக்கு தெளிவாக தேவைப்படக்கூடிய அளவிலோ இல்லை. 8 உறுப்பினர்களில் ஒருவர் மட்டுமே பெண் உறுப்பினராவார். ஆனால் போரினால் பாதிக்கப்பட்டவர்களில் பெண்களே அதிக அளவில் இருந்தனர் என்பதோடு அவர்கள் பாதிக்கப்பட்ட விதங்கள் குறித்து செலுத்தப்படவேண்டிய கவனத்திற்கும் இது பொருத்தமற்று இருந்தது. இத்துடன், அந்த ஒற்றைப் பெண் உறுப்பினரே ஒற்றைத் தமிழ் உறுப்பினராகவும் இருக்கிறார். முஸ்லிம் பின்னணியிலிருந்தும் ஒரே ஒரு உறுப்பினர் மட்டுமே உள்ளார்.

310) மிக முக்கியமாக, அரசுடன் மிக நெருக்கமான தொடர்புகளை கொண்டிருந்த முன்னாள் அதிகாரிகளுக்கு சார்பாகவே க.பா.இ.ஆ. மதிப்பிடப் படுகிறது. சுதந்திரம் மற்றும் சார்பற்ற தன்மை குறித்து முன்பே விவாதிக்கப் பட்டவற்றோடு, கூடுதலாக, க.பா.இ.ஆ. குறித்த பொதுமக்களின் புரிதலையும் இந்தக் கூறானது பாதிக்கும் என எதிர்பார்க்கலாம். இதனால் பொதுமக்கள் ஆணையத்துடன் தொடர்புகொள்ளவோ அல்லது அதன் முடிவுகளின்பால் நம்பிக்கை கொள்ளவோ எடுக்கக்கூடிய முடிவுகளையும் இது பாதிக்கிறது.

311) பொறுப்பேற்கும் நடைமுறைகளின் சுதந்திரம் மற்றும் சார்பற்றத் தன்மை உறுதிப்படுத்தப்படவேண்டும் என்ற உலகளாவிய வரையறைகளுக்கு எதிராக க.பா.இ.ஆ.வின் உருவாக்கம் உள்ளது. க.பா.இ.ஆ.வின் கட்டமைப்பானது,

இரண்டாவதாக, விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப் பட்டவர்களுக்கு எதிராகப் பெரும்பாலும் பயன் படுத்தப்படும் சட்டமான பயங்கரவாதத் தடுப்புச் சட்டமானது, குற்றம் சாட்டப்பட்டவர்கள் தங்கள் வாக்குமூலங்கள் வற்புறுத்தி பெறப்பட்டன என்பதை வெளியிடு வதற்கான வாய்ப்பை வழங்க மறுப்பதன் மூலம் விசாரணையின் போது அதிகாரிகள் மோசமான நடத்தைகளை மேற்கொள்வதற்கு வாய்ப்பை வழங்குகிறது. இது, உலகளாவியச் சட்டத்தை மீறுவதாகும்.

விசாரணை நடை முறையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட முறையாகவே சித்திரவதை உள்ளது. தனிப்பட்ட அதிகாரி களின் சில அரிய மிகைச் செயல்களாக அல்லாமல் தங்களுடைய கடமைகளைப் பொதுவாக வழமையான முறையில் செயலாற்றக்கூடிய காவல்துறையினரின் நடத்தைகளின் காரண மாகவே, பெரும்பாலான காவல்நிலைய மரணங் கள் நிகழ்ந்துள்ளன. சித்திரவதை மோசமாக நடத்தப்படுவது மற்றும் காணாமல் போவது போன்று சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகள் மீதான குற்றச்சாட்டுகளை சரியான முறையில் நடுநிலையோடு அரசு விசாரிக்கவில்லை.

குறிப்பாக, போரின் இறுதிக் கட்டங்களில் நடந்தவற்றிற்கு அரசு மற்றும் பாதுகாப்புப் படையினரைக் குற்றம்சாட்டக்கூடிய நடத்தையைப் பொருத்த அளவில், அதன் சுதந்திரம் மற்றும் சார்பற்ற தன்மை மீது கேள்வி எழுப்புவதாகவும், பொறுப்பேற்பதை முன்னெடுக்கும் ஓர் அமைப்பாக அதன் அதிகாரத்தை வலுவிழக்கச்செய்வதாகவும் இருக்கிறது.

3) கற்ற பாடங்கள் மற்றும் இணக்கத்திற்கான ஆணையத்தின் பிற கட்டமைப்புக் கூறுகள்

(அ) பொது அறிக்கை

312) க.பா.இ.ஆ. போன்ற ஆணையங்களின் பணியானது, அதன் கண்டு பிடிப்புகள் மற்றும் பரிந்துரைகளைக் கொண்ட ஓர் அறிக்கையை வழங்குவதையும் உள்ளடக்கியது என சிறந்த உலகளாவிய நடைமுறைகள் கோருகின்றன. அந்த அறிக்கையானது, மேலும் விசாரணைகள் அல்லது தண்டனைகள், சவக்குழி களைக் கண்டறிவது, நிவாரணங்கள், பல்வேறு வகையான கட்டமைப்பு ரீதியான மறுவாழ்வு நடவடிக்கைகள் மற்றும் மீண்டும் இதே சூழல் ஏற்படாமல் இருப்பதற்கான உத்தரவாதங்கள் ஆகியவை உள்ளிட்ட பலவற்றையும் கவனத்தில் கொள்ளவேண்டும். அத்துடன், இந்த அறிக்கை பொதுவில் வெளியிடப்பட வேண்டும் என்றும், அதில் சில தனிநபர்களை அடையாளப்படுத்தக்கூடிய குறிப்பு களை வெளியிடுவதன் மூலம், அவர்களது உயிர் அல்லது உடல் பாதுகாப்பிற்கு ஆபத்து ஏற்படும் என்ற நிலையில், அதனை மட்டும் வெளியிடாமல் மறைக்கலாம் என்றும் சிறந்த நடைமுறைகள் கோருகின்றன. ஆனால் க.பா.இ.ஆ.வை அமைப்பது குறித்த உத்தரவிலோ, விசாரணை ஆணையங்கள் சட்டத்திலோ, ஓர் இறுதி அறிக்கையை வெளியிடுவது குறித்து எதுவும் இல்லை. இலங்கையில் இதற்கு முன் இருந்த விசாரணை ஆணையங்களின் வரலாற்றை நோக்கினால், அவை தொடர்ந்து தனது கண்டுபிடிப்புகளையும் பரிந்துரைகளையும் வெளியிடாமல் இருந்ததையும், இதன் மூலம் பொதுமக்களின் நம்பகத்தன்மையைக் குறைத்ததையும், அதனால் அந்தப் பணிகளின் நடைமுறை பாதிப்பை மிக மோசமாகக் குறைத்ததையும், அதனை தொடர்ந்து எடுக்கவேண்டிய நடவடிக்கைகளுக்கான சாத்தியங்களை குறைத்ததையும், உண்மையில் அந்த ஆணையத்தின் பணி வரையறைக்கு ஈடுசெய்யும் வகையில் அதன் பணி இருந்ததா என்பதைக் கணிப்பதைச் சாத்தியமற்றதாக்கியும் இருந்ததை காணலாம். க.பா.இ.ஆ.வின் இறுதிஅறிக்கையின் நகல் அய்.நா.விடம் அளிக்கப்படவேண்டும் என்பது குறித்து தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இதைவிட முக்கியமாக, அந்த அறிக்கை இலங்கை மக்களிடம் வெளியிடப்படவேண்டும். க.பா.இ.ஆ., தனது கண்டுபிடிப்புகள் மற்றும் பரிந்துரைகள் அனைத்தையும் மிகப் பரவலாகப் பொதுமக்களிடம் கொண்டுச் சேர்க்க வேண்டும் என சிறந்த நடைமுறைகள் கோருகின்றன.

(ஆ) பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளின் பாதுகாப்பிற்குப் போதுமான நடவடிக்கைகள் இல்லை

313) எந்த ஒரு தனி நபரையும், சாத்தியமான, எதிர்பார்க்கக்கூடிய புற ஆபத்துக் களில் இருந்து, அவரது உடல் பாதுகாப்பையும், தனிப்பட்ட விஷயங்களையும் காக்கவேண்டியப் பொறுப்பு அரசுக்கு உள்ளது என உலகளாவிய மனித உரிமைச்சட்டம் கூறுகிறது. மனித உரிமையே தனது முக்கிய பொருளாகக் கொண்ட விசாரணை ஆணையங்கள் விஷயத்தில் இந்த வரையறையானது வெளிப்படையாக விவரிக்கப்பட்டுள்ளது. :-'ஆணையத்திடம் தகவலை அளித்த பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளின் பாதுகாப்பு, உடல் மற்றும் உளவியல் நலன் மற்றும் தேவையேற்படின் அவரது தனிப்பட்ட விஷயங்கள் ஆகியவற்றை பாதுகாக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படவேண்டும்' இது குறித்து க.பா.இ.ஆ.வின் அதிகாரத்திற்கு தெளிவான சட்ட அடிப்படை இருக்கவேண்டும். இதன் மூலம் வாக்குமூலங்களை அளிப்பதா வேண்டாமா என

யோசிப்பவர்களுக்கு நிச்சயத்தன்மையையும், கணிக்கக்கூடிய தன்மையையும், நம்பிக்கையையும் உறுதிப்படுத்த வேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையானவற்றைச் செய்வதற்கும், அவர்களை நடைமுறையின் மையமாக வைப்பதற்குமே பெருமளவில் பொறுப்பேற்கும் நடைமுறைகள் இருக்கின்றன. இந்த நிலையில் பாதிக்கப்பட்டவர்களும் சாட்சிகளும் நிச்சயமாக அவர்களின் சொந்த விருப்பத்தின் அடிப்படையில் மட்டுமே வாக்குமூலங்களை அளிப்பதற்கு அழைக்கப்படவேண்டும் என உலகளாவிய வரையறைகள் கூறுகின்றன. வாக்குமூலங்களை அளிப்பதற்கு முன்பும் பின்பும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ, சமூகப் பணி மற்றும் உளவியல் நல வல்லுநர்கள் அனுமதிக்கப்பட வேண்டும். வாக்குமூலங்களை அளிப்பவர்களுக்கான அனைத்துச் செலவுகளையும் அரசு ஏற்கவேண்டும். குத்தாமாலா மற்றும் சியாரா லியோனேயில், இரகசியத் தன்மையைக் காப்பதற்கான உறுதிமொழிகள், பெரு மற்றும் தென்ஆப்பிரிக்காவில் அளிக்கப்பட்ட உளவியல் உறுதுணை, தென் ஆப்பிரிக்காவில் நடைமுறைப் படுத்தப்பட்ட முழுமையான சாட்சிகள் பாதுகாப்புச் செயல்திட்டம் போன்று பாதிக்கப்பட்டவர்களையும் சாட்சிகளையும் காப்பதற்கும் அவர்களுக்கு துணை நிற்பதற்கும் பல்வேறு வகையான பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பிற நாடுகளில் அமைக்கப்பட்ட ஆணையங்கள் எடுத்துள்ளன.

314) ஆனால் வாக்குமூலங்களை அளிக்கக்கூடிய நபர்களுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து எந்தக் குறிப்புகளும் க.பா.இ.ஆ.வின் பணி வரையறையிலோ, விசாரணை ஆணையங்கள் சட்டத்திலோ இல்லை. மாறாக, விசாரணை ஆணையங்கள் சட்டத்தின் பிரிவு 13 கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறது. 'நீதிமன்றத்தின் முன் சாட்சியம் அளிக்கக்கூடிய ஒருவர் அந்த சாட்சியத்திற்காக என்னவிதமான சலுகைகளைப் பெறுகிறாரோ, அவை அனைத்தும் இங்கு வாக்குமூலங்கள் அளிப்பவர்களுக்கும் உண்டு' க.பா.இ.ஆ.வின் தலைவர் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டதாகக் கூறப்படுகிறது. 'ஆணையத்தின் முன் சாட்சியம் அளிக்க விரும்பும் எவருக்கும் எல்லா வசதிகளும் செய்துகொடுக்கப் படும்' இந்தக் கூற்றைக் குழுவால் உறுதிசெய்ய முடியவில்லை. சாட்சியங்களின் பாதுகாப்பு குறித்த க.பா.இ.ஆ.வின் நடைமுறைகள் பற்றியக் குழுவின் எழுத்து பூர்வமானக் கேள்விகளுக்கு எந்த பதிலும் கிடைக்கவில்லை.

315) சாட்சிகளுக்குக் குறிப்பான பாதுகாப்பும் துணையும் அளிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள், உலகளாவிய வரையறைகள் மற்றும் சிறப்பான நடைமுறைகளின் அடிப்படையில் எடுக்கப்பட்டது என்று, தனக்கு கிடைத்த தகவல்களின் மூலம் குழுவால் முடிவுசெய்ய இயலவில்லை. இலங்கையில் நிலவிய அச்சமூட்டும் சூழலையும், இதற்கு முன்பு அமைக்கப்பட்ட விசாரணை ஆணையங்களின் அனுபவங்களையும், சாட்சிகளைப் பாதுகாக்க சிறப்பானச் நடைமுறைகளை எடுக்க அவை தவறியதால் அவற்றின் பணிகள் எவ்வாறு பாதிக்கப்பட்டன என்பதையும் கணக்கில் கொண்டு சிந்திக்கும்பொழுது இது முக்கியத்துவம் பெறுகிறது. 'மோசமான மீறல்கள் ஆணையம்' சாட்சிகளை பாதுகாக்கப் போதுமான நடவடிக்கைகள் எடுக்க தவறியது குறித்து 2008இல் 'முக்கிய நபர்களின் பன்னாட்டு சுதந்திரக்குழு' கூறியது இதற்கும் பொருந்தும். 'முக்கிய நபர்களின் பன்னாட்டு சுதந்திரக்குழு' கீழ்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது.

பிறகூறுகள் அனைத்தையும் விட இந்த விஷயமானது (சாட்சிகளைப் பாதுகாப்பதற்கு ஒரு சிறப்பான அமைப்பு இல்லாததும், அப்படியொன்றை நடைமுறைப்படுத்த அரசுக்கு உள்ள விருப்பம் மற்றும் திறன்) தற்போது எழுந்துள்ள மிகமோசமான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் குறித்து அறிக்கைகளை அளிப்பதும், தண்டனைகளும் மற்றும் தேவையானப் பொறுப் பேற்கும் செயல்களும் வருங்காலத்தில் நடைபெறுவதற்குத் தடையாக உள்ளன.

316) சாட்சிகளின் பாதுகாப்பை மேலும் விரிவாக வழங்கக்கூடிய வகையில்

மிக மோசமான குற்றங்கள் எவ்வாறு நடத்தப் படுகின்றன என்பதற்கு சான்றாக, சித்திர வதையை ஒரு குற்றமாக அறிவித்த 1994இன் 'சித்திரவதை மற்றும் பிற கொடூரமான மனிதத் தன்மையற்ற தரக் குறைவான நடத்தை அல்லது தண்டனைக்கு எதிரான தீர்மானச்சட்டம்' நடைமுறைப்படுத்தப் பட்டதிலிருந்து அட்டர்னிஜெனரல் எழுப்பிய 34 விசாரணை வழக்குகளில் மூன்றில் தண்டனை அளிக்கப் பட்டும் எட்டில் முழுமை யாக விடுவிக்கப்பட்டும் உள்ளன. சித்திரவதைக் காகக் காவல்துறை ஆய்வாளர் பதவிக்கு மேலே உள்ள எந்த அதிகாரி மீதும் சட்டபூர்வ நடவடிக்கை எடுக்க அட்டர்னிஜெனரல் கோரவில்லை.

2008இல் முன்மொழியப்பட்ட ஒரு சட்ட முன்வரைவைச் சட்டமாக ஆக்கத் தவறியதன் மூலம், குறிப்பிட்ட வழக்குகளில் தேவையான பாதுகாப்பினை வழங்குவதற்கு இலங்கைக்கு குறைந்தபட்சச் சட்ட அடிப்படையே உள்ளது.

வலுக்கட்டாயமாக காணாமல் போக்குதல் குறித்த வழக்குகளில் (பொதுவாக இவை கடத்தல் போன்ற சாதாரண வகைக் குற்றங்களின் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ளன.) கிடைத்துள்ள புள்ளி விவரங்கள் அடிப்படையில், தண்டனை அளிக்கப்பட்ட விகிதாச்சாரம் மிகக் குறைவாக இருப்பது தெரிகிறது. புகாரைப் பதிவு செய்ததில் ஏற்பட்ட தாமதம் மற்றும் குற்றத்தை வரையறுத்தலில் ஏற்பட்ட தவறுகள் ஆகிய தொழில்நுட்பக் காரணங்களைக் காட்டியே இவ்வழக்குகளில் நீதிமன்றங்கள் விடுதலை செய்கின்றன.



4) கற்ற பாடங்கள் மற்றும் இணக்கத்திற்கான ஆணையத்தின் நடைமுறைகள்

(அ) நேர்மறையான நடவடிக்கைகள்

317) தனது பணிவரையறையைச் செயல்படுத்தும் நோக்கில் க.பா.இ.ஆ. கொழும்புக்கு வெளியே, குறிப்பாகப் போரின் இறுதிக் கட்டங்களில் மிக அதிகமாக பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்றது. வவுனியா (மாணிக் பண்ணை உட்பட), கிளிநொச்சி, முல்லைத்தீவு, ஓமந்தை (தடுப்புக் காவல் மையங்கள் உட்பட), மட்டக்களப்பு, திரிகோணமலை மற்றும் யாழ்ப்பாணம் ஆகியவை உள்ளிட்ட இடங்களில் தனது விசாரணையை அது நடத்தியது. கொழும்புக்கு வெளியே நடத்திய விசாரணைகளில், குறிப்பாகப் பெரும்பாலும் பாதிக்கப் பட்டவர்களாக இருக்கக்கூடிய சாட்சிகள், தங்களது நேரடி அனுபவங்களை நேரடியான சாட்சியாகப் பெரும் எண்ணிக்கையில் வழங்கியதை க.பா.இ.ஆ. கேட்டது. இலங்கையின் உண்மை அறிவதற்கும் பொறுப்பேற்பதற்கும், நேர்மையானதொரு நடைமுறையின் அவசரத் தேவை இருப்பதையே வடக்கிலும் கிழக்கிலும் பெரும் எண்ணிக்கையிலான மக்கள், குறிப்பாகப் பெண்கள் தானாக முன்வந்து வாக்குமூலங்கள் அளித்தது காட்டுகிறது.

318) பொதுவாக இத்தகைய ஆணையங்கள் தங்களது பணியின் இறுதியில் பரிந்துரைகளை வழங்குவது வழக்கம். ஆனால் உடனடிக் கவனம் தேவைப் படுகிறது எனத் தான் கருதிய விஷயங்கள் குறித்து க.பா.இ.ஆ. இடைக்காலப் பரிந்துரைகளை அரசுக்கு ஏற்கெனவே அளித்துள்ளது. இவற்றில் தடுப்புக்காவல், சட்டம்ஒழுங்கு, பொது நிர்வாகம், மொழி, நிலம், மற்றும் பிற சமூக பொருளாதார மற்றும் வாழ்வியல் சிக்கல்கள் ஆகியவை குறித்த பொதுவான விஷயங்கள் இருந்தன. அட்டர்னிஜெனரல் தலைமையில், அமைச்சரவை அங்கீகாரத்துடன் கூடிய பலமுனை ஆலோசனைக் குழு என்பதோர் அமைப்பை அரசு நிறுவியுள்ளது. இந்தப் பரிந்துரைகளை, கட்டமைப்புடனும் பல துறைகளின் தொடர் நடவடிக்கைகள் மூலமும் நடைமுறைப்படுத்துவதற்காக இது அமைக்கப் பட்டது எனக் கூறப்படுகிறது.

(ஆ) உண்மையை அறியவோ, விசாரிக்கவோ ஒரு தெளிவான அணுகுமுறை இல்லை

319) பொறுப்பேற்பதன் முக்கியக் கூறாக இருப்பது உண்மையை அறிவதே. கொள்கை அடிப்படையில் க.பா.இ.ஆ.வின் பணி வரையறை வெளிப்படையாக இதனைக் கூறவில்லை. எனினும், போரின் இறுதிக் கட்டங்களில் மனித உரிமை மற்றும் உலகளாவிய மனித நேயச் சட்ட மீறல்கள் குறித்தும் பாதிக்கப் பட்டவர்களின் அனுபவங்கள் குறித்தும் உண்மையை அறிவதற்குப் பங்களிக்க எவ்வித தடையுமில்லை. ஏற்கனவே விவாதிக்கப்பட்டவற்றைத் தாண்டி உண்மை அறிவதற்கு க.பா.இ.ஆ.வின் பங்களிப்பு என்பது அதன் வேலைத்திட்டம் மற்றும் தினசரி நடவடிக்கைகளின் அடிப்படையில் வடிவமைக்கப்படுகிறது. இந்த வேலைத்திட்டங்களின் வெளிப்படைத் தன்மையின் அடிப்படையிலேயே அதன் கண்டுபிடிப்புகளின் நம்பகத்தன்மை உள்ளது.

320) உண்மையை அறிவதற்கும் மீறல்களை விசாரிப்பதற்கும் க.பா.இ.ஆ. மேற்கொண்டுள்ள ஒட்டுமொத்த வேலைத்திட்டம் குறித்து முழுமையாக புரிந்துகொள்ள, குழு தன்னிடமிருந்த தகவல்களை ஆராய்ந்த போதும் இயலவில்லை. பிறநாடுகளில் அமைக்கப்பட்ட உண்மை அறியும் ஆணையங்கள் வாக்குமூலங்களைப் பெறுவதோடு, கூடுதலாக அதிகாரபூர்வ இராணுவ ஆவணங்கள், காவல்துறை கோப்புகள் மற்றும் சில குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் மற்றும் ஒரே மாதிரியான மீறல்கள் குறித்த நீதிமன்ற ஆவணங்கள் ஆகியவற்றை ஆய்வு

செய்வதையும் தனது விசாரணையின் பகுதியாக கொண்டுள்ளன. மேலும் சட்ட விரோதத் தடுப்புக் காவல் மையங்கள் அல்லது பாதிக்கப்பட்டவர்களிடம் போர் ஏற்படுத்திய விளைவுகள் போன்றவை குறித்தும் குறிப்பான விசாரணைகளை நடத்துகின்றன. அத்துடன், பாதிக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கையை உறுதிப் படுத்த தேவையான நடவடிக்கைகளையும் நடைமுறைப்படுத்தின. வாக்கு மூலங்களைப் பெறுபவர்கள், ஆய்வாளர்கள், விசாரணை அதிகாரிகள், மொழி வல்லுநர்கள், பாலின வல்லுநர்கள் மற்றும் உளவியல் வல்லுநர்கள் உட்பட நூற்றுக்கணக்கான பணியாளர்களை அவர்கள் நியமித்துள்ளனர். க.பா.இ.ஆ.வைப் பொருத்தவரையில் அவர்களது ஆவணப் பணியானது பெரும்பாலும் எழுத்து பூர்வமான வாக்குமூலங்களைப் பெறுவதிலும், அவற்றின் தன்மையை ஆராய் வதிலும், அதன் அடிப்படையில் வாய்மொழி வாக்குமூலத்தை பெறுவதா வேண்டாமா என முடிவு எடுப்பதிலுமே கழிகிறது. க.பா.இ.ஆ.வில் 4 ஆய்வாளர்கள், 4 காவலர்கள், 4 மொழிப்பெயர்ப்பாளர்கள் மற்றும் சில பிற துணைப்பணியாளர்கள் ஆகியோர் உட்பட மொத்தம் 20 பணியாளர்கள் இருப்பதாக அட்டர்னிஜெனரல் அய்.நா.வுடனான தனது சந்திப்பில் தெரிவித்தார். இது போரின் இறுதிக் கட்டங்களில் மிகச் சிக்கலாக நிலவிய சூழலில் உண்மைகளைக் கண்டறிவற்குத் தேவையான பணியாளர்களின் எண்ணிக்கையோடு ஒப்பிடும் போது மிகமிகக் குறைவாகவே உள்ளது. அத்துடன், போர் மற்றும் இணக்கம் குறித்த குறைவான முரண்பாடுகள் மற்றும் அதிக உணர்வுபூர்வமற்ற வரலாற்று ஆய்வுகளை மட்டுமே தனது பணியாக எடுத்துக்கொண்டு க.பா.இ.ஆ. வசதியான நிலையில் தன்னை வைத்திருப்பதாகக் தோன்றுகிறது. அத்துடன், போரின் இறுதிக் கட்டங்களில் நடைபெற்ற மீறல்கள் குறித்துத் தனது பங்கு பற்றி ஒரு தெளிவற்ற மற்றும் உறுதியற்ற தன்மையையே அது பிரதிபலிப்பதாகத் தோன்றியது.

321) முன்பே குறிப்பிட்டதுபோல் க.பா.இ.ஆ. நேரடியான வாக்குமூலங்கள் மற்றும் எழுத்துபூர்வமான அறிக்கைகள் ஆகிய இரண்டையுமே பெற்று வந்திருக்கிறது. வாக்குமூலங்களை அளிப்பதற்கு அழைப்பு விடுக்கும் முறையிலும், சாட்சிகளைத் தேர்ந்தெடுக்கும் முறையிலும் அது தெளிவாக இல்லை. இதன் மூலம் அது சரியான திட்டமிடுதல் இன்றிச் செயல்படுவதான தோற்றத்தையே அளிக்கிறது. பாதிக்கப்பட்டவர்களைப் பொருத்தவரையில் வாக்குமூலங்களை அவர்கள் தானாக முன்வந்து அளிக்கவேண்டும் என்ற உலகளாவிய வரையறையை அது கடைப்பிடிக்கிறது. அதே வேளையில் தேவையான செய்திகளை வைத்திருப்பவர்கள் அல்லதுப் பொறுப்பான நிலையில் இருந்தவர்கள் சில சமயம் வாக்குமூலங்கள் அளிக்க முன்வருமாறு வற்புறுத்தப் படுகிறார்கள்.

322) சனவரி 2011 இறுதிவரையில் சுமார் 148 தனி நபர்களும் அமைப்புகளும் கொழும்பில் நடந்த பொதுவிசாரணைகளில் வாக்குமூலங்கள் அளித்திருப்பதாக க.பா.இ.ஆ.வின் இணையதளம் தெரிவிக்கிறது. இந்தத் தனிநபர்கள் பொதுத் துறையில் முக்கியமான நபர்களாகவும் தொழில், சமூகம் மற்றும் குடிமையியல் தலைமை, தொழில்நுட்ப அமைப்புகள், உயர் கல்வி மற்றும் குடிமைச் சமூகத்தின் முக்கிய அங்கத்தினர்களாகத் தற்போது இருக்கக்கூடியவர்களாகவும் ஓய்வு பெற்றவர்களாகவும் இருந்தனர். கொழும்பு விசாரணைகளைப் பொருத்த வரையில் ஒரு சாட்சி நீளமான முன்பே தயாரிக்கப்பட்ட ஓர் அறிக்கையை அளிப்பார். அதனைத் தொடர்ந்து ஆணையர்களுடன் நீண்ட மரியாதையான ஓர் உரையாடலை மேற்கொள்வார். இது சில நேரங்களில் பலமணி நேரங்கள் நீடிக்கும். இதுவே பொதுவான நடைமுறையாக இருந்தது. இந்த விவாதங்களின் மய்யக் கருத்தானது பெரும்பாலும் வருங்கால இணக்கம் மற்றும் வரலாற்றுச் சிக்கல்கள் குறித்த கேள்விகளை உள்ளடக்கியதாகவும், போர் நிறுத்த ஒப்பந்தம் முறிவடைந்ததற்கான காரணங்களை விவாதிப்பதாகவும் இருந்தது. இந்த விவாதங்கள் விரிவான தளங்களில் புரிதல்களை ஏற்படுத்த முக்கியமெனினும்,

தமிழினி என்ற பெயரில் அறியப்பட்ட சுப்ரமணியம் சிவத்தாய் என்பவர், விடுதலைப் புலிகள் இயக்கத்தில் அதி உயர் பதவியில் இருந்த பெண்ணாகவும், 2002இல் நடந்த சமாதானப் பேச்சு வார்த்தைகளில் பாலினம் குறித்த துணைக்குழுவில் உறுப்பினராகவும் இருந்தார். இவர், மே 2009இல் மாணிக் பண்ணையில் கைது செய்யப்பட்ட நாள் முதலாக எவ்விதக் குற்றச்சாட்டுகளும் சுமத்தப்படாமல் அரசின் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டுள்ளார்.

அவை எடுத்துக்கொண்ட மிக நீண்ட நேரத்துடன் ஒப்பிடும்பொழுது ஆயுதப் போரின் இறுதிக் கட்டங்கள் குறித்து குறிப்பாக அரசு அல்லது விடுதலைப்புலிகள் இயக்கம் செய்திருக்கக்கூடிய அத்துமீறல்கள் குறித்து அறிந்துகொள்ள மிகக் குறைவான அளவிலேயே பயன்படுவதாக உள்ளது.

போரின் இறுதிக் கட்டங்களில் நடத்தப்பட்ட மீறல்களுக்கு இராணுவத்தினரைப் பொறுப்பேற்க வைக்க, போர் முடிந்த காலத்திலிருந்து போடப்பட்ட மிகக்குறைந்த எண்ணிக்கையிலான வழக்குகள் போதாது. மேலும் மிகப்பெரும் நிலையில் உத்தரவிடப் பட்டோ அல்லது திட்டமிடப்பட்டோ நடத்தப்பட்ட குற்றச்செயல்கள் குறித்த நம்பத்தகுந்த குற்றச்சாட்டுகள் இருந்தபோதும், தற்போதுள்ள அல்லது முன்னாள் இராணுவ அல்லது அரசு உயர் அதிகாரிகளுக்கு எதிராக மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் குறித்து எந்த வழக்குகளும் இருப்பதாக தெரியவில்லை.



323) பாதுகாப்புப் படையினர் நடத்தை உட்பட உலகளாவியச் சட்டங்கள் மீறப்பட்டதுக் குறித்தக் குற்றச்சாட்டுகளை நேரடியாகக் கையாளும்பொழுது பெரும்பாலும் நேருக்கு நேராக முரண்பட்டுக்கொள்ளாத அணுகுமுறையே பின்பற்றப்பட்டது. தங்களது சிக்கலான முக்கியச் செயல்பாடுகள் மற்றும் போரின் இறுதிக் கட்டங்களில் நடந்த நிகழ்வுகள் குறித்த தகவல்களை அறிந்திருந்த போதிலும், பாதுகாப்புச் செயலரும் மிக மூத்த இராணுவ அதிகாரிகள் அய்வரும் ஆணையத்தின் முன் ஒரு சுருக்கமான சந்திப்பையே நிகழ்த்தினர். இந்த மூத்த அதிகாரிகள் ஆணையத்தின் முன் வந்தபொழுது பொதுவான மீறல் குற்றச்சாட்டுகள் குறித்து ஆயுதப்போரின் இறுதிக் கட்டங்களில் அவர்களது ஒட்டுமொத்தத் திட்ட அணுகுமுறைகள் குறித்த கேள்விகளுமே கேட்கப்பட்டன. குறிப்பான எந்த கேள்விகளும் கேட்கப்படவில்லை. பன்னாட்டு ஊடகங்களில் வெளிவந்த மீறல் குற்றச்சாட்டுகள் குறித்து ஆணையர்கள் மிக அரிதாகவே கேள்வி எழுப்பினர். குழு சேகரித்த குற்றச்சாட்டுகளோடு சற்றும்பொருந்தாத நிலையில் இருந்த வாக்குமூலங்கள் கூட ஏற்றுக்கொள்ளப்பட்டன. சான்றாகப் 'பொதுமக்களுக்கு முற்றிலும் எவ்விதப்பாதிப்பும் ஏற்படவில்லை' என்ற வாக்குமூலமும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதன் மூலம் விசாரணை நடைமுறையின் வலுவற்ற தன்மையும் மூத்த அதிகாரிகளுக்கு தேவையற்ற அதிகப்படியான மரியாதை வழங்கப்பட்டதும் வெளிப்படுகிறது. இதன் மூலம் மோசமான குற்றச்சாட்டுகளுக்குப் பின்னே உள்ள உண்மைகளை நிறுவுவதற்கான ஆணையத்தின் திறனை இது பெரிதும் மட்டுப் படுத்துகிறது. குழுவினைப் பொருத்தவரையில் மூத்த இராணுவ மற்றும் அரசு அதிகாரிகளின் வாக்குமூலங்கள் மீது விமர்சனமற்ற மதிப்பு மிகுந்த அணுகுமுறை கொண்டிருப்பது என்பது, போரின் இந்த முக்கியக் கட்டம் குறித்த உண்மைகளை நிறுவுவதற்கும், இலங்கையின் அரசியல் மற்றும் இராணுவத் தலைமையின் ஈடுபாடுகள் குறித்த அரசியல் ரீதியான, விரிவான, முக்கியமான விஷயங்களை அணுகுவதற்கும் க.பா.இ.ஆ.வின் விருப்பம் குறித்த ஆழமான கேள்விகளை எழுப்புகிறது. மாறாக நிகழ்வுகள் குறித்து அரசின் பார்வையை வெளிப்படுத்து வதற்கான ஒரு தளமாகவே க.பா.இ.ஆ. செயல்படுவதாகத் தோன்றுகிறது.

324) வடக்கு கிழக்கில் வாக்குமூலம் அளித்தவர்களில் பெரும்பான்மை யானவர்கள் போரினால் பாதிக்கப்பட்டவர்களாக இருந்த நிலையில் க.பா.இ.ஆ.வின் அணுகுமுறை அங்கு வேறாக இருந்தது. மீறல்கள் குறித்த சான்றுகளை அறிவதற்கும் பாதிக்கப்பட்டவர்களின் அனுபவங்களுக்குப் பின்னுள்ள உண்மைகளை வெளிப் படுத்துவதற்கும் போர் நடைபெற்ற பகுதிகளில் பெறப்படும் வாக்குமூலங்கள் முக்கியமானவை என்றபோதும், மே 2010இல் ஆணையத்தின் பணி தொடங்கியது முதல் சனவரி 2011 இறுதிவரை 14 நாட்கள் மட்டுமே இந்தப் பகுதிகளுக்கு க.பா.இ.ஆ. சென்றதாக அதன் இணையதளம் பதிவுசெய்கிறது. வடக்கு மற்றும் கிழக்கில் இதற்குப் பொருத்தமான வாக்குமூலங்களை அளிக்கக்கூடிய சாட்சிகளை விசாரிப்பதற்கு ஒதுக்கப்பட்ட நேரம் மிகமிகப் போதாத நிலையில் இருந்தது. இதனால் வாக்குமூலம் அளிக்க விருப்பப்பட்ட பெரும்எண்ணிக்கையிலான பாதிக்கப்பட்டவர்களால் அது முடியவில்லை. இதில் பெரும்பான்மையானவர்கள் பெண்கள். பெரும் எண்ணிக்கையில் மக்கள் திரண்டபோதும், அது குறித்து குடிமைச் சமூகப் பிரதிநிதிகள் ஆணையத்தின் கவனத்திற்கு கொண்டுவந்த போதும், இந்தப் பெரும் எண்ணிக்கையிலான சாட்சிகளுக்கு இடம் அளிக்கக் கூடிய வகையில் தனது விசாரணை நிகழ்ச்சி நிரலை க.பா.இ.ஆ. மாற்றி அமைத்ததாகத் தெரியவில்லை.

325) வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள பாதிக்கப்பட்டவர்களும் சாட்சிகளும்

போரின் இறுதிக் கட்டங்களில் நிகழ்ந்த முக்கிய நிகழ்வுகள் குறித்து அளித்த மற்றும் அளிக்கக்கூடிய நேரடியான சாட்சியங்கள் உண்மை அறிவதற்கான மையமாக இருந்தபோதும் இந்த வாக்குமூலங்களைக் கேட்பதற்கு க.பா.இ.ஆ. மிகக்குறைந்த நேரமே ஒதுக்கியது. கூடுதலாக மீறல்கள் குறித்து மிகப் பொருத்தமான வாக்குமூலங்களை அளித்த சாட்சிகளுக்கு 15 முதல் 20 நிமிடங்கள் அல்லது அதற்கும் குறைவான நேரமே ஒதுக்கப்பட்டது. இது நிகழ்வுகள் மற்றும் உண்மைகள் குறித்து சாட்சிக்கு எந்த அளவிற்குத் தெரியும் என்பதை கண்டறிய போதுமானதாக இல்லாததோடு, அவரின் மரியாதைக்குப் பங்கம் ஏற்படுத்துவதாகவும் உள்ளது.

326) வடக்கு மற்றும் கிழக்கில் நடந்த இந்த விசாரணையில், காணாமல் போனவர்கள் மற்றும் தொலைந்துபோன உறவினர்கள் போன்ற குறிப்பான மீறல்கள் குறித்துப் பாதிக்கப்பட்டவர்கள் புகார் அளித்தபோதும், இவ்விஷயங்களில் ஆணையம் மிகக் குறைந்த ஆர்வத்தையே காட்டியது. சனவரி 2011இன் நடுப்பகுதிவரை தனிப்பட்ட முறையில் பாதிப்புகளைச் சந்தித்த தனிநபர்கள் அளித்த வாக்குமூலங்களின் எழுத்து வடிவத்தை ஆராய்ந்தபோது, எண்பது விழுக்காட்டிற்கும் மேலானவர்கள், காணாமல் போன அல்லது தொலைந்துபோன உறவினர்கள் அல்லது தெரிந்த மய்யங்களில் தடுத்து வைக்கப்பட்டவர்கள் குறித்தே அறிக்கைகளை அளித்திருந்தனர். இவற்றில் பெரும்பாலானவற்றை மனிதநேயப் பார்வையில் ஆணையம் அணுகியதேயொழிய, அவற்றிலுள்ள மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளை அது கவனத்தில் கொள்ளவில்லை. பலநேரங்களில், தங்களது சிக்கல்களை எழுத்துபூர்வமாக அளிக்கும்படி சாட்சிகளை ஆணையம் கோரியது. அதன்மூலம் அவை அதற்குப் பொறுப்பான அதிகாரிகளிடம் முன்னெடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் எழுத்துபூர்வமான அறிக்கைகளை அளிக்குமாறு சாட்சிகள் கேட்டுக்கொள்ளப்பட்டபோதும், இதற்காக க.பா.இ.ஆ. வழங்கிய படிவங்கள் சிங்களம் மற்றும் ஆங்கிலத்தில் மட்டுமே இருந்தன.

327) வேறு எங்கிலும் மேற்கொள்ளப்பட்ட உண்மை அறிவதற்கான சிறப்பான நடவடிக்கைகளுக்கு நேர்விரோதமாகவே இந்த நடவடிக்கைகள் பல கட்டங்களில் இருந்தன. இலங்கையை ஒத்த சூழல்களில், வரலாற்றுக் காரணங்களையும் போருக்கு இட்டுச்சென்ற அரசியல் தவறுகளையும் ஆராய்வது உண்மை ஆணையங்களின் பணியாக இணைக்கப்பட்டிருந்தபோதும், நடைபெற்ற உலகளாவிய மனிதநேய மற்றும் மனித உரிமைச் சட்ட மீறல் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதிலும் கவனமாக ஆவணப்படுத்துவதிலுமே அவ்வாணையங்களின் பெரும்பாலான நேரமும் ஆற்றலும் பயன்படுத்தப்பட்டது. சரியான விசாரணை முறையைப் பயன்படுத்துவது என்பதோடு, முக்கியத்துவத்துக்கு ஏற்றவாறு நேரம் மற்றும் பிற வளங்களை ஒதுக்குவதிலும் உள்ளது. மிகப்பெரிய அளவில் மீறல்கள் நடைபெற்றதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்த இடங்களில் ஆணையத்திற்கு உதவியாக விசாரணைகளை மேற்கொள்ளப் பெரும் எண்ணிக்கையிலான பணியாளர்களை உண்மை ஆணையங்கள் பொதுவாக நியமித்திருந்தன. தேவைப்படும் சூழல்களில் பலமணிநேரங்கள் என்ற போதும், தனியான சூழலில் வாக்குமூலம் எடுப்பவர்கள் முன் தங்கள் வாக்குமூலங்களைப் பாதிக்கப்பட்டவர்கள் அளிப்பதற்கு உரிய இணக்கமான சூழலை அவர்கள் பொதுவாக உருவாக்கி வைத்திருந்தனர். கௌதமாலாவில் மிக உள்ளடங்கிய பகுதிகளுக்குச் சென்று பல மாதங்கள் பயணித்துப் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் பிற சாட்சிகளிடம் இருந்து வாக்குமூலங்களைப் பெறவும், குற்றச்சாட்டுகளை விசாரிக்கவும், அங்கு இருந்த பாதிக்கப்பட்டவர்கள் நிச்சயமாகக் கேட்கப்படுவதை உறுதிபடுத்தவும் பணியாளர்கள் அனுப்பப்பட்டனர். ஆனால் க.பா.இ.ஆ.வின் பணி நடைமுறைகள் உண்மை அறிவதை நேர்மையாக முன்னெடுக்கவோ அல்லது மீறல்கள் குறித்துத் திறமையான ஒரு விசாரணையை மேற்கொள்ளவோ அனுமதிப்பதாக இல்லை.

இந்த நிவாரணத்தின் கடந்த கால நடைமுறைகளைப் பொருத்தவரையில், சித்திரவதை மற்றும் கொடூரமான, மனிதத் தன்மையற்ற அல்லது தரம்குறைவான நடத்தைகள் குறித்து 2000 முதல் 2006 வரையிலான காலக்கட்டத்தில், உச்சநீதிமன்றம் வழங்கிய 52 அடிப்படை உரிமைகள் குறித்தத் தீர்ப்புகளை ஆராய்ந்ததில், நீதித்துறையின் எதிர்வினையானது சமனற்ற முறையில் இருந்ததைக் காட்டுகிறது.

அண்மை ஆண்டுகளில் அரசமைப்புச் சட்டம் வழங்கக்கூடிய ஆட் கொணர்வு நிவாரணம், நெடிய தாமதங்களாலும், மனுதாரர்களுக்குப் பெரும் பொருளாதார மற்றும் போக்குவரத்துச் சிக்கல்களை ஏற்படுத்தக் கூடிய வகையில், நீதிமன்றங்களை மாற்றக் கோரிக் குற்றம்சாட்டப் பட்டவர்கள் அடிக்கடி விடுக்கக்கூடிய வேண்டு கோள்கள், கடத்தியவரின் பெயரில் நேர்ந்திருக்கக் கூடிய சின்ன எழுத்துப் பிழைகள் உள்ளிட்ட மிகச்சிறிய தொழில் நுட்பக் காரணங்கள் அல்லது காவல்துறை அல்லது இராணுவத் தலைமையால் குற்றச் சாட்டுகள் வெறுமனே மறுக்கப்படுவதன் அடிப்படையில் மனுக்கள் தள்ளுபடி செய்யப் படுவது உள்ளிட்ட பல் வேறு கூறுகள் காரணமாக வும், நடைமுறையில் அது மிகக்குறைந்த அளவி லேயே பயன்படுகிறது.



(இ) பாதிக்கப்பட்டவர்களை மய்யப்படுத்திய அணுகுமுறை இல்லை

328) வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் நடைபெற்ற விசாரணைகள் மூலம் க.பா.இ.ஆ.விடம் பாதிக்கப்பட்டவர்களை மய்யப்படுத்திய அணுகுமுறை இல்லை என்பதும் தெரியவருகிறது. கொழும்பு விசாரணைகளில் இருந்த மதிப்புமிகுந்த அணுகுமுறைக்கு நேர்மாறாக, காணாமல் போன மற்றும் தொலைந்துபோன அல்லது தடுத்து வைக்கப்பட்ட நபர்களை பற்றிய சிக்கல்களை எழுப்பிய பாதிக்கப்பட்டவர்களிடம் அலட்சியமான மற்றும் நிராகரிக்கின்ற அணுகுமுறையையே ஆணையர்கள் பெரும்பாலும் எடுத்துள்ளனர். இந்தச் சூழல்களில் பெரும்பாலும் கேள்விகேட்பது என்பது எந்தக் குறிப்பிட்ட நோக்கமும் அற்றதாக இருந்தது. பிறசூழல்களில் பாதுகாப்புப்படையினரின் நடத்தைகள் குறித்துக் குற்றச்சாட்டுகள் வைக்கப்பட்டபோது, அந்தக் குற்றச் சாட்டுகள் உண்மையாக இருக்கக்கூடும் என்ற அனைத்துச் சாத்தியங்களையும் புறந்தள்ளி, பாதிக்கப்பட்டவரின் வாக்குமூலத்தில் இருந்த முரண்களைச் சுட்டிக்காட்டி மிகுந்த சிரமம் எடுத்துக்கொண்டு ஆணையர்கள் அதனை நிராகரிக்க முற்பட்டனர். வேறுபல சூழல்களில் மனித உரிமைகள் சிக்கல்கள் குறித்த சட்டங்களைத் தவறாக விவரித்தனர். க.பா.இ.ஆ. பாதிக்கப்பட்டவர்களை நடத்திய விதம் என்பது அவர்களது தன்மதிப்பிற்குப் போதுமான மரியாதை அளிப்பதாக இல்லை. மேலும் மீறல்கள் மற்றும் அவர்களின் அசாதாரணமான துன்பங்கள் குறித்த சான்றுகளையும் வாக்குமூலங்களையும் க.பா.இ.ஆ. முன் அளிப்பதற்கான ஒரு நேர்மையான வாய்ப்பை அளிக்கத் தவறியது.

329) க.பா.இ.ஆ. நேரடியாகக் களங்களுக்கு மேற்கொண்ட பயணங்களின் போது அளிக்கப்பட்ட வாக்குமூலங்களில் பெரும்பான்மையானவை பெண் களிடமிருந்து அவர்களது கணவர், சகோதரர்கள் அல்லது மகன்கள் காணாமல் போனதுக் குறித்தோ அல்லது தடுத்து வைக்கப்பட்டிருப்பது குறித்தோ இருந்தன. மேலும் தங்களுக்கு உதவுமாறு க.பா.இ.ஆ.வை அவர்கள் வேண்டிக் கொண்டிருந்தனர். போரின் இறுதிக் கட்டங்கள் உட்படப் போர் நெடுகிலும் போராளிகள் மற்றும் பொதுமக்கள் என இரு தரப்பிலும் பெரும் எண்ணிக்கை யிலான ஆண்கள் கொல்லப்பட்டது என்பது பெரும் எண்ணிக்கையிலான பெண்களை எவ்வித ஆதரவும் அற்ற நிலையில் நிறுத்திக் கடுமையான வறுமை நிலையில் மோசமான சூழலில் வாழ வைத்துள்ளது. க.பா.இ.ஆ. பெரும்பாலும் ஆண்களைக் கொண்டிருந்த சூழலில், இந்தப் பெண்கள் தங்களது வாக்கு மூலங்களை அளிப்பதற்கு ஆதரவான ஒரு சூழலை உருவாக்குவதற்கு எவ்வித நடவடிக்கையையும் எடுத்ததாகத் தெரியவில்லை. அத்துடன், ஆணையத்தின் முன் தோன்றி வாக்குமூலம் அளிப்பது என்ற தங்களது முடிவை நிறைவேற்ற நீண்டதூரம் பயணித்தவர்களுக்குத் தேவையான ஆதரவையும், அவர்களது பிற செலவுகளை ஏற்றுக்கொள்ளவும், ஆணையம் தவறியது.

330) வாக்குமூலம் அளிக்க விருப்பப்பட்ட அனைவருக்கும், குறிப்பாக வடக்கிலும் கிழக்கிலும் இருந்தவர்களுக்கு, க.பா.இ.ஆ.அதற்கான வாய்ப்பை வழங்கவில்லை என்ற செய்திகள், பாதிக்கப்பட்ட அனைவருக்கும், குறிப்பாக பாதிக்கப்பட்ட பெண்களுக்கு இந்த நடைமுறை எவ்வளவு முக்கியமானது என்பதை உணர அந்த அமைப்பு தவறிவிட்டதையே காட்டுகிறது. தங்களது உரிமைகள் மீறப்பட்டது குறித்தும், தங்களது குடும்ப உறுப்பினர்களின் உரிமைகள் மீறப்பட்டது குறித்தும், க.பா.இ.ஆ. முன் வெளிப்படையாக பேசுவதற்குப் பெரும் எண்ணிக்கையிலான பெண்கள் முன்வந்தனர். அதிலும் இதனால் ஏற்படக்கூடிய ஆபத்துகளின் காரணமாகப் பாதிக்கப்பட்டவர்கள் பலர் பேச முன்வராத நிலையில் பெண்கள் முன்வந்துள்ளனர். ஆனால் அப்பெண்களை வெளிப்படையாக வாக்குமூலம் அளிக்க க.பா.இ.ஆ. அனுமதிக்க மறுத்தது என்பது, பொதுவாக பெண்களுக்கு எதிரான பாகுபாடுகள் மற்றும் போரினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு எதிரான பாகுபாடுகள் ஆகியவற்றை மீண்டும்

செயல்படுத்துவதாகவே இருந்தன. போரினால் சிதையுண்டு போயிருக்கும் இப்பெண்களின் துன்பங்கள், ஏதேனும் ஒருப் பொறுப்பேற்கும் நடைமுறையின் மூலம் பதில் அளிக்கப்படவேண்டும். பாலின அடிப்படையிலான மீறல்கள் என்பது விசாரணையின் முக்கியக் கூறாக இருக்கவேண்டும் எனச் சிறந்த நடைமுறைகள் கூறுகின்றன. பாதிக்கப்பட்ட பெண்களின் குரல்களும் அவர்களின் அனுபவங்களும் கேட்கப்படவேண்டும். ஆணையத்தின் பணிவரையறையில் பாலினம் குறித்த குறிப்பான குறிப்புகள் இல்லாதபோதும், ஹைதி, சியாரா லியோனே மற்றும் தைமூர் லெஸ்தே ஆகிய இடங்களில் செயல்படுத்தப் பட்டதைப்போல அல்லது குத்தாமாலா, பெரு மற்றும் தென்ஆப்பிரிக்காவில் பாலின நடுநிலை கொண்ட பணி வரையறை அமைக்கப்பட்டு செயல்படுத்தப் பட்டதைப் போல இதுவும் செயல்படுத்தப்படவேண்டும்.

331) பிற சூழல்களில் பாதிக்கப்பட்டவர்களின் முக்கியத்துவத்தை மதிக்கும் வகையில் சிறப்பான செயல்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. நிறைய பாதிக்கப்பட்டவர்கள் தனிமையில் ஒருவருக்கு ஒருவர் என்ற முறையில் வசதியான சூழலில் வாக்குமூலங்களை அளிக்க முடிந்தது. பொதுவாக உண்மை ஆணையங்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு உளவியல் ஆதரவை வழங்குகின்றன. பொதுவாக பொது விசாரணைகள் மிகக் கவனமாகத் திட்டமிடப்பட்டு பல மணி நேரங்கள் எடுத்துக்கொள்ளும். பெரு, சியாரா லியோனே மற்றும் தென் ஆப்பிரிக்காவின் பொதுவிசாரணைகள் பாதிக்கப்பட்டவர்களின் உணர்வுபூர்வத் தேவைகள் உட்பட அனைத்துத் தேவைகளுக்கும் ஈடு கொடுத்ததோடு, சூழல் மதிப்பு மிகுந்ததாகவும் ஆதரவு அளிப்பதாகவும் இருந்தது. சியாரா லியோனேயில் குழந்தைகள் குறிப்பாக பாதிக்கப்பட்டிருந்த நிலையில் அவர்களுக்கென தனியாக ஓர் அறிக்கை உருவாக்கப்பட்டது. இந்த சூழல்களில் உண்மை ஆணையங்களின் நடைமுறைகள், பாதிக்கப்பட்டவர்களின் நிலையையும் அவர்களது அனுபவங் களையும் மதிப்பதாகவும் முக்கியத்துவம் அளிப்பதாகவும் இருந்தன.

332) இறுதியாக பாதிக்கப்பட்டவர்கள் அனுபவித்த துன்பங்கள் மற்றும் காயங்கள் குறித்துப் பேச அனுமதிக்கத் தவறியது என்பது, நிவாரணங்களுக்கு பங்களிக்க க.பா.இ.ஆ. எந்த அளவிற்குத் தயாராக உள்ளது என்பது குறித்து ஆழமான சந்தேகங்களை எழுப்புகிறது. அதன் பணி வரையறை, நட்டஈட்டுக்கு உத்தரவிட அதற்கு அதிகாரம் அளித்திருந்தபோதும், தனது பணி வரையறையில் எவ்வகையான பாதிப்புகளை அது உள்ளடக்குகிறது என்பது குறித்து ஆணையம் தெளிவாகக் குறிப்பிடவில்லை. அத்துடன், நிவாரணம் பெறுவதற்கு எம்மாதிரியான சான்றுகளைப் பாதிக்கப்பட்டவர்கள் அளிக்கவேண்டும் என்பது பற்றியும் தெளிவான வரையறைகள் அளிக்கப்படவில்லை. இதன் விளைவாக இந்தச் சிக்கல்கள் குறித்துக் கவனம் எடுப்பதற்கு க.பா.இ.ஆ. எந்த அளவிற்குத் தயாராக இருக்கிறது என்பது குறித்து ஆழமான சந்தேகம் எழுகிறது.

சாட்சிகளை அச்சுறுத்துவது, நீதி அமைப்பின் மீது பொது மக்களுக்கு நம்பிக்கை இல்லாமல் இருப்பது மற்றும் குற்றச்சாட்டு களில் குறிப்பிடப் பட்டுள்ள அதிகாரிகள் மீதான அச்சம் ஆகிய புறச்சூழல் காரணங்களும் வெற்றிகரமாக இதனை நடத்துவதற்கு எதிராக உள்ளன.

(ஈ) சாட்சிகள் அச்சுறுத்தப்பட்டதும் சாட்சிகளுக்குப் போதுமான பாதுகாப்பு வழங்கப்படாததும்

333) மேலும் குழுவின் முன் அளிக்கப்பட்ட க.பா.இ.ஆ. பொது விசாரணை களின் எழுத்து வடிவம் மற்றும் பிற ஆவணங்களின் அடிப்படையில் நோக்கினால், சாட்சிகளிடம் அவர்களது வாக்குமூலங்கள் எவ்வாறு பயன்படுத்தப்படும் என்பது குறித்து, அவர்கள் வாக்குமூலம் அளிப்பதற்கு முன் எந்தத் தகவலும் அளிக்கப் பட்டதாக தெரியவில்லை. சில நேரங்களில் சாட்சிகளின் பெயர்கள் மறைக்கப் பட்டுள்ளன. ஆனால் பிற அதே மாதிரியான சூழல்களில் பெயர்கள் குறிப்பிடப் பட்டுள்ளன. சில பிற வாக்குமூலங்களில் சாட்சிகளின் பெயர்கள் குறிப்பிடப்படாத போதும், வாக்குமூலத்தின் உள்ளடக்கத்தின் அடிப்படையில், சான்றாக அவர்களது குடும்ப உறுப்பினர்களின் பெயர்கள், சாட்சியை அடையாளம் காண்பதற்கான வாய்ப்புகள் உள்ளன. இது வாக்குமூலம் அளிக்கக்கூடிய பாதிக்கப்பட்டவர்களும்

இறப்புச் சான்றிதழை ஓர் உறவினர் ஏற்றுக் கொள்வது என்பது, அது குறித்த எந்தவொரு சட்டபூர்வ மேல் நடவடிக்கையையும் தடுப்பதாகவோ, அந்தத் தனி நபரை ஓர் இறுக்கமான சட்ட நிலையில் நிறுத்தி வைப்பதாகவோ இருக்கக்கூடாது என்பதை உறுதி செய்வது முக்கியமானது.



பிற சாட்சிகளும் அவர்கள் ஆணையத்திடம் அளிக்கக்கூடிய தகவல்களை வெளியிடுவதற்கு என்ன மாதிரியான விதிகள் பின்பற்றப்படும் என்பது குறித்துத் தெரிவிக்கப்படவேண்டும் என சிறந்த நடைமுறைகளின் அடிப்படைகளுக்கு முரணாக உள்ளன.

334) க.பா.இ.ஆ.வின் இந்தக் குறைபாடு என்பது க.பா.இ.ஆ.விடம் வாக்கு மூலம் கொடுக்க விரும்பும் சாட்சிகளுக்குப் போதுமான பாதுகாப்பு இல்லை என்றக் குழுவின் பெரும் கவனஈர்ப்புகளின் அடிப்படையிலேயே எழுகிறது. சாட்சிகளுக்கு நிலவிய சூழல் என்பது பெரும்பாலும் அச்சுறுத்துவதாகவும் பல நேரங்களில் பிறழச்செய்வதாகவும் இருந்தன என பல அறிக்கைகளின் மூலம் தெரியவருகிறது. குழுவிடம் அளித்த எழுத்துபூர்வ பதில்களில் ஆணையத்தின் நடைமுறைகளில் இராணுவம் எந்தப் பங்கும் வகிக்கவில்லை என அரசு வாதிட்ட போதும், விசாரணை அறைகளில் சீருடை அணிந்த இராணுவ அதிகாரிகள் சாட்சிகளையும் கூடியிருந்த பிறரையும் நிழல்படம் எடுத்தபடி அமர்ந்திருந்தனர் என்பதைக் குழு அறிந்திருந்தது. விசாரணை நடைபெற்ற இடங்களுக்கு உள்ளேயும் வெளியேயும் இராணுவ மற்றும் உளவுத்துறை அதிகாரிகள் இருந்தது என்பது பாதுகாப்புப் படையினரின் சட்டவிரோத நடவடிக்கை குறித்த குற்றச்சாட்டுகளை எழுப்புவதினால் ஏற்படக்கூடிய பின்விளைவுகளை நினைத்து அஞ்சிக்கொண்டிருந்த சாட்சிகளுக்கு மேலும் திகிலூட்டுவதாகவே இருந்தது. அத்துடன், சாட்சிகள் வாக்குமூலங்களை அளிக்கும்போது அரசு அதிகாரிகள் அங்கு அடிக்கடி இருந்தது என்பதும் இதே வித உணர்வையே ஏற்படுத்தியது.

335) அரசு அளித்த எழுத்துபூர்வ பதில்களில் வாக்குமூலங்கள் அளிப்பதற்கு எதிராக எவ்வித அச்சுறுத்தல்கள் மிரட்டல்கள் மற்றும் தொல்லைகள் இருந்தது குறித்து எவ்விதப் புகார்களும் இல்லை எனக் கூறினாலும், சாட்சிகளின் வாக்குமூலங்களை வலுவிழக்கச்செய்ய தெளிவான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்ட சூழல்களைக் குழு அறிந்தே வைத்துள்ளது. அச்சுறுத்தல் நடைபெற்ற ஒரு நிகழ்வில் ஆணையம் காவல்துறையை விசாரணை செய்யுமாறு உத்தரவிட்டதன் மூலம் மோசமான பாதிப்பை ஏற்படுத்தியது. அச்சுறுத்தல்கள் மற்றும் பின்விளைவு களுக்கான சாத்தியங்களை ஆணையத்தின் உறுப்பினர்களும் அங்கீகரித்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. தனிநபர்கள் வாக்குமூலம் அளிக்கக்கூடாது என விடுக்கப்பட்ட எச்சரிக்கைகள், விசாரணை நடைபெறக்கூடிய நேரம் மற்றும் இடங்கள் பற்றிய விவரங்களை அந்த மாகாணங்களில் முன்கூட்டியே வெளியிடக் கூடாது என அதிகாரிகள் மீது கொடுக்கப்பட்ட அழுத்தம் மற்றும் ஆணையத்தைக் கவனிக்கும் நபர்களின் அச்சுறுத்தக்கூடிய நடவடிக்கைகள் உள்ளிட்ட பல அறிக்கைகள் குழுவிடம் வந்துள்ளன.

336) சாட்சிகளை மாற்றுவதன் மூலம் அவர்கள் அளித்த வாக்குமூலங்களுக்கு முரணான வேறொரு வாக்குமூலம் அளிக்கும் சூழலை ஏற்படுத்தியது போன்ற புகார்களும் குழுவிடம் வந்துள்ளன. ஆணையத்தின் முன் அளிக்கப்பட்ட தனது வாக்குமூலத்தைச் சிதைக்க சாட்சிகளின் முன்பு அழுத்தம் கொடுக்கப்பட்டிருப் பதற்கான சாத்தியத்தையே இது காட்டுகிறது. சாட்சியப்பொருட்களைக் குறைந்த கால மற்றும் நீண்ட கால அடிப்படையில் பாதுகாப்பதற்கான உத்தரவாதத்தை அளிப்பதற்குத் தேவையான நடைமுறை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்பது குறித்துக் குழுவால் ஒரு முடிவுக்கு வர இயலவில்லை. ஆனால், ''சாட்சிகள் தனிப்பட்ட முறையில் எங்களிடம் ஏதேனும் சொல்ல விரும்பினால் நீங்கள் என்ன சொன்னீர்கள் என்பது வேறு யாரும் அறியமாட்டார்கள். அத்துடன், உங்களுடைய அடையாளங்களைப் பொருத்தவரையில் முழுமையான இரகசியக்காப்பை நாங்கள் பேணுவோம்'' என்று ஆணையத்தின் தலைவர் வெளிப்படையாக அறிவித்திருந்போதும், இத்தகைய அறிவிப்புகளை தற்போதும், ஆணையத்தின் காலத்திற்கு பின்னும், மதிப்பதற்கான எந்த அமைப்பு ரீதியான அல்லது நடைமுறை ரீதியான அடிப்படைகளும் இருப்பதாகக் குழுவிற்கு தெரியவில்லை.

337) எனவே க.பா.இ.ஆ.வின் முன் சாட்சிகளின் நிலையானது திருப்தியளிப்பதாக இல்லை. ஆயுதப்போரின் இறுதிக் கட்டங்கள் குறித்த உண்மைகளை நிறுவுவதற்கு முற்படும் ஒரு முக்கியமான விசாரணை நடைமுறையில், அடிப்படையாக எதிர்பார்க்கக்கூடிய நிலைக்குக் கீழாகவே இது உள்ளது. சாட்சிகள், குறிப்பாக குற்றம்சாட்டப்பட்ட மீறல்களுக்கு பலியானவர்கள், ஆணையத்தின் முன் எவ்வாறு சாட்சியம் அளிக்கவேண்டும் என்பது குறித்த எதிர்பார்ப்புகளும் முறையான வடிவங்களும் அவர்களுக்கு சொல்லப்படவில்லை. அவர்கள் விசாரணைக்குத் தயாராக இல்லை என்பதோடு, அவர்கள் அளிக்கக்கூடிய வாக்குமூலங்களின் அடிப்படையில் ஏற்படக்கூடிய தொல்லைகளிலிருந்து போதுமான அளவு பாதுகாக்கப்படவும் இல்லை.

(உ) ஊடகங்கள், குடிமைச் சமூகம்: அணுகக்கூடிய நிலை மற்றும் தொல்லைகள்

338) க.பா.இ.ஆ.வின் பணிகளை வெளியிடுவதன் மூலம் வெளிப்படையான ஒரு தன்மையை உறுதிசெய்வதில் ஊடகங்கள் முக்கியப்பங்கை ஆற்றுகின்றன. பிறநாடுகளில் குறிப்பாக மொராக்கோ, பெரு, மற்றும் தென்ஆப்பிரிக்கா உள்ளிட்ட இடங்களில் இதை ஒத்த ஆணையங்களின் பணிகள் தொலைக்காட்சி மூலம் பரவலாக ஒளிபரப்பப்பட்டு, விவாதிக்கப்படும் சிக்கல்கள் குறித்து ஒரு பொது விவாதத்திற்கு வழிவகுத்தன. சில விதிவிலக்கான சூழல்களில் ஊடகங்களை விலக்கி வைக்கவேண்டி நேர்ந்தாலும் க.பா.இ.ஆ. போன்ற அரசு அமைப்புகள் தனிநபர்களின் கருத்துக்களையும் செய்திகளையும் பெறுவது அல்லது அளிப்பதற்கான சுதந்திரத்தை கட்டுப்படுத்துதற்கான அதிகாரத்தை உலகளாவிய மனித உரிமைச் சட்டம் சுருக்கியுள்ளது. அவ்வாறு விதிக்கப்படும் எந்தக் கட்டுப்பாடும் உலகளாவியச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகள் மற்றும் பொருத்தப்பாடுகளின் எல்லைக்குள் அனுமதிக்கத் தகுந்ததாகவே உள்ளன என்பதை அரசு நியாயப்படுத்தவேண்டும். ஆணையத்தின் முன் அளிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் சில குறிப்பிட்ட ஊடக அமைப்புகள் விசாரணைகளைக் கவனிப்பதில் இருந்து பாதுகாப்பு அமைச்சகம் விலக்கிவைத்துள்ளது எனத் தெரியவருகிறது. இது மிகத் தெளிவாகவே ஊடகச் சுதந்திரத்தில் தலையிடுவதாக உள்ளது. விசாரணைகளைக் கவனித்து எழுதக்கூடிய உள்ளூர் ஊடகவியலாளர்கள் மிரட்டப்பட்டது குறித்த புகார்களும் எழுந்துள்ளன.

(ஊ) அணுகக்கூடிய தன்மை மற்றும் பணியின் வெளிப்படைத் தன்மை

339) தனது அனைத்து நடவடிக்கைகளையும் வெளிப்படையான முறையில் நடத்துவதற்கு க.பா.இ.ஆ. தவறிவிட்டது என நம்பத்தகுந்த அறிக்கைகளைக் குழு பெற்றுள்ளது. இந்தக் குறைபாடு உயர்மட்ட அளவிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. உண்மை ஆணையங்கள், தவல்களை சேகரிப்பதற்குப் பெருமளவில் பொதுமக்களின் ஆதரவைச் சார்ந்தே உள்ளன. எனவே, பொதுவிலும் வெளிப்படையான முறையிலும் பணியாற்றுவது என்பது உண்மை ஆணையத்தின் பணிகளின் மிகமுக்கியமான கூறாகும். தென்ஆப்பிரிக்கா தொடங்கி ஏறத்தாழ அனைத்து உண்மை ஆணையங்களுமே பொது விசாரணைகளை நடத்தியுள்ளன. பெரும்பான்மையானவை பொது விழிப்புணர்வையும் ஆதரவையும் பெறுவதற்குத் தங்களது நடவடிக்கைகளை வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாள்கள் மற்றும் இணையம் வழியாகப் பெரும் பரப்புரைகளை மேற்கொண்டுள்ளன.

340) க.பா.இ.ஆ.வை பொருத்தவரையில் இது ஒரு பகுதியளவில் மட்டுமே நடந்துள்ளது. ஜூன் 18, 2010ல் ஆணையம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்ட அடிப்படைச் செயல்திட்டங்களுக்கு அப்பால் அதன் முக்கிய நடவடிக்கைகள் குறித்துப் போதுமான அளவிற்குப் பொதுமக்கள் இடையே செய்திகள் வெளிவராத நிலையிலேயே அதன் நடவடிக்கைகள் இருந்துள்ளன. விசாரணைகள் தொடங்கி 6 மாதங்களுக்குப் பிறகே பொது விசாரணைகளின் எழுத்து வடிவங்களை வெளியிடும் பணி தொடங்கியது. பொது விசாரணைகளில் பங்கேற்பதற்கான



பொறுப்பேற்பதை அடைவதற்கான ஒரு நடைமுறையானது, சுதந்திரமான நிறுவனங்கள் மற்றும் ஆயுதப் போருக்குத் தூண்டிய மற்றும் அதற்கு தீனி போட்ட துயரங்கள் மற்றும் என்ன நடந்தது என்பவை குறித்து ஒரு வெளிப்படையான விவாதத்தை அனுமதிக்கக் கூடிய சூழல் ஆகியவை அவசியமாகும். மிக ஆழமான வேறுபட்ட கருத்துகளை உடைய பொதுமக்களிடையே வெளிப்படையாக நிலவக்கூடிய வெறுப்பு மற்றும் இறுக்கத்திலிருந்து ஒரு வெளிப்படையான விவாதத்திற்கு முன்னேறுவது என்பது எங்குமே எளிதானதாக இருந்ததில்லை.

தனது இராணுவ வெற்றியை ஒரு வெற்றி மனப்பான்மையை உருவாக்கிப் பரப்பு வதற்கும், 'பயங்கர வாதத்தை' தோற்கடிக்க, தான் எடுத்த நடவடிக்கை கள் மற்றும் தனக்குள்ள உறுதி என, தான் கோருபவற்றை கொண்டாடவும் அது பயன்படுத்தியுள்ளது. இந்த நடவடிக்கையானது சிங்களப் பெரும்பான்மை மனப்பான்மையைச் சார்ந்ததாகவும், விடுதலைப்புலிகளின் இந்தத் தோல்வி, தமிழர்களின் அனைத்து நியாயமான அரசியல் விருப்பங்களின் தோல்வி யாகவும் முன்னிறுத்தப்ப டுகிறது.



சாட்சிகளைத் தேர்ந்து எடுக்கும் நடைமுறையிலும் ஒரு நிச்சயமற்ற தன்மையும் சமமற்ற போக்கும் நிலவியது. குழுவிற்கு அரசு அளித்த எழுத்துபூர்வ பதில்களில் மட்டுமே விசாரணைகளில் பங்கேற்பவர்களைத் தேர்ந்தெடுக்கும் அதன் வழிமுறைகள் குறித்து விரிவாக விளக்கியுள்ளது. அதன்படி ஆணையத்தின் முன் வாக்குமூலம் அளிக்க விரும்பும் அனைவரும் முதலில் ஒரு எழுத்துபூர்வ அறிக்கையை அளிக்கவேண்டும். அந்த அறிக்கை சான்றாக இருப்பதற்கான அடிப்படைத் தேவைகளை ஈடுசெய்கிறதா என்பதை உறுதிபடுத்தும் வகையில் ஆணையம் அதனை ஆராயும்; அதன் பின்னரே விசாரணைத் தேதி முடிவு செய்யப்படும் என கூறப்பட்டுள்ளது. எந்த நிலையிலும் வடக்கிலும் கிழக்கிலும் நடந்த விசாரணைகளில் இந்த அணுகுமுறை நடைமுறைப்படுத்தப்படவில்லை. வெவ்வேறு விதமான சாட்சிக்குழுக்களுக்கு வெவ்வேறுவிதமான அணுமுறை களும் நடத்தைகளும் பின்பற்றப்பட்டதையே இவை காட்டுகின்றன.

341) பாதிக்கப்பட்டவர்களை விசாரிப்பதற்குப் பொருத்தமற்ற முறையில் மிகக்குறைவான எண்ணிக்கையிலான விசாரணைகளே ஒதுக்கப்பட்ட போது அந்த விசாரணைகள் நடக்கும் இடங்கள், நேரம் மற்றும் அதன் நடைமுறை ஆகியவை குறித்த தகவல்கள் நிச்சயமற்ற முறையிலும், சாட்சியம் அளிக்கக்கூடியவர்களும் பொதுமக்களும் அதை அறிந்துகொள்வதற்குக் கடினமான நிலையிலும் இருந்தன. உள்ளூரில் வாழ்பவர்களுக்குத் தகவல்களை அளிக்கத் தவறியது குறிப்பாக அந்த மாகாண விசாரணைகள் குறித்துத் தகவல் அளிக்கத் தவறியது என்பது அந்த விசாரணைகள் நடைபெறுவது குறித்துப் பெரும்பாலான மக்கள் அறியவில்லை என்பதையே காட்டுகிறது. க.பா.இ.ஆ.வின் சார்பாக புது தகவல்களை அளிக்க மாவட்ட மற்றும் மண்டல அதிகாரிகள் பயன்படுத்தப்பட்டது என்பது க.பா.இ.ஆ.வின் தோற்றம் மற்றும் சுதந்திரம் குறித்து ஒரு முன்தீர்மானத்தை ஏற்படுத்தின.

(எ) இடைக்காலப் பரிந்துரைகள்

342) க.பா.இ.ஆ. அளித்த இடைக்காலப் பரிந்துரைகளில் பெரும்பான்மை யானவை ஏற்கனவே பல அமைப்புகளால் கடந்தக் காலத்தில் பரிந்துரைக்கப் பட்டவையே ஆகும். அரசு விரும்பினால் முழுமையாக உடனடியாக நடைமுறைப் படுத்த முடியும். ஆனால் ஒரு விதிவிலக்காக இந்தப் பரிந்துரைகள் பொறுப் பேற்பது குறித்த அவசரமான சிக்கல்களை நேரடியாக குறிக்கவில்லை. ஒரு பரிந்துரை, தடுப்புக்காவலில் உள்ளவர்களின் பெயர் பட்டியலை வெளியிடக் கோருகிறது. இதன் மூலம் அவர்களின் இருப்பிடங்களை அறிவதற்கு முடியும். ஆனால் இன்றுவரை இந்த முக்கியப் பரிந்துரை நடைமுறைப்படுத்தப்பட வில்லை. பொறுப்பேற்பது குறித்த சிக்கல்களைக் கவனத்தில் எடுத்துக்கொண்ட பரிந்துரைகள் இல்லாததும், தடுப்புக்காவலில் உள்ளவர்களின் பெயர்ப் பட்டியலை வெளியிடுவது குறித்து நடவடிக்கை எடுக்காமல் இருப்பதும், இந்த இடைக்காலத்தில், குற்றம் சாட்டப்பட்ட மீறல்கள் குறித்து விசாரிப்பதற்கு க.பா.இ.ஆ. முக்கியத்துவம் அளிக்கவில்லை என்பதையே காட்டுகிறது. குழுவிற்கு அரசு அளித்த பதில்களுக்கு மாறாக போரின் இறுதிக் கட்டங்களிலும் அதற்கு பின்னும் அரசின் நடத்தைகள் குறித்த முக்கியக் கூறுகளை வெளிச்சத்திற்கு கொண்டுவரக்கூடிய நடவடிக்கைகளை எடுப்பதில் அரசுக்கு விருப்பம் இல்லை என்ற முடிவை இது ஆதரிக்கிறது.

5) கற்ற பாடங்கள் மற்றும் இணக்கத்திற்கான ஆணையம் மீதான முடிவுகள்

343) போரின் இறுதிக் கட்டங்கள் குறித்தும் போர்க் குறித்த பிற சிக்கல்கள் குறித்தும் ஒரு தேசிய விவாதத்தை தொடங்குவதற்கான பயனுள்ள வாய்ப்பை க.பா.இ.ஆ. வழங்குகிறது. க.பா.இ.ஆ. வழங்கிய இடத்தை பல செல்வாக்குள்ள அரசு சாரா நிறுவனங்களும், சில மதத்தலைவர்களும் இலங்கையில் பொறுப்பேற்பது குறித்து என்ன நடைபெறவேண்டும் என்பது குறித்த தங்களது

பார்வையையும், வருங்காலத்தில் நடக்கவேண்டிய மாற்றங்கள் குறித்த தங்களது கருத்துக்களையும் பொதுவெளியில் பதிவு செய்யப் பயன்படுத்தியுள்ளனர். பெரும் எண்ணிக்கையிலான மக்கள் குறிப்பாகப் பாதிக்கப்பட்டவர்கள் ஆணையத்தின் முன் வந்திருப்பது என்பது, போரின் இறுதிக் கட்டங்கள் குறித்தும் அந்தச் சூழலில் தங்களது தனிப்பட்ட நிலை குறித்தும் தெரிவிக்க ஓர் அதிகாரபூர்வ வெளி தேவை என்பதைக் காட்டுகிறது. சில அரசு மற்றும் இராணுவ மூத்த அதிகாரிகளும் இலங்கையின் உயர்மட்டத்தினரும் தங்களது சொந்த அணுகுமுறையைப் பிரச்சாரம் செய்வதற்கும், போர் நிறுத்தம் குறித்து முந்தைய அரசுகளின் அணுகுமுறையை விமர்சிப்பதற்கும் க.பா.இ.ஆ.வை பயன்படுத்தியுள்ளனர்.

344) க.பா.இ.ஆ. இன்னமும் தனது பணியை நிறைவு செய்யவில்லை என்பதாலும், தனது இறுதி அறிக்கையை அது அளிக்கவில்லை என்பதாலும் அதன் மீது ஒரு முழுமையான, இறுதியான கணிப்பிற்கு வர இயலவில்லை. ஆனால் இந்த நிலையில் சில முக்கிய முடிவுகளைக் குழுவால் எடுக்க முடிகிறது.

(அ) உலகளாவிய மனித நேய மற்றும் மனித உரிமைச் சட்டங்கள் மிக மோசமாக மீறப்பட்டது குறித்த குற்றச்சாட்டுகளை விசாரிக்கவோ அல்லது அந்த மீறல்களின் தன்மை மற்றும் அதற்குப் பொறுப்பானவர்களைக் கண்டறியவோ க.பா.இ.ஆ. வின் பணி வரையறை வடிவமைக்கப்படவில்லை. மாறாகத் தனது குடிமக்களைப் பாதுகாப்பதற்கு முந்தைய அரசுகள் தவறியது குறித்த அரசியல் பொறுப்பை விசாரிப்பதிலேயே கவனம் செலுத்துகிறது. இது சில்காட் விசாரணை போன்ற அமைப்பையே பெரிதும் ஒத்திருக்கிறது. உண்மை ஆணையத்தை அல்ல.

(ஆ) சுதந்திரம் மற்றும் சார்பற்ற தன்மை குறித்து முக்கிய உலகளாவிய வரையறைகளைப் பூர்த்திசெய்ய க.பா.இ.ஆ. தவறிவிட்டது. ஆணையம் உருவாக்கப்பட்ட விதமும் அதன் உறுப்பினர்களிடம் மிக ஆழமாக வேரூன்றியுள்ள முரணான நலன்களும் இதனையே காட்டுகின்றன.

(இ) இன்றுவரை க.பா.இ.ஆ.வின் பணிகள் மற்றும் நடைமுறைகள் அது போரின் இறுதிக் கட்டத்தில் என்ன நடந்தது என்பது குறித்து ஒரு நேர்மையான உண்மையறியும் நடவடிக்கையை மேற்கொள்ளவில்லை என்பதையும் போரின் இரு தரப்பினர் மீதும் வைக்கப்பட்ட மோசமான மீறல் குற்றச்சாட்டுகளைத் திட்டமிட்ட முறையில் நடுநிலையோடு சார்பற்று விசாரிக்க முற்படவில்லை என்பதையும் காட்டுகின்றன. வடக்கிலும் கிழக்கிலும் பெரும் எண்ணிக்கை யிலான மக்கள் பேச முன்வந்தனர். ஆனால் அவர்கள் தங்களது சொந்த முன்னேடுப்பினாலோ அல்லது தேவையின் காரணமாகவோ தான் வந்தனர். அவர்கள் மீறல்கள் மற்றும் அவர்கள் அனுபவித்த பிற துன்பங்கள் குறித்து முழுமையான வாக்குமூலங்களை அளிக்க ஊக்குவிக்கப்படவில்லை. அத்துடன், பெண்கள் மற்றும் குழந்தைகள் போன்று தனித்துவமான துன்பங்களை அனுபவித்த குறிப்பிட்டக் குழுக்களுக்குப் போதுமான கவனம் செலுத்தப்படவில்லை.

(ஈ) பாதிக்கப்பட்டவர்கள் அவர்களது மதிப்பு மற்றும் அவர்கள் அனுபவித்த துன்பங்கள் ஆகியவற்றுக்கான முழுமையான மரியாதையோடு நடத்தப் படுவதற்கான அணுகுமுறையை க.பா.இ.ஆ. கடைப்பிடிக்கவில்லை. அத்துடன், பாதிக்கப்பட்டவர்களைச் சரியான முறையிலும் பாலின ஓர்மையோடும் விசாரிக்கவில்லை. இது குறிப்பாக வடக்கிலும் கிழக்கிலும் நடத்தப்பட்ட விசாரணைகளில் மிக வெளிப்படையாகத் தெரிந்தது. நிவாரணம் என்ற முக்கியச் சிக்கல் குறித்து அது எவ்வாறு கையாளப்போகிறது என்பதை அது தெரிவிக்கவில்லை.

(உ) உண்மையிலேயே தனிப்பட்ட முறையில் ஆபத்து இருக்கக்கூடிய சூழல்களிலும் கூட, சாட்சிகளுக்குத் தேவையான பாதுகாப்பை க.பா.இ.ஆ. உறுதிப்படுத்தவில்லை. சிலகுறிப்பிட்ட சாட்சிகள் அச்சுறுத்தப்பட்டதற்கு சான்றுகள் உள்ளன.

அனைவரையும் இணைத்துக் கொள்வதற்கான கொள்கைகள் குறித்த பிற தேவையான நடவடிக்கைகள் என்பவை உயர் பாதுகாப்பு வலயங்களைக் கலைப்பது, நிலம் மற்றும் வீடுகளை விகிதாச்சார அடிப்படையில் ஒதுக்குவது ஆகியவற்றை உள்ளடக்கியது. பாதுகாப்புத்துறை உட்பட அனைத்துத் துறைகளிலும் அரசுப்பணிகளில் தமிழ் பேசுபவர்கள் எளிதாக நுழைவதற்குரிய வழி முறைகள் வளர்க்கப்பட வேண்டும்.

(ஊ) க.பா.இ.ஆ.வின் நடவடிக்கைகள் போதுமான வெளிப்படைத் தன்மையோடு இருக்கவில்லை.

இனப் போராக காணப்படும் ஒன்றில் வெற்றிபெற்றவர்கள் பக்கத்தை பிரதிநிதித்துவப் படுத்துவதாக, ஒற்றை இனத்தை சேர்ந்த இராணுவம் இருப்பது என்பது, நாட்டின் நிர்வாகத்தில் பெரிதும் வெளிப்படையான மற்றும் முக்கியப் பங்கை போர் முடிந்து இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகும் தொடர்வது என்பதும், வருங்காலத்தில் மீண்டும் இணக்கமற்ற ஒரு சூழல் எழுவதற்கே வழிவகுக்கும்.

345) மொத்தத்தில் க.பா.இ.ஆ. ஆழமான தவறுகளைக் கொண்டதாகவும் பொறுப்பேற்கும் நடைமுறைகளைச் சிறப்பாக செயல்படுத்துவதற்கான உலகளாவிய வரையறைகளைப் பூர்த்தி செய்யதாததாகவும், அதனால் இலங்கை அதிபரும் செயலாளர் நாயகமும் பொறுப்பேற்கும் நடைமுறைகள் குறித்து அளித்த கூட்டுக் கடப்பாடுகளை நிறைவேற்ற முடியாததாகவும் உள்ளது.

ஈ) இலங்கையில் நீதி அமைப்பு

346) உலகளாவிய மனித நேய மற்றும் மனித உரிமைச் சட்டமீறல்களுக்கு தனிப்படப் பொறுப்பேற்க வைப்பதிலும், பாதிக்கப்பட்டவர்களுக்கு சிறப்பான ஒரு நிவாரணத்தை அளிப்பதிலும், நீதி அமைப்புதான் முக்கியத் தளமாக இருக்கவேண்டும். க.பா.இ.ஆ.வின் விளைவுகளுக்கப்பால் இலங்கையின் சட்ட அமைப்பு, தனிநபர்களின் பொறுப்பேற்கும் தன்மையை உறுதிசெய்வதில் முக்கியப் பங்கை ஆற்றவேண்டும். க.பா.இ.ஆ. தனது பணியை முடிக்கும் வரையில் தனதுப் பொறுப்புகளைத் தள்ளிப்போடுவது என்பது இலங்கையின் குற்றவியல் நீதி அமைப்பிற்கு முறையானது அல்ல. கடந்த காலத்தில் விசாரணை ஆணையங்கள் அமைக்கப்பட்டபோது இதுவே தொடர்ந்த நடைமுறையாக இருந்து வந்திருக்கிறது. போரின் இறுதிக் கட்டங்கள் குறித்தப் பொறுப்பேற்கும் செயல்பாடுகளில் இலங்கையின் நீதி மற்றும் இராணுவ நீதிமன்ற அமைப்புகள் எந்த அளவிற்குச் செயல்படுகின்றன என்பதைக் கீழ்க்காணும் பகுதிகள் ஆய்வுசெய்கின்றன.

1) அவசரகால நிலையும், நீதி மறுஆய்வுக்கு அளிக்கப்பட்ட விதிவிலக்குகளும்

347) நீதி மறுஆய்விலிருந்து சில முக்கியக் கட்டமைப்புகளுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டது என்பதே இலங்கையின் சட்ட அமைப்பை விளக்கும் முக்கியக் கூறாகும். முதலாவதாக தனிப்பட்ட முறையிலோ அல்லது அதிகாரபூர்வமாகவே அதிபரின் எந்தச் செயலும் அல்லது செயல்படாத தன்மையும் சட்ட ஆய்விலிருந்து முற்றிலும் விலக்கி வைக்கப்படுவதாக அரசமைப்புச் சட்டம் அறிவிக்கிறது. இரண்டாவதாக அவசரகாலச் சட்டத்தின் பிரிவுகள் இலங்கையின் பொதுச் சட்டத்திற்கு மேலானதாகவும், அதன் மூலம் பொதுச்சட்டத்தின் பொருந்தக்கூடிய பல பிரிவுகளைத் தனது பிரிவுகள் மூலம் மாற்றியமைப்பதாகவும், அரசின் பரவலான பல செயல்களை நீதி ஆய்விலிருந்து விலக்கி வைப்பதாகவும் இருக்கிறது.

348) இலங்கையின் அவசரகால நிலை என்பது காலனிய ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்த காலத்திய சட்டமான பொதுப்பாதுகாப்பு அவசரச் சட்டம் எண் 25 1947 என்பதை அடிப்படையாக கொண்டிருந்தது. அரசமைப்புச் சட்டம் இதற்கு முழுமையான சட்ட அந்தஸ்தை அளித்துள்ளது. தற்போது உள்ள அவசரகால நிலை முதன்முதலாக ஆகஸ்ட் 2005இல் அறிவிக்கப்பட்டது. இன்றுவரையில் நாடாளுமன்றத்தில் மாதந்தோறும் நீட்டிக்கப்பட்டு தொடர்ந்து நடைமுறையில் இருந்து வருகிறது.

349) அவசரகால நிலை அறிவிக்கப்பட்ட ஓரிடத்தில், பொதுப்பாதுகாப்பு அவசரச் சட்டம் சில அவசர கால விதிகளை நடைமுறைப்படுத்த அனுமதிக்கிறது. இதன் மூலம் 'பொதுப்பாதுகாப்பு நலன் கருதியும் பொது ஒழுங்கை நிலை நாட்டவும் அல்லது சமூகத்தின் வாழ்வியலுக்கு அடிப்படைத் தேவையாக இருக்கக்கூடிய பொருட்களையும் சேவைகளையும் தொடர்ந்து வழங்குவதற்கு இது அவசியமாக இருக்கிறது.' 2005 மற்றும் 2006இல் விரிவான மற்றும் பரவலான அவசரகால விதிகள் நடைமுறைபடுத்தப்பட்டன. காலந்தோறும் மாற்றப்பட்ட

அவை இன்றுவரையில் நடைமுறையில் உள்ளன. கைது மற்றும் தடுப்புக்காவல், தனிநபர்களைக் கண்காணிப்பது மற்றும் தேடுவது, அவர்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவது, உடைமைகளைக் கையகப்படுத்துவது மற்றும் கூட்டங்கள் ஊர்வலங்கள் வெளியீடுகள் ஆயுதங்கள் மற்றும் நுழைவதற்கான உரிமைகளைக் கட்டுப்படுத்துவது ஆகியவை குறித்து இந்த விதிகள் விரிவான அதிகாரத்தை வழங்குகின்றன. இவை போரின் இறுதிக் கட்டங்களின் போதும் அதற்கு பின்னரும் பரவலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக 2005 விதிகளின் பகுதிகள் மே 2010 வரையே நடைமுறையில் இருந்தன என்றபோதும், அன்றுவரையில் தடுத்து வைக்கப்பட்ட அல்லது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட நபர்கள் மீது இன்றுவரை நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இந்த விதிகளின் மூலம் எவரையும், தேசியப் பாதுகாப்பின் அடிப்படையில், பாதுகாப்புச் செயலாளரின் உத்தரவின் கீழ், முன்னெச்சரிக்கை தடுப்புக் காவலில் ஓராண்டு வரையிலும் பின்னர் 6 மாதங்கள் நீட்டித்தும் வைக்கலாம்.

350) அவசரகால விதிகளோடு கூடுதலாக 1979இன் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் எண்: 48இல் மிகப் பெரும் அளவிலான அதிகாரங்கள் அளிக்கப்பட்டுள்ளன. இந்தச் சட்டம் 1982இல் மாற்றப்பட்டு நிரந்தரச்சட்டமாக ஆகியது. அதன் பகுதி ஒன்று மிகக் கடுமையான தண்டனைகளை அளிக்கத்தகுந்த பல குற்றச்சாட்டுகளை அது பட்டியலிடுகிறது. பகுதி 7இல் சில குறிப்பிட்ட வகையிலான வெளியீடு களைதத் தடைசெய்யும் அதிகாரத்தை அளிக்கிறது. அதன் பகுதி 2இல் கைது தேடல், நுழைவு, மற்றும் கைப்பற்றுதல் ஆகியவை குறித்து மிக விரிவான அதிகாரத்தை அது அளிக்கிறது. அத்துடன், நிர்வாக ரீதியாக உத்தரவிடப்பட்ட தடுப்புக்காவலை அது அனுமதிக்கிறது. இந்தத் தடுப்புக்காவல் மூன்று மாத இடைவெளியில் 18 மாதங்கள் வரை நீட்டிக்கக்கூடியது. ஒருவர் ஏதேனும் சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாகவோ அல்லது தொடர் புடையவர் என்றோ அமைச்சருக்கு நம்புவதற்கோ அல்லது சந்தேகிப்பதற்கோ ஏதேனும் காரணம் இருப்பின் அவரது நடமாட்டங்களையும் செயல்களையும் கட்டுப்படுத்தும் உத்தரவினை வழங்குவதற்கான அதிகாரத்தை அது அளிக்கிறது. போரின் இறுதிக் கட்டங்களின் போதும், அதற்கு முன்னரும், அதற்கு பின்பும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் இந்தப் பரவலான சட்டப்பிரிவுகள் பெருமளவில் பயன்படுத்தப்பட்டன.

351) அரசின் செயல்கள் அல்லது செயலற்ற தன்மை ஆகியவற்றுக்குச் சட்டபூர்வ நடவடிக்கைகள் எடுப்பதில் இருந்து விலக்கு அளித்தது என்பது அவசரகால நிலையை விளக்கக்கூடிய முக்கியக் கூறாக உள்ளது. அவசரகால நிலை அறிவிப்பைப் பொருத்தவரையில் நீதி ஆய்வினை மூடி மறைக்கக்கூடிய ஓர் ஒட்டுமொத்தத் தடையை அரசமைப்புச் சட்டமே வழங்கியது. நீதி விசாரணையை விலக்கி வைக்கக்கூடிய மூன்று முக்கிய தனித்துவமான மிக விரிவான சட்டப் பிரிவுகளைப் பொதுப்பாதுகாப்பு அவசரச்சட்டம் வழங்குகிறது. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் 'நல்லெண்ணத்தோடு' மேற்கொள்ளப்பட்ட செயல்களுக்கு அதே போன்ற ஒரு விலக்கினை நீதி ஆய்விலிருந்து அளிக்கிறது. கூடுதலாக இந்தச் சட்டத்தின் கீழ் பாதுகாப்புச் செயலாளர் வழங்கக்கூடிய தடுப்புக்காவல் மற்றும் கட்டுப்பாட்டுக்கான உத்தரவுகள் சட்டபூர்வமாக இறுதியான ஒன்றாகவும், எத்தகைய நீதி மறுஆய்விற்கும் உட்படுத்த இயலாத ஒன்றாகவும் இருக்கிறது. பொதுப் பாதுகாப்பு அவசரசட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட இத்தகைய விலக்கி வைக்கும் சட்டப்பிரிவுகள் அதன் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட அவசரகால விதிகளுக்கு வெளிப்படையாகப் பொருந்தும் என்றபோதும் இதே அணுகுமுறை அவசரகால விதிகளிலும் மீண்டும் விவரிக்கப்பட்டுள்ளது.

352) விதிவிலக்கை அளிக்கக்கூடிய இந்தச் சட்டப்பிரிவுகள் எதையும் மே 2010இல் அவசரகால விதிகளின் மீது கொண்டுவரப்பட்ட மாற்றங்களில் திருத்தப்படவில்லை. மாறாக அவற்றின் பெரும்பாதிப்புகளுக்கு அப்பாலும்



குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கில் பெரும் அளவில் இராணுவம் இருப்பது என்பது நீண்டகாலத் தன்மையை எடுத்திருப் பதாகத் தெரிகிறது. இராணுவத் தளங்கள் கட்டப்படுவதும் இராணுவக் கட்டுப் பாட்டின் கீழ் தனியார் தொழில் நிறுவனங்கள் அமைக்கப்படுவதும் இதனை உறுதி செய் கின்றன. எழுச்சிக்கு எதிரான திட்டங்கள் தொடர்வதின் பகுதி யாகவே இந்த நட வடிக்கைகள் இருப்பதாகப் பொதுமக்கள் புரிந்து கொண்டுள்ளனர்.

அவை தொடர்ந்து முழுமையாக நடைமுறையில் உள்ளன. இந்தச் சட்டப்பிரிவுகளின் ஒட்டுமொத்த பாதிப்பின் விளைவு என்பது, அவசரகால நிலையின் போது மேற்கொள்ளப்பட்ட செயல்கள் அல்லது தவிர்க்கப்பட்ட செயல்கள் ஆகியவற்றினால் பாதிக்கப்பட்டவர்கள், குறிப்பாகப் பயங்கரவாதிகள் என்ற சந்தேகத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டவர்கள், நீதிமன்றங்களில் தங்களது உரிமைகளைக் கோருவதற்கான வாய்ப்பினைப் பெரிதும் கட்டுப்படுத்துவதாகவே அமைந்தது.

போர் நடந்த பகுதிகளில் இராணுவத்தை விலக்குவது ஏன்பது, அச்சமின்றி சமூக கட்டமைப்புகள் உருவாவதற்கு அவசிய மானது. உள்ளூர் மக்களால் நேர்மையானது எனப் பார்க்கப்படக்கூடிய ஒரு சமூக நிர்வாகத்தின் கைகளில் உள்ளூர் அரசானது சட்டப்படி எவ்வாறாயினும் நடப்பின் படி உண்மையானதாக இருக்கவேண்டும்.

2) பொது நீதிமன்றங்களில் குற்றவியல் சட்ட எல்லைகள்

(அ) அட்டர்னிஜெனரல் குற்றங்களை விசாரிப்பதும், தண்டனைக்குள்ளாக்குவதும்

353) இலங்கையின் குற்றவியல் குற்றங்களை விசாரிப்பதிலும் தண்டனை வழங்குவதிலும் அட்டர்னிஜெனரலுக்கு மிக விரிவான அதிகாரம் உள்ளது. காவல் துறை மற்றும் மாவட்ட நீதிபதிகளால் மேற்கொள்ளப்படும் விசாரணைகள் அட்டர்னிஜெனரலின் கட்டுப்பாடு மற்றும் வழிநடத்தலின் கீழ் இருக்கின்றன. அதேபோன்று மிகமோசமான குற்றங்கள் குறித்து விசாரணை மேற்கொள்வதா வேண்டாமா என்ற முடிவுகளும் குற்றச்சாட்டுகளை வரையறுப்பதிலும் அதனைத் தொடர்ந்து தண்டனை வழங்குவதிலும் எடுக்கக்கூடிய அனைத்து முடிவுகளும் முழுமையாக அட்டர்னிஜெனரலின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன. எனவே குற்றவியல் நீதிக் கட்டமைப்பில் அட்டர்னிஜெனரல் ஒரு மய்ய நிலையில் முக்கிய பங்கை ஆற்றக்கூடியவராகவும் இருக்கிறார். குற்றவியல் நீதிக் கட்டமைப்பின் கீழ் பொறுப்பேற்கும் நடைமுறைகளைத் திறம்படச் செயல்படுத்த அட்டர்னிஜெனரல் திறமையாகவும் சுதந்திரமாகவும் செயல்படவேண்டும். அத்துடன், அட்டர்னி ஜெனரல் இதனைத் தொடர்வதற்கு அனுமதி வழங்கங்கூடிய ஒரு சட்டக் கட்டமைப்பு வேண்டும். இது போரின் இறுதிக் கட்டங்களில் நடந்த மீறல்கள் குறித்த எந்த வழக்கிற்கும் பொருந்தும்.

354) நாட்டின் வரலாற்றில் அட்டர்னிஜெனரலின் துறையில் சுதந்திரம் கேள்விக்குள்ளாக்கப்பட்டதைக் காணலாம். அண்மைக்காலத்தில் இது மேலும் வலுவிழக்கப்பட்டுள்ளது. குறிப்பாகப் போரின் இறுதிக் கட்டங்களில் நடந்தவை குறித்து அரசு மற்றும் இராணுவத்தின் மூத்த உறுப்பினர்கள் மீது விசாரணைகளை அந்த அலுவலகம் மேற்கொள்வதன் மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. 2010 தேர்தலுக்குப் பிறகு ஒவ்வொரு அமைச்சகத்தின் செயல்பாடுகள் மற்றும் பொறுப்புகளை அறிவிக்கக்கூடிய அரசின் அறிவிக்கையில், நீதித்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்பட்டு வந்த அட்டர்னிஜெனரலின் துறையும், புதிய சட்டங்களை வரைவதைத் தனது முக்கிய பணியாக கொண்ட சட்ட வரைவு துறையும், நீதித்துறையின் கீழ் இருந்து நீக்கப்பட்டுள்ளன. தற்போது பட்டியல் இடப்படாத துறைகளாக இருக்கும் அவை, அரசமைப்புச் சட்டத்தில் பிரிவு 44 (2)இன் கீழ் நேரடியாக அதிபரின் கட்டுப்பாட்டிற்குள் வந்துள்ளன. தற்போது அவை அதிபரின் செயலகத்தில் செயல்படுவதாக தெரிகிறது.

355) கடந்த காலத்தில் இலங்கையில் நடைபெற்ற விசாரணைகளும் தண்டனைகளும் மிகவும் தேர்ந்தெடுக்கப்பட்டவையாகவும், சட்ட நடைமுறைப்படுத்துதலைப் பொருத்தவரையில் பெரும்பாலும் அதிகாரம் தவறாக பயன்படுத்தப்பட்டதாகவும், நேர்மையான மற்றும் பாகுபாடற்ற நீதிச் செயல்பாடுகள் இல்லாததாகவும் இருந்து வந்துள்ளன. காவலில் இருந்த போது ஏற்பட்ட சாவிற்குப் பொறுப்பான காவல்துறை அதிகாரிகள் மீது சட்டபூர்வ நடைமுறைகளை முன்னெடுக்கத் தேவையில்லை என்ற அட்டர்னிஜெனரலின் முடிவானது, மிகவும் தன்னிச்சையானதாகவும் நீதியை மறுப்பதாகவும் உள்ளது என அய். நா. வின் மனித உரிமைக்குழு தெரிவித்துள்ளது. அரசு அதிகாரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகளின் மீதான விசாரணைகள் ஒருவேளை முடிக்கப்பட்டாலும் கூட, பெரும்பாலும் அவை மிக நீண்ட காலத்தையே எடுத்து

வந்துள்ளன. இந்தக் குற்றச்சாட்டுகளைக் கூறிய பாதிக்கப்பட்டவர்கள், அவர்கள் அரசு அதிகாரிகளுக்கு எதிராக புகார் அளித்ததில் இருந்து சட்டத்தை நடைமுறைப் படுத்தும் அதிகாரிகளினால் பெரும் தொல்லைகளுக்கு ஆளாகியுள்ளனர். பத்திரிகையாளர்கள் மற்றும் மனித உரிமை பாதுகாவலர்கள் போன்று அரசை விமர்சனம் செய்பவர்களைத் தொல்லைப்படுத்தவும், அச்சுறுத்தவும் குற்றவியல் விசாரணைகளும் நடைமுறைகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. சாரணைகளையும் தண்டனைகளையும் முன்னெடுக்கவும் கண்காணிக்கவும் அட்டர்னிஜெனரலுக்கு உள்ள அதிகாரத்தை மேற்பார்வையிடச் சட்டபூர்வமான அதிகாரம் இருந்த போதும், அதனை நடைமுறைப்படுத்த நீதிமன்றங்கள் தயங்குகின்றன. அரசு தரப்பினரின் நியாயமற்ற செயல்பாடுகளுக்கு நீதித்துறையின் மூலம் நிவாரணங்கள் வழங்கப்பட்ட மிக அரிதான வழக்குகளும் உள்ளன.

(அ) சட்ட கட்டமைப்பில் உள்ள போதாமைகள்

356) போரின் இறுதிக் கட்டத்தில் நடந்ததாக நம்பத்தகுந்த வகையில் குற்றம் சாட்டப்பட்டுள்ள நடத்தைகளின் முக்கியக் கூறுகளை உள்ளடக்கிய பல குற்றச் செயல்களை இலங்கையின் குற்றவியல் சட்டம் பட்டியலிட்டுள்ளது. போரின் இறுதிக் கட்டங்களில் நடைபெற்று இருக்கக்கூடிய மீறல்களை முழுமையாக விசாரிக்கவும் தண்டனைக்குள்ளாக்கவும் அட்டர்னிஜெனரலுக்கு உள்ள திறனை சிக்கலாக்கக்கூடிய, பல முக்கியக் கட்டமைப்பு ரீதியிலான வெற்றிடங்கள் இலங்கையின் சட்டத்தில் உள்ளன. (1) உள்நாட்டுச் சட்டத்தின் கீழான குற்றங்களாகக் கணிக்கத்தக்க செயல்களிலிருந்து வேறுபட்டு, உள்நாட்டுப் போரின் போது செய்யப்பட்ட போர்க் குற்றங்கள் (2) ஒரு குற்றத்திற்கு உத்தரவிட்டதாக இராணுவத் தளபதிகள் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் ஆகியோர் அந்தக் குற்றத்தை செய்ததற்குப் பொறுப்பாக்கும் வெளிப்படையான சட்டப்பிரிவுகள் (சதி அல்லது தூண்டுதல் போன்ற பிற நடத்தைகளை உள்ளடக்கக்கூடிய மாற்றுப் பிரிவுகள் இருக்கின்றன) (3) தங்களுக்குக் கீழ் பணிபுரிபவர்கள் புரிந்த குற்றங்களைத் தடுக்கவோ அல்லது தண்டனை அளிக்கவோ தவறியதற்காக இராணுவத் தளபதிகள் அல்லது அரசு உயர் அதிகாரிகளுக்கு இருக்கக்கூடிய கடப்பாடுகள் ஆகியவை குறித்து இலங்கையின் சட்டம் வெளிப்படையாக எதையும் தெரிவிக்கவில்லை.

357) போரின் இறுதிக் கட்டங்கள் உட்பட்ட இலங்கையில் மிகப்பெரும் எண்ணிக்கையில் காணாமல் போதல்கள் நடந்துள்ளன என்ற நிலையில் வலுக்கட்டாயமாக காணாமல் போக்கப்படுதல் என்ற குறிப்பிட்ட குற்றம் குறித்து எந்தக் குறிப்பும் இல்லாதது என்பது மேலும் ஒரு கட்டமைப்பு வெற்றிடமாகும். இதனால் கடந்த காலத்தில் இந்தக் குற்றத்தை குற்றவியல் சட்டத்தின் சாதாரணப்பிரிவுகளின் கீழ் விசாரித்ததும், அதன்மூலம் விசாரணையைத் தொடர்வதற்கு தேவையான வகையில் பொதுவான குற்றவியல் குற்றங்களின் வரையறைக்குள் சந்தேகத்திற்கு இடமின்றி நிறுவுவது என்பது கடினமாக உள்ளது. அத்துடன், வலுக்கட்டாயமாக காணாமல் போக்கப்பட்ட ஒரு வழக்கில் அமைப்பு ரீதியானப் பொறுப்பை உறுதிசெய்வதற்குரிய போதுமான சான்றுகள் உள்ளபோதும், தனிப்பட்ட முறையில் குற்றத்தை உறுதிசெய்வதற்குப் போதுமான சான்றுகள் இல்லாத நிலையில், அரசின் பொறுப்பைக் கண்டறிவதற்குரிய தெளிவான சட்ட நடைமுறையில்லை.

358) போர்க்குற்றங்கள் அல்லது மனிதத்திற்கு எதிரான குற்றங்கள் போன்ற குற்றங்களைத் திறனாக விசாரிப்பதற்குரிய வழிவகைகளைச் சிக்கலாக்கு வதாகவே இலங்கையின் குற்றவியல் நீதி அமைப்பில் உள்ள கட்டமைப்பு ரீதியான குறைபாடுகள் உள்ளன. முதலாவதாகச் சாட்சிகளை அச்சுறுத்துவது என்பது பரவலாக உள்ள நிலையில், அதிலும் ஆயுதப்படையினர் மட்டுமல்லாமல் சட்டத்தை நடைமுறைபடுத்தக்கூடிய அனைவராலும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகும்

இலங்கைக்கு ஒரு பெருமைமிகுந்த ஊடகப் பாரம்பரியம் இருந்த போதும் போர்க் காலத்தில் அதிலும் குறிப்பாகப் போரின் இறுதிக் கட்டங்களில் ஊடக சுதந்திரம் என்பது வெகுவாக பாதிக்கப் பட்டது. சுதந்திரமான ஊடகங்கள் தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருந்தபோதும் அவை இன்னமும் கட்டுப்பாடுகள் மற்றும் அச்சுறுத்தல்களை எதிர்கொண்டே இருக்கின்றன. வன்முறை மற்றும் மிரட்டல்கள் காரணமாக போர்க் காலத்தில் நாட்டை விட்டு தப்பியோடிய நிறைய ஊடகவியலாளர் கள் இன்னமும் அச்சத் தோடு இருப்பதுடன், மீண்டும் நாட்டிற்குத் திரும்புவது பாதுகாப்பு அல்ல என்றும் நம்பு கின்றனர்.

நாட்டிற்குள் அரசை விமர்சிக்கக்கூடிய கருத்துகளையும் தமிழர்களின் துயரங்களுக்கு அனுதாபத்துடன் இருக்கக்கூடிய கருத்துகளையும் சகித்துக்கொள்வது குறைவாகவே உள்ளது.



சூழல் நிலவுகையில், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளைப் பாதுகாப்பதற்கு தேவையான எவ்விதச் சட்ட நடைமுறைகளும் இல்லை. தங்கள் மீது குற்றச்சாட்டுகள் வைக்கப்பட்டிருந்த நிலையிலும் கூட, சித்திரவதைக் குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகியுள்ள காவல் துறை அதிகாரிகள் அவர்களது பதவிகளில் தொடர்ந்து நீடித்தது, அவர்களுடைய பதவியின் அதிகாரத்தையும் செல்வாக்கையும் நிலுவையில் உள்ள வழக்குகளின் சாட்சிகளை அச்சுறுத்தவும், சிலநேரங்களில் கொல்லவும் கூடப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பை அளித்துள்ளது. இரண்டாவதாக, விடுதலைப்புலிகளுடன் தொடர்புடைவர்கள் எனச் சந்தேகிக்கப்பட்டவர்களுக்கு எதிராகப் பெரும்பாலும் பயன்படுத்தப்படும் சட்டமான பயங்கரவாதத் தடுப்புச் சட்டமானது, குற்றம் சாட்டப்பட்டவர்கள் தங்கள் வாக்குமூலங்கள் வற்புறுத்தி பெறப்பட்டன என்பதை வெளியிடுவதற்கான வாய்ப்பை வழங்க மறுப்பதன் மூலம் விசாரணையின் போது அதிகாரிகள் மோசமான நடத்தைகளை மேற்கொள்வதற்கு வாய்ப்பை வழங்குகிறது. இது உல களாவியச் சட்டத்தை மீறுவதாகும்.

(இ) நீதிமன்றங்கள்

359) ஆயுதப்போர்ச் சூழலில் நடத்தப்பட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள மோசமான குற்றச் செயல்கள் உள்ளிட்ட குற்றங்களுக்கு எதிராக இலங்கையில் குற்றவியல் நீதிமன்றங்கள் அண்மையில் மேற்கொண்டுள்ள உலகளாவிய அணுகுமுறை குறித்து, மிகக்குறைந்த அளவிலான தரவுகளே வெளிப்படையாக உள்ளன. இதன் விளைவாக, போரின் இறுதிக் கட்டங்கள் குறித்த தனது ஆய்வோடு நேரடியாகத் தொடர்புடையதாகவும், அதன் மூலம் இன்னும் விரிவான செயல்வடிவங்களை அறியக்கூடியதாகவும் உள்ள, மரபான இரு பெரும் விஷங்களைக் குழு கணிக்கிறது. சித்திரவதை மற்றும் வலுக்கட்டாயமாகக் காணாமல் போக்குதல் ஆகிய குற்றங்களுக்கு இலங்கையின் நீதிமன்றங்கள் ஆற்றும் எதிர்வினைகளே அவை.

360) இலங்கையின் நீதிமன்ற விசாரணைக்கு முந்தைய காலம் மற்றும் நீதிமன்ற விசாரணைக் காலம் ஆகியவை உள்ளிட்ட நீதித்துறை நடவடிக்கைகளில், அனைத்துக்கட்டங்களிலும் தாமதம் ஏற்படுவது என்பது மிகமோசமான மனித உரிமை மீறல்களைக் கொண்ட வழக்குகளில் மட்டுமல்ல, பொதுவானதொரு வழமையான நடைமுறையாகவே இருக்கிறது. ஏறத்தாழ இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக நீடிக்கக்கூடிய விசாரணைக்காலம், அத்துடன், புகார் அளித்தவர்களை அச்சுறுத்தியதானக் குற்றச்சாட்டுகள் மற்றும் சித்திரவதைக் குற்றச்சாட்டுகள் ஆகியவை குற்றவியல் நீதி அமைப்பின் உண்மையான மற்றும் புரிந்துகொள்ளப்பட்ட நேர்மைத் தன்மையைக் கணிசமாகக் குறைத்துள்ளது. நீதிமன்ற விசாரணையை ஒரு நியாயமான காலக்கட்டத்திற்குள் முடிக்கவேண்டும் என்று இலங்கையின் சட்டத்திற்குள் எவ்வித வெளிப்படையான உரிமையும் இல்லை. அத்துடன், அரசமைப்புச் சட்டம் அல்லது குற்றவியல் நீதி அறிக்கைகள் ஆகிய எதிலுமே தேவையற்ற தாமதம் குறித்த எந்தக் குறிப்பும் இல்லை. நடைமுறை சார்ந்த வழமையான விதிகளை மீறுவதும் கூட ஒரு பொதுவான நடைமுறையாக இருப்பதாகவேத் தெரிகிறது. கடத்தல், சட்டவிரோத தடுப்புக்காவல் அல்லது சித்திரவதை குற்றச்சாட்டுகளின் கீழ், அதிகாரிகளுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட பெரும்பாலான விசாரணை நடைமுறைகள், போதுமான சான்றுகள் இல்லாததாலும், சாட்சிகள் இல்லாததாலும் முழுமை பெறாமல் போய் உள்ளன. 2004இல் வெளியிடப்பட்ட ஓர் அறிக்கையில், கடந்த ஆண்டுகளில் இலங்கையில் நடத்தப்பட்ட மோசமான குற்றங்களுக்கு வழங்கப்பட்ட தண்டனைகள் வெறும் நான்கு விழுக்காடாகவே இருந்துள்ளது. இந்த விஷயங்களில் எந்த முன்னேற்றத்தையும் குழுவினால் காண இயலவில்லை. தண்டனை வழங்கப்பட்ட சில அரிய வழக்குகளிலும் கூட, நட்டஈடு வழங்குமாறு உத்தரவிட நீதிமன்றங்கள் தயக்கம் காட்டுகின்றன.

361) தடுப்புக்காவலில் வைக்கப்பட்டவர்களுக்கு எதிராகச் சித்திரவதைகள் மற்றும் கொடூரமான, மனிதத்தன்மையற்ற மற்றும் தரக்குறைவான நடத்தைகள் அல்லது தண்டனைகள் ஆகியவற்றை மேற்கொண்டதாக அரசு அதிகாரிகள் மீது பரவலான மற்றும் தொடர்ந்த குற்றச்சாட்டுகள் வைக்கப்படுகின்றன. காவல் துறையின் பாதுகாப்பில் ஏற்படும் சாவுகளுக்கான காரணங்கள் இரண்டில், ஒன்றாக சித்திரவதை உள்ளது (மற்றொன்று கொலை). அத்துடன், விசாரணை நடைமுறையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட முறையாகவே சித்திரவதை உள்ளது. தனிப்பட்ட அதிகாரி களின் சில அரிய மிகைச் செயல்களாக அல்லாமல் தங்களுடைய கடமைகளைப் பொதுவாக வழமையான முறையில் செயலாற்றக்கூடிய காவல்துறையினரின் நடத்தைகளின் காரணமாகவே, பெரும்பாலான காவல்நிலைய மரணங்கள் நிகழ்ந்துள்ளன. சித்திரவதை மோசமாக நடத்தப்படுவது மற்றும் காணாமல் போவது போன்று சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகள் மீதான குற்றச் சாட்டுகளை சரியான முறையில் நடுநிலையோடு அரசு விசாரிக்கவில்லை. சித்திரவதை வழக்குகளைப் பொருத்தவரையில் ஒரு திறமையான விசாரணை நடைமுறை இல்லாதது என்பது குறிப்பானச் சிக்கல்களை ஏற்படுத்துவதாகவும் உலகளாவிய வரைமுறைகளுக்கு ஈடுசெய்யாததாகவும் உள்ளன.

362) மிக மோசமான குற்றங்கள் எவ்வாறு நடத்தப்படுகின்றன என்பதற்கு சான்றாக, சித்திரவதையை ஒரு குற்றமாக அறிவித்த 1994இன் 'சித்திரவதை மற்றும் பிற கொடூரமான மனிதத்தன்மையற்ற தரக்குறைவான நடத்தை அல்லது தண்டனைக்கு எதிரான தீர்மானச்சட்டம்' நடைமுறைபடுத்தப்பட்டதிலிருந்து அட்டர்னிஜெனரல் எழுப்பிய 34 விசாரணை வழக்குகளில் மூன்றில் தண்டனை அளிக்கப்பட்டும் எட்டில் முழுமையாக விடுவிக்கப்பட்டும் உள்ளன. சித்திரவதைக் காகக் காவல்துறை ஆய்வாளர் பதவிக்கு மேலே உள்ள எந்த அதிகாரி மீதும் சட்டபூர்வ நடவடிக்கை எடுக்க அட்டர்னிஜெனரல் கோரவில்லை. வலுக்கட்டாய மாக காணாமல் போக்குதல் குறித்த வழக்குகளில் (பொதுவாக இவை கடத்தல் போன்ற சாதாரண வகைக் குற்றங்களின் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ளன.) கிடைத்துள்ள புள்ளிவிவரங்கள் அடிப்படையில், தண்டனை அளிக்கப்பட்ட விகிதாச்சாரம் மிகக் குறைவாக இருப்பது தெரிகிறது. புகாரைப் பதிவு செய்ததில் ஏற்பட்ட தாமதம் மற்றும் குற்றத்தை வரையறுத்ததில் ஏற்பட்ட தவறுகள் ஆகிய தொழில்நுட்பக் காரணங்களைக் காட்டியே இவ்வழக்குகளில் நீதிமன்றங்கள் விடுதலை செய்கின்றன. குற்றங்களை வரையறுத்ததில் ஏற்பட்ட தவறுகளை பொருத்தவரையில் அத்தகைய குற்ற அறிக்கைகளை மாற்ற அட்டர்னி ஜெனரலுக்கும் உயர் நீதிமன்றத்திற்கும் சட்டபூர்வ அதிகாரம் உள்ளது. ஆனால் இந்த அதிகாரம் பல வழக்குகளில் பயன்படுத்தப்படுவது இல்லை. கேள்விக் குள்ளாக்கப்பட்டுள்ள நடத்தையின் தீவிரத்தோடு ஒப்பிடும்போது வழங்கப்படும் தண்டனைகளின் தீவிரம் பெரும்பாலும் மிக எளிமையானதாகவே உள்ளது.

(ஈ) போரின் இறுதிக் கட்டங்களில் நடத்தப்பட்ட மீறல்கள் குறித்த குறிப்பான குற்றவியல் நடைமுறைகள்

363) விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்களுக்கு எதிரான சட்ட நடைமுறைகளைப் பொருத்தவரையில், தான் குற்றவியல் குற்றச்சாட்டுகளைத் தொடர்ந்திருப்பதாக, அரசு, குழுவிடம் அளித்த எழுத்துபூர்வ மற்றும் வாய்மொழி அறிக்கைகளில் தெரிவித்துள்ளது.

தற்போது தடுப்புக்காவலில் உள்ள விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்களுக்கு எதிரான சான்றுகள் ஒரு சரியான வழக்குக்கான அடிப்படையாக இருக்குமெனில், அவர்களுக்கு எதிராக நீதிமன்றங்களின் குற்றவியல் அல்லது குடிமையியல் வழக்குகள் தொடரப்படும். ஆகஸ்ட் 2008ல் தொடங்கி இந்த நடைமுறை செயல்பட்டுக்கொண்டுள்ளது. பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழோ அல்லது அவசரகால விதிகள், குற்றவியல் சட்டங்கள் அல்லது பிற குற்றவியல்



இலங்கைக்கு ஒரு பெருமைமிகுந்த ஊடகப் பாரம்பரியம் இருந்த போதும் போர்க் காலத்தில் அதிலும் குறிப்பாகப் போரின் இறுதிக் கட்டங்களில் ஊடக சுதந்திரம் என்பது வெகுவாக பாதிக்கப் பட்டது. சுதந்திரமான ஊடகங்கள் தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருந்தபோதும் அவை இன்னமும் கட்டுப்பாடுகள் மற்றும் அச்சுறுத்தல்களை எதிர் கொண்டே இருக்கின்றன.

வன்முறை மற்றும் மிரட்டல்கள் காரணமாக போர்க் காலத்தில் நாட்டை விட்டு தப்பியோடிய நிறைய ஊடகவியலாளர்கள் இன்னமும் அச்சத்தோடு இருப்பதுடன், மீண்டும் நாட்டிற்குத் திரும்புவது பாதுகாப்பு அல்ல என்றும் நம்புகின்றனர்.

அறிக்கைகள் ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்களின் அடிப்படையிலோ பெரும் எண்ணிக்கையிலான தடுப்புக்காவலில் வைக்கப்பட்டவர்கள் மோசமான குற்றச்சாட்டுகளைப் புரிந்ததற்காக நீதிமன்றங்களின் முன் நிறுத்தப்பட்டுள்ளனர். அந்த அனைத்து வழக்குகளிலும் குறைந்தபட்சக் கட்டுப்பாடுகளை கொண்ட தண்டனை கொள்கைகள் பின்பற்றப்பட்டதோடு, சிறைதண்டனைகள் அல்லாத நடைமுறைகள் தாராளமாக பின்பற்றப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

364) 'பெரும் எண்ணிக்கையிலான' என்பது எத்தனை வழக்குகளை குறிக்கிறது என்பதையோ அல்லது இவை போரின் இறுதிக் கட்டங்களோடு தொடர்புடையவையா அல்லது பிறகாலக்கட்டங்களைச் சேர்ந்தவையா மற்றும் இந்தக் குற்றச்சாட்டுகள் உலகளாவியச் சட்டத்தின் கீழ் ஆழமான கேள்விக்கு உள்ளாக்கப்பட்டுள்ள அவசரகால சட்டத்திற்கு மாறாக, பொதுச்சட்டத்தின் கீழான வழமையான குற்றச்சாட்டுகளாக எந்தளவிற்கு உள்ளன என்பதைக் குறித்துக் குழுவிடம் எந்த தகவலும் இல்லை. கூடுதலாகக் 'குறைந்தபட்சக் கட்டுப்பாடுகளைக் கொண்ட தண்டனைகளை' எல்லா வழக்குகளிலும் பின்பற்றுவது என்பது உலகளாவிய மனிதநேய மற்றும் மனித உரிமைச் சட்டங்களை மோசமாக மீறிய குற்ற நடத்தைகளின் தீவிரத்திற்கு, தேவையான அளவில் எதிர்வினையாற்றத் தவறுவதாக உள்ளது. மேலும் விடுதலைப்புலிகள் இயக்கப் படையினரின் கடந்த கால நடத்தைகள் மற்றும் அத்துமீறல் நடவடிக்கைகளுக்குத் தெளிவானப் பொறுப்பினை ஏற்கக்கூடிய சில குறிப்பிட்ட விடுதலைப்புலிகள் இயக்க முன்னாள் மூத்த தலைவர்களுக்கு எதிராகக் குற்றவியல் நடைமுறைகளை மேற்கொள்ளமல் அதற்கு மாறாகத் தன்னுடைய அரசியல் கட்டமைப்பு திட்டங்களில் அவர்களை அரசு இணைத்துக்கொண்டுள்ளது என்பதையும் குழு கவனத்தில் கொள்கிறது. இதில் ஒரு குறிப்பிடத்தக்க விதிவிலக்காக இருப்பவர் தமிழினி என்ற பெயரில் அறியப்பட்ட சுப்ரமணியம் சிவத்தாய் என்பவர் ஆவர். விடுதலைப்புலிகள் இயக்கத்தில் அதிஉயர் பதவியில் இருந்த பெண்ணாகவும் 2002இல் நடந்த சமாதானப்பேச்சுவார்த்தைகளில் பாலினம் குறித்த துணைக் குழுவில் உறுப்பினராகவும் இருந்த அவர், மே 2009இல் மாணிக் பண்ணையில் கைது செய்யப்பட்ட நாள் முதலாக எவ்விதக் குற்றச்சாட்டுகளும் சுமத்தப்படாமல் அரசின் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டுள்ளார்.

365) க. பா. இ. ஆ. தனது அறிக்கையில் மேலும் விசாரணை தேவையெனக் குறிக்கும் வழக்குகளில், உண்மைகளை விசாரித்து அறிய ஒரு தனியான அமைப்பு அட்டர்னிஜெனரலின் அதிகாரத்தின் கீழ் இருப்பதாக அரசு குறிப்பிட்டுள்ளது. இந்தக் கட்டமைப்பில் விடுதலைப்புலிகளுடனான அதன் அணுகுமுறைக்கு நேர்மாறாக, அரசு அதிகாரிகளின் எத்தகைய விசாரணைகள் தொடங்குவதற்கு முன்பும், வரையறையற்ற கால நீட்டிப்பைக் கொண்ட க. பா. இ. ஆ.வின் நடைமுறைகளை நிராகரிப்பதாகத் தோன்றக்கூடிய வகையில் அரசின் செயல்பாடுகள் இருக்கும். இராணுவப் பணியாளர்களுக்கு எதிராக பல வழக்குகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன என அரசு தெரிவித்தபோதும், அந்த வழக்குகள் போரின் இறுதிக் கட்டங்களோடு தொடர்பு உடையனவா என்பது குறித்து அது குறிப்பிட வில்லை. இதற்குத் துணையாக அது சுட்டிக்காட்டும் ஒரே வழக்கு என்பது, 2000-ஆம் ஆண்டு காலத்தில் பொதுமக்களைக் கடத்திக் கொலைசெய்ததற்காக நான்கு இராணுவத்தினர் மீது 'மிறுசிவில்' பகுதியில் நடைபெறும் நீதிமன்ற விசாரணையாகும். போரின் இறுதிக் கட்டங்களோடு தொடர்புடைய வகையில் இராணுவத்தினருக்கு எதிரான எந்தக் குறிப்பிட்ட வழக்கைப் பற்றியும் குழு அறிந்திருக்கவில்லை. எனவே, இந்த நேரத்தில், போர் முடிந்து இரண்டு ஆண்டுகள் கழிந்த நிலையில், போரின் இறுதிக் கட்டங்களில் அரசின் குடிமையில் மற்றும் இராணுவப் பணியாளர்கள் புரிந்ததாகக் குற்றம்சாட்டப்பட்டுள்ள மீறல்களுக்குப் பொறுப்பேற்பதற்குத் தேவையான வற்றைக் குற்றவியல் நீதி அமைப்பு செய்யவில்லை எனக் குழு முடிவுக்கு வருகிறது. அதேவேளையில் விடுதலைப்புலிகளின் செயல்களுக்கு வழமையானப்

பொறுப்பேற்கும் நடைமுறையைச் செயல்படுத்த சார்புத் தன்மையுடனும் தேர்ந்தெடுக்கப்பட்ட வகையிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

3) இராணுவ நீதிமன்ற அமைப்பில் குற்றவியல் சட்ட எல்லைகள்

366) இராணுவ உறுப்பினர்களால் செய்யப்பட்ட குற்றங்களைப் பொருத்த வரையில், இராணுவ மற்றும் பொதுச்சட்டங்கள் ஆகிய இரண்டையுமே சமகாலத்தில் பயன்படுத்துவதை இலங்கை அனுமதிக்கிறது. இராணுவத்தினரைக் கட்டுப்படுத்தக்கூடிய இராணுவ நீதி அமைப்பை நிறுவுகின்ற இராணுவச் சட்டம் எண் 17 – 1949இன் பிரிவு 77இல், இந்த ஒட்டுமொத்த கோட்பாடும், அத்துடன், பல்வேறு வகையான இராணுவக் குற்றங்களும் பட்டியலிடப்பட்டுள்ளன. வழமையான, சிறப்பு மற்றும் தன்னிச்சையான படை ஊழியர்கள் ஆகிய அனைத்து வகையான இராணுவ ஊழியர்களும் புரிந்துள்ள குடிமையியல் மற்றும் இராணுவக் குற்றங்கள் மீது, இராணுவ நீதி அமைப்பு, சட்ட ஆதிக்கத்தை செலுத்துகிறது. குடிமையியல் சட்டத்தில் உள்ளதுபோலவே, இராணுவச் சட்டமும், போர்க் குற்றங்கள் அல்லது மனிதத்திற்கு எதிரான குற்றங்களுக்கு, கடப்பாடுகளை வரையறுக்கவோ அல்லது அந்தச் சட்டத்திற்கு உட்பட்ட இராணுவ ஊழியர்களின் கட்டளைப் பொறுப்புகள் குறித்து வரையறுக்கவோ இல்லை.

367) இராணுவ ஊழியர்கள் புரிந்த மனித உரிமை மீறல்கள் குறித்த நடத்தைகளின் மீது இராணுவச் சட்டக்கட்டுப்பாட்டை உலகளாவியச் சட்டம் வெளிப்படையாக ஏற்படுத்தவில்லை. எனினும், அத்தகைய வழக்குகளில் இராணுவச் சட்ட அமைப்பின் மூலம் அவை பெரும்பாலும் சரியான முறையில் விசாரிக்கப்படுவதில்லை என்ற நிலையில், அதனால் சட்ட விதிவிலக்கு ஏற்படக்கூடும் என்ற சூழலில் அவ்வழக்குகளில் குடிமையியல் சட்ட ஆதிக்கம் செலுத்துவதற்கு உலகளாவிய சிறந்த நடைமுறைகள் தெளிவான மற்றும் உறுதியான முக்கியத்துவத்தை அளிக்கின்றன.

368) குழுவிடம் அரசு அளித்த எழுத்துபூர்வமான அறிக்கைகளில் 'இராணுவ, கடற்படை மற்றும் வான்படைச் சட்டங்களின் கீழ் மீறல்கள் புரிந்ததாகச் சந்தேகிக்கப்படும் ஆயுதப்படை உறுப்பினர்கள் நீதிமன்ற நடைமுறைகளின் மூலமாகவோ அல்லது குடிமையியல் நீதிமன்ற விசாரணைகளின் மூலமாகவே நீதியின்முன் நிறுத்தப்படலாம். பல்வேறு வழக்குகள் பதியப்பட்டுள்ளன...' அவ்வாறு பதியப்பட்ட பல்வேறு வழக்குகள் இராணுவச் சட்ட எல்லைகளோடு தொடர்புடையவையா அல்லது போரின் இறுதிக் கட்டங்களில் அவர்களின் நடத்தை குறித்தவையா என்பது தெளிவாக இல்லை. போரின் இறுதிக் கட்டங்களில் நடத்தப்பட்ட மீறல்களுக்கு இராணுவத்தினரைப் பொறுப்பேற்க வைக்க, போர் முடிந்த காலத்திலிருந்து போடப்பட்ட மிகக்குறைந்த எண்ணிக்கையிலான வழக்குகள் போதாது. மேலும் மிகப்பெரும் நிலையில் உத்தரவிடப்பட்டோ அல்லது திட்டமிடப்பட்டோ நடத்தப்பட்ட குற்றச்செயல்கள் குறித்த நம்பத்தகுந்த குற்றச்சாட்டுகள் இருந்தபோதும், தற்போதுள்ள அல்லது முன்னாள் இராணுவ அல்லது அரசு உயர் அதிகாரிகளுக்கு எதிராக மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் குறித்து எந்த வழக்குகளும் இருப்பதாக தெரியவில்லை.

நாட்டிற்குள் அரசை விமர்சிக்கக்கூடிய கருத்துகளையும் தமிழர்களின் துயரங்களுக்கு அனுதாபத்துடன் இருக்கக் கூடிய கருத்துகளையும் சகித்துக்கொள்வது குறைவாகவே உள்ளது.

369) தான் கண்டறிந்த நம்பத்தகுந்த குற்றச்சாட்டுகள் குறித்தோ அல்லது போரின் இறுதிக் கட்டங்களில் எழுந்த பிற மீறல்கள் குறித்தோ ஒரு சிறப்பானப் பொறுப்பேற்கும் நடைமுறையை வழங்குவதற்கு, இலங்கையில் தற்போது செயல்பட்டுவரும் இராணுவ நீதி அமைப்ப இருப்பதற்கு எவ்வித அறிகுறியும் குழுவிற்கு தெரியவில்லை.

4) நீதிமன்றங்களை அணுக, பாதிக்கப்பட்டவர்களுக்கு உள்ள வாய்ப்பு

370) உலகளாவியச் சட்டத்தை மீறக்கூடிய நடத்தைகளில் ஈடுபட்டதாகக்

இலங்கையில் ஊடக சுதந்திரம் அடைவதற்கு இரண்டு முக்கிய நிலைகளை அடைய வேண்டும். முதலாவதாக, இலங்கையில் ஊடக வியலாளர்கள் தங்கள் கருத்துகளைச் சுதந்திர மாக வெளியிடுவதற்கு வழிவகை செய்ய அவசரகால நிலையை நீக்குவதும், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை உலகளாவிய வரையறை களோடு பொறுத்துவதற் கேற்ப அதில் மாற்றங் களை செய்வதும் அவசியம் ஆகிறது.

குற்றம் சாட்டப்பட்ட தனி நபர்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்குகளைப் பதிவதன் மூலம், பொறுப்பேற்கும் நடைமுறைக்கு இலங்கையில் உள்ள பாதிக்கப்பட்டவர்கள் பங்காற்ற முடியும் என்பது கோட்பாட்டளவில் உள்ளது. ஆனால் நடைமுறையில் இலங்கையின் அரசமைப்புச் சட்ட வரலாற்றுச் சான்றுகள் மூலம் அரசின் மிக மோசமான மீறல்களைக் கேள்வி கேட்பதில், நீதித்துறை தலையீடுகள் மிகக்குறைந்த பாதிப்பையே ஏற்படுத்தியுள்ளன என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. சட்ட ஆட்சி வலுவிழக்கச்செய்யப்பட்டது என்பது சட்டத்தின் ஆய்விற்கு வெளியே பரந்துபட்ட அளவில் அவசரகால அதிகாரங்களின் விளைவாகவும், சட்டவிதிவிலக்குளை அளிக்கும் நடைமுறை காரணமாகவும், அரசு அதிகாரிகளைப் பொறுப்பேற்க செய்வதற்கு ஓர் அரசியல் விருப்பம் இல்லாததன் விளைவாகவும் ஏற்பட்டுள்ளது. இவை அனைத்தும் இணைந்து நீதித்துறையின் உத்தரவுகள் அனைத்தும் தொடர்ந்து அடுத்தடுத்து வந்த அரசுகளால் நிராகரிக்கப்படக்கூடிய சூழலையே உருவாக்கியுள்ளன.

371) அண்மை ஆண்டுகளில், இலங்கையின் நீதி அமைப்பின் தலைமை இடமாக இருக்கக்கூடிய உச்சநீதிமன்றம், மிக மோசமான அளவில் அரசியல் படுத்தப்பட்டுள்ளது. ஒரு வலுவான தலைமை நீதிபதியின் தலைமையில், அரசின் அதிகாரத்தை வலியுறுத்தக்கூடிய ஒரு நடைமுறையைப் பின்பற்றி, உலகளாவிய கடப்பாடுகளைப் புறந்தள்ளக்கூடிய இறையாண்மை கருத்தியியலை கொண்டு, அரசியல் மயமாக செயல்படுகிறது. 'குற்றம் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான உலகளாவிய ஒப்பந்த'த்தின் கீழுள்ள இலங்கையின் கடப்பாடுகளை மீறுவதாக உச்சநீதிமன்றத்தின் பல முடிவுகள் இருப்பதை அய். நா. வின் மனித உரிமைக் குழு கண்டுள்ளது. இதன் மூலம் உலகளாவியச் சட்ட வரையறைகளிலிருந்து அது விலகிச்சென்றுள்ளது. நீதிபதிகளை நீக்கும் நடைமுறையான தலைமை நீதிபதியின் தலைமையில் செயல்படக்கூடிய நீதித்துறைப் பணிகள் ஆணையமும் உலகளாவியச் சட்டத்தை மீறியே செயல்படுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இறுதியாக அண்மையில் நிறைவேற்றப்பட்ட 18வது சட்டத் திருத்தமானது உயர்மட்ட நீதித்துறையில் சுதந்திரத்தை மேலும் வலுவிழக்கச்செய்ததோடு, நாடாளுமன்றக் குழுவின் குறைந்த பட்ச ஆலோசனைகளோடு மூத்த நீதிபதிகளை நேரடியாக நியமிக்கும் பரந்துபட்ட அதிகாரத்தை அதிபருக்கு வழங்குகிறது.

(அ) அடிப்படை உரிமைகளைச் செயல்படுத்துவது மற்றும் பிற பொதுச்சட்டச் செயல்பாடுகள்

372) அரசமைப்புச் சட்டத்தின் பிரிவுகள் 17 மற்றும் 126 ஆகியவை, அடிப்படை உரிமைகள் மீறப்பட்டதற்கு எதிராக, நிர்வாக நடவடிக்கையின் மூலம், ஓர் அடிப்படை உரிமைகள் மனுவினை உச்சநீதிமன்றத்தில் அளிக்கலாம் எனக் குறிப் பிடுகிறது. ஆனால் இந்த நிவாரணத்தின் பயன்பாடு சுருக்கமாகவே உள்ளது. முதலாவதாக அரசமைப்புச் சட்டத்தில் அடிப்படை உரிமைகள் குறித்த விளக்கமானது முழுமை யானதாக இல்லை. மேலும் அதில் குறிப்பிடப்பட்ட உரிமைகள் உலகளாவியச் சட்டத்தோடு பொருந்தாதமுறையில் அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை யிலேயே கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இரண்டாவதாக, இத்தகைய செயல் பாடுகள் மிக இறுக்கமான நடைமுறை விதிகளைக் கொண்டதாக உள்ளன. மீறலின் தன்மை என்னவாக இருந்தபோதும், ஒவ்வொரு வழக்கிலும் அதன் விளைவின் தீவிரத்தைக் கவனத்தில் கொள்ளாமல் மனு அளிப்பவர்கள், குற்றம் சாட்டப்பட்ட மீறல் நடந்து ஒரு மாதத்திற்குள் உச்சநீதிமன்றத்தை அணுகவேண்டும் எனக் கூறுகிறது. மூன்றாவதாக, இந்த வழக்குகளில் அடிப்படை உரிமைகளுக்கான நிவாரணத்தைக் கோரி வாதிடும்போது, பாதிக்கப்பட்ட ஒருவர், தனது சொந்த உரிமைகளை கோரவோ அல்லது அவரது சார்பாக ஒரு வழக்கறிஞர் வாதாடவோ மட்டும் அனுமதிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர் நேரடியாக வழக்கினை நடத்த இயலாத நிலையில், நண்பர்கள் அல்லது பொதுநலவாதிகள் அவர் சார்பாக வழக்கை நடத்துவதை அது அனுமதிக்கவில்லை.

373) இந்த நிவாரணத்தின் கடந்த கால நடைமுறைகளைப் பொருத்தவரையில், சித்திரவதை மற்றும் கொடூரமான, மனிதத் தன்மையற்ற அல்லது தரம்குறைவான நடத்தைகள் குறித்து 2000 முதல் 2006 வரையிலான காலக்கட்டத்தில், உச்சநீதி மன்றம் வழங்கிய 52 அடிப்படை உரிமைகள் குறித்தத் தீர்ப்புகளை ஆராய்ந்ததில், நீதித்துறையின் எதிர்வினையானது சமனற்ற முறையில் இருந்ததைக் காட்டுகிறது. பாதிக்கப்பட்டவரின் சார்பாக உறுதியான முடிவுகள், மிகப்பெரும் அளவிலான நட்டஈட்டுக்கு உத்தரவிடுவது மற்றும் காவல்துறையின் தாக்குதல் குறித்து கடுமையான கண்டனத்தைத் தெரிவிப்பது ஆகியவை மிகக்குறைவான எண்ணிக்கையிலான தீர்ப்புகளிலேயே குறிப்பிடப்பட்டுள்ளன. அடிப்படை உரிமைகள் மனுவை பாதிக்கப் பட்ட ஒருவர் கொண்டுவந்தவுடன், குறிப்பிடத்தகுந்த அளவில் நிலையற்ற தாகவும் கணிக்க இயலாததாகவும் உள்ள ஒரு சட்ட நடைமுறையை மனுதாரர் பின்பற்ற வேண்டி உள்ளது. அத்துடன், அந்த ஆய்வின் மூலம் நீதித்துறையை அணுகுவது என்பது மிகவும் சமனற்று இருப்பதை அறியமுடிந்தது. ஏனெனில் அப்படியான ஒரு மனுவை அளிப்பதற்கு மனுதாரருக்கு வலுவான பொருளாதார மற்றும் சட்ட வளங்கள் இருக்கவேண்டும். அத்துடன், கொழும்பில் மட்டுமே இத்தகைய மனுக்கள் அளிக்கமுடியும் என்பதால், அவருக்கு கொழும்பிற்கு வருவதற்குரிய புவியியல் சூழல் இருக்கவேண்டும்.

374) மனுதாரர் சித்திரவதையினால் பாதிக்கப்பட்டவர் என்பதை உச்சநீதிமன்றம் ஏற்றுக்கொண்டிருந்தாலும், அதனால் ஒரு சிறப்பான குற்றவியல் விசாரணையோ தண்டனையோ நடந்துவிடும் என எதிர்பார்க்க இயலாது. மேலும் மோசமான நடத்தை குற்றச்சாட்டுகளைக் கொண்ட அடிப்படை உரிமைகள் வழக்குகள் வெற்றி பெறும் சூழலில், நட்ட ஈட்டினை அரசு அல்லது தனிப்பட்ட அதிகாரிகள் ஆகிய இருவரில் யாருக்கு எதிராகக் கோருவது, நட்டஈட்டின் தொகை மற்றும் இந்த வழக்கு நடத்திய செலவுகளை எதில் சேர்ப்பது ஆகியவை குறித்து முடிவெடுப்பதில் விவரிக்க இயலாத மற்றும் சமனற்ற வேறுபாடுகள் நிலவுகின்றன.

375) ஆனால் குழுவிடம் அரசு அளித்த எழுத்துபூர்வ பதில்களில் 'ஆயுதப்படை உறுப்பினர்கள் மற்றும் காவல் அதிகாரிகளுக்கு எதிராகப் பல அடிப்படை உரிமைகள் மனுக்கள், ஆட்கொணர்வு மற்றும் பொதுநல வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த அடிப்படை உரிமைகள் அல்லது பிற மனுக்கள் போரின் இறுதிக் கட்டங்களில் அரசு அதிகாரிகளின் நடத்தையோடு தொடர்புடையதா என்பது தெளிவாக இல்லை. இந்த வழக்குகளில் தனிப்பட்ட விவரங்கள் எதையும் அரசு அளிக்கவில்லை. அவ்வாறு அளித்திருந்தால், குழு தானே ஒரு முடிவுக்கு வர முடிந்திருக்கும். குற்றம் சாட்டப்பட்ட மீறல்கள் நடந்து ஒரே மாதத்திற்குள் வழக்குகள் பதிவு செய்யப்படவேண்டும் என்ற நடைமுறைத்தேவை காரணமாக, தற்போது பதிவு செய்யப்படும் எந்த ஓர் அடிப்படை உரிமைகள் மனுவும் காலதாமதம் காரணமாக முழுதும் செயலற்றதாகவே கருதப்படும்.

(ஆ) தனிப்பட்ட குடிமை நடவடிக்கைகள்

376) அரசின் நடத்தை குறித்து அரசின் எழுத்துபூர்வ பதில்கள் 'மீறல்கள் எதுவும் இருக்குமானால் அரசு அதிகாரிகளுக்கு எதிராக குடிமை நடவடிக்கைகள் எடுக்கலாம்' எனத் தெரிவிக்கின்றன. ஆனால் அதற்கு எவ்விதச் சான்றையும் அது அளிக்கவில்லை. குழுவைப் பொருத்தவரை, அப்படியான எந்த நிகழ்வைப்பற்றியும் அது அறிந்திருக்கவில்லை. விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்களுக்கு எதிரான குடிமைக் குற்றச்சாட்டுகளைப் பொருத்தவரையில், அரசின் எழுத்துபூர்வ அறிக்கைகள் 'பாதிக்கப்பட்டவர்கள் எவரும், குற்றம் சாட்டப்பட்ட மீறல்கள் எதையும் விடுதலைப்புலிகள் புரிந்ததாக எவ்வித குற்றச்சாட்டையும் பதிவு செய்யவில்லை' எனக் குறிப்பிடுகிறது.



இரண்டாவதாக, வெளிநாட்டிற்குத் தப்பியோடிய ஊடகவியலாளர்கள் நாட்டிற்குத் திரும்புவதைப் பாதுகாப்பானதாகக் கருதி தங்கள் சொந்த நாட்டில் தங்கள் தொழிலைத் தொடர்வதற்குரிய சூழல் எட்டப்படவேண்டும்.

பொதுமக்களின் பாதுகாப்பு உரிமைகள் நலன் மற்றும் வாழ்வு பற்றிய எவ்வித அக்கறையும் இன்றி, இலங்கையில் நடைபெற்ற போரின் இருதரப்பினரும் இராணுவ நடவடிக்கை களை மேற்கொண்டனர். அவர்கள் உலகளாவியச் சட்டத்தின் கோட்பாடு களை மதிக்கத் தவறினர்.



(இ) ஆட்கொணர்வு மற்றும் நிவாரணங்களை, தடுப்புக்காவலில் உள்ளவர்கள் அணுகுவதற்கான வாய்ப்பு

377) தடுப்புக்காவலில் உள்ள ஒருவர் அந்த தடுப்புகாவலின் சட்டபூர்வ தன்மையை உறுதிசெய்யவும், போதுமான சட்ட அடிப்படை இல்லையெனில் விடுதலை பெறுவதற்கான சூழலைப் புரிந்துகொள்ளவும், சட்டப்படி உள்ள ஒரு வழமையான முறைதான் ஆட்கொணர்வுச் சட்ட வரையறையாகும். ஆனால் தடுப்புக்காவல் குறித்த சிக்கல்களை அது எந்த அளவிற்குக் கையாள இயலும் என்பது கேள்விக்குரியதே. இலங்கையில் மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனு அளிப்பதற்கான வழியையும் அரசமைப்புச் சட்டம் வழங்கியுள்ளது. அதன்மூலம் 'சட்டவிரோதமாகவேச் சரியில்லாத வகையிலோ பொதுவில் அல்லது தனிப்பட்ட முறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள' எந்த ஒரு தனிநபர் உள்ளிட்ட எவரின் உடலையும் நீதிமன்றத்திற்கு முன் கொண்டுவரவும் சட்டப்படி அதைக் கையாளவும் அதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

378) அண்மை ஆண்டுகளில் அரசியில் சட்டம் வழங்கக்கூடிய ஆட்கொணர்வு நிவாரணம், நெடிய தாமதங்களாலும், மனுதாரர்களுக்குப் பெரும் பொருளாதார மற்றும் போக்குவரத்துச் சிக்கல்களை ஏற்படுத்தக்கூடிய வகையில், நீதிமன்றங்களை மாற்றக்கோரிக் குற்றம்சாட்டப்பட்டவர்கள் அடிக்கடி விடுக்கக்கூடிய வேண்டு கோள்கள், கடத்தியவரின் பெயரில் நேர்ந்திருக்கக்கூடிய சின்ன எழுத்துப்பிழைகள் உள்ளிட்ட மிகச்சிறிய தொழில்நுட்பக் காரணங்கள் அல்லது காவல்துறை அல்லது இராணுவத் தலைமையால் குற்றச்சாட்டுகள் வெறுமனே மறுக்கப்படுவதன் அடிப்படையில் மனுக்கள் தள்ளுபடி செய்யப்படுவது உள்ளிட்ட பல்வேறு கூறுகள் காரணமாகவும், நடைமுறையில் அது மிகக்குறைந்த அளவிலேயே பயன்படுகிறது. சாட்சிகளை அச்சுறுத்துவது, நீதி அமைப்பின் மீது பொது மக்களுக்கு நம்பிக்கை இல்லாமல் இருப்பது மற்றும் குற்றச்சாட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகள் மீதான அச்சம் ஆகிய புறச்சூழல் காரணங்களும் வெற்றிகரமாக இதனை நடத்துவதற்கு எதிராக உள்ளன. 1994 முதல் 2002 வரையிலான காலக்கட்டத்தில் மேல்முறையீட்டு நீதிமன்றம் கையாண்ட வழக்குகளில் கூறப்பட்ட 844 தீர்ப்புகள் மற்றும் உத்தரவுகள் ஆகியவற்றை ஆராய்ந்ததில் 79 விழுக்காடு ஆட்கொணர்வு மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டிருந்தது தெரியவந்தது. 1980களிலும் 1990களின் தொடக்கத்திலும், சிங்களர்கள், தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் உட்பட இலங்கை பொதுச்சமூகத்தின் அனைத்துப் பிரிவுகளையும் சேர்ந்த பல்வேறு நபர்கள் வலுக்கட்டாயமாக காணாமல் போக்கப்பட்டது தொடர்புடைய வழக்குகள் இவை.

379) போரின் இறுதிக் கட்டங்கள் மற்றும் அதற்கு பின்னான காலத்தில் பல்வேறு பிரிவுகளையும் சேர்ந்தவர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டதற்கான சட்ட அடிப்படைகள் குறித்த பெரிய நிச்சயமற்ற தன்மை நிலவுகிறது. இடம் பெயர்ந்த மக்களைக் காவல் கட்டுப்பாட்டுடன் கூடிய முகாம்களில் பெரும் எண்ணிக்கையில் தன்னிச்சையாக தடுத்து வைத்ததற்கான குறிப்பான சட்ட அடிப்படை தெளிவற்று இருக்கிறது. மறுபுறம் விடுதலைப்புலிகள் எனச் சந்தேகிக்கப்பட்டவர்களும் மற்றவர்களும் தடுத்து வைக்கப்பட்ட வழக்குகளில் அவசரகால நிலை விதிகள், பயங்கரவாதத் தடுப்புச்சட்டம் மற்றும் சாதாரணக் குற்றவியல் நீதிச் சட்டங்கள் ஆகியவற்றின் கீழ் உள்ள தடுத்துவைக்கும் அதிகாரங்களை அரசு குறிப்பிட்டுள்ளது. இந்த இரண்டு பிரிவுகளில் தடுத்து வைக்கப்பட்டவர்கள் எவ்வாறு ஆட்கொணர்வுச் சட்டத்தை நடைமுறையில் பயன்படுத்தி, தேவையான சட்ட பிரதிநிதித்துவத்தை பெறுவது என்பதை அறிவது கடினமானதாக இருக்கிறது. அரசின் எழுத்துபூர்வ பதில்களில் தடுத்து வைக்கப்பட்டிருப்பது குறித்த நீதிமன்ற ஆய்வு 'ஒரு முறையான மனுவின் வடிவத்தில் இருக்கவேண்டிய அவசியம் இல்லை. மாறாக தடுத்துவைக்கப் பட்டவரிடம் இருந்து பெறப்பட்ட ஒரு கடிதத்தின் மீது சிறப்பான ஒரு சட்ட

வரையறையின் அடிப்படையில் ஆய்வினை மேற்கொள்ளலாம்' எனக் குறிப்பிடுகிறது. ஆனால் எங்கே இவ்வாறு நடந்துள்ளது என்பதைக் குறித்த எவ்வித சான்றையும் அது அளிக்கவில்லை. இத்தகைய உரிமை இருப்பது குறித்துத் தடுத்து வைக்கப்பட்ட அனைவரும் அறிந்திருப்பதை உறுதிப்படுத்த அரசு எந்த முயற்சிகளையும் எடுத்ததாகக் குழு அறிந்திருக்கவில்லை.

380) அரசின் பதில்கள் மேலும் 'தடுத்து வைக்கப்பட்டவர்களுக்கான சட்டபூர்வ பிரதிநிதித்துவம் அவர்களின் விருப்பத்தின் அடிப்படையில் இலவசமாகவே உள்ளது. ஒரு வழக்கறிஞரை வைத்துக்கொள்ள இயலாதவர்கள் அரசின் செலவில் சட்ட உதவி பெறுவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்தச் சட்ட உதவி தடுத்து வைக்கப்பட்ட அனைவருக்கும் பொருந்துகிறதா அல்லது குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு மட்டுமே உரியதா என்பது தெளிவாக இல்லை. எந்த நிலையிலும் இவ்வாறான இலவச சேவை பல்வேறு வகையான தடுப்புக்காவல் மையங்களில் நிலவுகின்ற இறுக்கமாக தன்மை மற்றும் கட்டுப்பாடுகள் ஆகியவற்றோடு சற்றும் பொருந்தக்கூடியதாக இல்லை. 'ஆயுதப்படையினர் மற்றும் காவல்துறை அதிகாரிகள் ஆகியோருக்கு எதிராக பல அடிப்படை உரிமைகள் மனுக்கள், ஆட்கொணர்வு மற்றும் பொதுநல மனுக்கள்' போடப் பட்டுள்ளதாக அரசு கூறுகின்றபோதும், போர் தொடர்பான எந்தவொரு கைதியிடம் இருந்தும் இப்படி ஒரு வெற்றிகரமான ஆட்கொணர்வு மனு குறித்த வழக்கு எதையும் அது சுட்டிக்காட்டவில்லை. அப்படியான எதைப்பற்றியும் குழுவும் அறிந்திருக்கவில்லை.

381) தடுத்துவைக்கப்பட்ட ஒருவர், நீதிமன்ற விசாரணையைப் பெற முயன்றாலும் அவசரகால நிலை விதிகள் மற்றும் பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின் கீழ் நீதி மறுஆய்வு மற்றும் கட்டாயத் தடுப்புக்காவல் ஆகியவை குறித்து உள்ள பிரிவுகளின் காரணமாக தடுப்புக்காவலைச் சரியான முறையில் ஆய்வுக்கு உட்படுத்துவது என்பது நீதிமன்றத்திற்குப் பெரும் கடினமானதாகவே இருக்கிறது.

382) எனவே தன்னிடம் உள்ள தகவல்களின் அடிப்படையில் தடுத்து வைக்கப் பட்டவர்கள் தாங்கள் தடுத்து வைக்கப்பட்டிருப்பதின் சட்டபூர்வத் தன்மை மற்றும் தேவையான நியாயங்கள் ஆகியவற்றை உறுதிசெய்ய ஒரு சிறப்பான நிவாரணம் பெறக்கூடிய நிலையில் இல்லை எனக் குழு முடிவுக்கு வருகிறது.

உ) இலங்கையின் மனித உரிமைகள் ஆணையம் (இ.ம.உ.ஆ)

383) 1996ன் இலங்கையின் மனித உரிமைகள் ஆணையச் சட்டம் எண் 21இன் கீழ் நிறுவப்பட்ட இலங்கை மனித உரிமை ஆணையத்திற்கு மிக விரிவான சட்டபூர்வ அதிகாரங்கள் உள்ளன. அதன்படி தன்னிச்சையாகவோ அல்லது ஒரு புகாரின் அடிப்படையிலோ அடிப்படை உரிமைகள் மீறப்பட்டதைக் குறித்து விசாரிக்க அதற்கு அதிகாரம் உள்ளது. அதனிடம் உள்ள அதிகாரத்தின் மூலம் அது வழங்கக்கூடிய நிவாரணங்கள் என்பவை உண்மை அறிவதை நோக்கியும், தொடர்புடைய அதிகாரிகளிடம் அடுத்து எடுக்கவேண்டிய பரிந்துரைகளை அளிப்பது மற்றும் இணக்கத்திற்கான பேச்சுவார்த்தைகள் மற்றும் இடைத் தொடர்பாளராகச் செயல்படுவது ஆகியவையாகும். மிக மோசமான மனித உரிமை மீறல்கள் குறித்த நிகழ்வுகளில் ஒரு மனுதாரராக நேரடியாக நீதிமன்றத்தை அணுகவோ அல்லது அத்தகையவற்றை அது தொடர்புடைய நீதிமன்றத்திற்கு பரிந்துரைக்கவோ அதற்கு அதிகாரம் இல்லை. ஏனெனில் இதுதொடர்பான நடைமுறை விதிகள் இன்னமும் வரையறுக்கப்படவில்லை.

இருதரப்பினராலும் உலகளாவிய மனித நேய மற்றும் மனித உரிமைச் சட்ட மீறல்கள் பெரு மளவில் நடத்தப்பட்டது என்பதை நம்புவதற்கான நியாயமான அடிப்படை கள் உள்ளன. இதன் நேரடிவிளைவாக பல்லாயிரக்கணக்கான இலங்கை மக்கள் கொல்லப்பட்டனர்.

384) இதன் விளைவாக கடந்த காலங்களில் இதன் பரிந்துரைகள் காவல் துறையினரால் மட்டுமல்ல பிற அரசுத்துறைகள் மற்றும் அதிகாரிகளாலும் பெருமளவில் அலட்சியப்படுத்தப்பட்டுள்ளன. பிற நாடுகளில் இதற்கு நேர்மாறாக மாற்றத்திற்கான நீதி குறித்த செயல்பாடுகளை முன்னெடுப்பதில் தேசிய மனித

உரிமை நிறுவனங்கள் முக்கியப் பங்கை ஆற்றியுள்ளன. 1999ல் தைமூர் லெஸ்தேவில் நடைபெற்ற பொது வாக்கெடுப்பின் போது நடந்த மீறல்களை விசாரித்த இந்தோனேசியத் தேசிய மனித உரிமை ஆணையம் மற்றும் கடந்த கால மற்றும் நிகழ்கால மீறல்களைப் பதிவு செய்துகொண்டு மாற்றத்திற்கான நீதி குறித்த ஒரு கலந்துரையாடலை 2005இல் நடத்திய ஆப்கானிஸ்தான் சுதந்திர மனித உரிமைகள் ஆணையம் ஆகியவை இதற்கான சான்றுகள் ஆகும்.

தங்களது நேசத்திற்கு உரியவர்களை இழந்ததன் மூலமும், மிகமோசமான காயங்கள் காரணமாகவும் இடம்பெயர்தல் மற்றும் வீடு மற்றும் வாழ்வியலை இழந்ததன் காரணமாகவும் இதுபோன்ற பல்வேறு காரணங்களால் இலட்சக் கணக்கான மக்கள் மிக மோசமான துன்பங் களுக்கு ஆளாயினர். போருக்குப் பின் பெரும்பான்மை யானவர்கள் மேலும் பல துன்பங்களுக்கும் அவமானங்களுக்கும் உள்ளாக்கப்பட்டனர்.

385) 2006–2009 காலக்கட்டத்தில் அரசமைப்புச் சட்டக் குழுவின் ஒப்புதலை வேண்டக்கூடிய அரசமைப்புச் சட்டப்பிரிவினை மீறி, இ.ம.உ.ஆ. வின் உறுப்பினர்களை அதிபர் நேரடியாக நியமித்ததன் காரணமாக, இ.ம.உ.ஆ. அரசமைப்புச் சட்டப்படியான அதிகாரம் இல்லாததாக இருந்தது. 2007இல் மனித உரிமைகள் நிறுவனங்களின் உலகளாவிய ஒருங்கிணைப்புக் குழுவின் தரப்பட்டியலில் இ.ம.உ.ஆ., 'அ'விலிருந்து 'ஆ'விற்கு மாற்றப்பட்டது. தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களின் வரையறைகள் (பாரீஸ் கோட்பாடுகள்) குறித்து உலகளவில் ஒப்புக்கொள்ளப்பட்டவற்றை எந்த அளவிற்கு இது பின்பற்றுகிறது என்பதைக் குறித்த ஒரு சிறப்பு ஆய்விற்கு பின்னரே இது நிகழ்ந்தது. ஜூலை 2006இல், காணாமல் போனவர்கள் பற்றிய ஏறத்தாழ இரண்டாயிரம் வழக்குகளில், இ.ம.உ.ஆ. தனது விசாரணையை பாதியில் கைவிட்டது என்பது தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களின் உலகளாவிய ஒருங்கிணைப்புக்குழு குறிப்பிட்ட முக்கியச் சிக்கல்களில் ஒன்றாகும். இலங்கையில் உள்ளதைப்போன்று அவசரகால நிலையில் நடைமுறையில் உள்ள ஓர் அரசின் ஒரு தேசிய மனித உரிமைகள் நிறுவனமானது மிக அதிக அளவிலான கண்காணிப்பு மற்றும் சுதந்திரத்துடன் செயல்படுவது அவசியம்.

386) ஏப்ரல் 2009இல் முந்தைய உறுப்பினர்களின் பணிக்காலம் முடிவடைந்த நிலையில் இ.ம.உ.ஆ. விற்கு புதிய உறுப்பினர்களை நியமிக்க அதிபர் தவறினார். அதிபர் மிகக்குறைந்த கலந்துரையாடலுடன் நியமிக்கும் அதிகாரத்தை வழங்கிய 18ஆவது அரசமைப்புச் சட்டத் திருத்தம் நடைமுறைக்கு வந்தபிறகு, ஒரு புதிய தலைவரையும் 4 ஆணையர்களையும் பிப்ரவரி 2011இல் அதிபர் நியமித்தார்.

387) ஏப்ரல் 2009இல் அதன் பணிக்காலம் முடிவடைவதற்கு முன் போரின் இறுதிக் கட்டங்கள் தொடர்பாக எழுந்த எத்தனை மீறல் குற்றச்சாட்டுகளை முந்தைய ஆணையம் விசாரித்தது என்பது குறித்துக் குழு அறிந்திருக்கவில்லை. சான்றாக, குழு அறிந்தவரையில் ஓமந்தை அல்லது வேறு எந்த முகாம்கள் அல்லது தடுப்புக்காவல் மையங்களிலும் இ.ம.உ.ஆ. இருக்கவில்லை. சட்டப்படி, தனிச்சையாகவோ அல்லது ஒரு புகாரை பெற்றதன் அடிப்படையிலோ போரின் இறுதிக் கட்டங்களில் எழுந்த மீறல்கள் குறித்துக் கவனிக்க இ.ம.உ.ஆ.விற்கு கடமை உள்ளது. தற்போது புதிதாக உருவாக்கப்பட்டுள்ள ஆணையம் அதனை செயல்படுத்துமா என்பதைப் பொறுத்திருந்தே பார்க்கவேண்டும். அவ்வாறு செயல் படுத்தினாலும் அதன் கடந்த கால வரலாறு மற்றும் அனுபவங்களின் அடிப்படையில் அது எந்தளவிற்குச் சுதந்திரம் மற்றும் திறன் குறித்த உலகளாவிய வரையறை களைச் செயல்படுத்துகிறது என்பதைப் பொருத்தே அது கணிக்கப்படும்.

388) குழுவிடம் அளிக்கப்பட்ட க.பா.இ.ஆ.வின் இடைக்கால பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது குறித்த செயல் அறிக்கையில், அரசு கீழ்க்காணுமாறு வாதிடுகிறது.

காணாமல் போனவர்கள் பற்றி க.பா.இ.ஆ. சேகரித்த சான்றுகளை பொருத்தவரையில், காணாமல் போனதாக சொல்லப்படும் பலர், இறுதியாக விடுதலைப்புலிகள் படை அணியினருடன் காணப்பட்டது தெரியவந்துள்ளது. எனவே அப்படியானவர்கள் விடுதலைப்புலிகள் இயக்கப் போராளிகளாக செயல்பட்டதாகவோ அல்லது பாதுகாப்புப் படையினரிடம் அடைக்கலம் பெற

அவர்கள் முயலும் போது விடுதலைப்புலிகளினால் சுடப்பட்டதினாலோ, போரில் இறந்துபோயிருக்க வேண்டுமென அனுமானிக்கலாம்.

389) இந்தக்கூற்றானது எந்தவிதத்திலும் வேறு வகையான சான்றுகளால் உறுதி செய்யப்படாத நிலையில், காணாமல் போன சிலரின் நிலைக்கு அரசேப் பொறுப்பாக இருக்கக்கூடும் என்ற சாத்தியத்தை மூடிமறைக்க முற்படுவதாகவும் உள்ள நிலையில், 'காணாமல் போனவர்கள் குறித்த வழக்குகளை முடிவுக்கு கொண்டுவரும் நோக்கத்தைக் கொண்ட செயல்திட்டத்தின் முக்கிய கூறாக' தனிநபர்களின் உடைமைகள் மற்றும் தொழில்கள் மறுசீரமைப்பு ஆணையம் குறித்த தரவுகளை இலங்கையின் தகவல் தொழில்நுட்ப நிறுவனம் வைத்திருப் பதாக அரசு உறுதிசெய்துள்ளது. இந்த செயல்திட்டம் இ.ம.உ.ஆ. விடம் ஒப்படைக்கப்படும் எனக் கூறுகிறது. இந்த செயல்திட்டத்தின் ஆற்றல் இன்னும் சரிவரத் தெரியாத நிலையில், புதிதாக அமைக்கப்பட்டுள்ள இ.ம.உ.ஆ., காணாமல் போனவர்கள் குறித்தப் பொறுப்பேற்கும் செயல்பாடுகளை முன்னெடுப்பதில் அதற்கு உள்ள ஆற்றல் குறித்துக் குழுவிற்கு முக்கியச் சந்தேகங்கள் உள்ளன. ஆணையர்கள் 'சமூகத்திற்கு சேவை புரியும் எண்ணத்துடன் சுதந்திரமாக செயல்பட வேண்டும்' என்றும் 'ஆணையத்தை நிர்வகிக்கும் சட்டத்தில் ஒரு திருத்தத்தைக் கொண்டுவராமல் ஆணையத்தைச் சிறப்பாகச் செயல்பட வைக்க இயலாது. எனவே இது குறித்து அரசிடம் ஒரு கோரிக்கை வைக்க ஒரு மனமாக ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது' என்றும் அதிபர் கூறியதை ஆணையர்களே அங்கீரித் துள்ளதைக் குழுக் குறிக்கிறது.

390) தடுத்து வைக்கப்பட்டவர்களைப் பொருத்தவரையில் இ.ம.உ.ஆ. வின் தாய்ச்சட்டம், தடுத்து வைக்கப்பட்டவர்களின் நலனை கண்காணிக்கவும், தடுத்து வைக்கப்பட்டுள்ள இடங்களைச் சோதிக்கவும் அதிகாரம் வழங்குகிறது. உண்மையில் அவசரகால நிலை அதிகாரங்கள் உட்பட எந்தச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப் பட்டாலும், 48 மணிநேரத்திற்குள், தடுத்து வைக்கப்பட்டது குறித்த விவரங் களையும் இடத்தையும் ஆணையத்திற்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறு செய்யத்தவறும் எந்தவொரு அதிகாரியும் குற்றவியல் சட்டத்தின் கீழ் குற்றம் புரிந்தவராகிறார். அவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ள இடங்களுக்குள் நுழையவும் ஆராயவும் அதற்கு அதிகாரம் உள்ளது. (துணைப்பிரிவுகள் 11 (ஈ) மற்றும் 28) போரின் இறுதிக் கட்டங்களின் போது தடுத்து வைக்கப்பட்டவர்கள் குறித்து இவ்வாறான எந்த அறிவிப்புகளும் இ.ம.உ.ஆ.விடம் அறிவிக்கப்பட்டதுப் பற்றி தெளிவற்று உள்ளது. இந்தவிஷயத்தில் புது ஆணையம் தனது அதிகாரத்தை நிச்சயமாகச் செயல்படுத்தவேண்டும். கடந்த காலத்தில் இவ்வாறு அறிவிக்க வேண்டிய கடமை தொடர்ந்து தவறி வந்துள்ளது. மேலும், அவ்வாறு அறிவிக்கப் படாததற்காக எவரும் தண்டிக்கப்படவுமில்லை. இத்தகையச் சூழலில், இந்த அதிகாரத்தை நடைமுறைப்படுத்துவது என்பது அரசியல் விருப்பம் குறித்த ஒரு முக்கிய அறிகுறியாகும்.

தேசியப் பாதுகாப்பிற்கும், ஆயுதத் தாக்குதல்களுக்கு எதிராகத் தன்னைப் பாதுகாத்துக்கொள்வதற்கும் உலகளாவியச் சட்டத்தின் கீழ் அரசுக்கு உள்ள உரிமையை அங்கீகரிக்கும் அதே நேரத்தில், அந்த நியாயமான காரணங் களுக்காக எடுக்கப்பட்ட அனைத்து நடவடிக்கை களும் உலகளாவியச் சட்டத்தின் தேவை களுக்கு உட்பட்டு இருக்க வேண்டும் என்பதையும் குழு வலியுறுத்துகிறது.

ஊ) இறப்புச்சான்றிதழ் நடைமுறைகள்

391) போரின் இறுதி மாதங்களிலும் அப்போதிலிருந்தும் தங்கள் நேசத்திற் குரியவர்களுக்கு என்ன ஆயிற்று என்ற தகவலைப் பெறுவதிலிருந்து பெரும் எண்ணிக்கையிலான மக்கள் தடுக்கப்பட்டுள்ளனர். இதனால் அவர்கள் ஒரு நிச்சயமற்ற நிலையிலேயே வாழ்கின்றனர். வாரிசு குறித்த சிக்கல்கள், நில உரிமைகள் மற்றும் மறு திருமணம் போன்ற, பாதிக்கப்பட்ட உறவினர்களின் நிலையை சார்ந்த நடைமுறை சிக்கல்கள், இறப்புச் சான்றிதழ்கள் இல்லாமல் தீர்க்கப்படுவது என்பது மிகவும் கடினமானது. போரின் இறுதிக் கட்டங்களில் இலட்சக்கணக்கான மக்கள் இறந்தது மற்றும் காணாமல் போயிருக்கக்கூடிய சூழலில் பிறப்பு மற்றும் இறப்புப் பதிவுச் சட்டம் 1954இன் கீழ் இருக்கக்கூடிய இறப்புச் சான்றிதழ் தொடர்பான வழமையான நடைமுறைகளை பின்பற்றுவதுப்

பொருத்தமற்று இருந்தது. 1954 சட்டம் இது குறித்து தெரிவிப்பதற்கான கடினமான காலவரையறைகளையும் சிக்கலான மற்றும் முறையான நடைமுறைகளையும் கொண்டுள்ளது. இதில் சாவிற்கான காரணம் புரியாதபோதோ, அதில் ஒரு குற்றம் இருக்கலாம் என்ற சூழலிலோ, மாவட்ட நீதிபதியின் விசாரணை தேவை என்பதும் ஒன்றாகும். போரின் இறுதிக்கட்டங்களில் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் பாதிக்கப்பட்ட உண்மையான சூழலில் இந்தத் தேவைகள் அதற்காக அனுசரிக்கப் படவில்லை.

இலங்கையில் பயன்படுத்தப்பட்டவை உட்பட சில நவீன வகைப் போர்முறை களுக்கு, உலகளாவிய மனித நேயச் சட்டங்கள் பொருந்தாது என்ற கருத்தைக் குழு உறுதியாக நிராகரிக்கிறது. மாறாக, ஆயுதப்போர் சூழல்களில் பொது மக்களைப் பாதுகாப்ப தற்குத் தேவையான பாதுகாப்பு நடவடிக்கை களை அதிகரிப்பதற்கு விவாதங்கள் நடைபெற வேண்டும் என அது கருதுகிறது.

392) டிசம்பர் 2010இல் இறப்புச்சான்றிதழ்கள் அளிப்பதற்காக நடைமுறைகளை எளிமைப்படுத்துவதற்கென இறப்புகளைப் பதிவுசெய்தல் (தற்காலிகப் பிரிவுகள்) சட்டம் எண் 19-2010 நடைமுறைப்படுத்தப்பட்டது. 'பயங்கரவாத அல்லது சட்டவிரோத நடவடிக்கைகள் அல்லது சமூகத்தில் நிலவிய கலவரச்சூழல் ஆகியவற்றின் காரணமாக காணாமல் போனதாக தெரிவிக்கப்பட்ட நபர்களின் சாவுகளைப் பதிவு செய்வதற்கு' என்றே இச்சட்டம் முக்கியமாக நிறைவேற்றப் பட்டதாகக் கூறப்பட்டது. இச்சட்டம் மூன்று ஆண்டுகளாக நடைமுறையில் உள்ளது. எந்த வழக்கிலும், குறைந்தது ஓராண்டாகக் காணாமல் போயுள்ள அல்லது எவ்விதத் தகவலும் அற்ற நிலையில் உள்ள எந்தவொரு நபரையும், அவர் காணாமல் போனது என்பது மேற்குறிப்பிட்ட நிகழ்வுகளின் காரணமாக இருப்பின், பதிவாளர் நாயகம் அல்லது தொடர்புடைய மாவட்டத்தின் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் ஆகியோர் இறப்புச்சான்றிதழ் அளிப்பதற்கான அதிகாரத்தை இச்சட்டம் வழங்குகிறது.

393) 'சமூகத்தில் நிலவிய கலவரச்சூழல்' எனச் சட்டம் குறிப்பிடுவது, போரின் இறுதிக் கட்டங்களையும் உள்ளடக்கியதா என்பதும் அல்லது அரசின் கைகளில் காணாமல் போன நபர்களையும் உள்ளடக்கியதா என்பதும் தெளிவாக இல்லை. அவற்றையும் உள்ளடக்கியது தான் எனக் குழு கருதுகிறது. ஏனெனில் அதற்கு மாறாக இதைப் புரிந்துகொள்வது என்பது அடிப்படையில் ஏற்க இயலாத ஒன்றாகும். அத்துடன், பாதிக்கப்பட்ட பகுதிகளில் இந்த புதிய நடைமுறை குறித்து அரசு எந்த அளவிற்கு மக்களிடையே செய்தியைச் சேர்த்துள்ளது என்பதும், இதன் நேரடியான நடைமுறைப்பலன் எந்த அளவிற்கு உள்ளது என்பதும் குழுவிற்குத் தெளிவாக இல்லை.

394) வடக்கு மற்றும் கிழக்கில் தங்கள் உறவினர்களை காணவில்லை என்று பெரும் எண்ணிக்கையிலான பாதிக்கப்பட்டவர்கள் க.பா.இ.ஆ. முன் சான்றுகளை அளித்தனர். ஆனால் குழுவிடம் அளித்த எழுத்துபூர்வ விளக்கங்களில் அரசு 'இந்த நிலையில் க. பா. இ. ஆ. வின் அறிக்கையும் பரிந்துரைகளும் வெளியிடப்படும் வரை 2010 சட்டத்தின் பிரிவுகளை நடைமுறைப்படுத்தும் நிலையில் நாங்கள் இல்லை' என குறிப்பிட்டுள்ளது. குழுவின் பார்வையில் இறப்பு சான்றிதழ் பெறுவதற்கு தகுதியான பாதிக்கப்பட்டவர்கள் க. பா. இ. ஆ. வின் செயல்பாடுகள் முடியும் வரையில் காத்திருக்கவேண்டும் என்பது, குறிப்பாக க.பா.இ.ஆ.வின் அறிக்கை வெளிப்படையாக அறிவிக்கப்படும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லாத நிலையில், தேவையற்றதும் முறையற்றதும் ஆகும்.

395) உறவினர் ஒருவர் இறப்புச்சான்றிதழை அளிக்கக் கோரும் நிலையில் துரிதமாக அதனை அளிப்பதன் முக்கியத்துவத்தை ஏற்றுக்கொள்ளும் அதே வேளையில், பிறநாடுகளின் அனுபவங்களின் அடிப்படையில் சாவின் சூழல்கள் குறித்த உண்மைகளை மூடி மறைக்கவோ அல்லது கெடுக்கவோ இறப்புச் சான்றிதழ் வழங்குவது என்பது பயன்படுத்தப்படக் கூடாது என்பதையும் குழு வலியுறுத்துகிறது. ஒரு தனிநபரின் சாவு நேர்ந்த சூழல் குறித்த நேர்மையான உலகளாவிய வரையறைகளுக்கு உட்பட்ட விசாரணைக்கு, நிர்வாக நடைமுறையைத் தொடர்ந்து அளிக்கப்படும் இறப்புச்சான்றிதழ், மாற்றாக இருக்கமுடியாது. இறப்புச் சான்றிதழை ஓர் உறவினர் ஏற்றுக்கொள்வது என்பது அது குறித்த

எந்தவொரு சட்டபூர்வ மேல்நடவடிக்கையையும் தடுப்பதாகவோ, அந்தத் தனி நபரை ஓர் இறுக்கமான சட்ட நிலையில் நிறுத்தி வைப்பதாகவோ இருக்கக்கூடாது என்பதை உறுதி செய்வது முக்கியமானது.

எ) முடிவுகள்

396) இந்த அறிக்கையில் விளக்கப்பட்டுள்ளது உள்ளிட்ட உலகளாவிய மனித நேய மற்றும் மனித உரிமைச் சட்ட மீறல்கள் குறித்த நம்பத்தகுந்தக் குற்றச் சாட்டுகளை விசாரிக்கவும், தேவையெனில் தண்டனை அளிக்கவும், இலங்கை அரசுக்கு கடப்பாடு உள்ளது என உலகளாவியச் சட்டம் மற்றும் உள்நாட்டுச் சட்டம் ஆகிய இரண்டுமே கோருகின்றன. இராணுவ ரீதியாகத் தோற்கடிக்கப்பட்ட கிளர்ச்சி உள்ளிட்ட பிற நாட்டு அனுபவங்கள் இலங்கை போன்ற நாடுகளில், உண்மை, நீதி மற்றும் நிவாரணங்கள் குறித்தப் பொறுப்பேற்கும் நடவடிக்கை களை அடைவதற்கு மாற்றத்திற்கான நீதிச் செயல்பாடுகள் எவ்வாறு திறமையாக வடிக்கப்படவேண்டும் என்பது குறித்து முக்கியமான ஒப்பீட்டு வழிகாட்டு நெறிமுறைகளை வழங்கியுள்ளன.

397) நிவாரணத்திற்கான நீதி என்ற கோட்பாட்டையே இலங்கை அரசு பின்பற்றுகிறது. அதன் விளைவாகப் பொறுப்பேற்பது குறித்த சிக்கல்கள் மீது முழுமையற்ற அரைகுறையான அணுகுமுறையே நிலவுகிறது. இந்த அணுகு முறையின் மூலம் 'பயங்கரவாதத்தில்'இருந்து தனது மக்களைக் காக்கத் தவறிய கடந்த கால அரசுகளின் அரசியல் பொறுப்பை ஆராயவும், எஞ்சியுள்ள சில விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்களை மறுவாழ்வின் மூலம் கையாளவும், சில குறைந்த எண்ணிக்கையிலான வழக்குகளைக் குற்றவியல் விசாரணைகள் மூலம் கையாளவும் க.பா.இ.ஆ.வை அது பயன்படுத்துகிறது. இந்த அறிக்கையில் பட்டியலிடப்பட்டுள்ள நம்பத்தகுந்த குற்றச்சாட்டுகள் மற்றும் பிற செயல்கள் நிரூபிக்கப்பட்டால், உலகளாவியச் சட்டத்தை மிக மோசமாக மீறியதாக அமையும். ஆனால் இவற்றில் இலங்கை அரசின் செயல்களை ஆராய எந்த முன்னெடுப்புகளும் செய்யப்படவில்லை. அத்துடன், பெரும் அளவிலான பொதுமக்கள் சாவதற்குக் காரணமாய் இருக்கக்கூடிய அரசின் கொள்கை முடிவுகள் மற்றும் அமைப்புச் சார்ந்த நடைமுறைகள் ஆகியவற்றை நேர்மையாக விசாரிப்பதற்கான எந்தத் திட்டமும் முன்வைக்கப்படவில்லை. அத்துடன், போருக்கு அடிப்படையான காரணமாக இருக்கக்கூடியவை குறித்தும் எந்த ஓர் ஆய்வும் மேற்கொள்ளப் படவில்லை.

398) போரின் இறுதிக் கட்டங்களில் நிகழ்ந்ததாகக் கூறப்படும் மீறல்கள் குறித்து பயன்தரத்தக்க மற்றும் பாகுபாடற்றப் பொறுப்பேற்கும் நடவடிக்கையை மேற்கொள்ள இலங்கையின் உள்நாட்டுச் செயல்திட்டங்கள் எவையும் போது மானதாக இல்லை. குறிப்பாக :

(அ) க. பா. இ. ஆ., அதன் கருத்தாக்கத்திலும் நடைமுறையிலும் ஆழமானத் தவறுகளை உடையாதாகவே உள்ளது. கருத்தாக்கத்தில் அது தவறாக உள்ளது ஏனெனில் பொறுப்பேற்பது குறித்த எவ்வித உறுதிப்பாடும் இன்றி அது கட்டமைக்கப்பட்டுள்ளது. நடைமுறையில் அது தவறாக உள்ளது. ஏனெனில் சுதந்திரம் மற்றும் பாகுபாடற்ற தன்மை, பாதிக்கப்பட்டவர்களை நடத்தும் முறை, சாட்சிகளின் பாதுகாப்பு அல்லது வெளிப்படையான தன்மை ஆகிய எவற்றிலும் உலகளாவிய வரையறைகளுக்கு அது ஈடுசெய்யவில்லை. சுருக்கமாகப் பொறுப்பேற்கும் நடைமுறைகள் குறித்து அது உலகளாவிய வரையறைகளுக்கு ஈடுசெய்யவில்லை. அதனால் பொறுப்பேற்கும் நடைமுறைகள் குறித்த இலங்கை அதிபர் மற்றும் செயலாளர் நாயகத்தின் கூட்டுக் கடப்பாட்டினை க.பா.இ.ஆ. வினால் நிறைவேற்ற இயலாது.

(ஆ) உரிமைகள் மீறப்பட்டவை குறித்துக் குறிப்பாக அவற்றைச் செய்தவர்கள்



போர் முடிந்து ஏறத்தாழ இரண்டு ஆண்டு களுக்குப் பிறகு இலங்கை யின் சிங்கள மற்றும் தமிழ் மக்களுக்கு இடையே நிலவக்கூடிய தேசிய இனச் சிக்கலின் வேர்க் காரணங்கள் இன்னமும் பெருமளவில் கவனிக்கப் படாமல் இருப்பதோடு, மனித உரிமை மீறல்களும் தொடர்கின்றன. அரசின் பிரதிநிதிகளால் அல்லது அரசு ஆதரவு பெற்ற இராணுவ ஒட்டுக்குழுக் களால் இத்தகைய நடவடிக்கைகள் நடத்தப் படுவதாக தொடர்ந்து அறிக்கைகள் வருகின்றன.

விசாரணையின்றித் தன்னிச்சையாகத் தடுப்புக்காவலில் வைப்பது, கடத்தல்கள் மற்றும் காணாமல் போதல்கள், கொலைகள், ஊடகத்தினரின் மீதான தாக்குதல் மற்றும் பிற அச்சுறுத்தும் நடவடிக்கைகள் ஆகியவை இதில் அடங்கும்.



அரசு அதிகாரிகளாக இருப்பின் நேர்மையான உடனடியான மற்றும் பாகுபாடற்ற நீதியை வழங்குவதில் இலங்கையின் குற்றவியல் நீதி அமைப்பு அண்மை ஆண்டுகளில் மிகவும் வலுவிழந்து போய் உள்ளது. இத்தகைய விசாரணைகள் மற்றும் தண்டனைகளை மேற்கொள்வதற்கு அரசியல் விருப்பம் இல்லாதது தெளிவாகத் தெரிகிறது. அத்துடன், தலைமை வழக்கறிஞராக அட்டர்னி ஜெனரலின் சுதந்திரம் குறைக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர்கள் சார்பாகத் தலையிடுவதற்கு நீதி மற்றும் சட்டத்துறை அதிகாரிகளிடம் நிலவக்கூடிய தயக்கம் மற்றும் மிக பெரிய அளவிலான அவசரகாலநிலை சட்டப்பிரிவுகள் ஆகியவை சட்டத்திலிருந்து விலக்கு அளிக்கப்படும் பண்பாட்டை ஊக்குவித்துள்ளது. இன்றுவரையில் போரின் இறுதிக் கட்டங்கள் குறித்துப் பொறுப்பேற்கக் குற்றவியல் நீதி அமைப்பு முன்வரவில்லை.

(இ) சட்டப்படி தடுப்புக்காவலில் வைக்கப்பட்டவர்கள் உள்ளிட்ட முக்கியமான விசாரணைகளை மேற்கொள்வதற்கான அதிகாரங்கள் இலங்கையின் மனித உரிமைகள் ஆணையத்திற்கு உள்ளன. ஆனால் பாரீஸ் கோட்பாடுகளை கடைபிடிக்காதது போன்ற இ.ம.உ.ஆ. வின் கடந்த காலத்தரமற்ற செயல்பாடுகள் மற்றும் அதன் சுருக்கமான செயல்வரையறைகள், குறிப்பாக, காணாமல் போனவர்கள் பற்றிப் பொறுப்பேற்பதில், முன்னெடுப்பதில் அண்மையில் மீண்டும் உருவாக்கப்பட்டுள்ள ஆணையத்தின் திறன் குறித்துக் குழுவிற்கு பெருத்த சந்தேகங்கள் உள்ளன. தனது சுதந்திரம் மற்றும் திறனை உறுதி செய்ய அது வேகமாகச் செயல்படவேண்டும்.

(ஈ) தங்களது குடும்பத்தினரின் வாழ்வை மறு சீரமைப்புச் செய்ய முற்படக் கூடிய பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்களின் மனித நேயத் தேவைகளை நிறைவேற்றுவதற்கான ஒரு முக்கிய தேவையாக இறப்புச் சான்றிதழ் வழங்குவது இருந்தபோதும், போருக்குப்பின் இறப்புச் சான்றிதழ்கள் வழங்கும் நடைமுறை மிகவும் மெதுவான மற்றும் சிக்கலான ஒன்றாக மாறிப்போய் உள்ளது. இந்தச் சான்றிதழ்களைப் பெறுவதற்கான நடைமுறைகளை எளிமையாக்குவதற்கு என வடிவமைக்கப்பட்ட அண்மையச் சட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்ட பின்பும் இந்த சிரமங்கள் நீடிக்கின்றன. இவ்வாறான சான்றிதழ்களைக் கோரும் உறவினர்களுக்கு வேகமாகவும், அலுவலக நடைமுறைகளைச் சிக்கல் ஆக்காமலும், வருங்காலத்தில் உறவினர்கள் சட்டபூர்வ நடவடிக்கைகளை எடுப்பதற்குத் தடையில்லாமலும், நடந்த சாவைக் குறித்து விசாரிப்பதற்கு அரசுக்கு சுதந்திர மானப் பொறுப்பிற்கு இடையூறு இன்றியும் சான்றிதழ்களை வழங்குவதற்கான ஒரு நடைமுறை உருவாக்கப்படவேண்டும்.

399) குழுவின் பார்வையில் இலங்கையின் பொறுப்பேற்கும் சிக்கல்களைக் கையாள இந்த நான்கு கூறுகள் இருப்பது முக்கியமான தடைகளாகும். அடுத்த அத்தியாயத்தில் பொறுப்பேற்பதற்கு இருக்கக்கூடிய இன்னும் அதிகமான தடைகளை உருவாக்கக்கூடிய பரவலான கூறுகள் குறித்துக் குழு விவரிக்கும். ●



6 பொறுப்பேற்பதற்கான பிற தடைகள்

இந்தச் சூழலில் வன்னியில் நடைபெற்ற ஆயுதப்போரில் பாதிக்கப்பட்டவர்களும் உயிர் பிழைத்தவர்களும் இயல்பான வாழ்க்கைக்குத் திரும்ப இயலவில்லை. இந்த வன்முறைகளும் அதனோடு இருக்கக்கூடிய அச்சச் சூழலும் முடிவுக்கு வருவது என்பது பொறுப்பேற்பதற்கு இணக்கமான ஒரு சூழலை உருவாக்க முக்கியத் தேவையாகும்.



பொறுப்பேற்பதற்கு அச்சமும் மௌனமுமே எதிரிகளாகும். கடந்த காலத்தில் நிகழ்ந்த மிகமோசமான மனித உரிமை மீறல்களைக் கையாள்வது என்பது ஒரு தேசத்திற்கு மிகக் கடினமான ஒன்றாகும். அதிலும் அத்தகைய மீறல்கள் தற்காலத்திலும் தொடர்ந்து கொண்டிருக்கும்போது இது மேலும் கடினமாகிறது. பொறுப்பேற்பதை அடைவதற்கான ஒரு நடைமுறையானது, சுதந்திரமான நிறுவனங்கள் மற்றும் ஆயுதப்போருக்குத் தூண்டிய மற்றும் அதற்குத் தீனிபோட்ட துயரங்கள் மற்றும் என்ன நடந்தது என்பவை குறித்து ஒரு வெளிப்படையான விவாதத்தை அனுமதிக்கக்கூடிய சூழல் ஆகியவை அவசியமாகும். மிக ஆழமான வேறுபட்ட கருத்துக்களை உடைய பொதுமக்களிடையே வெளிப்படையாக நிலவக்கூடிய வெறுப்பு மற்றும் இறுக்கத்திலிருந்து ஒரு வெளிப்படையான விவாதத்திற்கு முன்னேறுவது என்பது எங்குமே எளிதானதாக இருந்ததில்லை. இலங்கையில் தற்காலத்தில் பல சிக்கல்கள் நிலவுகின்றன என்பதையும் அவை கவனத்தில் கொள்ளாமல் விடப்பட்டால் பொறுப்பேற்பதற்கான நடவடிக்கைகளைத் தொடர்ந்து கெடுப்பதோடு, இணக்கமான சூழல் மற்றும் நீடித்த அமைதிக்கான சாத்தியங்களையும் குறைக்கும் எனக் குழு கருதுகிறது. இத்தகைய சில சிக்கல்கள் இந்தப் பகுதியில் சுருக்கமாக விவரிக்கப்பட்டுள்ளது.

அ) வெற்றி மனப்பான்மை மற்றும் மறுதலிப்பு

401) ஏறத்தாழ 30 ஆண்டுகளாக நிகழ்ந்த ஆயுதப்போரை தொடர்ந்து விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாகத் தோற்கடித்தது என்பது அரசு மற்றும் விடுதலைப் புலிகளின் அழிவுத்திட்டங்களினால் பாதிக்கப்பட்ட தமிழர்கள் மற்றும் பிற சமூகத்தின் உறுப்பினர்கள் உள்ளிட்ட இலங்கையின் பெரும் எண்ணிக்கையிலான குடிமக்கள் இடையே ஒரு நிம்மதியான மனநிலையை உருவாக்கியுள்ளது என்பதை புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் தனது இராணுவ வெற்றியை ஒரு வெற்றி மனப்பான்மையை உருவாக்கிப் பரப்புவதற்கும், 'பயங்கரவாதத்தை' தோற்கடிக்க, தான் எடுத்த நடவடிக்கைகள் மற்றும் தனக்குள்ள உறுதி எனத் தான் கோருபவற்றை கொண்டாடவும் அது பயன்படுத்தியுள்ளது. இந்த நடவடிக்கையானது சிங்களப் பெரும்பான்மை மனப்பான்மையைச் சார்ந்ததாகவும், விடுதலைப்புலிகளின் இந்தத் தோல்வி, தமிழர்களின் அனைத்து நியாயமான அரசியல் விருப்பங்களின் தோல்வியாக முன்னிறுத்தப்படுகிறது.

402) மேலும் தனது இராணுவத் திட்டங்களின் விளைவாக நேர்ந்த மனித இழப்புகளை அரசு மறுக்கிறது. வன்னியில் 'பொதுமக்களுக்கு எவ்விதப் பாதிப்பும் ஏற்படுத்தாத' கொள்கையினால் வழிநடத்தப்பட்ட 'மனித நேய மீட்பு நடவடிக்கையை'யே தான் மேற்கொண்டதாக அது கூறுகிறது. மேலும் போர் முடிந்ததிலிருந்து மாறுபட்ட ஆய்வையும் கருத்துக்களையும் உடையவர்கள், உலகளாவிய மனித நேய மற்றும் மனித உரிமைச் சட்டங்கள் மிக மோசமாக மீறப்பட்டதாக குற்றம் சாட்டுபவர்களும் விடுதலைப்புலிகளின் அனுதாபிகளினால் தூண்டிவிடப்பட்டுத் தவறாக வழிநடத்தப்பட்டு ஒரு முன்தீர்மானத்துடன் இருப்பதாக அரசு கருதுகிறது.

403) விடுதலைப்புலிகளின் தோல்விக்கு இட்டுச்சென்ற நிகழ்வுகள் மற்றும் உடனடியாக அதனைத் தொடர்ந்த நிகழ்வுகள் ஆகியவை குறித்தக் குழுவின் பார்வையானது அடிப்படையிலேயே அரசின் பார்வையில் இருந்து மாறுபட்டு உள்ளது என்பதை இந்த அறிக்கை தெளிவுபடுத்துகிறது. வன்னியில் இலட்சக்கணக்கான உயிர் இழந்ததை மறுப்பதன் மூலம், அங்கு கொல்லப்பட்ட இலங்கையர்கள், பெரும்பாலும் தமிழர்களின் உயிர்கள், சமூகத்திற்கு எவ்வித மதிப்பும் அற்றது என்ற செய்தியையே அரசு அளிக்கிறது. தனது இராணுவ நடவடிக்கைகள் இலட்சக்கணக்கான சாவுகளை ஏற்படுத்தியது என்பதை மறுப்பதன் மூலமும், தன்னுடைய அந்த கருத்தைக் கேள்விக்குள்ளாக்குபவர்களை அச்சுறுத்துவது

மற்றும் மிரட்டுவதின் மூலமும், அண்மைய கடந்தகால மற்றும் வருங்காலத் தேவைகள் குறித்த ஒரு முக்கியமான தேசிய விவாதத்தைத் திறப்பதற்கான வாய்ப்பு அனைத்தையும் அரசு திறம்பட மூடிவிட்டது. தீவிரவாதமும் வெற்றி மனப்பான்மையும் முக்கியமான தடைகள் என்பதை அங்கீகரிக்கும் அதே வேளையில், வருங்காலத்தில் இந்தத் தடைகளை தகர்த்து கடந்தகாலம் குறித்த ஒரு நுட்பமான ஆய்வினை இலங்கையர்கள் தொடங்கவேண்டும் என்பதில் குழு தெளிவாக உள்ளது.

ஆ) இன அடிப்படையிலான ஒதுக்குதல் கொள்கைகள்

404) இன அடிப்படையிலான அரசியல், சமூக மற்றும் பொருளாதார ஒதுக்குதல், அவை அவ்வாறு புரிந்துகொள்ளப்பட்டனவோ அல்லது உண்மையாகவே நிலவுகிறதோ, அதுதான் இலங்கைச் சிக்கலின் இதயமாக உள்ளது. தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் உட்பட அனைத்துச் சமூகத்தினரையும் முழுக் குடிமக்களாகக் கருதி அவர்களின் உரிமைகளை அங்கீகரிப்பதும் ஏற்றுக்கொள்வதுமே இலங்கையின் இணக்கமான சூழல் ஏற்படுவதற்கான தேவையாக உள்ளது. தங்களது ஏமாற்றங் களையும் துயரங்களையும் வெளிப்படுத்துவதற்கான வடிவமாக வன்முறை மீண்டும் எழாமல் தவிர்ப்பதற்கு எதிர்கால கொள்கைகள் அனைவரையும் உள்ளடக்கியதாக இருக்கவேண்டும்.

405) அரசின் பார்வையில் நிலம் மற்றும் மொழி சார்ந்தவை உட்படப் பல முக்கிய சிக்கல்களை க. பா. இ. ஆ. வின் இடைக்கால பரிந்துரைகள் கவனத்தில் கொண்டுள்ளன. அவற்றில், 'நிலக் கச்சேரி' அமைப்பும், இலங்கையின் மும்மொழிக்கொள்கையின் பகுதியாக மொழி உரிமைகளை உறுதிப்படுத்துவதும் உள்ளன. ஆனால் இவை தமிழர்களையும் முஸ்லிம்கள் உட்படப் பிறரையும் அன்னியப்படுத்தக்கூடிய அரசின் அண்மைக்காலக் கொள்கைகளுக்கு முரணான தோற்றம் அளிக்கின்றன. சான்றாக, தேசிய கீதம் சிங்களத்தில் மட்டுமே பாடப் படவேண்டும் என்ற கொள்கையானது அதன் அதிகாரபூர்வ நிலைக்கு நேர்மாறாக நின்று, தமிழ்பேசும் மக்களை ஒதுக்கும் செய்தியை அளிக்கிறது. எனவே அக்கொள்கை திரும்பப்பெறப்படவேண்டும். இத்தகைய பாகுபாடுகள், அனைத்துக் குடிமக்களின் உரிமைகள் மற்றும் மதிப்பினைக் கவனத்தில் கொள்ளாததாகவும், ஒதுக்கும் மனநிலை தொடர்வதைக் காட்டுவதாகவுமே உள்ளன. அடிப்படையில் பாகுபடுத்தும் செயல்களை உள்ளடக்கிய அண்மைக்கால முடிவுகளை மறுஆய்வு செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

406) அனைவரையும் இணைத்துக்கொள்வதற்கான கொள்கைகள் குறித்த பிற தேவையான நடவடிக்கைகள் என்பவை உயர் பாதுகாப்பு வலயங்களைக் கலைப்பது, நிலம் மற்றும் வீடுகளை விகிதாச்சார அடிப்படையில் ஒதுக்குவது ஆகியவற்றை உள்ளடக்கியது. பாதுகாப்புத்துறை உட்பட அனைத்துத் துறைகளிலும் அரசுப் பணிகளில் தமிழ் பேசுபவர்கள் எளிதாக நுழைவதற்குரிய வழிமுறைகள் வளர்க்கப் படவேண்டும். காவல் துறையில் வடக்கு மற்றும் கிழக்கைச் சேர்ந்த தமிழ்ச் சமூகத்தினர் அண்மையில் இணைத்துக்கொள்ளப்பட்டது என்பது ஒரு நேர்மறையான நடவடிக்கையாக பார்க்கப்படலாம் என்றபோதும், போரின் போது இராணுவ ஒட்டுக்குழுக்களின் உறுப்பினர்களில் மிகமோசமான மனித உரிமை மீறல்களை புரிந்தவர்களை விலக்கி வைப்பதற்கு பெரும் கவனம் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். ஆயுதப்படையில் தமிழர்களை இணைத்துக்கொள்வதைத் தொடங்குவதும் முக்கியமானது. இனப் போராக காணப்படும் ஒன்றில் வெற்றிபெற்றவர்கள் பக்கத்தை பிரதிநிதிப்படுத்துவதாக ஒற்றை இனத்தை சேர்ந்த இராணுவம் இருப்பது என்பது நாட்டின் நிர்வாகத்தில் பெரிதும் வெளிப்படையான மற்றும் முக்கியப் பங்கை போர் முடிந்து இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகும் தொடர்வது என்பதும், வருங்காலத்தில் மீண்டும் இணக்கமற்ற ஒரு சூழல் எழுவதற்கே வழிவகுக்கும்.

கடந்த பல்லாண்டுகளாக இன்றுவரையிலும் நடத்தப்பட்ட வலுக் கட்டாயமாக காணாமல் போக்கப்படும் செயல்கள் குறித்து இலங்கையின் மோசமான பதிவுகள் உலகளாவிய அமைப்பு களிடம் இருந்து ஆழமான அக்கறையை வெளிப் படுத்தியுள்ளதோடு, உடனடியான கவனத்தை யும் கோரியுள்ளன.

சுதந்திரம் மற்றும் பாகுபாடற்றத் தன்மை ஆகியவை குறித்த உலகளாவிய வரையறைகளோடு பொருத்தி நிற்க க. பா. இ. ஆ. தவறி விட்டது. ஆணையம் அமைக்கப்பட்டுள்ள முறையும் அதன் உறுப்பினர்கள் சிலரிடம் ஆழமாக வேரூன்றியுள்ள முரணான நலன்களும் ஆணையத்தின் நிலையை சமரசப்படுத்தி யுள்ளன.



407) வடக்கு மற்றும் கிழக்கில் பொருளாதார வளர்ச்சிப் பணிகளில் அரசு கவனம் செலுத்துவது முக்கியமானது. அத்துடன், ஒட்டுமொத்தமாக நாட்டிற்கும் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியத்துவம் பெற்ற ஒன்றாகும். ஆனால் போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வை மீண்டும் கட்டி எழுப்புவதில் கட்டமைப்பு ரீதியான ஆதரவு தேவை என்றபோதும் உண்மை நீதி மற்றும் நிவாரணத்திற்கு இந்த நடவடிக்கைகள் எந்த வகையிலும் மாற்று ஆகமுடியாது.

இ) போர்க்கால நடவடிக்கைகள் தொடர்வது

408) விடுதலைப்புலிகளைப் தோற்கடிப்பதற்கான தனது திட்டங்களின் பகுதியாக அரசு அறிமுகப்படுத்திய பல நடவடிக்கைகள் இன்றும் தொடர்கின்றன. அனைத்து இலங்கையர்களும், குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கில் வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய தமிழர்கள், முழுக் குடிமக்களாகத் தங்களது வாழ்வை நடத்தவும், நடத்துவதற்கான சூழலுக்குப் பெரும் தடையாகவும் அவர்களது உரிமைகள் மீது விதிக்கப்பட்ட தடையாக அவை இருக்கின்றன.

409) அவசரகால நிலை விதிகள், பயங்கரவாதத் தடுப்புச்சட்டம் ஆகியவை தொடர்வது மற்றும் உயர் பாதுகாப்பு வலயங்கள் நீடிப்பது ஆகியவை ஒட்டுமொத்தமாக இராணுவமயப்படுத்தப்பட்ட அசாதாரணமான சமூகச் சூழல் உருவாகியுள்ள நிலையில், அது ஏற்படுத்தும் மோசமான பாதிப்புகள் குறித்து ஏற்கனவே குறிப்பிடப் பட்டுள்ளது. தேசியப் பாதுகாப்பு உண்மையிலேயே அச்சுறுத்தலுக்கு உள்ளாகி இருக்கும் நிலையில் மட்டுமே, அதிலும் குறுகிய காலங்களுக்கு மட்டுமே, இந்த நடவடிக்கைகள் நியாயப்படுத்தப்படலாம். நீதி மற்றும் நாடாளுமன்ற மறுஆய்வு உட்பட ஜனநாயகபூர்வமான கண்காணிப்பிற்கு இவை உட்படுத்தப்படவேண்டும். நீண்டகால நடவடிக்கைகளாக இது மனித உரிமைகளைக் கட்டுப்படுத்துவதோடு சட்டத்தின் ஆட்சி சரியாக நடப்பதை தடுக்கின்றன. கண்காணிப்பு இல்லாத நிலையில் சட்டத்தில் இருந்து விதிவிலக்குகளை ஏற்படுத்தும் சூழலை அவை எளிதாக உருவாக்குகின்றன.

410) குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கில் பெரும் அளவில் இராணுவம் இருப்பது என்பது நீண்டகாலத் தன்மையை எடுத்திருப்பதாகத் தெரிகிறது. இராணுவத் தளங்கள் கட்டப்படுவதும் இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் தனியார் தொழில் நிறுவனங்கள் அமைக்கப்படுவதும் இதனை உறுதி செய்கின்றன. எழுச்சிக்கு எதிரான திட்டங்கள் தொடர்வதின் பகுதியாகவே இந்த நடவடிக்கைகள் இருப்பதாகப் பொதுமக்கள் புரிந்துகொண்டுள்ளனர். போர் நடந்த பகுதிகளில் இராணுவத்தை விலக்குவது என்பது அச்சமின்றி சமூக கட்டமைப்புகள் உருவாவதற்கு அவசியமானது. உள்ளூர் மக்களால் நேர்மையானது எனப் பார்க்கப் படக்கூடிய ஒரு சமூக நிர்வாகத்தின் கைகளில் உள்ளூர் அரசானது சட்டப்படி எவ்வாறாயினும் நடப்பின்படி உண்மையானதாக இருக்கவேண்டும்.

411) காவல்துறையின் சிறப்புப்படையின் உயர் பிரிவுகள் மற்றும் இராணுவ ஒட்டுக்குழுக்களை அரசு தொடர்ந்து பயன்படுத்துவது என்பது குறிப்பாகக் கவனிக்கத்தக்கது. அரசின் பிரதிநிதிகளாகச் செயல்படும் அவர்கள் பொதுமக்களை அச்சுறுத்தவும் வன்முறையைத் தூண்டவும் முற்படுகின்றனர். ஒரு சுதந்திரமான ஜனநாயக சமூத்தில் இவர்களுக்கு எந்த இடமும் இல்லை. மேலும் தமிழ் இராணுவ ஒட்டுக்குழுக்களைப் பயன்படுத்துவது இனவேறுபாடுகளை நிலைபெறச் செய்வதாகவும் ஆழமாக்குவதாகவும் உள்ளது. இத்தகையக் குழுக்களைக் கலைப்பதையும் அவர்கள் புரிந்த குற்றங்களுக்காக அவர்களைத் தண்டிப்பதையும் நோக்கமாக கொண்ட தெளிவான கொள்கை அரசுக்கு இருக்கவேண்டும். நேரடியாகவோ மறைமுகமாகவோ அச்சுறுத்துவது அல்லது குற்றவியல் நடத்தைகளில் ஈடுபடுவது ஆகியவற்றில் அதன் சொந்தப் பாதுகாப்புப்படையினர் நிச்சயமாக ஈடுபடக்கூடாது. அவ்வாறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

412) இறுதியில், இலங்கையின் மாற்றத்திற்கும், பொறுப்பேற்கும் நடவடிக்கை திறம்பட செயல்படுவதற்கும் ஆர்வமிக்க ஒரு குடிமைச் சமூகத்தை மீட்டெடுப்பது என்பதே முக்கியமானது. அரசு சாரா தொண்டு நிறுவனங்களின் பதிவைப் பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் வைப்பது போன்ற கொள்கைகள் முறையற்றவை. மேலும் புலனாய்வுக் காவல்துறையினரால் மனித உரிமை அமைப்புகள் விசாரிக்கப்பட்டன என்பது போன்ற செய்திகள் சூழலை இறுக்கமாக்குகின்றன. மனித உரிமை பாதுகாவலர்கள் மீதான அழுத்தங்களும் கவனத்தில் கொள்ளத் தக்கவை. நாடு முழுவதும் தடையற்ற நடமாட்டமும், மனித உரிமைச் சிக்கல்களை கண்காணிக்கவும், அதனைக் குறித்து அறிக்கை அளிக்கவும் அவர்களுக்கு அனுமதி வழங்கப்படவேண்டும்.

ஈ) ஊடகங்கள் மீதான கட்டுப்பாடுகள்

413) மனித உரிமைகளை மதிக்கக்கூடிய ஒரு சமூகத்திற்கு முக்கியக் கூறாக இருப்பது பத்திரிகைச் சுதந்திரம் ஆகும். நீடித்த அமைதிக்கான முக்கியத் தேவைகளில் ஒன்றாகவும் அது இருக்கிறது. இலங்கைக்கு ஒரு பெருமைமிகுந்த ஊடகப் பாரம்பரியம் இருந்தபோதும் போர்க் காலத்தில் அதிலும் குறிப்பாகப் போரின் இறுதிக் கட்டங்களில் ஊடக சுதந்திரம் என்பது வெகுவாக பாதிக்கப் பட்டது. சுதந்திரமான ஊடகங்கள் தொடர்ந்து செயல்பட்டுக்கொண்டிருந்தபோதும் அவை இன்னமும் கட்டுப்பாடுகள் மற்றும் அச்சுறுத்தல்களை எதிர்கொண்டே இருக்கின்றன. வன்முறை மற்றும் மிரட்டல்கள் காரணமாக போர்க் காலத்தில் நாட்டை விட்டு தப்பியோடிய நிறைய ஊடகவியலாளர்கள் இன்னமும் அச்சத் தோடு இருப்பதுடன், மீண்டும் நாட்டிற்குத் திரும்புவது பாதுகாப்பு அல்ல என்றும் நம்புகின்றனர். நாட்டிற்குள் அரசை விமர்சிக்கக்கூடிய கருத்துக்களையும் தமிழர்களின் துயரங்களுக்கு அனுதாபத்துடன் இருக்கக்கூடிய கருத்துக்களையும் சகித்துக்கொள்வது குறைவாகவே உள்ளது.

414) சனவரி 2009இல் புகழ்பெற்ற மூத்த பத்திரிகையாளரும் அரசு விமர்சகருமான லசந்தா விக்ரமசிங்கே படுகொலை செய்யப்பட்டார். ஆகஸ்ட் 2009ல் அரசின் இராணுவ நடவடிக்கைகளை விமர்சித்து எழுதிய ஜெஎஸ் திசைநாயகத்திற்கு 20 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் ஓர் ஊடகவியலாளர் தண்டனைக்கு உள்ளாக்கப்படுவது அதுவே முதல் முறையாகும். மற்றொரு புகழ்பெற்ற ஊடகவியலாளரும், கேலிச்சித்திரக்காரரும், அரசை விமர்சிப்பவருமான பிரகீத் ஏக்நெலிகோடா சனவரி 2010இல் காணாமல் போய்விட்டார். இன்றுவரை அவரைப் பற்றி எந்தத் தகவலும் இல்லை. இந்த மூன்று சான்றுகளும் இதைப்போன்ற மிகப்பரவலான துன்பங்களைக் காட்டுவதாகவே உள்ளன.

415) எல்லைகள் அற்ற ஊடகவியலாளர்கள் அமைப்பு தனது 2010இன் ஊடக சுதந்திரப் பட்டியலில் மொத்தம் உள்ள 175 நாடுகளில், இலங்கையை 158ஆக அறிவித்தது. இது 2009 முதல் வெறும் நான்கு இடங்கள் முன்னேற்றமே ஆகும். டிசம்பர் 30, 2010 அன்று வெளியிட்ட ஓர் அறிக்கையில் அது கீழ்க்கண்டவாறு தனது கண்டத்தைத் தெரிவித்துள்ளது.

''இலங்கையில் நிலவுகின்ற சூழலை, பல்வேறு தரப்பில் இருந்தும் ஊடகங் கள் சுதந்திரமாக செய்தி வெளியிடுவதை தவிர்ப்பதற்காக, அரசு புதிய வடிவிலான தணிக்கை முறைகளையும் தடைகளையும் பயன்படுத்துகிறது. தனிநபர்களின் மீதான தாக்குதல் மிரட்டல்கள் மற்றும் சிறையில் அடைத்தல் ஆகியவற்றின் எண்ணிக்கைகள் குறைந்திருப்பது வரவேற்கத்தக்கது என்றபோதும், உண்மையான ஊடக சுதந்திரத்தை, அதிகாரத்தில் இருப்பவர்கள் தடுப்பது என்பது கவலைக்குரியது.''

416) இலங்கையில் ஊடக சுதந்திரம் அடைவதற்கு இரண்டு முக்கிய நிலை களை அடையவேண்டும். முதலாவதாக, இலங்கையில் ஊடகவியலாளர்கள்

ஆணையத்தின் பணி வரையறை, அதன் பணிகள் மற்றும் அதன் செயல்திட்டங்கள் ஆகியவை இன்று வரையிலும் உலகளாவிய மனித நேய மற்றும் மனித உரிமைச் சட்ட மீறல்கள் குறித்த குற்றச்சாட்டு களை விசாரிப்பதற்கு ஏற்ற வகையிலோ அல்லது பல்லாண்டு காலமாக நீடித்துவரக் கூடிய இனச் சிக்கலின் வேர்க்காரணங்களை ஆராயவோ வடிவமைக்கப்படவில்லை.

தங்கள் கருத்துக்களைச் சுதந்திரமாக வெளியிடுவதற்கு வழிவகை செய்ய அவசரகால நிலையை நீக்குவதும், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை உலகளாவிய வரையறைகளோடு பொறுத்துவதற்கேற்ப அதில் மாற்றங்களை செய்வதும் அவசியம் ஆகிறது. இரண்டாவதாக, வெளிநாட்டிற்குத் தப்பியோடிய ஊடகவியலாளர்கள் நாட்டிற்குத் திரும்புவதைப் பாதுகாப்பானதாகக் கருதித் தங்கள் சொந்த நாட்டில் தங்கள் தொழிலைத் தொடர்வதற்குரிய சூழல் எட்டப்படவேண்டும்.

அரசின் நடவடிக்கைகளை விமர்சிப்பவர்கள், பாதிக்கப்பட்டவர்கள் ஆகியோரை அச்சுறுத்தவும் தொல்லை கொடுக்கவும் குற்றவியல் விசாரணைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. தற்போது சட்டத்தி லிருந்து விதிவிலக்கு அளிக்கக்கூடிய வழக்கத் தோடு போராடுவதற்குத் திறனற்ற வகையிலேயே குற்றவியல் நீதி அமைப்பு உள்ளது. இது திறன் குறைவு என்பதை விட, அரசியல் விருப்பம் இன்மையின் விளைவாகவே உள்ளது.



உ) புலம்பெயர்ந்த தமிழர்கள்

417) உலகெங்கும் வாழக்கூடிய இலங்கைத் தமிழர்களின் பெரும்பகுதியினர் பல ஆண்டுகளாக விடுதலைப்புலிகள் இயக்கத்தினருக்கு முக்கியமான தார்மீக மற்றும் பொருளியல் ஆதரவினை அளித்து வந்தனர். அவர்கள் போரின் இறுதிக் கட்டங்களில் அரசின் செயல்பாடுகளை எதிர்த்தும் தமிழர்களின் நிலையையும் துயரங்களையும் விளக்கியும் தொடர்ந்தும் செயல்படுவார்கள் என எதிர்பார்க்கப் படுகிறார்கள். ஆனால் வன்னியில் நடந்த மனித நேயப் பேரழிவில் விடுதலைப் புலிகளின் பங்கையும், அவர்கள் நடத்திய உரிமை மீறல்களையும் ஒப்புக்கொள்ளத் தவறுவதன் மூலம் புலம் பெயர்ந்த தமிழர்களின் குறிப்பான சில பகுதியினர் நீடித்த அமைதிக்குத் தொடர்ந்த முட்டுக்கட்டையை ஏற்படுத்துகின்றனர்.

418) போரின் இறுதிக் கட்டங்களில் வன்னியில் இலட்சக்கணக்கான மக்களைத் தடுத்து வைத்திருந்தது, அவர்கள் தப்பியோடுவதைத் தடுக்க வன்முறையை பயன்படுத்தியது மற்றும் குழந்தைகளைக் கட்டாயமாகப் படையணியில் இணைத்தது ஆகியவை உட்பட விடுதலைப்புலிகளின் எண்ணற்ற மீறல்கள் குறித்து புலம் பெயர்ந்த தமிழர்களில் பெரும்பாலானவர்கள் அமைதிகாத்தனர். இறுதியில் போரிடும் இரு தரப்பினருக்கும் இடையே சிக்கிக்கொண்டுள்ள பொதுமக்களின் துன்பங்களைவிட 'தமிழ் ஈழம்' என்ற அரசியல் அரசைக் காப்பதில் புலம் பெயர்ந்த தமிழர்களில் ஒருபகுதியினர் பெரும் அக்கறை காட்டினர்.

419) விடுதலைப்புலிகள் தங்களது நோக்கத்திற்கு நிதி திரட்டுவதற்காக, வெளிநாட்டில், முக்கியமாக புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகங்களுக்கிடையே மாஃபியா போன்ற செயல்களில் ஈடுபட்டனர். விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக இருந்த குறிப்பிடத்தகுந்த எண்ணிகையிலான புலம் பெயர்ந்த தமிழர்கள் இந்த வகையில் போருக்கு மேலும் தூபம் இடுவதில் முக்கிய பங்கை ஆற்றினர். விடுதலைப்புலிகளின் முன்னாள் முன்னணி அமைப்புகள் தனிப்பட்ட தொழில்கள் மூலம் தொடர்ந்து செயல்படுவதாகவும், சில கோயில்களில் வருமானத்தைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாகவும் கூறப்படுகிறது. இந்த அமைப்புகளின் நடவடிக்கைகள் கண்காணிக்கப்படவேண்டும். கூடுதலாக, புலம் பெயந்த தமிழர்கள் மற்றும் பிற இடங்களில் இருந்து விடுதலைப்புலிகள் பெற்ற நிதியை அது இன்னமும் இருப்பதால் அதனைக் கைப்பற்றி, போரினால் பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழ்ச்சமூகத்திற்கு நிவராணம் அளிப்பதற்குப் பயன்படுத்தவேண்டும்.

420) புலம் பெயர்ந்த தமிழர்கள் விடுதலைப்புலிகளுக்கு நிபந்தனையற்ற ஆதரவை அளித்ததன் மூலமும், அவர்களின் தீவிரத் தமிழ்த்தேசியத்தின் காரணமாகவும், இலங்கையின் தமிழ்ச்சமூகத்திற்குள் பாகுபாடுகளை வளர்த்த தோடு வேதனையான முறையில் சிங்களத் தேசியவாதத்தையும் நிலைநிறுத்தியுள்ளனர். இலங்கையின் எதிர்காலம் நிச்சயத்தன்மையுடன் நிலைபெற்று இருப்பதற்கு, வெளிநாட்டில் வாழ்பவர்கள் உட்பட அதன் அனைத்துச் சமூகத்தினரும் தாங்கள் பகிர்ந்து வாழக்கூடிய பொதுவான தாய் நிலத்தைச் சேர்ந்தவர்கள் என்ற அடிப்படையில் பிறரின் உரிமைகளையும் நலன்களையும் மதிக்கவேண்டும். புலம் பெயர்ந்த தமிழர்களில் பெரும்பான்மையானவர்கள் நன்கு கற்றறிந்தவர்களாகவும், நல்ல வளங்களை உடையவர்களாகவும் இருப்பதால் இலங்கையின் எதிர்காலத்தில் ஒரு நேர்மறையான பங்கை ஆற்றக்கூடிய ஆற்றல் அவர்களிடம் உள்ளது. •



7

முடிவுகள்

பாதிக்கப்பட்டவர்களுக்கு உண்மை, நீதி, மற்றும் நிவாரணத்தை வலியுறுத்தக்கூடிய அடிப்படை, உலகளாவிய வரையறைகளோடு பொருந்தக்கூடியதாகப் பொறுப்பேற்பது குறித்த அரசின் தற்போதைய அணுகுமுறை இல்லை.



அ) குற்றச்சாட்டுகளின் தன்மையும் வீச்சும்

பொதுமக்களின் பாதுகாப்பு உரிமைகள் நலன் மற்றும் வாழ்வு பற்றிய எவ்வித அக்கறையும் இன்றி, இலங்கையில் நடைபெற்ற போரின் இருதரப்பினரும் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டனர். அவர்கள் உலகளாவியச் சட்டத்தின் கோட்பாடுகளை மதிக்கத் தவறினர். இருதரப்பினராலும் உலகளாவிய மனித நேய மற்றும் மனித உரிமைச் சட்ட மீறல்கள் பெருமளவில் நடத்தப்பட்டது என்பதை நம்புவதற்கான நியாயமான அடிப்படைகள் உள்ளன. இதன் நேரடிவிளைவாக பல்லாயிரக்கணக்கான இலங்கை மக்கள் கொல்லப்பட்டனர். தங்களது நேசத்திற்கு உரியவர்களை இழந்ததன் மூலமும், மிகமோசமான காயங்கள் காரணமாகவும் இடம்பெயர்தல் மற்றும் வீடு மற்றும் வாழ்வியலை இழந்ததன் காரணமாகவும் இதுபோன்ற பல்வேறு காரணங்களால் இலட்சக்கணக்கான மக்கள் மிகமோசமான துன்பங்களுக்கு ஆளாயினர். போருக்குப் பின் பெரும்பான்மையானவர்கள் மேலும் பல துன்பங்களுக்கும் அவமானங்களுக்கும் உள்ளாக்கப்பட்டனர்.

422) இலங்கை அரசின் நடத்தை சார்ந்த நம்பத்தகுந்த குற்றச்சாட்டுகள் உலகளாவிய மனித நேய மற்றும் மனித உரிமைச் சட்டங்களை மிக மோசமாக மீறியதாக 5 முக்கியப் பிரிவுகளின் கீழ் வருகின்றன : *(1)* பரவலான குண்டுவீச்சுத் தாக்குதல்களின் மூலம் பொதுமக்களைக் கொன்றது *(2)* மருத்துவமனைகள் மற்றும் மனித நேயக் கட்டமைப்புகள் மீது குண்டுவீச்சுத் தாக்குதல்கள் நடத்தியது. *(3)* மனித நேய உதவிகளை மறுத்தது *(4)* இடம் பெயர்ந்த மக்கள் மற்றும் விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் எனச் சந்தேகிக்கப்பட்டவர்கள் உள்ளிட்ட போரினால் பாதிக்கப்பட்ட மற்றும் உயிர் பிழைத்தவர்கள் அனுபவித்த மனித உரிமை மீறல்கள் மற்றும் *(5)* ஊடகங்கள் மற்றும் அரசை விமர்சித்த பிறர் உட்பட போர் நடைபெற்ற இடத்திற்கு வெளியே நடந்த மனித உரிமை மீறல்கள்.

போரின் இறுதிக் கட்டங்களில் விடுதலைப்புலிகளின் நடத்தை சார்ந்த நம்பத்தகுந்த குற்றச்சாட்டுகள் 6 முக்கியப் பிரிவுகளின் கீழ் மீறல்கள் புரிந்ததாகத் தெரியவருகின்றன : *(1)* பொதுமக்களை மனித அரணாகப் பயன்படுத்தியது *(2)* விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து தப்ப முயன்ற பொதுமக்களைக் கொன்றது *(3)* பொதுமக்கள் இருந்த பகுதிகளில் இராணுவ உபகரணங்களைப் பயன்படுத்தியது *(4)* குழந்தைகளை வலுக்கட்டாயமாகப் படையணியில் இணைத்தது *(5)* கட்டாயமாக வேலை வாங்கியது மற்றும் *(6)* தற்கொலைத்தாக்குதல்கள் மூலம் பொதுமக்களைக் கொன்றது.

423) போரின் இறுதிக் கட்டங்களில் என்ன நடந்தது என்பதைக் குறித்தக் குழுவின் கணிப்பும் அத்துடன், அதைத் தொடர்ந்த அரசியல், சட்ட மற்றும் தார்மீகக் கடப்பாடுகளும், அரசின் நிலைக்கு நேர் எதிரானதாக உள்ளது. 'பொதுமக்களுக்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாத' கொள்கையின் படி நடத்தப்பட்ட 'மனித நேய மீட்பு நடவடிக்கையையே' தான் மேற்கொண்டதாகவும், அதனால் எந்த தவற்றிற்கும் தனக்குப் பொறுப்பு இல்லை என்றும் அரசு தொடர்ந்து கூறிவருகிறது.

2) குற்றச்சாட்டுகள் மீதான சட்டபூர்வ ஆய்வு

424) நிரூபிக்கப்பட்டால் இருதரப்பினரின் மீதான இந்த நம்பத்தகுந்த குற்றச்சாட்டுகள், உலகளாவிய மனித நேய மற்றும் மனித உரிமைச் சட்டங்களை மிகமோசமாக மீறியதாக ஆகும். அவற்றில் பெரும்பாலானவை போர்க் குற்றங்களாகவும், மனிதத்திற்கு எதிரான குற்றங்களாகவும் இருக்கும். இதற்கான குற்றவியல் பொறுப்பு என்பது இச்செயல்களை புரிந்த தனிநபர்கள் மற்றும் இராணுவத் தளபதிகள் மற்றும் அரசு உயரதிகாரிகள் ஆகிய இருதரப்பினருக்குமே

பொருந்தும். இலங்கைச் சட்டத்தின் கீழும் பல்வேறு குற்றங்களைப் புரிந்ததாக இந்த நம்பத்தகுந்த குற்றச்சாட்டுகள் காட்டுகின்றன.

425) உலகளாவிய மனித நேய அல்லது மனித உரிமைச் சட்டங்கள் மீறப் பட்டதைக் கையாள்வது என்பது ஒரு விரும்பம் சார்ந்ததோ அல்லது கொள்கை சார்ந்ததோ அல்ல. மாறாக அது உள்நாட்டு மற்றும் உலகளாவியச் சட்டத்தின் கீழான கடமையாகும். உள்நாட்டு ஆயுதப்போருக்கு பொருந்தக்கூடிய உலகளாவிய மனித நேயச் சட்டம் மற்றும் மனித உரிமைச் சட்டத்தின் கீழ் உடனடியான மற்றும் நேர்மையான விசாரணைகளை நடத்தவும், சான்றுகள் உறுதிசெய்யப்பட்டால் அதற்குப் பொறுப்பானவர்களுக்கு தண்டனை விதிக்கவும், அரசுக்கு சட்டபூர்வ கடமை இருப்பதையே இந்த நம்பத்தகுந்த குற்றச்சாட்டுகள் காட்டுகின்றன.

3) சமனற்ற போர்முறையும், பொதுமக்களின் பாதுகாப்பும்

426) தனது இராணுவத் திட்டங்களைப் பயங்கரவாதத்தைத் தோற்கடிப் பதற்கான வெற்றிகரமான வழியாக அரசு குறிப்பிட்டுள்ளது. அத்துடன், போரின் சமனற்ற தன்மை காரணமாக உலகளாவிய மனித நேயச் சட்டத்தின் சில பிரிவுகள் பொருந்தாது என்றும், குறைந்தபட்சம் அவை மறு ஆய்விற்கு உட்படுத்தப் படவேண்டும் என்றும் பரிந்துரைத்துள்ளது. போரின் போது உலகளாவிய மனித நேயச் சட்டத்திற்கு அப்பால் தாங்கள் இருப்பதாக விடுதலைப்புலிகளும் கோரினர். தேசியப் பாதுகாப்பிற்கும் ஆயுதத் தாக்குதல்களுக்கு எதிராகத் தன்னை பாதுகாத்துக் கொள்வதற்கும் உலகளாவியச் சட்டத்தின் கீழ் அரசுக்கு உள்ள உரிமையை அங்கீகரிக்கும் அதே நேரத்தில், அந்த நியாயமான காரணங்களுக்காக எடுக்கப்பட்ட அனைத்து நடவடிக்கைகளும் உலகளாவியச் சட்டத்தின் தேவைகளுக்கு உட்பட்டு இருக்கவேண்டும் என்பதையும் குழு வலியுறுத்துகிறது. இலங்கையில் பயன்படுத்தப் பட்டவை உட்பட சில நவீன வகைப் போர் முறைகளுக்கு, உலகளாவிய மனித நேயச் சட்டங்கள் பொருந்தாது என்ற கருத்தைக் குழு உறுதியாக நிராகரிக்கிறது. மாறாக ஆயுதப்போர் சூழல்களில் பொதுமக்களைப் பாதுகாப்பதற்குத் தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை அதிகரிப்பதற்கு விவாதங்கள் நடைபெறவேண்டும் என அது கருதுகிறது.

427) இந்த அடிப்படையில் போரின் இறுதிக் கட்டங்களில் பொதுமக்களை காத்திருக்கக்கூடிய நடவடிக்கைகளை எடுக்க அய்.நா.வின் அரசியல் உறுப்பு களும் அமைப்புகளும் தவறிவிட்டன. மேலும் பொதுமக்களைக் காக்கவேண்டும் என்றும், மருத்துவமனைகள் மற்றும் அய்.நா. அல்லது செஞ்சிலுவைச் சங்க இருப்பிடங்கள் மீது குண்டுவீச்சுத் தாக்குதல் நடத்துவதை நிறுத்த வேண்டும் என்றும், அரசிடம் வெளிப்படையாகவும் தனிப்பட்ட முறையிலும் மூத்த பன்னாட்டு அதிகாரிகள் அறிவுறுத்தியபோதும், குழுவின் பார்வையில் வன்னியில் இந்த நிகழ்வுகள் நடந்துகொண்டிருந்தபோது அங்கு கொல்லப்பட்ட மக்களின் எண்ணிக்கையை வெளிப்படையாக அறிவித்துப் பயன்படுத்தியிருந்தால், அது பொதுமக்களின் பாதுகாப்பிற்கான கோரிக்கைகளை வலுப்படுத்தியிருக்கும் எனக் கருதுகிறது.

விடுதலைப்புலிகளைத் தோற்கடித்த பின், விடுதலைப்புலிகளால் மட்டுமல்லாது தனது சொந்த ஆயுதப்படை யினராலும், பல்லாயிரக் கணக்கான மக்கள் இறந்தது உட்பட, தனது குடிமக்களுக்குப் பெரும் தீங்கு நடந்தது என்பதை அரசு தொடர்ந்து மறுப்பது என்பது பொறுப்பேற் பதற்கு மற்றொரு அடிப்படையான தடையாக உள்ளது.

4) அரசு தொடர்ந்து நடத்தக்கூடிய மீறல்கள்

428) போர் முடிந்து ஏறத்தாழ இரண்டு ஆண்டுகளுக்கு பிறகு இலங்கையின் சிங்கள மற்றும் தமிழ் மக்களுக்கு இடையே நிலவக்கூடிய தேசிய இனச் சிக்கலின் வேர்க் காரணங்கள் இன்னமும் பெருமளவில் கவனிக்கப்படாமல் இருப்பதோடு, மனித உரிமை மீறல்களும் தொடர்கின்றன. அரசின் பிரதிநிதிகளால் அல்லது அரசு ஆதரவு பெற்ற இராணுவ ஒட்டுக்குழுக்களால் இத்தகைய நடவடிக்கைகள் நடத்தப் படுவதாக தொடர்ந்து அறிக்கைகள் வருகின்றன. விசாரணையின்றித் தன்னிச்சை யாகத் தடுப்புக்காவலில் வைப்பது, கடத்தல்கள் மற்றும் காணாமல் போதல்கள், கொலைகள், ஊடகத்தினரின் மீதான தாக்குதல் மற்றும் பிற அச்சுறுத்தும்

நடவடிக்கைகள் ஆகியவை இதில் அடங்கும். இந்தச் சூழலில் வன்னியில் நடைபெற்ற ஆயுதப்போரில் பாதிக்கப்பட்டவர்களும் உயிர் பிழைத்தவர்களும் இயல்பான வாழ்க்கைக்குத் திரும்ப இயலவில்லை. இந்த வன்முறைகளும் அதனோடு இருக்கக்கூடிய அச்சச் சூழலும் முடிவுக்கு வருவது என்பதுப் பொறுப் பேற்பதற்கு இணக்கமான ஒரு சூழலை உருவாக்க முக்கியத் தேவையாகும். கடந்த பல்லாண்டுகளாக இன்றுவரையிலும் நடத்தப்பட்ட வலுக்கட்டாயமாக காணாமல் போக்கப்படும் செயல்கள் குறித்து இலங்கையின் மோசமான பதிவுகள் உலகளாவிய அமைப்புகளிடம் இருந்து ஆழமான அக்கறையை வெளிப்படுத்தியுள்ளதோடு, உடனடியானக் கவனத்தையும் கோரியுள்ளன.

நீண்டகாலமாக நீடித்துவரக்கூடிய தேசிய இனச் சிக்கலின் வேர்க்காரணங்களை கண்டறிவது உட்பட கடந்தகாலத்தில் பரந்துபட்ட செயல்களைக் கவனமாக ஆராய்வதற்கு அனுமதிக்கக்கூடிய ஒரு சூழல் தற்போது நிலவவில்லை. மனித உரிமைகளை மதிக்கக் கூடிய ஒரு வெளிப்படை யான சமூகத்தைக் கட்டமைப்பதை நோக்கி வலுவான முன்னெடுப்பு களை மேற்கொள்வது அவசியமாகிறது.

5) உலகளாவிய வரையறைகளின் அடிப்படையில் பொறுப்பேற்பது

429) உலகளாவிய வரையறைகளோடு பொருந்தியப் பொறுப்பேற்கும் செயல் என்பது மோசமான குற்றங்களின் மீது விசாரணைகள் நடத்துவதையும் தண்டனைக்கு உள்ளாக்குவதையும் உள்ளடக்கியது என்றபோதும், அதையும் கடந்ததுமாகும். மனித உரிமைகள் மற்றும் மதிப்பின் மீது நடத்தப்பட்ட கடந்தகால அத்துமீறல்கள், தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் ஆகியவற்றின் அரசியல், சட்ட மற்றும் தார்மீகப் பொறுப்பை நிர்ணயிக்கும் விரிவான நடைமுறையாகும். அனைத்து மனித உரிமைகளுக்கும் மதிப்பளிப்பதையும், சமூகத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் முழு உரிமைகளை மீட்டெடுப்பதையும் அடிப்படையாக கொண்ட நீடித்த அமைதியைக் கட்டுவதை நோக்கமாக கொண்ட பரந்துபட்ட ஆற்றல்மிக்க செயல்பாடுகளின் முக்கியக் கூறாகப் பொறுப்பேற்பது உள்ளது. உலகளாவிய வரையறைகள் மற்றும் சிறப்பான நடைமுறைகளோடு பொருந்தக் கூடிய வகையில் பொறுப்பேற்பது என்பது பாதிக்கப்பட்டவர்கள் உண்மை, நீதி மற்றும் நிவாரணத்தை அடைவதை நிச்சயமாக உள்ளடக்கியதுமாகும். பொது மக்களின் உரிமைகள் மீறப்பட்டபோது, அதை மீறியதில், தனது பங்கையும் பொறுப்பையும் அரசு அதிகாரபூர்வமாக ஏற்றுக்கொள்வது என்பதும் பொறுப் பேற்பதற்கான தேவையாக உள்ளது. அய்.நா.வின் கொள்கைக்கு ஏற்ப ஒரே நடைமுறை அனைவருக்கும் பொருந்தும் என்ற திட்டத்தையோ அல்லது வெளி நாட்டில் பின்பற்றப்பட்ட வழிமுறைகளையோப் பொறுப்பேற்பதற்குக் குழு பரிந்துரைக்கவில்லை. மாறாக பரந்துபட்ட அளவில் பொதுமக்களின் பங்களிப்பு, தேவைகள் மற்றும் விருப்பங்களைக் கொண்ட தேசியக் கணிப்புகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டப் பொறுப்பேற்கும் நடைமுறைகளின் தேவையை அது அங்கீகரிக்கிறது. என்றபோதும் எந்தவொரு தேசிய நடைமுறையும் உலகளாவிய வரையறைகளைப் பின்பற்றவேண்டும்.

430) பொறுப்பேற்பது குறித்த தனது ஆலோசனைகளை வடிவமைப்பதில் குழு இலங்கையில் நடைபெற்ற ஆயுதப்போரில் இருதரப்பினரின் கரங்களிலும் துன்பங்களை அனுபவித்த பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான மக்களின் உரிமைகள் மற்றும் தேவைகளுக்கு முக்கியத்துவம் அளித்துள்ளது. பொதுவாகப் போரில் ஏற்படும் துன்பங்கள் மற்றும் இழப்புகளில் மோசமான பாதிப்புகளை பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியவர்களே கூடுதலாக அனுபவிக்கின்றனர். இதற்கு இலங்கை எந்தவிதத்திலும் விதிவிலக்கல்ல அதிலும் குறிப்பாக போரின் இறுதிக் கட்டங்களில்.

6) பொறுப்பேற்பது குறித்து அரசின் கருத்தியல்

431) நிவாரண நீதிக்கு முக்கியத்துவம் அளிக்கக்கூடிய வகையில் இணக்கம் மற்றும் பொறுப்பேற்பது ஆகிய இரண்டையும் சமன்படுத்த, தான் முற்படுவதாக அரசு குறிப்பிட்டுள்ளது. நிவாரண நீதி மற்றும் தண்டனை நீதி ஆகிய இரண்டிற்கும் இடையே தேர்ந்தேடுப்பது என்ற கூற்று பொய்யான அடிப்படையைக் கொண்டது. இரண்டுமே தேவையானது. மேலும் குழுவின் கருத்தில் நிவாரண நீதி குறித்த அரசின் பார்வையானது தவறாக உள்ளது. ஏனெனில் உண்மை, நீதி மற்றும்

நிவாரணங்கள் குறித்துக் கவனம் செலுத்தக்கூடிய பாதிக்கப்பட்டவர்களை மையப் படுத்திய நியாயமானப் பொறுப்பேற்கும் நடவடிக்கைக்கு மாற்றாக கடந்தகால அரசுகளின் கொள்கைகள் மற்றும் பயங்கரவாதத்தில் இருந்து பொதுமக்களைக் காக்க அவர்கள் தவறியது ஆகியவற்றிற்கான அரசியல் பொறுப்பினை அது முன் நிறுத்துகிறது.

432) போரின் இறுதிக் கட்டங்களிலும் அதற்குப் பிறகும் தான் எடுத்த முடிவுகள் மற்றும் தனது நடத்தை ஆகியவற்றை ஆராய்வது மற்றும் தண்டனைக் குள்ளாக்குவது, அதன் விளைவாக நேர்ந்திருக்கக்கூடிய உலகளாவிய மனித உரிமை மற்றும் மனித நேயச் சட்ட மீறல்களை ஆராய்வது மற்றும் தண்டனைக் குள்ளாக்குவது ஆகியவற்றை இலங்கை அரசின் பொறுப்பேற்பது குறித்த அணுகுமுறை உள்ளடக்கியதாக இல்லை. நடந்த தவறுகளுக்குப் பொறுப்பானவர்களை அடையாளம் காணவும், அவர்களை அதற்காக விசாரிப்பதையும் அது உள்ளடக்க வில்லை. இராணுவம் மற்றும் காவல்துறையினரால் அத்துமீறல்கள் நடந்திருக்கலாம் என்றும் அதுகுறித்து சில வழக்குகள் நிலுவையில் உள்ளன என்றும் அரசு ஒப்புக்கொள்ளும் அதேநேரத்தில், இந்த அறிக்கையில் அரசின் நடத்தை குறித்துக் குறிப்பிடப்பட்டுள்ள மோசமான குற்றச்சாட்டுகளோடு இந்த வழக்குகளில் எவையேனும் தொடர்புடையவையா என்பது குறித்து தெளிவாக்கவில்லை. மாறாக விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்களைக் குற்றம்சாட்டுவதிலேயே அரசு கவனம் செலுத்துகிறது. பெரும்பாலானவர்களுக்கு மறுவாழ்வு நடவடிக்கை களை முன்னெடுத்தும், நிவாரண நீதி வழங்குவதன் அடிப்படையில் தீவிர உறுப்பினர்களுக்கு எளிதான தண்டனைகளை வழங்கியும் அது செயல்படுகிறது. இதனால் அரசின் பொறுப்பேற்பது குறித்த கருத்தியலானது உலகளாவிய வரையறை களோடு பொருந்தவில்லை எனக் குழு முடிவுசெய்கிறது. இருதரப்பினரும் புரிந்த மீறல்கள் குறித்த குற்றச்சாட்டுகளைக் கவனத்தில் கொள்ளாமல் தனதுப் பொறுப் பேற்கும் அணுகுமுறையின் மையமாக ஆயுதப்போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் உரிமைகள் மற்றும் மதிப்பை வைக்காமல் அரசு எடுக்கும் நடவடிக்கைகள் அனைத்தும் உலகளாவிய எதிர்பார்ப்புகளுக்குப் பெரிதும் குறைவாகவே இருக்கும்.

433) மக்கள் தங்கள் வாழ்க்கையை மறுகட்டமைப்புச் செய்வதற்கு உதவுவது என்பது அவர்களுக்குத் தேவையான பொருள் உதவியைச் செய்வது மட்டுமல்ல. இது எந்தளவிற்கு அவசியமானதாக இருந்தபோதும் உரிமைகள் மீறப்பட்ட, தொடர்ந்தும் மீறப்படுகின்ற மக்களின் உடனடி நிலையைக் கவனத்தில் கொள்ளக்கூடிய பல்வேறு வகையான நடவடிக்கைகளை அரசு எடுக்கவேண்டும். அத்துடன் பொறுப்பேற்பது குறித்த நேர்மையான நடவடிக்கைகளையும் அரசு எடுக்கவேண்டும்.

அரசின் வெற்றி மனப்பான்மை நிலையில் இருந்து இலங்கையின் பல்லின முகத்தை அங்கீகரித்து, அதன் அனைத்து மக்களுக்கும் முழுமையான மற்றும் அரவணைத்துச் செல்லக் கூடிய குடியுரிமையை அங்கீகரிக்கக்கூடிய ஓர் அரசியல் தீர்வை நோக்கிய நேர்மையான கடப்பாட்டை நோக்கி அரசு பயணிக்க வேண்டும். இதுவே நாட்டின் எதிர்காலத்திற்கு அடித்தளமாகும்.

7) கற்ற பாடங்கள் மற்றும் இணக்கத்திற்கான ஆணையம்

434) 2002இல் போர் நிறுத்த ஒப்பந்தம் போடப்பட்டது முதல் மே 2009இல் போர் முடிவடைந்தது வரையிலான தனது கடந்த காலத்தைக் கையாளும் தனது கொள்கைகளில் முக்கிய முன்னேற்றமாக, 'கற்ற பாடங்கள் மற்றும் இணக்கத்திற் கான ஆணைய'த்தை அரசு நிறுவியுள்ளது. இலங்கையின் சிக்கல் குறித்த வரலாற்றின் மீது ஒரு தேசிய உரையாடலைத் தொடங்குவதற்குச் சிறந்த பயனுள்ள வாய்ப்பைப் பிரதிபலிப்பதாக க.பா.இ.ஆ. உள்ளது. ஆணையத்திடம் தாமாக முன்வந்து உரையாடிய பெரும் எண்ணிக்கையிலான மக்கள் குறிப்பாகப் பாதிக்கப்பட்டவர்கள் இத்தகைய உரையாடலின் தேவையை வெளிப்படுத்தியுள்ளனர்.

435) சுதந்திரம் மற்றும் பாகுபாடற்றத் தன்மை ஆகியவை குறித்த உலகளாவிய வரையறைகளோடு பொருத்தி நிற்க க. பா. இ. ஆ. தவறிவிட்டது. ஆணையம் அமைக்கப்பட்டுள்ள முறையும் அதன் உறுப்பினர்கள் சிலரிடம் ஆழமாக வேரூன்றி யுள்ள முரணான நலன்களும் ஆணையத்தின் நிலையை சமரசப்படுத்தியுள்ளன.

குழு அவசியம் எனக் கருதக்கூடியப் பொறுப்பேற்பது பற்றிய பல்வேறு பரிமாணங்களை இந்தப் பரிந்துரைகள் கவனத்தில் கொண்டுள்ளன. அவற்றை கருத்தியலின் அடிப்படையில் ஒருங்கிணைத்துள்ள குழு அதே வேளையில் ஒவ்வொரு பரிந்துரையையும் பொறுப்பேற்பதற்கு அவசியமானது எனக் கருதுகிறது.

ஆணையத்தின் பணி வரையறை, அதன் பணிகள் மற்றும் அதன் செயல்திட்டங்கள் ஆகியவை இன்றுவரையிலும் உலகளாவிய மனித நேய மற்றும் மனித உரிமைச் சட்ட மீறல்கள் குறித்த குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கு ஏற்ற வகையிலோ அல்லது பல்லாண்டுகாலமாக நீடித்துவரக்கூடிய இனச் சிக்கலின் வேர்க்காரணங்களை ஆராயவோ வடிவமைக்கப்படவில்லை. மாறாக மேலே குறிப்பிடப்பட்ட அரசியல் பொறுப்பு குறித்த பரந்த கருத்தியல் மீதே அது வலுவான கவனத்தைச் செலுத்துகிறது. இது அரசு முன்வைத்திருக்கக்கூடிய தவறான மற்றும் அரைகுறையானப் பொறுப்பேற்கும் கருத்தியலின் பகுதியாக உள்ளது.

க. பா. இ. ஆ. இன்றுவரையில் செய்த பணிகளின் மூலம் :

> ஆயுதப்போரின் இறுதிக் கட்டங்களில் என்ன நடந்தது என்பது பற்றிய நேர்மையான உண்மையறியும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.
>
> பாதிக்கப்பட்டவர்களை அவர்களது மதிப்பு மற்றும் அவர்கள் அனுபவித்த துயரங்களுக்கு உண்டான முழு மரியாதையுடன் நடத்தும் அணுகுமுறையைக் கடைப்பிடிக்கவில்லை. மற்றும்
>
> தனிப்பட்ட ஆபத்து இருக்கக்கூடிய சூழலிலும் கூட சாட்சிகளுக்குத் தேவையான பாதுகாப்பை வழங்கவில்லை.

436) மேலும் கடந்த 30 ஆண்டுகளில் பெரும் எண்ணிக்கையிலான மோசமான மனித உரிமைச் சிக்கல்களை ஆராய பல விசாரணை ஆணையங்கள் நிறுவப் பட்டுள்ளன. அவற்றில் சில முக்கியமான உண்மை அறியும் நோக்கங்களை நிறை வேற்றியபோதும், பெரும்பாலான இந்த ஆணையங்கள் அடையாளம் காணப் பட்ட மீறல்களுக்குப் போதுமானப் பொறுப்பேற்கும் நடவடிக்கைகளை அளிக்கத் தவறியுள்ளன. பெரும்பாலான ஆணையங்கள் ஒரு பொது அறிக்கையை தரத் தவறியதோடு அவற்றின் பரிந்துரைகளும் மிக அரிதாகவே நடைமுறைபடுத்தப் பட்டுள்ளன.

437) இலங்கையர்கள் தங்களுடைய சில கவலைகளை வெளிப்படுத்து வதற்கான வாய்ப்பை க.பா.இ.ஆ. வழங்கியுள்ளது. அத்துடன், அதன் இடைக்கால மற்றும் இனி வரக்கூடிய இறுதிப் பரிந்துரைகள் இணைந்து போரினால் பாதிக்கப்பட்ட சிலரின் வாழ்வியல் நிலைகளை மேம்படுத்த உதவலாம். ஆனால் க. பா. இ. ஆ. அடைப்படையில் மிக ஆழமாக தவறுகளை உடையதாகவும், ஒரு திறனானப் பொறுப்பேற்கும் நடைமுறைக்குத் தேவையான உலகளாவிய வரையறை களோடு பொருந்தாததாகவும், அதனால் பொறுப்பேற்கும் நடைமுறைகள் குறித்து இலங்கை அதிபரும் செயலாளர் நாயகமும் விடுத்துள்ள கூட்டுக் கடப்பாட்டினை பூர்த்திசெய்ய இயலாததாகவும் உள்ளது. விடுதலைப்புலிகள் மற்றும் அரசின் மீதான குறிப்பிட்ட மீறல் குற்றச்சாட்டுகளை நேர்மையாக விசாரிப்பதை உறுதி செய்யவும், சிக்கலின் வேர்க்காரணங்கள் மீது கவனம் செலுத்தக்கூடிய வகையில் கடந்த காலம் குறித்த விரிவான ஆய்வை மேற்கொள்ளவும் ஒரு புதிய அணுகு முறை தேவையாக உள்ளது.

8) இலங்கையின் நீதி அமைப்பு மற்றும் மனித உரிமை ஆணையம்

438) க. பா. இ. ஆ. வின் செயல்பாடுகள் அல்லது விளைவுகளுக்கு அப்பால், நீதி அமைப்புப் பொறுப்பேற்கும் நடவடிக்கைகளில் முக்கியப் பங்கினை ஆற்றவேண்டும். ஆனால் அந்த அமைப்பின் கடந்தகாலச் செயல்பாடுகள் மற்றும் தற்போதைய கட்டமைப்பு ஆகியவற்றை ஆராய்ந்ததன் அடிப்படையில் தற்போது நிலவக்கூடிய அரசியல் சூழலில் அது நீதிக்குப் பங்களிக்கும் என்பதில் குழுவிற்கு மிகக் குறைந்த நம்பிக்கையே உள்ளது. குற்றவியல் நீதி அமைப்பின் கீழ் விசாரணைகள் மற்றும் தண்டனைகள் ஆகிய இரண்டையும் கட்டுப்படுத்தக்கூடிய

மய்ய நிலையில் அட்டர்னிஜெனரல் உள்ளார். ஆனால் அண்மை ஆண்டுகளில் அட்டர்னிஜெனரலின் சுதந்திரம் வலுவிழக்கப்பட்டுள்ளது. விசாரணைகளும் தண்டனைகளும் பெரும்பாலும் தன்னிச்சையாகவும் மெதுவாகவும் உள்ளன. மேலும் அரசின் நடவடிக்கைகளை விமர்சிப்பவர்கள், பாதிக்கப்பட்டவர்கள் ஆகியோரை அச்சுறுத்தவும் தொல்லைகொடுக்கவும் குற்றவியல் விசாரணைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. தற்போது சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிக்கக் கூடிய வழக்கத்தோடு போராடுவதற்குத் திறனற்ற வகையிலேயே குற்றவியல் நீதி அமைப்பு உள்ளது. இது திறன் குறைவு என்பதை விட, அரசியல் விருப்பம் இன்மையின் விளைவாகவே உள்ளது. இலங்கையில் நன்கு நிறுவப்பட்ட சட்டக் கட்டமைப்பும் நீதியை நிலைநிறுத்தக்கூடிய திறன்வாய்ந்த கற்றறிந்த வல்லுநர்களும் உள்ளனர். ஆனால் இதற்கு ஏற்ற சூழல் தேவையாக உள்ளது. ஆனால் அதுவே தற்போது இல்லாமல் போனது. அவசரகால நிலை விதிகள் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படுவது, அதனோடு பயங்கரவாதத் தடுப்புச்சட்டம் தற்போது உள்ள வடிவில் இணையும்பொழுது மனித உரிமைகள் தொடர்பான உத்தரவாதங்களை தூக்கிப்பிடிப்பது நடந்த தவறுகளைக் கையாள்வது ஆகியன நீதி அமைப்பிற்கு உடனடித் தடைகளாக உள்ளன.

439) குழு அடையாளம் கண்ட நம்பத்தகுந்த குற்றச்சாட்டுகள் அல்லது போரின் இறுதிக் கட்டங்களில் நடந்த பிற குற்றங்கள் ஆகியவை குறித்து ஒரு திறனானப் பொறுப்பேற்கும் நடைமுறைக்கு ஏற்றவகையில் இராணுவ நீதிமன்ற அமைப்பு செயல்பட்டது என்பதற்கான எந்த ஆதாரத்தையும் குழு காணவில்லை.

440) பொறுப்பேற்பதை முன்னெடுப்பதில் இலங்கையின் மனிதஉரிமைகள் ஆணையம் சரியான வகையில் பங்களிக்கலாம். ஆனால் காணாமல் போனவர்கள் வழக்குகளை முன்னேடுப்பதிலும், தடுப்புக்காவலில் உள்ளவர்களின் நலனை கண்காணிப்பதிலும் ஆணையம் அரசியல் விருப்பம் மற்றும் வளத்தை காட்டவேண்டும் எனக் குழு நம்புவதோடு, அதில் பெருத்த சந்தேகமும் கொண்டுள்ளது.

குழு நம்பத்தகுந்தது எனக் கண்டறிந்த குற்றச்சாட்டுகளின் அடிப்படையில், இலங்கை அரசு தனது உலகளாவிய கடப்பாடுகளோடு பொருந்தக்கூடிய வகையிலும், உள்நாட்டில் திறனான பொறுப்பேற்கும் நடைமுறையை முன்னெடுக்கும் நோக்கத்துடனும், இந்தக் குற்றச்சாட்டுகள் மற்றும் போரின் இருதரப்பினரும் புரிந்த உலகளாவிய மனிதநேய மற்றும் மனித உரிமைச் சட்ட மீறல்கள் குறித்த பிற குற்றச் சாட்டுகள் ஆகியவற்றின் மீது உடனடியான, நேர்மையான விசாரணையை தொடங்கவேண்டும்.

9) முன்னோக்கிச் செல்லும் பாதை

441) போர் முடிந்து ஏறத்தாழ இரண்டு ஆண்டுகள் கடந்த நிலையில் இலங்கையின் முயற்சிகள் பொறுப்பேற்பது குறித்த உலகளாவிய வரையறைகளுக்குப் பல படிகள் கீழானதாகவும், இலங்கை அதிபர் மற்றும் செயலாளர் நாயகம் ஆகியோரின் கூட்டுக் கடப்பாடு அல்லது இலங்கையின் சட்டபூர்வக் கடமைகள் ஆகியவற்றை நிறைவேற்றத் தவறுவதாகவும் உள்ளன. ஒரு நேர்மையான விசாரணையை நடத்துவதில் அதற்குள்ளப் பொறுப்புகளை இலங்கை அரசு செயல்படுத்தவில்லை. அதற்கான எந்த விருப்பத்தையும் அது காட்டவும் இல்லை. இந்தச் சூழல்களில் ஆயுதப்போரில் பொதுமக்களை பாதுகாப்பது குறித்த அறிக்கையில் செயலாளர் நாயகம் சரியாகக் குறிப்பிட்டுள்ளபடி 'தேவையற்ற வகையில் மெதுவாகவும் மற்றும் பிறவகைகளில் திறனற்றும் இருக்கக்கூடிய தேசிய முயற்சிகளுக்காகப் பொறுப்பேற்பது குறித்த உலகளாவிய முன்னெடுப்புகள் நிறுத்தி வைக்கப்படவேண்டும் என்பது தேவையற்றது'. எனவே இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மீறல் குற்றச்சாட்டுகள் குறித்து, இலங்கையின் அதிகாரிகள் உடனடியாக ஒரு நேர்மையான விசாரணையை தொடங்கவேண்டும், அதேவேளையில் ஒரு சுதந்திரமான கூடுதலான உலகளாவிய அணுகுமுறையும் அவசியமானது எனக் குழு கருதுகிறது.

442) பாதிக்கப்பட்டவர்களுக்கு உண்மை, நீதி, மற்றும் நிவாரணத்தை வலியுறுத்தக் கூடிய அடிப்படை, உலகளாவிய வரையறைகளோடு பொருந்தக்கூடியதாகப் பொறுப்பேற்பது குறித்த அரசின் தற்போதைய அணுகுமுறை இல்லை. மேலும் விடுதலைப்புலிகளைத் தோற்கடித்த பின், விடுதலைப்புலிகளால் மட்டுமல்லாது

அரசு, அதன் உறுப்புகள் மற்றும் அரசினால் ஆதரிக்கப்படுகின்ற அல்லது சகித்துக் கொள்ளப்படுகின்ற அனைத்து இராணுவ ஒட்டுக்குழுக்கள் மற்றும் பிற குழுக்களின் அனைத்து வன்முறை களையும் முடிவுக்கு கொண்டுவரவேண்டும்.



தனது சொந்த ஆயுதப்படையினராலும், பல்லாயிரக்கணக்கான மக்கள் இறந்தது உட்பட தனது குடிமக்களுக்குப் பெரும் தீங்கு நடந்தது என்பதை அரசு தொடர்ந்து மறுப்பது என்பதுப் பொறுப்பேற்பதற்கு மற்றொரு அடிப்படையான தடையாக உள்ளது. நீண்டகாலமாக நீடித்துவரக்கூடிய தேசிய இனச் சிக்கலின் வேர்க் காரணங்களை கண்டறிவது உட்பட கடந்தகாலத்தில் பரந்துபட்ட செயல்களைக் கவனமாக ஆராய்வதற்கு அனுமதிக்கக்கூடிய ஒரு சூழல் தற்போது நிலவவில்லை. மனித உரிமைகளை மதிக்கக்கூடிய ஒரு வெளிப்படையான சமூகத்தைக் கட்டமைப்பதை நோக்கி வலுவான முன்னெடுப்புகளை மேற்கொள்வது அவசியமாகிறது. அத்துடன், அரசின் வெற்றி மனப்பான்மை நிலையில் இருந்து இலங்கையின் பல்லின முகத்தை அங்கீகரித்து, அதன் அனைத்து மக்களுக்கும் முழுமையான மற்றும் அரவணைத்துச் செல்லக்கூடிய குடியுரிமையை அங்கீகரிக்கக் கூடிய ஓர் அரசியல் தீர்வை நோக்கிய நேர்மையான கடப்பாட்டை நோக்கி அரசு பயணிக்கவேண்டும். இதுவே நாட்டின் எதிர்காலத்திற்கு அடித்தளமாகும். •



8

பரிந்துரைகள்

இடம்பெயர்ந்த மக்கள் அனைவரையும் விடுவித்து, அவர்கள் தாங்கள் முன்பு இருந்த வீடுகளுக்கு செல்லவோ அல்லது மறு குடியமரவோ அவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப வசதிகளைச் செய்து தரவேண்டும்.



தனது முடிவுகளின் அடிப்படையில், பொறுப்பேற்பது குறித்த கூட்டு கடப்பாட்டினை நடைமுறைப்படுத்தக் கீழ்க்காணும் பரிந்துரைகளைக் குழு அளிக்கிறது. இந்த விஷயத்தில் செயலாளர் நாயகம் மற்றும் இலங்கை அரசுக்கு இடையே தற்போது இருக்கக்கூடிய ஆக்கபூர்வமான செயல்பாடுகளுக்கு வரைவுதிட்டம் அளிப்பதாக இவை இருக்கும் எனக் குழு நம்புகிறது. இந்தப் பரிந்துரைகளை நிறைவேற்ற இலங்கை அரசு, அய்.நா. மற்றும் பிறரிடம் இருந்து செயல்பாடுகளைக் குழு கோருகிறது. குழு அவசியம் எனக் கருதக்கூடியப் பொறுப்பேற்பது பற்றிய பல்வேறு பரிமாணங்களை இந்தப் பரிந்துரைகள் கவனத்தில் கொண்டுள்ளன. அவற்றை கருத்தியலின் அடிப்படையில் ஒருங்கிணைத்துள்ளக் குழு அதே வேளையில் ஒவ்வொரு பரிந்துரையும் பொறுப்பேற்பதற்கு அவசியமானது எனக் கருதுகிறது.

444) இந்தப் பரிந்துரைகளின் சுருக்கமாக உள்ளடக்கப்பட்டுள்ள வகையில் செயலாளர் நாயகத்திற்குக் குழுவின் அறிக்கை மற்றும் ஆலோசனை ஆகியவை இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களும் ஒட்டுமொத்தக் குடிமை சமூகமும் காட்டிய திடம் மற்றும் தீரத்தினால் ஊக்கம் பெற்றுள்ளது. இந்தப் பரிந்துரைகள் பின்பற்றப்படின் கூட்டுக்கடப்பாட்டை நிறைவேற்றக்கூடிய ஒரு நேர்மையானப் பொறுப்பேற்கும் நடைமுறையைக் கொண்டதாகவும் இலங்கையை நீதி, மதிப்பு மற்றும் அமைதியின் வழியில் நிறுத்துவதாகவும் இருக்கும்.

பரிந்துரை 1 : விசாரணைகள்

அ) குழு நம்பத்தகுந்தது எனக் கண்டறிந்த குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் இலங்கை அரசு தனது உலகளாவிய கடப்பாடுகளோடு பொருந்தக்கூடிய வகையிலும், உள்நாட்டில் திறனானப் பொறுப்பேற்கும் நடைமுறையை முன்னெடுக்கும் நோக்கத்துடனும், இந்தக் குற்றச்சாட்டுகள் மற்றும் போரின் இருதரப்பினரும் புரிந்த உலகளாவிய மனிதநேய மற்றும் மனித உரிமைச் சட்ட மீறல்கள் குறித்த பிற குற்றச்சாட்டுகள் ஆகியவற்றின் மீது உடனடியான நேர்மையான விசாரணையை தொடக்கவேண்டும்.

ஆ) கீழ்க்காணும் செயல்பாடுகளை உள்ளடக்கிய பணி வரையறையை கொண்ட ஒரு சுதந்திரமான பன்னாட்டு அமைப்பை நிறுவச் செயலாளர் நாயகம் உடனடியாக செயல்படவேண்டும்.

(1) மீறல் குற்றச்சாட்டுகள் மீது நேர்மையான விசாரணைகள் நடத்தப்படுவது உள்ளிட்ட திறனான உள்நாட்டுப் பொறுப்பேற்கும் நடைமுறையை இலங்கை அரசு எந்தளவிற்கு செயல்படுத்துகிறது என்பதைக் கண்காணித்துக் கணித்து, தனது கண்டுபிடிப்புகளை செயலாளர் நாயகத்திற்கு அவ்வப் போது அறிவிக்கவும் வேண்டும்.

(2) உள்நாட்டில் நடைபெறக்கூடிய நேர்மையான மற்றும் திறனான விசாரணைகளைக் கவனத்தில் கொண்டு, அதே வேளையில் இந்த மீறல் குற்றச்சாட்டுகள் குறித்த சுதந்திரமான விசாரணையை நடத்தவேண்டும்.

(3) குழு மற்றும் அய்.நா. அமைப்பின் பிற அமைப்புகள் சேகரித்த தகவல்கள் உட்பட, போரின் இறுதிக் கட்டங்களுக்குப் பொறுப்பேற்ப தோடு தொடர்புடைய தகவல்கள் அனைத்தையும் சேகரித்து வருங்காலப் பயன்பாட்டிற்கு முறையாக பாதுகாக்கவேண்டும்.

பரிந்துரை 2 : பொறுப்பேற்பதை முன்னெடுக்க பிற உடனடி நடவடிக்கைகள்

எவருடைய உரிமைகள் மீறப்பட்டனவோ, தொடர்ந்தும் மீறப்பட்டுக்

கொண்டிருக்கின்றனவோ, அவர்களின் உடனடி நிலையைக் கவனத்தில் கொள்வதற்கும் பொறுப்பேற்பது குறித்த அரசின் கடப்பாட்டை வெளிப்படுத்தவும் கீழ்க்காணும் நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்படவேண்டும்.

அ) வன்னியில் பாதிக்கப்பட்ட மற்றும் உயிர்பிழைத்த அனைவரின் உரிமைகள் மற்றும் மதிப்பினை ஏற்றுக்கொள்வதை நோக்கமாகக் கொண்ட கீழ்க்காணும் குறைந்தகால நடவடிக்கைகளை இலங்கை அரசு உடனடியாக நடைமுறைப் படுத்தவேண்டும்.

(1) அரசு, அதன் உறுப்புகள் மற்றும் அரசினால் ஆதரிக்கப்படுகின்ற அல்லது சகித்துக்கொள்ளப்படுகின்ற அனைத்து இராணுவ ஒட்டுக் குழுக்கள் மற்றும் பிறக் குழுக்களின் அனைத்து வன்முறைகளையும் முடிவுக்கு கொண்டுவரவேண்டும்.

(2) இறந்துபோனவர்களின் உடல் மிச்சங்களை மீட்டு அவர்களின் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கவும், அவர்களுக்கான பண்பாட்டுச் சடங்குகளை நடத்தவும் வழிவகை செய்யவேண்டும்.

(3) இறந்தவர்கள் மற்றும் காணாமல் போனவர்களுக்கு இறப்புச் சான்றிதழ் களை அவர்கள் குடும்பத்தினர் கேட்கும்பொழுது, வேகமாகவும், மதிப்புடனும், எவ்வித கட்டணமும் இன்றியும், வருங்காலத்தில் அது தொடர்பான விசாரணை அல்லது குடிமை உரிமைகளுக்குப் பங்கம் வராத வகையில் அளிக்கவேண்டும்.

(4) உயிர்பிழைத்த அனைவருக்கும் அவர்களின் பண்பாட்டு மதிப்பீடுகள் மற்றும் மரபு வழக்கங்கள் ஆகியவற்றை மதித்து, தேவையான சமூக-உளவியல் ஆதரவை அளிக்கவேண்டும்.

(5) இடம்பெயர்ந்த மக்கள் அனைவரையும் விடுவித்து, அவர்கள் தாங்கள் முன்பு இருந்த வீடுகளுக்கு செல்லவோ அல்லது மறு குடியமரவோ அவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப வசதிகளைச் செய்து தரவேண்டும்.

(6) உயிர்பிழைத்த அனைவரும் இயல்பான வாழ்விற்கு திரும்பத் தேவையான இடைக்கால நிவாரணங்களை தொடர்ந்து அளிக்க வேண்டும்.

ஆ) வலுக்கட்டாயமாக காணாமல் போக்கப்பட்டதாகப் புகார் அளிக்கப்பட்ட நபர்களின் நிலை மற்றும் அவர்கள் இருக்கும் இடத்தை கண்டறியத் தேவையான விசாரணையை இலங்கை அரசு நடத்தவேண்டும். இந்த விஷயத்தில் வலுக்கட்டாயமாக மற்றும் விருப்பமற்று காணாமல் போனவர்கள் குறித்த செயல் பாட்டுக் குழுவினை இலங்கைக்கு வருமாறு இலங்கை அழைக்கவேண்டும்.

இ) நாட்டில் நிலவக்கூடிய அரசியல் சூழலின் அடிப்படையில் அவசரகால நிலை விதிகளை உடனடியாக திரும்பப்பெறவும், இலங்கையின் உலகளாவிய கடப்பாடுகளோடு பொருந்தாத பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் பிரிவுகள் அனைத்தையும் மாற்றவும், தேவையான நடவடிக்கைகளை இலங்கை அரசு எடுக்கவேண்டும். அத்துடன், விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்கள் எனச் சந்தேகிக்கப்படுபவர்கள் மற்றும் மேற்குறிப்பிட்ட சட்டவிதிகள் அல்லது பிற சட்டப் பிரிவுகளின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைவரையும் பொருத்த வரையில், கீழ்க்காணும் நடவடிக்கைகளை இலங்கை அரசு எடுக்கவேண்டும்.

(1) தடுத்து வைக்கப்பட்டவர்கள், அவர்கள் எங்கு வைக்கப்பட்டிருந்தாலும் அவர்கள் அனைவரின் பெயர்களையும் வெளியிட்டு, அவர்கள் தடுத்து



நாட்டில் நிலவக்கூடிய அரசியல் சூழலின் அடிப்படையில் அவசர கால நிலை விதிகளை உடனடியாக திரும்பப் பெறவும், இலங்கையின் உலகளாவிய கடப்பாடுகளோடு பொருந்தாத பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் பிரிவுகள் அனைத்தையும் மாற்றவும், தேவையான நடவடிக்கைகளை இலங்கை அரசு எடுக்கவேண்டும்.

வைக்கப்பட்டதன் சட்ட அடிப்படையை அவர்களுக்கு அறிவிக்க வேண்டும்.

(2) குடும்ப உறுப்பினர்கள் மற்றும் வழக்கறிஞர்கள் ஆகியோர் அணுக, தடுத்து வைக்கப்பட்ட அனைவரையும் தொடர்ச்சியாக அனுமதிக்க வேண்டும்.

(3) தடுத்து வைக்கப்பட்ட அனைவரும், தாங்கள் தடுத்து வைக்கப் பட்டதற்குத் தேவையான நியாயத்தை நீதிமன்றத்தில் கேள்விக்குள்ளாக்க அனுமதிக்கவேண்டும்.

(4) மோசமான குற்றங்களுக்கான போதுமான சான்றுகள் உள்ளவர்கள் மீது வழக்குகளை பதிவு செய்து மற்ற அனைவரையும் விடுவித்து அவர்கள் சமூகத்துடன் மீண்டும் இணைய எவ்விதத் தடையும் இன்றி அனுமதிக்க வேண்டும்.

ஈ) நடமாடுவதற்கும் ஒன்றுகூடுவதற்கும் கருத்து வெளியிடுவதற்குமான சுதந்திரத்தை கட்டுப்படுத்தக்கூடிய அல்லது பிறவகைகளில் அச்சமான சூழலை ஏற்படுத்தக்கூடிய அரசு வன்முறை மற்றும் பிற நடவடிக்கைகளை இலங்கை அரசு முடிவுக்கு கொண்டுவரவேண்டும்.

போரின் இறுதிக் கட்டங்களில் நிகழ்ந்த பெருமளவிலான பொதுமக்கள் சாவு குறித்து தனது பங்கு மற்றும் பொறுப்பினை ஒப்புக்கொண்ட வெளிப்படையான அதிகாரபூர்வமான ஓர் அறிக்கையை இலங்கை அரசு வெளியிட வேண்டும்.

பரிந்துரை 3 : நீண்டகாலப் பொறுப்பேற்கும் நடவடிக்கைகள்

கடந்தகாலம் குறித்து ஒரு நேர்மையான ஆய்வை மேற்கொள்ள தற்போது நிலவுகின்ற வெற்றி மனப்பான்மை மற்றும் மறுக்கும் மனப்பான்மையோடு கூடிய சூழல் இணக்கமாக இல்லை என்ற நிலையில், நீண்டகால அடிப்படையில் அதற்கான அரசியல் வெளிகள் ஏற்பட அனுமதிக்கப்படும் சூழலில், போரின் போது நடந்த செயல்களுக்கு முழுமையாகப் பொறுப்பேற்பதை நோக்கி நகர தொடர்ச்சியாக கீழ்க்காணும் நடவடிக்கைகள் தேவை.

அ) க. பா. இ. ஆ. வின் பணியைக் கருத்தில் கொண்டு, ஆனால் அதற்கு அப்பால் குடிமைச் சமூகத்தின் வலுவான பங்களிப்புடன் கீழ்க்காண்பன வற்றை விமர்சனப்பார்வையுடன் ஆராய இலங்கை ஒரு நடைமுறையை முன்னெடுக்கவேண்டும் : இருதரப்பிலும் நிலவிய தேசிய இனத் தீவிரவாதம் உள்ளிட்ட சிக்கலுக்கான வேர்க்காரணங்கள், போர் நடத்தப்பட்ட விதம் மற்றும் மீறல் வடிவங்கள், மற்றும் அதனோடு தொடர்புடைய அமைப்பு ரீதியிலானப் பொறுப்புகள் .

ஆ) போரின் இறுதிக் கட்டங்களில் நிகழ்ந்த பெருமளவிலான பொதுமக்கள் சாவு குறித்து தனது பங்கு மற்றும் பொறுப்பினை ஒப்புக்கொண்ட வெளிப் படையான அதிகாரபூர்வமான ஓர் அறிக்கையை இலங்கை அரசு வெளியிட வேண்டும்.

இ) போரின் இறுதிக் கட்டங்களில் நடந்த மோசமான அத்துமீறல்களைப் பாதிக்கப்பட்டவர்கள் அனைவருக்குமான, குறிப்பாக, பெண்கள், குழந்தைகள் மற்றும் குறிப்பிடத்தகுந்த வகையிலான எளிதில் பாதிப்புக்குள்ளாக்கக்கூடியக் குழுக்கள் ஆகியோர் மீது சிறப்புக் கவனம் கொண்ட உலகளாவிய வரையறைகளோடு பொருந்தக்கூடிய ஒரு நிவாரணத் திட்டத்தை இலங்கை அரசு நிறுவவேண்டும்.

பரிந்துரை 4 : அய்க்கிய நாடுகள்

இலங்கையில் நடைபெற்ற போரின் இறுதிக் கட்டங்களிலும் அதற்குப் பிறகும் வன்னியில் பொதுமக்களின் நிலைகுறித்து அய். நா. ஆற்றிய எதிர்வினையை கருத்தில் கொண்டு –

அ) கடந்த மே 2009இல் மனித உரிமை அவை இலங்கை குறித்து நிறைவேற்றிய சிறப்புத் தீர்மானத்தினை, இந்த அறிக்கையின் அடிப்படையில் மறுஆய்வு செய்ய அழைக்கப்பட வேண்டும்.

ஆ) இலங்கையில் நடைபெற்ற போரின் போதும் அதற்குப்பின்பும் அய். நா. அமைப்பின் நடவடிக்கைகள் குறித்தும், அதன் மனிதநேய மற்றும் பாதுகாப்புப் பணி வரையறைகளை அது நடைமுறைபடுத்திய விதங்கள் குறித்தும் விரிவான ஓர் ஆய்வினை செயலாளர் நாயகம் நடத்தவேண்டும்.

Marzuki Darusman
Chair

Steven R. Ratner

Yasmin Sooka

New York, 31 March 2011

மே 2009இல் மனித உரிமை அவை இலங்கை குறித்து நிறைவேற்றிய சிறப்புத் தீர்மானத்தினை, இந்த அறிக்கையின் அடிப்படையில் மறுஆய்வு செய்ய அழைக்கப்பட வேண்டும். இலங்கையில் நடைபெற்ற போரின் போதும், அதற்குப்பின்பும் அய். நா. அமைப்பின் நடவடிக்கைகள் குறித்தும், அதன் மனிதநேய மற்றும் பாதுகாப்புப் பணி வரையறைகளை அது நடைமுறைபடுத்திய விதங்கள் குறித்தும் விரிவான ஓர் ஆய்வினை செயலாளர் நாயகம் நடத்த வேண்டும்.



இணைப்புகள்

மே 23, 2009 – அய். நா. செயலாளர் நாயகமும், இலங்கை அதிபரும் வெளியிட்ட கூட்டறிக்கை

United Nations

Office of the Resident Co-ordinator

Colombo, Sri Lanka

JOINT STATEMENT AT THE CONCLUSION OF UN SECRETARY-GENERAL'S VISIT TO SRI LANKA, 23rd MAY 2009

At the invitation of Mahinda Rajapaksa, President of Sri Lanka, the Secretary-General of the United Nations, Ban Ki-moon, paid a visit to Sri Lanka. During the course of his visit, he held talks with the President, Foreign Minister as well as other senior leaders of Sri Lanka. During his stay, he also consulted other relevant stakeholders, members of international humanitarian agencies and civil society. The Secretary-General visited the IDP sites at Vavuniya and overflew the conflict area, near Mullaitivu that was the scene of the conflict.

President Rajapaksa welcomed the Secretary-General as the highest dignitary to visit Sri Lanka in the post-conflict phase. This was a reflection of the close cooperation between Sri Lanka and the United Nations as well as Sri Lanka's commitment to work with the UN in the future.

President Rajapaksa and Secretary-General Ban Ki-moon agreed that following the end of operations against the LTTE, Sri Lanka had entered a new post-conflict beginning. In this context, the Government of Sri Lanka faced many immediate and long-term challenges relating to issues of relief, rehabilitation, resettlement and reconciliation. While addressing these critical issues, it was agreed that the new situation offered opportunities for long-term development of the north and for re-establishing democratic institutions and electoral politics after 2 ½ decades. The Government expressed its commitment to ensure the economic and political empowerment of the people of the north through its programmes.

President Rajapaksa and the Secretary-General agreed that addressing the aspirations and grievances of all communities and working towards a lasting political solution was fundamental to ensuring long-term socio-economic development. The Secretary-General welcomed the assurance of the President of Sri Lanka contained in his statement in Parliament on 19 May 2009 that a national solution acceptable to all sections of people will be evolved. President Rajapaksa expressed his firm resolve to proceed with the implementation of the 13th Amendment, as well as to begin a broader dialogue with all parties, including the Tamil parties in the new circumstances, to further enhance this process and to bring about lasting peace and development in Sri Lanka.

President Rajapaksa and Secretary-General Ban Ki-moon discussed a series of areas in which the United Nations will assist the ongoing efforts of the Government of Sri Lanka in addressing the future challenges and opportunities.

United Nations Office of the UN Resident Co-ordinator
202 – 204, Bauddhaloka Mawatha • P.O. Box 1505, Colombo 7, Sri Lanka
Telephone: +94 (1) 2583805 • Fax : +94 (1) 2581116 or 2589691 • Internet:registry.lk@undp.org

With regard to IDPs, the United Nations will continue to provide humanitarian assistance to the IDPs now in Vavuniya and Jaffna. The Government will continue to provide access to humanitarian agencies. The Government will expedite the necessary basic and civil infrastructure as well as means of livelihood necessary for the IDPs to resume their normal lives at the earliest. The Secretary-General welcomed the announcement by the Government expressing its intention to dismantle the welfare villages at the earliest, as outlined in the Plan to resettle the bulk of IDPs and call for its early implementation.

The Government seeks the cooperation of the international community in mine clearing, which is an essential prerequisite to expediting the early return of IDPs.

The Secretary-General called for donor assistance towards the Common Humanitarian Action Plan (CHAP) jointly launched by the GOSL and the UN, which supports the relief, shelter and humanitarian needs of those in IDP sites.

President Rajapaksa and the Secretary-General recognized the large number of former child soldiers forcibly recruited by the LTTE as an important issue in the post-conflict context. President Rajapaksa reiterated his firm policy of zero tolerance in relation to child recruitment. In cooperation with UNICEF, child-friendly procedures have been established for their "release and surrender" and rehabilitation in Protective Accommodation Centres. The objective of the rehabilitation process presently underway is to reintegrate former child soldiers into society as productive citizens. The Secretary-General expressed satisfaction on the progress already made by the Government in cooperation with UNICEF and encouraged Sri Lanka to adopt similar policies and procedures relating to former child soldiers in the north.

President Rajapaksa informed the UN Secretary-General regarding ongoing initiatives relating to rehabilitation and reintegration of ex-combatants. In addition to the ongoing work by the Office of the Commissioner General for Rehabilitation, a National Framework for the Integration of Ex-Combatants into Civilian Life is under preparation, with the assistance of the UN and other International Organizations.

Sri Lanka reiterated its strongest commitment to the promotion and protection of human rights, in keeping with international human rights standards and Sri Lanka's international obligations. The Secretary-General underlined the importance of an accountability process for addressing violations of international humanitarian and human rights law. The Government will take measures to address those grievances.

Ministry of Foreign Affairs
May 23, 2009

United Nations Office of the UN Resident Co-ordinator
202 – 204, Bauddhaloka Mawatha • P.O. Box 1505, Colombo 7, Sri Lanka
Telephone: +94 (1) 2583805 • Fax : +94 (1) 2581116 or 2589691 • Internet:registry.lk@undp.org

இணைப்பு – 2

கடிதத் தொடர்புகள்

விளக்கக் குறிப்பு

அய். நா. பொது அவையின் அறுபத்தி அய்ந்தாவது கூட்டம் தொடங்குவதற்கு சிறிது நாட்களுக்கு முன், இலங்கை அதிகாரிகளை சந்திப்பதற்கான தனது விருப்பத்தை குழு முதன் முதலில் வெளியிட்டது. செப்டம்பர் 17, 2010 அன்று, குழுவின் தலைவர் அய்.நா.வுக்கான இலங்கையின் நிரந்தர பிரதிநிதிக்கு ஒரு கடிதம் எழுதினார். அக்கடிதத்தில், முந்தைய நாள், குழு அதிகாரபூர்வமாக தனது பணிகளை தொடங்கிவிட்டதென்றும், நீடித்த அமைதியை கட்டமைக்கும் நோக்கில், அரசுடனும், குறிப்பாக, கற்ற பாடங்கள் மற்றும் இணக்கத்திற்கான ஆணையத்தின் (க. பா. இ. ஆ.) உறுப்பினர்களுடனும் உரையாடுவது குழுவுக்கு உதவியாக இருக்கும் என்றும் எழுதியது. பொது அவையின் ஆண்டுக் கூட்டத்தில் பங்கேற்க நியூயார்க்குக்கு அப்போது வந்திருந்த இலங்கையின் அட்டர்னி ஜெனரலை குழு சந்திக்க ஏற்பாடு செய்வதாக நிரந்தரக் குழு தொடக்கத்தில் ஒப்புக்கொண்ட போதும், பின்னர் அத்தகைய ஒரு கூட்டம் நடக்காது என தெரிவித்தது.

18 நவம்பர், 2010 அன்று, குழுவின் தலைவர் நிரந்தர பிரதிநிதிக்கு மற்றொரு கடிதத்தை அனுப்பினார். அதில் தனது முந்தைய கடிதத்தை மேற்கோள் காட்டிய அவர், க. பா. இ. ஆ. உள்ளிட்ட அரசு தரப்பினருடன் உரையாடுவதற்கான சாத்தியங்களை ஆலோசிக்க, நிரந்தர பிரதிநியை சந்திப்பதற்கான குழுவின் உறுப்பினர்களின் விருப்பத்தையும், அதற்காக அவர்கள் டிசம்பர் 2010இன் தொடக்கத்தில் நியூயார்க்குக்கு வரத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

23 நவம்பர் 2010 அன்று, நிரந்தரப் பிரதிநிதி இதற்கு எழுத்து மூலமாக பதில் அனுப்பினார். அதில், குழுவின் டிசம்பர் 18, 2010 நாளிட்ட கடிதத்தில் குறிப்பிட்டிருந்த விசயங்களை பற்றி ஆலோசிக்க டிசம்பர் மாதத் தொடக்கத்தில் ஒரு நாள் மதிய உணவுக்கு குழு வரவேண்டும் என அழைப்பு விடுத்திருந்தார். குழுவினர் க. பா. இ. ஆ.வின் உறுப்பினர்களை சந்திப்பதற்கான ஏற்பாடுகளை செய்ய இலங்கை அரசு தயாராக இருப்பதாக, டிசம்பர் 3, 2010 அன்று நடந்த அந்தச் சந்திப்பில், நிரந்தரப் பிரதிநிதி குழுவிடம் வாய்மொழியாக தெரிவித்தார். தனது பணிகளை நிறைவேற்ற இலங்கையின் பலதரப்பட்ட அரசு அதிகாரிகளை குழு சந்திக்க விரும்புவதாக குழுவின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்தபோது, இந்த வேண்டுகோளை அரசிடம் தெரிவிப்பதாக நிரந்தரப் பிரதிநிதி தெரிவித்தார். டிசம்பர் 6, 2010 அன்று நடந்த ஒரு சுருக்கமான சந்திப்பில், குழுவின் இலங்கைப் பயணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்ய இலங்கை அரசு தயாராக இருப்பதாக நிரந்தரப் பிரதிநிதி தெரிவித்தார். அத்துடன், க. பா. இ. ஆ.வுக்கு கூடுதலாக, எந்த அரசு அதிகாரிகளை குழு சந்திக்க விரும்புகிறது என்பதை குழு தெரிவிக்க வேண்டும் என்பதையும், குழுவின் பயணம் நடைபெறக் கூடிய உத்தேச தேதிகளையும் தெரிவிக்க வேண்டும் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டது.

டிசம்பர் 8, 2010 அன்று, குழுவின் தலைவர் நிரந்தரப் பிரதிநிதிக்கு ஒரு கடிதம் அனுப்பினார். அதில் கருத்துகளை பரிமாறிக் கொள்வதற்கு அந்த நண்பகல் உணவு சந்திப்பு நல்வாய்ப்பாக அமைந்தது என்பதை சுட்டிக்காட்டி, இலங்கை பயணம் மற்றும் க. பா. இ. ஆ. வின் உறுப்பினர்கள், அரசு அதிகாரிகள் மற்றும் குழுவின் பணிக்கு தேவையாக இருக்கக் கூடிய பிறரை சந்திப்பதற்கான ஏற்பாடுகளை செய்வதாகக் கொடுத்த வாய்மொழி ஒப்புதலை, எழுத்துபூர்வமாக வழங்க வேண்டுமென வேண்டுகோள் விடுத்தார்.

அதே நாளில், நிரந்தரப் பிரதிநிதி குழுவின் தலைவருக்கு பதில் கடிதம் அளித்தார். அதில், அரசுடன் கலந்தாலோசித்த பிறகு, 'க. பா. இ. ஆ. விடம் வாக்குமூலம் அளிப்பதற்காக' குழு மேற்கொள்ள உள்ள இலங்கைப் பயணத்தை ஏற்பாடு செய்ய அரசு தயாராக இருப்பதாக தெரிவித்தார். இக்கடிதத்தில், அரசியல் விவகாரங்களுக்கான கூடுதல் செயலாளர் நாயகம், பி. லைன் பாஸ்கோவுக்கு நவம்பர் 3, 2010 அன்று அனுப்பப்பட்டிருந்த கடிதத்தை மேற்கோள் காட்டியிருந்தார். நவம்பர் 3, 2010 கடிதத்துடன், கையொப்பமிடப்படாத அரசுக் குறிப்பு ஒன்று இணைக்கப்பட்டிருந்தது. அக்டோபர் 15, 2010 நாளிட்ட அக்குறிப்பு, நியூயார்க்கில் உள்ள அலுவலகத்துக்கு, வெளியுறவுத் துறை அமைச்சகத்தால் அனுப்பப்பட்டிருந்தது. அக்குறிப்பில், 'ஆணையத்திடம் வாக்குமூலம் அளிக்க விரும்புபவர்களுக்கான ஏற்பாடுகளை செய்ய' அமைச்சகம் தயாராக இருப்பதை குறிப்பிட்டிருந்தது. அத்துடன், 18 சூன், 2010 அன்று

வெளியிடப்பட்ட ஒரு பொது அறிக்கை இணைக்கப்பட்டிருந்தது. க. பா. இ. ஆ. வெளியிட்டுள்ள அவ்வறிக்கையில், 'எழுத்துபூர்வமான வாக்குமூலங்களை' அளிக்கவும், அதனடிப்படையில் க. பா. இ. ஆ. அழைத்தால், 'வாய்மொழி வாக்குமூலங்களை' அளிக்கவும், 'தனி நபர்கள் மற்றும் அமைப்புகளுக்கு' அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

டிசம்பர் 8ஆம் நாளிட்ட கடிதத்திற்கு பதிலாகக் குழுவின் தலைவர் டிசம்பர் 14, 2010 அன்று நிரந்தரப் பிரதிநிதிக்கு ஒரு கடிதத்தை அனுப்பினார். அந்த கடிதத்தில், இலங்கைக்கு தனது பயணமானது அதன் பணி வரையறையோடு பொருத்தம் உடையது என்பதில் குழு தெளிவாக இருப்பதாகவும், க. பா. இ. ஆ. விடம் அறிக்கை அளிப்பதற்காக இல்லை என்றும், மாறாக, க. பா. இ. ஆ. வுடன் கருத்துப் பரிமாற்றத்தை எதிர்நோக்கி இருப்பதாகவும் குழு தெரிவித்தது. மேலும், அக்கடிதம் டிசம்பர் 3, 2010 அன்று நடைபெற்ற சந்திப்பில் விவாதிக்கப்பட்டபடி க. பா. இ. ஆ. மற்றும் அரசு மற்றும் பொதுத்துறையினைச் சேர்ந்த பிறரை சந்திக்கக் குழு விரும்புவதையும் நினைவு கூர்ந்தது. அத்துடன் குழு தனது பணிகளை நடத்தத் தேவையான வசதிகள் குறித்து மேலும் கலந்துரையாடல் அவசியம் என்றும் குறிப்பிட்டதுடன் தான் பேச விரும்பும், குழுவின் பார்வையில் இலங்கையின் பொறுப்பேற்கும் செயல்திட்டங்கள் மற்றும் நடைமுறைகளுக்குப் பொறுப்பாக இருக்கக்கூடியப் பணிகளில் உள்ள இலங்கை அரசைச் சேர்ந்த தனிநபர்களின் பெயர்ப்பட்டியலையும் அது இணைத்திருந்தது.

இக்கடிதத்திற்குக் குழு எவ்விதப் பதிலையும் பெறவில்லை. மாறாக, டிசம்பர் 20, 2010 அன்று செயலாளர் நாயகத்தின் செயல் அவையுடன் ஒரு சந்திப்பை நிரந்தர உறுப்பினர் நாடி, அதில் அன்றைய நாளிட்ட ஒரு கடிதத்தை அளித்தார். அக்கடிதத்தில் க. பா. இ. ஆ. விடம் தனது அறிக்கையினை அளிப்பதற்காக மட்டுமே குழு இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளும் என்பதை உறுதிப்படுத்தியதோடு, அத்தகைய அறிக்கையினை அளிப்பதற்குத் தேவையான வசதிகளை செய்துகொடுக்க வெளியுறவுத்துறை அமைச்சகர் தயாராக இருப்பதாக கூறும் ஒரு செய்திக் குறிப்பையும் இணைத்திருந்தார். இதற்கு வாய்மொழியாக பதில் அளித்த செயலகத் தலைவர், குழுவின் சார்பாக தான் இதுபோன்ற எந்த கடப்பாட்டையும் அளிக்க இயலாது என தெரிவித்தார். டிசம்பர் 23, 2010 நாளிட்ட கடிதத்தில் இதனை விளக்கிய செயலகத் தலைவர், 'தனது பணி வரையறையோடு பொருந்தக்கூடிய வகையில் பொறுப்பேற்பதற்குப் பொறுப்பாக இருக்கக்கூடிய உள்நாட்டு அமைப்புகளுடன் ஆலோசனைகள் நடத்துவது என்ற வடிவத்தில் மட்டுமே இலங்கை அதிகாரிகளுடனான தனது சந்திப்புகள் இருக்கும் என்பதில் குழு தெளிவாக உள்ளது' எனக் குறிப்பிட்டுள்ளார்.

குழு மற்றும் க. பா. இ. ஆ. விற்கு இடையிலான சந்திப்புகுறித்து குறிப்பிடும் போது அவர் 'க. பா. இ. ஆ. மேற்கொண்டுள்ள முக்கியப் பணிகள் பற்றி அறிந்து கொள்ளும் நோக்கத்துடனும் குழு அறிந்த செய்திகள் மற்றும் அதன் அனுபவங்கள் ஆகியவற்றைத் தொடர்புடைய துறைகளில் வல்லுநர்கள் என்ற முறையில் தனது கருத்துகளைப் பரிமாறிக்கொள்ளவும் கூடிய கலந்துரையாடல்களாகவே இதனைக் காணவேண்டும் எனக் குழு அறிவுறுத்தப்பட்டதாகவும்' தெரிவித்தார். குழு சுதந்திரமானது என்றும் 'குழுவின் பயணம் குறித்து மேலும் கலந்துரையாடல்கள் நடத்தவேண்டும் எனில், அவற்றைக் குழுவுடன் நேரடியாகவே நடத்துமாறும்' நிரந்தரப் பிரதிநிதிக்கு அழைப்பு விடுத்தார்.

டிசம்பர் 14, 2010 நாளிட்டு அரசுக்கு அளித்த இக்கடிதத்திற்கு எவ்விதப் பதிலும் வராத நிலையில், சனவரி 7, 2011 அன்று குழு தனது பணியாளர்கள் தலைவரின் மூலம் நிரந்தரப் பிரதிநிதிக்கு ஒரு மின்னஞ்சல் அனுப்பியது. அதில் தனது அறிக்கையை முடிப்பதற்கான நேரம் நெருங்கிவிட்டது என்றும், இலங்கைக்கு பயணம் மேற்கொள்ள பிப்ரவரி முதல் வாரத்தில் குழு தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டார். அதே நாளில் அய். நா. வில் இலங்கைக்கான துணை நிரந்தரப் பிரதிநிதி, செயலகத் தலைவரின் டிசம்பர் 23, 2010 தேதியிட்ட கடிதத்திற்கு ஒரு பதிலை அனுப்பினார். அதில் (1) ஜூன் 18, 2010 அன்று வெளியிடப்பட்ட க. பா. இ. ஆ. வின் பொது அறிக்கையோடு பொருந்தக்கூடிய வகையில் தனது அறிக்கையினை அளிக்கக் குழுவிற்கு அனுமதி உள்ளது. (2) தன்னிச்சையாக மட்டுமல்லாது இலங்கையின் இறையாண்மை மீது பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய வகையில் உருவாக்கப்பட்ட பணி வரையறைகள் அல்லது நோக்குக் குறிப்புகள் ஆகியவற்றை அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. (3) குழுவிற்கும் க. பா. இ. ஆ. விற்கும் இடையில் எந்த தொடர்பாடல்களும்

ஏற்படுத்தப்படுவதற்கு முன் செயலாளர் நாயகத்தின் அலுவலம் மற்றும் நிரந்தரப் பிரதிநிதிக்குழு ஆகியவற்றிற்கு இடையே கலந்துரையாடல்கள் மற்றும் ஒப்புதல்கள் மூலம் அவற்றின் வரையறைகளும் கூறுகளும் தெளிவாக விளக்கப்படவேண்டும். உதவி நிரந்தரப் பிரதிநிதி அனுப்பிய சனவரி 7, 2011 நாளிட்ட கடிதத்தைக் காண்பதற்கு சற்றுமுன்னர் சனவரி 11, அன்று அவருடனான ஒரு தொலைபேசி உரையாடலில் பிப்ரவரி முதல் வாரத்தில் இலங்கைக்கு பயணிக்க குழு தயாராக இருப்பதை மீண்டும் குறிப்பிட்டார். பின்னர் அதனையே அவருக்கு ஒரு மின்னஞ்சலாகவும் அனுப்பினர். சனவரி 13 அன்று இந்த உரையாடல்களின் தொடர்ச்சியாக துணை நிரந்தரப் பிரதிநிதிக்கு குழு ஒரு கடிதம் அனுப்பியது. அதில் தாம் மேற்கொள்ள விரும்பும் இப்பயணத்தின் போது க. பா. இ. ஆ. மற்றும் பிற அரசு அதிகாரிகளுடன் தாம் கருத்துப் பரிமாற்றத்தை வரவேற்கக்கூடிய தலைப்புகளின் பட்டியலைக் குறிப்பிட்டிருந்தனர். சனவரி 11 அன்று அனுப்பப்பட்ட மின்னஞ்சலுக்கு அல்லது சனவரி 13 நாளிட்ட கடிதத்திற்கோ குழு எவ்விதப் பதிலும் பெறவில்லை.

சனவரி 26, 2011 அன்று சனவரி 7 தேதியிட்ட இலங்கையின் நிரந்தரக் குழுவின் கடிதத்திற்கு செயலகத் தலைவர் ஒரு பதில் அனுப்பினார். அதில் அந்தக்குழுவை நியமித்ததிலும், குழுவிற்கும் தொடர்புடைய இலங்கை அதிகாரிகளுக்கும் இடையிலான தொடர்பாடல்களுக்குத் துணையாக இருக்க தன்னை நியமித்ததற்கும் செயலாளர் நாயகத்தின் நோக்கங்களை மீண்டும் குறிப்பிட்டார். அத்துடன், அரசு நேரடியாகக் குழுவைச் சந்தித்து ஏற்பாடுகளைக் குழுவின் செயலகம் வழியாகவே செய்ய ஊக்கப்படுத்தினார். சனவரி 28 அன்று குழு தனது பணியாளர்கள் தலைவரின் மூலம் நியூயார்க்கிற்கான இலங்கை அரசின் நிரந்தரப் பிரதிநிதிக்கு மீண்டும் ஒரு கடிதம் அனுப்பியது. அதில் இலங்கைக்குப் பயணிப்பதிலும் அல்லது இலங்கை அதிகாரிகளுடன் பிற வகைகளில் தொடர்புகளை ஏற்படுத்திக் கலந்துரையாடல்களுக்கான கேள்விகள் பட்டியலைப் பகிர்ந்து கொண்டு மூன்று வாரங்களுக்குள் அவற்றிற்கான பதிலைப் பெற, தொடர்ந்து தான் ஆர்வமாக இருப்பதாகக் குழு குறிப்பிட்டது. பிப்ரவரி 9 அன்று நிரந்தரப் பிரதிநிதியுடன் குழுவின் பணியாளர்கள் தலைவர் தொலைபேசியில் உரையாடி தனது பணிகளை முடிப்பதற்கு குழுவிற்கு உள்ள காலவரையறையை நினைவூட்டினார்.

பிப்ரவரி 16, 2011 அன்று ஒரு புறம் இலங்கையின் குழுவினர் மற்றும் அய். நா. வின் அரசியல் விவகாரங்கள் துறை ஆகியவற்றிற்கு இடையே நடந்த கலந்துரையாடல்களுக்குப் பின் குழுவின் உறுப்பினர்களோடு செயலகத்தின் மூத்த பணியாளர்களையும் சந்திக்க கொழும்பில் இருந்து ஒரு குழு வருவதை உறுதி செய்யும் குறிப்பு ஒன்றை அய். நா. விடம் நிரந்தரப் பிரதிநிதி அளித்தார். அந்த குறிப்போடு குழுவின் கேள்விகளுக்கு அரசின் பதிலாக இலங்கையின் வெளியுறவுத்துறை அமைச்சரிடம் இருந்து வந்த ஒரு கடிதத்தையும் இணைத்திருந்தார். அந்தக் கடிதத்தில் கீழ்க்காண்பவை இடம்பெற்றிருந்தன.

(அ) பிப்ரவரி 16 நாளிட்ட கையொப்பமிடப்படாத அரசுக் குறிப்புடன் :

(1) செயலாளர் நாயகத்திற்கு வெளியுறவுத்துறை அமைச்சர் எழுதிய பிப்ரவரி 15 தேதியிட்ட கடிதம்

(2) க. பா. இ. ஆ. விடம் குழு எழுப்பிய கேள்விகள் தொடர்பான அறிக்கை

(3) இணைப்பு 1 – க. பா. இ. ஆ. வின் இடைக்காலப் பரிந்துரைகள் நடைமுறைபடுத்தப்பட்டது குறித்த செயல் அறிக்கை

(4) இணைப்பு 2 மற்றும் 3 முறையே – விசாரணை ஆணையங்கள் சட்டம் எண் 17–1948, 8–1950, 40–1953, 8–1955, 29–1955 மற்றும் விசாரணை ஆணையங்கள் திருத்தச் சட்டம் எண் 16–2008.

(ஆ) பிப்ரவரி 16 நாளிட்ட கையொப்பமிடப்படாத அரசுக் குறிப்புடன் :

(1) பிற அரசு அதிகாரிகளிடம் குழு எழுப்பிய கேள்விகள் தொடர்பான அறிக்கை

(2) இணைப்புகள் 2 மற்றும் 3 – கர்திஹெவா சரத் சி பொன்சேகா வழக்கில் சனவரி 10, 2011 அன்று உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்புகள்.

(3) இணைப்பு 3 – இறப்புகள் பதிவுசெய்தல் (தற்காலிக பிரிவுகள்) சட்டம் எண் 19 2010

(4) இணைப்பு 4 – 'சரணடைந்த விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்களுக்கான மறுவாழ்வுப் பணிகளின் தற்போதைய நிலை'

மேற்குறிப்பிட்டுள்ள அதிகாரபூர்வ தொடர்பாடல்கள் இந்த அறிக்கையில் இணைக்கப்பட்டுள்ளன. உச்சநீதிமன்றத் தீர்ப்புகள் மற்றும் மேற்குறிப்பிடப்பட்டுள்ள சட்டங்கள் பொது வெளியில் கிடைப்பதால் அவற்றைத் தவிர மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து இணைப்புகளும் இணைக்கப்பட்டுள்ளன. அட்டர்னி ஜெனரல் மோகன் பெய்ரிஸ், வெளியுறவுச்செயலர் கிறிசந்தா ரொமேஷ் ஜெயசிங்கே, இலங்கையின் நிரந்தர மற்றும் துணை நிரந்தரப் பிரதிநிதிகள் மற்றும் வெளியுறவுத்துறை அமைச்சக ஆலோசகர் ஒருவர் ஆகியோர் கொண்ட இலங்கையின் உயர்மட்டக் குழுவுடன் பிப்ரவரி 22 அன்று நடந்த சந்திப்பில் செயலக அதிகாரிகளுடன் குழுவும் இணைந்து கொண்டது. இந்தச் சந்திப்பில் குழுவிற்கு அரசு அளித்த எழுத்துபூர்வ பதில்களை விளக்குவதையே இலங்கைக் குழு முக்கிய பணியாகச் செய்தது. இலங்கையின் வாய்மொழி மற்றும் எழுத்துபூர்வ பதில்கள் ஆகிய இரண்டுமே இந்த அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன.

கடிதத் தொடர்புகளில் பங்கு பெற்றோர் :

இலங்கை சார்பாக –

உயர்திரு. பலித கோஹனா, நியூயார்க்கில் உள்ள அய்க்கிய நாடுகள் அவைக்கான இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிரந்தரப் பிரதிநிதி மற்றும் தூதர் (தூதர் கோஹனா)

உயர்திரு. ஷாவேந்திர சில்வா, நியூயார்க்கில் உள்ள அய்க்கிய நாடுகள் அவைக்கான இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிரந்தரப் பிரதிநிதி மற்றும் இடைக்காலத் தூதர் (இடைக்காலத் தூதர் சில்வா)

நியூயார்க்கில் உள்ள அய்க்கிய நாடுகள் அவைக்கான இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிலையானக் குழு (நிலையானக் குழு)

அய்க்கிய நாடுகள் அவை சார்பாக –

திரு. விஜய் நம்பியார், அய். நா. செயலாளர் நாயகத்தின் செயல் அலுவலகத்தின் ஆலோசனைக் குழுத் தலைவர் (திரு. நம்பியார்)

திரு. பி. லைன் பாஸ்கோ, அய். நா. வின் அரசியல் விவகாரங்களுக்கான சார்பு செயலாளர் நாயகம் (திரு.பாஸ்கோ)

திரு. மர்சூகி தருஸ்மன், அய். நா. செயலாளர் நாயகத்தின் இலங்கைக்கான வல்லுநர் குழுவின் தலைவர் (திரு.தருஸ்மன்)

திரு ரிச்சர்ட் பெனட், அய். நா. செயலாளர் நாயகத்தின் இலங்கைக்கான வல்லுநர் குழுவின் அலுவலர்களின் தலைவர் (திரு. பெனட்)

கடிதத் தொடர்புகள்

2.1 : 17 செப்டம்பர் 2010 நாளிட்ட கடிதம் – திரு. தருஸ்மனிடமிருந்து தூதர் கோஹனாவுக்கு

2.2 : 21 அக்டோபர் 2010 நாளிட்ட கடிதம் – திரு. பெனட்டிடமிருந்து தூதர் கோஹனாவுக்கு

2.3 : 3 நவம்பர் 2010 நாளிட்ட கடிதம் – தூதர் கோஹனாவிடமிருந்து திரு. பாஸ்கோவுக்கு

2.3.1 : 15 அக்டோபர் 2010 நாளிட்ட கையொப்பமிடப்படாத அரசுக் குறிப்பு – வெளியுறவுத் துறையிடமிருந்து நியூயார்க்கில் உள்ள அய். நா. அலுவலகத்திற்கு

2.3.2 : கற்ற பாடங்கள் மற்றும் இணக்கத்திற்கான ஆணையத்தின் பொது அறிவிப்பு

2.4 : 18 நவம்பர் 2010 நாளிட்ட கடிதம் – திரு. தருஸ்மனிடமிருந்து தூதர் கோஹனாவுக்கு

2.5 : 23 நவம்பர் 2010 நாளிட்ட கடிதம் – திரு. தருஸ்மனுக்கு தூதர் கோஹனாவிடமிருந்து

2.6 : 8 டிசம்பர் 2010 நாளிட்ட கடிதம் – திரு. தருஸ்மனிடமிருந்து தூதர் கோஹனாவுக்கு

2.7 : 8 டிசம்பர் 2010 நாளிட்ட கடிதம் – தூதர் கோஹனாவிடமிருந்து திரு. தருஸ்மனுக்கு

2.8 : 14 டிசம்பர் 2010 நாளிட்ட கடிதம் – திரு. தருஸ்மனிடமிருந்து தூதர் கோஹனாவுக்கு

2.9 : 20 டிசம்பர் 2010 நாளிட்ட கடிதம் – தூதர் கோஹனாவிடமிருந்து திரு. நம்பியாருக்கு

2.9.1 : 18 டிசம்பர் 2010 நாளிட்ட வெளியுறவுத் துறையின் செய்தி குறிப்பு

2.10 : 23 டிசம்பர் 2010 நாளிட்ட கடிதம் – திரு. நம்பியாரிடமிருந்து தூதர் கோஹனாவுக்கு

2.11 : 7 ஜனவரி 2011 நாளிட்ட கடிதம் – தூதர் கோஹனாவிடமிருந்து திரு. தருஸ்மனுக்கு

2.12 : 13 ஜனவரி 2011 நாளிட்ட கடிதம் – திரு. பெனட்டிடமிருந்து இடைக்கால தூதர் சில்வாவுக்கு

2.13 : 26 ஜனவரி 2011 நாளிட்ட கடிதம் – திரு. நம்பியாரிடமிருந்து தூதர் கோஹனாவுக்கு

2.14 : 28 ஜனவரி 2011 நாளிட்ட கடிதம் – திரு. பெனட்டிடமிருந்து தூதர் கோஹனாவுக்கு

2.14.1 : கற்ற பாடங்கள் மற்றும் இணக்கத்திற்கானக் குழுவிடம் ஆலோசிப்பதற்கான விசயங்கள்

2.14.1 : தொடர்புடைய அரசு அதிகாரிகளிடம் ஆலோசிப்பதற்கான விசயங்கள்

2.15 : 16 பிப்ரவரி 2011 நாளிட்ட கையொப்பமிடப்படாத அரசுக் குறிப்பு – நிலையானக் குழுவிடமிருந்து அய். நா. செயலாளர் நாயகத்தின் செயல் அலுவலகத்திற்கு

2.15.1 : 15 பிப்ரவரி 2011 நாளிட்ட கடிதம் – வெளியுறவுத் துறை அமைச்சர் உயர்திரு. ஜி. எல். பெரிஸிடமிருந்து அய். நா. செயலாளர் நாயகத்துக்கு

2.15.2 : கற்ற பாடங்கள் மற்றும் இணக்கத்திற்கான ஆணையத்திடம் ஆலோசிப்பதற்கானக் குழுவின் குறிப்புகள் பற்றிய அதிபரின் செயலகக் குறிப்பு

2.15.3 : கற்ற பாடங்கள் மற்றும் இணக்கத்திற்கான ஆணையத்தின் இடைக்காலப் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டமை குறித்த செயற்பாட்டு அறிக்கை

2.16 : 16 பிப்ரவரி 2011 நாளிட்ட கையொப்பமிடப்படாத அரசுக் குறிப்பு – நிலையானக் குழுவிடமிருந்து அய். நா. செயலாளர் நாயகத்தின் செயல் அலுவலகத்திற்கு

2.16.1 : தொடர்புடைய அரசு அலுவலகர்களிடம் ஆலோசிப்பதற்கானக் குழுவின் குறிப்புகள் பற்றிய வெளியுறவுத் துறையின் குறிப்பு

2.16.2 : சரணடைந்த விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களின் மறுவாழ்வு குறித்த தற்போதைய நிலை

2.17 : 16 பிப்ரவரி 2011 நாளிட்ட குறிப்பு – திரு. பாஸ்கோவிடமிருந்து தூதர் கோஹனாவுக்கு

UNITED NATIONS NATIONS UNIES

POSTAL ADDRESS - ADRESSE POSTALE : UNITED NATIONS, N.Y. 10017
CABLE ADDRESS - ADRESSE TELEGRAPHIQUE: UNATIONS NEWYORK

SECRETARY-GENERAL'S PANEL OF EXPERTS ON SRI LANKA
GROUPE D'EXPERTS DU SECRETAIRE GENERAL AU SRI LANKA

REFERENCE:

17 September 2010

Excellency,

I write to you in my capacity as Chairperson of the Panel of Experts appointed by the Secretary-General of the United Nations on 22 June 2010. As you know, the Panel is expected to provide the Secretary-General with advice on an accountability process with respect to the final stages of the war in Sri Lanka and in particular the modalities, applicable international standards and comparative experience as set out in the enclosed Terms of Reference.

On 16 September 2010, following a meeting with the Secretary-General, the Panel formally commenced its work. I am writing to you as it would be helpful to the Panel, in the context of building sustainable peace, to engage with the Government of Sri Lanka and especially members of the Lessons Learnt and Reconciliation Commission.

Yours sincerely,

Marzuki Darusman
Chairperson

Enclosure

H.E. Mr. Palitha T.B. Kohona
Ambassador Extraordinary and Plenipotentiary Permanent Representative
Permanent Mission of the Democratic Socialist
Republic of Sri Lanka to the United Nations
630 Third Avenue, 20th Floor
New York, N.Y. 10017

cc. Mr. Vijay Nambiar, Chef de Cabinet, Executive Office of the Secretary-General

Panel of Experts (POE) for Sri Lanka

Terms of Reference

In the Joint Statement of the Secretary-General and the President of Sri Lanka issued at the conclusion of the Secretary-General's visit in the country on 23 May 2009, the Secretary-General underlined the importance of an accountability process to address allegations of violations of international humanitarian and human rights law committed during military operations between the Government of Sri Lanka and the Liberation Tigers of Tamil Eelam (LTTE). The President of Sri Lanka undertook to take measures to address these grievances. At this time and against this background:

1. The Secretary-General has decided to establish a panel of experts to advise him on the implementation of the said commitment with respect to the final stages of the war.

2. The purpose of the panel shall be to advise the Secretary-General on the modalities, applicable international standards and comparative experience relevant to the fulfilment of the joint commitment to an accountability process, having regard to the nature and scope of alleged violations.

3. It shall be composed of three members having appropriate and relevant experience. The Panel shall develop its own working modalities and be assisted by a Secretariat with the support of OHCHR.

4. The Panel shall submit its report to the Secretary-General within four months of the commencement of its work.

5. The Panel shall be funded from the Secretary-General's unforeseen budget.

இணைப்பு – 2.2

UNITED NATIONS NATIONS UNIES

SECRETARY-GENERAL'S PANEL OF EXPERTS ON SRI LANKA
GROUPE D'EXPERTS DU SECRETAIRE GENERAL AU SRI LANKA

21 October 2010

Dear Mr. Ambassador,

I write as Chief of Staff of the Panel of Experts appointed by the Secretary-General to provide him with advice on an accountability process with respect to the final stages of the war in Sri Lanka and in particular on relevant modalities, applicable international standards and comparative experience.

Further to our Chairperson's letter of 17 September 2010, in which he informed you of the formal commencement of the panel's work and welcomed engagement with the Government of Sri Lanka and the Lessons Learnt and Reconciliation Commission, I wish to inform you that the Panel has decided to invite written submissions from interested organisations and individuals. A notice in this regard will be posted on a United Nations website shortly and a copy of the notice is enclosed.

I remain,
Dear Mr. Ambassador,

Yours sincerely,

R D Bennett

Richard Bennett
Chief of Staff

H.E. Mr. Palitha T.B. Kohona
Ambassador Extraordinary and Plenipotentiary Permanent Representative
Permanent Mission of the Democratic Socialist
Republic of Sri Lanka to the United Nations
630 Third Avenue, 20th Floor
New York, NY 10017

cc. Mr. Vijay Nambiar, Chef de Cabinet, Executive Office of the Secretary-General

இணைப்பு – 2.2

UNITED NATIONS **NATIONS UNIES**

SECRETARY-GENERAL'S PANEL OF EXPERTS ON SRI LANKA
GROUPE D'EXPERTS DU SECRETAIRE GENERAL AU SRI LANKA

18 October 2010

On 22 June 2010, the UN Secretary-General established a Panel of Experts to advise him on the issue of accountability with regard to alleged violations of international human rights and humanitarian law during the final stages of the conflict in Sri Lanka. The members of the Panel are Marzuki Darusman, Steven Ratner and Yasmin Sooka. The Panel officially began its work on 16 September 2010.

The Panel will look into the modalities, applicable international standards and comparative experience with regard to accountability processes, taking into consideration the nature and scope of any alleged violations in Sri Lanka. The Panel advises the Secretary-General and is not an investigative or fact-finding body.

Anyone wishing to make submissions in respect of the above may do so as follows:

1. Organizations and individuals may make one written submission not exceeding ten pages, and must include the contact details for the author(s) of the submission.
2. The Panel will receive submissions until 15 December 2010.
3. Submissions may be sent to: panelofexpertsregistry@un.org.
4. Submissions made to the Panel of Experts will be treated as confidential.

Further information may be solicited from the Panel's Secretariat at the following address: panelofexpertsregistry@un.org.

PERMANENT MISSION OF THE DEMOCRATIC SOCIALIST
REPUBLIC OF SRI LANKA TO THE UNITED NATIONS

Tel: (212) 986-7048
Fax: (212) 986-1838
E-Mail: mail@slmission.com

630 THIRD AVENUE (20TH FLOOR)
NEW YORK, N.Y. 10017

Ref: POL/G/190

3rd November, 2010

Mr. Lynn Pascoe
Under Secretary-General
Department of Political Affairs
United Nations
New York.

Dear Mr. Pascoe,

Further to the discussion between H.E. Mr. Mahinda Rajapaksa, the President of Sri Lanka and H.E. Mr. Ban Ki-moon, the Secretary-General, during the period of the General Assembly, I am pleased to forward the attached note sent by the Ministry of External Affairs of Sri Lanka.

I would be grateful if this is brought to the attention of the appropriate authorities.

Yours sincerely,

Palitha T.B. Kohona
Ambassador & Permanent Representative.

DPA/OUSG
Rec'd 3 November 2010
Log# 3576
ACTION Asia and Pacific

இணைப்பு – 2.3

PERMANENT MISSION OF THE DEMOCRATIC SOCIALIST
REPUBLIC OF SRI LANKA TO THE UNITED NATIONS

Tel: (212) 986-7040
Fax: (212) 986-1838
E-Mail: mail@slmission.com

630 THIRD AVENUE (20TH FLOOR)
NEW YORK, N.Y. 10017

Ref: POL/G/190

3rd November, 2010

Mr. Lynn Pascoe
Under Secretary-General
Department of Political Affairs
United Nations
New York.

Dear Mr. Pascoe,

Further to my letter No. POL/G/190 dated 3rd November, 2010, I will be available to discuss any required follow-up action.

Yours sincerely,

Palitha T.B. Kohona
Ambassador & Permanent Representative.

இணைப்பு – 2.3.1

Ref: UN/HR/1/10/B

The Ministry of External Affairs of the Democratic Socialist Republic of Sri Lanka presents its compliments to the Office of the United Nations and with reference to the meeting on 24th September 2010 in New York between H E the President of Sri Lanka and H E the Secretary-General of the United Nations, has the honour to inform that the Commission of Inquiry on "Lessons Learnt & Reconciliation" appointed by His Excellency President Mahinda Rajapaksa under Section 2 of the Commissions of Inquiry Act has issued a Public Notice carried by the newspapers in Sri Lanka on 18th June 2010 in the Sinhala, Tamil and English languages calling for representations to the Commission. The text of this Public Notice is attached.

The Ministry of External Affairs wishes to add in this regard that the Government of Sri Lanka remains ready to facilitate those desirous of presenting representations to the Commission, as set out in the mandate of the Commission.

The Ministry of External Affairs of the Democratic Socialist Republic of Sri Lanka avails itself of this opportunity to renew to the Office of the United Nations, the assurances of its highest consideration.

Colombo, 15th October 2010

Ministry of External Affairs
Democratic Socialist Republic
of Sri Lanka

Office of the United Nations
New York

இணைப்பு – 2.3.2

NOTICE TO THE PUBLIC

COMMISSION OF INQUIRY ON LESSONS LEARNT AND RECONCILIATION APPOINTED BY HIS EXCELLENCY THE PRESIDENT IN TERMS OF SECTION 2 OF THE COMMISSIONS OF INQUIRY ACT

His Excellency Mahinda Rajapaksa, President of the Democratic Socialist Republic of Sri Lanka in pursuance of Section 2 of the Commissions of Inquiry Act (Chapter 393), has appointed the following as Commissioners of the above Commission :

1. Chitta Ranjan de Silva Esquire, P.C.
2. Dr Amirth Rohan Perera Esquire, P.C.
3. Professor Mohamed Thahir Mohamed Jiffry Esquire
4. Professor Kalunaratna Hangawatte Esquire
5. Chandirapal Chanmugam Esquire
6. Hewa Matara Gamage Siripala Palihakkara Esquire
7. Mrs Manohari Ramanathan
8. Maxwell Parakrama Paranagama Esquire

His Excellency the President has appointed Chitta Ranjan de Silva Esquire, President's Counsel and retired Attorney General to be the Chairman of the Commission.

2. The Commission is empowered to inquire into and report on the following matters that may have taken place during the period between 21st February 2002 and 19th May 2009, namely ;

   I. the facts and circumstances which led to the failure of the ceasefire agreement operationalized on 21st February 2002 and the sequence of events that followed thereafter up to the 19th of May 2009 ;
   II. whether any person, group or institution directly or indirectly bear responsibility in this regard ;
   III. the lessons we would learn from those events and their attendant concerns, in order to ensure that there will be no recurrence ;
   IV. the methodology whereby restitution to any person affected by those events or their dependents or their heirs, can be effected ;
   V. the institutional, administrative and legislative measures which need to be taken in order to prevent any recurrence of such concerns in the future and to promote further national unity and reconciliation among all communities, and to make any such other recommendations with reference to any of the matters that have been inquired into under the terms of this Warrant.

3. The Commission hereby invites any person or organization to submit, in the first instance, written representations to Commission in respect of all or any of the above matters.

4. All such written representations should reach the Secretary to the Commission at the address given below on or before 18th August 2010.

5. The Commission, after examining the written representations received, may invite any person or organization to give oral evidence.

6. Arrangements could be made for any person to give evidence in camera.

7. Every person who gives evidence before the Commission shall be entitled to the privileges for witnesses as provided for in the Commissions of Inquiry Act.

By Order of the Commission

S.M. Samarakoon
Secretary to the Commission

COMMISSION OF INQUIRY ON LESSONS LEARNT AND RECONCILIATION
Lakshman Kadirgamar Institute of
International Relations and Strategic Studies ,
No.24
Horton Place, Colombo 07.

UNITED NATIONS NATIONS UNIES

POSTAL ADDRESS - ADRESSE POSTALE : UNITED NATIONS, N Y 10017
CABLE ADDRESS - ADRESSE TELEGRAPHIQUE: UNATIONS NEWYORK

SECRETARY-GENERAL'S PANEL OF EXPERTS ON SRI LANKA
GROUPE D'EXPERTS DU SECRETAIRE GENERAL AU SRI LANKA

18 November 2010

Excellency,

Further to my letter of 17 September 2010, in which I informed you of the formal commencement of the Panel's work and welcomed engagement with the Government of Sri Lanka as well as the Lessons Learnt and Reconciliation Commission, I wish to inform you that the Panel plans to meet in New York between December 3rd and 10th, 2010.

We wish to avail ourselves of the opportunity of being in New York to meet with you to discuss possible modes of engagement between the Panel and the Government of Sri Lanka, including with the Lessons Learnt and Reconciliation Commission.

We hope you are amenable to meeting with us and we look forward to your positive response as well as to a constructive exchange of views and information.

Yours sincerely,

Marzuki Darusman
Chairperson

His Excellency
Mr. Palitha T.B. Kohona
Permanent Representative of the Democratic Socialist
Republic of Sri Lanka to the United Nations
630 Third Avenue, 20th Floor
New York, NY 10017

cc. Mr. Vijay Nambiar, Chef de Cabinet, Executive Office of the Secretary-General

இணைப்பு – 2.5

PERMANENT MISSION OF THE DEMOCRATIC SOCIALIST
REPUBLIC OF SRI LANKA TO THE UNITED NATIONS

Tel: (212) 986-7040
Fax: (212) 986-1838
E-Mail: mail@slmission.com

630 THIRD AVENUE (20TH FLOOR)
NEW YORK, N.Y. 10017

Ref: POL/G/190

23rd November, 2010

Dr. Marzuki Darusman
Chairperson
Secretary General's Panel of Experts on Sri Lanka
Office of the Secretary General
United Nations
New York.

DM/EXECUTIVE OFFICE
29 NOV 2010 PM 7:28

Dear Chairperson,

I refer to your letter dated 18th November, 2010.

I will be very happy to host you for lunch on December 3rd or 4th, 2010 to discuss the matters raised in your letter. My office can be contacted 212 986 7040 or 917 716 5023 (Geethani).

Yours sincerely,

Palitha T.B. Kohona
Ambassador & Permanent Representative

cc: Mr. Vijay Nambiar, Chef de Cabinet, Office of the Secretary General

UNITED NATIONS NATIONS UNIES

POSTAL ADDRESS - ADDRESSE POSTALE : UNITED NATIONS, N Y 10017
CABLE ADDRESS - ADRESSE TELEGRAPHIQUE: UNATIONS NEWYORK

SECRETARY-GENERAL'S PANEL OF EXPERTS ON SRI LANKA
GROUPE D'EXPERTS DU SECRETAIRE GENERAL AU SRI LANKA

8 December 2010

Excellency,

Thank you for your letter dated 23 November 2010. Allow me further to extend, on behalf of the Panel, our appreciation for the lunch you hosted last Friday. It was a good opportunity for us to exchange views.

We await written confirmation of your verbal offer to kindly facilitate our visit to Sri Lanka in pursuit of our mandate and to engage with the Lessons Learnt & Reconciliation Commission (LLRC), Government officials as well as others relevant to our work.

Please accept, Excellency, the assurances of my highest consideration.

Marzuki Darusman
Chairperson

His Excellency
Mr. Palitha T.B. Kohona
Permanent Representative of the Democratic Socialist
Republic of Sri Lanka to the United Nations
630 Third Avenue, 20th Floor
New York, NY 10017

cc. Mr. Vijay Nambiar, Chef de Cabinet
Executive Office of the Secretary-General

PERMANENT MISSION OF THE DEMOCRATIC SOCIALIST
REPUBLIC OF SRI LANKA TO THE UNITED NATIONS

Tel: (212) 986-7040
Fax: (212) 986-1838
E-Mail: mail@slmission.com

630 THIRD AVENUE (20TH FLOOR)
NEW YORK, N Y 10017

Ref: POL/G/190

8th December, 2010

Dr. Marzuki Darusman
Chairperson
Secretary General's Panel of Experts on Sri Lanka
Office of the Secretary General
United Nations
New York.

Excellency,

